MY POSTS ON LEFT

R. PATTABIRAMAN

OBSERVATIONS REFLECTIONS
AND ANALYSIS

Some posts on Indian Left

முன்னுரை

இணையத்தில் 15 ஆண்டுகளாகவும், முகநூலில் கடந்த 10 ஆண்டுகளாகவும் அவ்வப்போது எழுதிப் பார்த்தவற்றை 'தீம்'களின்படி தொகுக்கவேண்டும் என்கிற அவாவில் சில மின் நூல்களை உருவாக்க முடிந்தது.

இணைய வலை தளம் கடந்த இரு ஆண்டுகளாக முடங்கிப்போன நிலையில், அதில் மீட்க முடிந்த சில கட்டுரைகள் நூலாக்கம் பெற்றன. காந்தியைக் கண்டுணர்தல், நேருவின் மரபு, நவீன இந்தியாவின் பன்முகங்கள், பகவத்கீதை பன்முகக் குரல்கள், பெரியாரின் பொதுவுடைமை புரிதல், இந்திய கம்யூனிஸ்ட் இயக்க முன்னோடிகள், ஹெகல் துவங்கி, லெனின் 4 கட்டுரைகள், அம்பேத்கர் வாசிப்பில், மாக்சிம் கார்க்கி போன்ற ஏராள நூல்கள் வந்தன. சில அச்சு நூல்களாகவும் வந்தன.

முகநூல் வழி எழுதியவற்றை மாதவாரியாக தொகுத்துப் போடுவது எனச் செய்யத் தொடங்கினேன். சாதி எனும் பிசாசு, திராவிட- திராவிடர் இயக்கம், மார்க்ஸ்- மார்க்சியர் குறிப்புகள் போன்ற மின் நூல்கள் வந்தன. காந்தி குறித்து 400 பக்கங்கள் செல்லும் தொகுப்பு ஒன்றை செய்து கொண்டிருக்கிறேன்.

இந்தத் தொகுப்பு இந்திய இடதுசாரிகள் குறித்து முகநூலில் எழுதியவற்றில் பெற முடிந்தவைகளாக அமைக்கப்பட்டுள்ளன. 325 பக்க அளவிற்கு கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றிய வரலாற்று செய்திகள், குறிப்புகள், சோவியத், மாவோயிசம்- நக்சலிசம், கட்சி ஆவணங்கள் குறித்து, நினைவிலிருந்து அனுபவச் செய்திகள் என ஏராள இடுகைகள் இத்திரட்டில் இடம் பெற்றுள்ளன. இடதுசாரிகளுக்கு மட்டுமல்ல, அரசியல் வாசிப்போர்க்கும் இந்த இடுகைகள் ஏராளம் சொல்லக்கூடும்.

31-1-2025 - ஆர். பட்டாபிராமன்

Some posts On Indian Left

1. நினைவுச் சுழல்
2. அக்டோபர் புரட்சியின் தாக்கம்
3. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி- வரலாற்றுக் குறிப்புகள்
4. தோழர் சுர்ஜித் பார்வையில் வரலாற்று செய்திகள்
5. சிபிஅய் 80 ஆண்டுகள்- இரு நூல்கள்
6. பிரிட்டிஷ் உளவுத்துறை குறிப்பில்...
7. வரலாற்றின் பக்கங்களிலிருந்து..
8. ஜெனி ஓவர்ஸ்டீரிட் குறிப்பில்..
9. கட்சி வரலாற்றில்... சத்திய பக்தா
10.CPI பிறந்த போது நடந்த விவாதம்
11. சிபிஅய்- 1939-43 காலம்
12.Draft Programme of the CPI - 1951
13. வரலாறு- சில குறிப்புகள்
14.டாங்கே 125-1
15. டாங்கே 125 - இடுகை 2
16. தோழர் டாங்கேவின் 1947 சோவியத் சந்திப்பு
17. தொழிற்சங்கத் தலைவர்கள்
18. கோரிக்கைகள்- போராட்டங்கள்
19. தோழர் டாங்கேவின் நூல்
20. தொழிற்சங்கத் தோழர்களுக்கு- தோழர் டாங்கே
21. டாங்கேவின் அரசியல் பார்வையில்
22. தோழர் பிலிப் ஸ்ப்ராட்
23. பிலிப் ஸ்ப்ராட் Blowing Up India
24. Gandhism An Analysis - பிலிப் ஸ்ப்ராட்

51. No bounds to practice - no end to theoretical innovation

52. சமூகவியலும் இலக்கியமும்

53. சோவியத் மற்றும் இந்திய அரசியல்

54. பார்ப்பனியத்தை விமர்சித்தல்

55. அத்வானியின் தகவல்

56. சோவியத்தில் போடப்பட்ட பட்ஜெட்

57. நினைவுச் சுழல் 2

58. லெனின் ஆட்சிக் காலத்தில்

59. ஷாகித் சித்திக்கின் சாட்சியம்

60. The Political Marx

61. மார்க்ஸ்- லெனின், காந்தி- காங்கிரஸ்

62. மாவோ- காந்தி

63. Moral Lessons of the 20th Century

64. நினைவுச் சுழல்- 3

65. கன்னிமாரா நூலகம்

66. மார்க்ஸ் எங்கெல்ஸ் தொகுப்பு நூல்கள்

67. இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள்

68. இந்திய வரலாற்றில் மதம்

69. ஆதி சங்கரர் தத்துவம்- இ எம் எஸ்

70. The Marxist Sociology in India

71. மார்க்சின் மானிபெஸ்டோ

72. What is politics to Gandhi

73. அச்சுதமேனன் குறித்து கவிஞர் கண்ணதாசன்

74. தோழர் தா.பா வின் 'பொதுவுடைமையரின் வருங்காலம்'

75. A Fact Sheet on Communist movement

76. பீனிக்ஸ் தருணம்

July 3 2021

1. நினைவுச் சுழல்

பத்திரிகைகள் படிக்கும் பழக்கம் மெல்ல மெல்ல எனக்கு பழங்கதையாகி வருகிறது. பழைய தீவிரம் மனதில் நிழலாடுகிறது. தீவிரம் என்றால் அப்படி பேய்த்தீவிரம் தொழிற்பட்ட காலம் இருந்தது. 1970களின் இறுதியில்தான் இந்த தீவிரம் பற்றத்துவங்கியது. 1980-2005 எனும் 25 ஆண்டுகளில் அதன் உச்சம் சென்றது. பின்னர் மெதுவாக இறக்கம் காண ஆரம்பித்தது.

சாதாரண அலுவலக பணியில் ஒரு சிற்றூரில் இருந்துகொண்டு அது சாத்தியமானதாகவும் அமைந்தது. அப்படியொரு தீவிரம். எதையும் வாங்கிவிடுவது- படிப்பது என்கிற அசுர மனசு. இடது பத்திரிகைகள் எனில் வாய்ப்புள்ள அனைத்தையும் வாங்கிய காலமது. இடது மட்டுமல்ல வேறு பத்திரிகைகளும் வலது கூட வாங்கிப்படித்தக் காலம்.

CPI – New Age, Party Life, Information Bulletin, social science Probings (very few issues), ஜனசக்தி, தாமரை

CPIM – PD, Marxist, Social Scientist (few Issues), தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட், உழவன் உரிமை, student Struggle (சிறு பையனாக மகன் தீக்கதிரை எடுத்துக் கொடுக்கும்போது ’சுடுதுப்பா’ என satire செய்தது...)

CPIML- Liberation, தீப்பொறி, சமரன் (சில இதழ்கள்)

Suci- Proletarian Era

UCPI- New Thinking Communist, ஜீவாமுழக்கம்

RSS- Organiser (பாலு என்கிற இந்து முன்னணி நண்பர் கொண்டுவந்து போடுவார்)

International Journals Like Monthly review, New Left review (some Issues)

Mainstream, Janata Weekly, Frontier weekly , manushi, Link (some issues) Periyar Era, Yojana, திட்டம், சிந்தனையாளன், உண்மை, காலச்சுவடு, சதங்கை போன்ற ஏராள பத்திரிகைகள் வீட்டிற்கு வந்தன. அவ்வப்போது ரகுபதி, சிவகுருநாதன் போன்றவர்கள் தரும் இதழ்கள். தனிநபர் வீடே நூலக வரவு போல் இருந்தது.

தொழிற்சங்கத் தீவிர செயல்பாட்டால் AITUC, CITU,HMS, BMS, Telecom, Bank, EB, Teachers, Insurance, Railways, Motor என அனைத்து தொழிற்சங்கப் பத்திரிகைளும் வந்தன. 'போஸ்ட்மேன்' தோழர்கள் வராத நாள் இல்லை என்ற காட்சியிருந்தது. பெயரும் ஊரும் போட்டால் போதும்- எதுவும் வீடு தேடி வந்துவிடும் என்கிற அளவிற்கு அறிமுகம் இருந்தது. மேலே சொல்லப்பட்ட சில பத்திரிகைகளில் எழுதும் வாய்ப்பும் கிட்டின.

இந்த வாசிப்புகள் எந்த மேடைக்கு சென்றாலும் ஒருவித நம்பிக்கையை தந்தன. அனைவரும் பேசி முடித்தாலும் சொல்ல ஏதோ இருக்கும் என்கிற இரகசியத்தை தந்துகொண்டேயிருந்தன.

எனது இயக்கம் மட்டுமே- எனது தலைவர் மட்டுமே என்பதிலிருந்து பல இயக்கங்களை உள்வாங்க சொல்லித்தந்தன. தோழமையை கற்றுக்கொடுத்தன. பிறருடன் நிற்கச் செய்தன. அதே நேரத்தில் இப்படியொரு இயக்கத்திலிருந்து இவர் போன்றவர்கள் என பிறர் எண்ணத்தில் சொந்த இயக்கத்திற்கு பெருமையையும் சேர்த்தன.

எத்துறை மேடையிலும் அத்துறையின் சிறந்தவர்களுக்கு இணையாக செய்திகளை சொல்வதற்கான பயிற்சியை கொடுத்தன.

தோழர் ஞானையா போன்றவர்களுடன் விவாதிக்க பெரும்பாலும் மன்திலி ரிவ்யூ, பிராண்டியர், மெயின்ஸ்ட்ரீம், ஜனதா பயன்பட்டன. பல்லாண்டுகள் வந்த பத்திரிகைகளை ஆண்டு இறுதியில் வகைப்படுத்த தீனன் என்ற டெலிகாம் தோழர் பேருதவியாக இருந்தார். அனைத்தையும் அற்புதமாக பைண்ட் செய்து தருவார். அடக்கச் செலவைத்தவிர ஏதும் வாங்க மாட்டார். கேட்டால் எங்களுக்கு உழைக்கும் உங்களுக்கு செய்வதற்கு பணம் எதற்கு என்பார்.

ஒருமுறை தோழர் ரகுபதியின் அறையிலும், மற்றொரு முறை சிபிஐ எம் மாவட்ட அலுவலகத்திலும் CPI- CPIM- CPIML திட்டங்கள் குறித்த பெரும் விவாதத்தை மேற்கொண்டோம். மூன்றுதரப்பிலும் தோழர்கள் பங்கேற்றனர். உள்ளூர் சார்ந்த வகையில் வெங்கட்ராமன் அன்று சிபிஅய் எம், சிபிஅய்யில்பேரா ராமசாமி, நான் பங்கேற்றது நினைவில் இருக்கிறது. கடுமையான உச்சி பிளக்கும் விவாதங்கள்...

பேரா ராமசாமியுடன் சேர்ந்து துவங்கி பிறகு பேரா பழ கௌதமன் பொறுப்பில் சமூக சிந்தனையாளர் இயக்கம் நடந்தது. ஏங்கெல்ஸ் மறைவு நூற்றாண்டு சொற்பொழிவிற்கு மரியாதைக்குரிய பேரா அ. மார்க்ஸ் அழைக்கப்பட்டிருந்தார். சிறப்பான உரையை அவர் நல்கியபோதும் அவரிடம் சற்று கசப்புண்டாக்கும் வகையில் நான்

நடந்துகொண்டது குறித்து தற்போது தலைகுனிகிறேன். பிராண்டியர் முகவரியை எனக்கு தந்துதவியவர் தோழர் பேரா அ. மார்க்ஸ்.

கார்ல் மார்க்ஸ் சார்ந்த எழுத்துக்கள் படித்தபோது பெரும்பாலான நேரம் தெருவிலும், பயணத்திலுமான காலமாக இருந்தது. ஆனாலும் இப்பத்திரிகைகளை எங்கு போனாலும் கையில் வைத்துக்கொண்டு படிக்க முயன்றது நினைவில் நிற்கிறது.

இப்போதும் மார்க்ஸ் எழுத்துக்களுடன் பேசிக்கொள்ளாமல் இல்லை. காந்தி அதிகமாக எடுத்துக்கொள்கிறார். அம்பேத்கர் அவ்வப்போது வந்து செல்கிறார். ஆனால் எனது பத்திரிகை வாசிப்புகள் ?

nov 8 2024

2. அக்டோபர் புரட்சியின் தாக்கம்

1917 அக்டோபர் புரட்சியின் தாக்கம் இந்தியாவிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. விடுதலைப் போராளிகளுக்கு அதற்கு முன்னர் இத்தாலியின் மாஜினி தாக்கம்தான் மிக அதிகமாக இருந்தது. லெனின் பெயர் இந்தியாவில் பரவத்தொடங்கியது. ருஷ்யாவில் உழைப்பவர் ஆட்சிக்கு வந்துவிட்டனர்- இனி அவர்கள் வாழ்வில் சுபிட்சம்தான்- போல்ஷ்விக்குகளின் தொழிலாளர்- விவசாயி- போர்வீரர் கூட்டு ஆயுதப்போர் முறை- சோவியத் ஆட்சிமுறை உலகம் முழுவதும் பேச்சுப்பொருளானது. இளைஞர்கள் சோவியத் குறித்து அறிந்து கொள்ளவும் , அம்முறையில் தங்கள் நாடுகளை மீட்கவும் உறுதிபூணலாயினர். மக்களிடம் அது குறித்து எழுதலாயினர். கவிஞர்கள் அம்முறையை கொண்டாடினர்.

இந்தியாவிற்கு வெளியில் அன்றைய புரட்சி குறித்த பெருங்கனவு கொண்டிருந்த இளைஞர்கள் மாஸ்கோ செல்வது , லெனினை பார்ப்பது என்பதில் போட்டியிட்டுக் கொண்டனர். எம் என் ராய், அபானி, விரேந்திரநாத் சட்டோ, எம் பி டி ஆச்சார்யா, சௌகத் உஸ்மானி, சௌமேந்திர தாகூர் என ஏராள இளைஞர்கள் தாங்கள்தான் இந்திய பிரதிநிதிகள் என மாஸ்கோவில் முகாமிட்டு தங்கள் அங்கீகாரத்திற்காக போரிட்டு வந்தனர்.

அவரவர் செல்வாக்கு திட்டுக்களை உருவாக்கும் பொருட்டு பத்திரிகைகளை நடத்தி, இந்தியாவிற்கு அவற்றை கடத்த முயற்சித்தனர். மார்க்சிசம் என்பதுடன் லெனினியம் என்ற பின்னொட்டு சேர்க்கப்பட்டு அதை அவரவர் புரிந்த மொழியில் கோட்பாட்டு செய்திகளாக இந்தியாவிற்கு அனுப்பினர். லெனின் தன் தோழர்களுடன் தங்களுக்கான மூன்றாம் அகிலத்தை அமைத்தார். அந்த அகிலத்தின் அங்கீகாரம் பெற்றவர்க்கு சற்று நிதி உதவி, தங்குமிடம் போன்ற சில பாதுகாப்புகள் கிடைத்தன. லெனினியம் உலக மீட்சிக்கான கோட்பாடு என்கிற நம்பிக்கை பரவத்தொடங்கியது.

இந்தியாவிற்குள் மார்க்ஸ் லெனின் நூல்கள், ராய் - சட்டோ போன்றவர் பத்திரிகைகள் இரகசியமாக வரத்துவங்கின. பிரிட்டிஷ் இங்கு யார் எவர் எங்கிருந்து அவருக்கு சமிக்ஞைகள் என்கிற மோப்பத்தை பிடிக்கலானது. நேரிடையாக சோவியத் என்றில்லாமல், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி வழியாக இளம் தோழர்கள் இந்தியத்

தொடர்புகளுக்கு அனுப்பப்பட்டனர். பிலிப் ஸ்பிராட் போன்றவர் அப்படி வந்தவர்கள்தான்.

ராய் மற்றும் சோவியத் பிரிட்டிஷ் கட்சி எனும் இந்த தொடர்புகளின் வழியாக இங்கும் கல்கத்தா, பம்பாய், லாகூர், மதராஸ், கான்பூர் என ஆங்காங்கே விரல்விட்டு எண்ணக்கூடிய சில இளைஞர்கள் கம்யூனிஸ்ட்களாக தங்களை பிரகடனப்படுத்தினர். வேலைகளில் இறங்கினர். இப்படித்தான் டாங்கே, முசாபர், காட்டே , ஜோக்லேகர், பாகர்கட்டா போன்றவர்கள் உருவாகலாயினர். மூத்தவர் சிங்காரவேலரும் இப்படியான முன்வரிசையில் இருந்தார். இவர்கள் பத்திரிகை நடத்தலாயினர். கான்பூர் , மீரத் என சதி வழக்குகளில் சிக்கி போராடி தங்களை மீட்டுக்கொண்டனர். கான்பூர் வழக்கில் சிங்காரவேலர் விடுவிக்கப்பட்டதை, மிகப்பாதுகாப்பாக வெளிநாட்டில் இருந்த எம் என் ராய் விமர்சித்திருந்தார். புரட்சியாளர்கள் கொஞ்சம் பேர் ஆனாலும், ஒருவரை ஒருவர் விமர்சிப்பதில் தாராளமாகவே இருந்துள்ளனர்.

எம் என் ராய் முயற்சியால் அக் 1920ல் தாஷ்கண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என ஒன்றை அமைத்தனர். அகிலம் அதை குழு ஒன்றாகவே பார்த்தது. ராய் இந்தியாவில் காங்கிரஸ் நடக்கும் போதெல்லாம் அறிக்கை அனுப்பி இளம் தோழர்களை ஈர்க்க முயன்றார்.

கான்பூர் வழக்கு, மிக முக்கிய கருதுகோள் நம்பிக்கை ஒன்றை சிற்சிலராக இருந்த கம்யூனிஸ்ட்களுக்கு தந்தது. கம்யூனிசம் மார்க்சியம் என்கிற கருத்தை வைத்திருப்பதே ஆட்சி துரோகமல்ல. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக சதி தான் தேசத் துரோகம் எனவழக்கு போனது. இந்த நம்பிக்கையை எடுத்துக்கொண்டு, கான்பூரில் செப்டம்பர் 1924 ல் 50 உறுப்பினர் பட்டியலுடன் சத்ய பக்தா என்கிற ராஜஸ்தான் சார்ந்த இளைஞர் ‘இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியை ‘ தொடங்கினார். சில்வியா பங்க்ரஸ்ட் போன்றவருடன் இவர் தொடர்பில் இருந்தார். சத்யா சோசலிச புத்தக கடை நடத்தினார். பகத்சிங் கான்பூரில் இருந்தபோது, சத்யாவிடம் ரூ 10 செலுத்தி ருஷ்ய புரட்சி குறித்த புத்தகத்தை வாங்கி சென்றுள்ளார்.

கான்பூரில் புகழ் வாய்ந்த போராளி கணேஷ் சங்கர் வித்யார்த்தி சத்ய பக்தா, பகத்சிங் போன்றவர்க்கு ஈர்ப்பாக இருந்தார். ஹஸ்ரத் மொகானி காங்கிரசில், கிலாபத்தில், இடது சிந்தனைகளில் செயல்பட்டு வந்தார். இஸ்லாமிய கம்யூனிசம் எனக்கூட அவர் பேசியவர்தான். கணேஷ், ஹஸ்ரத், ராதாமோகன் ஆகியவர்களின்

ஒப்புதலுடன் , டிசம்பர் 1925ல் காங்கிரஸ் மாநாடு கூடும்போது , கம்யூனிஸ்ட் மாநாடும் நடத்தலாம் என்கிற அறிவிப்பை சத்யபக்தா வெளியிட்டார். கான்பூர் வழக்கு நேரத்தில் டாங்கே, முசாபரை சத்யபக்தா சந்தித்தார். காந்தியின் கதர் ஈர்ப்பும் எளிய வாழ்வும் அவருக்கு ஈர்ப்பை தந்தன.

மாநாடும் டிசம்பர் 26 , 1925ல் திட்டமிட்டப்படி கூடியது. தேசியமா சர்வதேசியமா, அகிலத்துடன் உறவென்ன, இரகசிய வழிகளா, legalised open வழிகளா, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இந்திய படை பிரிவு கட்சியா அல்லது இந்தியாவிற்கான சுயேட்சையான கட்சியா என்பதெல்லாம் விவாதங்களாயின. அவரவர் அந்த இளம் வயதில் கற்றுக்கொண்ட தேர்ச்சிக்கேற்ப நிலைப்பாட்டை எடுத்தனர்.

சக்லத்வாலா வருவதில் இரு சிக்கல் ஏற்பட்டது. தலையாய சிக்கல் அகிலம் ஒப்பு கொடுக்காத மாநாட்டிற்கு வரமுடியுமா- இரண்டாவது நடைமுறை சிக்கல் , போக்குவரத்து செலவிற்கு நிதி கொடுக்க முடியுமா? அவர் வருவதில்லை என முடிவானது. சத்யபக்தா சிங்காரவேலர் தலைமையேற்க வேண்டுகோள் கொடுத்தார். சத்யபக்தா , சிங்காரவேலர் , ஹஸ்ரத் ஆகியோர் போல்ஷ்விசமல்ல என்கிற கருத்துடன் இருந்தனர். முசாபர், காட்டே, பாகர்ஹட்டா போன்றவர் சர்வதேசிய அடையாளம் என்கிற communist party of India என்கிற நிலையை வற்புறுத்தினர். சத்யபக்தா வெளியேறும் சூழல் உருவானது. 1985 வரை வாழ்ந்த அவர் இந்தியில் நூறு நூல்களை எழுதியுள்ளார். சத்யபக்தா எளிய வாழ்க்கை வாழந்தவர். தலித் குடும்பத்தில் பிறந்து தெரு சுத்தம் செய்து வந்த பெண்ணை மணமுடித்து, பின்னர் இந்து கம்யூனிசம் எனப் பேசி மடம் ஒன்றில் தங்கி மறைந்தார்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் என்பதில் போல்ஷ்விக் தாக்கம் என்பது நிழல்போலவே சிலகாலம் உள்ளடங்கி, சில காலம் நீள உயரமாக இருந்து வந்தது. அகிலம் மற்றும் அதன் முடிவுகள் இயக்க நிலைப்பாடுகளில் அலைக்கழிப்பை உருவாக்கின. காந்தி, காங்கிரஸ் இயக்கம் , தேசிய இனம், இரகசிய UG வழிகள், ஆயுதபுரட்சி பார்வைகள், அமைப்பு முறைகள் , பிரிட்டிஷ் ஆட்சி, பெற்றது விடுதலையா எனும் சந்தேகப்பார்வை போன்ற பலவற்றில் அகிலத்தின் தாக்கம் பிரச்சனை தொடர்ந்தது. அகிலத் தொடர்பில் இல்லாதவர் ஒடுகாலிகளாயினர். எம் என் ராய் இப்படியானார்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் விடுதலைக்கு பின்னரும் கூட சோவியத் ஸ்டாலினிடம் சென்று அறிவுரை பெறவேண்டிய நிலையில் , உள்

விவாத சூழலால் இருந்ததைக் காணமுடியும். இயக்கம் சர்வதேசியம் என்பதை கைவிடாமலேயே , தங்களின் சுயத்தை வீரியமாக கண்டறியத் தொடங்கியது. இந்திய விடுதலைபோர், காந்தி, நேரு ஆட்சி குறித்து, நாடாளுமன்ற சட்ட மன்ற தேர்தல் பங்கேற்பு போன்ற பல அம்சங்களில் விவாத வழிகளில் சுயேட்சையான நிலைப்பாடுகளை கட்சியால் எடுக்க இயலும் என்கிற திசையிலான பயணம் மெதுவாக , உறுதியாக நடக்கலானது.

இந்திய விடுதலை, அரசியல் அமைப்பு சட்டம் குறித்து நேர்மறையான பார்வைகள் உருவானது. மகாத்மா குறித்த மதிப்பீடுகளை ஹிரன், இ எம் எஸ், டாங்கே, சர்தேசாய் போன்றவர்கள் செய்யலாயினர். நேரு குறித்து அஜாய், டாங்கே , இ எம் எஸ் போன்றவர் செய்தனர். சுபாஷ், அம்பேத்கர் குறித்தும் நேர்மறையான மதிப்பீடுகளுக்கு வந்தனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, உள்நாட்டில் பொதுத்துறை சார்ந்த கட்டுமானங்கள், கலப்பு பொருளாதாரம் என்றாலும் ஏகபோக எதிர்ப்பு, நிலபிரபுத்துவ ஜமீன் முறை நீக்கி உழவர் நில உரிமை, தொழிலாளர் பாதுகாப்பு, பாலின சமத்துவம் என்கிற சில அடிப்படைகளுடன், சாதிய கொடுமைகளுக்கு எதிரான சகோதரத்துவ உணர்வுள்ள சமூக முறை , மத்திய மாநில உறவுகளில் பொருளாதார அரசியல் ஜனநாயக கண்ணியம் , பஞ்சாயத்து மேம்பாடு போன்ற அனுபவங்களின் வழி சிந்தனை தெளிவை கம்யூனிஸ்ட் இயக்கம் சுயேட்சையாக பெறலானது. கேரளாவில் தேர்தல் வழியில் மக்களின் ஒப்புதலுடன் ஆயுதம் ஏந்தாமல் ஆட்சிக்கு வரமுடியும் என்கிற சோதனை 1957 ல் இ எம் எஸ் ஆட்சி வழி நடந்தேறியது. உலகமும் அதை முதல் வரலாறாக எடுத்துக்கொண்டது. தேர்தல், பலகட்சி ஆட்சி முறை என்கிற ஒப்புதலுக்கு முழுமையாக இயக்கம் நுழைந்தது.

இன்று அதற்கு சீனா உள்ளிட்ட எவரும் மாஸ்டர் அல்ல. தன் சொந்த கூடலில் ஏற்படும் புரிதல்களில் எடுக்கும் முடிவுகளில் நிற்கும் இயக்கமாகிவுள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முழக்கத்தை 1958லேயே அது நிறுத்திக்கொண்டுவிட்டது. உலகத்தொழிலாளர்களே ஒன்று படுவீர் என்கிற முழக்கம் , உலக உழைப்பவர்கள் மீதான அதன் கரிசனம் என்கிற நேரிய பார்வையுடன் தொழிற்படுகிறது. இன்று அதன் சர்வதேசியம் என்பது , அழைக்கப்படுவோரின் மாநாடுகளுக்கு செல்வது- அவர்கள் பார்வையை புரிந்து கொள்வது என்பதுதான். வெளியிலிருந்து எந்த கட்டளையையும் சுமந்து வரக்கூடிய சர்வதேசியமல்ல அது. அவரவர் நாடு குறித்த புரிதலுடன் உலகப்பார்வை- மேல் கீழ் இல்லாத சமத்துவ அந்தஸ்து என்பது தான்.

நடைமுறையில் - போரற்ற உலக மக்களின் அமைதிக்கும் , அழகான உழைப்பு வாழ்விற்கும் உகந்த வெளிநாட்டுக்கொள்கையின் விரிவாக சர்வதேசியம் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இப்போதெல்லாம் இரகசிய வழிகள் என்பதில்லை. சட்டபூர்வ , அரசியல் அமைப்பு சட்ட எல்லைக்குள் என்பது ஏற்கப்பட்டுள்ளது. உழைப்போர் உயர்வு என்கிற பாதை பிடிமானம் தொடர்கிறது. Voice of labouring class என்கிற பேரடையாளம் அதன் அடிப்படை. பல்வேறு இசங்களின் அதிகார இழுவை என்கிற போராட்டங்களில் இயக்கம் சிக்காமல் இல்லை. பல கட்சிகளில் இருப்பது போல் aspirational aspects என்பதும் உருவாகாமல் இல்லை. வர்க்கம் சாதி பாலினம் மத வேறுபாடுகள் , பண சொத்து செல்வாக்கு என்கிற பெரும் சிலந்தி வலைகளின் நாடொன்றில் அரசியல் பயணம் அவ்வளவு எளிதானதல்ல. கோடானு கோடி உழைப்பாளர் இன்னும் ஓரவாழ்வில் என்பதால் , அவர்களின் குரலாக ஓட வேண்டியே இருக்கும். அவர்களும் அதை உணரும் தருணம் வரலாம் என்கிற நம்பிக்கை தான் நாளைகள்.

இந்த நூற்றாண்டில் இயக்க வாழ்விற்காக தம்மை தொலைத்துக்கொண்டவர் பலர். ஏராள தியாகங்கள்,சொல்லொணாத் துயர்கள், வழக்குகள், இழப்புகள் என நீண்ட பாதையின் விளக்குத் தூண்களாக பலர். அவர்கள் சிந்தித்த பாதையில் சறுக்கல்கள் இருந்திருக்கலாம். தவறு செய்துவிட்டோமே என விழும்போதெல்லாம் , சரி செய்து எழுந்திருந்திருக்க முயற்சித்துள்ளனர். எப்போதும் எல்லா காலத்திலும் சரி என எந்த

அமைப்பாலும் உரிமை கொண்டாட முடியாது. அது over claim ஆகவே அமையும். இதன் பொருள் ஓர் அமைப்பு அதன் தவறுகளை, வீழ்ச்சிகளை நியாயப்படுத்திக்கொள்ளலாம் என்பதல்ல. போதா புரிதல்கள் இருப்பது ஒன்றும் அவமானகரமானதல்ல. அனுபவங்கள் வழி செழுமைக்கான சாலையில் பயணம் என்பது வாய்த்தால் பயனளிக்கலாம்.

ஆரம்பத்திலிருந்தே, சுய அனுபவத்தில் காந்தியின் கரங்களை பற்றியோ, அல்லது ஜோஷி தொடங்கி வைத்த உரையாடல்களை பல்வேறு தளங்களில் 1948 ஜனவரிவரை அவருடன் உடன் அமர்ந்து நடத்தி பயணித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என எனக்குத் தோன்றுகிறது. காந்தி அம்பேத்கர் உரையாடல்தான் இந்நாட்டின் ஒடுக்கப்பட்டோர் அரசியல் வாழ்வில் சற்று கண்ணியமான இடம் பெற விதையானது என எனக்குத் தோன்றும். நேருவின் ஆட்சியின் போதும், காந்தி படுகொலை நடவாமல் போயிருந்தால், இந்நாட்டின் கிராமங்கள்

சற்றாவது கூடுதலாக கவனிக்கப்பட்டிருக்கலாம் எனக்கூட தோன்றுகிறது. ஆனால் வாழ்க்கை ifs buts படி போகாதே.

வாழ்க்கை வெறும் சூத்திரங்களின் பாதையுமல்ல. முன்னோர் சிந்தித்தவையுடன் உலகம் நின்றுவிடப்போவதும் இல்லை. ஒவ்வொரு கணமும் பழையதாகவும் புதியதாகவும் இருக்கிறது. கைக்கு எட்டும் வேலைகள் நிம்மதியைத் தருகின்றன. கோட்பாட்டு வேலைகள் நம்பிக்கை , நிராசை சலிப்பு போன்ற கலவையான உணர்வுகளை தரலாம். தினம் விடிகிறது. நாளை மற்றுமொரு நாளாக இருக்கலாம். அல்லது புதிய அர்த்தப் பொலிவாகவும் அமையலாம். மானுட ஓட்டம் தொடர்கிறதே...

8-11-2024

3. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி- வரலாற்றுக் குறிப்புகள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுக் குறிப்புகள்' என்கிற கச்சிதமான நூல் 1976 ல் தமிழில் கொணரப்பட்டது. இ.க.கவின் 50 ஆண்டுகளையொட்டி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வந்த நூல். இந்திய இடதுசாரிகளின் எழுத்து கிடங்கில் இருக்கின்ற முக்கிய நூலாக இதைக் குறிப்பிடலாம். 237 பக்க நூல்தான். சிலமணிநேரம் செலவு செய்யக்கூடிய எவரும் படித்துவிடமுடியும்.

1917 அக்டோபர் புரட்சி தாக்கம் தொடங்கி 1964 ல் இயக்கம் சிபிஅய்- சிபிஅய் எம் என பிளவு நேர்ந்த காலம் வரையிலான வரலாறு , சிறு குறிப்புகளாக இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இயக்க வரலாறு அறிந்த மூத்தவர்கள் இந்நூலை பலமுறை படித்திருக்கக்கூடும்.

காலப்பகுப்பாக 1917-29, 1929-41, 1942-51, 1951-64 என்று வகைப்படுத்திக்கொண்டு சோவியத் தாக்கம், கோமிண்டர்ன், காங்கிரஸ் இயக்கம்- காந்தி, எம் என் ராய் உள்ளிட்ட வெளிநாடு வாழ் மூத்தவர் செயல்பாடுகள், நேரு சுபாஷ் உள்ளிட்ட காங் இடது பிரிவு, காங் சோசலிஸ்ட்கள், பிரிட்டிஷ் ஆட்சி அதிகார அடக்குமுறைகள், தொழிலாளர் விவசாயி போராட்டங்கள், மாணவர் பெண்கள் இயக்கங்கள், இப்டா மேடை என்கிற சூழல்களுடன் கட்சியின் ஊடாட்டம் பின்னப்பட்டு இவ்வரலாற்று பிரதி குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

கட்சி அமைத்தல் சிந்தனைகள் - ஆங்காங்கு குழுக்கள் என்பதிலிருந்து முழு நேர கட்சி உருவாதல் என்கிற பரிணாமம் சொல்லப்பட்டுள்ளதை வாசிப்பவர் உள்வாங்கமுடியும்.

வெளிநாட்டில் தாஷ்கண்டில் 1920 அக்டோபர் எழுவர் முயற்சி, இந்திய நகரங்களில் சோவியத் புரட்சி , மார்க்சிய தாக்கத்தில் , வெளிநாடுகளிலிருந்து வந்து போனவர், தங்கி பணியாற்றியவர், தொடர்புகள், இரகசிய செயல்பாடு, தொழிலாளர்விவசாயி கட்சி அமைத்தல், 1925 டிசம்பரில் நேரிடையாக கம்யூனிஸ்ட் கட்சியை நாட்டிற்குள்ளாக அமைத்து நாட்டு மக்களுடன் செயல்படுதல் , அப்படி துணிச்சலாக முன்வந்த அன்றைய இளைஞர்கள், இன்று நூற்றாண்டைக் கண்ட மூத்தவர்களின் செயல்பாடுகள்- நேர்ந்த தவறான புரிதல்கள், வளர்ந்த சோவியத் பிரிட்டிஷ் சீன கட்சியின் இடித்துரைப்புகள் என நகர்ந்த ஆரம்ப ஆண்டுகள்.

கோமிண்டர்ன் உடன் உறவென்ன, இணைப்பா, அறிவுரைகளை எந்த அளவில் எடுத்துகொள்வது- போடப்பட்ட கான்பூர் மீரத் சதி வழக்குகளை சந்தித்து மீளல், பிரதான காங்கிரசுடன் உறவென்ன- அது முதலாளித்துவ ஜனநாயகத்திற்காக நின்றால், நாட்டின் விடுதலையை சோசலிச சோவியத் என்பதாக மாற்றுவது எப்படி போன்ற பல கேள்விகள் - சரி என நினைத்த பதில்கள்- தவறாகிவிட்டதே- குறைகள் தெரிகிறதே என்கிற rectification என வரலாற்று கட்டங்கள் நகர்தல்.

1930 களின் இறுதி துவங்கி வெளித்தெரியும் வகையிலான legalised party - ஜோஷி தலைமையிலான செயல்பாடுகள், தடை - குவிட் இந்தியா காலம்- தடை நீங்கல்- நேரிட்ட தவறான அணுகுமுறைகள், விடுதலையா வெறும் அதிகார மாற்றமா என்கிற கேள்விகள், பாகிஸ்தான் முஸ்லிம் தனி தேசிய இனம் என்கிற அதிகாரி தீசிஸ், இல்லை தவறாக புரிந்து கொண்டோம் என்கிற மறுபார்வைகள் என இக்காலம் நகர்வதைக் காணலாம்.

ரணதிவே கால இடது அதி சூத்திர கல்கத்தா 1948 மாநாடு, சரி செய்து சீனப்பாதை என்கிற சிறு கால ராஜேஸ்வரராவ் சோதனை, பின்னர் அஜாய்கோஷ் வரவு- தொடர் செயல்பாட்டுக்காலம்- தேர்தல் பங்கேற்பு வெற்றி தோல்விகள், கேரளா இ எம் எஸ் ஆட்சி சோதனை- கலைப்பு, நேரு குறித்த விமர்சன மற்றும் நேரிய பார்வைகள், சீனா தொடுத்தப் போர், சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் விவாதம், உலக கம்யூனிஸ்ட் இயக்க மாறுபாடுகள் போன்ற சூழலில் கட்சிக்குள் பெரும் ஓயா விவாதங்கள்- சி பி எம் உருவாதல், அவரவர் தனித்துக்கூடி தங்களுக்கான திட்டங்களை வரைதல் என்பதுவரை இந்நூல் செல்வதை உணரமுடியும்.

இந்நூலை பெரும் கட்சி அறிஞர்களாக பார்க்கப்பட்ட தோழர்கள் அதிகாரி, மொகித்சென், பருக்கி, சின் மோகன், அவ்தார் சிங் போன்ற பலர் காலம் பிரித்துகொண்டு எழுதியுள்ளனர்.

மேலே சொன்னவை மிக மிக சிறிய அறிமுகமே. இந்நூலின் ஆசிரியர்களும் இந்த 50 ஆண்டு குறிப்புகள் முழு வரலாறல்ல என்றே தெரிவித்துள்ளனர்.

வால்யூம்களாக 'டாக்குமெண்ட்ஸ்' தொகுப்புகள் இக்காலத்திற்கு வந்துள்ளன. தோழர்கள் அதிகாரி , எம் பி ராவ் , மொகித் சென் போன்றோர் பெரும் உழைப்பில் அந்த தொகை நூல்கள் வந்தன. அவற்றை திருவிக கல்லூரி நூலகத்தில் பேரா ராமசாமி உதவியால் அப்போது வாங்கி வைக்க முடிந்தது.

Archives என்கிற இணைய தளத்தை ஏனோ மூடிவிட்டார்கள். அதில் சில வால்யூம்கள் கிடைத்தன. ஆய்வு மனமும் கூடுதல் வேட்கையும் கொண்டவர் அவ்வால்யூம்களை தேடி தெரிந்துகொள்ள முயற்சிக்கலாம்.

60 ஆண்டுகள் போது சில பிரசுரங்கள், கட்சியின் நிலைப்பாட்டை விளக்கும் வகையில் வந்தன. 80 ஆம் ஆண்டில் தமிழில் தோழர் பரதன் எழுதியதும், தேவ பேரின்பன் எழுதியதும் வந்தன.

சிபிஎம் தன் வால்யூம்களை 1964யைக் கடந்தும் கொணர்ந்தனர். சிபிஎம் எல், சோசலிஸ்ட்கள், அரசு உளவுத்துறையினர் என பலர் அவர்களுக்கு கிடைத்தவற்றை தொகுத்துள்ளனர். தனி நபர்களாக எம் என் ராய், எம் பி டி ஆச்சார்யா, சௌமேந்திர தாகூர் , முசாபர் அகமது, பிலிப்ஸ்பிராட் போன்றோர் எழுதியவையும் இருக்கின்றன. ஆங்கில புத்தகங்கள் சிலவும் வந்துள்ளன.

மேலே சொன்ன நூலை முதல் 50 ஆண்டுகள் என்கிற காலப்பகுதிக்கான நூலாக கொள்ளலாம். அதில் சில முக்கிய புள்ளிகளை உய்த்துணரலாம்.

-1920 அக்டோபரா அல்லது 1925 டிசம்பரா என்பதில் புரிதல்- ஏன் அப்படி என்கிற விளக்கம்

- கருத்துக்களை வழிகாட்டலை எங்கிருந்து வேண்டுமானாலும் (சோவியத், பிரிட்டன் கம்யூனிஸ்ட்களிடம்) பெறவேண்டிய சூழல் இருந்தாலும், இங்கு இந்தியாவில் இருந்துகொண்டு வெகுஜனங்களிடம் வேலை என்கிற எதார்த்தம் உணர்தல்

- ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப்போரில் - சோசலிச அரசு என்கிற ஒரே தாவலா அல்லது இரு கட்ட நகர்வா - விடுதலை அரசியல் ஜனநாயகம் , அடுத்த சோசலிச நகர்தல் குறித்த புரிதல்

- ஏகாதிபத்திய எதிர்ப்பில் சுயேட்சையான முன் முயற்சிகள் தேவை என்றாலும், பரந்த காங்கிரஸ், இன்னும் உதிரிகளுடன் சேர்ந்து செல்லவேண்டிய அவசியம் உணர்தல்

- காங்கிரசின் போதாமை குறித்த விமர்சனங்களுடன், தங்கள் போதாமைகளையும் அவ்வப்போது உணர்தல்

- 1947 ஆகஸ்ட் வெறும் அதிகார மாற்றம் என்பதிலிருந்து சுதந்திர இந்தியா - விடுதலை இந்தியா என்கிற புரிதல்

- தேர்தல் பூர்ஷ்வா முறை என்பதாக உணரப்பட்டாலும், தேர்தலில் நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பங்கேற்றல்

- பல கட்சி ஆட்சி முறை இந்திய சூழலை ஏற்றல், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்பதை விடுதல், அமைதி வழி வாய்ப்புகளை ஏற்றல்

- தேசிய சுயநிர்ணய உரிமை என்பதை 'கட்டாயமாக பிரிந்து செல்தல்' என புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை, மொழிவழி மாநிலங்கள் அதன் அதிகாரங்களை விரிவுபடுத்தல்

- காங்கிரசிற்கு மாற்று எனப்பேசும்போது , காங்கிரசை நம்பி செல்கின்ற ஜனநாயக சக்திகளிடமும் நம்பிக்கையை உருவாக்க வேண்டிய அவசியத்தை உணர்தல்

- இந்திய நிலைமைகள் பற்றிய புரிதலை, பிற நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளைவிட , இந்திய கம்யூனிஸ்ட்கள் சரியாக சொல்ல முடியும்- அதற்கான சுயேட்சையான ஞானம் இருப்பதை அறிவித்தல்

போன்ற சில அம்சங்களை பட்டியலிட முடியும். இந்நூல் ஒவ்வொரு பகுப்பாய்வு காலத்திற்குமான சில முக்கிய கொள்கை அறிக்கை டாக்குமெண்ட்கள் குறித்தும், அவற்றில் இருந்த சில தவறான புரிதல்கள் பற்றியும் ஆங்காங்கே சொல்லிச் செல்லும்.

இதுவரை வாசிக்காதவர் வாசித்து பார்க்கலாம்.

21-10-2024

அக்டோபர் 2024

4. தோழர் சுர்ஜித் பார்வையில் வரலாற்று செய்திகள்

தமிழகத்தில் அரசியல் ஆர்வம் உள்ளவர், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட்களின் கதையை அறிந்துகொள்ள விரும்புவோர் படிக்க வேண்டிய நூல்களில் ஒன்று

தோழர் ஹரிகிஷன்சிங் சுர்ஜித் எழுதிய ' இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பெருமை மிகு வரலாறு'.

தோழர் சுர்ஜித் சிபிஎம் கட்சியின் பொதுச்செயலராக எழுதிய நூல். 75 ஆண்டுகள் என்பதை மனதில் வைத்து ஆங்கிலத்தில் An Outline History of the Communist Movement in India என அவர் எழுதினார். தமிழில் மொழிபெயர்த்து 200 பக்க அளவில் 1994ல் கொணர்ந்தனர். நூலின் 30 ஆம் ஆண்டை நாம் கடந்து செல்கிறோம்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் ' இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று குறிப்புகள்' என்ற நூல் பற்றி சிறிய அளவில் இடுகை செய்திருந்தேன். அது சிபிஅய் கட்சியின் 50 ஆண்டுகால வரலாற்றை மிகச் சுருக்கமாக பேசும் நூல். தோழர்கள் அதிகாரி, பருக்கி, மொகித்சென், அவதார் சிங் போன்றோரின் கூட்டு முயற்சி அது.

இந்த நூல் சுர்ஜித் அவர்களால் 1917 சோவியத் புரட்சியிலிருந்து, சோவியத் உடைவு- வீழ்ச்சி குறித்து இந்தியாவில் புரிந்துகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் வரை ஏறத்தாழ 75 ஆண்டுகள் குறித்த கச்சிதமான பதிவாக பார்க்கலாம்.

சிபிஅய் தன் கட்சி வரலாறு என ஆவணங்களை வெளியிட்டு வருகிறது என்றால் , சிபிஎம் துவங்கிய பின்னர் ஆவண வெளியீடுகள் 'கட்சி வரலாறு' என்றில்லாமல், இந்திய கம்யூனிஸ்ட் 'இயக்க வரலாறு ' - history of communist 'movement' of India என ஆவண வெளியீடுகள் வருவதும் மிக முக்கியமாக பார்க்க வேண்டிய ஒன்றாகும். 'சிபிஎம் வரலாறு' என அவை வெளியிடப்படவில்லை. அதேநேரத்தில் 1964க்கு பின்னரான சிபிஎம் நிகழ்வுகளே இயக்க வரலாறு என சுருக்கப்படுதலும் இங்கு நடந்தேறிவிடுவதைக் காணமுடியும்.

1917 முதல் - விடுதலைக்கால 1947 வரை , ஒரே வகையிலான வரலாற்று புரிதலை, பொதுவாக இரு கட்சி ஆவணங்களும் தருவதைக் காணமுடியும். சிற்சில விடுபடல்கள் இருக்கும். 1964 ல் கட்சி உடைவு - தனியாக சிபிஎம் உருவாதலுக்கு பின்னர்தான் வரலாறு குறித்த

ஆவணங்கள் நேர் செய்யப்படலாயின. அதற்கு தகுந்தாற் போல அணிகளுக்கு வரலாற்றை எடுத்துச் சொல்லும் பொறுப்பில் கட்சித்தலைவர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இங்கு அமைப்பு தலைவர்களே வரலாற்றாசிரியர்களாகவும் இருந்ததால், ஆங்காங்கே அரசியல் தேவைக்கேற்ப சாய்வுகள் இருப்பதை கூர்ந்து படிப்பவர்களால் உணரமுடியும். சில highlights- சில dims இருப்பதைத்தான் இங்கு நான் குறிப்பிடுகிறேன். இதை சுர்ஜித் அவர்கள் எழுதிய நூலிலும் highlights- dims என்பதான bias யை நான் உணர்ந்தேன். இந்த நூலின் சிறப்பை நான் உணர்ந்த சிறிய அளவிலான bias (அல்லது எனக்கு கடந்த 40 ஆண்டுகளில் உருவான சிறிய அளவிலான bias) எந்த விதத்திலும் குறைத்துவிடாது.

தோழர் சுர்ஜித் சொல்வதை இங்கு தருகிறேன்

“..பல்வேறு கட்சித் தலைவர்கள் , கட்சி வரலாற்றின் சில அம்சங்களை விவரித்த போதிலும் கூட , இயக்கத்தின் சாதனைகளையும், தோல்விகளையும் விஞ்ஞானரீதியாக பகுப்பாய்வு செய்ய தீவிரமான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை …கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சி என்பது இந்தத் தலைவர்கள் சொந்த முறையில் அடைந்த அனுபவத்தின் ஒரு பகுதியாகும்…அனுபவம் ஒன்று திரட்டப்படவில்லை. ..ஒன்று திரட்டுவதற்கான பணியை கமிஷன் மேற்கொள்வது அவசியமாகும்”.

அவர்கள் கமிஷன் மேற்கொண்டு பல வால்யூம்களை documents on movement எனக் கொணர்ந்தனர். அது குறித்தும் ஆங்கிலத்தில் விரிவாக சுர்ஜித் எழுதினார். தமிழில் வந்ததா என எனக்குத் தெரியவில்லை.

இந்தியாவின் பண்டைய வரலாறு என்பது கிடைத்த கல்வெட்டுகள், தொல்லியல் ஆதாரங்களை கொண்டு பின்னப்படும் ஊக எழுத்துக்களாகவே வரலாற்றாசிரியர்களால் தரப்பட்டுள்ளன. மத்தியகால இந்தியா குறித்தும் , பின்னர் வந்த நவீன இந்தியா குறித்தும் கூட சிற்சில வேறுபட்ட பார்வையுடன் தான் வரலாறுகள் எழுதப்படுபவர்களால் நமக்கு கைமாற்றித் தரப்படுகின்றன.

விஞ்ஞானபூர்வ ஆய்வு என்பதன் பொருளாக முடிந்தவரை உள்ளது உள்ளபடி எந்த ஒதுக்கலும் (இன்றுள்ள அரசியலுக்கு சௌகரியம் இல்லை என்பதால் விட்டுவிடாமல் கோர்ப்பது) இல்லாமல் ஆவணங்களை, பின்னர் அது குறித்து விமர்சன பகுப்பாய்வுடன் வந்த தொடர் ஆவணங்களை வைப்பது, கையில் இருக்கக்கூடிய எல்லா

மாற்று சிந்தனைகளையும் அடுக்கி வரலாற்று பக்கங்களுக்குள் அனுமதிப்பது என்று எடுத்துக்கொள்ளலாம். நான் பார்த்த அளவில் விடுபடல்கள் இருக்கவே செய்கின்றன. Highlights - dims இருக்கவே செய்கின்றன. அதை நான் புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன்.

என் தலைமுறையினர் , கட்சி உடைந்து - அவரவர் சோதனை- பாலிமிக்ஸ்- இந்திரா எமர்ஜென்சி- ஜனதா சோதனை பின்னணி கால பதிந்தா- ஜலந்தர் கட்சி காங்கிரஸ் காலத்தில் கட்சி வாழ்க்கையில் (அளவில் மிகச் சிறிய) நுழைந்தவர்கள். எங்கள் முந்திய தலைமுறையினர் மத்தியில் இருந்த கடும் கோபம் மோதல் எமோஷன் என்பதில்லாமல்- இந்தியாவிற்கு 'இடதுசாரி ஜனநாயக மாற்று' என்கிற அரசியல் முழக்கப் பின்னணி தொடங்கிய 40 ஆண்டுகளுக்கு மேலான கால வெளிக்குரியவர்கள். இதன் பொருள் தொழிற்சங்க அரங்கில் இரு அணிகளாக நாங்கள் போட்டியிடாமல், சிறு சிறு மோதல்களை அனுபவிக்காமல் இக்காலத்தை கடந்தோம் என்பதில்லை. அவையிருந்தன. இருக்கவும் செய்கின்றன. எங்களுக்குள் குழு மோதல்களையும் செய்யாமல் இல்லை. தோழமை தொலையாமல் அவை இருக்கின்றன என்பது முக்கியமானது.

1977- 1978 முதலான இன்றுள்ள வரையிலான நீண்ட ஆண்டுகள் இடதுசாரிகள் பெரும்பாலும் (பெரும்பாலும்) ஒத்த நிலைப்பாடுகளையே எடுத்து வருகின்றனர். சிற்சில வேறுபாடுகள் இல்லை என்பதில்லை. திட்டம் , கட்சி காங்கிரஸ் ஆவணங்களில் சில வேறுபாடுகள் உள்ளன என்பதற்கான சாயல்கள் தெரியும். அன்றாட அரசியல் நிலைப்பாடுகளில் , சிறு சிறு சந்தேகங்கள்- பரஸ்பர குறைகள் என அணிகளிடம் சொல்லப்பட்டாலும், பொதுவான நிலைப்பாட்டை பார்க்க முடியும்.

ஆரம்பத்தில் ஒரே கட்சியாக இருந்து உட்கட்சி போராட்டங்கள் நடத்திய ஆண்டுகள், உடைவிற்கு உள்ளாகி பரஸ்பரம் போராடிய 14 ஆண்டுகள் என்கிற காலத்தை விட, தனித்தனி கட்சிகள் ஆகி ஒன்றாக அரசியல் நிலைப்பாட்டில் பயணிக்கும் காலம் மிக நீளமானது என்கிற புரிதலும் அவசியமாக இருக்கிறது.

நவீன இந்திய வரலாறு - விடுதலை இயக்க வரலாறு குறித்தும், இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்தும் மேம்பட்ட புரிதல்களுக்கான ஆவணங்கள் குவிந்து கிடக்கின்றன. வரலாற்று தாகம் உள்ளவர்க்கு அவை தடாகமாக இருக்கலாம். அவற்றில்

கொஞ்சம் பார்த்தால் கூட 'absolute ' என்கிற உரிமை பாராட்டல்கள் நம்மிடம் நீங்க வாய்ப்பு இருக்கும்.

மரியாதைக்குரிய தோழர் சுர்ஜித் அவர்களின் இச்சிறிய நூல் வாசிப்புக்குரிய முக்கிய நூலாக எனக்குப்படுகிறது

25-10-2024

நவம்பர் 2024

5. சிபிஅய் 80 ஆண்டுகள்- இரு நூல்கள்

CPI கட்சியின் 80 ஆண்டின்போது , 2005ல் , தமிழில் இரு குறிப்புகள் வெளியாயின. ஒன்று பொதுச்செயலராக இருந்த தோழர் ஏ பி பரதன் ஆங்கிலத்தில் எழுதிய சிபிஅய் 80- 100 பக்க நூல். தமிழில் 150 பக்க அளவில் மொழிபெயர்க்கப்பட்டு வந்தது. அடுத்த நூல் மறைந்த மார்க்சிய சிந்தனையாளர் தோழர் தேவ. பேரின்பன் எழுதிய ‘ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் எண்பது ஆண்டு இலட்சியப்பயணம்.

இந்த இரு நூல்களையும் முன்பு என் இடுகையில் சொல்லப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று குறிப்புகள்- 50 ஆண்டுகள் , சுர்ஜித் எழுதிய வரலாற்று நூல் என்பதுடன் சேர்த்து வாசித்து பார்க்கலாம். புரிதலுக்காக அப்படி சொல்கிறேன்.

தோழர் பரதன் நூலானாலும், பேரின்பன் நூலானாலும் இருவருமே தாங்கள் 80 ஆண்டு கட்சி வரலாற்றை சொல்ல வரவில்லை என்பதை தெளிவுபடுத்திவிடுகின்றனர். தோழர் பரதன் நூலில் முக்கிய நிகழ்வுகளின் போராட்டங்களின் விரிவு சற்று கூடுதலாக கட்டப்பட்டிருக்கும். பெருமளவு விரித்து எழுதப்பட்ட காங்கிரஸ் ரிபோர்ட் , மற்றும் அவரின் எழுச்சி உரைகளின் கலப்பாக அதை நான் உள் வாங்கினேன். 2005-6 ல் படித்தபோது எப்படிப்பட்ட உணர்வு இருந்தது என என்னால் recollect செய்ய முடியவில்லை.

தோழர் பேரின்பன் நூலில் கருத்தியல் அடர்த்தி கட்டப்பட்டிருக்கும். இதெல்லாம் என் வாசிப்பின் புரிதல்கள் அவ்வளவே. என் அனுபவம் மிகக் குறைவான சிறிய அளவிலானது. படிக்கிறவர்களுக்கு அவரவர் அனுபவம் , விரிந்த வாசிப்பு மற்றும் தொடர் களப் பயிற்சி பொறுத்து புரிதல் அமையலாம்.

இந்தியாவில் கம்யூனிசம் அல்லது இயக்க பரிமாணம்- பரிணாமம் குறித்து ஏராள ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் உளவு ஆவணங்களும் இருக்கின்றன. தோழர்களின் புரிதல் விரிவிற்கேற்ப அவரவர் தேடி தேவையான அளவு தெரிந்துகொள்ளலாம். தேடலும் தேவையும் மாறுபடலாம். தோழர்களின் தேடல் , தெரிந்து தெளிதல் என்பதையும் தாண்டி, தமிழர்களின் தேடல் , அறிந்து தெளிதல் என்கிற வீச்சை இவ்வரலாற்று செய்திகள் பெற வேண்டியவைகளாகவும் இருக்கின்றன. திராவிட இயக்கம் பற்றிய அறிதல் போலவே , சம காலத்திய பொது உடைமை இயக்க அறிதலும் பொது புத்திக்கு செல்ல வேண்டியுள்ளது.

தமிழகத்தின் அரசியல் பாதைக்கும் மேலாக , சிந்தனை செயல் ஒழுக்க நெறிகள் என்கிற பொதுபுத்திக்கு இவ்வரலாற்றின் கடத்தல் காத்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. உள்ளும் புறமுமாக விவாத வெளிகள் மிக ஆரோக்கியமாக, முத்திரைகளை குத்திக்கொள்ளாமல் , பண்பாட்டுடன் பரஸ்பர மரியாதையுடன் , அந்த அந்த காலத்து உண்மையை உணர்தல் என்கிற பணிவுடன் திறக்கப்படுவதும் மேலான ஒன்றே. தமிழர்களின் சிந்திக்கும் ஆற்றல் மீதான பெரும் தாக்கத்தை அந்த உரையாடல்களால் உருவாக்க முடிந்தால், அரசியல் உலகிலும் புதிய திறப்புகள் தமிழர்களுக்கு கிடைக்கலாம்.

தனிநபரானாலும், அமைப்பானாலும் , கட்சியானாலும்- தான் அல்லது தாங்கள் யார் - எவர் , எந்த தன்மைகளால் உந்தப்பட்டு நம்மை உருவாக்கிக்கொள்கிறோம் , தகவமைத்துக்கொள்கிறோம், ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் கண்டு தன்னின்- தங்களின் லிமிட்டேஷன் அறிய முடிகிறதா- பிறர் என்ன செய்ய வேண்டும் என்பதில் primacy ஆ , அல்லது தான் - தாங்கள் அன்றாடம் செய்ய வேண்டியதென்ன என்பதற்கு primacy ஆ - என்கிற புரிதல் கூட அவசியம் என எனக்கு தோன்றுகிறது.

போர்க்குணம் என்பது பணிவின்மையா என்பது குறித்த புரிதலும் தேவையாகிறது. குறிப்பிட்ட நேரத்தில் , பொருளில் (given time and context) நிலவும் பிரச்சனை ஒன்றின் அனைத்து அல்லது தலையாய stakeholders தரப்புகளின் கருத்துக்களை பொறுமையாக உள்வாங்கி புரிந்து , தன் தரப்பு நியாயத்தை வெளிப்படுத்தி கருத்தொற்றுமை உருவாக்குதல், சமூக பதட்டத்தை சற்று தணிக்க உதவலாம் என்கிற புரிதல் குறித்தும் மேம்பட்ட விவாதங்கள் தேவைப்படுகிறது.

இது அவர் தரப்பு வாதம் என்பதை அவர்களின் ஆதாரங்களிலிருந்து காட்டுவதும் , அதே காலத்திற்கான எங்கள் தரப்பு வாதம் இது என்பதை ஆதாரங்களிலிருந்து வெளிப்படையாக முன்வைத்தும் கருத்துருவாக்கம் நடைபெறுவது உரையாடலுக்கு அழகூட்டும். அந்த அந்த நேரத்திற்கான உண்மை நோக்கி அழைத்தும் செல்லும். தெரிந்தால் போல் பாவனை செய்து பேசுவது, அவர்கள் இப்படித்தான் என்கிற perception judgment ல் அடித்து விளாசுவது , பரஸ்பர அவதூறுகளுக்கு இட்டு செல்லலாம்.

எவருடன் உரையாடினாலும் அவரை expose செய்ய அல்ல, உடன்பாடின்மையை சொல்லி அவரையும் , நாம் சரி என நினைக்கும் ஒன்றுக்கு (நாமே சரி என்பதால் அல்ல, அறிந்து உணர்ந்து சரி என)

மனமாற்றத்தை உருவாக்குவதற்காகவே உரையாடுகிறோம். அவர்கள் பக்கம் இருப்போரின் நியாயம் உணர் சக்திகளையாவது தூண்டச் செய்யவே உரையாடுகிறோம். ஜனநாயகத்தின் தன்மையே உரையாடல் வழி முடிவுகள், உரையாடல் வழி மேம்படுத்தல்கள், உரையாடல் வழி மாறுதல்கள் என்பதாக இருக்கிறது.

நண்பர்களுடனும் எதிரிகளுடனும் இன்னும் பகை சக்தி என்போருடனும் உரையாடல் என்பது தான் ஜனநாயகத்தின் வேர். அதை காந்தி பெருமளவு இந்நாட்டில் செய்து சென்றுள்ளார்.

பிறரைப்பற்றி நாம் அறிந்தும் அறியாமலும் என்ன நினைத்தோம், நினைக்கிறோம் என்பது போலவே , நம்மை பற்றி தெரிந்தும் தெரியாமலும் பிறர் என்ன நினைத்தார்கள், நினைக்கிறார்கள் ஏன் அப்படி என்பதும் வரலாற்றில் மிக அவசியமான பக்கங்களே.

3-11-2024

feb 19 2023

6. பிரிட்டிஷ் உளவுத்துறை குறிப்பில்...

B Home Department of India (From the unpublished documents)

ஏப்ரல் 1920ல் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் உளவுத்துறை கீழ்கண்ட குறிப்பை அனுப்பியிருந்தது. அதன் பைல் நம்பர் 35 என்று காணப்படுகிறது. அதில் மதராஸ் ராஜதானி குறித்த செய்தி ஒன்றை பார்க்க முடிகிறது. அச்செய்தி

மதராஸ் ஹைகோர்ட் வக்கீல் எம் சி ராஜகோபால் ஆச்சாரி என்பார் போல்ஷ்விக் தீவிர ஆதரவாளராக இருக்கிறார். தொழிலாளர் கொந்தளிப்பில் புரட்சியை உருவாக்கிவிட முடியும் என்று பேசி வருகிறார். அவருக்கு இளம் பாரிஸ்டரான சுகினி நாராயண் அய்யர் என்கிற குண்டூர்காரரர் உதவி வருகிறார். அந்த சுகினி நாராயண் சமீபத்தில்தான் அயர்லாந்திலிருந்து திரும்பியுள்ளார். அவருக்கு சின்பீன் போராளிகளுடன் தொடர்பு இருக்கிறது.

இந்த இருவரும் பல மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து வருகின்றனர். மதராஸ் போலீஸ் அவர்களை கண்காணித்து வருகிறார்கள்.

வேறு ஒரு குறிப்பில் ஜாலியன்வாலாபாக் படுகொலைகள் குறித்து லெனின் கவனித்த விஷயம் என்பது சொல்லப்பட்டுள்ளது. அமிர்தபஜார் பத்திரிகாவிற்கு M. Alexief, Chief agent to Bolshevik Bureau for Northern India என்பவரால் எழுதப்பட்ட கடிதம் சார்ந்த செய்தியது. அக்கடிதத்தை உளவுத்துறை கொடுத்துள்ளனர். அதில்

Mr. Lenin has read the dreadful account of massacre at Jallianwala Bagh in your esteemed paper and has authorised me to make this known to the people of India that the Soviet Govt are in full sympathy with the just cause of their Indian brethern. As you are editing the best nationalist paper in India, I have ventured to send this letter to you for publication...

லெனின் கல்கத்தாவிலிருந்து வெளியான அமிர்தபஜார் பத்திரிகை வாயிலாக ஜாலியன்வாலா பாக் படுகொலையை அறிந்து தனது ஆறுதலை ஆதரவை தெரிவித்த செய்தியை இதில் நாம் பார்க்கிறோம்.

1923ல் டாங்கே பற்றிய இரகசிய குறிப்பு இவ்வாறு பதிவிடப்பட்டிருக்கிறது

டாங்கேவின் சோசலிஸ்ட் பத்திரிகை நிதானமானது. லாகூர், கல்கத்தா கம்யூனிஸ்ட்கள் டாங்கே தோல்வியைத் தருகிறார் எனக்

கருதுகின்றனர். எம் என் ராய்க்கு டாங்கேவை நேரிடையாக தெரியாது. டாங்கேவின் பெயரை அவர் அறிந்து தொடர்பில் இருக்கிறார். டாங்கே புரட்சிக்காரரின் கூறுகளைக் கொண்டிருப்பதாக தெரியவில்லை. டாங்கே பெர்லினுக்கு போவார் என்பது சந்தேகமே. சிங்காரவேலர் பெர்லின் அழைப்பை மறுத்துவிட்டார்.

கம்யூனிச பத்திரிகைகள் நிறைய துவங்கப்பட்டுள்ளன. ஆத்ம சக்தி, தூமகேது, சோசலிஸ்ட்,, இன்குலாப், நவயுகா போன்றவை வருகின்றன. நவயுகா என்பதை மதராசிலிருந்து கிருஷ்ணா ராவ் மாதம் இருமுறை ஆங்கில இதழாக நடத்தி வருகிறார். இவருக்கு சில்வியா பங்குர்ஸ்ட் என்கிற சோசலிச பெண்ணியவாதியுடன் தோழமை கொண்டவர். மதராசில் நளினி காந்த் அய்யர் என்பவர் தீவிர கம்யுனிச பிரச்சார வெளியீட்டை எழுதியுள்ளார். இவரை கைது செய்யப்போன போலீசை சுட்டுவீழ்த்துவேன் என பயமுறுத்தியவர்.

இந்தக் குறிப்பை C Kaye 7-2-1923ல் அனுப்பியிருக்கிறார்.

சிங்காரவேலரும் எம் எஸ் வேலாயுதமும் சட்டரீதியான லேபர் கிசான் பார்ட்டி என்று செயல்படுகின்றனர். இவர்களுக்கு டாக்டர் மணிலால் மற்றும் கங்கா பிரசாத் மானிபெஸ்டோ கொண்டுவர உதவியுள்ளனர். அந்த இருவரும் கயாவிலிருந்து இதைச் செய்துள்ளனர்.

டாக்டர் மணிலால் பிஜித்தீவு, சிலோன், நியுசிலாந்திற்கு வெளியேற்றப்பட்டவர். அவருக்கு மதராஸ், பம்பாய் ஹைகோர்ட்டுகளில் வாதாட அனுமதியில்லை. பீகார், ஒரிஸ்ஸாவில் வழக்காடி வருகிறார். அவர்தான் சிங்காரவேலர் வெளியிட்ட மானிபெஸ்டோவை தயாரித்தவர். ஆனால் அவர் தன்னை பின்னுக்கு நிறுத்துக்கொண்டு இந்த வேலையை செய்து வருகிறார். மதராஸ் சார்ந்த நவயுக கிருஷ்ணா ராவும், சுவதர்மா அய்யரும் டாங்கே, சிங்காரவேலருக்கு துணையாக இருக்கின்றனர்.

இந்தக் குறிப்பும் 1923 உளவுத்துறை அறிக்கையில் காணப்படுகிறது.

jan 2 2022

7. வரலாற்றின் பக்கங்களிலிருந்து..

மீரத் சதி வழக்கு முடிந்து டாங்கே வெளிவந்தவுடன் தன்னை இந்திய கம்யூனிஸ்ட் என்று உணர்வதாக சொன்னார். கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு மே 31, 1927ல் பம்பாயில் நடைபெற்றது. தோழர் டாங்கே மே 24 அன்றுதான் சிறையிலிருந்து வெளிவருகிறார். வந்தவுடன் தான் போல்ஷ்விக் அல்ல என்றும் இந்திய கம்யூனிஸ்ட் என்றும் தன்னை வெளிப்படுத்திக்கொண்டார். அம்மாநாட்டில் எஸ் வி காட்டே பொதுச்செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிலிப் ஸ்ப்ராட், காட்டே, மிராஜ்கர் ஆகியோர் கோமிண்டர்ன் அகிலத்திற்கான ஆதரவு கருத்தை வைத்திருந்தனர். மாநாட்டிலும் உலக கம்யூனிஸ்ட் கட்சிகளையும் அகிலத்தையும் சி பி அய் தனது வழிகாட்டலுக்க்குரியனவாக எடுத்துக்கொள்ளும் என்ற தீர்மானம் நிறைவேறியது. டாங்கேயின் நிலைப்பாட்டையறிந்த எம் என் ராய் தனது மாசஸ் இதழில் இந்திய வரைட்டி கம்யூனிசம் எனப் பேசுவதைக் கடுமையாக விமர்சித்திருந்தார். அவரின் Masses வரிகள்:

A Communist movement in a country must be a national section of the International communist movement- otherwise it cannot be a communist and may degenerate into anything.. It is absurd to seek for a special Indian variety of communism. An Indian who calls himself a communist must be a communist like others in the rest of the world"

மேற்கூறிய வரிகளை Masses July 1927 தாங்கிவந்தது.

பக்கம் 89 Communism in India by Gene Overstreet.

dec 28 2021

8. ஜெனி ஓவர்ஸ்டீரிட் குறிப்பில்"'

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கயா காங்கிரசில் (1922) காந்தியின் அகிம்சை குறித்த விவாதம் எழுந்தது. அதற்கு முன்னரும் விவாதம் நடக்காமல் இல்லை. வெளிநாட்டிலிருந்து வேன்கார்ட் பத்திரிகை மூலம் பிரிட்டிஷ் அரசை வன்முறை ஆயுத புரட்சி மூலமே தூக்கி எறியமுடியுமே தவிர காந்தி பேசும் அமைதிவழிப்பட்ட அகிம்சை முறையால் சாத்தியமல்ல என எம் என் ராய், எவ்லின் ராய் ஏராள கட்டுரைகள் எழுதிவந்தனர். காந்தியின் மக்களை ஈர்க்கும் சக்தியை அவர்கள் ஏற்றே தங்கள் விமர்சனத்தை வைத்து வந்தனர். தங்கள் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக சி ஆர் தாஸ் நிற்பார் என ராய் கருதினார். சி ஆர் தாஸ் அவர்களோ வன்முறை பேசுபவர்களின் தேசபக்தியை தாம் மதித்தாலும் அந்த வழி எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் . எனவே அகிம்சையை கொள்கையாக நான் ஏற்கிறேன் என அறிவித்தார்.

டாங்கே சிங்காரவேலர் போன்ற கம்யூனிஸ்ட்களும் கயாவில் பங்கேற்றனர். சி ஆர் தாஸ், சிங்காரவேலர்- ராயை குறிப்பிட்டு Communism in Indiaல் Gene D Overstreet- Marshal windmiller எழுதியிருக்கும் பகுதியை இங்கு தந்துள்ளேன்

" It is quite possible , of course that C R Das and Singaravelu were merely shrewd politicians, quick to adjust to the new climate of opinion created by Gandhi's exceptional qualities of leadership. Regardless of their own views on non violence, they may have decided that for the time being it was poor politics to oppose it. Roy was at a disadvantage in being far away from the scene. He had seriously underestimated the impact of Gandhi and his ideology, and he may also have been mistaken in accepting the statements of Das and Singaravelu at face value..

As chauri chaura and other incidents proved, no doubt, many congressmen were prepared to allow violence to take its course while they paid lip service to Mahatma's ideals. But to proclaim the virtue or the necessary of violence, or to be associated with any one who did, was another matter entirely. This Roy failed to recognise.

But whatever Roy's reasons for doing so, his blatant sanction of violence during this period alienated the average Congressman, and thus made it impossible for the Communists to harness the revolutionary dynamism generated by the peace loving little man in loincloth."

pages 57-58

தமிழாக்கம்:

"இயற்கையாகவே, சி.ஆர்.தாஸ் மற்றும் சிங்காரவேலு வெறும் கூர்மையான அரசியல்வாதிகள் ஆக இருக்கலாம்; காந்தியின் அபூர்வமான தலைமைத் திறன்கள் உருவாக்கிய புதிய கருத்துக் காலநிலைக்கு விரைவாக தங்களைச் சரிசெய்தவர்கள். அஹிம்சை குறித்து அவர்களது தனிப்பட்ட கருத்துகள் எதுவாக இருந்தாலும், அந்தக் காலத்தில் அதை எதிர்ப்பது அரசியல் ரீதியாகப் பொருத்தமற்றது என்று அவர்கள் முடிவு செய்திருக்கலாம்.

ராய், நிகழ்வுகளின் மையத்திலிருந்து தொலைவில் இருந்ததால் பாதிக்கப்பட்டார். காந்தி மற்றும் அவரது சிந்தனையின் தாக்கத்தை அவர் தீவிரமாகக் குறைவாக மதித்தார்; மேலும் தாஸ் மற்றும் சிங்காரவேலுவின் கூற்றுகளை நேரடியாக ஏற்றுக்கொண்டது தவறாக இருந்திருக்கலாம்.

சௌரி சௌரா போன்ற நிகழ்வுகள் நிரூபித்தபடி, பல காங்கிரஸ் உறுப்பினர்கள், மகாத்மாவின் கொள்கைகளுக்கு வாய்மொழி ஆதரவு அளித்தபடியே, வன்முறையை அதன் பாதையில் செல்ல அனுமதிக்கத் தயாராக இருந்தனர். ஆனால் வன்முறையின் நன்மையைப் புகழ்வது, அல்லது அதனை ஆதரித்தவர்களுடன் தொடர்புடையதாக இருப்பது முற்றிலும் வேறு விஷயம். இதை ராய் உணரவில்லை.

எதற்காக ராய் அப்படிச் செய்தார் என்றாலும், அந்தக் காலத்தில் அவர் வெளிப்படையாக வன்முறைக்கு அளித்த அனுமதி, சாதாரண காங்கிரஸ் உறுப்பினரைப் பிரித்துவிட்டது. இதனால், கையிலே துண்டு ஆடை மட்டுமே அணிந்திருந்த அந்த அமைதியை நேசிக்கும் மனிதன் உருவாக்கிய புரட்சிகர ஆற்றலை கம்யூனிஸ்டுகள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது." (தமிழில் கோபைலட்)

9. கட்சி வரலாற்றில்... சத்திய பக்தா

CPI (M) கட்சியின் ஹைதாராபாத் கட்சி காங்கிரஸ் 2002ல் நடந்தது. கல்கத்தாவிலிருந்து ‘இந்திய கம்யூனிச இயக்க வரலாற்றை ‘ முறைப்படுத்தி உருவாக்கிட கமிஷன் அமைத்தனர். அவர்கள் உழைப்பில் உருவான முதல் தொகுதி 2005 ல் வந்தது. தமிழில் ‘இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு - ஆரம்ப கால ஆண்டுகள் 1920-1933’ என 2006 ல் 396 பக்கங்களில் கொணர்ந்தனர்.

ஒன்றுபட்ட சிபிஅய்யில் 1958 அமிர்தசரஸ் காங்கிரசிலேயே அதிகாரி பொறுப்பில் வரலாறு எழுதும் பணி சொல்லப்பட்டது. 1963ல் கமிஷன் போடப்பட்டாலும், அப்போது உச்ச விவாத நிலை இருந்தது. பிளவிற்கு பின்னர்தான் தோழர் அதிகாரி போன்றவர்களின் அயரா உழைப்பில் 1971 துவங்கி வால்யூம்கள் வரலாயின.

சிபிஎம்மின் இந்த முதல் தொகுதியில் 10 அத்தியாயங்கள் கட்டப்பட்டிருக்கும். இந்தியாவிலும், வெளிநாடுகளில் வாழ்ந்த இந்திய புரட்சியாளர்களிடத்திலும் சோவியத் புரட்சியின் தாக்கம் விரிவாக் பேசப்பட்டிருக்கும். 1920 அக்டோபரில் எம் என் ராய் , ஆச்சார்யா உள்ளிட்ட 7 பேர்களால் அமைக்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குறித்து சொல்லப்பட்டிருக்கும். இக்கூட்டம் பற்றி நடவடிக்கை குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை (பக் 93) என்பதும், தொடங்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை துர்க்கிஸ்தானில் பதிவு செய்ய முடிவு என்பதும் பதிவாகியிருக்கும்.

அக்காலத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் , இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு குழுவாக மட்டுமே அங்கீகரித்திருந்தது.. 1917-21 ஆண்டுகளில் ஸ்தாபன ரீதியான கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள் இந்தியாவில் சிறிய அளவில்கூட நடைபெற்றதாகத் தெரியவில்லை. (பக் 96)

தாஷ்கண்டில் கட்சி அமைக்கப்பட்டதை தொடர்ந்து பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூர், கான்பூர் போன்ற பல இடங்களில் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்ற ஆரம்பித்தன (பக் 97)

4வது அத்தியாயம் ‘கான்பூர் கம்யூனிஸ்ட் மாநாடு’ என்கிற தலைப்பிலானது. 40 பக்க அளவில் இதில் செய்திகளை தந்துள்ளனர். இந்நூலை முழுமையாக படிக்க முடியாதவர், இந்த 40 பக்க அத்தியாயத்தையாவது படித்துப்பார்க்கலாம்.

கான்பூர் சதி வழக்கு பின்னணியில் , அந்தப் பட்டியலில் இருந்து பின்னர் நீக்கப்பட்ட சத்ய பக்தா பற்றி இதில் சிறிய குறிப்பு கிடைக்கும். சிபிஅய் தொகுத்த வரலாற்று ஆவணத்திலும் சத்ய பக்தா குறித்து தோழர் அதிகாரி செய்திகளை தந்திருப்பார். சதி வழக்கு விசாரணையின் போது டாங்கே, முசாபருக்கு சிறு உதவிகளை சத்யா செய்தது, கான்பூரில் சோசலிச புத்தக நிலையம் அமைத்தது, பத்திரிகைகள் நடத்தியது ஓரளவிற்கு சொல்லப்பட்டிருக்கும்.

சத்ய பக்தாதான் கான்பூரில் காங்கிரஸ் மாநாடு நடந்த நேரத்தில் , கம்யூனிஸ்ட்களின் மாநாட்டை நடத்த அழைப்பை அனுப்பியவர். அவரது செயல்பாடுகள் குறித்து இந்த அத்தியாயம் கொஞ்சம் பேசியிருக்கும். ஹஸ்ரத் மொகானியுடன் இணைந்து டிசம்பர் 26-28, 1925ல், சிங்காரவேலர் தலைமையில் 500 பேர் பங்கேற்ற மாநாட்டை நடத்த சத்ய பக்தா எடுத்த முயற்சிகள் சொல்லப்பட்டிருக்கும். தேசியம் - சர்வதேசியம் , அகிலத்துடன் இணைப்பு பிரச்சனையில் கருத்து வேறுபாடுகள், எம் என் ராய் சத்ய பக்தா குறித்து செய்த விமர்சனங்கள் என கொஞ்சம் செய்திகள் இதில் இருக்கும்.

சக்லத்வாலா தலைமை தாங்க வரமுடியாமல் போனதால், சிங்காரவேலர் தலைமை ஏற்றார். ஹஸ்ரத் மொகானி வரவேற்பு உரை முன்னரே தயாரித்து அளிக்கப்படவில்லை . சுயராஜ்யம், பின்னர் சோவியத் முறையில் கட்டுமானம் என அவர் பேசினார். சத்ய பக்தா போல ஹஸ்ரத் மொகானியும் சுயேட்சைத்தன்மையை வலியுறுத்தினார்- ‘ நமது கட்சி கலப்படமற்றவகையில் இந்தியத் தன்மையுடன் அமைந்திருக்கும். தற்போதைக்கு நடவடிக்கைகள் இந்திய நாட்டின் வரம்புக்குள்ளேயே அமைந்திருக்கும் என அவர் பேசினார்.

“தலைவர் சிங்காரவேலுச் செட்டியாரும் இதே கருத்தை எதிரொலித்தார். ‘ இந்திய கம்யூனிசம் போல்ஷ்விசமல்ல. போல்ஷ்விசம் இந்தியாவுக்குத் தேவைப்படாது..நாம் உலகக் கம்யூனிஸ்ட்களுடன் சேர்ந்து நிற்கிறோம். ஆனால் போல்ஷ்விசத்துடன் அல்ல’ (பக் 163)

சத்யபக்தா பாணி கம்யூனிசத்துக்கு மாநாட்டில் ஆதரவு கிடைக்கவில்லை (பக் 163)

மாநாடு முடிவதற்கு முன்பாகவே சத்ய பக்தா வெளியேறிவிட்டதாக முசாபர் அகமது தன் வரலாற்றில் தெரிவித்துள்ளார். தன்

ஏடுகளையெல்லாம் கதர் பையில் போட்டுக்கொண்டு பக்தா வெளியேறிவிட்டார். (பக் 165)

இந்தியாவில் உள்ள எந்தவொரு வகுப்புவாத அமைப்பிலும் உறுப்பினராக உள்ள ஒருவர் இந்திய கம்யுனிஸ்ட் கட்சி உறுப்பினராக அனுமதிக்கப்பட மாட்டார் என்கிற விதியை ஏற்றது முக்கியமானதாக பின் நாட்களில் இர்பான் ஹபீப் புகழ்ந்து சொன்னது , சொல்லப்பட்டிருக்கிறது.

1926, 1927 நடவடிக்கைகள் இந்த் அத்தியாயத்தில் சற்று சொல்லப்பட்டிருக்கும். 1927 ல் இந்தியா வந்த சக்லத்வாலாவை மாநாட்டிற்கு வர காட்டே அழைத்திருந்தார். சக்லத்வாலா மறுத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. காரணம் அகிலத்துடன் இணைக்கப்படாமை என்பதை முசாபர் சுட்டிக்காட்டி ராய்க்கு கடிதம் ஜனவரி 19, 1927ல் எழுதியதும், காட்டேவும் பாகர்ஹட்டாவும் சக்லத் நிலைப்பாட்டை கண்டனம் செய்ததும் சொல்லப்பட்டுள்ளது (பக் 181) . இந்த விவரத்தை அதிகாரி தொகுத்த வால்யூமிலிருந்து எடுத்துக்கொண்டுள்ளனர்.

சக்லத்வாலாவும் சமாதானம் செய்யும் வகையில் காட்டேவிற்கு ஜன 18 , 1927ல் , சரியான முறையில் அங்கீகரிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி உதயமாகும் எனில் , உதவத் தயார் என்கிற பொருளில் எழுதினார் . இதற்கு முன்னரே ஜன 16-18 செயற்குழுவில் முசாபர், பாகர்ஹட்டா, நிம்ப்கர், கிருஷ்ணசாமி அய்யங்கார், சம்சுதின் கலந்துகொண்டு சக்லத்வாலாவின் பத்திரிகை செய்தியை கண்டித்து தீர்மானம் போட்டனர் (பக் 183)

1925 டிசம்பர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டிற்கு சென்னையிலிருந்து சிங்காரவேலர், கிருஷ்ணசாமி அய்யங்கார், காமேஸ்வர் ராவ் கலந்துகொண்டுள்ளனர்.

அம்மாநாட்டில் கலந்து கொண்ட , தொடர்பில் இருந்த இளைஞர்கள் பலர் பின் நாட்களில் பெரும் தலைவர்களாக மாறினர். முசாபர், காட்டே, சிங்காரவேலர், ஒரு வகையில் அப்போது சிறையில் இருந்த டாங்கே என குறிப்பிடலாம். சென்னை மாகாணத்திற்கு provincial கமிட்டி பொறுப்பாக்கப்பட்ட கிருஷ்ணசாமி குறித்து செய்திகள் தென்படவில்லை. அவர் ராஜாஜி உறவுக்காரர் என எப்போதோ பார்த்த செய்தி நினைவில். கிருஷ்ணசாமி காமேஸ்வர் எல்லாம் பின் நாட்களில் என்ன ஆனார்கள் என என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அழைப்பு விடுத்த சத்ய பக்தா அப்போது 28 வயது இளைஞர். கலந்துகொண்ட பலரும் இளம் வயதினர் தான். சிங்காரவேலருக்குதான் வயது 65. உளவுத்துறை அவர் வயது 1927 ல் 51 என செய்தி அனுப்பியது. சத்யா பக்தா 1985 வரை வாழ்ந்துள்ளார். 1924 ல் அவர் கான்பூரில் உ பி யை மய்யமாக வைத்து 50 பேர்களுடன் Indian Communist Party நடத்தி வந்தார். அந்த அமைப்பு பெயரில்தான் , 1925 டிசம்பர் மாநாட்டிற்கு அழைப்பும் விடுத்தார். சிபிஅய் என்கிற பெயர் மாற்றத்தை ஏற்றார். மேற்கூறிய நூலில் பக் 385 ல் எழுதப்பட்டிருப்பது(வாழ்க்கை வரலாற்று சிறு குறிப்புகளில்)

“மாநாட்டைவிட்டு வெளியேறிய இவர் அரசியல் அரங்கத்திலிருந்தே முழுமையாக காணாமல் போய்விட்டார் “

சத்ய பக்தா 1925- 1985 வரை என்ன செய்தார்- 'இந்து கம்யூனிஸ்ட்' என அவர் பற்றி சில செய்திகள் வந்தன. இந்தியில் அவர் எழுதியவை இருப்பதான தகவல் உள்ளன. சில கட்டுரைகள் அவர் பற்றி இருக்கின்றன. உளவுத்துறை சார்பில் கயே, பெட்ரி எழுதிய நூல்களில் சத்ய பக்தா குறித்து சில செய்திகள் கிடைக்கின்றன.

நாம் சக்லத்வாலாவை அழைக்க வேண்டும் என்றால் நமக்கு மாநாட்டு செலவிற்கு ரூ 3000 தாண்டி தேவை என அவர் தோழர்களுக்கு செய்தி அனுப்பியுள்ளார். துணைக்கு நிற்பார் என நினைத்த மொகானி கிலாபத் மாநாட்டிற்கு (அதுவும் இன்னும் பல குழு இயக்கங்களின் மாநாடும் கான்பூரில் அப்போது நடந்தன) வேலையில் கவனமாகிவிட்டார். அக்கம் பக்கத்து விவசாயிகள் உழைப்பாளரை 500 பேரை திரட்டி காங்கிரஸ் பந்தலில் செலவில்லாமல் செய்ய நினைத்த சத்ய பக்தாவிற்கு அனுமதி கிடைக்காமல் ஏமாற்றமே கிடைத்தது. முசாபருக்கு கூட அவர் ரூ 30 முன்பணம் அனுப்பியே கான்பூர் மாநாட்டிற்கு அழைத்திருந்தார். அகிலத்திடம் , வெளிநாட்டு இயக்கங்களிடம் பணம் பெறலாமே என வந்த ஆலோசனைகளை சத்ய பக்தா நிராகரித்துள்ளார். அது கட்சிக்கும் தோழர்களுக்கும் அவப்பெயரை உருவாக்கும் எனச் சொல்லியுள்ளார். இரகசிய செயல்பாடா வெளிப்படையா என்பதில் நிலைமைக்கேற்ப என அவர் இலகுவாக பேசியிருக்கிறார்.

கான்பூர் மாநாட்டில் ஒத்த நிலைப்பாட்டை party with national restriction , போல்ஷ்விசமல்ல , தலைமையகம் ஏன் பம்பாய்க்கு மாற்றவேண்டும் போன்றவற்றில் - சத்ய பக்தாவுடன் ஹஸ்ரத் மொகானி, சிங்காரவேலரும் சேர்ந்தே எடுத்தனர்.

1926ல் கல்கத்தாவில் கூடிய தோழர்கள் சத்ய பக்தாவுடன் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என முடிவெடுத்தனர். சிங்காரவேலருக்கு தன் வறுமை நிலையை சொல்லி இனி கான்பூரில் இருந்து பணி செய்ய முடியுமா , தெரியவில்லை என 1926 ல் சத்ய பக்தா கடிதம் எழுதிய செய்தி கிடைக்கிறது. எம் என் ராய் மொகானி, சிங்காரவேலர், சத்ய பக்தா மூவர் குறித்தும் விமர்சித்து எழுதலானார். முதலாளித்துவ எதிர்ப்பு, விவசாயி தொழிலாளர் அணி என்பது குறித்து அவர் கட்டுரைகள் எழுதினார். புகழ் வாய்ந்த வகுப்புவாத கலவரத்தில் உயிரை கொடுத்த கணேஷ் சங்கர் வித்யார்த்தி சத்யாவிற்கு துணையாக நின்ற செய்தியும் உள்ளது. அவர் பகத் சிங்கிற்கும் உதவியவர். டாங்கேவின் சோசலிஸ்ட் இதழுக்கு நிருபராக சத்ய பக்தா இருந்துள்ளார்

தொடங்கிய கட்சியில் வேறுபாடு ஏற்பட்டு இரு பிரிவாகி விட்டீர்களே எனக் கேட்டவர்களிடம், இல்லை ஒரே கட்சி தான்- two wings ours national, theirs international என சத்ய பக்தா பதில் சொன்ன செய்தியை பெட்ரி தருகிறார். சில மாதங்கள் மட்டும் தனித்து உபியில் ராதாமோகன் ஹஸ்ரத் துணையுடன் கட்சி நடத்திவிட்டு அவர் சோர்ந்ததாக தெரிகிறது.

1924 செப் சத்ய பக்தா ஆரம்பித்த Indian Communist Party - காலத்தில் quarterly report என சேர்ந்த உறுப்பினர் பெயர்கள் எண்ணிக்கை, வசூலித்த பணம், ஆன செலவு என எழுத்துபூர்வமாக உறுப்பினர்களுக்கு, பத்திரிகைகளுக்கு கொடுத்துள்ளார். இப்படி சில செய்திகளை அவர் குறித்து பார்க்க முடிந்தது.

பெரிய இயக்கத்தின் வரலாற்றின் துவக்கத்திற்கு கால்கோள் நட்ட சத்ய பக்தா , வரலாற்றிலிருந்து தன்னை வெளியேற்றிக்கொண்ட அல்லது வெளியேற்றப்பட்ட சோகமும் நடந்தேறியது. சத்தியத்தின் பக்தன் என்கிற புனைப்பெயர் சூட்டிக்கொண்ட அம்மனிதரின் கதை குறித்து அறிய கொஞ்சமாவது இந்தி மொழி அறிவு வேண்டும்.என்னிடம் அது இல்லை.

6-11-2024

அக்டோபர் 2025

10. CPI பிறந்த போது நடந்த விவாதம்..

கான்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு தொடக்க மாநாடு 1925ல் நடந்ததை பலரும் அறிவர். அந்த துவக்க மாநாடே முக்கியமான ஒரு விவாதத்தையும் பெருக்கியபடி நகர்ந்தது. அகிலத்துடன் உறுப்பினராகி அதன் வழி சர்வதேசியமா- அல்லது தனித்த தேசிய அமைப்பாக இருந்து கொண்டே பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் அமைப்புகளுடன் தோழமையா- போல்ஷ்விசமா அல்லது இந்திய நிலைமைக்கேற்ப தனித்த புரிதலா என்பது விவாதமானது. இதில் அப்போது பல்வேறு முக்கிய பெரு நகர்களில் குழுக்களாக செயல்பட்டு கான்பூர் சென்ற இளைஞர்களுக்கும், மற்றொரு பக்கம் சத்யபக்தா, சிங்காரவேலர், மொகானி ஆகியவர்களுக்குமான விவாதமானது. அகிலத்துடன் தொடர்பில் வெளிநாட்டில் இருந்த எம் என் ராயும் கடிதம் மூலம் தன் பாரவையை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணத்தை துணைக்கு வைத்து மிகச் சுருக்கமாக , இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. 1300 வார்த்தைகளால் அமைந்த ஒன்று. ஆங்கில வரிகள் தமிழாக்கம் (Courtesy Copilot) பெற்றுள்ளன.

2

சத்திய பக்தா என்பவர்தான் 1925 இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தவர். குழுக்களாக செயல்பட்ட ஆங்காங்கே இருந்த இளம் தோழர்கள், மூத்தவர் சிங்காரவேலர் உட்பட 1925 டிசம்பர் மாநாட்டில் பங்கேற்றனர். Indian Communist Party என்ற பெயரில்தான் அழைப்பு விடப்பட்டிருந்தது. சத்திய பக்தாவுடன் பெயர் வைப்பதிலும், சர்வதேச அகிலம் பங்கேற்பு குறித்தும் மாறுபாடு ஏற்பட்டது. சத்திய பக்தா அகிலத்துடன் தோழமை இருக்கலாம். அதனின் அங்கீகாரம், கட்டளை போன்றவற்றிற்கு இடம் கொடுக்க வேண்டாம் என வாதாடினார். ஜானகி பிரசாத், காட்டே போன்றவர், கம்யூனிஸ்ட் கட்சி என்றால் சர்வதேச அங்கீகாரம் இல்லாமல் இருக்க முடியாது என்ற அன்றைய நிலைப்பாட்டை சொல்லினர். சத்யபக்தாவின் கட்சி கலைக்கப்பட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உருவானதை அவர்கள் தெரிவித்தனர்.

சத்யபக்தாவும் கமிட்டியிலிருந்து விலகுவதாகச் சொல்லி விளக்கம் எழுதினார். சத்யபக்தா விளக்கம் சிபிஅய் கட்சி வரலாற்று ஆவணம் 1923-25ல் பக் 636/782ல் இருப்பதைக் காணலாம். சத்திய பக்தா எழுத்தும்

நூறு ஆண்டுகள் கண்ட ஒன்று. அவரின் வரிகளாக சிபிஅய் ஆவணத்திலிருந்து..முதலில் அப்படியே ஆங்கில வரிகள்..பின்னர் தமிழாக்கி அவரின் வரிகள்

" I am not hostile to Communist International. We are ready to send our representative to the sessions if only we can do so openly. We agree in general principles of communism with our foreign comrades and trying to preach its economic side in India as the economic conditions is the root of all social and religious changes. Looking this way the Indian communists have got a friendly relation with the communists of other lands and it is simply natural that we should have a sympathetic attitude towards CI. But as I have declared in my previous manifestos, it is neither possible nor beneficial to affiliate ourselves or to have any direct connection with the comintern of Moscow. Besides, we are not ready to tie our hands nor do we want to take orders or instructions from outside.

The position of India is peculiar in many respects from that of other parts of the world and our programme must be chalked out according to the needs and conditions of the Indian society. Keeping all these vital points in view, we prefer a policy on national communism for this country to an international one and for this reason, the name of the Indian Communist Party has been changed into the National CPI. This change also will distinguish our work from the ostentatious propaganada of Mrs Roy. It is a matter of satisfaction that this change has been appreciated, and supported by our several Indian and foreign communist friends"

"நான் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலுக்கு எதிராக இல்லை. நாம் பகிரங்கமாக கலந்து கொள்ள முடிந்தால், அதன் கூட்டங்களுக்கு நமது பிரதிநிதியை அனுப்ப தயாராக இருக்கிறோம். வெளிநாட்டு தோழர்களுடன் கம்யூனிசத்தின் பொதுவான கொள்கைகளில் நாம் ஒத்துப்போகிறோம், மேலும் அதன் பொருளாதார அம்சத்தை இந்தியாவில் பரப்ப முயலுகிறோம், ஏனெனில் பொருளாதார நிலைமைகளே சமூக மற்றும் மத மாற்றங்களின் அடிப்படை. இந்த பார்வையில் இந்திய கம்யூனிஸ்ட்கள் பிற நாடுகளின் கம்யூனிஸ்ட்களுடன் நட்பான உறவுகளை கொண்டுள்ளனர், எனவே CI-க்கு நாம் அனுகூலமான மனப்பான்மையுடன் இருப்பது இயற்கையானது.

ஆனால், நான் முன்பு வெளியிட்ட அறிக்கைகளில் கூறியதுபோல, மாஸ்கோவின் கோமின்டெர்னுடன் இணைவதும் நேரடி தொடர்பு கொள்ளுவதும் சாத்தியமில்லை, மேலும் பயனுள்ளதாகவும் இல்லை. அதற்கு மேலாக, நாங்கள் எங்கள் கைகளை கட்டிக்கொள்ள தயாராக

இல்லை, வெளிநாட்டிலிருந்து உத்தரவு அல்லது வழிகாட்டுதல்களை ஏற்க விரும்பவில்லை.

இந்தியாவின் நிலைமை உலகின் பிற பகுதிகளிலிருந்து பல வகைகளில் தனித்துவமானது, எனவே இந்திய சமுதாயத்தின் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நமது திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்த முக்கிய அம்சங்களை கருத்தில் கொண்டு, இந்த நாட்டிற்கு சர்வதேச கம்யூனிசத்திற்குப் பதிலாக தேசிய கம்யூனிசக் கொள்கையை விரும்புகிறோம். இதற்காகவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் தேசிய CPI-யாக மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றம் நமது பணியை ராயின் ஆடம்பரமான பிரச்சாரத்திலிருந்து வேறுபடுத்தும். இந்த மாற்றம் பல இந்திய மற்றும் வெளிநாட்டு கம்யூனிஸ்ட் நண்பர்களால் பாராட்டப்பட்டதும் ஆதரிக்கப்பட்டதும் மகிழ்ச்சியளிக்கிறது"

சத்யபக்தா எடுத்த இந்த நிலைப்பாட்டிற்கு அயோத்திய பிரசாத் பிரதாப் பத்திரிகையில் பதிலாக எழுதிய ' Mr satyabhaktha and communism" மீரத் வழக்கு ஆவணங்களில் ஒன்றாக வைக்கப்பட்டதாக சிபிஅய் ஆவணம் சொல்கிறது (பக் 638/782) . இவர் ஏ பி ஸ்ரீவத்சவா என்கிற கட்சித்தோழர் எனவும், மீரத் வழக்கில் இருந்தவர் எனவும் சிபிஅய் ஆவணம் சொல்கிறது. சத்யபக்தா பங்களிப்பை குறைத்து மதிப்பிடுவது நோக்கமல்ல. அப்போது இருந்த மாறுபட்ட பார்வைகளை சொல்லவே ஆவணம் விழைகிறது என்ற செய்தியும் நமக்கு கிடைக்கும். சத்ய பக்தாவின் ஆவணத்தை குறைத்து மதிப்பிடவில்லை என்கிற பார்வை விவாதத்திற்கு காது கொடுத்த தன்மையை காட்டுகிறது. ஏற்கப்படவில்லை என்பது வேறு..

3

1925 கட்சி அமைப்பு மாநாட்டில் தோழர் சிங்காரவேலர் உரை பல தோழர்களிடம் இன்று சென்றடைந்த ஒன்று. எம் என் ராய் அவர்கள் மார்ச் 20, 1926 அன்று பாகர்கட்டாவிற்கு எழுதிய கடித வரிகளையும் ஆவணத்தில் தந்துள்ளனர் (பக் 643/782). அதில் ராய்

" I must draw attention to the suggestion of comrade Mohammed Ali about the realtions with CI. The statements made by Satyabhakta as well as Hasrat Mohani and Singaravelu at Kanpur made very bad impression here....The formal affiliation cannot be effected until te next world congress to which a delegation of the party must be sent"

இதன் தமிழாக்கம்

““CI-யுடன் உள்ள உறவுகளைப் பற்றிய தோழர் முகம்மது அலியின் பரிந்துரையை நான் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. கன்பூரில் சத்யபக்தா, ஹஸ்ரத் மொஹானி மற்றும் சிங்காரவேலு ஆகியோர் வெளியிட்ட அறிக்கைகள் இங்கே மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தின. கட்சியின் பிரதிநிதிகள் அனுப்பப்பட வேண்டிய அடுத்த உலக மாநாட்டுவரை, அதிகாரப்பூர்வ இணைப்பு ஏற்படுத்த முடியாது.”

ராய், 'மோசமாக பார்க்கப்பட்டது' எனக் குறிப்பிட்ட மூன்று தோழர்களுமே இந்திய நிலைமைக்கேற்ப என்கிற பார்வையை கான்பூர் மாநாட்டில் முன் வைத்தவர்கள் எனப் பார்க்கிறோம். ராய் மேலும் கான்பூரின் ஆவணங்கள் தனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும், தேசிய இயக்கத்துடன் அய்க்கிய முன்னணியை சிபிஅய் கைக்கொள்ளலாம் எனவும் அறிவுரை தருவதைக் காண்கிறோம்.

ஹஸ்ரத் மொகானி தன் உரையில், இந்திய சுயராஜ்யம்- 'சோவியத் கான்ஸ்டிடியூஷனுடன்' என்றார். பிற நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தோழமை, ஆனால் எவருக்கும் கட்டுப்பட்டதல்ல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி- அது முழுக்க முழுக்க இந்தியர்களின் அமைப்பு. மதவிரோத அமைப்பும் அல்ல எனப் பேசியிருந்தார்.

தோழர் சிங்காரவேலர் உரையில் லெனின் மறைவு, சிறையில் தோழர்களின் தியாகம், மார்க்ஸ்-லெனின் தத்துவ பங்களிப்பு, இந்தியாவின் வறுமை, தீண்டாமை, விவசாயி தொழிலாளர்க்கான சுயராஜ்யம், உழைப்பவர்க்கு வாக்குரிமை, சுயநிர்ணய உரிமை , காங்கிரஸ் இயக்கம் என பல்வேறு அம்சங்களில் விரிவாக செல்வதைக் காணலாம்.

கம்யூனிஸ்ட்களின் முழக்கமாக

"சுயாட்சி இல்லாமல் வாழ்க்கை இல்லை, தொழிலாளர்கள் இல்லாமல் சுயாட்சி இல்லை" என்றார். கம்யூனிஸ்ட்களுக்கு சாதி, மதம், அல்லது சமய நம்பிக்கைகள் எதுவும் இல்லை. இந்திய கம்யூனிசம் என்பது போல்ஷ்விசம் அல்ல; போல்ஷ்விசம் என்பது ரஷ்யர்கள் தத்தெடுத்த கம்யூனிசத்தின் ஒரு வடிவம், அது இந்தியாவிற்கு தேவையில்லை. உலகின் கம்யூனிஸ்டுகளுடன் நாம் ஒன்றாக இருக்கிறோம், ஆனால் போல்ஷ்விக்களுடன் அல்ல- என்று அவர் விளக்குவதைக் காணலாம்.

ஆவணத்தில் இவ்வரிகள்

″No life without swaraj and no swaraj without workers என்றார்.Communists have neither caste nor creed nor religion.. Indian communism is not Bolshevism and Bolshevism is a form of communism Russians adopted and may not be needed in India.. we area one with the world communists but not with Bolsheviks ”

சிபிஅய் ஆவணத்தில் மொகானி மற்றும் சிங்காரவேலர் உரைகளை முழுமையாக காணமுடியும்.

1927ல் பம்பாயிலிருந்து கட்சி சார்பாக வெளிவந்த Annual Report ல் சத்யபக்தா ஆவணங்களையோ, நிதியையோ கைமாற்றித் தராமல் போய்விட்டார்.அவரிடம் 200-300 உறுப்பினர்வரை இருந்திருக்கலாம். நாம் கட்சியை கைப்பற்றிவிட்டோம் என்றாலும்- the party was kept in a provisional form and neither a definite constitution nor a programme could be formulated. the executive appointed four provincial organisers என சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம். (பக் 645/782)

சத்திய பக்தா சொன்னது போல Indian communist party என கான்பூரிலிருந்து வராமல் Communist party of India எனத் திரும்பினோம்...CPI which wanted a link up with the international communist movement, though this was not explicitly declared at the conference for obvious reasons. அதாவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைப்பு ஏற்படுத்த விரும்பியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI),. இது தெளிவாக மாநாட்டில் அறிவிக்கப்படவில்லை நிலவிய பல்வேறு உணர்ந்த காரணங்களால்..

1927 மதராசில் நடந்த காங்கிரஸ் அமர்வின் போது சிபிஅய் மத்திய செயற்குழு கூடியது. பாகர்கட்டா போலீஸ் ஏஜெண்ட் என அறிந்து அவரை வெளியேற்றியது (expelled).

கான்பூர் அமைப்பு மாநாடு சரியான கூறுகளைக் கொண்டதல்ல என்றாலும் அதையே துவக்கமாக கருதுகிறோம் என்கிற விளக்கத்தை ஆவணம் பக் 646/782ல் தந்துள்ளது. அவ்வரிகள்

True, the Kanpur communist conference of 1925 did not have the features of a proper foundation congress of communist party. But the creation of all india nucleus of a central leadership at the conference and its continuity and role through succeeding years in building the mass base for the CPI make the conference a turning point in the life of the party. That is why the leadership of the united CPI in 1958 decided to adopt the date of the conference as the foundation date of CPI “

தமிழில் தந்தால்

" "உண்மையாகவே, 1925ஆம் ஆண்டு கான்பூர் கம்யூனிஸ்ட் மாநாடு ஒரு முறையான கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவிட அவசியமான மாநாட்டின் அம்சங்களை கொண்டதாக இல்லை. ஆனால், அந்த மாநாட்டில் இந்திய அளவில் ஒரு மய்யத்தை , மய்யத் தலைமையின் உருவாக்கியதும், அதன் தொடர்ச்சியும், பின்னர் ஆண்டுகளில் CPI-யின் வெகுஜன அடித்தளத்தை கட்டியெழுப்பிய பங்களிப்பும், அந்த மாநாட்டை கட்சியின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக மாற்றின. அதனால்தான், 1958ஆம் ஆண்டு ஒன்றுபட்ட CPI-, அந்த மாநாட்டின் தேதியை CPI-யின் துவக்க அடிப்படை நாளாக ஏற்க முடிவு செய்தது."

சத்தியபக்தா ஜூன் 18 1925ல், அக் 12 1925ல் வெளியிட்ட அறிக்கையின் முழு விவரத்தை 647-656 பக்கங்களில் காணலாம். கான்பூரில் தேசிய காங்கிரஸ் அமர்வை ஒட்டி, கம்யூனிஸ்ட்கள் கூடி மாநாடு நடத்தலாம் என அவர் அழைத்திருப்பார். ஆர்வமுள்ளவர் அதைப் படித்துப் பார்க்கலாம். நூற்றாண்டுக்கு முன்னரான ஆவணம்.

15-10-2025

நவம்பர் 23 2024

11. சிபிஅய்- 1939-43 காலம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1964 வரை ஒரே கட்சியாக செயல்பட்டதை, அரசியல் ஆர்வமுள்ளவர் அறிவர். பின்னர் சிபிஎம் அதிலிருந்து எம் எல் குழுக்கள் என பல்வேறு பெயரில் பல கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாயின.

1964 வரை ஒன்றுபட்ட வரலாறுதான். ஆனாலும் கட்சி பிளவிற்குப் பின்னர் வரலாற்று ஆவணங்கள் தொகுப்பு என்பது நடத்தப்பட்டதால் தனித்தனியாக அவரவர் முயற்சியில் ஆவணங்களின் தொகுப்பு நூல்தொகைகள் வரலாயின.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி , அதே பெயரில் , இந்தியாவில் உருவாக்கப்பட்ட 1925 முதல் செயல்பட்டு வருவதால், ஆவணத் தொகுப்பு வால்யூம்கள் 1964 வரை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்று ஆவணங்கள் என கட்சிப் பெயரிலேயே தொகுக்கப்பட்டன. பிரிந்து போனவர் முதல் அமர்வில் சிபிஅய் என்ற பெயரிலேயே நடத்தியிருந்தாலும், தங்களுக்கான தனித்த பெயரை சிபிஅய் எம்- (வழக்கத்தில் சிபிஎம்) எனக்கொண்டு செயல்படலாயினர்.

சிபிஎம் கட்சியும் , ஆவணங்களை ஆரம்ப ஆண்டுகள் தொடங்கி, 1964க்குப் பின்னருமான காலத்திற்கும் , தொகுப்புகளை கொணர்ந்தனர். அவர்கள் ‘இந்திய கம்யூனிச இயக்க ஆவணங்கள்’ என ‘கட்சி ஆவணங்கள்’ என்று பெயர் வைக்காமல், ‘இயக்க ஆவணங்கள்’ என நூல்தொகைகளுக்கு பெயரிட்டனர். 1964 வரை ஒரே கட்சி என்பதால், சிபிஅய் ஆவணங்களாக பொதுவாக அவையும், 1964 க்கு பின்னரான ஆவணங்கள் சிபிஎம் கட்சியின் ஆவணங்களாகவும் அவை இருப்பதைக் காண முடியும். எனவே சிபிஎம் தொகுத்த 1964 க்கு முன்னரான ஆவணங்களை , பிற இடது சாரி கட்சியினரும் மனத்தடையின்றி வாசிக்க முடியும்.

எம் எல் லிபரேஷன் கட்சியும் தோழர் அரிந்தாம் சென் முயற்சியால் ஆரம்ப ஆண்டுகளின் ஆவணங்களை கொண்டு வந்தனர். ராயிஸ்ட்கள் கார்னிக் பொறுப்பில் சில ஆவணங்களை கொணர்ந்தனர். Unpublished documents என்ற பெயரில் சுபோத் ராய் , உளவுத்துறை ஆவணங்களை தொகுத்து கொணர்ந்தார். இதைத்தவிர

வரலாற்றை எழுத முற்பட்ட தலைவர்கள், சில ஆய்வாளர்கள் எழுத்துக்களும் ஆர்வம் உள்ளவர் தேடிப்போனால் கிடைக்கும்.

சிபிஎம் கொணர்ந்த வால்யூம் 4 யை இணைய வழியாக புரட்டிக்கொண்டிருந்தேன். அதாவது கொஞ்சம் படித்தல், கொஞ்சம் நகர்த்தல் என. இந்த ஆவணம் 1939-43 காலத்திற்கானது. மின் நூலில் 948 பக்கங்கள். இதில் 60 ஆவணங்கள் அடுக்கப்பட்டுள்ளன. இந்திய மற்றும் பிரிட்டிஷ் முன்னோடிகளின் 15 இணைப்பு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இக்காலம் இரண்டாம் உலகப்போர் காலம். பிரிட்டிஷ், காங்கிரஸ், முஸ்லீம் லீக், சோவியத் யூனியன் போருக்கு நுழைந்த பின்னர் ஏகாதிபத்திய போர் என்பது மக்கள் யுத்தம் என்கிற புரிதலாக மாறுதல், குவிட் இந்தியா- தலைவர்கள் கைது- அடக்கு முறைகள், பல ஆண்டுகளுக்கு பின்னர் -சிபிஅய் ஆட்சியாளர்களின் கெடுபிடிகள் சற்று தளர்ந்த சூழலில் - open and legalised party என்கிற அந்தஸ்தில் செப் 1942ல் தனது மத்திய கமிட்டியின் விரிவடைந்த கூட்டத்தை வெளிப்படையாக கிடைத்த வாய்ப்பு, 1925ல் தொடங்கப்பட்டாலும் அதன் முதல் காங்கிரசை 1943 ல் நடத்த வாய்ப்பு போன்றவற்றை விரிவாக பேசும் ஆவணங்களை இத்தொகுப்பில் காணமுடியும்.

சட்டபூர்வமாக இயங்க முடியும் என்ற நிலையில் நிதி இல்லா அவதி, முழுநேர ஊழியர் அலவன்ஸ் ரூ 15 மாதம், எவரை முழுநேர ஊழியராக்கலாம், குடும்பம் இருந்தால் மனைவிக்கு ரூ 5, அதிகபட்சம் இரு குழந்தைகளுக்காக அலவன்ஸ் ரூ 10 (ஆந்திரா கமிட்டி) போன்றவைகள் கூட ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கட்சிக்கான வரவு செலவு, மக்கள் யுத்த போர்க்காலத்தில் தொழிற்சங்க இயக்கம் எப்படி செயல்பட வேண்டும்- முடிந்தவரை பேச்சுவார்த்தையில் தீர்வைக்கொணர முயற்சிக்க வேண்டும், ரூ 1000 க்கு மேல் ஊதியம் பெறக்கூடியவர்க்கு ஊதிய வெட்டு நடத்தப்படவேண்டும் போன்ற செய்திகள் கூட கிடைக்கும்.

1943 கட்சி காங்கிரஸ் ஆவணங்கள் முழுமையாக இத்தொகுப்பில் கிடைக்கும். ஆர்வமுள்ளவர் போய் தெரிந்து கொள்ளலாம். Credential committee report of First congress June 1943 என்கிற விவரமும் இதில் கிடைக்கும். கட்சி காங்கிரசில் வந்த சார்பாளர் வர்க்கப் பின்னணியை அது காட்டும். இதை பெங்கால் கமிட்டி ஆவணங்களிலிருந்து எடுத்துக்கொடுத்த செய்தியை பார்க்கலாம்.

மொத்த சார்பாளர் 139. இதில் அறிவுஜீவிகள் 86, விவசாய தோழர்கள் 25, தொழிலாளர் 22, ஜமீன்கள் 3, சிறு நில உடைமையாளர் 2, வர்த்தகர் 1 என வந்துள்ளனர். முதல் கட்சி காங்கிரஸ் சார்பாளர் 60 சதத்திற்கு மேல் அறிவுஜீவி பகுதியினர், அதாவது , பின்னல் ஆங்காங்கே புகழ்பெற்ற பெருந்தலைவர்கள் என அறியலாம்.

சமூகப் பிரிவாக பார்த்தால் இஸ்லாமியர் 13, சீக்கியர் 8, தாழ்த்தப்பட்டவர் 3, ஜெயின் 1, பார்சி 2, பெண்கள் 13 என்பது மட்டும் காட்டப்பட்டுள்ளது. மீதி 99 பேர் இந்துக்களா- எவர் என்கிற விவரம் இல்லை.

1933 லிருந்து கட்சி உறுப்பினர் எவ்வளவு இருந்தனர் எனச் சொல்லப்பட்டுள்ளது. தொடர் ஏறுமுகமாக வளர்ந்து வந்ததைக் காணலாம்.

1933ல் 150

1934- 200

1936- 600

1939- 1500

1942 - 4400

1943 - 9000 பின்னர் 15563 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகை அன்று 30 கோடிக்கு மேல் என்பதையும் சேர்த்து மனதில் கொண்டால், அன்று எவ்வளவு பெரிய கனவு இந்த சில ஆயிரம் தோழர்களை ஆட்டிப்படைத்துள்ளது என புரிந்து கொள்ளலாம். இன்றைய காலத்தை கணக்கிட்டு பார்த்தால், விடுதலை இந்தியாவில் இரு கட்சி வளர்ச்சிகளும், குறிப்பாக மூன்று மாநிலத்தில் ஆட்சி என சிபிஎம் வளர்ச்சியும் மிகப்பெரிதாகவே பார்க்கப்பட வேண்டியிருக்கும். 'பாசிச பாஜக ' என வர்ணித்தாலும், கேரளாவில் தொடர்ந்து இருமுறை சிபிஎம் தலைமையிலான ஆட்சியை, அம்மக்கள் இன்றளவும் சாத்தியமாக்கியுள்ளதையும் நாம் இணைத்து பார்க்கவேண்டும்.

இந்த 4வது தொகுப்பு நீளமான ஒன்றுதான். முழுமையாக இணையத்தில் படிப்பது சற்றுக் கடினமானதும் கூட. அவரவர்க்கு ஆர்வமூட்டும் ஆவணங்களை வாசித்தறியலாம். புரிதலில் சற்று balance கிடைக்க இந்த ஆவணங்கள் உதவலாம்.

23-11-2024

ap 26 2022

12. Draft Programme of the CPI - 1951

விடுதலைக்குப் பின்னர் உட்கட்சி விவாதங்களின் அடிப்படையில் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி தனது Draft Programme of the CPI என்பதை 1951ல் வெளியிட்டது. 16 பக்கங்களில் அச்சடிக்கப்பட்ட ஆங்கில பிரசுரம் ஏப்ரல் 1951ல் இரண்டு அணாவிற்கு பம்பாயிலிருந்து வெளியானது. மே, ஜூன் என அப்பிரசுரம் அடுத்தடுத்த பதிப்புகளையும் கண்டது. பிபின் சந்திரா போன்ற வரலாற்றாய்வாளர்கள் இந்த பிரசுரத்தை மிக முக்கிய விவாத பொருளாக தான் எடிட் செய்த The Indian Left Critical Appraisals என்ற பெரிய புத்தகத்தில் செய்திருப்பார். அவர் எழுதிய அந்த அத்தியாயம் A strategy In crisis- The CPI Debate 1955-56 என்பதாகும். ஆர்வமுள்ளவர் தேடி படித்துவிடமுடியும். அந்த டிபேட்டிற்கு மேற்கண்ட 1951யை அவர் ஆதாரமாக்கி பேசியிருப்பார்.

மேற்கண்ட நகல் திட்டம் இந்தியாவில் வந்தபோதே - பிரிக்கப்பட்ட பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியும் தங்களது திட்டத்தை Independent, Democratic and Prosperous Pakistan- Programme of the Communist Party of Pakistan என 1950ல் கொண்டு வந்தனர். 18 பக்கங்களைக்கொண்டு அதன் அச்சு வெளியீடு வந்தது. அதுவும் 2 அணா என வைக்கப்பட்டிருந்தது.

இரண்டு திட்டங்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிடியில்தான் இந்நாடுகள் என்கிற முடிவிற்கே வந்தன. சுதந்திரம் குறித்த கேள்விகளை எழுப்பின. அப்படி தாங்கள் உணர்வது ஏன் என்பதற்கான ஆதாரங்களை நியாயங்களை இரு திட்டங்களும் எடுத்து வைத்தன. ஒன்று அன்றிருந்த காங்கிரஸ் அரசாங்கம் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியது. மற்றது முஸ்லீம்லீக் மீதான கேள்விகளை அவநம்பிக்கையை வெளிப்படுத்தியது. இரு திட்டங்களும் புதிய அரசாங்கங்கள் பிரிட்டிஷ் தொடர்புகளை அறுத்துக்கொள்ளவேண்டும் என்றன. அதாவது Total freedom from Imperialism.

தொழிலாளர், விவசாயி, மத்தியதர வர்க்கம் வாழ்க்கைத்தர உயர்விற்கான திட்டமிடுதல் என்பதை இரு திட்டங்களும் வலியுறுத்தின. பாகிஸ்தான் கட்சி திட்டம் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், நவாப்கள் எதிர்த்து people`s democratic government of workers, peasants and middle classes- People's Democracy என்றது. இதற்காக ஒன்றுபட்ட மக்கள் ஜனநாயக முன்னணி கட்டவேண்டியதை பேசியது. சீனாவில் கம்யூனிஸ்ட்கள் பெற்ற வெற்றி கண் முன் நிற்கிறது என்று சொல்லி அத்திட்டம் மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தது

The Communist Party of Pakistan asks the people who are honest and want to see their country free should look at our actions and if they think that this is the party which is sincere, courageous, correct and brave enough to fight for the rights of the people and democracy than they should support us. They should become a member of the party and help the party morally and financially.

அதேபோல் மதநம்பிக்கை குறித்து பாக் கட்சி இவ்வாறு உறுதிமொழியை- கூடவே தன் சமூகம் பற்றிய இயல்பையும் சொல்லியது. சமூகத்தில் நிலவும் கருத்தமைவுகள் குறித்த புரிதல் பற்றி அது பேசியது

The Communist Party of Pakistan accepts and follows the principle of freedom of conscious, faith, religion and all the practices of faith according to every culture and tradition.

The Communist Party of Pakistan not only accepts the rights of conscience but also fights against any kind of aggression, suppression, hate or any activity against the religious freedom of any individual, group or minority. The Communist Party of Pakistan gives assurance to all minorities to struggle with them for their equal rights and conscience.

At the same time, the Communist Party of Pakistan tries to understand the nature and history of the ideas and concepts about faith which are prevailing in our society.

உருதுவில் எழுதப்பட்ட திட்டம் தோழர் அலி ஜாபர் சைதியால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் பெற்று சோவியத் பிராவ்தாவில் அக்டோபர் 27 1950ல் வெளியாகியிருக்கிறது. அந்த ஆங்கில மொழிபெயர்ப்பின் அச்சாக்கத்திலிருந்து மேலே சொல்லப்பட்டவை எடுக்கப்பட்டுள்ளன.

இந்திய கட்சியின் நகல் அனைவருக்கும் வாக்குரிமை என்பது வந்தாலும் இந்த தேர்தல்கள் கண் துடைப்பே என வரையறுத்தது. It is deception to say under the new constitution the masses or the Govt elected by them can work their way to freedom and hapiness என்கிற பார்வையையும் வைத்தது.

திட்டம் பல கடமைகளை வரையறுத்துக்கொண்டது

தேசிய இனங்கள் எனும் பிரச்னையில் கீழ்கண்ட புரிதலை வெளிப்படுத்தியது.

The Right of all nationalities to self determination. The Republic of India will unite the peoples of various nationalities of India not by force but by their voluntary consent to the creation of a common state

மொழிப்பிரச்னையை இவ்வாறு முன்வைத்தது

Right of People to receive instruction in their own national language in schools; use of the national language in all public and state institutions. The Use of Hindi as an all India State language will not be obligatory.

மதசார்பின்மை என்பதற்கு இவ்வாறு தனது கடமையை திட்டம் வைத்துக்கொண்டது

separation of the State from all religious institutions. the State to be a secular State.

கல்வி பொறுத்தவரை 14 வயதுவரை அனைவருக்கும் இலவச கல்வி என சொல்லப்பட்டது. மருத்துவ சேவை என்பதில் நாடு முழுதும் people's health service என முன்மொழியப்பட்டுள்ளது.

அன்று நாட்டின் வெகுஜனங்களின் பொருளாதார நிலைகளை கணக்கில்கொண்டு சோசலிச மாற்றங்கள்- not demanding establishment of socialism or socialistic transformations என முடிவிற்கு திட்டம் வந்தது. மக்கள் ஜனநாயக அரசாங்கம் உருவாக்க திட்டம் என்றது. ஒன்றுபட்ட மக்கள் ஜனநாயக முன்னணிக்கு தொழிலாளர்- விவசாயி- மத்தியதர வர்க்கம்- அறிவுத்துறையினர்- தேசிய முதலாளிகளிடம் திட்டம் வேண்டுகோள் விட்டது.

இந்த திட்டத்தை guided by teachings of மார்க்ஸ்- எங்கெல்ஸ்- லெனின் - ஸ்டாலின்

அமுல்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையை திட்டம் வெளிப்படுத்தியது. சீனாவின் வெற்றி கண் முன்னே. இந்தியாவும் மக்கள் ஜனநாயக திட்டப்படி உலக அரங்கில் அமைதி வளம் மகிழ்ச்சியை உருவாக்கும் என்ற நம்பிக்கையை திட்டம் பறைசாற்றியது.

nov 8 2024

13 வரலாறு- சில குறிப்புகள்

1917 அக்டோபர் புரட்சியின் தாக்கம் இந்தியாவிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. விடுதலைப் போராளிகளுக்கு அதற்கு முன்னர் இத்தாலியின் மாஜினி தாக்கம்தான் மிக அதிகமாக இருந்தது. லெனின் பெயர் இந்தியாவில் பரவத்தொடங்கியது. ருஷ்யாவில் உழைப்பவர் ஆட்சிக்கு வந்துவிட்டனர்- இனி அவர்கள் வாழ்வில் சுபிட்சம்தான்- போல்ஷ்விக்குகளின் தொழிலாளர்- விவசாயி- போர்வீரர் கூட்டு ஆயுதப்போர் முறை- சோவியத் ஆட்சிமுறை உலகம் முழுவதும் பேச்சுப்பொருளானது. இளைஞர்கள் சோவியத் குறித்து அறிந்து கொள்ளவும் , அம்முறையில் தங்கள் நாடுகளை மீட்கவும் உறுதிபூணலாயினர். மக்களிடம் அது குறித்து எழுதலாயினர். கவிஞர்கள் அம்முறையை கொண்டாடினர்.

இந்தியாவிற்கு வெளியில் அன்றைய புரட்சி குறித்த பெருங்கனவு கொண்டிருந்த இளைஞர்கள் மாஸ்கோ செல்வது , லெனினை பார்ப்பது என்பதில் போட்டியிட்டுக் கொண்டனர். எம் என் ராய், அபானி, விரேந்திரநாத் சட்டோ, எம் பி டி ஆச்சார்யா, சௌகத் உஸ்மானி, சௌமேந்திர தாகூர் என ஏராள இளைஞர்கள் தாங்கள்தான் இந்திய பிரதிநிதிகள் என மாஸ்கோவில் முகாமிட்டு தங்கள் அங்கீகாரத்திற்காக போரிட்டு வந்தனர்.

அவரவர் செல்வாக்கு திட்டுக்களை உருவாக்கும் பொருட்டு பத்திரிகைகளை நடத்தி, இந்தியாவிற்கு அவற்றை கடத்த முயற்சித்தனர். மார்க்சிசம் என்பதுடன் லெனினியம் என்ற பின்னொட்டு சேர்க்கப்பட்டு அதை அவரவர் புரிந்த மொழியில் கோட்பாட்டு செய்திகளாக இந்தியாவிற்கு அனுப்பினர். லெனின் தன் தோழர்களுடன் தங்களுக்கான மூன்றாம் அகிலத்தை அமைத்தார். அந்த அகிலத்தின் அங்கீகாரம் பெற்றவர்க்கு சற்று நிதி உதவி, தங்குமிடம் போன்ற சில பாதுகாப்புகள் கிடைத்தன. லெனினியம் உலக மீட்சிக்கான கோட்பாடு என்கிற நம்பிக்கை பரவத்தொடங்கியது.

இந்தியாவிற்குள் மார்க்ஸ் லெனின் நூல்கள், ராய் - சட்டோ போன்றவர் பத்திரிகைகள் இரகசியமாக வரத்துவங்கின. பிரிட்டிஷ் இங்கு யார் எவர் எங்கிருந்து அவருக்கு சமிக்ஞைகள் என்கிற மோப்பத்தை பிடிக்கலானது. நேரிடையாக சோவியத் என்றில்லாமல், பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி வழியாக இளம் தோழர்கள் இந்தியத்

தொடர்புகளுக்கு அனுப்பப்பட்டனர். பிலிப் ஸ்பிராட் போன்றவர் அப்படி வந்தவர்கள்தான்.

ராய் மற்றும் சோவியத் பிரிட்டிஷ் கட்சி எனும் இந்த தொடர்புகளின் வழியாக இங்கும் கல்கத்தா, பம்பாய், லாகூர், மதராஸ், கான்பூர் என ஆங்காங்கே விரல்விட்டு எண்ணக்கூடிய சில இளைஞர்கள் கம்யூனிஸ்ட்களாக தங்களை பிரகடனப்படுத்தினர். வேலைகளில் இறங்கினர். இப்படித்தான் டாங்கே, முசாபர், காட்டே , ஜோக்லேகர், பாகர்கட்டா போன்றவர்கள் உருவாகலாயினர். மூத்தவர் சிங்காரவேலரும் இப்படியான முன்வரிசையில் இருந்தார். இவர்கள் பத்திரிகை நடத்தலாயினர். கான்பூர் , மீரத் என சதி வழக்குகளில் சிக்கி போராடி தங்களை மீட்டுக்கொண்டனர். கான்பூர் வழக்கில் சிங்காரவேலர் விடுவிக்கப்பட்டதை, மிகப்பாதுகாப்பாக வெளிநாட்டில் இருந்த எம் என் ராய் விமர்சித்திருந்தார். புரட்சியாளர்கள் கொஞ்சம் பேர் ஆனாலும், ஒருவரை ஒருவர் விமர்சிப்பதில் தாராளமாகவே இருந்துள்ளனர்.

எம் என் ராய் முயற்சியால் அக் 1920ல் தாஷ்கண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என ஒன்றை அமைத்தனர். அகிலம் அதை குழு ஒன்றாகவே பார்த்தது. ராய் இந்தியாவில் காங்கிரஸ் நடக்கும் போதெல்லாம் அறிக்கை அனுப்பி இளம் தோழர்களை ஈர்க்க முயன்றார்.

கான்பூர் வழக்கு, மிக முக்கிய கருதுகோள் நம்பிக்கை ஒன்றை சிற்சிலராக இருந்த கம்யூனிஸ்ட்களுக்கு தந்தது. கம்யூனிசம் மார்க்சியம் என்கிற கருத்தை வைத்திருப்பதே ஆட்சி துரோகமல்ல. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக சதி தான் தேசத் துரோகம் எனவழக்கு போனது. இந்த நம்பிக்கையை எடுத்துக்கொண்டு, கான்பூரில் செப்டம்பர் 1924 ல் 50 உறுப்பினர் பட்டியலுடன் சத்ய பக்தா என்கிற ராஜஸ்தான் சார்ந்த இளைஞர் ‘இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியை ‘ தொடங்கினார். சில்வியா பங்க்ரஸ்ட் போன்றவருடன் இவர் தொடர்பில் இருந்தார். சத்யா சோசலிச புத்தக கடை நடத்தினார். பகத்சிங் கான்பூரில் இருந்தபோது, சத்யாவிடம் ரூ 10 செலுத்தி ருஷ்ய புரட்சி குறித்த புத்தகத்தை வாங்கி சென்றுள்ளார்.

கான்பூரில் புகழ் வாய்ந்த போராளி கணேஷ் சங்கர் வித்யார்த்தி சத்ய பக்தா, பகத்சிங் போன்றவர்க்கு ஈர்ப்பாக இருந்தார். ஹஸ்ரத் மொகானி காங்கிரசில், கிலாபத்தில், இடது சிந்தனைகளில் செயல்பட்டு வந்தார். இஸ்லாமிய கம்யூனிசம் எனக்கூட அவர் பேசியவர்தான். கணேஷ், ஹஸ்ரத், ராதாமோகன் ஆகியவர்களின்

ஒப்புதலுடன் , டிசம்பர் 1925ல் காங்கிரஸ் மாநாடு கூடும்போது , கம்யூனிஸ்ட் மாநாடும் நடத்தலாம் என்கிற அறிவிப்பை சத்யபக்தா வெளியிட்டார். கான்பூர் வழக்கு நேரத்தில் டாங்கே, முசாபரை சத்யபக்தா சந்தித்தார். காந்தியின் கதர் ஈர்ப்பும் எளிய வாழ்வும் அவருக்கு ஈர்ப்பை தந்தன.

மாநாடும் டிசம்பர் 26 , 1925ல் திட்டமிட்டப்படி கூடியது. தேசியமா சர்வதேசியமா, அகிலத்துடன் உறவென்ன, இரகசிய வழிகளா, legalised open வழிகளா, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இந்திய படை பிரிவு கட்சியா அல்லது இந்தியாவிற்கான சுயேட்சையான கட்சியா என்பதெல்லாம் விவாதங்களாயின. அவரவர் அந்த இளம் வயதில் கற்றுக்கொண்ட தேர்ச்சிக்கேற்ப நிலைப்பாட்டை எடுத்தனர்.

சக்லத்வாலா வருவதில் இரு சிக்கல் ஏற்பட்டது. தலையாய சிக்கல் அகிலம் ஒப்பு கொடுக்காத மாநாட்டிற்கு வரமுடியுமா- இரண்டாவது நடைமுறை சிக்கல் , போக்குவரத்து செலவிற்கு நிதி கொடுக்க முடியுமா? அவர் வருவதில்லை என முடிவானது. சத்யபக்தா சிங்காரவேலர் தலைமையேற்க வேண்டுகோள் கொடுத்தார். சத்யபக்தா , சிங்காரவேலர் , ஹஸ்ரத் ஆகியோர் போல்ஷ்விசமல்ல என்கிற கருத்துடன் இருந்தனர். முசாபர், காட்டே, பாகர்ஹட்டா போன்றவர் சர்வதேசிய அடையாளம் என்கிற communist party of India என்கிற நிலையை வற்புறுத்தினர். சத்யபக்தா வெளியேறும் சூழல் உருவானது. 1985 வரை வாழ்ந்த அவர் இந்தியில் நூறு நூல்களை எழுதியுள்ளார். சத்யபக்தா எளிய வாழ்க்கை வாழந்தவர். தலித் குடும்பத்தில் பிறந்து தெரு சுத்தம் செய்து வந்த பெண்ணை மணமுடித்து, பின்னர் இந்து கம்யூனிசம் எனப் பேசி மடம் ஒன்றில் தங்கி மறைந்தார்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் என்பதில் போல்ஷ்விக் தாக்கம் என்பது நிழல்போலவே சிலகாலம் உள்ளடங்கி, சில காலம் நீள உயரமாக இருந்து வந்தது. அகிலம் மற்றும் அதன் முடிவுகள் இயக்க நிலைப்பாடுகளில் அலைக்கழிப்பை உருவாக்கின. காந்தி, காங்கிரஸ் இயக்கம் , தேசிய இனம், இரகசிய UG வழிகள், ஆயுதபுரட்சி பார்வைகள், அமைப்பு முறைகள் , பிரிட்டிஷ் ஆட்சி, பெற்றது விடுதலையா எனும் சந்தேகப்பார்வை போன்ற பலவற்றில் அகிலத்தின் தாக்கம் பிரச்சனை தொடர்ந்தது. அகிலத் தொடர்பில் இல்லாதவர் ஒடுகாலிகளாயினர். எம் என் ராய் இப்படியானார்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் விடுதலைக்கு பின்னரும் கூட சோவியத் ஸ்டாலினிடம் சென்று அறிவுரை பெறவேண்டிய நிலையில் , உள்

விவாத சூழலால் இருந்ததைக் காணமுடியும். இயக்கம் சர்வதேசியம் என்பதை கைவிடாமலேயே , தங்களின் சுயத்தை வீரியமாக கண்டறியத் தொடங்கியது. இந்திய விடுதலைபோர், காந்தி, நேரு ஆட்சி குறித்து, நாடாளுமன்ற சட்ட மன்ற தேர்தல் பங்கேற்பு போன்ற பல அம்சங்களில் விவாத வழிகளில் சுயேட்சையான நிலைப்பாடுகளை கட்சியால் எடுக்க இயலும் என்கிற திசையிலான பயணம் மெதுவாக , உறுதியாக நடக்கலானது.

இந்திய விடுதலை, அரசியல் அமைப்பு சட்டம் குறித்து நேர்மறையான பார்வைகள் உருவானது. மகாத்மா குறித்த மதிப்பீடுகளை ஹிரன், இ எம் எஸ், டாங்கே, சர்தேசாய் போன்றவர்கள் செய்யலாயினர். நேரு குறித்து அஜாய், டாங்கே , இ எம் எஸ் போன்றவர் செய்தனர். சுபாஷ், அம்பேத்கர் குறித்தும் நேர்மறையான மதிப்பீடுகளுக்கு வந்தனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, உள்நாட்டில் பொதுத்துறை சார்ந்த கட்டுமானங்கள், கலப்பு பொருளாதாரம் என்றாலும் ஏகபோக எதிர்ப்பு, நிலபிரபுத்துவ ஜமீன் முறை நீக்கி உழவர் நில உரிமை, தொழிலாளர் பாதுகாப்பு, பாலின சமத்துவம் என்கிற சில அடிப்படைகளுடன், சாதிய கொடுமைகளுக்கு எதிரான சகோதரத்துவ உணர்வுள்ள சமூக முறை , மத்திய மாநில உறவுகளில் பொருளாதார அரசியல் ஜனநாயக கண்ணியம் , பஞ்சாயத்து மேம்பாடு போன்ற அனுபவங்களின் வழி சிந்தனை தெளிவை கம்யூனிஸ்ட் இயக்கம் சுயேட்சையாக பெறலானது. கேரளாவில் தேர்தல் வழியில் மக்களின் ஒப்புதலுடன் ஆயுதம் ஏந்தாமல் ஆட்சிக்கு வரமுடியும் என்கிற சோதனை 1957 ல் இ எம் எஸ் ஆட்சி வழி நடந்தேறியது. உலகமும் அதை முதல் வரலாறாக எடுத்துக்கொண்டது. தேர்தல், பலகட்சி ஆட்சி முறை என்கிற ஒப்புதலுக்கு முழுமையாக இயக்கம் நுழைந்தது.

இன்று அதற்கு சீனா உள்ளிட்ட எவரும் மாஸ்டர் அல்ல. தன் சொந்த கூடலில் ஏற்படும் புரிதல்களில் எடுக்கும் முடிவுகளில் நிற்கும் இயக்கமாகிவுள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முழக்கத்தை 1958லேயே அது நிறுத்திக்கொண்டுவிட்டது. உலகத்தொழிலாளர்களே ஒன்று படுவீர் என்கிற முழக்கம் , உலக உழைப்பவர்கள் மீதான அதன் கரிசனம் என்கிற நேரிய பார்வையுடன் தொழிற்படுகிறது. இன்று அதன் சர்வதேசியம் என்பது , அழைக்கப்படுவோரின் மாநாடுகளுக்கு செல்வது- அவர்கள் பார்வையை புரிந்து கொள்வது என்பதுதான். வெளியிலிருந்து எந்த கட்டளையையும் சுமந்து வரக்கூடிய சர்வதேசியமல்ல அது. அவரவர் நாடு குறித்த புரிதலுடன் உலகப்பார்வை- மேல் கீழ் இல்லாத சமத்துவ அந்தஸ்து என்பது தான்.

நடைமுறையில் - போரற்ற உலக மக்களின் அமைதிக்கும் , அழகான உழைப்பு வாழ்விற்கும் உகந்த வெளிநாட்டுக்கொள்கையின் விரிவாக சர்வதேசியம் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இப்போதெல்லாம் இரகசிய வழிகள் என்பதில்லை. சட்டபூர்வ , அரசியல் அமைப்பு சட்ட எல்லைக்குள் என்பது ஏற்கப்பட்டுள்ளது. உழைப்போர் உயர்வு என்கிற பாதை பிடிமானம் தொடர்கிறது. Voice of labouring class என்கிற பேரடையாளம் அதன் அடிப்படை. பல்வேறு இசங்களின் அதிகார இழுவை என்கிற போராட்டங்களில் இயக்கம் சிக்காமல் இல்லை. பல கட்சிகளில் இருப்பது போல் aspirational aspects என்பதும் உருவாகாமல் இல்லை. வர்க்கம் சாதி பாலினம் மத வேறுபாடுகள் , பண சொத்து செல்வாக்கு என்கிற பெரும் சிலந்தி வலைகளின் நாடொன்றில் அரசியல் பயணம் அவ்வளவு எளிதானதல்ல. கோடானு கோடி உழைப்பாளர் இன்னும் ஓரவாழ்வில் என்பதால் , அவர்களின் குரலாக ஓட வேண்டியே இருக்கும். அவர்களும் அதை உணரும் தருணம் வரலாம் என்கிற நம்பிக்கை தான் நாளைகள்.

இந்த நூற்றாண்டில் இயக்க வாழ்விற்காக தம்மை தொலைத்துக்கொண்டவர் பலர். ஏராள தியாகங்கள்,சொல்லொணாத் துயர்கள், வழக்குகள், இழப்புகள் என நீண்ட பாதையின் விளக்குத் தூண்களாக பலர். அவர்கள் சிந்தித்த பாதையில் சறுக்கல்கள் இருந்திருக்கலாம். தவறு செய்துவிட்டோமே என விழும்போதெல்லாம் , சரி செய்து எழுந்திருந்திருக்க முயற்சித்துள்ளனர். எப்போதும் எல்லா காலத்திலும் சரி என எந்த

அமைப்பாலும் உரிமை கொண்டாட முடியாது. அது over claim ஆகவே அமையும். இதன் பொருள் ஓர் அமைப்பு அதன் தவறுகளை, வீழ்ச்சிகளை நியாயப்படுத்திக்கொள்ளலாம் என்பதல்ல. போதா புரிதல்கள் இருப்பது ஒன்றும் அவமானகரமானதல்ல. அனுபவங்கள் வழி செழுமைக்கான சாலையில் பயணம் என்பது வாய்த்தால் பயனளிக்கலாம்.

ஆரம்பத்திலிருந்தே, சுய அனுபவத்தில் காந்தியின் கரங்களை பற்றியோ, அல்லது ஜோஷி தொடங்கி வைத்த உரையாடல்களை பல்வேறு தளங்களில் 1948 ஜனவரிவரை அவருடன் உடன் அமர்ந்து நடத்தி பயணித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என எனக்குத் தோன்றுகிறது. காந்தி அம்பேத்கர் உரையாடல்தான் இந்நாட்டின் ஒடுக்கப்பட்டோர் அரசியல் வாழ்வில் சற்று கண்ணியமான இடம் பெற விதையானது என எனக்குத் தோன்றும். நேருவின் ஆட்சியின் போதும், காந்தி படுகொலை நடவாமல் போயிருந்தால், இந்நாட்டின் கிராமங்கள்

சற்றாவது கூடுதலாக கவனிக்கப்பட்டிருக்கலாம் எனக்கூட தோன்றுகிறது. ஆனால் வாழ்க்கை ifs buts படி போகாதே.

வாழ்க்கை வெறும் சூத்திரங்களின் பாதையுமல்ல. முன்னோர் சிந்தித்தவையுடன் உலகம் நின்றுவிடப்போவதும் இல்லை. ஒவ்வொரு கணமும் பழையதாகவும் புதியதாகவும் இருக்கிறது. கைக்கு எட்டும் வேலைகள் நிம்மதியைத் தருகின்றன. கோட்பாட்டு வேலைகள் நம்பிக்கை , நிராசை சலிப்பு போன்ற கலவையான உணர்வுகளை தரலாம். தினம் விடிகிறது. நாளை மற்றுமொரு நாளாக இருக்கலாம். அல்லது புதிய அர்த்தப் பொலிவாகவும் அமையலாம். மானுட ஓட்டம் தொடர்கிறதே...

அக்டோபர் 29 2024

14 டாங்கே 125

தோழர் டாங்கே அவர்களின் பிறந்த 125 ஆம் ஆண்டை இந்த அக்டோபர் 2024ல் நாம் கடந்துகொண்டிருக்கிறோம்.

அவரது பிறந்த நூற்றாண்டு நேரத்தில் பல பெருந்தலைவர்கள் அவர் குறித்து பல்வேறு காலங்களில் எழுதிய கட்டுரைகளை தொகுத்து Dange A Fruitful Life என்கிற நூலை கொணர்ந்தார்கள் . ஆங்கிலத்தில் 160 பக்க அளவில் வந்த நூல். தோழர் டாங்கே குறித்து வந்த நூல்கள் 14.மிகக்குறைவுதான்.

இந்த நூலில் முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர் வெங்கட் ராமன், தோழர்கள் ரணதிவே, ராஜேஸ்வர ராவ், மொகித்சென், கே எல் மகேந்திரா, ரனேன் சென், கோபால் பானர்ஜி, சுரேன் பட்டா, கங்குலி, கௌதம் சட்டோ, பேனு தாகுர்தா, தாருண் சன்யால், ஜகதீஷ், அஜாய் தாஸ் குப்தா, திலிப் சக்கரவர்த்தி, சுப்ரதா பானர்ஜி, மிருண்மாய், பஞ்சனன், ரும்கி பாசு போன்ற பலர் டாங்கே குறித்து அவர்களின் மதிப்பீடுகளை தந்துள்ளனர்.

1964 கட்சி உடைவிற்குப் பின்னர், தோழர் ரணதிவே மிகக் கடுமையான டாங்கே, சிபிஅய் விமர்சகர்களில் ஒருவராக இருந்தார். ஆனால் 1959ல் டாங்கேயின் 60 ஆம் பிறந்த நாளையொட்டி அவர் நியுஏஜ் பத்திரிகையில் (அக் 1959ல்) தோழர் 'எஸ் ஏ டாங்கே ' என நீண்ட கட்டுரை ஒன்றை எழுதினார். அக்கட்டுரை இந்நூலில் இடம் பெற்றுள்ளது. டாங்கேவின் செயலாற்றலை, புலமையை, அமைப்பு தேர்ச்சியை, தொழிற்சங்க- கட்சிக்கான வழிகாட்டல்களை, பேச்சாற்றலால் கட்டிபோடும் திறனை தோழர் ரணதிவே மிகச் சிறப்பாக பாராட்டி பேசியிருப்பார். இப்படியெல்லாம் அன்பாக இருந்தவர்கள்தான் அரசியல் பார்வை வேறுபாட்டால், அமைப்பு பிரச்சனைகளை தீவிரமாக்கிக்கொண்டு தோழமைகளை தொலைத்தனர்.

1959 ல் கட்டுரையில் இளம் தோழர்களுக்கு டாங்கேவின் தியாகங்களை, தலைமைப்பண்பை அவர் அழகாக எடுத்துச் சொல்லியிருப்பார்.

டாங்கே 12 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்

1921லேயே இளம் 22 வயதில் தான் அறிந்த தெளிவில் காந்தி- லெனின் புத்தகம் எழுதியவர். 1922ல் சோசலிஸ்ட் இதழைக் கொணர்ந்தவர்.

கான்பூர், மீரத் என சதி வழக்குகளில் தண்டனை பெற்றாலும் ஆமாம் நாங்கள் முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து சோசலிச முறைக்காக நிற்கிறோம் என அஞ்சாமல் சொன்னவர். பின்னர் அவரது வாதம் நூலானது.

சிறை வாழ்க்கையின் ஊடாகவே இந்திய வரலாற்றை தான் அறிந்த அளவில் வரலாற்று பொருள்முதல் வாத பார்வையில் எழுதி 1950 ல் பண்டைய இந்தியா கொணர்ந்தவர் (கோபால் பானர்ஜி India From Primitive Communism to Slavery யை 1942-43 சிறைவாசத்திலேயே எழுதிவிட்டார். பின்னர் வெளியானது என்கிற தகவலை தந்திருக்கிறார். கோசாம்பி போன்றவர் இதை விமர்சித்தாலும், முக்கிய வரலாற்று நூலாக இந்நூல் இன்றும் பார்க்கப்படுகிறது)

இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் , போர் வேண்டாம் எனக்கோரி , உலகிலேயே போருக்கு எதிரான தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தத்தை பம்பாயில் தலைமையேற்று நடத்தியவர்- அக் 2, 1939ல்- டாங்கே என தோழர் பி டி ஆர் இதில் பெருமை பொங்க எழுதியிருப்பார்.

இந்தியாவில் கான்பூரில் 1925ல் first communist conference நடந்தேற, சிறையிலிருந்தே செய்ய முடிந்தவைகளை டாங்கே செய்தார் (என்ன என்ன எனச் சொல்லவில்லை) என்கிற செய்தியையும் தோழர் ரணதிவே எழுதியுள்ளார்.

1943-1959 இந்த 16 ஆண்டுகளில் AITUC யை அவர் தலைவராகவோ, பொதுச்செயலராகவோ இருந்து தொழிலாளர் மத்தியில் வீச்சாக கொண்டு சென்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1938 பம்பாய் தொழிற்தகராறு மசோதா எதிர்த்து 90 ஆயிரம் தொழிலாளரின் போராட்டத்தை அவர் நடத்தினார்.

பிரிட்டிஷ் அவரை மார்ச் 1940ல் இந்திய பாதுகாப்பு விதிகள் சட்டத்தில் உள்ளே தள்ளியது. டியோலி கேம்ப்பில் அடைக்கப்பட்டார்.

1925ல் அமைப்பு மாநாட்டை தொடங்கிய கட்சியால் 1943ல்தான் அதன் முதல் கட்சிக் காங்கிரசை நடத்தும் சூழல் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தது. அந்த காங்கிரஸ் தலைமைக் குழுவில் டாங்கே இருந்தார்.

1945 உலகத்தொழிற்சங்க சம்மேளன துவக்க நிகழ்வில் டாங்கே பங்கேற்று அதன் துணைத்தலைவரானார்.

டாங்கே மிகச் சிறந்த நாடாளுமன்ற அனுபவத்தை பெற்றவராக பின் நாட்களில் மிளிர்ந்தார். ஆனால் அரசியல் அமைப்பு சட்ட உருவாக்க

அசெம்பிளிக்கு போகமுடியாமல் பிரிட்டிஷ் ஆட்சி செய்த தகவலை இந்நூல் தருகிறது. அதற்கு செல்ல முடிந்த ஒரே கட்சி பிரதிநிதி சோம்நாத் லாகிரிதான். அவராலும் நீடிக்க வாய்ப்பில்லாமல் போனது வேறு கதை.

1957 கேரளா அனுபவம் சொல்லிவிட்டு, 1959ல் பார்த்த கணக்கின்படி 41 தொழிற்சங்க AITUC தலைவர்கள் சட்டமன்ற- நாடாளுமன்றத்திலோ செல்ல டாங்கேவின் பெரும் பங்கு இந்நூலில் பேசப்பட்டுள்ளது.

கோபால் பானர்ஜி 'டாங்கே அற்புத வாழ்வு' என விரிவான பதிவொன்றை செய்துள்ளார். நாடாளுமன்ற பங்களிப்பு, தொழிற்சங்க பங்களிப்பு, வரலாறு- மராத்தி இலக்கியம், கட்சி கொள்கை நிலைப்பாடுகள் என அவரின் பெரும் பாத்திரத்தை பேசியிருப்பார்.

கட்சியில் வேறுபாடுகள் உச்சம் சென்றபோது , உடைவை தடுக்க அஜாய் மறைவிற்கு பின்னர் டாங்கே சேர்மன், இ எம் எஸ் பொதுச் செயலர் என்கிற சமரசம் எட்டப்பட்டது. டாங்கேவிற்காக சேர்மன் போஸ்ட்டா என்கிற விமர்சனமும் வந்தது. டாங்கே வின் சில punch களை வெம்மை பதங்களை எதிர்நிலை எடுக்கும் தோழர்கள் தாங்க முடியா நிலை என்பதும் பேசப்பட்டது. கட்சி உடைவை தடுக்க முடியாமல் போனது. டாங்கேவை ஆக உயர் தலைவர் எனப் பார்த்தவர்களே அவரை கடுமையாக விமர்சிக்கலாயினர்.

வலதுசாரிகளின் கை ஓங்கவிடாமல் காங்கிரசுடன் unity and struggle என்பதை அவர் ஜனசங்கம் உள்ளிட்ட ஜேபி போராட்டக் காலத்தில் எடுத்துரைத்தார். இந்திரா அவர்களின் எமர்ஜென்சி ஆதரவு, ஜனதா வெற்றி, பதிந்தா மாநாடு நிகழ்வுகளுக்கு பின்னர் , டாங்கேவின் செயல்பாட்டை highly individualistic என கட்சி பார்த்ததால் அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

கட்சியை அமைத்து , போராடி சிறையில் வாடி , மக்களிடம் செல்வாக்கு பெற்று, உலக கம்யூனிஸ்ட் இயக்க தத்துவார்த்த போராட்டத்தில் முன் நின்றவரானாலும், அரசியல்வேறுபாடு என வரும்போது அவர் நீக்கப்படும் நிலை உருவானது. 60 ஆண்டுகள் தான் கட்டிய கட்சியிலிருந்து அவர் வாழ்க்கை துண்டிக்கப்பட வேண்டிய நிலை உருவானது. பின்னர் AICP- UCPI என அவர் பயணப்பட்டார். UCPI

இதழாக வந்து கொண்டிருந்த New Thinking Communist ல் மொகித், ஆர் வி எழுதிய டாங்கே குறித்த கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அரசாங்கம் அரசியல் மாற்றுக் கருத்து கொண்டவர்களை தண்டிக்கும்போது , நம்மால் ‘அரசியல் பழிவாங்கல்’ என உரக்க சொல்லிவிட முடிகிறது. ஆனால் கட்சி அமைப்புகளில் மாற்று அரசியல் சிந்தனைகளுடன் ஒருவர் நீண்ட பயணம் செய்ய முடிவதில்லை. அங்கு அரசியல் மாற்று எனில் ஒன்று உடைவு அல்லது கட்சி விட்டு வெளியேற்றப்படுதல் என்கிற ஸ்தாபன வடிவ நடவடிக்கைகளே பதிலாக கிடைக்கும். அரசியல் பிரச்சனைகளுக்கு ஸ்தாபன வழி தீர்வு என்பது ‘அரசியல் பழிவாங்கலாக’ அங்கு பார்க்கப்படுவதில்லை. ஒழுங்கு பிரச்சனை- நடவடிக்கை என பார்க்கப்படுகிறது.

டாங்கேவின் சிந்தனைகளை ஒருவர் ஏற்கலாம்- நிராகரிக்கலாம். இந்திய கம்யூனிச இயக்கத்தின் உயர் தலைவர்களுள் ஒருவராக, விடுதலை இந்தியா வளர்ச்சி குறித்த மிக நிதான பார்வை கொண்டவராக, சாதி மத மொழி பிரச்சனை உள்ள நாடு ஒன்றில் சமூகத்தில் அவை விடுதலைக்குப்பின்னர் ‘பெறப்பட்ட நாட்டின் ஒற்றுமைக்கு’ ஊறு விளைவிக்கா அரசியல் திசை குறித்து அவர் பேசி வந்தார். வலது சாரி அபாயத்திற்கு நாடு எப்பொழுது வேண்டுமானாலும் பீடிக்கப்படலாம் என்பதை அவர் வாழ்ந்த 1991 வரை நினைவூட்டிக்கொண்டே இருந்தவர் தோழர் டாங்கே. என்னை ‘ஏழை’ என சொல்லாதே ‘உழைப்பவன்’ என என் வர்க்கப் பெயரைச் சொல்லி அழை என கம்பீரமாக பேசியவர் தோழர் டாங்கே.

டாங்கே 20க்கும் மேற்பட்ட நூல்களை, ஏராள கட்டுரைகளை, சொற்பொழிவுகளை செய்தவர். ஓரளவிற்கு அவர் பெண் ரோசா தேஷ்பாண்டே தொகுத்தார். அவர் இன்னும் வரலாற்றாய்வாளர் பார்வைக்கு செல்லாமல் இருப்பது, கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு கூட நட்டம்தான்.

வாய்ப்பு இருந்தால் வேறு கட்டுரையாளர்கள் டாங்கே குறித்து பேசியிருப்பதை பார்க்கலாம்

29-10-2024

அக்டோபர் 30 2024

15. டாங்கே 125 - இடுகை 2

டாங்கே நூற்றாண்டின்போது வந்த ‘டாங்கே பயன்நிறை வாழ்வு’ Dange A Fruitful Life நூலை அறிமுகப்படுத்தி இடுகை செய்திருந்தேன். அந்நூலில் சாராம்சமாக உள்ள வேறு அம்சங்களை சுருக்கமாக இங்கே தர முயல்கிறேன்.

தோழர் ராஜேஸ்வர ராவ், டாங்கேவின் 75 ஆம் ஆண்டில் பார்ட்டி லைப் இதழில் (7-10- 1974) Great Qualities of Com S A Dange என்கிற சிறு கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதன் சாராம்சம்

கட்சியை தாண்டி இந்தியாவிலும், உலகின் பகுதிகளிலும் பெரும் அறிவுஜீவியாக டாங்கே பார்க்கப்படுவது பெருமிதமான ஒன்று

1930களில் நான் நுழையும்போதே பெரும் ஈர்ப்பாளராக அவர் இருந்தார்.

டாங்கே தான் கூறப்போகும் கருத்துக்கள் தன்னை அமைப்பிற்குள் மைனாரிட்டி ஆக்கிவிடும் என ஒரு போதும் கவலைப்பட்டதில்லை. சரி என உணர்ந்த ஒன்றிற்காக விடாமல் போராடுவார்.

1962 சீன ஆக்ரமிப்பின் போது , கட்சிக்கு நெருக்கடி உருவானது. கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி பலவீனப்படுத்த நினைத்தார்கள். டாங்கேவின் வழிகாட்டல், செயல் திட்டங்களால் கட்சி பல அவதூறுகளிலிருந்து காப்பாற்றப்பட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தாக்குதலிலிருந்து தற்காக்கும் போரை அவர் செய்தார். பூர்ஷ்வா அரசா - சோசலிச அரசா எதன் பக்கம் என்ற கேள்வியை இலாவகமாக அவர் கையாண்டு சோசலிச அரசே ஆனாலும் ஆக்ரமிப்பை ஏற்க முடியாதென்ற பாதையைக்காட்டி , இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தையே மீட்டார். சோவியத் கட்சி இந்தியா எனும் நண்பனா- சீனா எனும் சகோதரனா என தடுமாறியபோது, டாங்கேவின் விவாதத்திறனால் , சீனா ஆக்ரமிப்பு சரியல்ல என சோவியத் ஏற்று இந்தியா பக்கம் நிற்கலானது குறித்து , தோழர் சி ஆர் மட்டுமல்ல , நூலில் மொகித் உள்ளிட்ட மற்றவரும் விளக்கியுள்ளனர்.

இங்கு தோழர் சி ஆர் டாங்கே எழுதிய Neither Revisionism Nor Dogmatism Our Guide என்கிற விவாதத்தை குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்து அறிந்தவர்க்கு தெரியும்- டாங்கே போல 'ரிவிசனிஸ்ட் ' என்கிற அவ முத்திரையை தாங்கியவர் வேறு எவருமல்லர் என்று.

கல்கத்தா சார்ந்த ரனேன் சென் இயக்கத்தின் மூத்தவரில் ஒருவர். டாங்கேவிடம் கொள்ளத்தகுந்த தள்ளத்தகுந்த அம்சங்கள் குறித்து அசை போட்டுள்ளார்.

1924 கான்பூர் சதி வழக்கில் பிரதான குற்றவாளியாக பிறருடன் டாங்கே முதலாக வைக்கப்பட்டிருந்தார். 1928 மீரத் சதியில் முசாபர் அகமது தலையாய குற்றவாளி யாகவும் மற்றும் டாங்கே உள்ளிட்ட 30 பேர்கள் மீது வழக்கு.

ரனேன் கருத்துப்படி (சோவியத் குட்ஸ்போன் கருத்தில்) அஜாய் சாகாமல் இருந்திருந்தால், உடைவு தடுக்கப்பட்டிருக்கலாம் என்கிற ஊகம் நூலில் சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில் தோழர்கள் நம்பூதிரி, பாசு, ராமமூர்த்தி மூவரும் அஜாயுடன் மிகத்தோழமையாக இருந்தவர்கள்.

1964ல் பெரும் உடைவு என்றால் , பதிந்தாவிற்கு பின்னர் சிறு உடைவு ஏற்பட்டது. புதிய கட்சியிலும் மொகித் உடன் டாங்கே புதல்வி வேறுபட்டுப்போனதும் நடந்தது என்கிறார் சென்

தோழர் மொகித்சென் டாங்கே நூற்றாண்டு என்கிற சிறு கட்டுரையை அக் 15 1998 நியு திங்கிங் கம்யூனிஸ்ட் இதழில் எழுதியிருந்தார். மொகித் தரும் முக்கிய செய்தி, 1942 குவிட் இந்தியா போராட்டம் வரவேண்டாம், வந்துவிட்டால் கட்சி கலந்துகொள்வது நல்லது என்கிற கருத்தை டாங்கே தெரிவித்தார். இங்கு மொகித் எழுதியிருப்பது- "ஒருவேளை அன்று டாங்கே கருத்து ஏற்கப்பட்டு குவிட் இந்தியாவிற்கு எதிராக நிற்காமல் போயிருந்தால், கட்சி 'இமேஜ் ' கூடியிருக்கலாம். துரோகப்பட்டம் ஒட்டப்பட்டிருக்க முடியாது."

சோசலிஸ்ட்கள் அன்று பெரும் வீரர்களாக அந்த இடத்தை எடுத்துக்கொண்டதை வரலாறு குறித்துக்கொண்டது.

மொகித் எழுதுகிறார்- டாங்கே எப்போதும் சர்வதேசியம் என்பதற்காக இந்திய தனித்த தேசக்கட்சித்தன்மை என்பதை விட்டுவிடக்கூடாது என சொல்லி வந்தார். ஆனால் அவரது நிலைப்பாடு பல நேரங்களில் ஏற்கப்படாமல் போனது. மொகித் டாங்கேவின் பன்மொழி அறிவு குறித்தும் எழுதியுள்ளார். தாய்மொழி மராத்தி தவிர ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், உருது, பெங்காலி போன்றவற்றை அவர் அறிந்திருந்தார்.

டாங்கே சிறை வாழ்க்கை 12 ஆண்டுகள், 16 ஆண்டுகள், 18 ஆண்டுகள் என பலவாறு இந்நூலில் அவரவர் தெரிந்துகொண்டபடி சொல்லப்பட்டுள்ளது. எத்தனை ஆண்டுகள் என சமீபத்தில் வாழ்ந்தவர் வரலாற்றைக் கூட சரியாக சொல்ல முடியாத குறையை இந்நூல் காட்டுகிறது. 18 ஆண்டுகள் என்றால் - எக்காலம் எவ்வளவு ஆண்டுகள் என்கிற விவரத்தை வழங்க வேண்டிய பொறுப்பை கட்டுரையாளர்கள் எடுத்துக்கொள்ளாமல் போனது ஏனோ?

குடியரசுத் தலைவராக இருந்த ஆர் வெங்கட் ராமன், மராட்டிய அரசாங்கம் ஏற்பாடு செய்த வாழ்வில் பங்கேற்று தொழிலாளர் இயக்க பீஷ்ம பிதாமகன் பட்டத்தை அவருக்கு வழங்கினார். டாங்கேவின் பெருந்தொண்டை அவர் புகழ்ந்து பேசினார். 1946ல் பம்பாய் எம் எல் ஏ வாக இருந்து , 1957 நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளை குறிப்பிட்டார். நேருவிடம் டாங்கேவிற்கு இருந்த நல்லுறவை, தோழமையை ஆர் வி சுட்டிக்காட்டினார்.

நிலப்பிரபுத்துவம் என்பதை சட்ட வழியில் ஒழிக்க நேருவின் முயற்சியை பாராட்டுகிறேன். அதே போல் முதலாளித்துவ ஒழிப்பிற்கும் அவர் முயற்சி எடுக்கவேண்டும் என நேருவிடம் நேருக்கு நேர் டாங்கே சொன்னதை ஆர் வி நினைவு கூர்ந்தார்.

தோழர் கே எல் மகேந்திரா சில முக்கிய செய்திகளை சொல்கிறார். மகேந்திரா மட்டுமல்ல வேறு சிலரும் டாங்கேவின் ஆரம்ப திலகர் தொடர்பை சொல்கின்றனர். தனது சக தோழர்களிடம் “அந்த திலகரால் கெட்டுப்போனவன்ப்பா நான் “ என டாங்கே சொல்வாராம். திலகர் தான் கல்லூரி மாணவரான டாங்கேவை பம்பாய் பஞ்சாலை உள்ளிட்ட தொழிலாளர்களிடம் வேலை செய் என்றவர். அதை வாக்காக எடுத்துக்கொண்டு திலகரின் சீடராக தொடங்கியவர் மார்கஸ் லெனின் சீடராக அவர் மாறிப்போனதை நூலில் பலர் குறிப்பிடுகின்றனர்.

மகேந்திரா எழுதுகிறார்- சைமன் கமிஷனுக்கு எதிரான போராட்டத்தில் அவரால் தொழிலாளரை கொணர முடிந்தது. ரெட் யூனியன் அனுபவம் - மீண்டும் ஏ அய் டி யூ சி யில் சேர்ந்து பணியாற்றுவது என வந்தபோது, கம்யூனிஸ்ட் அல்லாத என் எம் ஜோஷி உள்ளிட்ட தலைவர்களுக்கும் நம்பிக்கை ஒன்றை டாங்கே ஏற்படுத்த நினைத்தார். ஒற்றுமைக்கான மருந்தாக அது அமைந்தது. அரசியல் தீர்மானங்களை 75 சத ஒப்புதல் இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்கிற நிலைப்பாடுதான் அது.

மகேந்திரா டாங்கேவிற்கு 18 ஆண்டுகள் சிறை வாழ்க்கை என எழுதியுள்ளார். டாங்கே கட்சிக்கு ஒவ்வாத, மார்க்சியப்படி சரிதானா என கேள்விக்கு உள்ளாகக்கூடியவற்றையும் பேசியுள்ளார் என மகேந்திரா பதிவு செய்கிறார்.

ரின் கப்பற்படை புரட்சி ஆதரவு அப்பீல் நகலை எழுதியது டாங்கே தான் என இந்நூல் தெரிவிக்கிறது.

மகேந்திரா அடுத்து தெரிவிப்பது டாங்கேவின் புகழ் வாய்ந்த two pillar policy- save the industry save the workers. இது குறித்தும் கம்யூனிஸ்ட்கள் மத்தியில் விவாதம் நடந்துள்ளது. எதற்கு பூர்ஷ்வாக்களின் (பொதுத்துறை குறித்து தான் டாங்கே இம்முழக்கம் தந்தார்) லாப வேட்டைக்கு நம் காப்பு என்று கூட விவாதம் போனது. ஆனால் டாங்கேவின் முழக்கம் அனைவராலும் பின்னர் ஏற்கப்பட்டது. இந்திராவை அவர் புரட்சிகர ஜனநாயகவாதி என சொல்லியிருந்தார்.

முத்தரப்பு மாநாடுகளில் எல்லா தரப்பும் டாங்கே பேசுவதை கூர்மையாக கவனிக்கும் பழக்கம் இருந்ததை இந்நூல் பேசுகிறது.

பாசுதேவ் கங்குலி 1981ல் நிரந்தரமாக டாங்கே கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை சொல்லிவிட்டு, 1930ல் கூட அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட செய்தியை தருகிறார்.

1930ல் மீரத் வழக்கில் உள்ளே இருந்த கட்சித் தோழர்கள் , காந்தியின் உப்பு சத்தியாகிரகத்தை விமர்சித்தனர். டாங்கே நேர்மறையாக அதை பார்க்க வேண்டும், பங்கேற்க வேண்டும் என்றாராம். வேறுபாடு ஏற்பட்டு அவர் தனியாகவும் , மற்றவர் இணைந்து கூட்டாகவும் தங்கள் defence யை செய்து கொண்டனர். இத்தருணத்தில் அவர் கட்சியைவிட்டு நீக்கப்பட்டார். 1935ல் அவர் மிகுந்த மரியாதையுடன் கட்சியில் வரவேற்கப்பட்டார் என்ற செய்தியை இந்நூல் தருகிறது. கங்குலி எழுதுகிறார்

The CPI leadership gave him punishment several times thro open scolding. During his various parts of his life he had to hear abuse like revisionists.

கங்குலி டாங்கே 16 ஆண்டுகள் சிறை வாழ்க்கை எனச் சொல்லி, இவரும் breakup கொடுக்காமல் செல்கிறார். பல்கேரிய சோசலிஸ்ட் அரசாங்கம் உயரிய டிமிட் ராவ் விருதையும், சோவியத் உயரிய லெனின் விருதையும் டாங்கேவிற்கு தந்தன.

பின் நாட்களில் சிபிஎம் பெரும் முன்னோடியான முசாபர் , டாங்கேவுடன் தோழமையாக இருந்த காலத்தில் 1921ல் காந்தி லெனின்

எழுத 22 வயது இளைஞனுக்கு guts வேண்டும் என பாராட்டி சொன்னதை கங்குலி சொல்கிறார்.

1951 மாஸ்கோ ஸ்டாலின் சந்திப்பை அவசியமாக்கிய ஆவணமாக 3P இருந்தது என்கிறார் கங்குலி. இதை விரிவாக ஜகதீஷ் குப்தாவும் எழுதியுள்ளார். மூன்று பி என்பது அஜாய்கோஷ்- புருசோத்தம், டாங்கே- பிராபாகர், காட்டே- பிரகாஷ் . புருசோத்தம் பிராபகர் பிரகாஷ் என்கிற பி எழுத்து புனை பெயரில் Note on the Present Situation in Our Party என்று செப்டம்பர் 30 1950ல் எழுதப்பட்டதுதான் 3பி ஆவணம். 1948 ரணதிவே அதிதீவிரம், ராஜேஸ்வரராவ் சீனப்பாதை சூழலில் மாற்றாக வந்த ஆவணம். 1951 ஸ்டாலின் சந்திப்பிற்கு இரு பக்கத்திலும் இருந்து 4 தோழர்கள் அஜாய் , டாங்கே , சி ஆர் , பசவபுன்னையா சென்று உரையாடி விளக்கம் பெற்று வந்தனர். ஸ்டாலின் சுஸ்லோவ் வழிகாட்டலையும் கணக்கில் கொண்டு வந்ததுதான் பின்னரான 1951 திட்டம்.

கங்குலி சொல்வது the three Ps document created the foundation of the new programmes. Dange evolved line of unity and struggle.

பஞ்சனன் சட்டோ நினைவு கூர்கிறார். எனக்கு முன்னர் காங்கிரஸ்- ஜனசங்கம் என்கிற தேர்வு மட்டுமே இருந்தால் நான் காங்கிரசை தேர்ந்தெடுக்கவே சொல்வேன் என 1971ல் டாங்கே பேசினார். இதே கேள்வியை எங்களிடம் தோழர் ஓ பி குப்தா அரசியல் உரையாடல் போது வைத்தார். என் தொகுதியில் காங்கிரசும் ஜனசங்கமும் போட்டியிடுகிறது. நான் காங்கிரசிற்கே வாக்களிக்க வேண்டும். No Congress என்பதை எப்படி அங்கு அமுல்படுத்த முடியும் என குப்தா கேட்டார்.

தாருண் சன்யாலும் , கௌதம் சட்டோவும் டாங்கேவின் இலக்கிய அறிவை, கலை உணர்வை பேசுகின்றனர். தாகூர் சரத் சந்திரர் படிக்க அவர் பெங்காலி கற்றுக்கொண்டாராம்.

கௌதம் தரக்கூடிய வேறு செய்தி- எம் என் ராய் லெனினை கலந்து பேசி மூன்றாம் அகில 4 வது மாநாட்டிற்கு சுபாஷ், டாங்கே, சிரஞ்சன் (சி ஆர் தாஸ் மகன்) , சசீந்திர நாத் சன்யால் (இவரது பேரன் சன்யால் மிக முக்கிய வலது சாரி அறிஞர் இப்போது) , உபேந்திர பானர்ஜி அழைத்திருந்தார். எவரும் போக முடியவில்லை. லெனின் டாங்கேவின் காந்தி லெனின் , சோசலிஸ்ட் பத்திரிகைகளை அறிந்திருந்தார் என்கிற செய்தியையும் இந்நூல் தருகிறது. சுபாஷ் தனது indian struggle நூலில் டாங்கே குறித்து எழுதியுள்ள செய்தியை கௌதம் தருகிறார்.

AIBEA பிரபாத்கர் பர்வானா, NFPTE குப்தா ஞானையா , எல் ஐ சி நாச்னே போன்றவர்களுக்கு அவ்வப்போது ஆலோசனை சொல்லி உற்சாகப்படுத்தியவராக டாங்கே இருந்துள்ளார். வங்கி இயக்க தோழர்களுக்கு துணையாக டாங்கே இருந்தது பற்றி ஜகதீஷ் சொல்கிறார். டாங்கேவின் கட்டுரையான computer or man eater எல் அய் சியில் போராட்டம் தீவிரமாக உதவியது. இன்று அவர் இருந்தால் இதை எப்படி மீளாய்வு செய்திருப்பாரோ?

1962ல் அஜாய் மறைந்தவுடன் அடுத்த பொதுச் செயலர் டாங்கே என்ற கருத்து பலமாக வந்தது. பின்னால் சிபிஎம் தொடங்கிய தோழர்கள் எதிர்ப்பை கணக்கில் கொண்டு இ எம் எஸ் பொதுச் செயலர், டாங்கே சேர்மன் (புதிய பதவி) என்கிற சமரசம் கட்சி உடைவை அப்போது தற்காலிகமாக தடுத்தது. பொறுப்பேற்ற இருவரும் கல்கத்தா தோழர்களை சந்திக்க வந்தனர். டாங்கே கௌரவக்குறைவாக கல்கத்தாவில் நடத்தப்பட்டார் என்கிற செய்தியை ஜகதீஷ் தருகிறார்.

சுப்ரத பானர்ஜி சுவையான தகவலைத் தருகிறார். 1946ல் கட்சியில் சேர்ந்த போது , அலுவலகத்தில் ஜோஷி, ரணதிவே, டாங்கே இருந்தனர். ஜோஷியுடன் பழக்கம் , நெருக்கம் ஏற்பட்டது. கட்சியில் குழு இருப்பது தெரியாது. ரணதிவே 1948ல் ஜோஷி கோஷ்டி என அவரை நீக்கிவிட்டாராம். என்ன ஏது எனத் தெரியாத போதே நீக்கம் என பானர்ஜி சொல்கிறார். நாசிக் சிறையில் டாங்கேவிற்கு அடுத்த செல் பானர்ஜிக்கு. செல் கமிட்டி உருவாக்கப்பட்டு செயலராக்கப்படுகிறார் இளம் பானர்ஜி. அப்போது டாங்கே தைரியத்தை கொடுத்தாராம். Only one who does not do anything makes no mistakes என்கிற நம்பிக்கை கொடுத்தாராம்.

தலைமறைவு கட்சியோ சிறை அதிகாரியுடன் மோதலை செய்க என அறிவுரை செய்தது. டாங்கே சரியல்ல என்பாராம்.

கட்சி தோழர்களுக்கு மார்க்ஸின் காபிடலை அத்தியாயம் அத்தியாயமாக சிறையில் டாங்கே விளக்கி சொன்னதாக பானர்ஜி எழுதியுள்ளார்.

கட்சி லைன் பற்றி சில தோழர்கள் சிறையில் கேள்வி எழுப்பும்போது டாங்கே அமைதி காத்தாராம். வற்புறுத்திய போது பானர்ஜியிடம் அவர் தெரிவித்தாராம். நான் என் கருத்தை சிறையிலிருந்து சொன்னால் , கட்சி உடையலாம். தேவையில்லை என்றாராம். மே வ இதழ் ஒன்றில் ரவிந்திரநாத் தாகூரை கம்யூனிஸ்ட் தோழர் ரீஆக்ஷனரி என்று விமர்சித்ததைப் பார்த்து பானர்ஜி சிறையில் பொங்கியுள்ளார். பதில்

எழுத வேண்டும் என்றார். அப்படியானால் நீ உன் கருத்தை பார்ட்டிக்கு எழுது என டாங்கே வழிகாட்டினாராம். சிறையில் தாகூரின் ஆக்கம் குறித்து டாங்கே தோழர்களுக்கு எடுத்துச் சொன்னாராம்.

பானர்ஜியை அவரது துணைவியார் கைக்குழந்தையுடன் சிறைச்சாலையில் பார்க்க வந்தபோது , டாங்கே துணவியார் உஷா தாய் உதவினார் என்பதையும் சொல்கிறார் பானர்ஜி. சிறையில் போலீஸ் துப்பாக்கி சூடு நடந்த போது அனைத்து தோழர்களின் காப்பை உறுதி செய்து பின்னர்தான் டாங்கேவும் பானர்ஜியும் செல் நுழைந்தனர். இரண்டு குண்டுகள் தாக்குதலிலிருந்து தப்பித்தார் நாசிக் சிறையில் டாங்கே என பானர்ஜி எழுதுகிறார். நீங்கள் இவ்வளவு ரிஸ்க் ஏன் எடுத்தீர்கள் எனக் கேட்டபோது டாங்கே சொன்னாராம்

I was trying to find out whether I had really become a coward and comfort living . பெரிய உள் சோதனையை டாங்கே செய்திருப்பதை, அவரது சொல்லும் செயலும் காட்டுகின்றன.

பம்பாயின் தொழிலாளிவர்க்கமும் கல்கத்தாவின் மத்தியதரவர்க்கமும் சேர்ந்துவிட்டால் இந்தியாவில் புரட்சி நடக்கும் பானர்ஜி என நம்பிக்கையை டாங்கே தெரிவித்தாராம்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் இரண்டறக் கலந்தவராக டாங்கே நல் வாழ்வு நடத்தி மே 22 1991ல் மறைந்தார். அவரை ஓரளவிற்கு இந்நூல் வழி அறிமுகம் செய்திட டாங்கேவின் 125ல் முயற்சி செய்துள்ளேன்.

30-10-2024

may 2 2022

16. தோழர் டாங்கேவின் 1947 சோவியத் சந்திப்பு... (75 ஆம் ஆண்டு)

அதிபர் கோர்ப்பசாவ் வீழ்ச்சியுடன் சோவியத் உடைவும் ஏற்பட்ட சூழலில் உலகம் 1990களில் பெரும் விவாதங்களை பெருக்கிக்கொண்டதை அறிவோம். பல்வேறு நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற பெயர்கூட விவாதமாகி சில கட்சிகள் பெயரையும் மாற்றிக்கொண்டன. இவை அனைவரும் அறிந்த விஷயம். இங்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த பரிமாற்றம் தரப்பட்டுள்ளது. அன்று அது இரகசிய ஆவணம். இன்று பொதுவெளி ஆவணம். அந்த உரையாடல் எந்த அம்சங்களை முக்கியத்துவப்படுத்தியது என்பது வரலாற்றை பார்க்கும் எவருக்கும் ஆர்வம் கூட்டுவதாக அமையும்.

விடுதலை காலத்தில் இரு நாடுகளாக இந்தியா- பாகிஸ்தான் என உருவானபோது தோழர் டாங்கே சோவியத் தலைவர் கோமின்பார்ம் பொறுப்பாளர் (Communist Information Bureau)ஜடானோவ் அவர்களை செப்டம்பர் 6, 1947ல் சந்தித்தார். இதுபோன்ற சில ஆவணங்களை இப்போது பொதுவெளியில் கிடைக்கச்செய்துள்ளனர். அவர்களுக்கு இடையே நடந்த உரையாடல் Notes of the Discussion of Comrade A A Zhdanov with Com Dange CC of CPI என்கிற 4 பக்க குறிப்பாக கிடைக்கிறது. அந்த தேதியில் அந்த ஆவணம் top secret என முத்திரையாகியிருந்தது.

உரையாடலின் போது தோழர் எம் ஏ சுஸ்லாவ் இருந்தார். சுஸ்லாவ் அப்போது AUCP B (CPSUவிற்கு முந்திய பெயர் - All union Communist Party Bolsheviks)செயலர். உரையாடலை ருஷ்ய மொழியில் எழுதி வைக்க கட்சியின் வெளிநாட்டுப்பிரிவு துணைத்தலைவரான எல் சி பாரனாவ் இருந்தார். மொழிபெயர்ப்பாளராக தோழர் அய்.அய். கோஸ்லாவ் (வெளிநாட்டுத்துறை மொழிபெயர்ப்பு பிரிவு) இருந்தார். ருஷ்ய குறிப்பு செப்டம்பர் 8, 1947 அன்று தயாராகியுள்ளது. ருஷ்ய மொழியில் எழுதப்பட்ட இக்குறிப்பை ஆங்கிலத்தில் தஹீர் அஸ்கர் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கில மொழிபெயர்ப்பு எப்போது என குறிப்பேதுமில்லை.

அந்த உரையாடலில் நாடு பிரிவினை என்கிற யதார்த்தம் புரிந்துகொள்ளப்பட்டு சோவியத் தலைவர் ஜடானோவால் ஆலோசனை நல்கப்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே அவர் தெளிவுபடுத்திவிடுகிறார். தோழர் டாங்கே அவர்களே, நாங்கள் சொல்வது ஆலோசனைதான். ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் தங்கள் உரிமை . பயனளிக்கும் என்றால் மட்டுமே பரிசீலிக்கலாம். டாங்கே

அந்த உணர்வை கணக்கில் கொள்வதாக பதில் அளிக்கிறார். ஜடானோவ் தொடர்கிறார்.

" சோவியத் கட்சி இரு நாடுகள் உருவாகிவிட்டதை ஏற்கிறது. இரு நாட்டிற்கும் தனித்தனி கம்யூனிஸ்ட் கட்சி தேவை. இரண்டும் நல்ல உறவுகளுடன் இந்து- முஸ்லீம் ஒற்றுமை மேலோங்க புரிதலுடன் உறவை வலுப்படுத்திக்கொள்ளவேண்டும்.

உங்கள் இரு கட்சிகள் தோழமைக்கு அடையாளமாக இருக்கவேண்டுமே தவிர பகைமைக்கு இருக்கக்கூடாது. உங்களால் அதை செய்ய இயலும். "

"அடுத்து எங்கள் ஆலோசனை கட்சியின் பெயர் குறித்த விஷயமாகும். நீங்கள் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா என்பதை Workers Pesants Party or Part of Labour என்றோ மாற்றிக்கொள்ளலாம். விவசாயிகளிடம் நம்பிக்கையை அது அதிகமாக்கும். கம்யூனிஸ்ட் என்ற பெயர் குறித்து அவர்கள் அச்சப்படுகின்றனர்.. அவர்களின் நம்பிக்கை பெற்ற பின்னர் கூட கம்யூனிஸ்ட் கட்சி என நீங்கள் மாற்றிக்கொள்ளலாம். இந்தியாவில் உடனடி நோக்கம் கம்யூனிசம் இல்லை என்பதால் அந்தப்பெயரைச் சொல்லி - no need to annoy people with Communism. நிலைமைகள் மாறும் கட்டத்தில் நாம் மக்கள் நாம் முன்வைக்கும் ஜனநாயக முழக்கங்களில் நம்முடன் நிற்கும்போது நாம் பேசிக்கொள்ளலாம். இதை உரையாடும்போது ஜடானோவ் வடகொரியா அனுபவத்தை எடுத்துரைத்தார்.

தாங்கள் தவறாக எண்ணிவிடவேண்டாம். இந்திய கம்யூனிஸ்ட்களை stop being communists என்றாக்குகிறோமே என நினைக்கவேண்டாம். எங்களின் pure heart லிருந்து வந்த ஆலோசனைதான்."

"அடுத்து முக்கியமான பரந்த மேடை பற்றியதானது. முதலாளித்துவ வேர்களை அழித்திட ஜனநாயக மாற்றங்களை விரைவுபடுத்தி தொழிலாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்கிடவேண்டும். இது சோசலிச மாற்றம் பெற உரிய சக்திகளின் சேர்மானம் அவசியம். இதை பொதுவாக சொல்கிறோமே தவிர இந்திய கம்யூனிஸ்ட்கள் இருக்கும் நிலைமைகளை புரிந்துகொண்டு சிறப்பாக இதை செய்ய திறமையானவர்கள் என்பதை அறிவோம். "

"அடுத்து எங்களது விஷயம் இந்தியாவில் சாதிகள் குறித்தது. அதாவது On caste Differences and the struggle for eradication of the remnants of the caste system. சாதிகள் இருப்பது தொழிலாளர் தங்களை வர்க்கமாக

முன்னெடுத்துச் செல்ல தடையாக இருக்கிறது- இந்த எச்சங்கள் பெரும் கஷ்டங்களை உருவாக்குவதாக இருக்கும். இந்த எச்சங்களை துடைத்தெறிய கம்யூனிஸ்ட் கட்சி அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும். இது உடனடியாக களையமுடிந்த ஒன்றல்ல என்பதை நாங்கள் அறிந்தேயிருக்கிறோம். அதில் அதிகவனம் செலுத்துங்கள். (We consider com Zhdanov continued- that this is the most reactionary vestige and poses the biggest difficulty for Indian Communists. The Communist party must make all efforts in order to eliminate these vestiges, though we are awarw that this cannot be achieved in the near future.We request that the Indian communists - com Zhdanov said- pay serious attention to this question.) ”

″ மேலே சொல்லப்பட்டவைதான் AUCP B மத்திய கமிட்டி முன்வைக்கும் அடிப்படை ஆலோசனைகள். இந்திய கம்யூனிஸ்ட்கள் இங்கு படிக்க வர தடையில்லை. தொழிற்சங்க பிரதிநிதிகள் அடிக்கடி வரலாம். கம்யூனிஸ்ட் கட்சியுடன் நேரடி உறவை விரும்புகிறோம். பிரச்னை எனில் occasional ஆக வைத்துக்கொள்ளலாம். நீங்கள் சோவியத் மக்கள் குறித்து ரேடியோ பிரச்சாரங்களை செய்யுங்கள்.”

″தோழர் டாங்கே நன்றி தெரிவித்துவிட்டு இந்த ஆலோசனைகளை நாடு திரும்பியவுடன் மத்திய கமிட்டியில் வைப்பதாக தெரிவித்தார். ”

மேற்கண்ட ஆலோசனைகள் அதை டாங்கே தங்கள் கட்சியில் தெரிவிக்க ஏற்பு என்பதுடன் அந்த உரையாடலின் சுருக்கம் முடிவடைந்துள்ளது.

dec 7 2024

17. தொழிற்சங்கத் தலைவர்கள்

இந்திய தொழிற்சங்க இயக்க அனுபவங்களில் உரமேறிய பல தலைவர்கள், நல்ல நூல்களை தந்துள்ளனர்.

தோழர் டாங்கே, ஏ பி பரதன் - AITUC

தோழர் பி டி ரணதிவே - CITU

தோழர் கார்னிக் - Royist

தோழர்/ திரு ஜி ராமானுஜம் - INTUC

தோழர்/ திரு டி பி தெங்காடி - BMS

மேற்கூறிய தலைவர்கள் அனைவருமே அவரவர் சார்ந்த கட்சி பின்புலம் அரசியல் பார்வையுடன் பல்வேறு கட்டுரைகளை எழுதியவர்கள். இவர்கள் அல்லாது , இந்திய தொழிற்சங்க இயக்க வரலாறு குறித்து எழுதப்பட்ட ஆய்வு நூல்களும் உள்ளன. அவை ஆய்வு நோக்க மாணவர்களுக்கு உதவும். தொழிற்சங்க கேடர்கள் எனில் மேற்கூறிய தலைவர்களின் நூல்களை பார்க்கலாம்.

மேற்கூறிய தலைவர்களுக்கான சிறப்பு அவர்களே தொழிற்சங்க இயக்கத்தை தலைமையேற்று அனுபவங்களை பெற்று அவரவர் சார்ந்த மத்திய தொழிற்சங்க இயக்கங்களை வழி நடத்தியவர்கள். இவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான அனுபவங்களை வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம். ஒருவர் மீது மற்றவர் குறைகளை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவரவர் தொழிற்சங்க இயக்கத்திற்கான classics யை கொடுத்தவர்கள். அவரவர் அரசியல் பார்வையையும் அவர்களது எழுத்தில் குழைத்து வைத்தவர்கள்.

இவர்களுடன் இருந்தோ அல்லது பார்த்தோ பல்வேறு துறைசார் தொழிற்சங்க இயக்கங்களிலும் அனுபவம் வாய்ந்த தலைவர்கள் இருந்தனர். வங்கி என்றால் பர்வானா, பிரபாத்கர், டெலிகாம் என்றால் ஒ பி குப்தா , ரயில்வே என்றால் புரோகித் , பாதுகாப்பில் எஸ் எம் பானர்ஜி என மத்தியதர வர்க்கம் சார்ந்த பணியாளர்களுக்கான classics and methodology யை இந்த தலைவர்கள் உருவாக்கித் தந்தனர்.

மேற்கூறிய தலைவர்கள் அனைவரும் தங்களின் இதழ்கள் வழியே ஏராளம் எழுதி சென்றுள்ளனர். அந்த அந்தக்காலத்திற்கான , அவர்கள்

சவால்கள் என எண்ணியவற்றை, தொழிலாளர்களிடம் தங்கள் உரைகள், எழுத்துக்கள் வழியே கொண்டு சென்றனர்.

BTR அவர்களின் வால்யூம் ஒன்றை புரட்டியபோது , நினைவுகள் புரண்டன. அவரின் சொற்பொழிவுகள், கட்டுரைகள் (p&t தோழர்களுக்கு எனக் கூட ஒரு கட்டுரை) மூன்று வால்யூம்களாக தொகுத்திருந்தனர். மறைந்த மரியாதைக்குரிய W R வரதராஜன் , CITU செயலராக டெல்லியில் இருந்தபோது, தொலைபேசியில் என் தொழிற்சங்க மற்றும் அரசியல் அடையாளத்தை சொல்லி அனுப்ப முடியுமா எனக் கேட்டேன். நான் ஒரு முறை சொன்னேன் அவ்வளவுதான், நினைவூட்டல் என ஏதும் செய்யவில்லை.

சில நாட்கள் கழித்து மன்னை வழக்கறிஞர் தோழர் மார்க்ஸ் பேசினார். அப்போது மார்க்ஸ் சி ஐ டி யு மாவட்ட செயலர். டெல்லி சென்ற அவரிடம் தோழர் வரதராஜன் ரணதிவே அவர்களின் மூன்று வால்யூம்களையும் கொடுத்து அனுப்பிய செய்தியை தெரிவித்தார். வழக்கம் போல திருவாரூர் சி பி எம் அலுவலகத்தில் அவற்றை பெற்று தோழர் சேகர் (தோழர் ஜி வீரையன் அவர்களின் மருமகன்) என்னிடம் ஒப்படைத்தார். அந்த தோழர்களின் உதவிகளும் நினைவிற்கு வந்தன.

அவரவர் இயக்கம் சார்ந்த தலைவர்களின் எழுத்துக்களுடன், வேறு இயக்கம் சார்ந்த தலைவர்களின் எழுத்துக்களும் நம்மிடம் உள்ளே போகும்போது , இன்னும் விரிவான புரிதலுக்கான சாலை தென்படக்கூடும்.

தோழர் ரணதிவேவின் புகழ் வாய்ந்த எனக்கு பிடித்த செய்தி ‘தொழிலாளர்களை தொழிற்சங்கத்தில் விருந்தினராக்கிவிடாதே ‘. தோழர் டாங்கேவிடம் பிடித்த வாசகம் Militancy does not mean rudeness. குப்தா தந்த மிக முக்கிய செய்தி unity is nothing but toleration.

வாய்ப்புள்ளோர் இத்தலைவர்கள் எழுதிய சில நூல்களை தேடி படித்துப்பார்க்கலாம்.

7-12-2024

feb 19 2024

18. கோரிக்கைகள்- போராட்டங்கள்

கோரிக்கை என வந்துவிட்டால் அதற்கான இரு பக்கங்கள், அவற்றிற்குரிய நியாயப்பாடுகள் என வந்துவிடுகின்றன.

கோரிக்கை உருவாக்கம் என்பதற்கான உள் போராட்டங்களும் சில நேரம் பெரும் விவாதச் செலவை வைத்துவிடும். அப்படி விவாதித்து தேறும் கோரிக்கைகளின் புரட்சிகர தன்மை , உருவாக்கப்போகும் மாற்றங்கள் அல்லது எதிர் விளைவுகள் பற்றியும் கூட கருத்து வேறுபாடுகள் உருவாகலாம். அதனால் அமைப்பு கட்சி பிரிந்து போதல் கூட நேர்தலும் உண்டு.

கோரிக்கையை ஏற்று அமுல்படுத்த வேண்டியவர் நிலையும் அதிகாரம் சார்ந்த மனநிலையுடன் தொழிற்படும். முதலில் நியாயமில்லை என்ற எண்ணம்தான் இருக்கும். அமைதியை குலைக்கிறார்கள் என்ற எண்ணமும் வரலாம். அரசியல் என்ற எண்ணமும் தோன்றும். நிதி சார்ந்து இருந்தால் கேட்கவே வேண்டாம்- சாத்தியமே இல்லை என்ற கணக்குகள் எப்போதும் மேஜை இழுப்பறையில் கோப்புகளாக உட்கார்ந்திருக்கும். என்னை எதிர்த்தே போராட்டமா என்கிற ஆணவம் அடக்குமுறையை ஏவ வைக்கும்.

கோரிக்கை வைப்பவர்களும் தாங்கள் கேட்பதென்ன, அதன் சாத்தியப்பாடுகளை தாங்களே ஆட்சிக்கு நிர்வாகத்திற்கு வந்தால் தீர்க்கப்படக்கூடியது தானா என்ற அடிப்படை ஆய்வில்லாமல் கூட வைக்கவும் நேரலாம். அவனுக்கு தந்தாயே எனக்கு ஏன் கூடாது என்கிற ஒப்பீட்டு தன்மையில் கோரிக்கை நியாயத்தை பெரும் விற்பன்னர்கள் கூட கீழிறங்கி எழுப்புவதுண்டு. அந்த அவன் குறித்து எந்தப் புரிதலும் இல்லாமல் இருக்கவேண்டும்- இல்லையெனில் bias இருக்கவேண்டும். பல நேரங்களில் இந்த emulation என்பதே கூட பெரும் அரசியலாக தொழிற்படும்.

ஒருமுறை நாடாளுமன்ற விவாதத்தில் ‘உடனடியாக அனைவருக்கும் வீடு ‘ என்ற கோரிக்கை விவாதம் எழுந்தபோது, லோகியா அவர்கள் எவ்வளவு இரும்பு , சிமெண்ட், கற்கள் வேண்டும் என உங்களுக்கு idea இருக்கிறதா- அந்த அளவு இந்தியா உற்பத்திக்கு போய்விட்டதா அல்லது அந்த அளவு உடனே இறக்குமதி செய்யும் பொருளாதார வசதியில் நாடு இருக்கிறதா எனக்கேட்டதுடன், உடனடியாக என்பதையும் பொத்தாம் பொதுவாக அனைவருக்கும் என கோரிக்கை

எழுப்புவதால் தீர்க்க முடியாமல் போகலாம் என்ற அறிவுரையும் வைத்தார்.

டெலிகாம் தொழிற்சங்கத்திலும் bonus for all CG Employees என விவாதம் வந்தபோது , தோழர் குப்தா மிக எதார்த்தமாக if bonus for all means bonus for none என்ற அறிவுரையை தந்து , கோரிக்கை specification குறித்த புரிதலை உருவாக்கி இரயில்வேக்கு அடுத்து தபால் தந்தியில் PLB என்கிற புதியவகைப்படி அக்கோரிக்கைக்கு தீர்வு கண்டார். கோரிக்கைகள் எவ்வளவு உயரமோ அந்த அளவிற்கு முற்போக்கானவர் புரட்சிக்காரர் என்கிற புரிதல் பழுதாகிப் போகும்.

போராட்டம் என்பது கூட ஓர் அமைப்பு அல்லது அதன் தலைவர் எவ்வளவு பெரிய போராளி தெரியுமா - அனைத்து தியாகமும் உயிர்பலியும் செய்யத்தயார் என்கிற 'மிலிட்டன்சி' க்கான வெளிப்பாடாக மட்டும் இருந்துவிடக்கூடாது. திரளாக இருக்கும்போது அம்மட்டில் அச்சம் இல்லாமல் போகலாம். போராட்டத்திற்கு அழைத்து வந்திருப்பவர் ஒவ்வொருவர் தொடர் வாழ்வும் மிக முக்கியமானது - அரசாங்க நிர்வாக போலீஸ் மற்றும் இராணுவ எந்திரம் என்கிற vulturesக்கு அவர்களை இரையாக்கவிடக்கூடாது என்கிற பொறுப்புணர்வும் அமைப்பின் தலைமைக்கு தேவைப்படுகிறது.

Spontaneous பொங்குதல்களை channelise செய்கிற கலையில்லாவிடில் , போராட்டம் வெறும் கலவரம் என்ற அளவில் தீர்வின்றி தீர்ந்துபோகும். போராட்டங்கள் கருத்தொற்றுமையில் சாத்தியமான அளவு கோரிக்கை தீர்வு என்பதை தாண்டி அதற்கு வேறு முகாந்திரங்கள் முகங்கள் இல்லாமல் இருப்பது நலம் பயக்கும்.

அரசின் அடக்குமுறைகள் அதிகரிக்கும் போது அதை அதே வகைப்பட்டு எதிர் வழியில் சந்திப்பது என்பதைவிட, கோரிக்கைகளின் தீவிர நியாயத்தை உணர்ந்த மதிப்பு மிகு தலைவர்கள் தாங்கள் உணரும் மாற்று அகிம்சா போராட்டங்களை- நன்கு அறியப்பட்ட உண்ணா நோன்பு பட்டினி வழி போன்ற ஒன்றை தேர்ந்தெடுக்கலாம்.

போராட்ட முறைகள், கள உரைகள், கோரிக்கைகள் என எதிலும் நிதானமிழக்காமல் , வாய்ச் சவாடால் gas விடாமல் , தங்கள் லிமிடேஷன் பற்றிய உணர்வின்றி , கூட்டத்தைப் பார்த்து வானில் பறக்காமல் பூமியில் கால் ஊன்றி , அடக்கமாக தீர்க்க வேண்டுமே என்கிற பொறுப்புடன் தலைமை பாத்திரம் கொள்வோர் செயல்பட வேண்டியிருக்கும்.

போராட்டமே வெற்றி என புரிந்துகொண்டுவிட்டால், தீர்க்க வேண்டிய பொறுப்பு ஏதும் இருக்க வேண்டியதில்லை. அறைகூவல் விட்டாகிவிட்டது, தட்டி எழுப்பி விட்டோம், protest செய்தாலே போதும், பங்கேற்றவர் எவ்வளவு எங்கு பலம் பலவீனம் என்ற நேர்மையான கணக்கு பார்க்க வேண்டியதில்லை- அப்படிப் பார்த்தாலும் அது இரகசியம் - பலவீனத்தை காட்டிவிடக்கூடாது அப்படியே எல்லாம் அற்புதமாக வீச்சாக என்று maintain செய்வதே நலம் என்பது ஏமாற்றிக்கொள்தலாக ஏமாற்றுதலாக முடியலாம். எவரும் எவருக்கும் accountability ஆக இல்லாத நிலையை வளர்ப்பதாக முடியலாம்.

போராட்டத்திற்கு ஆகும் நிதிச்செலவும் பிற சக்தி செலவும் கூட முக்கியமானதே. Best results with least expenditure of energy என்கிற அறிவுரையை வைத்துக்கொள்வதும் நலம் பயக்கும். டெலிகாமில் தோழர் குப்தா வேறு ஒன்றையும் சொல்லிக் கொடுத்தார். Never bang the doors of negotiations. பேச்சுவார்த்தை என்பதைப் பற்றியே சிந்தனையில்லாமல் போராட்டம் , touch and go soap bubble struggle என்பது ஆரோக்கியமான ஒன்றா எனத் தெரியவில்லை.

அரசாங்கம் நிர்வாகம் அலட்சியமாக இருந்தாலும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொணரவேண்டிய அனைத்து முயற்சிகளையும் போராட்டத் தரப்பினர் செய்தல் நலம். பேச்சுவார்த்தையின் தன்மையை முடிந்த அளவு தீர்வின் சாலைக்கு இரு பக்கமும் அழைத்து செல்லும் பக்குவ மனநிலையாளர்கள் இருப்பது நலம். வாக் அவுட் மனநிலையில் செல்வது உசிதமானதாக இருக்காது.

போராட்டத்திற்கு ஆதரவாக solidarity காட்டுபவர்களுக்கும் கூட பொறுப்பு தேவைப்படுகிறது. அதீத அரசின் அடக்குமுறைகளை கண்டித்தல் அவசியமான நிலைப்பாடாக பொதுவாக இருந்துவிடும். அதீத கோரிக்கைகள் என்ற புரிதல் பொதுவாக இருக்காது. அதற்கு பல்வேறு எதார்த்தங்களையும் fact sheet study யும் தேவைப்படும். உதாரணமாக குறைந்த பட்ச ஊதியம் என்கிற கோரிக்கை போராட்டம் தோறும் மாறிக்கொண்டே உயர்ந்து கொண்டேயிருக்கும்- முன்வைத்த எதையும் அடையாமலேயே.

போராட்டங்களில் common sense மிக அவசியம் என தோழர் குப்தா சொல்லிக்கொண்டேயிருந்தார். மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு கொடுக்க கூடிய குறைந்த பட்ச ஊதியம் என்பதில் துவங்கி இக்கால போராட்டங்களில் கோரிக்கை அளவு உயர்ந்துகொண்டே போனதே தவிர தீர்வு வராமல் நிற்கிறது.

எந்த போராட்டமும் வீணாவதில்லை - வீழ்வதில்லை விதைக்கப்படுகிறோம் என ஆறுதல் அடையலாம். எவ்வளவு போராட்டங்கள் எந்த அளவு தீவிரமாக நடந்தது என்பதை விட, எவ்வளவு விரைவில் தீர்த்தோம் எந்த அளவு தீர்த்தோம் என்கிற பாதையை தோழர் குப்தா சமைத்துக் காட்டினார். ராணா பிரதாப் பாதையல்ல மராத்திய சிவாஜி tactics என்பார் தோழர் குப்தா.

Struggle struggle struggle even if no negotiation that is the militancy என்ற முழக்கத்தைவிட Negotiate negotiate if negotiations fail then hit hit hard- wait halt consolidate the gains and then hit என்பதில் அவர் நம்பிக்கை வைத்தவராக இருந்தார். Massesயை மட்டும் இறக்கிவிடாமல் அவர் தன்னை வருத்திக்கொள்ளும் பட்டினிப்போரில் இறங்குவார். போராளிகளுக்கு வரும் தண்டனைகளை முடிந்தவரை குறைக்கப்பார்ப்பார். தன் உடலின் சக்தியை செலவழிக்க தயங்காமல் இருந்த தலைமை மரபை அவர் தந்தார். தான் எடுத்து வைத்த கோரிக்கைகளின் தீர்விற்கு அரசாங்கத்தை மட்டும் கைகாட்டாமல், பெரும் பொறுப்பை accountability ஏற்ற தலைமை மரபை அவர் leadership heritage ஆக விட்டுச் சென்றுள்ளார். போராட்டத்தை துவங்குவதல்ல அதை சேதாரமில்லாமல் அல்லது தவிர்க்கமுடியாமல் போனால் மிகக் குறைந்த சேதார செலவில், முடிந்த அளவிலான தீர்வுடன் போராட்டத்தை முடிக்கும் பெரும் பாரம்பரியத்தை அவர் நிகழ்த்திக் காட்டினார்.

Militancy does not mean rudeness என தோழர் டாங்கே சொல்லிக்கொடுத்தார். Hold the bull by horns என்பதை மாட்டின் முன் நின்று அதை வசைபாடிக்கொண்டிருப்பது என காந்தியும் சொல்லவில்லை. அதை எடுத்தாண்ட தோழர்கள் டாங்கே குப்தா போன்றவர்களும் சொல்லவில்லை. கோரிக்கையை வெறும் வசவுகளால் தீர்க்கமுடியுமா எனத் தெரியவில்லை...

19-2-2024

ap 16 2021

19. தோழர் டாங்கேவின் நூல்

புதிய எளிய எழுத்தாளர் கஷ்டம் பற்றி தோழர் டாங்கே நூறு ஆண்டுகளுக்கு முன்னர்.. 1921ல் எழுதப்பட்ட Gandhi VS Lenin முன்னுரையிலிருந்து..

" The Public seldom knows the troubles the poor writer has to undergo, to procure for their benefit, a foreword from some great leader with the key or stamp of whose name, he wishes to enter the regions of public favour. He has to introduce himself through several other less great leaders satellites of the centre planet.

.. After introduction the poor preface- procurer has to flatter the great leader saying in the usual line, that he is the only one, capable of giving any opinion on the subject and that the public would like to hear his views etc. Then the great leader all smiles condescends to go through the book once. For some days the poor writer waits dreaming that the book is being gone through. He returns to hear that on account of pressure of work, he could not find time. But he would be glad to do it very soon.."

"பொது மக்கள் அரிதாகவே அறிந்திருப்பார்கள் — ஏழை எழுத்தாளர் எத்தனை சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை. அவர்களுக்காக, ஒரு பெரிய தலைவரிடமிருந்து முன்னுரை பெற்றுத் தர, அந்த தலைவரின் பெயரின் சாவி அல்லது முத்திரையால், பொதுமக்களின் பாராட்டுப் பிரதேசத்துக்குள் நுழைய விரும்புகிறார். அதற்காக அவர் முதலில் அந்த மையக் கோளின் சுற்றுப்பாதையில் உள்ள சிறிய தலைவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அறிமுகம் முடிந்ததும், அந்த ஏழை முன்னுரை-வேண்டுபவர், பெரிய தலைவரைத் தாழ்மையுடன் புகழ்ந்து, வழக்கமான வரிகளில் — 'இந்த விஷயத்தில் கருத்து சொல்லத் தகுதியான ஒரே நபர் இவர் தான்; பொதுமக்கள் இவரது கருத்துகளை கேட்க விரும்புகிறார்கள்' என்று சொல்ல வேண்டியிருக்கும். பின்னர் அந்த பெரிய தலைவர், புன்னகையுடன், புத்தகத்தை ஒருமுறை பார்ப்பதற்கு தயங்காமல் சம்மதிப்பார்.

சில நாட்கள், அந்த ஏழை எழுத்தாளர், புத்தகம் படிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற கனவோடு காத்திருப்பார். ஆனால் திரும்பிச் சென்று கேட்கும்போது, 'வேலையின் அழுத்தத்தால் நேரம் கிடைக்கவில்லை; ஆனால் விரைவில் பார்த்து முடிப்பேன்' என்று தலைவரிடமிருந்து பதில் கிடைக்கும்." (நன்றி கோபைலட்)

இந்த புத்தகத்தை முதன் முதலாக 1980களின் துவக்கத்தில் தஞ்சை சி பி அய் அலுவலக நூலக அறையில் பார்த்த நிகழ்வு நினைவிற்கு வருகிறது.தோழர் கோட்டூர் ராமலிங்கம் சி பி அய் தஞ்சை மாவட்ட செயலர். இளம் தோழனாக நான் அங்கு சென்றபோது அவர் அங்குள்ள அலுவலக பொறுப்பாளரிடம் தோழர் எப்போது திருவாரூரிலிருந்து வந்தாலும் நூலக அறையை திறந்துவிடுங்கள் என சொல்லி அன்பு காட்டியது நினைவிற்கு வருகிறது.

dec 19 2021

20. தொழிற்சங்கத் தோழர்களுக்கு- தோழர் டாங்கே

1952ல் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் டாங்கே தொழிற்சங்க செயற்பாட்டாளர்களுக்கான குறிப்பு ஒன்றை எழுதினார். கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி முடிவையடுத்து கல்கத்தாவில் தொழிற்சங்கத்தில் பணியாற்றும் கம்யூனிஸ்ட்களுக்கான கன்வென்ஷன் கல்கத்தாவில் மே 21, 22 1952ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் டாங்கேவால் வைக்கப்பட்ட குறிப்புகள் பிரசுரமாக செப்டம்ர் 1952ல் வந்தது. இந்த ஆவணத்தில் Report 4 The Makeup and Tasks of our TU Functionary என்ற தலைப்பில் பிரசுரமானது..

அதிலிருந்து சில வரிகள்

While strike struggles have to be led and fought, strike leadership alone is not enough to unite and organise the working class..

Our TU functionary must pay serious attention to the application of the laws on industrial matters. There is a tendency to consider all the laws as attacks on the working class and hence requiring no attention except to combat them in a general form. But it is forgotten that there are two sets of laws. One is an achievement on our part and to demand and supervise their realsisation and application is a task of the Tus...We must build the TU movement against such laws as are against the interests of the workers..

We must learn to keep some of the cadres unexposed. Or else, the victimisation by the employees will throw all our best leaders and men from the real field of work that is factory, shop, office..

தமிழாக்கம்:

"பணியாளர் போராட்டங்களை வழிநடத்தியும், போராடியும் ஆக வேண்டும். ஆனால் வேலைநிறுத்தத் தலைமையே மட்டும், தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றிணைத்து ஒழுங்குபடுத்துவதற்கு போதுமானதல்ல.

எங்கள் தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் தொழில்துறை சட்டங்களின் பயன்பாட்டில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். எல்லா சட்டங்களையும் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தாக்குதல்களாகவே கருதி, அவற்றை பொதுவாக எதிர்ப்பதற்கே கவனம் செலுத்த வேண்டும் என்ற மனப்போக்கு உள்ளது. ஆனால் இரண்டு வகை சட்டங்கள் உள்ளன என்பதை மறந்து விடுகிறோம். ஒன்று எங்களின்

சாதனையாகும்; அவற்றின் நடைமுறைப்படுத்தலைக் கோரியும், கண்காணிப்பதும் தொழிற்சங்கங்களின் கடமையாகும்.

தொழிலாளர்களின் நலன்களுக்கு எதிரான சட்டங்களுக்கு எதிராகவே தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

சில கேடர்களை வெளிப்படுத்தாமல் வைத்துக் கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், முதலாளிகளின் பழிவாங்கும் நடவடிக்கைகள், சிறந்த தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் தொழிற்சாலை, கடை, அலுவலகம் போன்ற உண்மையான பணியிடங்களில் இருந்து வெளியேற்றிவிடும்."

(தமிழில் கோபைலட்)

ஜூலை 2024

21. டாங்கேவின் அரசியல் பார்வையில்..

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் டாங்கே அவர்கள் எப்படி ஒரு முக்கிய வரலாற்று பிரச்சனையை உள்வாங்கியுள்ளார் என்பதை இங்கு பதிவிடுகிறேன்.

23 வயது இளைஞனாக சோசலிச தாகத்துடன் பிரச்சனைகளை அவர் அணுக எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களை அப்போது அவர் எடிட்டராக இருந்து நடத்திய சோசலிஸ்ட் இதழ் காட்டும்.

நான் தஞ்சைக்கு சென்ற இளம் காலத்தில் சிபிஅய் அலுவலகத்தில் பழம்பெரும் நூலகம் ஒன்று இருந்தது. மூத்தவர் தோழர் பி ராமலிங்கம் மாவட்ட செயலர். அங்கு அலுவலகத்தில் இருந்த தோழர் குருசாமியிடம் சாவி வாங்கி நூல்களை 60 கிமீ தொலைவில் இருந்த திருவாரூக்கு எடுத்துச் செல்ல தோழர் பி ஆர் அனுமதித்தார். அந்த நூலகத்தில் பல அபூர்வ கம்யூனிஸ்ட் பிரசுரங்கள் அப்போது என் கே கிருஷ்ணன் மலேயா கணபதி இன்னும் பலர் பெயரில் இருந்ததைக் காணமுடிந்தது. அங்குதான் டாங்கே கொணர்ந்த சோசலிஸ்ட் இதழ்கள் ஒரிரண்டை பார்த்த நினைவு. சரி. எடுத்துகொண்ட விஷயத்திற்கு வருகிறேன்.

சோசலிஸ்ட் இதழ் நவ 25 1922 தலையங்கம் The Brahmin and Non Brahmin war. தக்காணப் பகுதியில் இந்து சமூகத்தினர் இவ்வாறு பிரிந்து 'சிவில் வார்' நடத்திக்கொள்வதாக தோழர் டாங்கே அதில் குறிப்பிட்டிருப்பார். சில இடங்களில் தனிப்பட்ட பிராமணர்கள் மீது பாசிசத்தனமான தாக்குதல் நடந்திருப்பதாகவும், சமூக மனசாட்சி கொண்ட சிலர் Brahmanical League of Defence குறித்து யோசிப்பதாகவும் அத்தலையங்கத்தில் டாங்கே எழுதியிருப்பார்.

இந்து சமூகம் சாதிகளாக பிளவுண்ட நிலையில், பிராம்மண அந்தஸ்தை பெறுவதற்கான போராட்டத்தை பிராமணர் அல்லாதார் நடத்த எழுந்துள்ளனர். இந்தப் போராட்டம் எரிமலை போன்றது.

இந்த போராட்டம் வரலாறு நெடுக நடந்ததை டாங்கே பேசியிருப்பார். விஸ்வாமித்திரர், வசிட்டர், பரசுராமன், லிங்காயத் பசவப்பா, மகர் பெண் வழி கிருஷ்ணர்கள், ஞானேஸ்வர், துக்காராம் என பலரின் பெயரை குறிப்பிட்டு நடந்த போராட்டங்களை ஏதோவொருவகை class struggle என இளம் டாங்கே இதில் சொல்வார். இங்கே டாங்கே எழுதிய சில வரிகள்

The classes are not wilful creation of the Brahmins or the Non Brahmins. The classes came into existence to satisfy social necessity. The classes of old style were the outcome of the division of economic production and social governance based upon the handicraft mode of production.

All those who led the Non Brahmin struggle could not demolish castes and at last they themselves crystallised into sects, because the mode of production that bred the castes never changed.

தமிழாக்கம்:

"வகுப்புகள்/ வர்க்கங்கள் என்பது பிராமணர்களின் அல்லது பிராமணரல்லாதவர்களின் திட்டமிட்ட உருவாக்கம் அல்ல. சமூகத் தேவையை பூர்த்தி செய்யவே வகுப்புகள் தோன்றின. பழைய வகுப்புகள், கைதொழில் உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உற்பத்தி மற்றும் சமூக ஆட்சி பிரிவின் விளைவாக உருவானவை.

பிராமணரல்லாதவர்களின் போராட்டத்தை வழிநடத்தியவர்கள், சாதிகளை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை; இறுதியில் அவர்கள் தாமே பிரிவுகளாக உறைந்துவிட்டனர். ஏனெனில், சாதிகளை உருவாக்கிய உற்பத்தி முறை ஒருபோதும் மாறவில்லை."

பிரிட்டிஷ்க்கு முன்னரான இந்திய சமூகத்தின் இந்த போராட்டக் காட்சியை மேற்கண்ட பாராக்களில் இளம் டாங்கே தான் உள்வாங்கிய வரலாற்று பொருள்முதல்வாத பார்வையில் வெளிப்படுத்தியிருப்பார். அன்று ஒரு கம்யூனிஸ்ட்டாக மாறிக்கொண்டிருந்த பையன் ஒருவரின் கருத்து தெரிப்பு என்றும் இதை சேர்த்துப்பார்க்க வேண்டும். ஏற்கலாம். மறுக்கலாம்.

பிரிட்டிஷ் எதிர்த்த சுதந்திர போராட்டக்காலத்திற்கு டாங்கே வருகிறார். இப்போது அரசியல் பொருளாதார அதிகாரம் மூன்றாவது ஆளான பிரிட்டனிடம் போயுள்ளது. பிராமணர் - அல்லாதார் எல்லோரும் அந்தஸ்தில் கீழே இறக்கப்பட்டுள்ளனர். Both have become subject classes என இங்கு டாங்கே எழுதியிருப்பார்.

மேலும் இளம் டாங்கே விவரிப்பு இவ்வாறு செல்கிறது

Thus the economic and political superiority being destroyed, only the ideological superiority of the Brahmin remains. The foreign rule created an economically powerful group from the Non Brahmin classes to be set up against Brahmin class.

The petty bourgeois elements in the Non Brahmin classes are not carrying on a selfless struggle. They only want a share in the spoils. For each of them is unwilling to admit the comradeship of the class below.

The rights of worship in temples, the monopoly ceremonial rights etc of the Brahmins are questioned not from a spirit of democratising, abolishing or communalising those institutions, but from the thirst of the petty Non Brahmin bourgeois to have a share in their gains.

"பொருளாதார மற்றும் அரசியல் மேலாதிக்கம் அழிந்தபின், பிராமணர்களின் சிந்தனைக் மேலாதிக்கம் மட்டுமே மீதமிருக்கிறது. வெளிநாட்டு ஆட்சி, பிராமணர்களுக்கு எதிராக நிற்க, பிராமணரல்லாத வர்க்கங்களில் இருந்து பொருளாதார ரீதியாக வலுவான ஒரு குழுவை உருவாக்கியது.

பிராமணரல்லாத வர்க்கங்களில் உள்ள சிறிய பூர்ஜுவா (petty bourgeois) கூறுகள் தன்னலமற்ற போராட்டத்தை நடத்தவில்லை. அவர்கள் வெறும் பலன்களில் பங்கெடுக்க விரும்புகிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தமக்குக் கீழே உள்ள வர்க்கத்தின் தோழமைத்துவத்தை ஏற்கத் தயங்குகிறார்கள்.

கோவில்களில் வழிபாட்டு உரிமைகள், பிராமணர்களின் தனியுரிமைச் சடங்கு உரிமைகள் போன்றவை, அந்த நிறுவனங்களை ஜனநாயகமாக்க, ஒழிக்க, அல்லது சமூகமயமாக்கும் நோக்கில் கேள்வி எழுப்பப்படவில்லை. மாறாக, சிறிய பிராமணரல்லாத பூர்ஜுவாக்கள், அந்த உரிமைகளின் பலன்களில் பங்கெடுக்க வேண்டும் என்ற தாகத்திலேயே அவற்றை எதிர்க்கிறார்கள்." (தமிழில் கோபைலட்)

புதிய வகை உற்பத்தி முறை - (முதலாளித்துவ என அவர் சொல்வதாக) பெருகும்போதுன் மகர், மராத்தா, லிங்காயத், பிராமணர் என்பவை மறைந்து அவை பாட்டாளி வர்க்கம் என்கிற நிலைக்கு தள்ளப்பட்டு ஒற்றை பரிமாணம் எடுக்கலாம் என அன்றைய இளைஞர் டாங்கே இந்த தலையங்கத்தில் நம்பிக்கையை தெரிவித்திருப்பார். இங்கு அவர் இப்படி சுருக்கப் புரிதலை அடைந்திருப்பார்.

The struggle of Non Brahmins versus Brahmins will then assume the form of proletarians against the God Capital. இந்த புதிய பரிமாணத்தை புரிந்துகொண்டு பிராமணர் அல்லாதார் செயல்பட வேண்டும் என இந்த தலையங்கத்தில் டாங்கே சொல்லி முடித்திருப்பார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கம்யூனிஸ்ட் இளம் அறிவுஜீவியின் பார்வை இப்படியிருந்த்தை டாங்கே தலையங்கம் நமக்குக் காட்டும்.

- Ref S A Dange His political Ideology by S R Bakshi 18-7-2024

march 15 2022

22. தோழர் பிலிப் ஸ்ப்ராட்

ஆதி மார்க்சியர் பிலிப் ஸ்ப்ராட் பற்றிய கட்டுரையை அனில்ரஜிம்வாலே நியூஏஜில் எழுதி தோழர் நீலகண்டன் தமிழாக்கம் செய்துள்ளார். பிலிப் இளம் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்டாக இந்தியா நுழைந்து இங்குள்ள தோழர்களுடன் 1929 மீரத் சதி வழக்கில் தலையானவராக சிறைக் கொடுமை யை அனுபவித்தவர். காந்தியை சந்தித்தல், எம் என் ராயுடன் நெருக்கம் பின்னர் ராஜாஜியுடன் என தன் சிந்தனை பயணத்தை தாயகம் திரும்பாமல் தான் எந்த நாட்டின் விடுதலைக்கு போராடினாரோ அம்மண்ணில் இந்தியத் தன்மையுடன் வாழ்ந்து சென்னையில் மறைந்தார்.

இளம் வயதில் சிங்காரவேலர் வீடு சென்று வந்தபோது அவரின் ஒன்றுவிட்ட பேத்தியான மாணவி சீதாவுடன் பழக்கம் ஏற்பட்டு காதல் வயப்பட்டு பின்னர் மணம் முடித்தவர் பிலிப். நல்லவேளை இந்த திருமணத்திற்கு தேசபக்த கூட்டம் எவரிடமிருந்தும் எதிர்ப்பு வரவில்லை. நம்மூர் பெண்ணை வெள்ளைக்காரன் மணப்பதா என அரிவாளை தூக்கிக் கொண்டு எவரும் வரவில்லை. அருண்டேல்-ருக்மணி திருமணத்தில் தேசபக்தர்கள் வ உ சி , சிவா துடித்து எழுந்தனர். பெசண்ட் அவர்களை விமர்சித்ததை அறியும் போது இதில் இப்படி நேராதது மகிழ்ச்சிக்குரியது.

பிலிப்- சீதா குழந்தைகள் வாழ்க்கை மிகச் சாதாரண எளிய வாழ்க்கையாக- அவர் சைக்கிளில் சென்று பிரஸ் வேலை பார்ப்பவராக- சீதா ஆசிரியையாக போகத்துவங்கியது. பெங்களூர் வாசம் முடிந்து ராஜாஜி சொன்னதால் மதராஸ் வாசம் துவங்கியது. ஆரம்பத்தில் கல்கி சதாசிவம் பக்கத்தில் குடியமர்ந்தாலும் இறைச்சி வாசனை துளைக்கிறதென்று சொல்லி அங்கு இருக்க முடியாமல் செண்ட்ரல் ஸ்டேஷன் அருகே வாழ்ந்தனர். பிலிப் மறைந்த பின் குடும்பம் கையறு நிலை சென்றது.

ஆறு மாதமாவது பிரிட்டிஷ் எதிர்த்து சிறை சென்றால் விடுதலை இந்திய அரசாங்கம் பென்ஷன் தருவதாக செய்தி சீதாவை எட்டுகிறது. சீதாவிடம் ஆதாரங்கள் ஏதுமில்லை. மீரத் சிறையில் நெருங்கிய தோழராக இருந்த பி சி ஜோஷிக்கு இது குறித்து சீதா கடிதம் எழுதுகிறார். நான் உன் சகோதரன் . பிலிப் என் அன்புத் தோழன். ஆவன செய்வேன் என பி சி ஜோஷி உறுதி தந்தார். மந்திரியாக இருந்த கே சி பந்திற்கு (ஜோஷியின் உறவினரும் கூட) பிலிப் குறித்து எழுதுகிறார். His wife deserves Nation's sympathy and support என்ற வேண்டுகோளையும் விடுத்தார். தன்னிடமிருந்த ஆவணங்களை

ஆதாரமாக்கி பிலிப் விடுதலைப் போராளி என சான்றிதழ் தந்து சீதாவிற்கு அனுப்புகிறார். மதராசில் உரிய அலுவலகத்தில் ஒப்படைக்கச் சொல்கிறார்.

மாதங்கள் சில கடந்ததும் ஆச்சர்யம் சீதாவிற்கு காத்திருந்தது. மதராஸ் அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகம் வந்து பென்ஷனை பெற்று போகச் சொல்லியது. சீதா மனதார பி சி ஜோஷிக்கு நன்றி தெரிவித்தார். அனைத்திற்கும் மேலாக அதிகாரபூர்வமாக விடுதலை வீரர் என்கிற அங்கீகாரத்தை தன் கணவர் பெற்றுவிட்டார் என அகமகிழ்ந்தார். 1971 மார்ச்சில் தான் பிலிப் மறைந்தார்.

இப்படி நம்மை அடிமைக்கொண்ட தேசத்தில் பிறந்த அம்மனிதர் இந்தியா வந்து நமக்காக போராடி நம்மூர் பெண்ணுடன் குழந்தைகளுடன் வாழ்ந்து சிந்தித்து ஏராளம் எழுதி மறைந்துள்ளார். அவர் குறித்த மேற்கண்ட பல செய்திகள் ராமச்சந்திர குஹா எழுதி 2022 ஜனவரியில் வந்துள்ள Rebels Against Rajல் காணப்படுகின்றன.

feb 25 2022

23. பிலிப் ஸ்ப்ராட் Blowing Up India (1955) புத்தக பக்கங்களிலிருந்து...

மீரட் சதி வழக்கு இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் மட்டுமல்லாமல் விடுதலைப்போர் வரலாற்றிலும் பேசப்படுகிற ஒன்று. காந்தியடிகள் சிறைக்கு வந்து இளம் கம்யூனிஸ்ட்களை பார்த்து சென்ற நிகழ்வும் நடந்தது. அவர்களிடம் வன்முறை வழிவேண்டாம் என்கிற அறிவுரையையும் அவர் சொல்லிசென்றார். பல மாதங்கள் நடந்த வழக்கில் 30 வளர்ந்து வந்த சிபிஅய் கட்சித்தலைவர்கள் இளம் மார்க்சியர்கள் விசாரணைக்கும் தண்டனைக்கும் உள்ளாயினர். 4 வருடங்கள் வழக்கு. அன்றைய செலவு மதிப்பீடு அரசாங்கத்திற்கு 20 இலட்சம் இருக்கலாம்.

அவர்களின் நீதிமன்ற உரைகள் தொடர்ந்து பேசப்படக்கூடியவைகளாக இருக்கின்றன. இங்கு கஷ்டங்கள்- சிறைஅனுபவிப்புகள் என்பதெல்லாம் இருந்தாலும் அவர்கள் சிறைக்குள் படிக்கவும் எழுதவும் விவாதிக்கவும் விளையாடவும் முடிந்த செய்தியை ஆதி மார்க்சியருள் ஒருவரான பிலிப் ஸ்ப்ராட் தருகிறார். அதிலிருந்து சில பகுதிகள்...

ஆரம்பத்தில் மூட்டைப்பூச்சியிடம் சிக்கிக்கொண்ட தனித்து வைக்கப்பட்ட செல் வாசம். பின்னர் வாரங்கள் சில கழிந்த பின்னர் அனைவரையும் ஒன்றாக large barrackல். நாங்களே சமைத்துக்கொள்ள அனுமதி. தினம் தலைக்கு 12 அணா செலவுத்தொகை. எங்கள் சமையலுக்கு உதவ இரண்டு கன்விக்ட்கள். துணிக்கான அலவன்ஸ் தனியாக தந்தனர். கோடைக்காலத்தில் மலைவாசஸ்தல சிறைக்கூடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டோம். புத்தகங்கள், பேப்பர்கள் அதிக சென்சாருக்குள்ளாகாமல் கிடைத்தன. செஸ், கார்ட்ஸ், டேபிள் டென்னிஸ், வாலி பால், கிரிக்கெட் கூட விளையாடினோம். எங்களை பார்க்க வருபவர்களுக்கு கெடுபிடியான கட்டுப்பாடுகள் இல்லை. தோழர்கள் திருமதி நம்பியார், பரத்வாஜ், ரணதிவே எங்களை பார்த்தனர். தோழர் ரணதிவே fire eater ஆவார் என நான் கருதவில்லை.

காங்கிரஸ் தலைவர்களை நாங்கள் பூர்ஷ்வாக்கள் என பலமுறை விமர்சித்திருப்போம். ஆனாலும் மோதிலால், டாக்டர் கிச்லு, திவான் சமன்லால் எங்களை காக்க முயற்சிகள் மேற்கொண்டனர். எங்கள் 31 பேரில் கம்யூனிஸ்ட்கள் ஒருபக்கமும் கம்யூனிஸ்ட் அல்லாதவர் ஒருபக்கமுமாக நின்று அரசியல் விவாதங்களை செய்துகொள்வோம்.

ஒருமுறை சிஅய்டி ஒருவர் என்னிடம் உங்களை இயக்குவது யார்- உங்கள் கம்யூனிச கற்பனை இராஜ்யத்தில் எவரிடம் ஆட்சி எனக்கேட்டார். நான் விவசாயி வசம் என்றேன். அவர் வேடிக்கையான முகபாவனையை வெளிப்படுத்தினார். என் அனுபவம் வேறு ஒன்றையும் என்னிடம் சொல்லாமல் இல்லை. Despite real devotion, the Communist leader is just as ambitious a careerist as any other politician.

Comintern தலைமை சரி என்றும் இந்திய தலைவர்கள்தான் தவறு என்றும் ஒருவர் மீதான மற்றவர் பொறாமையுடன் பேசிக்கொண்டோம். (இது குறித்து பிலிப் சொல்வதை அப்படியே தந்துவிடுகிறேன்.)

Joshi expressed some doubts about wisdom of the Comintern, but he was the only one todo so. My own feelings were not of doubt or criticism but of boredom..It is probable that Dange, a man who thinks for himself, saw this at the time, but we were on bad terms with himfor most of the jail period, and atone point expelled him, so we did not hear his views.

தன்னிடம் மாற்றம் உருவானதையும் வெளிப்படையாக பிலிப் பதிவிட்டுள்ளார்.அதில் சில வரிகள்

I had never felt comfortable about the dialectic..eventually I abandoned Communism not because of any personal experience, but because of a gradual loss of confidence in it, brought about mainly by reading..

Manfestly Marxism as a guide to practical activity needs an ethical theory, and yet Marx implicitly denied validity to ethics, and his modern followers did so explicitly.

இந்திய வரலாறு குறித்து நான்(பிலிப்) ஏராளம் சிறையில் படித்தேன். அது அய்ரோப்பிய வரலாற்றை போன்று இருக்கவில்லை. இங்கு அடிமைமுறை இல்லை. மார்க்சியர்கள் அனைத்து சிவிலிசேஷன்களும் ஒரே மாதிரியான படிவளர்ச்சி என புரிந்திருந்தனர். ஜோஷியின் பெரும் உதவியால் இந்தி கற்று மகாத்மா காந்தியின் ஆத்மகதா படித்தேன். எங்கள் வழக்கிற்கு உதவ வந்த சில வழக்கறிஞர்கள் எங்களுக்கு இந்தியா பற்றிய புரிதல் இல்லை எனச் சொல்வார்கள். காந்தியைப் படித்த பின்னர் அவர்கள் சொன்னது சரி எனத் தோன்றியது. புகழ்வாய்ந்த G D H Cole அரசியல் நையாண்டிகளை ஜோஷியும் நானும் பகிர்ந்து மகிழ்வோம். சிலர் சீரியசான விஷயங்களை கொச்சைப்படுத்தாதீர்கள் என கடிந்து கொள்வர்.

feb 15 2022

24. Gandhism An Analysis - பிலிப் ஸ்ப்ராட்

Gandhism An Analysis என்கிற புத்தகம் 1939ல் வந்த பழைய புத்தகங்களில் ஒன்று . 500 பக்கங்களுக்கு மேலான பெரிய புத்தகம். எழுதியிருப்பவர் இந்தியாவில் செயல்பட்ட ஆரம்பகால மார்க்சியர்களில் ஒருவரான இங்கிலாந்தை சார்ந்த பிலிப் ஸ்பிராட். 1929 மீரட் சதிவழக்கில் சிக்கியவர். தனது தகுந்த மார்க்சிய பயிற்சியுடன் காந்தி குறித்த ஆய்வை செய்துள்ளதாக பிலிப் ஸ்பிராட் தெரிவிப்பார். பிலிப் ஸ்ப்ராட் எம் என் ராய், ராஜாஜியின் சுயராஜ்யா பத்திரிகை என பல தடங்களில் தன் அரசியல் திசைவழிகளை வைத்துக்கொண்டதால் அவரின் இந்த புத்தகம் மார்க்சிய வட்டாரத்தில் பெரிதாக இ எம் எஸ் எழுதிய புத்தகம் போலவோ அல்லது ஹிரன் முகர்ஜியின் புத்தகம் போலவோ பேசப்படாமல் போனது. காந்தியை, மகாதேவ தேசாயை சந்தித்து உரையாடியவர் ஸ்பிராட்.

காந்தியைக் கண்டுணர்தல் மற்றும் தோழர் காந்தி எழுதும் போது இந்த புத்தகத்தை துணைக்கு வைத்துக்கொள்ள முடியாமல் போனது வருத்தமான ஒன்றே. முழுமையான வாசிப்பிற்கு பின்னர் ஸ்பிராட்டின் காந்தி என்பதை புரிந்துகொள்ளமுடியும் என நினைக்கிறேன்.

இங்கிலாந்தில்1939ல் மார்க்ஸ் வாழ்க்கை குறித்து இசையா பெர்லின் எழுதினார். அப்புத்தகம் இங்கு 1942ல் வெ சாமிநாத சர்மா கார்ல்மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றை எழுத உதவியது. இசையா பெர்லின் புத்தகம் இன்றுவரை மிகச் சிறந்த மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. அதேபோல்1942ல் வந்த வெ சா புத்தகமும் தமிழில் மார்க்ஸ் வாழ்க்கை குறித்த நல்ல புத்தகமாக கருத இடமுண்டு.

அதே 1939ல் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்து போராடிக்கொண்டு காந்தி குறித்து எழுதிய பிலிப் ஸ்பிராட்டிற்கு அப்படியொரு வெ சா அமைந்திருக்கவில்லை போலும். இல்லெயெனில் 1939 லேயே மார்க்சிய கண்ணோட்டத்தில் காந்தி குறித்து எழுதிய விரிவான புத்த்கம் தமிழர்களுக்கு தமிழில் கிடைத்திருக்கக்கூடும்.. இடதுசாரிகள் மத்தியில் பிலிப் ஸ்பிராட் தன் செல்வாக்கை வரலாற்று time line என்கிற வகையில் வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவரின் ஆக்கங்கள் பொதுவெளியில் எவ்வித விவாத கவனத்தையும் பெறவில்லை.

ராமச்சந்திர குஹா எழுதிய Rebels Against Raj கடந்த மாதம் வந்த புத்தகம். மற்றவர்களுடன் அதாவது வெளிநாட்டில் பிறந்து

இந்தியாவில் தங்கி போராடிய அன்னி பெசண்ட், மீராபென், ஹார்னிமேன் போன்றவர்களுடன்பிலிப் ஸ்பிராட்டை சேர்த்து அவரை rehabilitate செய்துள்ளார்.

பிலிப்ஸ்பிராட்டின் காந்தி குறித்தும் காந்தி கல்வி நிலைய நண்பர்கள் திரு அண்ணாமலை- சரவணன் பரிந்துரைத்த Rebels Against Raj குறித்தும் வாசித்தறிய காலம் எனக்கு அருள்கூறட்டும்.

feb 22 2022

25. காந்தியம்- பிலிப் ஸ்ப்ராட்

இந்தியாவின் ஆதி மார்க்சியரான பிலிப் ஸ்ப்ராட் 1939லேயே காந்தியம் குறித்த பெரும் ஆய்வை செய்துள்ளார். அதன் 90-95/525 பக்கங்களில் காணப்படும் பிலிப்பின் observations...

few paras from Gandhism an Analysis by Philip Spratt

"His (Gandhi) Conscience is the ultimate authority - his emphasis upon self reliance, self respect, independence, energy, thrift, fearlessness and other such virtues/ qualities of mind commonly go together with a greater or less degree of asceticism. In order to stand alone, to depend upon his own conscience, a man must have the self control and inner strength which an ascetic mode of life gives him..his asceticism is not only a training for himself, it is an example to the community...even he felt that addiction to sexuality was a restriction upon his freedom. This idea is evident in his repudiation of wealth..the desire to perform physical service may also derive from the feeling for equality.

Above all I believe, he would feel that self denial was necessary to save him from the danger of inner corruption to which his position exposed him...He must in compensation for his newly acquired glory be deprived of enjoyments - forced to adopt asceticism and made to humble himself- to assume poverty, manual labour...

தமிழாக்கம்:

"காந்திக்கு மனசாட்சி தான் இறுதி அதிகாரம் – அவர் வலியுறுத்திய தன்னம்பிக்கை, சுயமரியாதை, சுதந்திரம், ஆற்றல், சிக்கனம், அச்சமின்மை போன்ற மனப்பண்புகள் அனைத்தும் தவம் சார்ந்த வாழ்க்கையுடன் குறைந்தோ அதிகமோ தொடர்புடையவை. தனியாக நிற்கவும், தனது மனசாட்சியை மட்டுமே சார்ந்து வாழவும், ஒருவருக்கு தவ வாழ்க்கை தரும் சுயக் கட்டுப்பாடு மற்றும் உள்ளார்ந்த வலிமை அவசியம். அவரது தவம் தனக்கான பயிற்சி மட்டுமல்ல, சமூகத்திற்கான ஒரு முன்னுதாரணமும் ஆகும். பாலியல் ஆசையில் அடிமையாக இருப்பது தனது சுதந்திரத்திற்கு ஒரு கட்டுப்பாடாகும் என்று அவர் உணர்ந்தார். செல்வத்தை நிராகரித்ததில் இந்த எண்ணம் வெளிப்படுகிறது. உடல் உழைப்பைச் செய்யும் விருப்பமும் சமத்துவ உணர்விலிருந்து தோன்றியிருக்கலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தனது நிலைமையால் உள்மனக் கெடுதலுக்குள்ளாகும் அபாயத்திலிருந்து தன்னை காப்பாற்ற, தன்னடக்கம் அவசியம் என்று அவர் நம்பியிருப்பார். புதிய

புகழுக்கான ஈடாக, அவர் இன்பங்களை விலக்கிக் கொள்ள வேண்டும் – தவத்தை ஏற்கத் திணிக்கப்பட வேண்டும், தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் – வறுமையையும் கை உழைப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

Mr Gandhi's loin cloth corresponds to the aggressively unshaven chins of the Bolsheviks in the early years of their regime. The suppression of his personal pride is however I believe the main factor, and it will be agreed that this idea fits in what is known of Mr Gandhi generally.

Most noticeable is his tendency, whenever anything goes wrong, to fear that he has shown pride. His fasts on these occasions are in almost all cases described as means of humbling himself

...an enthusiastic psycho analysts might see sadism at the root of his whole policy- the rigorous regime to which he subjects the inmates of his ashrams, his ultimate aim- the maximum simplification of life and his method of satyagraha- suffering and sacrifice as the panacea.

I do not wish to exaggerate this side of his mind. Mr Gandhi is the kindly lovable person whom the world knows. But occasionally, yet unmistakably, this harshness shows itself "

தமிழாக்கம்:

"காந்தியின் கச்சை, போல்ஷெவிக் ஆட்சியின் ஆரம்ப காலங்களில் அவர்கள் காட்டிய தாடி வளர்த்த முகங்களுக்குச் சமமானது. ஆனால், அவரது தனிப்பட்ட பெருமையை அடக்குவது தான் முக்கியக் காரணம் என்று நான் நம்புகிறேன்; இது காந்தி பற்றி பொதுவாக அறியப்பட்ட கருத்துகளுடன் பொருந்துகிறது. மிகத் தெளிவாகத் தெரியும் விஷயம், ஏதாவது தவறாக நடந்தால், அவர் பெருமையை வெளிப்படுத்தியிருக்கிறாரோ என்று அஞ்சுவது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் மேற்கொண்ட நோன்புகள், பெரும்பாலும் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் முயற்சியாகவே விவரிக்கப்படுகின்றன.

ஒரு உற்சாகமான உளவியல் ஆய்வாளர், அவரது முழுக் கொள்கையின் அடிப்படையில் சாடிசம் இருக்கிறது என்று கூறக்கூடும் – அவர் ஆசிரம வாசிகளை கடுமையான ஒழுங்குக்குள் வைத்திருப்பது, வாழ்க்கையை மிக எளிமைப்படுத்தும் அவரது இறுதி இலக்கு, சத்தியாக்ரஹத்தின் முறை – துன்பமும் தியாகமும் ஒரு தீர்வாகக் கருதப்படுவது.

இருப்பினும், அவரது மனதின் இந்த பக்கத்தை நான் மிகைப்படுத்த விரும்பவில்லை. உலகம் அறிந்த காந்தி, அன்பான, நேசிக்கத்தக்க மனிதர். ஆனால், சில நேரங்களில், மறுக்க முடியாத வகையில், இந்தக் கடுமை வெளிப்படுகிறது."

dec 13 2025

26. மாவோ மிக சுருக்க அறிமுகம்

டெலியா டாவின் எழுதிய 'மாவோ மிக சுருக்க அறிமுகம்' சுவையான சிறு நூல். ஆக்ஸ்போர்ட் சிறு நூல் வரிசையில் 400க்கு மேற்பட்ட titles கொணர்ந்துள்ளது. 150-200 பக்கத்திற்குள் அறிமுகத்துடன், விவாதங்களை ஒழுங்கமைத்து தரக்கூடிய சிறப்பு தேர்ச்சி கொண்டவர்களை வைத்து இந்த very Short Introduction series வந்தன.

மாவோ குறித்து அர்ச்சனை பூ தூவும் நூல்களும், கடுமையான விமர்சன நூல்களும் ஏராளம் வந்தன. இப்பெண்மணி டெலியா சீனா வாசத்தின் வழி பெற்ற அனுபவத்தையும் பார்த்து கற்றவற்றையும், பல்வேறு ஆவணங்களின் வழியும், சுருக்கமாக அதே நேரத்தில் கச்சிதமாக இந்த 'மாவோ அறிமுகம்' நூலை எழுதியுள்ளார்.

மாவோவின் சில சுவாரஸ்யமான பண்புகளை அனுசரிப்புகளை , இந்நூல் வழி பார்த்த அளவில் ஓரிரண்டையாவது சொல்லத் தோன்றியது.

மாவோவின் மணவாழ்க்கையில் வந்த பெண்கள், அவர்கள் வழி பெற்ற குழந்தைகளை மாவோ முடிந்தவரை தன் அருகாமையிலேயே வாய்ப்புள்ள போதெல்லாம் வைத்திருக்க விரும்பியுள்ளார். அவர்களுடன் நேரம் செலவழிப்பது, மகிழ்ச்சியை தந்து தந்தையாக மகிழ்ச்சி அடைந்துள்ளார். அவருக்கு வயது வந்த மகன் தொடங்கி, குட்டிப்பெண் வரை வெவ்வேறு மனைவிமார்கள் மூலம் குழந்தைகள் இருந்தாலும், தந்தை பாசத்தை அவரால் அவரவர் வயதுகேற்ப தர முடிந்துள்ளது.

வெவ்வெறு affairகளில் மாவோ செல்கிறார் என்பதால் அப்பெண்கள் பிரிந்து சென்றாலும், அவர்கள் எங்கே எப்படி வாழ்கிறார்கள்- கஷ்டப்படுகிறார்களா, உதவி தேவைப்படுகிறதா என அவ்வப்போது பலர் மூலம் கேட்டறிபவராகவும் மாவோ இருந்துள்ளார். தனது கைவிடப்பட்ட குழந்தைகள் தெருக்களில் உழைக்கின்றனர், இன்னும் scavenger வேலைக் கூட பார்த்தனர் என்கிற செய்தியெல்லாம் அறிந்தபோது, தந்தையின் உள்ளமாக அவர் துயரப்பட்டிருக்கக்கூடும். அவர் சகோதரரின் குழந்தைகளையும் கூட தன் வீட்டில் வைத்துக்கொண்டிருந்தார் என்பதையும் அறியமுடியும்.

தனது மாமியார் ஒருவருக்குக்கூட பணம் அனுப்ப சொல்லியிருக்கிறார் என்கிற செய்தியைக் கூட டெலியா தருகிறார். தன் சொந்த ஊர் சார்ந்த

உற்றார் உறவினர் உதவி கேட்டு கடிதம் எழுதினால், தன் personal accountல் இருந்தால், உதவியாளர்களிடம் அனுப்பச் சொல்வாராம். இல்லையேல் through proper channel disposalக்கு அனுப்பச் சொல்லிவிடுவாராம்.

இப்படி இளகிய உள்ளத்தை காட்டிய டெலியா அவரின் toughness பகுதியையும் காட்டாமல் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக கட்சி, ஆட்சி இரண்டின் தலைமையையும் பெற்று, எதிர்ப்பே இருக்க முடியாத உயர் பீடமும் அவருக்கு அவர் வாழ்நாளில் அமைந்தது.

1949 புரட்சி, ஆட்சி அதிகாரம் பெற்ற நிலையில், வெளிநாட்டு அனுபவம் என ஏதுமில்லா மாவோ, மாஸ்கோவிற்கு ரயில் பயணம் மேற்கொண்டு மூன்று மாதம் தங்கி சீனா சோவியத் உறவுகளை வலுப்படுத்த முயற்சித்தார். சர்வதேச பார்வை என்பதெல்லாம் பேசப்பட்டாலும், ஸ்டாலினுக்கு ரஷ்யா மய்யப்பார்வையும், மாவோவிற்கு சீன மய்யப் பார்வையுமே தேவைப்பட்டதை மாவோ உணர்ந்தார். மாஸ்கோவில் தங்கியிருந்த மாதங்களில் இரண்டு மாதமாவாது ஸ்டாலினுடன் அடிக்கடி மாவோ சந்திப்பை பெற்றார். பின்னர் அதை மாவோ நினைவு கூர்கையில் , தினமும் ஸ்டாலினுடன் கடுமையாக விவாதங்களை மேற்கொண்ட சூழலே இருந்தது என்கிறார்.

அமெரிக்காவை முற்றிலும் நம்பாமல் இருக்க வேண்டாம், சோவியத்தை நம்பி மட்டுமே இருக்க வேண்டாம் எனச் சொன்ன பொலிட் ப்யூரோ உறுப்பினர்களும் , புரட்சியின் காலத்தில் இருந்தனர். புரட்சிக்கு முந்தி சம மதிப்பு இன்னும் சீனியராக இருந்த பல தலைவர்கள், மாவோ சொன்னதை தாண்டி ஏதும் சொல்ல முடியா நிலைக்கும் தள்ளப் பட்டனர். சூ என் லாய் கூட மாவோவின் எழுத்துக்கள் என பேச வேண்டியதானது.

புரட்சி அறிவிப்பும் அதிகாரம் எடுத்தலும் ஆன 1949ல் மாவோ இவ்வாறு பேசியதை அவரின் on the people’s Democratic Dictatorship என்பதிலிருந்து டெலியா தந்துள்ளார்.

“ Mao explained that for the moment the CCP would regulate capitalism, not destroy it. He acknowledged that the CCP would need help of professional people.

We have won the revolutionary war..but our past work is only the first step..we are compelled to do things we don’t know well. We must learn to do economic work from all who know how, no matter who they are. We must esteem them as our teachers”.

இந்திய விடுதலையின்போது, நேருவிற்கும் இப்படியான சோதனை நேர்ந்தது. பிரிட்டிசாரிடம் வேலைபார்த்த ICS திறமைசாலிகளை அவர்

பயன்படுத்த வேண்டியிருந்தது. தன்னை விமர்சித்தவர்களிடம் ஒன்றை நேரு தெளிவுபடுத்தினார். புரட்சி என்பதே கட்டுமானமல்ல. புரட்சிக்கு பின்னர் நடப்பதுதான் கட்டுமான வேலைகள் என்றார் நேரு.

கொஞ்சம் lighter veinல் மாவோவின் வேறு குணாதியசங்களைச் சொல்லி இந்த இடுகையை நிறுத்துகிறேன்.

மாவோ நீச்சல் பிரியர் எனச் சொல்பவர் உண்டு. ஆனால் அன்றாடம் குளிக்க அவருக்கு அவ்வளவு பிரியமிருக்காதாம். டவலிங் போதும் என்பாராம். பல்துலக்குவது என்பதைக் கூட வைத்துக்கொள்ளாதவராம். டீயால் கொப்பளித்து சுத்தம் செய்துகொள்வாராம். படுக்கை முறை ஏதுமிருக்காதாம். அடிக்கடி தூக்க மாத்திரை தேவைப்பட்டதாம். பிராங்காட்டிக்ஸ் இருந்தும் புகைப்பதை நிறுத்தாமல் இருந்தாராம். மலச்சிக்கல் பற்றி நெருங்கிய சகாக்களிடம் சொல்லி வேதனைப்பட்டதுண்டாம். இவ்வளவு உபாதைகள் இருந்தாலும், உடலை fit ஆக வைக்கவும் கம்பீரமாக காட்டவும் விழைவாராம்... சரி ஒவ்வொருவருக்கும் அவர் அவர்க்கான personal habits இருக்கத்தானே செய்யும்..

13-12-2025

may 2025

27. Naxalbari a frontier anthology

புரட்சிகர சிபிஎம்எல் - நக்சல்பாரி இயக்கத்தின் கட்டுமான காலம் குறித்து- பத்தாண்டு காலத்திற்கான தொகுப்பு ஒன்றை பிராண்டியர் வார இதழ் வெளியிட்டிருந்தது. சமர்சென் மற்றும் தோழர்கள் உழைப்பால் Naxalbari And After- a frontier anthology என்கிற இரண்டு வால்யூம்களை - ஏறத்தாழ 330 + 448 பக்கங்களில் அவர்கள் கொணர்ந்தனர்.

1967 புரட்சிகர ஒருங்கிணைப்புக்குழு- 1968 சிபிஎம் பர்துவான் பிளீனம், 1969ல் எம் எல் கட்சி உதயம்- சீனத்தொடர்புகள் - தொடர்ந்து கட்சியால்- வேறுபட்ட மாவோயிச நம்பிக்கை குழுக்களால் வெளியிடப்பட்ட சில முக்கிய அடிப்படை ஆவணங்களை இந்த anthology பேசுகின்றன.

முதல் வால்யூம் முழுக்க முழுக்க நக்சல்பாரிகளின் அன்றாட ஆபத்து நிறைந்த வேலைகள்- போலீஸ் தாக்குதல்கள்- சிறைக்கொடுமை மரணங்கள்- அரசு நிலைப்பாடுகள்- நக்சல்கள் செய்த பதில் தாக்குதல்கள்- அழித்தொழிப்பு வேலைகள்- வர்க்க எதிரியை ஒழித்தல்- முதலாளித்துவ நிலபிரபுத்துவ காலனிய கலாச்சார ஸ்தாபனங்களை அழித்தல்- பள்ளிக்கூடங்களைக் கூட எரித்தல்- கிரிஜன் ஹரிஜன் பகுதிகளில் ஆயுத மக்கள் குழுக்களை உருவாக்குதல் , துரோகிகளை கொல்லுதல் போன்ற பல்வேறு அம்சங்களை விரிவாக விவரிக்கும் பிராண்டியர் கட்டுரைகளின் பத்தாண்டு தொகுப்பாக அந்த வால்யூம்களைக் கொணர்ந்தனர். Turbulent decade என அவர்கள் அழைத்த அடிப்படை foundational years ஆக இதை நாம் பாவிக்கலாம்.

சிறை சித்திரவதைக் கொடுமைகள் குறித்த விரிவான பலபக்க கட்டுரைகள் மனதை பிசையும்- அச்சத்தில் நம்மை உறைய வைக்கும். ஏராள தோழர்கள், பெண்கள் உட்பட இப்படியான வதைகளில் தங்களை தியாகம் செய்துள்ளனர். அதேபோல் ஆயுதம் இருந்ததால் வர்க்க எதிரிகள் என தான் உறுதிபடுத்தியவர்களின் உயிர்களை எடுத்திருக்கும் காட்சிகளும் இந்த தொகுப்பில் இருக்கும்.

1944ன் , மாவோவின் நியு டெமாக்ரசியை எடுத்து - இந்தியாவில் 1948ல் உயர்த்தி பிடித்த தோழர்கள் ஆந்திரா கம்யூனிஸ்ட்கள் தான். மார்க்ஸ்- எங்கெல்ஸ்- லெனின் ஸ்டாலின் தந்த பாதைதான் மார்க்சிசம்- லெனினிசம், மாவோ டிட்டோ எல்லாம் விலகல்தான் என எதிர்த்து முதல் குரலை தந்தவர் பி டி ரணதிவே தான். 1948ல் ஜோஷியை கீழ் இறக்கி அதி வாய் வீச்சை அவர் இரண்டாம் காங்கிரசில் வைத்தார்.

சிபிஅய்க்குள் தொடர் விவாதங்கள் 1964ல் சிபிஎம் உருவாக்கம் என்கிற பிளவை நோக்கி சென்றது. சிபிஎம் க்குள் மாவோ- சீனா விவாதங்கள் எம் எல் உருவாக்கத்தை தந்தது

மீண்டும் 1967ல் மாவோவின் பாதை - சீனப்பாதை பேச்சு வந்தது. 1969ல் எம் எல் கட்சி உருவானது. அவர்கள் தங்கள் வாசிப்பில், கள அனுபவத்தில் எழுதிக்கொண்ட ஆவணங்கள்- குழு விவாதங்கள்- போன்ற எழுத்துக்களை இரண்டாவது வால்யூம் விரிவாகச் சொல்கிறது.

சாரு மஜூம்தாரின் 8 ஆவணங்கள் என்பதை அடிப்படை என்றனர். இன்னும் சில தோழர்கள் சேர்மன் சாரு- மாவோவிற்கு இணை என்றளவு ஏற்றவும் செய்தனர். இந்த ’சேர்மன்’ பதம் ஏதோவொருவகையில் அதிகார கிறக்கத்தை கம்யூனிஸ்ட் வட்டாரங்களில் தந்ததை உணரமுடியும். இங்கு கூட சேர்மன் டாங்கே என்கிற பேச்சு இருந்தது.

கனு சன்யால், நாகிரெட்டி, சந்திரபுல்ல ரெட்டி, நாகபூஷன் பட்நாயக், சத்திய நாராயண என்கிற பெயர்கள் ஓரளவிற்கு செல்வாக்கு பெற்றன. தேசபிராதி, லிபரேஷன் போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன.

once Naxalite - ever Naxalite

Rebellion is our birth right

chairman Mao- Chinese path

Armed revolution- annihilation of class enemies - liquidation - people's war

comprador capitalism

soviet imperialism

போன்ற பதங்கள் புழக்கத்தில் வரலாயின.

இரண்டாம் வால்யூமில் மாவோயிசம்- இரு பார்வைகள் என்கிற மல்லிகார்ஜூன ராவின் கட்டுரை ஆரம்பகால சிந்தனைகளை வெளிப்படுத்தும் முக்கிய கட்டுரை.

புரட்சிகர செயல்பாடுகளின் வழியே கட்சி கட்டுவதா, கட்சி அமைத்து புரட்சிகர செயல்பாடுகளா என்ற விவாதம் ஆரம்பத்திலேயே ஆந்திரா தோழர்களுடன் துவங்கிவிட்டது.

revolution cannot be victorious without a revolutionary party

you can build party only in the course of revolutionary struggle என்கிற விவாதம் இருந்தது. இதை குட்டி முதலாளித்துவ கற்பனாவாதம் என கனு சன்யால் நிராகரித்தார்.

சுத்த சுயம்பிரகாச புரட்சிகர கட்சி-தவறே இல்லாத கட்சி ஒன்றைக் கட்டுவது fantasy என்றனர் - revolutionary party revolutionary discipline இல்லாமல் உயர் ஆயுத போராட்டங்கள் இல்லை என்ற புரிதலில் 1969ல் கட்சியை அவர்கள் உருவாக்கி மே 1 அன்று ஊர்வலம் -கூட்டம் நடத்தினர்.

ஆரம்ப நாட்களிலேயே 4 கேள்விகள் அவர்களிடம் விவாதங்களாயின

On principal Contradiction

guerilla warfare the only struggle form

what about mass organisation and democratic struggle

Maoist party means secret organisation

கடந்த 50 ஆண்டுகளாக இந்த கேள்விகளும் விவாதங்களும் நின்றதுபோல் தெரியவில்லை.

இந்தியாவை அமெரிக்கா சோவியத் போன்ற ஏகாதிபத்தியங்களின் new colony என்று பேசிக்கொண்டனர்.

சிபிஎம் எல் - சிபிஎம் போலவே மக்கள் ஜனநாயகம் என்றே சொன்னது. தனது காங்கிரசை 8வது காங்கிரஸ் என்றே சொன்னது. ஆனால் ஆந்திரா தோழர்கள் புதிய ஜனநாயகம் என்றனர். தங்கள் கடமையென அவர்கள் எழுதிக்கொண்டது

the task of the new democratic revolution is to destroy imperialism, feudalism, compradar bourgeoisie and the bureaucratic capitalism- big bourgeosie and then to establish a new democratic state

CPIML தோழர்கள், செகுவாரா கொரில்லா மாடல் வேண்டாம் எனவும் பேசிக்கொண்டனர். விவசாயிகள் ஏழைகள் சுரண்டப்படுவோர் மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் அரசியல் போதனை அவசியம் எனவும் கருதினர்.

The party unit can fulfil this task only by organising guerilla war by poor and landless peasants..Guerilla war is the only tactic of the peasants' revolutionary struggle. this cannot be achieved by any mass organisation through open struggle

ஆந்திரா தோழர்கள் mass revolutionary rallies- mass armed struggle அவசியம் எனக் கருதினர்.

தொழிலாளிவர்க்கம் பொருளாதாரவாதத்தால் பீடிக்கப்பட்டுள்ள நிலையை மாற்றவே, ஊரகப்பகுதிகளில் ஆயுத போராட்டம் தேவை

என அவர்கள் கருதினர். The principal form is armed struggle என்பதை அழுத்தமாக இத்தோழர்கள் நம்பினர்.

முதல் வால்யூமில் மே வ, ஆந்திரா, கேரளா, பீகார்- சட்டிஸ்கர், மகாராஷ்ட்ரா, ஒரிஸ்ஸா போன்ற பல பகுதிகளில் நடந்த பல்வேறு எழுச்சிகளை சொல்லியுள்ளனர். இந்திரா அரசாங்கமானாலும், காங்கிரஸ் மாநில அரசாங்கங்களானாலும் எப்படி தாக்குதல்களை தந்தன என எழுதியிருப்பர். அதேபோல் இஎம்எஸ் அரசின், அச்சுதானந்தன் கால தாக்குதலும் சொல்லப்பட்டிருக்கிறது. இ எம் எஸ் எங்களை உள்ளே தள்ளியபோது, மே வ அமைச்சராக ஜோதிபாசு எங்களை விடுவிக்கவும் செய்தார் என்கிற பதிவும் இருக்கிறது. ஆனாலும் இவர்கள் அனைவரும் இந்திய புரட்சியை விட்டுக்கொடுத்தவர்கள் என்ற உணர்வும் அத்தோழர்களிடம். அமெரிக்கா போலவே சோவியத்தும் இந்தியாவை சுரண்டும் சமூக ஏகாதிபத்தியம் என வரையறுத்தனர்.

நக்சல்பாரி இயக்க அனுபவங்கள் குறித்து நேர்மறை- எதிர் மதிப்பீடுகளுடன் நூல்கள் இருக்கின்றன. அரசாங்க அறிக்கைகள் இருக்கின்றன.

ஏராள உயிர் தியாகங்களை செய்துகொண்டு, ஏராள உயிர்பலிகளை எடுத்துக்கொண்டும் , பல்வேறு ஒடுக்குதல்களை சந்தித்தும் முற்றிலும் வீழாமல் ஆங்காங்கே புதிய புதிய இளம் வீரர்களை உருவாக்கும் பெரும் ஆயுத குழுக்களாக இவ்வியக்கம் 55 ஆண்டுகளாக இருந்து வருகிறது. பொது இடதுசாரி நீரோட்டத்திற்கு வந்த லிபரேஷன் போன்ற இயக்கங்களும் உண்டு.

விடுதலை இந்தியாவில் மார்க்சிய இடதுசாரி இயக்க வரலாற்றில் நக்சல்பாரிகளின் வரலாறும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஆயுத வழியை விடுத்து, பொது நீரோட்ட மக்கள் திரள் ஜனநாயக பாதைக்கு வரக்கூடாதா என்ற விவாதங்கள் அவர்களுடன் நடக்காமல் இல்லை. எங்கள் சூழலில்- நாங்கள் போராடும் பகுதிவாழ் மக்கள் சூழலில் கொஞ்சம் இருந்து பாருங்கள் என்ற பதிலை அவர்கள் தந்துள்ளனர். அரசாங்கம் போலிசாருக்கு ஆயுதம் கொடுக்காமல் இருக்குமா- அதனால் புரட்சியாளர்களுக்கு ஆயுதம் கொடுக்க வேண்டியுள்ளது என்ற பதிலும் அவர்களிடம் இருக்கிறது. தங்கள் ஆயுத மக்கள் யுத்த பாதையில்தான் இந்திய மக்களை சுபிட்சம் நோக்கி அழைத்துச் செல்ல முடியும் என அவர்கள், எவ்வளவு சிறு குழுக்களாக- திட்டுக்களாக இருந்தாலும் நினைக்கின்றனர்.

விடுதலை இந்தியாவின் அரசாங்கங்கள் நக்சல் விஷயத்தில் அநேகமாக ஒரே மாதிரியே இன்றுவரை நடந்துகொண்டு வருவதையும் காணமுடியும். இப்போது ஆப்பரேஷன் ககர் போய்க்கொண்டிருக்கிறது.

ஆயுதம் என்பது அதன் வேலைக்கு உயிர்பலியை கேட்டுக்கொண்டே இருக்கும். அதற்கு வர்க்கம் இசம் என்பதெல்லாம் தெரியுமா .. கையில் வைத்திருப்பவர் தன் நம்பிக்கையில் எடுக்கின்ற முடிவைப் பொறுத்து பிறர் உயிர் தரிக்க முடியுமா இல்லையா என்பது அமையும்.

இந்த frontier anthology 750 பக்கங்களில் இவ்வியக்கத்தின் ஆரம்ப கொதிகால சூழல்களை சொல்லக்கூடிய வால்யூம்களாக இருக்கின்றன.

31-5-2025

sep 28 2022

28. சாரு மஜூம்தார்

சாரு பெரும் புரட்சிகரவாதி என்பதை பலர் அறிந்திருக்கலாம். பகத்சிங் பற்றி பல சுவையான தகவல்கள் உண்டு. பெரும் ரசனைக்காரர் அவர். சினிமா விரும்பி. காதலை கொண்டாடியவன்.

சாரு மஜூம்தார் குறித்தும் சுவையான செய்திகள் கிடைக்கின்றன. அவர் காசியில் பிறந்தவர். 1919 ஆண்டு உறுதி. ஆனால் மாதம் பெங்காலியில் ஜைஸ்தா அதாவது நாம் அறியும் மே- ஜூன்.

தந்தை பிரேஷ்வர் மஜும்தார் நல்ல படிப்பாளி. லாயர். பொய் சொல்லவேண்டியிருப்பதால் வக்கீல் தொழில் வேண்டாம் என ஆசிரியரானார். தாய் உமாசங்கரி. உமாசங்கரியை வக்கீல் பையன் எனக்கொடுத்த மாமனார் சந்திரமோகன் பெரும் சொத்துக்காரர். நிலப்பிரபு. இப்படி தொழிலைவிட்ட மாப்பிள்ளை என்ற வருத்தம் அவருக்கு. சொத்துக்கு ஆசைப்பட்ட உறவினர்களால் கடத்தப்பட்ட சந்திரமோகன் சாருவின் தாத்தா என்னவானார் - எவருக்கும் தெரியாமலேயே போனது.

சாருவை சிலிகுரி ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் படிக்க வைக்கிறார்கள். 7-8 வகுப்பில் சகவாசம் பள்ளியிலேயே சிகரெட் பிடிக்க வைத்தது. வாத்தியார் கையும் களவுமாக பார்த்துவிட்டார். பிற பையன்கள் இனி பிடிக்க மாட்டோம் என்றனர். சாருவோ சார் உங்கள் எதிரில் பிடிக்க மாட்டேன் என்றார்.

பரிட்சை ஹாலில் இருந்து சாரு ஒரு மணி நேரத்தில் பேப்பரை கொடுத்து விட்டு வெளியே வருகிறார். வாத்தியார் எல்லாம் எழுதினாயா என்கிறார். 40 மார்க் பாஸாகிவிடுவேன் என்கிறார் சாரு.

ஆனால் பள்ளி இறுதி தேர்வில் முதல் மாணவனாக வந்து பள்ளியின் பெயரையும் உயர்த்துகிறார். தந்தை ஏராள ஆங்கில புத்தகங்களை வீட்டில் வைத்திருந்தார். சாருவிற்கு பல பழக்கமாயின. தந்தை அந்த மாவட்டத்தின் காங்கிரஸ் கமிட்டி தலைவருமானார்.

சாருவிற்கு ஜெயபிரகாஷ் காங்கிரஸ் சோசலிச கட்சிபால் ஈர்ப்பு ஏற்பட்டது. அதன் வழியாக சிபிஅய் வந்து பின் சிபிஎம் அதில் போராடி நக்சல் இயக்கம் என அறியப்படும் எம் எல் இயக்கம் கட்டினார்.

இன்று பங்களாதேஷில் உள்ள பப்னா எட்வர்ட் கல்லூரியில் சேர்கிறார். புத்தகங்களை அப்படியே நண்பர்களிடம் கொடுத்துவிட்டு இயக்கவேலை என வெளியே வருகிறார்.

வடக்கு வங்கத்தில் சிலிகுரி பகுதியில் சிபிஅய் தலைவர் மாதப் தத்தா மிக முக்கிய விவசாயிகளின் தலைவராக அறியப்பட்டவர். அவர்தான் சாருவை கிராமங்களுக்கு சென்று விவசாயிகளை அணிதிரட்டவும் கட்சிக்கு கொணரவும் வழிகாட்டினார். சாருவும் வீடு திரும்பாமல் தொடர்ந்து மூன்று மாதங்கள் ஜல்பைகுரி சிலிகுரி சுற்றியுள்ள கிராமங்களுக்கு தன் தோழன் ஒருவருடன் நடந்தே செல்கிறார்.

நான்கு மொழிகளில் சரளமாக பேசும் ஆற்றலை தனது 20 வயதிலேயே அவர் வளர்த்துக்கொண்டார். பெங்காலி, இந்தி, ஆங்கிலம் தவிர வட வங்க பழங்குடிகள் மொழியான ராஜ்பங்ஷியும் பேசினார். அப்படித்தான் ஜதின் என்ற விவசாயி அவருக்கு பழக்கமானார்.

வட வங்க ஏழைகள் ஆண்டுற்கு மூன்று மாதம் அரிசி உணவைப் பார்ப்பவர்கள். சாருவோ தினம் சாப்பிட்டு பழகிய மத்தியதரவர்க்கம் சார்ந்தவர். கிராமத்தில் கிடைத்தவற்றை சாப்பிட்டு, ஆற்று பாலத்தில், மாட்டுகொட்டகையில் படுத்து மறுநாள் வேலைக்கு கிளம்பவேண்டும்.

ஜதின் இந்த டவுன் பாபுக்களை உபசரிக்க எண்ணி வீட்டிற்கு அழைக்கிறார். புழுங்கல் அரிசி கொதி மணம் துளைக்கிறது. ஜதின் பழங்குடி குழந்தைகள் ‘அய்யா என குதூகலித்து ‘ மணம் பிடிக்க வருகின்றனர். ஜதீன் விரட்டுகிறார். இன்று இந்த பாபுக்கள் விருந்தாளிகள் என்கிறார். சாரு வேண்டாம் , குழந்தைகள் சாப்பிடட்டும் என்கிறார். அப்போது சாருவிற்கு வயது 21. ஜதீன் இல்லை என வற்புறுத்துகிறார். சாருவின் கண் கலங்கியது.

திடிரெனெ சாரு தன் தோழனுடன் படுவேகமாக ஓடத்துவங்குகிறார். சில நிமிடங்கள் ஓடி களைப்பாகி இருவரும் நிற்கின்றனர். ஏன் சாரு இப்படி என தோழன் கேட்கிறார். ஏய் ரொம்ப பசி..ஜதீன் திரும்ப வலியுறுத்தியிருந்தால் சாப்பிட்டு தொலைந்திருப்பேன். குழந்தைகள் பாவம். வா வேறு எங்காவது ஏதாவது கிடைக்கிறதா பார்ப்போம் என தோழனுக்கு தன் வெட்கம் பிடுங்க உண்மை உரைக்கிறார்...

இப்படி ஏராள கனவுகளுடன் இந்தியாவில் புரட்சி என்ற தாகத்துடன் சொந்த வாழ்வில் துன்பம் தவிர ஏதுமறியா பெருமைக்குரியவர் ஏராளம். அவர்களின் கொள்கை நடைமுறையுடன் நாம் ஒத்துப்போகமுடியுமா என்பது வேறு விஷயம். மனிதன் தன் கனவிற்காக சுகம் தொலைத்து தன்னை துன்பத்தில் வதையில் ஆழ்த்திக்கொள்கிறான் என்பது பொதுவான உணர்வென்றால் , வாழ்க்கை எவரிடத்தும் ஏதோ ஒன்றை கற்க எனச் சொல்கிறது...

sep 30 2022

29. சாருவும் லீலாவும்

சிபிஅய் கட்சியில் நிலைமைகள் வேகமாக மாறுகின்றன. பொதுச்செயலர் ஜோஷி நீக்கப்பட்டு ரணதிவே பொதுச்செயலராகிறார். சோவியத் மாதிரி புரட்சி insurrection என தலைமறைவு கட்சி மார்ச் 9 1949 நாளை குறிக்கிறது. ஏதும் மக்களை அசைக்கவில்லை.

தெலங்கானா எழுச்சியை திரும்பபெறுவது குறித்து பெரும் விவாதங்கள் போய்க்கொண்டிருந்தன. மாவோவின் தலைமையிலான சீனப்புரட்சியின்பாற் ஆந்திர தோழர்கள் செல்வாக்குண்டனர். அவர்கள் ஆந்திர ஆவணத்தை தோழர் ராஜேஸ்வரராவ் தலைமையில் வைத்து சீன மாதிரி புரட்சி என்றனர். அவரும் பொதுச்செயலர் ஆனார். தொடர்ந்த விவாதங்கள், மாஸ்கோவில் ஸ்டாலின் சந்திப்பு என கட்சிக்குள் போராட்டங்கள் நடந்துகொண்டிருந்தன.

வாழ்க்கை என்றால் 24 மணியும் புரட்சியாகவே இருக்கமுடியாது என ஒருமுறை in every day's life என்பதில் டிராட்ஸ்கி 1920களில் எழுதியிருந்தார். அங்கு அன்பு, காதல் , பொறாமை வேறுவகை மகிழ்ச்சி உளைச்சல் எல்லாம் இருக்கத்தானே செய்யும். இதை பகத்சிங் தோழர்கள் மத்தியிலும் பார்க்கமுடிந்தது.

சாருவிற்கும் அப்படியொரு காதல் வாழ்க்கை அமையாமலா போகும். உயிரின் புரளல்கள் பலவகையில் bio instincts ஆக வெளிப்படாதா என்ன ... லீலா அப்படித்தான் சாரு வாழ்க்கையில் நுழைந்தார்.

தெபகா விவாசாயிகள் போராட்டம்தான் இருவரையும் பார்க்க வைத்தது. போராட்டக் களத்தில் கண்கள் அலைபாய்ந்தன. இருவரும் சிபிஅய் தொண்டர்கள். போராளிகள். பழக ஆரம்பித்தனர். 5 ஆண்டுகள் காத்திருப்பு எளிதானதல்ல. சாருவோ சிறையில் அவதி.

லீலா சற்று பருத்த கருத்த திரேகம். சாருவோ ஒடிந்து விழும் மேனி. சாருவிற்கு 1951ல் விடுதலை என அறிந்தவுடன் லீலாவிற்கு கல்யாணம் மணவாழ்க்கை எண்ணம் அதிகரித்தது. லீலா சென்குப்தா படித்த குடும்பத்திலிருந்து வந்தவர்.தந்தை ஹரேந்திரநாத் சென்குப்தா மாவட்ட போர்டின் டாக்டர் . பங்களாதேஷ் பகுதியிலிருந்து சிலிகுரிக்கு வந்த குடும்பம்.

சாருவிற்கு தந்தையிடம் அனுமதி பெற வேண்டுமே எனக் கவலை. லீலாவை தந்தை ஊர் காங் தலைவர் பிரேஷ்வரிடம் அழைத்து

செல்கிறார். யார் இது தந்தையின் உறுமல். லீலா சென்குப்தா. கல்யாணம் செய்ய விழைகிறேன் மகன் சாரு.

உனக்கு பிராம்மண பெண் ஒருத்தியை பார்த்து வைத்திருக்கிறேன் . சாதி தாண்டி என்றால் சமூகத்தில் பிரச்னை எனத் தந்தை. இல்லை. லீலாதான் என் வாழ்க்கைக்கு சாரு. அப்படியெனில் என் பிணத்தில் தான் நீ விழிக்க வேண்டும். சாருவும் லீலாவும் மனக்காயத்துடன் வெளியேறுகின்றனர்.

கட்சி அறிவிப்பு ஒன்றை வெளியிடுகிறது. ஜனவரி 9, 1952 மாலை 6 மணிக்கு முக்கிய கூட்ட நிகழ்வு. தோழர்கள் பங்கேற்கவும். சாரு லீலா திருமணத்திற்குத்தான் இப்படி ஒரு ரகசிய நோட்டீஸ்.

மணம் முடித்து லீலாவுடன் சாரு வீட்டிற்கு வருகிறார். ஏற்கனவே தாயார் புவனேஸ்வரி இறந்த வருத்தத்தில் தந்தை. தங்கை பேலா அண்ணியை அழைத்துக்கொண்டு போகிறார். காலில் விழுந்து

ஆசிர்வாதம் கோரியபோது ஏதும் சொல்லாமல் கோபத்தில் தந்தை.

லீலா உள்ளே போய் இரவு என்ன சாப்பாடு செய்யலாம் என ஆரம்பிக்கிறார். பிரேஷ்வருக்கு 'ஆஜாரம் ' தடுக்குமா என்ற மனப்போராட்டம். மனதை நிதானப்படுத்திக்கொண்டு வெளியே போய் பெரும் மீனை வாங்கி வந்து பேலா மூலம் மருமகளிடம் தருகிறார். 'ஆஜாரத்தை ' தூர எறிந்துவிட்டு சாப்பிடுகிறார்.

மறுநாள் கடை திறந்தவுடன் போய் விலை உயர்ந்த சில்க் புடவை வாங்கி வருகிறார். பிடித்திருக்கிறதா என பேலாவை விட்டு லீலாவிடம் கேட்கச் சொல்கிறார். லீலா நேராக தந்தையிடம் வந்து நான் வெள்ளை நிறம் மட்டுமே உடுத்துவதாகச் சொல்கிறார். உடனே பணத்தை எடுத்துக்கொடுத்து பிடித்த நிறத்தை வாங்கிக்கொள் என்கிறார்.

சில மாதங்களில் என் பௌமா அதாவது மருமகள் மகாலக்ஷ்மி போல என வருபவர்களிடம் சொல்லத்துவங்கினார். லீலா அன்பால் குடும்பத்தையும், கைக்குழந்தையுடன் தேயிலை தொழிலாளர்களையும் வென்றார் என்பது வரலாறாக...

Inputs Charu Majumdar The Dreamer Rebel by AshokeMukhopadhyay

oct 9 2022

30. சாரு காட்டிய பாதை

சாரு மஜும்தார் என்றாலே கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் அறிந்தவர்களுக்கு நக்சல்பாரி எழுச்சி, பின்னர் இந்தப் போராட்டத்திற்கு துணையாக நின்ற போராளிகள் சிபிஎம் கட்சியிலிருந்து வெளியேற்றம், புரட்சிகர தோழர்களின் ஒருங்கிணைப்புக்குழு

பின்னர் அதை சிபிஎம் எல் எனும் கட்சியாக்குதல் என்பதெல்லாம் பட்டுத்தெறிக்கும்.

நக்சல்பாரி பகுதி எழுச்சி, போலீஸ் ஒடுக்குமுறையை அடுத்து 1967 நவம்பரில்தான் AICCCR என்கிற ஒருங்கிணைந்த அமைப்பை 7 மாநிலங்களிலிருந்து வந்த தோழர்கள் அமைக்கின்றனர். மாவோ சிந்தனைகளின் வெளிச்சத்தில் என்பது உரக்க சொல்லப்பட்டது. முதலில் சிபிஎம் என்ற tag பயன்படுத்தப்பட்டு எதிர்ப்பு அமைப்பாகவே அது செயல்படலானது. மே 1968ல் சிபிஎம் ஒட்டு என்பது அவசியமில்லை என்கிற முடிவை எடுத்தனர்.

சிபிஅய், சிபிஎம் இரண்டின் மீதான விமர்சனங்கள் வைக்கப்பட்டது. நக்சல் எழுச்சியின் தள நாயகன் கனு சன்யால் அக்டோபர் 1968ல் கைது செய்யப்படுகிறார். போலீஸ் வேட்டை அதிகரிக்கப்பட்டது. சென்ற டிசம்பரில்தான் சாரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். அதே 1967ல் தான் சாரு, கனு, பிரமோத் சென்குப்தா, சௌரன் போஸ், சரோஜ் தத்தா போன்ற பலர் சிபிஎம் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

கனு, கோகன், குதன், தீபக் போன்ற தோழர்கள் காட்டுவழி தப்பி சீனா செல்வது என முடிவெடுத்து பெரும் துன்பங்களை சந்தித்தனர். சாரு 1967 லிருந்தே கட்சி ஒன்றின் தேவையை வலியுறுத்தி வந்தார். ஆனால் ஏப்ரல் 22 ,1969ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேதினம் அன்று வெளியுலகு எம் எல் கட்சியின் பிறப்பை அறிகிறது.

சாரு தோழர்களை உற்சாகப்படுத்தி பாதையைக்காட்டிட ஏராளம் தொடர்ந்து எழுதினார். புரட்சிகர கட்சி, ஆயுதப்பாதை, கிராமம் சார்ந்து இயங்குதல், அறிவுஜீவிகளையல்ல விவசாயிகளை நம்பி செயல்படுதல், எதிரிகளை அழித்தொழிப்பது , இரகசிய கட்சி , மாவோ சிந்தனைகள் போன்றவைகளை சொல்லும் கட்டுரைகள் எழுதினார். சீனப்பாதை நம் பாதை சீனத்தலைவர் நம் தலைவர் முழக்கங்கள் வைக்கப்பட்டன.

தேசபிரதி, லிபரேஷன் பத்ரிகைகள் கட்சியின் சார்பில் வந்தன. மாவோவின் ரெட் புக் இளைஞர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் சாருவின் மீது உடன் வந்த பல தோழர்கள் அதிருப்தி அடைந்தனர். போலீஸ் அடக்குமுறைகளில் பலர் பலியாயினர். சாரு எதிரியின் பலத்தை குறைத்து மதிப்பிட்டு விட்டார் என்ற விமர்சனங்கள் 1972ல் எழுந்தன.

நாகிரெட்டி முழுமையாக சீன கட்சியின் அதிகாரத்தை ஏற்காமல் இருந்தார். பிரமோத் சென்குப்தா தேர்தல் புறக்கணிப்பு ஏற்கமுடியாதென வெளியேறினார். பிப்ளவ கோப் பதே என தனியான புத்தகம் எழுதினார். சாருவின் arrogance என விமர்சித்திருந்தார். முக்கிய தோழர் அசித் சென் நகர்ந்தார். சத்யாநாராயண் சிங் தனித்த கட்சியை துவக்கினார். மற்றொரு தலைவர் சுசித்லால் ரே சௌத்ரியும் முரண்படலானார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பத்தில் பெரும் எதிர்பார்ப்புகளை வைத்திருந்தது. மாறுபட்ட குரல்களை நிதானமாக கவனித்து வந்தது. சீனத்தலைவர்களை சந்திக்க மூன்று பேர் கொண்ட குழு ஒன்றை அனுப்ப எம் எல் கட்சி முடிவு செய்தது.

1951 பிப்ரவரி 9ல் ஒன்றுபட்ட சிபிஅய் தலைவர்களான டாங்கே, அஜாய்,ராஜேஸ்வர், பசவபுன்னையா ஸ்டாலினை சந்தித்து அறிவுரை பெற்ற நினைவு விவரம் அறிந்தவர்களுக்கு வரலாம். அந்த விவாதம் தோழர் ஸ்டாலின் அறிவுரை ஆகியவற்றை revolutionaries democracy என்ற பத்திரிகை முழுமையாக வெளியிட்டிருந்தது. முன்னர் 1947ல் டாங்கே சோவியத் தலைவர்களை சந்தித்து சில ஆலோசனைகள் பெற்று வந்ததை தனியாக ஒரு முறை எழுதியிருந்தேன்.

சீனாவின் சூ என் லாய் அவர்களும் பொலிட்ப்யூரோவில் இருந்த காங் செங்கும் இங்கிருந்து சென்ற சௌரன் போஸை சந்தித்தனர். இந்த சந்திப்பு அக்டோபர் 29, 1970ல் நடந்ததாக அறிகிறோம். சரோஜ் தத்தாவும், சுனிதி குமாரும் செல்லமுடியாமல் போனது.

பேசுவதை எதையும் இப்போது குறிப்பு எடுக்கவேண்டாம், நன்றாக கவனித்து உள்வாங்க போஸிற்கு சூ என் லாய் அறிவுறுத்தினார். மாவோ மீது காட்டும் அன்பு மரியாதைக்கு நன்றி என்றாலும் நீங்கள் அவரை உங்கள் சேர்மன் என சொல்லியிருக்கக்கூடாதென்றார். அழித்தொழிப்பு என்ற பெயரில் கொலைகள் பற்றியும் விமர்சித்ததாக அறிகிறோம். கம்யூனிஸ்ட் கட்சிகளில் patriarchal party என ஏதுமில்லை.

சாருவின் சில பார்முலேஷன்ஸ் குறித்தும் நேர் செய்துகொள்ள காங் செங் அறிவுறுத்தினார்.

agrarian programme என்பதை உருவாக்கி தெளிவடையுங்கள் என்றார். உங்கள் கட்சியின் மீது மாவோவிற்கு மதிப்பு இருக்கிறது எனபதும் சொல்லப்பட்டது. போஸ் இந்தியா திரும்பி இந்த சந்திப்பை சொல்ல விரும்பினார். சாரு unwillingness கணக்கில்கொண்டு சொல்லப்படாமல் போனது.

அவ்வப்போது சில செய்திகளாக போஸ் அதை வெளிப்படுத்தலானார்.

பங்களாதேஷ் விடுதலை என்பதிலும் அங்குள்ள எம் எல் கட்சி நிலைப்பாட்டை இந்திய எம் எல் தோழர்கள் ஆதரித்தனர். அங்கு பாகிஸ்தான் முக்தி வாகினி இரண்டையும் விமர்சித்து வந்தனர். இந்தியா உள்நாட்டு விஷயத்தில் தலையிடுவது தவறு என்ற நிலைப்பாட்டை இங்கு தோழர்கள் எடுத்தனர்.

நக்சல் இயக்கம் அதன் தொடர்ச்சியாக உருவான எம் எல் அதன் அடிப்படையில் பெற்ற அனுபவங்களுக்கும் 50 ஆண்டுகள் முடிந்து போயுள்ளது. மக்கள் முன் அவர்களின் முன்னேற்றத்திற்காக என இந்தியா பல்வேறு சோதனைகளை கண்டு வரும் சமூகமாக போய்க்கொண்டிருக்கிறது...

செய்தி ஆதாரம் Charu Majumdar The Dreamer Rebel by Ashoke Mukhopadhyay

oct 26 2022

31. சாரு   அமைப்பு உள்முரண்

சாரு மஜூம்தார் வாழ்க்கை குறித்த அசோக் முகோபாத்யாயா புத்தகத்தின் இறுதி பகுதியில் Internal Feud என்ற சிறு அத்தியாயம் இருக்கிறது.

அமைப்புகளில் ஒரே நோக்கத்துடன் ஒன்றாக பணியாற்ற வந்தவர்கள் மத்தியில் மாற்றுக்கருத்துக்கள் வந்து அவை உஷ்ண விவாதமாகும்போது வசவுச் சொற்களும் முத்திரையிடல்களும் அவதூறுகளும் எப்படி அதிகமாகும்- சக தோழர்கள் மீது சந்தேக நிழலை படியச் செய்தலும், அவர்களால் எல்லாம் வீணாகிவிட்டது போன்ற பிரமை கூட்டலும் எப்படி அந்த எம் எல் இயக்கத்தோழர்கள் தலைவர்கள் மத்தியில் நடந்தது பற்றியும் அந்த அத்தியாயத்தில் பேசப்பட்டுள்ளது.

லெனினே முன்னொரு காலத்தில் மார்க்சிய போப் என கருதப்பட்ட காட்ஸ்கியை அவர் சோவியத் புரட்சி குறித்து எழுப்பிய கேள்விகளுக்காக ஒடுகாலி என விமர்சித்ததையும் அறிவோம். டிராட்ஸ்கிக்கும் புகாரினுக்கும் ஸ்டாலின் காலத்தில் பெரும் பட்டங்கள் வராமல் இல்லை.

இது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மட்டுமல்ல, எந்த இயக்கத்திலும் அதன் பெரும்பான்மைக்கு எதிராக செயல்படுபவர்கள் மீதும், அல்லது அந்த சிறுபான்மையினர் பெரும்பான்மை தலைமை மீதும் பரஸ்பர முத்திரை குத்தல்களையும் சாடல்களையும் செய்வதைக் காணமுடியும்.

பல தரப்பு வாத பிரதிவாதங்களை செவிமடுத்து புரிந்துகொள்ளும் அறிதல்முறை வளர்த்தெடுக்கப்படவில்லை. தனிநபர்களும் அதற்கான நேரத்தையும் பொறுமையையும் காட்டி கற்கமுடியவில்லை.

பொதுவாக எவரும் தன் கருத்துக்கு மாற்றான கருத்து வருவதை விரும்புவதில்லை. தான் ஓர் அமைப்பால் மிக உயரமான இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாக நினைப்பவர்களிடத்தில் அவர்கள் உயரத்திற்கேற்ப இந்த சகிப்புத்தன்மையின் அளவு எதிர் விகிதத்தில் அமைவதையும் காணமுடியும். முகநூல் உதாசீனங்களில் இதை நாம் அனுமானிக்கமுடியும்.

Dissent என்பது அதற்கான நியாயங்களுடன் வரும்போதும் கூட அதை அனுமதிக்காத நிலையையே பார்க்கமுடிகிறது. Dissent என்ற பெயரில்

அடாவடித்தனம், அமைப்பை சீர்குலைய செய்வது, அமைப்பு நடவடிக்கைகளை நடத்தவிடாமல் கூச்சலிடுவது போன்ற பெயரில் நடைபெறுவதை எந்த அமைப்பு தலைமையும் சகித்துக்கொள்வது கடினமானது. அதேபோல் மாறுபட்ட கருத்தை அடாவடித்தனமாக சொல்வதே புனித கடமை என சிலர் கொள்வதையும் காணமுடிகிறது. விவாதத்தில் பரஸ்பர மரியாதை கலந்த மொழி என்பது பழக்கமாகவேண்டியுள்ளது. கருத்து ஜெண்டில்மேன் எனும் லிபரலிசம் எதற்கு என கேட்பவர்களால் இதை ஏற்க முடியாமல் போகலாம்

அன்றாட அமைப்பின் செயல்பாட்டிற்கு சேதம் விளவிக்காமல், பதவி போராட்டங்களில் முன்வைத்துக்கொள்ளாமல் கருத்துருவாக்கத்திற்காக எழும்பும் Dissent களை அமைப்பின் தலைமை பெரும் ஆபத்தைப் போல எடுத்துக்கொள்வதும், சந்தேகங்களை அவதூறுகளை அந்த dissenters மீது பரப்புவதும் ஜனநாயக இயக்கத்திற்கு ஆரோக்கியமான பாதையாகாது என்று தோன்றுகிறது.

தோழர் நமரி சொன்னதை தந்துள்ளேன்

The ‘official’ tries to hoist the flag of arrogance on hearing the dissent and stamp its seal on it

nov 7 2022

32. சாருவின் இறுதிக்காலம்

இந்திய புரட்சி குறித்த பெருங்கனவுடன் இருந்த சாரு மஜூம்தாரின் இறுதி முடிவு குறித்து அசோக் முகோபாத்யாயா எழுதியுள்ளார்.

சிறைவைக்கப்பட்ட சாருவிடம் போலீஸ் அதிகாரிகளின் கேள்விக் கொடுமைகள் தினந்தோறும் நடந்தது. 1970-71 ல் அவரது மகள் அனிதாவிற்கு தந்தையை பார்க்க இருமுறைதான் வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

அனிதா நீ நன்றாக வளர்ந்துவிட்டாய் என்கிறார் வாஞ்சையுடன் தந்தை சாரு. சிறு வயதிலேயே அவளது தேவைகளை அவளே செய்துகொள்ள கற்றுக்கொடுத்தது அவர் மனதில் நிழலாடியது.

அப்பா எப்படியிருக்கிறாய் என அனிதா கேட்க not bad ம்மா என தந்தை பதில் தருகிறார். 5 நிமிடத்தில் போலீசார் முன்னிலையில் பிரியமான மகளும் தந்தையும் என்ன பேசிவிடமுடியும்.

சில நேரம் விசாரணைகள் இரவு 2 மணிக்கு கூட ஆரம்பித்து அவர் தூக்கத்தை கெடுத்து பலவீனமாக்கும் வகையில் நடக்கும். Annihilation of class enemies பற்றி சம்பந்தமற்ற கேள்விகள் அல்லது போலீசார் சம்பந்தம் என நினைக்கும் கேள்விகளாக அவை அமையும்.

மூன்றாவது வாய்ப்பில்தான் துணைவியார் லீலா, மகள்கள் அனிதா, மதுமிதா, மகன் அபிஜித் லால்பஜார் சிறையில் இருந்த சாருவைக் காண அனுமதிக்கப்படுகின்றனர்.

ஜூலை 27, 1972 இரவு 7.30க்கு உடல் சுகமற்ற சாருவை டாக்டர் அறிவுறுத்தலால் போலீசார் கல்கத்தா SSKM மருத்துவமனையில் அனுமதிக்கின்றனர். அதற்கு சில தினங்களுக்கு முன்னர் அவரிடம் 27 பக்க தட்டச்சு அறிக்கையைக்காட்டி கையொப்பமிட வற்புறுத்துகின்றனர். என்ன என சாரு கேட்டதற்கு சாருவின் அறிக்கை என புன்சிரிப்புடன் போலீசார் சொல்கின்றனர். சாரு மறுக்கிறார்.

ஜூலை 27 இரவு சேர்க்கப்பட்ட சாரு மருத்துவமனையில் ஜூலை 28, 1972 விடியற்காலை 4.50க்கு மறைகிறார். சாவிற்கு காரணம் heart disease and cardiac failure என சொல்லப்பட்டது. சாரு இதய நோயாளி என்பதை சிறையில் இருக்கும்போதே அனைவரும் அறிவர். நேரம் காலம் பார்க்காத நெடும் விசாரணைகள்,கோபத்தை ஏற்படுத்தும் பொறுமையை சோதிக்கும் கேள்விகள் அவரை மேலும் பலவீனப்படுத்தியிருந்தது. சிறை மருத்துவ வசதியில்

அவசரத்திற்கான ஆக்சிஜன் சிலிண்டரோ,அவருக்கு தேவைப்பட்ட pethidine வசதியோ இல்லையாம்.

பலநேரங்களில் இதயவலியை சொல்லியும் சொல்லாமலும் சாரு தாங்கி சிறைவாழ்க்கையை கடந்துள்ளார்.

CPI அதிலிருந்து CPM அதிலிருந்து CPI ML என்ற கட்சி உருவாகத்திற்காக, அதன் முதல் பொதுச்செயலராக சாரு விளங்கியவர். அவர் CPI (Maoist) என்றுதான் அழைக்க விரும்பினார். சகதோழர்களின் கருத்துக்களை செவிமடுத்து எம் எல் என்பதை அவர் உருவாக்கினார். அந்த இயக்கமும் பல்வேறு பிரிவுகளுடன் 50 ஆண்டுகள் பயணத்தை அனுபவத்தைக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறது.

சாரு எந்த புத்தகம் கையில் கிடைத்தாலும் அதனை உடன் முடிக்கும் பழக்கமுள்ளவராக இருந்தார். பிரஞ்சு சார்த்தர் அவரது துணைவியார் சிமோன் புத்தகங்களையும் படித்தார். Second sex, Being and Nothingness ஆகியவை அவருக்கு பிடித்திருந்தனவாம்.

இந்திய சங்கீதம் குறித்து அறிந்தவராகவும் அவர் இருந்தார். மேற்கு இசையை அவர் தெரிந்துகொள்ள விழைந்தார். மூன்று மாதங்களில் அவை குறித்து பேசும் அளவிற்கு அறிந்துகொண்டார். வங்க இலக்கியம் குறித்து மாணவர் பருவத்திலேயே கருத்து சொல்லும் அளவிற்கு விளங்கினார். அவருக்கு சரத்சந்திரரைவிட தாராசங்கர் பந்தோபத்யாயா பிடித்தவராக இருந்தார். அவர் காந்தியர் தெரியுமா எனக் கேட்டதற்கு இருந்தால் என்ன என்றவர் சாரு.

தேசத்தின் மக்கள் சோசலிச சமூகம் ஒன்றில் சுரண்டலின்றி வாழ பெரும் ஆயுத புரட்சி - மாவோயிசம் என்ற பாதையை தேர்ந்தெடுத்ததில் அவருடன் ஒருவர் மாறுபடலாம். ஆனால் அந்தக் கனவை மனதில் தேக்கி வைத்தவர், அதற்காக வாழ்நாளின் சுகங்களை துறந்து தன் வாழ்க்கையை risk ஆக்கிக்கொண்டவர் என்ற வகையில் இந்திய மக்களின் வீரர்களில் ஒருவராக சாருவும் நிற்கிறார்..

may 22 2025

33. தேவை விவாதம்

இந்திய இடதுசாரிகள் தொடர்ந்து இந்திய நக்சல் இயக்க மாவோயிஸ்ட் தோழர்களுடன் சித்தாந்த மற்றும் அரசியல் விவாதங்களை கூர்மைப்படுத்த வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது.

ஆரம்ப நாட்களில் தோழர்கள் மொகித்சென், பிரகாஷ் காரத் போன்றவர்கள் ஓரளவு இந்த விவாத கிடங்கிற்கு உதவினர். தோழர் வினோத் மிஸ்ரா தொடங்கி, இன்று திபங்கர் பட்டாசார்யா போன்றவர் CPI- CPM உடன் CPML தோழர்களும் அரசியல் திசையை முன்னெடுக்க முடியும் எனக் காட்டி வருகின்றனர். லிபரேஷன் தோழர்கள் முடிந்த அளவு , மற்ற குழுக்களுடன் விவாத பரப்பை முன் எடுத்தனர்.

அரசாங்க தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பொறுப்பான பல தோழர்களின் உயிர்ப்பலிகள் கவலையளிக்கின்றன. எவ்வளவு உயர்வான வேலையை, புனிதக் கடமையை அத்தோழர்கள் செய்வதாக நினைத்து சகல தியாகங்களுக்கும் தங்களை முன் நிறுத்திக்கொண்டாலும், ஆயுத வழி- வன்முறை தாக்குதலுக்கு, இந்தியா போன்ற நாட்டில் கோடானு கோடி மக்களின் ஆதரவை பெறமுடியாது என்றே தோன்றுகிறது.

ஆயுத வழி விடுதலைப் போராக - சோசலிச யுத்தமாக அவர்கள் ஆங்காங்கே சிறு குழுக்களாக- பிரதேச அல்லது பகுதிவாரி மக்கள் ஆதரவை பெற்றதாகக் கருதினாலும், அவ்வழி நீடித்த நிலைத்த போர்- annihilation பெரும் பாதிப்புக்களையே இதுவரை தந்துள்ளதாகத் தோன்றுகிறது.

நக்சல் இயக்கம் பிறந்து 50 ஆண்டுகளுக்கு மேலான அதன் முன்னோடிகளின் சாரு- கனு சன்யால்- நாகி - கொண்டப்பள்ளி போன்ற பலரின் தியாக வாழ்க்கை, அவ்வியக்கத்தின் பாதைதனை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தருணம் அதிகரித்து வருகிறது என்றே தோன்றுகிறது.

காடு மலைகளில் , இந்திய மக்களின் பெருங்கனவை சுமந்துகொண்டு, சொந்த வாழ்க்கைக்கான சுகங்களை முற்றிலும் தியாகம் செய்து, ஆயுத வழியே என்கிற பாதையை அவர்கள் தேர்ந்தெடுத்ததை, சௌகரியமாக உட்கார்ந்துகொண்டு என் போன்றவர் விமர்சிக்க முடியாது என நான் உணர்கிறேன்.

கொஞ்சம் மார்க்சிய இலக்கியங்களை, இயக்கங்களை கவனித்து வருபவன் என்கிற வகையில், இந்தியாவில் 56 ஆண்டுகள் நக்சல் இயக்கம் என்பது நீண்ட காதைதான்...ஆனாலும் ஏராள இளைஞர்களை காவு கொடுத்த பாதையாக இருக்கிறதே என்கிற அரசியல் கவலைகள், சொல்ல வேண்டியுள்ளது.

அரசாங்கமும் அவர்களை அழித்தொழிப்பது என்பதை பிரதானப்படுத்தாமல், சில முக்கிய குழுக்களுடனாவது , கோரிக்கைகள்- தீர்வுகள் என வெளிப்படையாக பேச்சு வார்த்தை நடத்துவது நல்லது. அரசாங்கத்தால் உணரமுடியா, மக்களின் வேதனையை, மொழியை இத்தோழர்கள் ஆங்காங்கே வெளிப்படுத்தி வருகின்றனர் என்கிற புரிதல் அரசாங்கத்திற்கும்- அதிகார வர்க்கத்திற்கும், போலீசாருக்கும் இருப்பது நலம் பயக்கும்.

போராடக்கூடியவர்களும் அந்நிய நாட்டவர் அல்லர். பாதை சரியில்லை என அரசாங்கம் கருதினாலும், அவர்களுடன் தொடர்புகொண்ட அறிவுஜீவிகள்- அரசியல் தலைவர்கள் ஆளுமை கொண்டவர்களை மீடியேட்டர்களாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது. அர்பன் நக்சல் என்ற விமர்சனங்களை சுமப்பவர்களே இதற்கு உதவக்கூடியவர்களாக இருப்பர்.

இடது சாரிகள் தொடர்ந்து ideological debate யையும் மேற்கொள்வதும் அவசியமாக தோன்றுகிறது.

april 26 2024

34. திபங்கர் பட்டாசார்யா சிபிஎம் எல் லிபரேஷன் - பேட்டி

திபங்கர் பட்டாசார்யா சிபிஎம் எல் லிபரேஷன் பொதுச்செயலர். அவரது பேட்டி மெயின்ஸ்ட்ரீம் இதழ் ஏப்ரல் 20,2024ல் வந்துள்ளது. வினோத்மிஸ்ராவை அடுத்து அக்கட்சியின் பொதுச்செயலராக மிக இளம் வயதில் திபங்கர் பொறுப்பேற்றார். வர்க்கப்போராட்டம் குறித்த கேள்வியும் கேட்கப்பட்டிருந்தது. அதற்கு அவர் அளித்த பதில்

I think ‘class struggle’ remains a much misunderstood concept in India. Class struggle is the struggle of the exploited and oppressed classes against the dominant class power which controls the state, the economy and also dominates in the realm of ideas. The caste system and patriarchy are two key pillars of this class power in India. If class power permeates all spheres of social life, struggle against the dominant class power will also have to challenge every aspect of that domination.

We can broadly classify politics in three or four broad categories. The dominant politics has been the ‘politics of management’, managing the existing order. In a despotic dispensation, this management takes place through all-out suppression, through erosion and decimation of democracy. This is what we are experiencing today in Modi’s India.

Against this politics of management we uphold what you may call the politics of transformation. There is also the popular politics of representation. In a vast and diverse country like India, and in a society like ours with a deeply entrenched caste order and consequent pattern of social exclusion, marginalisation and oppression, politics of representation also acquires a transformational aspect.

Class struggle has to be grasped and pursued in this dynamic and live political context. Marxism has never seen class struggle as mere economic struggle. Politics is ultimately the concentrated expression of economics, but in class struggle, Marxism places politics in command and combines diverse components and dimensions of struggle — economic and social, cultural and political — in an integrated framework of class struggle.

தமிழாக்கம்:

"‘வர்க்கப் போராட்டம்’ என்ற கருத்து இந்தியாவில் இன்னும் பெரிதும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். வர்க்கப் போராட்டம் என்பது சுரண்டப்பட்ட, அடக்கப்பட்ட வர்க்கங்கள், அரசையும், பொருளாதாரத்தையும், சிந்தனைகளின் உலகையும் கட்டுப்படுத்தும் ஆதிக்க வர்க்க அதிகாரத்திற்கு எதிராக நடத்தும் போராட்டம். இந்தியாவில் சாதி அமைப்பும், ஆணாதிக்கமும் இந்த வர்க்க அதிகாரத்தின் இரண்டு முக்கிய தூண்கள். வர்க்க அதிகாரம்

சமூக வாழ்வின் எல்லா துறைகளிலும் ஊடுருவியிருப்பதால், அதற்கு எதிரான போராட்டமும் அதன் ஆதிக்கத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் சவாலுக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது.

அரசியலை மூன்று அல்லது நான்கு பரந்த வகைகளாகப் பிரிக்கலாம். ஆதிக்க அரசியல் என்பது 'மேலாண்மை அரசியல்' – நிலவும் ஒழுங்கை நிர்வகிப்பது. ஒரு அடக்குமுறை ஆட்சியில், இந்த மேலாண்மை முழுமையான அடக்குமுறையாலும், ஜனநாயகத்தின் சிதைவாலும், அழிவாலும் நடைபெறுகிறது. இதையே நாம் இன்று மோடியின் இந்தியாவில் அனுபவிக்கிறோம்.

இந்த மேலாண்மை அரசியலுக்கு எதிராக, நாம் 'மாற்றத்தின் அரசியல்' என்று அழைக்கக்கூடியதை நிலைநிறுத்துகிறோம். மேலும், 'பிரதிநிதித்துவ அரசியல்' என்ற மக்கள் அரசியலும் உள்ளது. இந்தியா போன்ற பரந்த, பல்வகைமிக்க நாட்டில், ஆழமாக வேரூன்றிய சாதி ஒழுங்கும், அதனால் உருவான சமூக விலக்கலும், புறக்கணிப்பும், அடக்குமுறையும் உள்ள சமூகத்தில், பிரதிநிதித்துவ அரசியல் கூட மாற்றத்தின் அம்சத்தைப் பெறுகிறது.

வர்க்கப் போராட்டம் இந்தச் சுறுசுறுப்பான, உயிரோட்டமிக்க அரசியல் சூழலில் புரிந்துகொள்ளப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். மார்க்சியம், வர்க்கப் போராட்டத்தை ஒருவகை பொருளாதாரப் போராட்டமாக மட்டும் பார்த்ததில்லை. அரசியல் என்பது இறுதியில் பொருளாதாரத்தின் செறிந்த வெளிப்பாடு. ஆனால் வர்க்கப் போராட்டத்தில், மார்க்சியம் அரசியலை முன்னிலைப்படுத்துகிறது; பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் ஆகிய பல்வேறு கூறுகளையும் பரிமாணங்களையும் ஒருங்கிணைந்த வடிவில் இணைத்து, வர்க்கப் போராட்டத்தின் கட்டமைப்பில் அமைக்கிறது."

அடுத்த ஒரு கேள்வி காங்கிரஸ் எதிர்ப்பு என்பதில் துவங்கிய உங்களைப் போன்ற சிறிய கட்சிகளின் அரசியல் பயணத்தில் தடைகள் என பார்க்கும் அனுபவங்கள் குறித்தது. மேலும் பாஜக வளர்ச்சி என்பதைப் பற்றி..அதற்கு திபங்கர் கொடுத்த பதிலிலிருந்து..

The saffron agenda has been on the ascendant for almost four decades. The shift in India's economic and foreign policies since the early 1990s only helped this rise. Today the Sangh brigade has emerged not just as an aggressive champion of Hindutva, but also as the staunchest supporter of corporate power and a pro-US pro-Israel foreign policy.

No single party or ideology that has grown organically in India in the course of the freedom movement or in the post-independence decades is in a position to independently defeat this fascist offensive. We need an effective and dynamic united front. All major ideological streams and political trends will have to find ways to deal with this situation and answer the challenge

தமிழாக்கம்:

"சுமார் நாற்பது ஆண்டுகளாக 'காவிமய (சாஃப்ரன்) திட்டம்' உயர்ந்து கொண்டே வருகிறது. 1990களின் தொடக்கத்தில் இந்தியாவின் பொருளாதார மற்றும் வெளிநாட்டு கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றம் இந்த உயர்வுக்கு மேலும் துணைபுரிந்தது. இன்று 'சங்க்' படை, தீவிரமான இந்துத்துவ ஆதரவாளராக மட்டுமல்லாமல், நிறுவன அதிகாரத்தின் உறுதியான ஆதரவாளராகவும், அமெரிக்கா-இஸ்ரேல் ஆதரவு கொண்ட வெளிநாட்டு கொள்கையின் வலுவான பின்தொடர்பாளராகவும் உருவெடுத்துள்ளது.

சுதந்திரப் போராட்டத்தின் காலத்திலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய தசாப்தங்களிலும் இந்தியாவில் இயற்கையாக வளர்ந்த எந்தக் கட்சியும், எந்தக் கொள்கையும் தனித்தனியாக இந்தக் காப்புரிமை (ஃபாசிஸ்ட்) தாக்குதலை வெல்லும் நிலைமையில் இல்லை. ஒரு பயனுள்ள, உயிரோட்டமிக்க, இயக்கமிக்க ஐக்கிய முன்னணி அவசியம். அனைத்து முக்கியக் கொள்கைத் திசைகளும், அரசியல் போக்குகளும் இந்த நிலையை எதிர்கொள்ளும் வழிகளைத் தேடி, சவாலுக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது."

தேர்தல் அரசியலின் எதிர்காலம் என்ன என்கிற கேள்விக்கு திபங்கர்

A multiparty parliamentary democracy and a more or less credible track record of five-yearly elections have been the two basic features of India's flawed democracy. Ambedkar was forthright in indicating the contradictions that would continue to haunt India's Constitution — the contradiction between the equality of one vote for every citizen and the massive inequality in social and economic realms. Mounting social and economic inequality would render electoral equality meaningless beyond a point.

In India, even the electoral system has now started becoming dysfunctional — the combination of a compromised Election Commission, unmitigated corporate funding through opaque electoral bonds, non-transparent system of electronic voting machines, and a propagandist media has greatly eroded the credibility of India's elections.

These elections are perhaps India's last chance to check democratic India's descent into an electoral autocracy.

"பல்கட்சி நாடாளுமன்ற ஜனநாயகமும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல்களின் குறைந்தபட்ச நம்பகத்தன்மையுள்ள வரலாறும், இந்தியாவின் குறைபாடுகளுடன் கூடிய ஜனநாயகத்தின் இரண்டு அடிப்படை அம்சங்களாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு வாக்கு என்ற சமத்துவத்துக்கும், சமூக மற்றும் பொருளாதார துறைகளில் நிலவும் மிகப்பெரிய அசமத்துவத்துக்கும் இடையிலான முரண்பாடு இந்திய அரசியலமைப்பை தொடர்ந்து துரத்தும் என்று அம்பேத்கர் தெளிவாகக் குறிப்பிட்டார். அதிகரித்து வரும் சமூக மற்றும் பொருளாதார அசமத்துவம், தேர்தல் சமத்துவத்தை ஒரு கட்டத்திற்கு அப்பால் அர்த்தமற்றதாக மாற்றுகிறது.

இந்தியாவில் தேர்தல் அமைப்பே இப்போது செயலிழக்கத் தொடங்கியுள்ளது — சமரசப்பட்ட தேர்தல் ஆணையம், வெளிப்படையற்ற தேர்தல் பத்திரங்கள் மூலம் கட்டுப்பாடற்ற நிறுவன நிதியுதவி, வெளிப்படையற்ற மின்னணு வாக்கு இயந்திர அமைப்பு, மற்றும் பிரச்சார ஊடகம் ஆகியவை இந்திய தேர்தல்களின் நம்பகத்தன்மையை பெரிதும் சிதைத்துள்ளன.

இந்த தேர்தல்கள், இந்திய ஜனநாயகம் தேர்தல் அடக்குமுறைக்குள் சரிந்து விடுவதைத் தடுக்க இந்தியாவுக்கு கிடைத்திருக்கும் கடைசி வாய்ப்பாக இருக்கலாம்."

10 ஆண்டுகளுக்கு முன்னர் தோழர் குருதாஸ்தாஸ்குப்தா முக்கிய கருத்தொன்றை அச்சப்படத் தக்க வகையில் வெளிப்படுத்தினார். அப்போது அவர் எதிரில் தோழர் எஸ் எஸ் ஜி , பட்டாபி உட்பட சிலர் இருந்தோம். வலதின் தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும் என்றார். எங்களால் அதை உள்வாங்கி உறைய வைக்கமுடியவில்லை. ஏன் இப்படிச் சொல்கிறார் எனப் பேசிக்கொண்டோம்.

இந்த தேர்தலில் திபங்கர் கடைசி பாராவில் சொல்லும் last chance to check India's descent into an electoral autocracy என்பது பலராலும் இன்னும் அதிகமாக அச்சத்தை மிக அதிகமாக்கும் வகையில் பேசப்படுகிறது. தலைமை தாங்கி தடுக்கவேண்டிய சக்தி கொண்ட காங்கிரசே இந்த அச்சத்தை அதிகமாக்குவதைப் பார்க்க முடிகிறது . ஏன் எல்லாம் முடிந்துவிடும் இனி இரங்கற்பா தான் என்கிற அவநம்பிக்கை அதிகமாகி வருகிறது எனத் தெரியவில்லை. மக்கள் ஏராள

இழப்புகளை சந்தித்தாவது ஹிட்லர் போன்றவர்களை முடிவிற்கு கொண்டு வந்த வரலாறும் இருக்கிறதே. எச்சரிக்கை என்பது அவநம்பிக்கை இரங்கற்பா என ஆக வேண்டுமா எனத் தெரியவில்லை.

எங்கள் தொழிற்சங்கத்தில் இப்படி ஓவர் பயமுறுத்தல் செய்த அனைவரையும் தோழர் குப்தா கடுமையாக எதிர்கொண்டு, சக தோழர்களுக்கு நம்பிக்கை தந்தே பலவற்றை சாதித்தார் என்பதை இந்நேரத்தில் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

feb 18 2025

35. ஆர் பி தத் (1896-1974) - இந்தியாவின் உற்ற தோழர்

ரஜனி பாமி தத் என்கிற பெயர் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுடன் கலந்து போன பெயர். குறிப்பாக விடுதலைக்கு முன்னரான கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் பெரும் பாத்திரமாக இருந்த பெயர்.

லண்டன் ஒரப்பகுதி கிராமம் ஒன்றில் அக்கால நம்மூர் ‘ ஒரு ரூபா’ டாக்டர் போல, ஏழைகளின் மருத்துவராக இருந்தவர் உபேந்திர கிருஷ்ண தத். அவர் ஸ்வீடிஷ் பெண் ‘அன்னா பாமியை ‘ மணந்து கொண்டார். கிளமன்ஸ் பாமி தத், ரஜனி பாமி தத் என்கிற அவர்களது இரு மகன்களும் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தாலும், கம்யூனிஸ்ட்களாலும் மறக்க முடியா மனிதர்களாயினர்.

ரஜனி என்றால் இரவில் பிறந்தவன் எனப் பொருள். அம்மாவின் பாமி , அப்பாவின் தத் சேர்ந்து அவர் ரஜனி பாமி தத் ஆனார். இந்தியாவில் ஆர் பி தத் என அறியப்படலானார். தோழர்களால் ரஜி என அழைக்கப்பட்டார்.

கல்லூரி காலத்திலேயே , சோவியத் தாக்கத்தால் அவர்கள் புரட்சிகர இயக்கம் நோக்கி சாய்ந்தனர். கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் நாயக இளைஞர்களாகவும் வளர்ந்தனர். ஆர் பி தத் ‘லேபர் மன்த்லி’ தொடங்கி 53 ஆண்டுகள் அதன் எடிட்டராக ஏராளம் எழுதி குவித்தார். சிபிஜிபி என்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழுவில் செயல்பட்டார்.

ஷாபுர்ஜி சக்லத்வாலா, எமிலி பர்ன்ஸ், ஹாரி பொலிட் போன்றவர்கள் கூட்டாளிகள். சக்லத்வாலாவும் தத்தும் ஒருவரையொருவர் நேசித்த தோழர்கள். 1922ல்வெளியான எம் என் ராயின் India in Transition, 1926ல் வெளியான தத்தின் Modern India இரண்டும் அப்போதைய அறிவுசார் இளம் கம்யூனிஸ்ட்களுக்கு பொக்கிஷங்களாயின. இந்தியா குறித்த மார்க்சிய ஆய்வு நூல்களாக அவை பார்க்கப்பட்டன.

பிரிட்டிஷ் கட்சியில் அப்போதிருந்த இளம் தோழர்களில் சிலர் - சார்லஸ் அசிலே, ஜார்ஜ் அலிசன், பென் பிராட்லி, பிலிப் ஸ்ப்ராட் போன்றோர் இந்தியா வந்தனர். இங்கிருந்த இளம் குழு தோழர்களுடன் ஸ்ப்ராட் தொடர்பு கொண்டு மீரத் சதி வழக்கில் சிறைக் கொடுமையையும் அனுபவித்தார். சிங்காரவேலர் பேத்தியையும் மணந்து, இந்தியாவிலேயே வாழ்ந்து மறைந்தார். அது தனி வரலாறு.

இங்கிலாந்திற்கு படிக்கப்போன ஏராள இந்திய இளைஞர்கள் மார்க்சியம் பக்கம் திரும்பினர். ஆர் பி தத்திற்கும் இதில் பெரும் பங்குண்டு. அவர்களில் பலர் பெரும் பொறுப்புகளில் பின்னர் அமர்ந்தனர். அவர்களில் சிலர் டி ஆர் காட்கில், எஸ் சி சர்கார், ஜோதிபாசு, ஹக்சர், மோகன் குமார மங்கலம், இந்திரஜித் குப்தா, புபேஷ் குப்தா, என் கே கிருஷ்ணன், பெரோஸ் காந்தி, நிகில் சக்கரவர்த்தி, ரேணுகா, ஹஜ்ரா பேகம், டாக்டர் அகமது, தேவி பிரசாத் சட்டோ, திலிப் போஸ், ஜகதீஷ் குப்தா எனச் சொல்லலாம்.

அப்போதெல்லாம் கோமிண்டர்ன் (மூன்றாவது அகிலம்) என்ன எழுதி அனுப்புகிறதோ அதுதான், அனைத்து கம்யூனிஸ்ட்களுக்கும் பாடத்திட்டம். வேறு பிரதியை நினைத்துக்கூட பார்க்க முடியாது. மெத்த படித்த இந்த அனைத்து இளைஞர்களும், சோவியத் மகுடியில் முழுமையாக மனதை கொடுத்தனர். முளைவிட்ட இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் , ஸ்டாலின் பேசிய அறிக்கைகளும், கோமிண்டர்ன் அறிக்கைகளும் தான் road map.

எம் என் ராயின் தாக்கம் நீங்கிய நிலையில், பிரிட்டிஷ் தோழர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு கூடியது. தத் முக்கிய வழிகாட்டியாக வரலானார். ஹிட்லரின் பாசிசத் தன்மை உணரப்பட்ட நிலையில், கோமிண்டர்ன் டிமிட் ராவ் அறிக்கை வழியே, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களில் அய்க்கிய முன்னணி என்கிற கோட்பாட்டை முன்னெடுத்தது. இந்தியாவிலும் காங்கிரசுடன் இணைந்து என்கிற அறிவுரையை டிமிட் ராவ் முன் வைத்தார். இதற்கு முன்னால் இருந்த, காந்தி- காங்கிரஸ் குறித்த விமர்சன பார்வையில் கொஞ்சம் தணிவு ஏற்படலானது. தத்தும் பிற கம்யூனிஸ்ட்களைப் போலவே காந்தியை 'ரீ ஆக்ஷனரி ' எனத்தான் எழுதி வந்தார்.

ஆறாவது கோமிண்டர்ன் வழிகாட்டல் , மிக மோசமான இடது குறுங்குழு வாதம் நோக்கியே , இந்தியாவில் கம்யூனிஸ்ட்களை அழைத்துச் சென்றது. தத் அக்கூட்டத்திற்கு செல்லாவிடினும், அவர் இந்த செக்டேரியன் நிலைப்பாட்டை மிக அதிகம் உயர்த்திப்பிடித்தவர் என பார்க்கப்பட்டார். ஸ்டாலினின் ஊதுகுழல் எனப் பெயர் எடுக்கும் அளவு அவரது எழுத்துக்கள் சென்றன. இந்த தாக்கம் இந்திய கம்யூனிஸ்ட்கள் மீதும் பரவியது. காந்தியும் காங்கிரசும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாயினர். இந்திய தல நிலைமை குறித்த அறியாத்தனத்தால் விமர்சிக்கப்பட்டு வந்த காலமிது.

1936ல் இன்றும் கட்சி வட்டாரத்தில் புகழ் வாய்ந்த சொற்றொடராக இருக்கும் Dutt- Bradley thesis வெளியானது. ஆர் பி தத் மற்றும் பென்

பிராட்லி பெயரில் வந்த ஆவணப்படி, காங்கிரசுடன் சேர்ந்து உள்ளிருந்து வேலை செய்வது என்ற திசை பின்னர் உருவானது. இளம் பி சி ஜோஷி பொதுச் செயலராகி, இதை முன்னெடுக்கலானார்.

இந்த சூழலிலும் வங்கத் தோழர்கள் தங்கள் செக்டேரியன் பாதையை விடாமல் league against Gandhism- fight the reactionary and bourgeois ideology of Gandhism' என்று இயங்கியதாக சோம்நாத் லாகிரி நினைவு கூர்ந்துள்ளார். சோம்நாத் லாகிரி மட்டுமே ஒராண்டு அரசியல் அமைப்பு அவையில் கம்யூனிஸ்ட்கள் சார்பில் இருந்தவர்.

மாஸ்கோ சென்ற கிளமன்ஸ் தத் , ஹாரி பொலிட், பென் பிராட்லி அங்கே வந்திருந்த அன்றைய காங்கிரஸ் சோசலிஸ்ட் தலைவர் மினு மசானியை சந்தித்து CSP- CPI இடது கட்சிகளின் நெருக்கம் குறித்து, அணி குறித்து உரையாடினர். கிளமன்ஸை, ரஜனி தத் என மசானி அப்போது தவறாக புரிந்து கொண்டார். கம்யூனிஸ்ட்களிடம் அவநம்பிக்கை வைத்திருந்த மினு மசானி இரு நிபந்தனைகளை விதித்தார். சிபிஅய்யை கலைத்துவிட்டு காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேரவேண்டும். கோமிண்டர்ன் இணைப்போ, உத்தரவுகளோ கூடாது என்பன நிபந்தனைகள். இது நடைபெறாது என அவர் அறிவார்.

இந்தியாவில் ஆங்காங்கே காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள் கம்யூனிஸ்ட் தோழர்கள் இயங்கத்தொடங்கினர். நம்பூதிரிபாத், ராமமூர்த்தி, ஜீவா போன்றோரை இப்படி சொல்லமுடியும்.

காங்கிரசில் மாறுபட்டு 'பார்வேர்ட் கட்சியை ' தொடங்கிய நேதாஜி left consolidation platform ஒன்றை உருவாக்கினார். எம் என் ராய், ஜேபி, நரேந்திரதேவ், பி சி ஜோஷி, நேதாஜி என பெரும் குழாம் சிறிது காலம் சேர்ந்தும் , பின் ஒருவரை ஒருவர் நம்பாமல் செயல்பட்டு , ஒற்றுமையை குலைத்துக்கொண்டனர்.

சுவிட்ஜர்லாந்தில் 1936 ல் நேருவை சந்தித்த ஆர் பி தத், காங்கிரஸ் இயக்கம், கம்யுனிஸ்ட் கட்சியை தோழமையாக பார்த்து வளர உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நேரு மார்க்சியத்தை ஆழமாக கற்றவராக தெரியவில்லை என்றாலும், அதன் மீது emotional attachment அவருக்கு இருப்பதாக தத் மதிப்பிட்டார். நேரு மீது தத்தின் தாக்கம் இருந்ததை, அவர் இந்தியா திரும்பிய உரைகள் காட்டின என்கிற பேச்சு இருந்தது. சிபிஅய் மத்திய கமிட்டி ஜூலை 1936 அறிக்கையில், காங்கிரஸ் மேடையிலிருந்து கணிரென ஒலித்த நேருவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல் என இதனை பதிவிட்டது.

லக்னோ காங்கிரசில் நேருவின் தலைமையுரையை- 12 பக்க அளவில் முழுமையாக தத் ‘லேபர் மந்த்லியில்’ வெளியிட்டார்.

அதேபோல் நேதாஜியிடமும் சிறிய அளவு செல்வாக்கை தத்தால் உருவாக்க முடிந்தது. வியன்னாவில் இருந்து The Indian Struggle நூலை எழுதிய நேதாஜியிடம் கம்யூனிஸ்ட்கள் மீது கடும் விமர்சனம் இருந்தது. அவர்கள் தேசியத்திற்கு விரோதமானவர்கள், நாத்திகர்கள், மத விரோதிகள் என நேதாஜி விமர்சித்து வந்தார். நேரு கூட இந்த ‘கம்யூனிச பாச வலையில்’ இருக்கிறார் எனக் கூட பேசினார். லண்டனில்1938ல் நேதாஜி இருந்தபோது, தத் அவரை சந்தித்து உரையாடினார். தத் தலைமையில் நேதாஜி பேசுகிற கூட்டங்கள் அமைக்கப்பட்டன.

அதற்கு பின்னர் டெய்லி ஒர்க்கர் பத்திரிகை பேட்டியில், நேதாஜி விடுதலை இந்தியா சோசலிச பாதையையே தேர்ந்தெடுக்கும் என்றார். இந்த தாக்கத்தை அவர், காங்கிரசிலிருந்து வெளியேறி இடது மேடை ஒன்றை அமைக்கும்வரை இருந்ததைக் காண்கிறோம்.

1940ல் ஆர் பி தத் எழுதிய India Today பெரும் புகழை ஈட்டிய புத்தகமாக இன்றுவரை இந்திய கம்யூனிஸ்ட்களால் உணரப்படுகிறது. அப்புத்தகம் இந்தியாவில் தடை செய்யப்பட்டு, இரகசியமாக பெறப்பட்டு படிக்கப்பட்டது. இந்தியா குறித்த மேம்பட்ட மார்க்சிய புரிதலாக அது பாவிக்கப்பட்டது.

1939ல் இரண்டாம் உலகப்போரை ‘ஏகாதிபத்திய யுத்தம்- நாடுகளை பங்குபோட வளங்களை கொள்ளையாக்கிட போர்’ என்றுதான் இந்திய கம்யூனிஸ்ட்களும் பார்த்தனர். சோவியத் யூனியன் போரில் இங்கிலாந்து அமெரிக்க அணியில் இறங்கியவுடன், பாசிசத்திற்கு எதிரான ‘மக்கள் யுத்தம் ‘ என்ற நிலையை எடுத்தனர்.

கட்சி தடை காலத்தில் , தலைவர்கள் சிறைக் காலத்தில் , கூடி விவாதித்து முடிவு என்பது பிரச்சனையாக இருந்தது. தத் ‘மக்கள் யுத்தம் ’ என எழுதிய கட்டுரைகள் உடனடியாக இங்கு தாக்கத்தை உருவாக்கவில்லை. ஆறுமாதம் ஏதோவொரு வகையில் முடிந்த விவாதங்களை மேற்கொண்டு, மக்கள் யுத்தம்- பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டிற்கு இந்திய கட்சியினர் வந்தனர். குவிட் இந்தியாவிலும் 1942ல் பங்கேற்கவில்லை என்ற விமர்சனத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட்கள் உள்ளாயினர். ராஜாஜி, அம்பேத்கர், பெரியார் , இந்து மகா சபா உட்பட எவரும் குவிட் இந்தியாவை ஆதரிக்கவில்லை - குவிட்

இந்தியாவிற்கு எதிராகவே நின்றனர். ஆனாலும் விமர்சனக் கணைகள் கம்யூனிஸ்ட்கள் மீதே அதிகம் விழுந்தன.

பாகிஸ்தான் தீர்மானத்தை முஸ்லீம் லீக் 1940ல் நிறைவேற்றியது. தொடர்ந்த ஆண்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட்களும், சுயநிர்ணய உரிமை பார்வையில் இத்தீர்மானத்திற்கு ஆதரவு நிலை எடுத்தனர். புகழ் வாய்ந்த ‘அதிகாரி தீசிஸ் ‘ அறிந்தவர் இதை உணர்வர். 1946ல் ரஜனி பாமி தத் இந்த நிலை ஏற்புடையதல்ல என எழுதலானார்.

1946ல் இந்திய கம்யூனிஸ்ட்கள் ‘17 அரசியல் அசெம்பிளிகள்’ என தீர்மானித்தனர். லண்டனில் இருந்த டாங்கேவிற்கும் தந்தி அனுப்பப்பட்டு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இப்படி ஒரு தீர்மானத்தை கொணரக் கோரினர். தோழர் டாங்கே தந்தியை தோழர் தத்திடம் காட்டினார். தத் ‘மய்யப்பட்ட ஒரே அரசியல் நிர்ணய சபை தான் ‘ தீர்வாக இருக்கும். 17 என்று கோரினால் இந்தியா என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும் என்கிற எச்சரிக்கையை செய்தார். லேபர் மந்த்லியிலும் ஒரே ‘மய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபை ‘ என எழுதி , இங்குள்ளவர்களுக்கு வழிகாட்டினார்.

அதேபோல் இந்தியாவை பிளவுபடுத்தும் மவுண்ட்பாட்டன் திட்டத்தை அவர் ஏற்கவில்லை.

இந்தியா வந்த பாமி தத் - காந்தி, நேரு, படேல், ஆசாத்,ஆசப் அலி, ராஜாஜி போன்றவர்களை சந்தித்தார். காங்கிரஸ் - கம்யூனிஸ்ட்கள் சேர்ந்து தோழமையுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டினார். காங்கிரசின் ‘பாஸ், இரும்பு மனிதன்’ என கருதப்படும் படேலுடன் தான் அதிக நேரம் விவாதிக்க வேண்டியிருந்தது என தத் குறிப்பிட்டுள்ளார். பெதிக் லாரன்ஸ் தூதுக்குழு வந்த 1946 மார்ச்சில், டெய்லி ஒர்க்கர் பத்திரிகையாளராக தத் இந்தியப் பயணம் இருந்தது. தனது தந்தையின் மூதாதையர் இடமான கல்கத்தா சென்று மகிழ்ந்தார். தொழிலாளர் கூட்டங்களில் உரையாற்றினார். மே தின பேரணியில் பங்கேற்றார். கல்கத்தா தோழர்களின் அன்பில் திளைத்தார்.

அதேபோல் தன்னை சந்தித்த சோசலிஸ்ட் தலைவர் மது லிமாயிடம், 1947 நவம்பரில், காங்கிரசை விட்டு நீங்கள் வெளியே போவது நல்லதல்ல என எடுத்துரைத்தார் தத். நேருவிற்கு ஆதரவான சக்திகள் வெளியேறுவது, படேல் போன்றவர்களையே பலப்படுத்தும் என அவர் கருதினார்.

1948ல் தோழர் ரணதிவே தலைமையில் மீண்டும் குறுங்குழு வாதம் கட்சியைப்பற்றியது. பெற்ற விடுதலையை ஏற்கவில்லை. அதிவீர நிலைப்பாடுகளால் , லட்சம் உறுப்பினர்களை தொட்ட கட்சி பெருமளவு சரிந்து 20 ஆயிரம் என்றானது. தத் நேருவின் வெளிநாட்டு கொள்கையை பாராட்டி எழுதினார். திரும்பவும் கட்சி நிதானமடைய அவரின் கருத்துக்கள் உதவின. இந்திய கம்யூனிச இயக்கம் பற்றி புகழ் வாய்ந்த நூல் எழுதிய ஓவர் ஸ்ட் ரீட்- விண்ட்மில்லர், 1951 கட்சி திட்ட வரையறைகளில் ரஜனி பாமி தத் செல்வாக்கு இருந்ததாக மதிப்பிட்டுள்ளனர்.

பின்னொரு காலத்தில் டாங்கே இவ்வாறு நினைவு கூர்ந்தார். மிக முக்கியமான கட்சி வரலாற்று கட்டங்களில் எல்லாம், ஆற்றுப்படுத்த தத் நம்மோடு நின்றுள்ளார் . எம் பி ராவ் எடிட் செய்த கட்சி வரலாற்று ஆவணம் இப்படி பதிவை செய்தது.

“On so many critical the CPGB and Palme Dutt had corrected us- the three party letters of 1933, Dutt Bradley Thesis 1936, after Hitler attack, criticism on our wrong stand with regard to Muslim League and finally his letter to Andhra comrade in 1949”

1959ல் கேரளா இ எம் எஸ் ஆட்சி கலைக்கப்பட்டபோது, நேருவை விமர்சித்தார் தத். 1962 இந்திய சீனா போரை , தொடர்ந்த 1964 கம்யூனிஸ்ட் இயக்க உடைவை அவர் துரதிருஷ்டமான நிகழ்வுகள் என வருந்தினார்.

தத் தனது மார்க்சிய பயிற்சியால், இந்தியத் தோழர்களுக்கு துணையாக நின்றார். சோவியத்தை ஸ்டாலினை உயர்த்திப் பிடித்தார். இந்திய மக்களின் விடுதலைக்காக ஓயாமல் குரலை லண்டனில் கொடுத்து வந்தார். அவர் காந்தியை கடுமையாக விமர்சித்தவர்தான். அதே நேரத்தில் லண்டனில் அவர் தேர்தலில் நின்றபோது, 1945ல் மகாத்மாவின் ஆசியை கோரினார். காந்தியும் வெற்றிபெற நல்வாழ்த்துகள் என்கிற செய்தியை அனுப்பியதாகவும் அறிய முடிகிறது. ஹங்கேரி 1956, செக் 1968 சோவியத் தலையீடுகளை தத் வரவேற்பவராகவே இருந்தார். அவர் அதை நியாயப்படுத்தியது விமர்சனமானது. அப்போது கம்யூனிஸ்ட்களுக்கு இருந்த ஒரே பற்றுக்கோல் சோவியத்தாக இருந்தது.

தத் Labour Monthly ல் பெரும் அறிஞர் பெருமக்கள் எழுதி வந்தனர். இந்தியா குறித்தும் ஏராள கட்டுரைகள் வந்தன. மார்க்சியம், சோவியத் பற்றி எழுதப்பட்டது. காந்தியின் கட்டுரை கூட அதில் இடம் பெற்றது. அவர் எழுதிய Britain, India and Swaraj அதில் வந்தது. இந்தியத் தோழர்கள்

சட்டோ (சரோஜினி நாயுடு சகோ) , எம் என் ராய்., கிருஷ்ண மேனன், சக்லத்வாலா, பி சி ஜோஷி, டாங்கே, சர்தேசாய், என் எம் ஜோஷி (தொழிற்சங்க தலைவர்) , ஷேக் அப்துல்லா போன்றவர் எழுதியுள்ளனர்.

உலக அறிஞர்கள் பலர் அதில் பங்களித்தனர். பெர்னார்ட் ஷா, ரொமயின் ரோலந்த், எமிலி பர்ன்ஸ், ரால்ப் பாக்ஸ், ஸ்ட் ராட்சி, கார்ல் ராடெக், மெளரிஸ் டப், ஒலாப் பாமி, , நெக்ருமா, பால் ராப்சன், புகாரின், கிளாரா ஜெட்கின் எனச் சிலரை சொல்லலாம்.

லண்டனில் வாழ்ந்த தத், இந்தியா குறித்து விடாமல் சிந்தித்தவராக இருந்தார். இப்படி 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளின் பெரும் பகுதியை செலவழித்த மனிதர், இந்தியாவில் கம்யூனிஸ்ட் அல்லாதார் மத்தியில் ஏனோ போய் சேரவில்லை. விடுதலைக்கால அனைத்து தலைவர்களுடனும் தன் விவாதத்தை நடத்தியவராக தத் இருப்பதைக் காணமுடிகிறது.

லேபர் மன் த்லி இதழ்கள் இணையத்தில் கிடைக்கின்றன. இந்தியாவில் அவருக்கு நெருக்கமாக இருந்த திலிப் போஸ் அவர் பற்றி எழுதியுள்ளார். சக்லத்வாலா பற்றி எழுதிய டாக்டர் பஞ்சனன் ஷாகா ரஜனி பாமி தத் குறித்து தனி நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கிய தத் மறைந்து (1974) அய்ம்பது ஆண்டுகள் ஆன நிலையில், அவர் குறித்த சில செய்திகளை எழுதத் தோன்றியது.

18-3-2025

aug 17 2023

36. ஜீவா – ஈரோட்டு பாதை குறித்து..

தோழர் ஜீவாவின் முழு திரட்டை என் சி பி எச் 2007 ல் கொணர்ந்தார்கள். இரு பாகங்களாக 1938 பக்கங்களில் கொணரப்பட்ட அத்தொகுப்புகளுக்கு பேரா அரசு பதிப்பாசிரியர்.

2002ல் சந்தியா பதிப்பகம் ஜீவாவின் கட்டுரையான 'ஈரோட்டுப் பாதை சரியா' என்பதை சிறு வெளியீடாக பேரா அரசின் முன்னுரையுடன் கொணர்ந்தனர். சுயமரியாதை இயக்கத்திலிருந்து , காங்கிரஸ் சோசலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி என பயணித்த ஜீவா, சுயமரியாதை இயக்கம்- பெரியாரின் கருத்துக்களை முன்வைத்து இதில் எதிர்வினையாற்றிருப்பார். அதில் உப்பு சத்தியாகிரகத்தை பெரியார் ஏற்காததை ஜீவா சுட்டிக்காட்டியிருப்பார்.

பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறையை கண்டித்து தீர்மானம் போடவேண்டும் என சில சுய மரியாதை இயக்க இளைஞர்கள் கோரியபோது, ஆர்.கே சண்முகம் அவர்கள் தலைவராக தனது தீர்ப்பைச் சொன்னார். சுயமரியாதை இயக்கம் 'அரசியலில் கலக்கலாமா' என்ற முடிவு இருந்தால்தான் தீர்மானத்தையே எடுத்துக்கொள்ள முடியும் என்றார். பெரியார் உடனே சு.ம.இ 'அரசியலில் கலக்ககூடாது' எனச் சொன்னதால் , தீர்மானத்திற்கு இடமில்லாமல் போனதை ஜீவா இதில் சுட்டிக்காட்டியிருப்பார்.

அரசியலில் பங்கேற்பதில்லையானால், நீதிக்கட்சி வெற்றிக்கு (காங்கிரஸ் தேர்தலில் பங்கேற்கும் முன்னர்) பெரியார் காரணம் எனச் சொல்வது சரியாகுமா என்கிற தொனியிலான கேள்வியை ஜீவா இதில் எழுப்பியிருப்பார்.

1932 தஞ்சை மாநாட்டில் வருத்தமுற்ற முனுசாமி நாயுடு விலக நேர்ந்தது. பொப்பிலி அரசரை நீதிக்கட்சி தலைவராக்கியதுடன், முதலமைச்சரும் ஆக்கினர். இவருக்கு சுயமரியாதைக்காரர்கள் தஞ்சையில் ஆதரவு தந்ததை கேள்விக்குள்ளாக்குவார் ஜீவா.

குடியரசுப் பதிப்பகம் சோசலிசம், உழைப்பாளிகளுக்கு ஏன் உலகமில்லை என்ற சிறு நூல்களை நரசிம்மன், சிவசாமி ஆகியோர் எழுதி வெளியிட்டது. இருவரும் ஆரியர்கள் . இது ஆரிய சூழ்ச்சி எனப் பெரியார் அப்போது நல்லவேளை சொல்லவில்லை என்கிறார் ஜீவா.

பொப்பிலி நீதிக் கட்சி ஆட்சியில்தான் பெரியார் எழுதிய 'இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்' என்பதற்கு பெரியார் தண்டிக்கப்பட்டார் என்கிற செய்தியையும் ஜீவா இதில் சொல்கிறார்.

ஈரோட்டில் பெரியாரை சந்தித்த ஜெயப்பிரகாஷ் நாராயணனிடம், சுயமரியாதை இயக்கத்தை காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைக்க ஒப்புக்கொண்டார் என்ற செய்தியை (என்றைய தேதி எழுத்து பூர்வ ஆதாரம் என ஜீவா இதில் தரவில்லை) ஜீவா இந்த நூலின் 23 ஆம் பக்கத்தில் தந்துள்ளார். ஜெயப்பிரகாஷ் அவர்களை சந்திக்கும்படி ஜோலார்பேட்டையில் இருந்த ஜீவாவிற்கு தந்தியும் அனுப்பினாராம் பெரியார்.

பெரியார் ஏற்ற இணைப்பு நடை பெறவில்லை. இரண்டே நாட்களில் பெரியார் மாற்றிக்கொண்டுவிட்டார். 'காங்கிரஸ் மேனியா' வில் சில வாலிபவர்கள் இருக்கிறார்கள் என விமர்சிக்கலானார். இவ்விடத்தில் ஜீவா "ஷனச்சித்தம் ஷனப் பித்தம்" 'பெரியார்'களிடம் உண்டு என எழுதியுள்ளார்.

காங்கிரஸ் எதிர்ப்பில் நின்று சோசலிசம் எதிர்த்த ஆர் கே ஷண்முகத்தையும், சுயமரியாதை இயக்கத்தை கேலி பேசிய நாயுடுவையும் பெரியார் ஆதரித்தார். இதை ஜீவா விமர்சித்தார்.

பகத்சிங் 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' எழுத்தை ஜீவா மொழிபெயர்க்க, ஈ வெ கிருஷ்ணசாமி வெளியிட இருவரும் கைது செய்யப்பட்டனர். பொப்பிலி ஆட்சிதான்.

இங்கு ஜீவா எழுதுவது

" சர்க்கார் (பிரிட்டிஷ்) அழிவு நடவடிக்கையைக் கண்டு ஈவெரா மிரண்டார். ஆர் கே சண்முகம் போன்றவர் தருணத்தைத் தவறவிடாமல் செயல்பட்டனர். உள்நாட்டு மந்திரி பன்னீர்செல்வம், சி டி நாயுடு மூலம் நாஸ்திக பொதுவுடைமை பிரச்சாரத்தை நிறுத்திவிட வேண்டும், இல்லாவிட்டால் கட்சியை சர்க்கார் அழித்துவிட முடிவு கட்டிவிட்டதென்றும் ஈவெராவை மிரட்டிய கதையும் நமக்குத் தெரியும்"

" என்னை (ஜீவாவை) மானங்கெட்டத்தனமாக மன்னிப்பு கொடுத்துவிட்டு வெளியே வரும்படி ஈவெரா , கே எம் பாலசுப்பிரமணியம் மூலம் கடிதத்தை சிறைச்சாலைக்கு அனுப்பி கட்டாயப்படுத்தினார் (அக்கடித ஆவணம் இந்த நூலில் ஜீவாவால்

இணைக்கப்படவில்லை) . 'பெரிய நாயக்கர்' வேண்டுமானால் மன்னிப்புக் கொடுத்துவிட்டு போகட்டும், தான் முடியாதென்றும் பிடிவாதமாக கூறினேன். நான் மன்னிப்பு கொடுக்காவிட்டால் இயக்கம் அழிக்கப்பட்டுவிடும் என்றும், இது சர்க்கார் சட்டத்தை நன்கு அறிந்த ஆர் கே ஷண்முகம்கருத்து என்றும், தானே மன்னிப்பும் பொறுப்பும் என்றும் குடியரசில் எழுதிவிடுவதாக ஈவெரா பாலசுப்பிரமணியம் மூலம் கட்டாயப்படுத்தினார்"

" இந்த நிலையில் சு.ம.இயக்கம் 'நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் கொள்கையுடைய பொது உடைமை இயக்கமல்ல' என்று அரசாங்கம்

நம்பும்படி ஏதாவது செய்ய வேண்டியதாயிற்று " என ஜீவா இதை முடித்திருப்பார். இந்த செய்தி பக் 26ல் இந்த சிறு நூலில் இருக்கிறது. இங்கு ஜீவா - நேரிடையாக மன்னிப்பு எழுதிக் கொடுத்தாரா, என்ன எழுதிக்கொடுத்தார் என்பதை சொல்லவில்லை . 'ஏதாவது செய்யவேண்டியிருந்தது ' என்கிற பதிவை அவர் செய்திருப்பார்.

பெரியார் 'மத்திய சர்க்கார் தலையில் பழியைப்போட்டு',

மாகாண ஜஸ்டிஸ் கட்சியின் குற்றவாளித்தனத்தை மறைத்ததாக ஜீவா எழுதியிருப்பார். இங்கு கடுமையான விமர்சனங்களை ஜீவா வைப்பதைக் காணலாம்

1935 மார்ச் 10 ல் பெரியார் விட்ட அறிக்கைப்பற்றியும் ஜீவா கடுஞ்சொற்களால் பேசியிருப்பார். காங்கிரஸ் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயம் என இதில் பெரியார் தெரிவித்திருந்தார்.

பக் 28ல் ஜீவா எழுதுகிறார் " ஈவெரா மன்னிப்புக் கொடுத்த பிறகு , உண்மையான சுயமரியாதை தர்மிகள் ஈவெரா தலைமையை வெறுத்தனர்..."

திருத்துறைப்பூண்டி மாநாட்டில் ஜீவா பெரியாரை விமர்சித்து வெளியேறினார். சுயமரியாதை சமதர்ம கட்சியை தொடங்கினார். இக்கட்சியின் திருச்சி மாநாட்டிற்கு 1936 நவம்பரில் டாங்கே வந்து உரையாற்றியுள்ளார். பின் அது காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்தது. இங்கு ஜீவா 'பெரியார் மன்னிப்பு கொடுத்த பிறகு' என எழுதுவதைப் பார்க்கிறோம். (பெரியாரிய தோழர்கள் பெரியார்

மன்னிப்புக் கேட்டதற்கு ஆதாரம் இருக்கிறதா எனக் கேட்டு வருகின்றனர்)

இந்த கையேட்டில் பெரியார் தமிழ் நாட்டின் ஜின்னா ஆனார் என்ற விமர்சனத்தையும், அம்பேத்கர் ஜின்னா தயவை நாடி காங்கிரசை எதிர்க்க வட நாட்டிற்கு காவடி எடுத்தார் எனவும் ஜீவா விமர்சிக்கிறார். 'துரோகி எம் என் ராயுடன் ' ஈவெரா ஆருயிர்த் தோழனானதைச் சொல்கிறார். ஈவெரா 'தமிழ் நாட்டின் எம் என் ராய்' ஆகிவிட்டார். ஏகாதிபத்திய பரம்பரை பக்தர்களின் ஜஸ்டிஸ் கட்சி தலைவரான பின் அதைத்தான் செய்யமுடியும் என கடுமையாக விமர்சனம் செல்கிறது.

மேலும் சென்னை கவர்னர் சர் ஆர்தர்ஹோப்பின் அந்தரங்க நண்பரும் ஊழியரும் ஆனார் ஈவெரா. கவர்னரை தலைக்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆடினார்கள் என ஜீவா எழுதியுள்ளார்

இறுதியாக ஜீவா இக்கட்டுரையை இப்படி முடித்திருப்பார்

" ஈரோட்டுப் பாதையின் இருபது வருட சரித்திரத்தை எனது கட்டுரையில் குறிப்பிட்டு வந்துள்ளேன். அந்தச் சரித்திரம் எடுத்துக் காட்டுவதென்பது ஈவெரா என்றும் சமூகப் புரட்சிக்கு விஞ்ஞானியாக பாதை காட்டியதில்லை..புரட்சி கட்சிகளின் நடவடிக்கைகளை எதிர்த்து வந்திருக்கிறார். ஜனநாயக ஸ்தாபனங்களைத் திருத்துவதற்குப் பதில் அழிக்க முற்பட்டிருக்கிறார்..இந்நாட்டில் பிற்போக்கு சக்திகளான ஜமீந்தாரி நிலச்சுவான்தார்- முதலாளி வர்க்கங்களின் கையாளாக கடனாற்றி வந்துள்ளார்..பிற்போக்கு பணமூட்டைகளின் பாதை ஈரோட்டுப்பாதை.."

ஆதாரம் ஈரோட்டுப் பாதை சரியா - ப. ஜீவானந்தம்

march 31 2022

37. கம்யூனிச இயக்கத்தின் முப்பெரும் ஆளுமைகள்

இந்திய கம்யூனிச இயக்கத்தின் முப்பெரும் ஆளுமைகள் நூல் மார்ச் இரண்டாவது வாரத்தில் எனக்கு வந்து சேர்ந்தது. ஆசிரியர் கோவை வழக்கறிஞர், மார்க்சிய ஆய்வாளர் தோழர் கே. சுப்ரமணியன் (கே எஸ்) அவர்கள். மார்க்சிய தமிழ் கிடங்கிற்கு அவ்வப்போது நூல்களை தந்துகொண்டிருப்பவர். AITUC, ISCUF, கலைஇலக்கிய பெருமன்றம் என தனது வெகுஜன பணிகளை வழக்கறிஞர் தொழிலுடன் கவனத்துடனும் ஆளுமையுடனும் செய்து வரக்கூடிய தோழர்.

அவரின் அடுத்த அரும்படைப்பாக மேற்கூறிய புதிய புத்தகம் வெளிவந்துள்ளது. முதுபெருந்தலைவர் தோழர் ஆர். நல்லகண்ணு (RNK) சென்னையில் வெளியிட நூலிற்கான முன்னுரையை பழங்குடி மக்கள் இயக்க தோழர் வி பி குணசேகரன் எழுதியிருக்கிறார்.

தோழர் குணசேகரன் பெருமிதத்துடன் தன் முன்னுரையை இவ்வாறு முடித்துள்ளார்

" இந்த புத்தகத்தில் முதல் மூன்று பொதுச்செயலர்களைப் பற்றி படிக்கும்போது நாம் எவ்வளவு புகழ்மிக்க பரம்பரையின் வாரிசுகளாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் இருக்கிறோம் என்று தலைநிமிர்ந்து பெருமைப்பட்டுக்கொள்ள முடியும்"

250 பக்கங்கள் கொண்ட இந்நூலை வாசிக்கும் எவராலும் மேற்கூறிய பெருமிதத்தை உணரமுடியும். அதை உணர்த்தும் வகையில் கடுமையான உழைப்பை நல்கி தோழர் கே எஸ் புத்தகத்தை எழுதியுள்ளார். இந்நூல் தோழர்கள் காட்டே, அதிகாரி, பி சி ஜோஷி என்கிற முதல் மூன்று பொதுச்செயலர்களின் மகத்தான இயக்க கட்டுமான பங்களிப்பை விவரிக்கிறது.

பொதுவாக கம்யூனிச இயக்கத்தில் இரவு பகலாக உழைத்தவர்களின் வாழ்க்கை சித்திரம் முழுமையாக கிடைக்காது. அது குறித்த பதிவுகள் பெரிதாக அங்கு கருதப்படாத காலம் ஒன்று இருந்தது. நூற்றாண்டு பாரம்பரியத்தை தொட்டு நிற்கும் இயக்கத்தின் ஆரம்ப முன்னோடிகள் அவர்களது தியாக வாழ்க்கை- அவர்களின் சிந்தனா சக்தி- அவர்கள் சந்தித்த ஏற்படுத்திக்கொண்ட முரண்கள் என ஏதும் விரிவான பதிவாக இராது. இயக்க முடிவுகள், தீர்மானங்கள், நடந்த போராட்டங்கள்- அதில் பெற்ற வதைகள் என அவை பொதுவாக முடிந்துவிடும். எல்லாமே இயக்கம் சார்ந்த பதிவிடலாகவே இருக்கும். அங்கு தனிமனிதர்களாக

வந்தவர்கள் இயக்க மனிதர்களாக- தலைமைக்குழுவிற்கு பயணித்த கதைகள் குறைவாகவே எழுதப்படும் நிலையில் தோழர் கே.எஸ் அவர்களின் இந்த முயற்சி நல் தொடக்கமாக அமையும் என்றே தோன்றுகிறது.

கம்யூனிச இயக்கம் குறித்த விரிவான பாரபட்சமற்ற ஆய்வுலகிற்கு இந்த மாதிரியான புத்தகங்கள் பெரிதும் உதவும். மார்க்ஸ்- எங்கெல்ஸ்- லெனின் – டிராட்ஸ்கி- ஸ்டாலின் – மாவோ- ஹோசிமின் – காஸ்ட்ரோ- செகுவாரா என ஏராள புத்தகங்கள் இன்று ஆய்வுலகில் கொட்டிக்கிடக்கின்றன. ரோசா லக்சம்பர்க், கிராம்சி என அவை விரிகின்றன. ஆனால் இந்தியாவில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் டாங்கே, இ எம் எஸ், ஜோஷி, ரணதிவே, அஜாய்கோஷ், ஜோதிபாசு, அச்சுதமேனன், கே. தாமோதரன், அதிகாரி, காட்டே, சுந்தரைய்யா, ராஜேஸ்வர ராவ், புபேஷ், பவானி சென், ஏ கே கோபாலன் , மொகித்சென், சாரு, கனுசன்யால், நாகிரெட்டி என தேடிப்போனால் அவர்கள் வாழ்வும் பணியும் பற்றிய விரிவான பதிவுகள் மிக அபூர்வமாகவே கிடைப்பதைப் பார்க்கலாம்.

இந்தக் குறையை போக்கும் திசையை கே.எஸ் அவர்கள் உருவாக்கியுள்ளார் எனலாம். தமிழ்நாட்டில் கூட சிங்காரவேலருக்கும், ஜீவாவிற்கும் உருவாக்கப்பட்ட ஆய்வடங்கல் போல சில தொகுதிகள் கூட மேற்கூறிய பலருக்கும் இல்லாமை பெருங்குறையான ஒன்றாகவே படுகிறது. வருங்கால இளைய தலைமுறை இதைக் கவனத்தில் எடுத்து நேர் செய்யலாம்.

இந்த புத்தகம் நான்கு தூண்களில் நகர்கிறது எனலாம். மூன்று ஆளுமைகளின் அரசியல் வரலாறு (political bio sketch), விடுதலை இயக்க நகர்வில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கான ஆரம்ப கட்டுமானங்கள் (Building communist political space in the freedom movement and beyond), இந்த ஆளுமைகள் செய்த பணிகளை தியாக வாழ்வைப் பற்றி தொடர்ந்து வந்த பொதுச்செயலர்களும் மற்ற தலைவர்களும் மதிப்பிடல் (Assessing the great sacrifices), இறுதியாக இந்த மூன்று தலைவர்களின் சிறந்த சில எழுத்தாக்கங்கள் (some Best Writings).

நூல் மதிப்புரையின் விரிவஞ்சி நூலுக்குள் காணப்படும் பல தெறிப்புகளை, தோழர் தன் ஆய்வினூடாக வந்தடைந்த புள்ளிகள் பலவற்றை அடுக்கமுடியவில்லை. மீரத் சதி வழக்கு சிறந்த வகையில் ஆதார அடிப்படையில் எடுத்துரைக்கபட்டுள்ளது. காட்டேயும், அதிகாரியும், ஜோஷியும் வெவ்வேறு பின்னணியில் பிறந்து வளர்ந்து மார்க்சியத்தின்பால், சோவியத் கட்டுமானத்தின்பாற் ஈர்க்கப்பட்டு

இந்திய விடுதலை- இந்தியாவில் சோசலிசம் எனும் திசைக்கான போராட்டத்தில் எவ்வாறு சக தோழர்களுடன் ஒன்றாகவும் சில நேரங்களில் முரண்பட்டும் பயணித்தார்கள் என்கிற அருமையான பிரதியை மிகைப்படுத்தல் ஏதுமில்லாது தோழர் கே எஸ் தந்துள்ளார். வெறும் ஆவணம் என்றாக்காமல் உயிர்ப்புள்ள சிந்தனாவாதிகளின் களப்போராளிகளின் உரையாடலாக நூலாக்கத்தை அமைத்துள்ளது பாராட்டிற்குரிய ஒன்று.

தோழர் கே எஸ் முன்னுரையை இப்படித்தான் முடித்துள்ளார்.

"இந்திய பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்துள்ள இளைஞர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள அரசியல் பாதையில் உற்சாகத்துடன் பயணம் செய்ய இந்தப் புத்தகம் ஓரளவுக்குத் தூண்டுமானால், அதுவே எனது உழைப்பிற்கு கிடைத்த பாராட்டு என்பதுடன், நாம் நமது மூத்த பரம்பரைக்குச் செய்யும் நன்றியுமாகும். "

ஆசிரியர் உழைப்பால் வெளிவரும் ஒவ்வொரு புத்தகமும் தனக்கான வாசர்களுக்காக திறந்தேயிருக்கிறது. தோழர் கே எஸ் விழைவு நினைவாகட்டும். நல்வாழ்த்துகள்!

எதிர் வெளியீடு ரூ 275

may 2017

38. கம்யூனிச இயக்க முன்னோடிகள்

2017ல் வந்த மின் புத்தகம். அதில் இடம்பெற்ற முன்னுரை

(ஆர்வமுள்ளோர் புத்தகத்தை இணைப்பில் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.)

விடுதலை இயக்க காலத்தில் சோவியத் புரட்சியின் தாக்கத்தில் வெளிநாடுகளில் சென்ற புரட்சிகரவாதிகள், இந்திய இளைஞர்கள் இங்கும் விடுதலைக்கு பின்னர் சோவியத்வகைப்பட்ட சோசலிச ஆட்சி என்கிற கனவை வைத்திருந்தனர். அதற்கு காங்கிரஸ் பேரியக்கமும், காந்தியும் வாகனமா என்பதில் அவர்கள் கொள்கை, நடைமுறை தெளிவுகளை போதுமான அளவு பெறமுடியாமல் போனது. சோவியத், பிரிட்டிஷ் வகைப்பட்ட சொல்லிக்கொடுப்புகளுக்கும், இந்தியாவில் யதார்த்த வெளியில் அவர்கள் உணர்ந்ததற்கும் ஏராள இடைவெளிகளை அவர்கள் கண்டனர். காங்கிரஸ், காந்தி என்பதுடன் சோசலிஸ்ட்கள் - இடதுசாரிகள் என பல்வேறு போக்குகளுடன் ராய், போஸ், ஜேபி-லோகியா முரண்பாடுகளை அவர்கள் பார்த்தனர். கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் பணியாற்றிய இளைஞர்கள் தங்கள் மத்தியிலும் கருத்து போரிட்டுக்கொண்டனர்.

ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்கு மேலான அனுபவங்களுடன் அரசியல் பயணம் நடத்திவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி தலைவர்கள் பற்றிய சில குறிப்புகள் இங்கு கட்டுரைகளாக தரப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களில் அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகள் தொகுப்பாக இங்கு தரப்படுகிறது இதில் தோழர்கள் சுந்தரையா, ஜோதிபாசு, சர்தேசாய், அதிகாரி, முசாபர், காட்டே போன்ற பலர் இடம் பெறவில்லை. தொடர்ந்து முன்னோடிகளை அவர்களது வெற்றிகளை, தடுக்கி தடுமாறிய இடங்களை அனுபவத்திற்காக எடுத்துக் கொள்வது இந்திய அரசியல் பயிலும் மாணவர்களுக்கு அவசியமானதாக இருக்கும். படிக்கவும் கருத்துக்களை செழுமைப்படுத்தவும் வேண்டுகிறேன்.

20-5-17 ஆர்.பட்டாபிராமன்

oct 6 2021

39. தோழர் புபேஷ் பற்றி தோழர் கே எஸ்

பொதுவுடைமை சிந்தனையாளர் கோவை வழக்கறிஞர் தோழர் கே எஸ் (கே சுப்ரமணியன்) தமிழக மக்களுக்கு நல்ல புத்தகம் ஒன்றை எழுதி தந்துள்ளார்கள். ”பொதுவுடைமை இயக்கத்தின் புயற்பறவை தோழர் புபேஷ் குப்தா” எனும் வாழ்க்கை வரலாற்று நூலை சில நாட்களுக்கு முன்னர் தோழர் கே எஸ் அனுப்பியிருந்தார்.. மறுநாளே அதை வாசிக்க வாய்ப்பு கிட்டியது. வங்கி இயக்க தொழிற்சங்கத் தலைவர்தோழர் ரகுபதி எந்த நூல் தன்னிடம் வந்தாலும் அதை தலையாகப் படித்துவிட்டு தனது பதிவுகளை உடன் தந்துவிடுவார். தோழர் கே எஸ் புபேஷ் குப்தா நூலுக்கும் அவ்வாறே உடன் தன் பதிவை தந்துள்ளார். எனக்கு மூன்று நூல்களை கே எஸ் அனுப்பியிருந்தார். அவருக்கு மிக்க நன்றி. இனி கே எஸ் நூல் குறித்து...

கே எஸ் நூல் 155 பக்கங்கள் கொண்டது. தனது துணைவியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் சேர்த்து தந்த பணத்தை நல்ல வழியில் செலவழிக்கவேண்டும் என்கிற மனச் செய்தியை செவிமடுத்து அவர் பெயரால் பதிப்பகம் துவங்கி அரியபணியை கே எஸ் செய்து வருகிறார். இதன் விளவாக அவரது விரிந்த வாசிப்பு எழுத்தாகி அச்சாக்கப்பட்டு என் போன்றவர் பயன்பாட்டுக்கு புத்தகங்களாக வரத்துவங்கியுள்ளன. இப்புத்தகம் மார்க்சிய தமிழ் எழுத்து கிடங்கிற்கு நல்லதோர் சேர்க்கையாக கருதப்படும்.

மார்க்சிய அறிஞர் தோழர் முனைவர் ந.முத்துமோகன் அணிந்துரை வழங்கியுள்ளார். கே எஸ் அவர்களின் மெய்ம்மை நிறை அக்கறையின் வெளிப்பாடாக இந்நூலை அவர் பாராட்டியுள்ளார். புபேஷ் அவர்களின் நாடாளுமன்ற, விவசாயி- தொழிலாளர் போராட்டங்களின் பங்களிப்பை சுருக்கமாக இப்புத்தகம் பேசுகிறது. மாநில உரிமை துவங்கி உலகளாவிய கடமைகள்வரை புபேஷ் பேசியது எழுதியதை சுருக்கமாக இப்புத்தகம் எடுத்துச்சொல்கிறது.

இப்புத்தகத்தில் சரிபாதி பக்கங்களில் நாடாளுமன்றத்தில் தோழர் புபேஷ் ஆற்றிய சில முக்கிய உரைகள் இடம்பெற செய்யப்பட்டுள்ளது சிறப்பு. நாடாளுமன்ற வெளியீடுகளில் அனுசரிக்கப்படும் முறையை தோழர் கே எஸ் பின்பற்றியிருக்கிறார். முதலில் சிறந்த நாடாளுமன்றவாதி என்கிற குறிப்பு இருக்கும். அதைத்தொடர்ந்து அவர்களின் சில முக்கிய உரைகள் இடம்பெறும் என்பது அங்கு மரபாக

வைத்துள்ளனர். கே எஸ் அம்மரபை தமிழ் புத்தக பிரதி கட்டுமானத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளமை சிறப்பானது.

தோழர் புபேஷ் உழைக்கும்வர்க்கத்திற்கான போராளியாக தனவந்தர் குடும்பத்தை உதறி வந்தவர் என்பதுடன் தனது சொத்துக்களையும் துறந்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர் என்பது இந்நூலில் சிறப்பாக வெளித்தெரிய கொணரப்பட்டுள்ளது. தமிழக கோரிக்கையில் தமிழ்நாடு பெயர் மாற்றத்தில் அறிஞர் அண்ணாவிற்கு அவர் துணையாக நாடாளுமன்றத்தில் நின்று பேசிய செய்தி தமிழ் இளைஞர்களுக்கு போகவேண்டிய ஒன்றாக இருக்கும். அதேபோல் புதுச்சேரி இணைப்பு எதிர்ப்பு என்பதற்கும் அவர் அம்மக்கள் பக்கம் நின்று குரல்கொடுத்த உரையும் கொடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் சீர்திருத்தங்கள், மத்திய மாநில உறவுகள், வேலைவாய்ப்பு என்பது அடிப்படை உரிமை போன்ற சில முக்கிய உரைகளை தோழர் கே எஸ் தெரிவு செய்து இடம்பெற வைத்துள்ளார்.

புபேஷ் மறைவின்போது கேரளாவின் முன்னாள் முதல்வரான தோழர் அச்சுதமேனன் எழுதிய நினைவாஞ்சலியில் புபேஷை காவியுடை தறிக்காத புரட்சித்துறவி எனக்குறித்து சொன்னதை கே எஸ் இடம்பெற செய்துள்ளார்.

அவரது வாழ்க்கை செய்திகளை பதிவிடும்போது " நாட்டின் ஒருமைப்பாட்டை வலியுறுத்திய அவரது உரைகள் அனைத்துமே சமூகத்தைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் வகுப்புவாத அபாயத்திற்கு எதிராக இருந்ததோடு, சாதி இன வெறி சக்திகளுக்கு எதிராகவும் இருந்தன. தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வப் பேச்சாளராக சுமார் 15 அண்டுகள் தொடர்ந்து செயல்பட்டவர்" என்பதையும் தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சிலில் வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக செயல்திறன்மிக்க பரிந்துரைகளை தந்தவர் என்பதையும் கே எஸ் அழுத்தமாக இந்நூலில் எடுத்துச் சொல்லியுள்ளார்.

தோழர் கே எஸ் தனது எழுத்துப் பயணத்தில் நீண்டதூரம் செல்ல எனது வாழ்த்துகள் !

செப் 2025

40. EMS on Communists Contribution to the theory and practice of Indian Politics

சிபிஅய் மற்றும் சிபிஎம் கட்சிகள் சார்பில் வெளியிடப்பட்ட கட்சி வரலாற்று ஆவணங்களை அவ்வப்போது புரட்டுவதுண்டு. இம்முறை சிபிஅய்யின் வால்யூம் 2 -1923-25 ஆவணத்தையும், சிபிஎம் வெளியிட்ட 1917-28 ஆவணத்தையும் பார்த்துக்கொண்டு வந்தேன். Refresh செய்து கொள்ள அவை உதவும். சிபிஅய்யின் 1923-25 குறித்த செய்தி ஒன்றை - கான்பூர் கட்சி அமைப்பு மாநாட்டு தொடர்பான செய்தியையும், சிபிஎம் ஆவணத்தில் 70 ஆண்டுகள் கால (1996 UF ஆட்சிக் காலம் வரையிலான) இ எம் எஸ் அவர்களின் மிக முக்கிய ஆவணமாக்கப்பட்ட கட்டுரை ஒன்றையும் பார்த்தேன்.

இ எம் எஸ் கட்டுரை சிபிஎம் 1917-28 ஆவண 1134 பக்கத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள முதலாவது கட்டுரை. அதன் முக்கியத்துவத்தை கருதி அவர்கள் முதல் வால்யூமின் முதல் கட்டுரையாக அதை வைத்துள்ளனர். எனது வாசிப்பிலும் அது முக்கிய கட்டுரையாகவே பட்டது. கட்டுரையின் தலைப்பு சற்று நீளமானதாக இருந்தாலும், அதன் பொருளடக்கத்தை தலைப்பே உணர்த்திவிடும். தலைப்பு

”The communists contribution to the Theory and practice of Indian Politics” By EMS

.

இக்கட்டுரை அந்த ஆவணத்தில் பக் 15-32/1134ல் 18 பக்க அளவிலான, ஆழமும் அடர்த்தியும் கொண்ட ஒன்று. இ எம் எஸ் பார்வையில் சிபிஎம் கட்சியின், முன்னதாக ஒன்றுபட்ட சிபிஅய் நிலைப்பாடுகள் விளக்கப்பட்டிருக்கும். கட்டுரையை ஆர்வம் உள்ளவர் தேடி முழுமையாக வாசிப்பது நலம்.

இங்கு அந்த ஆங்கில கட்டுரையிலிருந்து என் வாசிப்பில் எடுத்து வைத்த நோட்ஸ்- குறிப்புகளை மட்டும் தருகிறேன். இக்குறிப்புகள் தோழர் இ எம் எஸ் அவர்களின் அக்கட்டுரையை முழுக்க உணர்த்திவிடாது என்றாலும், சில அம்சங்களை காட்டவே செய்யும். ஆங்கில வாசிப்பு கொண்டோர் வாசிக்க முடியும். அதே நேரத்தில் கவனமாக வரிகளையும் அவர் கொண்டு வந்து சேர்க்கும் மதிப்பீடுகள் கருத்தாக்கங்களையும் வாசிக்கும் போதே நன்றாக உள்வாங்கிக் கொள்ள முடியும். 100 ஆண்டுகள் ஆன இன்றைய சூழலிலும் அவரின் 70 ஆண்டுகால முன் வைப்புகளில் பெரிய மாற்றத்தை காண

முடியவில்லை என்பதை சேர்த்துப் பார்த்தால் அவரின் கட்டுரையை நன்றாக புரிந்து கொள்ள முடியும். அவரின் பார்வையிலிருந்து வேறுபடும் உரிமை வாசிப்பவர்க்கு உண்டு என்பதையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

2

Though at Tashkent at 1920 and Kanpur 1925 formed, CPI AI Centre formed in 1934 with PB and CC

MN Roy's 'India in Transition' the first Marxist Leninist analysis of the Economy, polity and Ideology of India in the British Rule. 'India Today' by Rajani Palme Dutt was a sister publication to that Roy's book

M N Roy drawn attention of communal riots relating to class struggle- the antidote to communal division is class unity thro struggles.. This principle of M N Roy is even relevant today.

1940s we in the CPI called India a 'multi national state-' it is supplementary than contradictory to the unity of India as a Nation

1951 programme demanded maximum possible state autonomy for every cultural linguistic group .. This was the distinct contribution made by the Indian communists to the nature and content of Indian politics- 'distinct nationality within the indivisible Indian state'.

தமிழாக்கம்:

1920ல் தாஷ்கந்திலும் 1925ல் கான்பூரிலும் உருவான கம்யூனிஸ்ட் கட்சி, 1934ல் மத்திய குழுவுடன் (PB மற்றும் CC) இந்திய மையத்தை அமைத்தது.
எம். என். ராய் எழுதிய *India in Transition* என்பது இந்தியாவின் பொருளாதாரம், அரசியல் மற்றும் சிந்தனையை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மார்க்சிய-லெனினிய பார்வையில் ஆய்வு செய்த முதல் நூலாகும்.
ராஜனி பால்மே தத் எழுதிய *India Today* அந்த ராய் எழுதிய நூலின் சகோதரி வெளியீடாகும்.

எம். என். ராய், சமுதாயப் போராட்டத்துடன் தொடர்புடைய சமுதாய கலவரங்களை கவனத்திற்கு கொண்டு வந்தார் – சமுதாயப் பிளவுகளுக்கான எதிர்வினை, போராட்டங்களின் மூலம் வர்க்க ஒற்றுமை என்பதே. இந்தக் கொள்கை இன்றும் பொருத்தமானதாக உள்ளது.

1940களில், கம்யூனிஸ்ட் கட்சியில் நாம் இந்தியாவை "பல்தேசிய இன நாடு" என்று அழைத்தோம் – அது இந்தியா ஒரு தேசமாக ஒன்றுபட்டிருப்பதற்கு முரண்படுவதல்ல, துணைபுரிவதாகும்.

1951 திட்டத்தில், ஒவ்வொரு கலாச்சார-மொழிக் குழுவிற்கும் அதிகபட்ச மாநில சுயாட்சியை கோரப்பட்டது. இது இந்திய அரசியலின் இயல்புக்கும் உள்ளடக்கத்திற்கும் இந்திய கம்யூனிஸ்ட்கள் செய்த தனித்துவமான பங்களிப்பாகும் – "பிரிக்க முடியாத இந்திய அரசின் உள்ளே தனித்துவமான தேசியத்துவம்.".

1930 first programmatic statement of the illegal Communist party of India - Indian freedom can be won only through the revolutionary means in which multi million peasantry are drawn into a militant movement headed by the working class. This was opposed to the bourgeoisie national leadership led by Mahatma Gandhi such as Non violence, ..trustees doctrine etc

CPI enjoined on ideological struggle against these Gandhian concepts.. right leadership of congress

1940s two struggles - quit India by Gandhi and INA by Netaji. The CPI kept away from both the movements

-could not support either of them, quit India a move to put pressure to British rulers to open negotiation with bourgeois leadership for transfer of power.

As for INA, CPI considered that , despite genuinely anti imperialist sentiments of its leaders, it was a movement directed by the Japanese imperialist power which had its contradictions with the British rulers.

தமிழாக்கம்:

1930ஆம் ஆண்டு சட்டவிரோதமாக இயங்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் திட்டவட்டமான அறிக்கை:
இந்திய சுதந்திரம் பெறப்படுவது புரட்சிகரமான வழிமுறைகளின் மூலமே; அதில் கோடிக்கணக்கான விவசாயிகள் தொழிலாளர் வர்க்கம் தலைமையிலான போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
இது மகாத்மா காந்தி தலைமையிலான பூர்ஜுவா தேசியத் தலைமையின் (அஹிம்சை, "டிரஸ்டீ"க் கொள்கை போன்ற) கருத்துக்களுக்கு எதிரானதாகும்.
கம்யூனிஸ்ட் கட்சி இக்காந்தியக் கருத்துக்களுக்கு எதிராக சிந்தனைக் களத்தில் போராட்டம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியது – காங்கிரஸின் "சரியான" தலைமையை சவாலிட்டது.

1940களில் இரண்டு முக்கியப் போராட்டங்கள் நடந்தன – காந்தியின் "க்விட் இந்தியா" இயக்கமும், நேதாஜியின் "INA" இயக்கமும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரண்டிலும் பங்கேற்கவில்லை. அவர்கள் "க்விட் இந்தியா" இயக்கத்தை ஆதரிக்க முடியவில்லை; அது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை அழுத்தம் கொடுத்து, பூர்ஷ்வா தலைமையுடன் அதிகாரப் பரிமாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வைக்கும் முயற்சியாகக் கருதப்பட்டது.

INA குறித்து, அதன் தலைவர்களின் உண்மையான எதிர்-காலனித்துவ உணர்வுகளை ஏற்றுக்கொண்டபோதிலும், அது ஜப்பானிய பேரரசு சக்தியால் இயக்கப்பட்ட இயக்கமாகக் கருதப்பட்டது; அந்த சக்திக்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் தனித்துவமான முரண்பாடுகள் இருந்தன."

CPI engaged in mighty militant struggles like strike of Industrial workers, peasant movements like Punnapra vayalar Tebhaga etc

CPI was an extremely weak force in the anti imperialist movement which by and large led by the Congress..

The CPI's opposition to quit India and INA movements was correct. However the CPI was a minor force in the political scenario, unable to meet the onslaught of Gandhian ideology in the quit India and the left bourgeoisie pro fascist ideology of the INA movement.

However credit of CPI is during these movements, keeping afloat the flag of proletarian internationalism. Held high resistance of fascism as an integral part of India's freedom struggle.

In the post war phase party a significant force in Indian politics- 1952 election major party of opposition

During China war the left wing of CPI for peaceful negotiation with China

தமிழாக்கம்:

தொழிலாளர் வேலைநிறுத்தங்கள், புன்னப்ப்ரா-வயலார், தேபாகா போன்ற விவசாயப் போராட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி (CPI) வலுவான போராட்டங்களில் ஈடுபட்டது. ஆனால், எதிர்-காலனித்துவ இயக்கத்தில் CPI மிகவும் பலவீனமான சக்தியாக இருந்தது; அந்த இயக்கத்தை பெரும்பாலும் காங்கிரஸ் வழிநடத்தியது.

"க்விட் இந்தியா" மற்றும் INA இயக்கங்களுக்கு எதிராக CPI எடுத்த நிலைப்பாடு சரியானதாக இருந்தது. எனினும், CPI அரசியல் சூழலில்

சிறிய சக்தியாகவே இருந்தது; "க்விட் இந்தியா" இயக்கத்தில் காந்திய சிந்தனையின் தாக்கத்தையும், INA இயக்கத்தில் இடதுசாரி பூர்ஜுவா-பாசிச ஆதரவு சிந்தனையையும் எதிர்கொள்ள முடியவில்லை.

இருப்பினும், CPI-க்கு கிடைத்த புகழ் என்னவெனில், இவ்வியக்கங்களின் போது "புரொலெட்டேரியன் இன்டர்நேஷனலிசம்" என்ற கொடியை உயர்த்தி வைத்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அங்கமாக பாசிசத்திற்கு எதிரான எதிர்ப்பை வலுவாக நிலைநிறுத்தியது.

போருக்குப் பிந்தைய காலத்தில், CPI இந்திய அரசியலில் முக்கிய சக்தியாக உருவெடுத்தது – 1952 தேர்தலில் முக்கிய எதிர்க்கட்சியாக இருந்தது.
சீனப் போரின் போது, CPI-யின் இடதுசாரி பிரிவு சீனாவுடன் அமைதியான பேச்சுவார்த்தைக்காக வலியுறுத்தியது.

1934-64 the party was a victim of right and left opportunism- 1942-46 right opportunism- corrected in 1948 but leadership switched to left opportunism. Both were corrected after serious discussion with CPSU leadership , at a special conf in oct 1951 CA New programme and statement of policy evolved

Party is for PDR and PD govt -not socialism as an immediate objective which is impracticable

statement of policy issued and guided for going to the electoral system- struggle on the parliamentary arena and outside parliament

Non use of the revolutionary potentialities of the struggle on parliament and subordinating the mass struggle to parliamentary work are the left and right forms of opportunism against which the party should guard itself.

1957 Kerala state govt experience- without slipping to right opportunist parliamentarism

தமிழாக்கம்:

1934–64 காலகட்டத்தில், கட்சி வலதுசாரி மற்றும் இடதுசாரி வாய்ப்புக் கொள்கைகளின் (opportunism) பலியாக இருந்தது. 1942–46 காலத்தில் வலதுசாரி வாய்ப்புக் கொள்கை நிலவியது – 1948இல் அது திருத்தப்பட்டது. ஆனால் அதன் பின் தலைமையே இடதுசாரி வாய்ப்புக் கொள்கைக்குத் திசைமாறியது. இரண்டும் CPSU (சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி) தலைமையுடன் நடந்த தீவிரமான விவாதங்களின் பின், 1951 அக்டோபரில் நடந்த சிறப்பு

மாநாட்டில் திருத்தப்பட்டன. அப்போது புதிய திட்டமும் கொள்கை அறிக்கையும் உருவாக்கப்பட்டன.

கட்சி, உடனடி இலக்காக சமூகநலத்தை (Socialism) நோக்கவில்லை; அது நடைமுறையில் சாத்தியமற்றது.
அதற்குப் பதிலாக, PDR (People's Democratic Revolution) மற்றும் PD அரசு என்பதே இலக்காக வைக்கப்பட்டது.

கொள்கை அறிக்கை, தேர்தல் முறையில் பங்கேற்கவும், நாடாளுமன்ற அரங்கிலும் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் போராட்டம் நடத்தவும் வழிகாட்டியது.
நாடாளுமன்றப் போராட்டத்தின் புரட்சிகரமான வாய்ப்புகளைப் பயன்படுத்தாமல் விடுவது, அல்லது மக்கள் போராட்டத்தை நாடாளுமன்றப் பணிக்கு அடிமைப்படுத்துவது – இவை வலது மற்றும் இடது வாய்ப்புக் கொள்கைகளின் வடிவங்களாகும்; இதற்கு எதிராக கட்சி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

1957இல் கேரள மாநில அரசின் அனுபவம் – வலதுசாரி வாய்ப்புக் கொள்கை சார்ந்த நாடாளுமன்றவாதத்தில் (parliamentarism) சிக்காமல் நடந்தது.

After split CPIM wrote para 112 in its programme- can form its own state governments but would not join governments unless the Party is sure that it can influence the policies of the Govts.

1967 non left Govts were supported by CPIM, but not joined in them. The same policy for 1977 Janata, 1989 NF and 1996 UF

In the Pre split CPI 3 ideological political issues and one organisational issue emerged

Attitude to the Congress and its Govt: Cong a progressive national org so communists should collaborate vs uncompromising struggle against the Cong from issue to issue cooperation

on India China border issue

on the question of ideological dispute between CPSU of Soviet and CPC of China

organisational- the demand of convening spl conference on the basis of party membership to discuss these issues not accepted and so CPIM formed

Any attempt to reunification of Communist movement should begin with serious self criticism on the part of the post split CPI.

தமிழாக்கம்:

பிளவுக்குப் பிறகு, CPIM தனது திட்டத்தில் (பிரிவு 112) குறிப்பிடியது: தனது மாநில அரசுகளை அமைக்கலாம், ஆனால் அரசின் கொள்கைகளைத் தாக்கம் செய்ய முடியும் என்ற நிச்சயமில்லாமல் எந்த அரசிலும் சேராது.
1967இல் இடதுசாரி அல்லாத அரசுகளை CPIM ஆதரித்தது, ஆனால் அதில் இணையவில்லை. இதே கொள்கை 1977 ஜனதா, 1989 NF மற்றும் 1996 UF அரசுகளுக்கும் பின்பற்றப்பட்டது.

பிளவுக்கு முன் CPI-யில் மூன்று சிந்தனை/அரசியல் பிரச்சினைகளும், ஒரு அமைப்புச் சார்ந்த பிரச்சினையும் எழுந்தன:

- **காங்கிரஸ் மற்றும் அதன் அரசின் மீதான அணுகுமுறை**: காங்கிரஸ் ஒரு முன்னேற்றமான தேசிய அமைப்பு; எனவே கம்யூனிஸ்ட்கள் அதனுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்து vs காங்கிரஸுக்கு எதிராகத் தளராத போராட்டம் நடத்த வேண்டும், ஆனால் குறிப்பிட்ட பிரச்சினைகளில் மட்டும் ஒத்துழைப்பு.
- **இந்தியா–சீனா எல்லைப் பிரச்சினை**
- **சோவியத் CPSU மற்றும் சீன CPC இடையிலான சிந்தனைத் தகராறு**
- **அமைப்புச் சார்ந்த பிரச்சினை**: இப்பிரச்சினைகளை விவாதிக்க, உறுப்பினர் அடிப்படையில் சிறப்பு மாநாட்டை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை. இதனால் CPIM உருவானது.

எந்தவொரு கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மீளிணைப்பும், பிளவுக்குப் பிந்தைய CPI-யின் தீவிரமான சுயவிமர்சனத்திலிருந்து தொடங்க வேண்டும்.

Later In the CPIM some arguments like the following were echoed by some minor sections:

a revolutionary party can never be a mass party

when breaking with Janata for its links with RSS, some opposition to it

On UF formation, a view in PB and CC that we should join the Govt, even leading it.

Thus CPIM has to fight both right and left opportunism

CPIM considers it impractical and undesirable at present to have a single united CP of India..

Unless the question of why the pre split of CPI was divided into CPIM and CPI and why left groups calling themselves ML have come into existence is addressed properly and answers given, it will be ridiculous to think of organisational unification of all existing ML groups

As pointed out by Lenin, the ideological political unity is an essential pre condition for organisational unity..

The essential pre condition for the subsequent re unification or merger of all ML groups is the development of the emerging unity in action among all left groups on the basis of a critical and self critical analysis of the 7 decades of the development of India's Marxist Leninist movement

தமிழாக்கம்:

பின்னர் CPIM-இல் சில சிறிய பிரிவுகள் பின்வரும் வாதங்களை முன்வைத்தன:

- ஒரு புரட்சிகரக் கட்சி எப்போதும் மக்கள் கட்சியாக இருக்க முடியாது.
- RSS-இன் தொடர்புகளுக்காக ஜனதாவுடன் உறவை முறித்தபோது, அதற்கு எதிர்ப்பு சிலரிடமிருந்து வந்தது.
- UF (United Front) அமைப்பின் போது, PB மற்றும் CC-யில் அரசு சேர வேண்டும், கூடவே அதை வழிநடத்த வேண்டும் என்ற கருத்தும் இருந்தது.

இதனால் CPIM வலதுசாரி மற்றும் இடதுசாரி வாய்ப்புக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

CPIM, தற்போதைய சூழலில், இந்தியாவில் ஒரே ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பது நடைமுறையில் சாத்தியமற்றதும் விரும்பத்தகாததுமாகக் கருதுகிறது.
CPI பிளவுக்கு முன் ஏன் CPIM மற்றும் CPI எனப் பிரிக்கப்பட்டது, ஏன் ML என தங்களை அழைக்கும் இடதுசாரி குழுக்கள் உருவானது என்பதற்கான கேள்விகள் சரியாகத் தீர்க்கப்படாமல், பதில்கள் வழங்கப்படாமல் இருந்தால், அனைத்து ML குழுக்களையும் ஒருங்கிணைப்பது அபத்தமாகும்.

லெனின் குறிப்பிட்டபடி, சிந்தனை மற்றும் அரசியல் ஒன்றுபாடு என்பது அமைப்புச் சார்ந்த ஒன்றுபாட்டிற்கான அடிப்படை முன்னிலை.

எனவே, இந்தியாவின் மார்க்சிய-லெனினிய இயக்கம் கடந்த ஏழு தசாப்தங்களில் எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதை விமர்சனமும் சுயவிமர்சனமும் அடிப்படையாகக் கொண்டு, அனைத்து இடதுசாரி குழுக்களிடையே உருவாகும் செயல் ஒன்றுபாடு தான், எதிர்கால மீளிணைப்பு அல்லது ML குழுக்களின் இணைப்பிற்கான முக்கிய முன்னிலை.

posted on 25-9-2025

டிசம்பர் 2023

41. Communism in Indian Politics

Communism in Indian Politics பவானி சென் குப்தா அவர்களால் எழுதப்பட்டு 1972ல் வெளிவந்த நூல். 500 பக்கங்களை நெருங்கும் பெரிய நூல் தான். தெற்கு ஆசியா கழகம் என்பதில் விவாதிக்கப்பட்டு வெளிவந்த நூல். சென் குப்தா அவர்கள் அப்போது ஜே என் யு பல்கலையில் பணிபுரிந்து கொண்டிருந்தவர்.

இந்தியாவில் 'a force of international communism' எனப் பிறந்த கம்யூனிச இயக்கம், இந்திய விடுதலைக்கால அனுபவம், இந்திய அரசமைப்பு, நாடாளுமன்ற அரசியல் ஆட்சிமுறை அனுபவம் ஆகியவற்றின் நீண்ட பயணத்தில் எவ்வாறு தன்னை Indian Political force ஆக நிறுவிக்கொள்ளவேண்டிய போராட்டத்தை நடத்தி வந்தது என்பதை விரிவாகப் பேசுகிற நூல் இது.

இந்தியாவில் பிறந்த கம்யூனிச இயக்கம் உடைவுகளை 1964, பின்னர் அதில் 1969 உடைவு- அதிலும் கூட பல உடைவுகள் என சந்தித்தாலும் இரண்டு மெயின்ஸ்ட்ரீம் இயக்கமாக CPI, CPM இரண்டும் National and Regional (linguistic state) polityல் தங்களை நிற்க வைத்துக்கொள்ளும் போராட்டங்களை , மேற்கொண்ட உத்திகளை இந்த நூலாசிரியர் பேசுகிறார்.

கம்யூனிச இயக்கம்/கட்சி உதயமானதிலிருந்து மெல்ல மெல்ல தன்னை transform செய்துகொள்ளும் போராட்டங்களை நடத்திக்கொண்டது. சோவியத் மற்றும் சீனக் கட்சி செல்வாக்கிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு, இந்திய நிலைமைகளை தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து பார்த்து அதற்கேற்ப தங்கள் செயல்பாடுகளை தக அமைத்துக்கொள்ளும் விரிவான பயிற்சிக்கான போராட்டமாகவும் இது அமைந்தது. 1951ல் மெதுவாக துவங்கி, ஸ்டாலின் மறைவிற்கு பின்னர், சோவியத் 20வது கட்சி காங்கிரஸ்க்கு பின்னர் இதன் தீவிரப் பாதையை நிகழ்ந்த மாற்றத்தை இந்நூலாசிரியர் காட்டுகிறார்.

இந்தியாவில் கம்யூனிச இயக்கம் வளர்ந்த முதல் 50 (1972 வரையிலான) ஆண்டுகள் வரலாற்றை இந்நூல் தொட்டுக்காட்டி, இக்காலங்களில் கருத்துருவாக்கத்தில், அது தன்னை இந்தியத் தன்மை அரசியல் போக்கில் நிலை நிறுத்திக்கொள்ள பெற்ற உருமாற்றங்களைப் பேசுகிறது.

தேர்தலில் நிற்பது என்பதை 1945லேயே ஏற்றுகொண்டு labour Constituencyக்களில் வெற்றியை சிறிதளவு பெற்றாலும், 1951க்குப் பின்னர் பாராளுமன்ற அரசியல் சோதனைக்கு இந்திய கம்யூனிசம் தன்னை ஒப்புகொடுத்து, மக்களின் அங்கீகாரத்தை பெறும் போராட்டத்தில் இறங்கியது. உலகின் முதல் சோதனையாக தேர்தல் வழி ஆட்சியைப் பெறுதல் என்பதை கேரளத்தில் நடைமுறையாக்கியது. தொடர்ந்த நேரு ஆட்சி- நம்பூதிரி ஆட்சி கவிழ்ப்பு, சர்வதேச கம்யூனிச இயக்க வேறுபாடுகள்- உட்கட்சி வேறுபாடுகள் இந்திய கம்யூனிச இயக்க சோதனையில் உடைவை உருவாக்கின.

கேரளா ஆட்சி, வங்க ஆட்சி, திரிபுரா ஆட்சி என்ற மாநில சோதனைகள் நடந்தன. இந்தியா போன்ற விரிந்த பரப்புள்ள நாட்டில் இரு வழி சோதனைகளை சிபிஅய் மற்றும் சிபிஎம் நடத்திப் பார்த்ததாக சென்குப்தா சொல்கிறார். சிபிஅய் national power வழியாக மெதுவாக கீழிறங்கி பரவலாகுதல், சிபிஎம் மாநில அதிகார தளங்கள் வழியாக தேச அதிகாரம் நோக்கி செல்தல் என்கிற இரு சோதனைகளை இந்திரா ஆட்சி காலத்தில் சோதித்ததாக சென் எழுதியுள்ளார். சிபிஎம் எல் முற்றிலுமாக சீனப்பாதை- அழித்தொழிப்பு எனச் சென்றதையும் இந்நூல் பேசுகிறது. இந்த நூலின் ஆய்வுப் பாதையின் சாரமாக இந்தப் பாராவைச் சொல்லலாம்.

The fundamental dilemma of communism in India can be stated in simple terms. The communists are pitted against a state and a political system created and devised and evolved by the bourgeosie to which the communists could make little positive contribution on their own.

The choice that has baffled them all these years is whether they should work within the system and use its institutions and instruments to gradually change its qualitative character, or whether they should try to overthrow the system and replace it with another based on radical realignment of productive relationships. The United CPI began with the overthrow tactic, then swung to the opposite tactic of working within. (page 404)

இன்னும் ஒரு பாராவில் வேறு ஒரு பிரச்சனையையும் அவர் எழுப்புகிறார்.

Another problem- the influence of regional cultures on indian communism. If Russian communism is Marxism plus slavic culture, chinese communism with Han culture, can Indian communism be immune to many cultures that go into the making of what can loosely be described as Indian culture? ’Regional – nationalist’ sentiments are appear to be strong among middle class intelligentia

சில இடங்கள் சில விமர்சன பார்வைகளை தோழர்கள் ஏற்கமுடியாமல் போகலாம். ஆனால் இந்த நூல் ‘கருத்துருவாக்கம்’- conceptual என்பதற்கு சற்று நெருக்கமாக போகும் புத்தகம் என்பதால் ஆர்வம் உள்ளவர் படித்துப் பார்க்கலாம்.

3-12-2023

ஜனவரி 2026

42. Leftism in India 1917-1947

Leftism in India 1917-1947 by Prof Satyabrata Rai Chowdhuri மற்றும் The Battle of the Left- Comrades Comebacks by Saira ShahHalim என்கிற இடதுசாரிகள் குறித்த இரு நூல்கள் கண்ணில்பட்டன.

மறைந்த சத்யபிரதா ராய் அவர்களின் முதல் நூலை இணையத்தில் பார்த்த நினைவு இருக்கிறது. பேரா ராய் செளத்ரி 1977ல் எழுதி பின்னர் 2007ல் இந்தப் பெயரில் மாக்மில்லன் லண்டன் வெளியீடாக வந்தது. நூலின் ஆழம் அடர்த்தி கருதி மீண்டும் 2017ல் sage பதிப்பகம் கொணர்ந்துள்ளது. இது அமேசான் வழி கிடைக்கிறது.

இரண்டாவது நூல் சாய்ரா ஷா ஹலீம் எழுதியது. பெண்ணியவாதி, பத்திரிகை எழுத்தாளர், போராளி, 2022 தேர்தலில் சிபிஎம் சார்பில் போட்டியிட்டு காங், பாஜக விட அதிகம் வாக்குகளைப் பெற்றவர் சாய்ரா. TMC வேட்பாளர்க்கு சவாலாக நின்றவர். வெற்றிபெற முடியவில்லை. கார்ப்பரேட் உலகில் பணியாற்றிய அனுபவமும் கொண்டவர் சாய்ரா. அவர் எழுதி 2025ல் வெளியான நூல்தான் Comrades Comback.

ராய் செளத்ரியின் நூல் மிக ஆழமான ஒன்று. ஆனால் 1947 உடன் அவர் தன் ஆய்வை நிறுத்திக்கொண்டநூலது. இந்தியாவில் இடதுசாரி சிந்தனை உருவாக்கம், எம் என் ராய் உள்ளிட்டோர் செயல்பாடுகள், காங்கிரசில் நேரு சுபாஷ் போன்ற இடது பார்வை கொண்டோர், காங்கிரஸ் சோசலிஸ்ட்கள், இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி அதன் செயல்பாடுகள் என்கிற விரிவான இடதுசாரிகள் என்கிற பரப்பில் இந்நூல் செல்கிறது. Conceptually strong எனச் சொல்லக்கூடிய அழுத்தமான கருத்தாக்க மதிப்பிடல்கள் இந்நூலின் சிறப்பு எனலாம். இரண்டாவது இயலான Ideologies and Orientations இந்த எண்ணத்தை எனக்கு நல்கியது.

மூன்றாவது இயலில்தான் ராய் செளத்ரி, communism in India என மிக விரிவாக விவரங்களுடன் பேசுவார். எம் என் ராய் அதிகமான இடத்தை எடுத்துக்கொள்கிறார். அதேபோல் CPI- CPSU, CPI- CPGB, கோமிண்டர்ன், இந்தியாவில் INC- CPI, CPI- CSP உறவுகள் பேசப்படும். காங்கிரசிற்குள் வலது- இடது போராட்டம், இடதின் வளர்ச்சி என்பதும், இக்காலத்தில் நடந்த விவசாய- தொழிலாளர் இயக்கங்கள் குறித்தும் ராய் தன் பார்வையை வைத்துள்ளார். இக்காலத்தில் தனியே

செயல்பட்ட பார்வர்ட் பிளாக், ஆர் எஸ் பி , எம் என் ராயின் ராடிகல் கட்சி பற்றியும் ஆசிரியர் பேசுகிறார். நீள அகல உயர 200 பக்க நூல்.

Comrades Comeback விரிவான நூலாகத் தெரிகிறது. படிக்கப் படிக்க அதன் தன்மையை உணரமுடியும் என நம்புகிறேன். சோவியத் தாக்கத்தில் உருவான இந்திய இடதுசாரிகள் கடந்த நூற்றாண்டாக செய்தவற்றை, கேரளா- மேவ- திரிபுரா அனுபவங்களை அசைபோட்டுப் பார்த்து, இன்றுள்ள தேர்தல் சூழலில் இடதுசாரிகள் வீழ்ச்சிக்கு உட்பட்டு நிற்பதையும் சொல்லி, எழுக தோழர்களே மீண்டும் வருக தோழர்களே என்கிற நம்பிக்கையை முன் வைக்க விரும்பும் நூலாகத் தெரிகிறது.

ராய், முன்னர் தலைமுறை பேராசிரியர் என்றால், சாய்ரா இன்று வளரும் இளம் அறிஞர், செயல்பாட்டாளர். பார்க்கலாம் ..இரண்டு நூல்களும் எப்படி என்னிடம் விவாதிக்கப் போகின்றன என..

23-1-2026

feb 2025

43. சிபிஎம் நகல் தீர்மானம்- 24வது காங்கிரஸ்

CPI(M) கட்சி காங்கிரஸ் மதுரையில் ஏப்ரல் 2-6, 2025 நாட்களில் கூடவிருக்கிறது. தங்களின் 24வது காங்கிரசிற்கான அரசியல் நகல் தீர்மானத்தை , சரியாக இரு மாதங்களுக்கு முன்னர் பிப் 3 அன்று அவர்கள் பொதுவெளியில் வைத்துள்ளனர்.

பிப்11 அன்று சிபிஎம் கட்சியின் அந்த அரசியல் நகல் தீர்மானத்தை - 64 பக்க pdf படிக்க வாய்ப்பு கிடைத்தது. கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் தீர்மானங்களை ஒரு முறைக்கு மேல் படிப்பது நல்லது. அடுத்து எப்போது பார்ப்பேன் என இப்போதே ஊகிக்க முடியவில்லை.

அரசியல் நகல் தீர்மானம் என்பது கட்சி அணிகள் மற்றும் அரசியல் ஆர்வலர் கருத்துரையாளர் மத்தியில் எடுத்துச் செல்லப்படும் ஆவணம். திருத்தம் இருந்தால் பெற்று , அடுத்து வரக்கூடிய கட்சி காங்கிரசில் கூடி இறுதிப்படுத்துவார்கள். அந்த ஆவணம் ஏற்கப்பட்ட அரசியல் தீர்மானமாக அடுத்து வருகிற கட்சி காங்கிரஸ்வரை , கட்சிக்கு வழிகாட்டும் ஆவணமாக இருக்கும். இதை Adopted Political Resolution என்பர்.

அதேபோல political review report என்பது வைக்கப்படும். கடந்த கட்சி காங்கிரஸ் வழிகாட்டலில் நடத்தப்பட்ட அரசியல் இயக்க நிகழ்வுகளின் பரிசீலனை அறிக்கையாக இது அமையும். அடுத்து organisational report என்கிற அமைப்பு நிலை அறிக்கை. இந்த இரு அறிக்கைகளும் பொதுவாக பொதுவெளியில், அரசியல் நகல் தீர்மானம் போல வைக்கப்படுவதில்லை. கட்சி காங்கிரசில் இந்த மூன்று ஆவணங்களும் விவாதிக்கப்பட்டு, ஏற்பிற்கு பின்னர் கட்சி அணிகளிடம் எடுத்துச் செல்லப்படும். மூன்றையும் ஒருசேர பார்க்கும் போதுதான் , எந்தவொரு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரோக்கிய நிலை குறித்த மதிப்பீட்டிற்கு வர முடியும்.

கட்சி காங்கிரசிற்கான இந்த முறையை கம்யூனிஸ்ட் கட்சிகளின் அரசியல் செயல்பாட்டு பழக்கம் என புரிந்து கொள்ளலாம்.

இம்முறை சிபிஎம் கட்சி தங்கள் அரசியல் நகல் தீர்மானத்தை வழக்கம் போலவே வடிவமைத்துள்ளனர். அறிமுகம் 3 பாராக்கள், சர்வதேச நிலை 57 பாராக்கள், தேசிய நிலை 96 பாராக்கள் என விரிவான 64 பக்க ஆவணத்தை முன் வைத்துள்ளனர். சென்ற 23வது காங்கிரசில் ஏற்கப்பட்ட தீர்மானத்தில் சர்வதேசம் 79 பாராக்களுடன்,

தேசிய நிலை 173 பாராக்களையும் கொண்ட பெரும் ஆவணமாக இருந்தது. எவ்வளவு பாராக்கள் என்பதல்ல, என்ன அடர்த்தி- என்ன பார்வை- எதில் அழுத்தம் - அதன் reality என்ன என்பதுதான் பார்க்கப்படவேண்டியவை.

'பொலிட்டிகல் லைன்'- கடமைகள்- சவால்களை சமாளிக்க எழுவீர் என்கிற இறுதியாக்கம் 2.85 to 2.96 பாராக்கள் என்பதாக அமைந்துள்ளது. இந்த சாரப் பிழிவிற்கான விரிவு விளக்கங்களாக அதற்கு மேலே உள்ள நூற்றுக்கு மேற்பட்ட பாராக்களை புரிந்துகொள்ளலாம்.

இம்முறை திருத்தம் தருவதற்கு அக்கட்சித் தோழர்களுக்கு உதவியாக, ஒவ்வொரு பாராவிலும் வரி எண்களையும் சேர்த்து தந்துள்ளனர். இந்த பாராவில் இந்த வரிகளில் திருத்தம் என கொடுப்பவர் துல்லியமாக காட்ட முடியும். தலைமையின் இந்த கவனம் பாராட்டிற்குரியது. கம்யூனிஸ்ட் கட்சியில் தான் இப்படி தலைமை முன்மொழியும் அரசியல் நிலைப்பாடுகள் விவாதமாகின்றன. மார்ச் 5 க்குள் திருத்தங்கள் தரப்படவேண்டும். காங்கிரசிலே தீர்மானமே ஏற்பிற்கு வந்துவிட்டால் அனைவரும் கட்டுப்படவேண்டும் என்பதை சொல்லத்தேவையில்லை.

அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, உலக சுரண்டல் ஏற்பாடு, அசமத்துவ வளர்ச்சி, வேலையின்மை, பட்டினி குறியீடு- சுகாதாரம், காலநிலை பிரச்சனைகள், நடந்து வரும் யுத்தங்கள், மக்களின் போராட்டங்கள் என உலக அரங்கு நிகழ்வுகள் சுருக்கமாக சொல்லப்பட்டுள்ளன. சிபிஎம் உலக மக்களின் நியாயமான போராட்டங்களில் , சோசலிச சக்திகளுடன் துணை நிற்கும் என்பது சொல்லப்பட்டுள்ளது.

இந்தியாவில் பாஜக ஆட்சியின் மீறல்கள் பல்வேறு கோணங்களில் அலசப்பட்டுள்ளது. இந்துத்துவா கார்ப்பரேட் கூட்டு- ஒரே பெரும் மார்க்கெட் இரைச்சலுடன் நடைபெற்றுவருவது கவலையுடன் பார்க்கப்பட்டுள்ளது. மக்களின் பல்வேறு போராட்டங்கள், வர்க்க இயக்கங்கள் பேசப்பட்டுள்ளன. நகல் தீர்மானத்தின் மய்ய ஆன்மா இறுதி பாராக்களில் தென்படும்.

2.95

The party has to take on the BJP RSS politically, ideologically, culturally and organisationally.

The party has to resolutely wage the struggle of the workers, peasants, rural labour and all other sections of the working people against exploitation under the neo liberal order

The party has to rally all the Left and Democratic forces to present the real alternative before the people.

(முந்திய பாராக்களில் காங்கிரசும் இந்த neo liberal orderக்காக நிற்கிற கட்சி என்கிற வரையறுப்பும் உள்ளது. இந்தியா கூட்டணி சொல்லப்பட்டாலும் , காங்கிரசுடன் கூட்டில்லை, திரிணமுலுடன் இல்லை என்பதும் சொல்லப்பட்டுள்ளது)

இறுதி 2.96 பாரா தன்னால் முடியும் என்கிற நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாரா

2.96 Let the entire party take the political and ideological message of this Resolution to the people of India!

Let us March forward to build a strong all India party with an organisation that has deep roots among people!

Based on the glorious traditions of the communist movement, we are confident that we shall rise upto meet the challenges before us.

சிபிஎம் கடந்த 23 வது கட்சி காங்கிரஸ் கேரளாவில் ஏப்ரல் 2022ல் நடந்தது.

அதிலும் இறுதி பாராக்கள் பொலிட்டிகல் லைன், கடமைகள், முடிவாக என்று அமைந்தன. இறுதிப் பாரா கவனம் செலுத்த வேண்டிய 5 அம்சங்களை சொல்லியிருந்தது. இவை எந்த அளவு concentrate செய்யப்பட்டன என்பதை ரிவ்யு ரிபோர்ட் தான் சொல்ல முடியும். Concentrate on

Strengthening the revolutionary party with a mass line to establish strong bonds with the people

Widening party's reach and influence among the people and rallying Left and democratic forces

Strengthening party organisation with quality membership as directed by the Kolkata plenum

Focus to attract youth as well as women to the party

Strengthening ideological struggle against all alien ideologies

இம்முறை இவை உள்ளிடாக சொல்லப்பட்டுள்ளன. சிபிஎம் பட்டியலிட்டுள்ள அரசியல் பொருளாதார சமூக சவால்கள் எளிதானவையல்ல, மிகப்பலமானவை. அவர்களின் கட்சி காங்கிரசிற்கு நல் வாழ்த்துகள்!

12-2-2025

April 2025

44. சிபிஎம் அகில இந்திய காங்கிரஸ்

மதுரையில் நடைபெற்று வருகிற சிபிஎம் கட்சியின் அகில இந்திய காங்கிரஸ் , அக்கட்சி தோழர்களுக்கும், இடதுசாரி மற்றும் ஜனநாயக விழைவு கொண்டோர்க்கும் உற்சாகத்தை தரக்கூடிய வகையில் போய்க்கொண்டிருப்பதை கொஞ்சம் கண்ணுற முடிகிறது.

முகப்பில், மறைந்த போற்றுதலுக்குரிய சீதாராம் யெச்சூரி, மார்க்ஸ் அருகில் உட்கார்ந்து அவரவர் போட்டோ எடுத்துக்கொள்ளும் உவப்பு, மார்கஸ்- எங்கெல்ஸ் பொறித்த பரிசுகள், பகத் சிங்- செகுவாரா என இளைஞர்கள் ஈர்ப்பு , சினிமா கலைஞர்களும் பங்கேற்ற கலை நிகழ்வுகள் என பல அம்சங்கள்.

அரசியல் திசை தான் மய்ய சரடு என்கிற வகையில் , இரு மாதங்களுக்கு முன்னரே வெளியிடப்பட்ட அரசியல் நகல் தீர்மான விவாதம் தலையான இடம் பெறலாம். அத்துடன் அரசியல் பரிசீலனை அறிக்கை, ஸ்தாபன அறிக்கை பலம் பலவீனங்கள் அலசப்படலாம்.

துவக்க நிகழ்வில் தோழர் மாணிக் சர்க்கார் தலைமையில் தோழர்கள் பிரகாஷ் காரத், டி ராஜா, திபங்கர் மற்றும் ஆர் எஸ் பி, பார்வார்ட் பிளாக் தலைவர்களும் உரையாற்றினர். இந்த உரை பொது வெளியில் வைக்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியம்- நவீன தாராளமய தாக்குதல்கள்- இந்துத்துவா வகுப்புவாதம் - சாதிய ஏற்றத்தாழ்வுகள் உரையில் சாரமாக சென்றன.

கூட்டாட்சி கோட்பாட்டை வற்புறுத்தும்- அதை சிறுமைப்படுத்தும் பாஜக ஆட்சி மீதான விமர்சனத்துடன் கருத்தரங்கம் நடந்துள்ளது. தோழர் பினராயி விஜயன், காரத் உடன் கர்நாடக கல்வி அமைச்சர் சுதாகர், தமிழக முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று உரை நிகழ்த்தியுள்ளனர். உரை பொது வெளியில்..

பாலஸ்தீன ஆதரவை , சிபிஎம் காங்கிரசில் பங்கேற்ற அனைத்து தலைவர் சார்பாளர்களும் அவர்கள் பாலஸ்தீன பாணி உடையில் மனம் ஒன்றி தெரிவித்த நிகழ்வு பாராட்டைப் பெற்றிருக்கும். நல்ல solidarity உணர்வை இந்நிகழ்வு காட்டியிருக்கும்.

என் மனதில் இரு கேள்விகள் எழுந்தன. தவறா சரியா தெரியவில்லை. ஆனால் கேள்விகள் எழுந்தன. மூத்த தோழர் பிமன் பாசு கட்சிக்கொடி ஏற்றல் என்கிற நிகழ்வு உணர்ச்சி நிறைந்து நடந்தேறியதை வீடியோ காட்டுகிறது. தேசியக்கொடி ஏற்றினார்களா- அப்படி ஒரு மரபு

இதுவரை இல்லையென்றால், அம்மரபை உருவாக்குவது பற்றி சிந்தித்தல் நலம் எனத் தோன்றுகிறது. மற்றொரு கேள்வி காந்தி படம் (நேரு கூட) வைக்கப்பட்டதா- இல்லையெனில் அம்மரபு அவசியமான ஒன்று என சிந்திக்கக் கூடாதா என்பதாகும்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் சுதந்திர தினம், குடியரசு தினங்களில் தேசியக்கொடியை ஏற்றி வருகிறார்கள். என் போன்றவர்க்கு பொது வாழ்க்கை என்பது எங்கள் தொலைத்தொடர்பு தொழிற்சங்க வாழ்க்கைத்தான். எங்கள் கிளை மாநாடுகளிலிருந்து அனைத்திந்திய மாநாடுவரை, சங்கக் கொடியுடன் கட்டாயமாக தேசியக்கொடியையும் ஏற்றும் பழக்கம் இன்றும் வைத்திருக்கிறோம். சம்மேளன பெயரில் தேசிய என்கிற பெயர் இணைவும் இருக்கும்- National Federation என்று.

தொழிலாளர் சர்வதேசியம் என்பது , அறவே தேசியம் இல்லாமை என்றோ- தேசியம் என்றால் வெறிகொண்ட ultra nationalism என்றோ நாங்கள் புரிந்துகொள்ளவில்லை. தேசிய பிற தேசிய இணக்கத்துடன் கூடிய சர்வதேசியம் என புரிந்துகொண்டோம்.

காந்தியை சாய்த்த 'கோட்சே கூட்டம்' எனப் பேசுகிறோம். இந்திய ஒற்றுமைக்கு , மத நல்லிணக்கத்திற்கு, தீண்டாமை எதிர்ப்பிற்கு, குறிப்பாக இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு விடுதலைப் போராட்ட காலத்தில் அவரைவிட பெரிய அடையாளம் வேறு எவருமில்லையே? விடுதலைக்கு பின்னரான இந்திய கட்டுமானத்திற்கு, அரசியல் வலைப்பின்னலுக்கு அவர் தேவைப்படாதவராகிவிட்டார்.

விடுதலை காலத்திலேயே முஸ்லீம்களில் பலர் ஜின்னாவை பலப்படுத்தலாயினர். தேசிய முஸ்லீம்கள் எனச் சிலர் மட்டுமே காந்தியிடம் நின்றனர். இன்றும் இந்தியாவில் முஸ்லீம்களுக்கு காந்தி பெரும் தோழர். ஆனால் அப்படியொரு அங்கீகாரத்தை பார்க்க முடியவில்லை.

விடுதலை காலத்தில் தீண்டாமை ஒழிப்பிற்கு அவரைவிட தொலைதூரம் சென்றவர்- ஊர் ஊராக உரையாடல் செய்தவர் எவருமில்லை. அப்போதே அம்பேத்கர் பக்கம் சில பகுதி தலித் மக்கள் நின்றனர். விடுதலை இந்தியாவில் அம்பேத்கர் பேரடையாளமாகியுள்ளார். அரசியலமைப்பு சட்டம் என்றாலே அம்பேத்கர் என்கிற பொதுப்புத்தியும் உருவாகியுள்ளது . அனைத்து கட்சிகளும் பாஜக உட்பட, சமீப காலத்தில் காங்கிரஸ் உட்பட, அம்பேத்கர் அவர்களை உள்ளிழுக்க விரும்புகின்றனர். வாக்கு அரசியலின் பெருங்காரணியாக அம்பேத்கரை பார்க்கின்றனர். தலித்

இயக்கங்களும் காந்தியை விட பெரும் தோழமையை பார்க்க முடியுமா என்கிற கேள்வி என்னிடத்தில் இருக்கிறது. இந்துத்துவா உள்வாங்களுக்குள் சிலரும், எதிர்ப்பில் அம்பேத்கர் வழி மட்டும் எனச் சிலருமாக தலித் இயக்கங்கள் நிற்பதை காணமுடிகிறது.

திராவிட கழகம் தங்கள் தலைமையகத்தில் , சுதந்திர தினம்- குடியரசு தினத்தில் தேசியக்கொடியை ஏற்றுகிறார்களா ? எனக்குத் தெரியவில்லை. ஏற்றினால் மகிழ்ச்சி. திராவிடர் இயக்க மரபு நீதிகட்சியிலிருந்து என எடுத்துக்கொண்டால், அது தென்னிந்தியா என்கிற புவிபரப்பை களமாக வைத்து பிராமணர் அல்லாதோர் மேம்பாடு என்கிற எண்ண ஓட்டத்தில் பிறந்த ஒன்றாக புரிந்து கொள்கிறேன்.

அண்ணாவின் திமுக உதயம், மொழிவாரி மாநிலங்கள் பிரிப்பு என்கிற புதிய சூழலில், தமிழ் தேசிய தனித்த கூறுகளை அண்ணா பலப்படுத்தினார். திராவிட என்கிற தென்னிந்தியா அடையாளத்தை விடாமல், தமிழ் தேசியக்கூறுகளுக்கான அரசியல் கட்டுமானத்தை ஆட்சி வழி அண்ணா செய்யத்துவங்கினார். கலைஞரும் பலப்படுத்தினார். தமிழகத்தில் 'பெரியார் பரவலாக்கம்' என்பது அண்ணாவின் தனிச் சிறப்பு. இன்றுள்ள பலப்படுத்தப்பட்டுள்ள பெரியார் பரவலாக்கத்திற்கு அண்ணா அடித்தளம் அமைத்தவர். தமிழக சூழலில் இந்துத்துவ எதிர்ப்பிற்கு பெரியாரே பெரும் சம்மட்டி என்கிற அரசியல் புரிதல் பலமாக இருக்கிறது. காந்தியின் தோழமையை இங்கு பொது புத்தி கைவிட்டுவிட்டதாகவே தோன்றுகிறது.

சிவப்பு நீலம் பச்சை என்கிற பகுஜன் முயற்சி இந்துத்துவாவிற்கு எதிரான அச்சு என்றும் , இதை 'எஞ்சி நிற்கும் ' காங்கிரஸ் உதவியுடனோ அல்லது உதவி இல்லாமலோ எதிர்கொள்வது என்கிற அரசியல் புரிதலும் மேலோங்கி இருக்கிறது. இங்கு காந்தி பற்றிய எந்த தேவையும் அவசியமும் உணரப்பட வேண்டியதில்லை என்கிற அரசியல் படமே தெரிகிறது.

இந்தியர் ஒவ்வொருவருக்கும் ஆழமான உணர்தலில் , மனச்சான்றுக்கு , உள ஒழுக்கத்திற்கு, எல்லோருக்குமான எளிய வாழ்க்கை திட்டமிடலுக்கு காந்தி தோழமை தேவை என ஊர்க்குருவிகள் ஆங்காங்கே மெலிதாக குரல் எழுப்பாமல் இல்லை. பெரும் சத்தத்தில், இக்குரல்கள் எடுபடாமல் போகலாம்.. 5-4-2025

ஜூலை 2025

கருத்துக்களை தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் பெற்று, சரி-தவறு என திசை காட்டும் பணியை அரசியல் இயக்கங்கள் செய்து வருகின்றன. கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்கள் காங்கிரஸ் மாநாடுகளை அமைத்து, தங்களின் கடந்த கால அரசியல் குறித்த ரிவ்யூவையும், வருகிற காலத்திற்கான அரசியல் திசை செயல் உத்திகளை வகுப்பதையும் அரசியல் கடமையாக வைத்துள்ளனர். அரசியல் பயணத்திற்கான வாகனமான ஸ்தாபனம், தோழமை சக்திகள் பலம் பலவீனத்தையும் அவர்கள் எடை போட்டுக்கொள்வர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சண்டிகரில் 2025 செப்டம்பரில் நடத்தவுள்ள 25 வது காங்கிரசிற்கான Draft Political Resolution யை வெளியிட்டுள்ளது. 72 பக்கங்களில் 197 பாராக்களில் விரிவான அரசியல் அறிக்கை. கட்சியினர் மத்தியிலும், பொது வெளியிலும் விவாதிக்கப்படுவதற்கான அறிக்கை. காங்கிரசில் இறுதிப்படுத்தி வழிகாட்டும் தீர்மானமாக்குவர்.

ஒரு முறை வேகமாக வாசித்ததத்தில், மிக ஆழமான அறிக்கை என உணர்ந்தேன். கட்சி உறுப்பினர்கள் ஒரு படித்தானவராக எக்கட்சியிலும் இருப்பதில்லை. வெவ்வேறு நிலைப்படிகளில் சூழலில் இருப்பர். பெரும் விஷயங்களை இவ்வறிக்கை பேசுகிறது. குருவி தலையில் பனங்காயா என்கிற எண்ணம் கூட எனக்கு தோன்றியது. அரசியல் ஆர்வலர் அவசியம் வாசித்து புரிந்துகொண்டு, ஏற்பில்லா இடங்கள் ஏதேனும் இருந்தால் அது குறித்தும் சொல்வது

நலம் பயக்கும்.

மய்ய அம்சம் பாஜக ஆட்சியை முடிவிற்கு கொணர்தல் என்பதே. ஏன் எதற்கு அதனை செய்ய வேண்டும்..செய்வது சாத்தியம்தான்- அதனை எப்படி செய்ய வேண்டும் என்பது தான் core sprit of the DPR. இதற்கான ஏராள விளக்க விவரங்களை அறிக்கை முன் வைக்கிறது.

தன் உறுப்பினர் ஸ்தாபன பலம், தன் சொந்த மீடியா பலத்தில் தான் இது போன்ற தங்கள் அறிக்கைகளை இடதுசாரிகள் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. மெயின்ஸ்ட் ரீம் மீடியாக்கள் இது குறித்து எந்த விவாதத்தையும் செய்வதில்லை. தமிழ் மீடியா கேட்கவே வேண்டாம். 'பாசிசம் பாயாசம்' என ஒரு வரியை வைத்து அனைத்து டிவி விவாதங்களும் நடந்து முடிந்து விடும்.

இடது கட்சிகள் தங்கள் அறிக்கை மீது அனைத்து கட்சி அல்லது அரசியல் முதிர்ச்சியாளர்களைக் கொண்ட விவாத அரங்குகளை கட்டமைக்கலாமோ என எனக்குத் தோன்றுகிறது. அதில் அறிக்கை மீதான ஏற்புகள் அல்லது விமர்சனங்களை வரவேற்க வாய்ப்பு இருக்கலாம்.

இம்முறை சிபிஅய் நகல் தீர்மானம் முக்கிய அரசியல் பதம் ஒன்றை பயன்படுத்தியுள்ளதைக் கண்டேன். Surveillance Capitalism. கண்காணிப்பு முதலாளித்துவம். இதற்கு முன்னரெல்லாம் industrial capitalism, electronic capitalism, crony capitalism போன்ற பதங்களை தங்கள் அணிகளிடம் எடுத்துச் சென்றிருப்பர். இம்முறை கண்காணிப்பு முதலாளித்துவம் என்கிற ஒன்று அறிமுகமாகியுள்ளது.

The Age of Surveillance Capitalism என்கிற ஆய்வு நூலை அமெரிக்க பெண்மணி ஹார்வர்ட் பேரா Shoshana Zuboff எழுதியுள்ளார். அந்நூலை நான் படிக்கவில்லை. அதில் தான் அவர் இந்த 'கண்காணிப்பு முதலாளித்துவம்' என்கிற கருத்தாக்கத்தை விரிவாக முன் கொணர்ந்தார். அதாவது அரசாங்க surveillance என்பதல்லாமல், அவர்களுக்கு இணையாக அல்லது ஒத்திசைவாக, ஏன் எதிராகக் கூடபெரும் corporate giants Google போன்றோர் செய்திடும் commodification of personal data- companies commodify human experience and behaviours , அதன் மூலம் கோடிக்கணக்கில் இலாபம் பற்றிய விஷயமிது. Monthly Review போன்ற இடது பத்திரிகைகள் இது குறித்து கொஞ்சம் விவாதித்துள்ளன.

அடுத்து ஒரு பதம் precariat class என்கிற சமூகவியல் சார்ந்த பதம் இவ்வறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்தும் என்னிடம் வாசிப்பு இல்லை. எந்த பாதுகாப்புமில்லா, நிரந்தரமில்லா கிக் தொழிலாளர் போன்ற தனி உதிரி தொழிலாளர்கள். Economic insecurity and social exclusion கொண்டவர் என சில விளக்கங்களைப் பார்த்தேன். இதை சற்று ஆபத்தான under class என்றும் சொல்பவர் உண்டு.

அறிக்கை 'the BJP RSS regime is pushing India towards corporate controlled , Fascist state' என மதிப்பிட்டுள்ளது. பாசிச அரசு நோக்கி தள்ளுகிறது என்பது மதிப்பீடு. அறிக்கையின் பாராக்கள் 143-146 இது குறித்து விரிவான விவாதப் பரப்பை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளன.

பாரா 144ல் அய்ரோப்பிய செவ்வியல் பாசிசத்திற்கு அமைந்தது போல அல்லாமல், இந்தியா பன்முக சமூகம், பல மொழி கலாச்சாரம் சமயம், சாதி உடைய நாடு. The RSS 's fascist project, therefore adapts to Indian

conditions- using electoral legitimacy, communal mobilisation, and ideological narratives rooted in manuwadi social hierarchy to advance its agenda என இந்திய வகைப்பட்ட பாசிச தன்மையை சுட்டிக்காட்டுகிறது. அது பாசிஸ்ட் ப்ரொஜெக்ட் என்ற அளவில் உணரப்பட்டுள்ளது.

முன்னர் சிபிஎம் தன் அறிக்கையில் Neo fascist - characteristics என்று வரையறுத்திருந்தது. அதற்கான தன் note ஒன்றையும் வெளியிட்டது. இதை சிபிஅய், சிபிஎமெல் ஏற்கவில்லை எனவும் சிபிஎம் பதிவு செய்தது.

'நியோ பாசிசம்' இல்லை பாசிசம் இல்லாமல் வேறு என்ன என்று மதிப்பிட்ட சிபிஎம் எல் லிபரேஷனும் 'இந்தியா பாசிச அரசு' என்கிற முடிவிற்கு எவரும் வரவில்லை என்பதை ஏற்றது. அரசியல் விஞ்ஞான ஆய்வாளர்கள் பொதுவாக totalitarianism, illiberal, electoral autocracy, proto fascism போன்ற பல்வேறு பதங்களை பல நாடுகள் குறித்து பேசும்போது பயன்படுத்தி வருகின்றனர். உலகில் முழுமையான பாசிச அரசு/ அரசாங்கம் என ஒரு குறிப்பிட்ட நாட்டை இன்றய நாளில் சொல்ல முடியுமா என்கிற விவாதமும் நடைபெறுகிறது.

அறிக்கையில் இந்தியா கூட்டணியின் அவசியம் உணரப்பட்டுள்ளது. அதன் பலவீனமும் சுட்டிக்காட்டப்பட்டு- ideological inconsistency, varied political socio economic vision லிருந்து பாடங்கள் பெற்று , ஒற்றுமையை common minimum program வழி வலுப்படுத்த வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

மாநில கட்சிகளின் முக்கியத்துவம் பற்றி அறிக்கை விவாதித்துள்ளது. அதே நேரத்தில் தேர்தல் கணக்குகளுக்கு அப்பாற்பட்டு அவை left of centre அணுகுமுறையில் செல்ல வேண்டப்பட்டுள்ளது.

இந்திய பொருளாதாரம் பல்வேறு துறைகள் சார்ந்து விவாதிக்கப்பட்டுள்ளது. வேலையின்மை, அசமத்துவ சமூக குறீயிடுகள் குறித்த விழிப்பை அறிக்கை கொணர்ந்துள்ளது. வெகுஜன இயக்கங்கள், கோரிக்கைகள், போராட்டங்கள் பற்றி அறிக்கை பேசுகிறது.

சாதி ஒழிப்பு என்பதற்கு சிபிஅய் நிற்பது சொல்லப்பட்டுள்ளது. சாதி கணக்கெடுப்பு வற்புறுத்தப்பட்டுள்ளது. பெண்கள் குறித்த பகுதியில், பெண் விடுதலை சோசலிசத்திற்கான மய்ய பிரச்சனை என்கிற மதிப்பீடு சொல்லப்பட்டுள்ளது.

இந்தி திணிப்பு, சிறுபான்மையினர் நிலைமை, ஒரு நாடு ஒரு தேர்தல் உள்ளிட்ட பாஜக அதிரடி போக்குகள் விரிவாக பேசப்பட்டுள்ளன.

பாஜகாவால் உருவாக்கப்பட்டு வரும் ஜனநாயக நெருக்கடியிலிருந்து இந்தியா மீள, அரசமைப்பு காக்க வலிமையான சிபிஅய் என்கிற தேவை உணரப்பட்டுள்ளது.

The CPI must return to its revolutionary roots- not as nostalgia, but as a renewed political orientation focused on militant mass struggles and ideological clarity (para 151).

Left and progressive forces unity அவசியம் என்பதும், மாவோயிஸ்ட் தோழர்கள் தங்கள் ஆயுதப் போராட்ட பாதை குறித்து பரிசீலனை செய்து, பரந்த ஒற்றுமையில் நிற்க வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. பாரா 157 கொடுக்கும் அழுத்தம்

CPI believes Left Unity is not a tactical option, but a strategic necessity for creating an alternative pole in Indian politics rooted in secularism, democracy, social justice and socialism

சிபிஅய் தனது future tasks for a renewed struggle என்பதை பட்டியலிட்டுள்ளது.

பாரா 161ல் The political task of the CPI must align with the strategic goal of defeating the Fascist forces and advancing a democratic alternative எனத் தெளிவான பார்வையை முன் வைத்துள்ளது அறிக்கை.

ஒரு முறை வாசிப்பில், பருந்து பார்வையில் அறிக்கையிலிருந்து சில அம்சங்களை சுட்டிக்காட்ட முயற்சித்துள்ளேன். ஆர்வம் உள்ளவர் அந்த நகல் அரசியல் தீர்மானத்தை படித்து பார்க்கலாம்.

21-7-2025

ஆகஸ்ட் 2024

46. சிபிஅய் மகாத்மா ஒரு மதிப்பீடு நூல்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர்கள் சிலரைக்கொண்டு காந்தியின் நூற்றாண்டு சமயத்தில் - குறிப்பாக அக்டோபர் 2, 1969ல் The Mahatma A Marxist Symposium என்கிற நூலைக் கொணர்ந்தனர். என்னிடம் பல ஆண்டுகளுக்கு முன்னர் (சரியாக வருடம் நினைவில் இல்லை) மகாத்மா மார்க்சிய மதிப்பீடு என்கிற தமிழ் நூல் இருந்தது. எனது கவனக் குறைவால் எங்கோ தவறவிட்டுவிட்டேன்.

ஆங்கில நூலை தோழர் எம் பி ராவ் எடிட் செய்திருந்தார். தோழர் ராவ் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்று ஆவணத்தொகுப்புகளிலும் பங்களிப்பை செய்தவர். நூல் பிபிஎச் வெளியீடாக, 1969ல் ரூ 10க்கு வந்தது. தமிழ் நூலான மகாத்மா மார்க்சிய மதிப்பீடு காந்தியின் 150 ஆம் ஆண்டில் மறுபதிப்பாக கொணரப்பட்டிருந்தால், நலமாக இருந்திருக்கும் என எனக்குத் தோன்றியது.

ஆங்கில நூலில் பதிப்பாளர் குறிப்பில் கீழ்கண்ட வரிகள் இடம் பெற்றுள்ளன

The Communist Party too had on occasions sharply clashed with Gandhiji. It could not accept his various theories, nor could it deny his role in the anti-imperialist movement. Between them there was a bitter struggle as, to who would win the masses and for what ideology.

விரிவான ஒன்றாக நூலைக் கொணர திட்டமிட்டு இருந்தோம். நடைமுறை அரசியல் காரணமாக , எழுத ஏற்றுக்கொண்ட சிலரால் கட்டுரைகள் தரமுடியாமல் போனாலும், முக்கிய தலைவர்கள் பலரும் எழுதியிருப்பதை பதிப்பாளர் குறிப்பு காட்டும்.

135 பக்கங்களில் அன்றைய கம்யூனிஸ்ட் தலைவர்கள் காந்தி குறித்த மதிப்பீடு ஒன்றை தரவேண்டும் என்கிற பொறுப்பில் செய்யப்பட்ட நூலாக இதைப்பார்க்கலாம். இதில் 7 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மகாத்மா நூற்றாண்டு என தோழர் டாங்கே, காந்தியும் சிபிஅய்யும் என சர்தேசாய், விடுதலைக்குப் பின்னர் காந்தியம் என மொகித்சென், தனித்துவ தலைவர் என ஹிரன் முகர்ஜி, 1925ல் காந்தியும் புரட்சியாளர்களும் என மன்மத்நாத் குப்தா, காந்தியும் தேசிய

மொழியும் என சுரேந்திர கோபால், நான் அறிந்த காந்தி என ஆனந்த கௌசல்யன் ஆகியோர் இந்நூலில் பங்களித்துள்ளனர்.

காந்தி குறித்த காந்தியானா- காந்தி கிட்டங்கிக்கு கம்யூனிஸ்ட்களின் இந்நூல் மதிப்பீடு மிகச் சிறிய பங்களிப்பு என்றாலும், முக்கிய பங்களிப்பு- critical appreciation literature என்கிற வகையில் ..

ஹிரன் தனித்துவமாக தனி நூல் ஒன்றை எழுதினார். இ எம் எஸ் அவர்களும் அப்போது நியுஏஜ்ஜில் எழுதியவற்றை தொகுத்து தனி நூலாக கொணர்ந்தார். இந்த இரண்டும் மெயின்ஸ்ட்ரீம் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் இருவரின் மிக முக்கிய பங்களிப்பு. இ எம் எஸ் விட ஹிரன் இன்னும் நெருக்கமாக காந்திய தாக்கத்தை உணர்ந்தவராக தெரிவார். இ எம் எஸ் நூல் முக்கிய ரெஃப்ரன்ஸ் நூலாக பாவிக்கப்படுவதையும் குறிப்பிட வேண்டும். இவர்கள் அனைவருக்கும் முன்பாகவே சோசலிஸ்ட் இதழ் நடத்திய தோழர் டாங்கே 1921 லேயே காந்தி லெனின் ஒப்பீட்டு நூலைக் கொணர்ந்து பெரும் முதல் பங்களிப்பை செய்தார். இன்றும் பேசப்படும் நூல் அது. டாங்கே எழுதிய அந்நூலின் நூற்றாண்டு நேரத்தில் அந்நூல் குறித்து விரிவான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். உங்கள் நூலகம் அதை வெளியிட்டிருந்தனர்.

காந்தி குறித்து ’காந்தியைக் கண்டுணர்தல்’, தோழர் காந்தி என்கிற இரு நூல்களை என் வாசிப்பு மற்றும் புரிதலில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் கொணர்ந்தேன். இணையத்தில் எவரும் வாசிக்ககூடிய மின் நூல்களாக அவை இருக்கின்றன. இந்நூல்கள் தனித்த ஆர்வம் காரணமாக எழுதப்பட்டு வந்தவை. ஏராள விவரங்களை கொண்ட நூல்கள் அவை. conceptual சாரமும் இருக்கும்.

1969 The mahatma நூல் குறித்து சில செய்திகளைப் பார்ப்போம்.

காந்தி குறித்து எம் என் ராய் காலம்தொட்டு சொல்லப்படும் அதே குற்றச்சாட்டுகள் இந்நூலிலும் காணப்படும். அவர் மறைபொருள்வாதி, மத்தியகாலத்தவர், ஏகாதிபத்திய நிலபிரபுத்துவ சக்திகளுடன் சமரசம் செய்துகொண்டவர், geneuine revolutionary action யை தடுத்தவர், அவர் எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும் பூர்ஷ்வா வர்க்க தலைமைகொண்டவர், மக்கள் திரட்சியை உருவாக்கினாலும் அதைக் கட்டுக்குள் நிறுத்தி வைத்தவர்

சர்தேசாய் எழுதும்போது

The CPI could never grasp Gandhi and Gandhism in their totality. They always eluded such a grasp, and in that sense remained an enigma for us, all our cocksureness not withstanding

ரஜினி பாமிதத் மதிப்பீடாக சர்தேசாய் தருவது

“Gandhi failed as the leader of the national struggle be

cause he could not cut himself loose from the upper-class

interests and prejudices in which he had been brought up... The ‘spirituality’ of Gandhi is only the expression of this class interest. All parasitic and propertied classes have to weave around themselves a fog of confused language, supersti tion, tradition, religion, revivalism, etc. in order to hide from the masses the fact of their exploitation.”

காந்தியின் அகமதாபாத் பஞ்சாலை தொழிற்சங்க முறை உண்மையான தொழிற்சங்க இயக்க முறையாகாது என்ற குற்றச் சாட்டும் இதில் காணப்படும்.

சக்லத்வாலா- காந்தி கடித சாரமும் சுட்டிக்காட்டப்படுள்ளது. காந்தியின் பதிலில் காணப்படும் முக்கிய அம்சம்

I regard you as a fellow seeker after truth. . . It is not

given to all of us to agree with one another in all our

opinions; but it is given to every one of us to tender the

same respect for the opinions and actions of our fellows as we expect for our own

சர்தேசாய் இருவிதமான காந்தி குறித்த மதிப்பீடுகளை இக்கட்டுரையில் முன் வைத்திருப்பார். இந்நூலின் சாரமாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

On the one hand, Gandhi’s theistic ideology and tenets

expressed through his creed to truth, nonviolence, love, re nunciation, selfpurification, the inner voice, change of heart, trusteeship, etc. were the expression of India’s socioeconomic backwardness, and more particularly the backwardness and superstition of the Indian peasant masses. Hence, they were antiquated and unscientific. Inevitably they were inadequate from the standpoint of the ideological demands of a full de velopment of India’s revolutionary anti-imperialist struggle.

In the ultimate analysis, they were harmful, as all supersti tion and faith in divine guidance are harmful for an uncompromising revolutionary struggle

On the other hand, in the given historical conditions, the

same social, ethical and philosophical ideas expressed the

yearnings and aspirations of tens of millions of the Indian people awakened to new life and struggle against the domination and miseries of foreign rule (e.g. such declarations and writings of Gandhi as, “This Satanic government cannot be mended, it must be ended”; “God dare not appear before the poor except in the form of bread”, etc.).

And what is even more important, in practice the ideas

took the form of hartals, mass noncooperation, satyagraha,

civil disobedience and so on, i.e., mass protest actions against imperialism. These surely were not revolutionary forms of struggle, but history has proved that, nonetheless, they were powerful and effective forms of struggle in our freedom movement.

காந்தி கம்யூனிஸ்ட்களிடம் ஒன்றுபடும் இடத்தையும் வேறுபடும் இடத்தையும் சுட்டிக்காட்டத்தக்க ,ஹரிஜன் இதழில் வந்த (1937 மார்ச் 13) மேற்கோளைத்தருகிறார்.

“What does communism mean in the last analysis? It means a classless society—an ideal that is worth striving for. Only I part company with it when force is called to aid for achieving it.”

இ எம் எஸ் எழுதிய மகாத்மாவும் இசமும் கூட அவரது தனிப்பட்ட முயற்சி, கட்சி ஆவணமல்ல என்று இக்கட்டுரையில் சர்தேசாய் குறிப்பிடுகிறார்.

இக்கட்டுரையை முடிக்கும்போது தோழர் சர்தேசாய் முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பி இவ்வாறு முடித்திருப்பார். ஒருவேளை காந்தி வெறியனின் குண்டுக்கு பலியாகாமல், விடுதலை இந்தியாவில் வாழ்ந்திருப்பார் ஆனால், அவர் ஏழைகளின் பக்கமே நின்றிருப்பார். நாம் நினைக்கும் வழியில் இல்லாமல் போகலாம், அவர் கருதும் வழியில் பணக்கரர்களுக்கு எதிராக ஏழைகளுடன் அவர் நின்றிருப்பார் என சர்தேசாய் சொல்கிறார்.

மொகித்சென் மதிப்பீட்டில்

If Gandhiji was opposed to the mad rush of capitalist industrialisation he was no less opposed to its real negation- working-class socialism

Expressing an impossible dream, opposing independent action by the peasants and thwarting the possibility of working-class leadership, Gandhism inevitably handed over India to the capitalist class, to those who grew in the shadow of the Mahatma, as Birla lovingly puts it.

It is, of course, necessary to remember the achievements of Gandhiji. There is no doubt that he was the foremost anti-imperialist leader produced by our mass struggle for free dom. It was he who accomplished the mass turn of the peasantry to the national movement and who built the Congress into the anti-imperialist, organised front extending into every village and town. It was he who strove for Hindu- Muslim unity, for the realisation of Indian unity based on the recognition of its diversity. It was he who brought dardranarayana, the harijan, to the centre of the national conscience. It is not these accomplishments that one is doubting when one critically examines the source and the consequence of his ideology

1969ன் மொகித்சென் இப்படி ஒரு மதிப்பீட்டையும் தன் கட்டுரையில் தந்துள்ளார்

Nobody benefited from the Gandhi-Nehru leadership than the Indian industrial national bourgeoisie

மேலும் மொகித் எழுதுகையில் காந்தியின் நேர்மறையான சாராம்சங்களை (கம்யூனிஸ்ட்கள் நினைக்கும்) கம்யூனிஸ்ட்களே எடுத்துச் செல்கின்றனர். இதனால் அகிம்சைக்கு மாறிவிட்டோமா என்றால் இல்லை என எழுதியிருப்பார். அவ்வரிகள்

which is the force in India that carries forward today that is positive in the heritage of Gandhism? It is none other than the left, and in the first place, the communists. Here we have an example of sublation, to use a Hegelian term. It is a case of a carry-forward by negation. Does it mean that the left and the communists have become converts to the creed of nonviolence? Very far from it.

மேலும் நீள்வதை நிறுத்துகிறேன். வாய்ப்புள்ளோர் வாசித்துப் பார்க்க சிறிய தூண்டுதலை இந்த இடுகை செய்தால் நலம்.

இதில் எழுதிய தலைவர்களின் கட்டுரைகள் காந்தியின் நூறு வால்யூம் தொகுப்புகள் முறைப்படுத்தி (1958-1994) வருவதற்கு முன்னர் எழுதப்பட்டவை. ஏராள காந்திய ஆய்வுகள் உலகளாவிய அறிஞர்கள் பார்வையில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் காலமிது. விரிவான காந்திய வாசிப்பு கொண்டவர்கள் இங்கு பேசப்பட்டுள்ள கருத்துக்களுடன் மாறுபடலாம். காந்தியை மகத்தான புரட்சிகர ஆளுமையாக பார்த்த ஆய்வுகளும் ஏராளம் இருக்கின்றன. தேடிச் செல்வோர்க்கு மாபெரும் திறப்பாக காந்தி அமைவார்.

15-8-2024

march 19 2024

47. நாடாளுமன்றத்தில் பெண்கள்- முஸ்லீம்கள்

1952 முதல் பொதுத் தேர்தல் தொடங்கி 2019 தேர்தல்வரை இந்திய நாடாளுமன்றத்தில் எவ்வளவு பெண்கள் இடம் பெற்றனர், எவ்வளவு முஸ்லீம்கள் இடம் பெற்றனர் என்ற விவரம் ஒன்றை எஸ் ஒய் குரைஷி India's Experiment with Democracy- the life of a nation thro its Elections என்பதில் கொடுத்துள்ளார்.

ஆண்டு	பெண்கள்	முஸ்லிம்
1952	24	21
1957	22	24
1962	31	23
1967	29	29
1971	21	30
1977	19	34
1980.	28.	49
1984	43.	46
1989.	29.	33
1991.	39.	28
1996.	40.	28
1998	43.	29
1999.	49.	32
2004	45.	36
2009	59.	30
2014	62.	23
2019	78	27

1952 ல் நாடாளுமன்ற இடங்களில் 4.91 சதத்தில் பெண்கள் இருந்தனர். தொடர்ந்த தேர்தல்களில் இந்த சதவீதம் 4.45, 6.27, 5.57, 4.05, 3.50 என வீழ்ந்து சிறிது சிறிதாக உயர்ந்து 2019ல் 14.36 சதத்தை தொட்டுள்ளது. 33 சதம் என்று நினைவாகும் எனத் தெரியவில்லை. சரிபாதி இடங்களுக்கு செல்ல இன்னும் எவ்வளவு தேர்தல்கள் தேவைப்படுமோ..

முஸ்லீம்கள் பெற்ற இடங்களின் சதம் பார்த்தால் 1952 ல் 4.3 எனத் தொடங்கி தொடர்ந்த தேர்தல்களில் பெரும்பாலும் 5 சதத்தை சுற்றியே

நின்றுள்ளது. அதிகமாக 1980ல் 9.3 சதத்தையும், 1984ல் 8.5 சதத்தையும் தொட்டுள்ளனர். Double digit percentage என்பதை இந்திய அரசியல் அவர்களுக்கு இதுவரை தரவில்லை.

CPI மற்றும் CPM என ஒன்றாக எடுத்துக்கொண்டு டேட்டா ஒன்றை குரைஷி தந்துள்ளார். 1952 லிருந்து 2019வரை தொடர்ந்த தேர்தல்களில் அவர்கள் பெற்ற சீட்டுகள் விவரம்.

16, 27, 29 , 42, 48, 29, 47, 28, 45, 49, 44, 41, 37, 53, 20, 10, 5.

அதிகமாக இரு கட்சிகளும் பெற்ற 53 இடங்கள் 2004ல். குறைவாக பெற்ற 5 இடங்கள் 2019ல்.

அதிக பட்சமாக அவர்கள் பெற்ற வாக்கு சதம் 9.85 (1971) , குறைந்த வாக்கு சதம் 2.33 (2019)

காங்கிரஸ் 1984 ல் ஆக அதிக 414 இடங்களையும், ஆக அதிக 48.12 சதத்தையும் பெற்று தேர்தல் வரலாறு படைத்துள்ளது. அதற்கு 2014ல் மிகக் குறைந்த 44 இடங்களும், மிகக் குறைந்த 19.30 சத வாக்குகளும் கிடைத்தன. இப்போதும் எதிர் கட்சியிலேயே 20 சத அனைத்திந்திய வாக்குகளைக் கொண்ட பெரிய கட்சி காங்கிரஸ்தான்.

பாஜக 1984 ல் குறைந்த 2 இடங்களை 7.74 சத வாக்குகளை பெற்ற கட்சியாக இருந்து, 2019 தேர்தலில் 303 இடங்கள் 37.3 சத வாக்குகள் பெற்ற பெரிய கட்சியாக வளர்ந்தது.

2024 தேர்தல் இந்திய அரசியலை எப்படி அழைத்துப் போகப் போகிறதோ? மக்களின் விருப்பம் awareness பொறுத்து அவர்கள் தீர்ப்பு தரக்கூடும். Let India be not in the list of flawed democracy or electoral autocracy…

Ap 2025

48. அலகிலா விளையாட்டு- AI உடன் political Fun making

(கடைசியில் நிறைய fun இருக்கு- படு அரட்டை)

'நியோ பாசிசம்' என்கிற பதம் அரசியல் வட்டாரத்தில் விவாதமாகியுள்ளது. குறிப்பாக சிபிஎம்மின் ஏப்ரல் 2025 மதுரை காங்கிரசிற்கு வைக்கப்படவுள்ள அரசியல் தீர்மான நகல் பாஜக அரசாங்கத்தை எப்படி வரையறுப்பது- stamp இடுவது என்கிற தன்மையில் 'neo fascist traits trends' என்கிற மதிப்பீட்டை தந்துள்ளது.

இது குறித்து வேறு இடது கட்சிகள், இடது பார்வை கொண்டவர்கள் விமர்சனரீதியான பார்வையை தந்து வருகின்றனர். கோடானு கோடி இந்திய மக்களிடம் இந்த மாதிரியான கோட்பாட்டு சண்டை சச்சரவுகள் காதுக்கு போவதில்லை. ஆனால் அதில் ஆர்வம் உள்ளவர்கள் மயிர் பிளக்கும் வாதங்களில் ஈடுபடாமல் இருக்க மாட்டார்கள்.

இது குறித்து பேசுகிற அனைவருமே ஏதாவது கோட்பாட்டு அறிஞர் பெருமக்களை, அவர்கள் / இவர்கள் சொல்லியிருக்கின்றனர், அது absolute என்கிற பார்வையில் தங்கள் விமர்சன பக்கங்களை அடுக்கி தைப்பர். மார்க்சிய லெனினிய வெளிச்சத்தில் அந்த விமர்சனம் வைக்கப்படுவதாகவும் சொல்வர். பெரும்பாலும் rhetoric.

சிபிஎம் கட்சியும் மார்க்சிய லெனினிய அம்சத்திலேயே இருக்கிற நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து, தாங்கள் இப்படியான 'நியோ பாசிஸ்ட் சாயலில் பாஜக அரசாங்கம் ' என முன் வைப்பதாக சொல்வர். இதற்கான விளக்க குறிப்பு ஒன்றையும் (why using the term Neo Fascism- characteristics) அக்கட்சியின் மத்திய கமிட்டி கூடி , அணிகளிடம் எடுத்துச் செல்ல வெளியிட்டுள்ளது.

சிபிஎம் எல் திபங்கர் எழுதியது, எஸ் வி ராஜதுரை போன்றவர் விமர்சித்து எழுதியதை வெளியிட்டவர்கள், சிபிஎம்மின் இந்த குறிப்பையும் சேர்த்தே வெளியிட்டிருந்தால், ஆரோக்கியமாக இருந்திருக்கும்.

இப்போது AI open source காலம். நிரம்ப மெனக்கடாமல் தட்டினால் அதற்கு feed ஆனதை - குவிந்து கிடப்பதை அது தந்துவிடுகிறது. காலம் ரொம்ப மாறிக்கொண்டிருக்கிறது. எந்த rhetoric குறித்தும் எவ்வளவு வேண்டுமானாலும் தேடித்தேடி எழுதி விடலாம்.

‘ரொம்ப திட்டுகிறவன் பெரிய புரட்சிக்காரன்’ (ஓ அந்த தோல் நிறமா அவன் பொய் சொல்ல மாட்டான் போல) என்கிற பொது புத்திக்கேற்பக் கூட தேடி எழுத்தில் உஷ்ண புரட்சியை கக்கவிட முடியும் . ‘தேடுவதைக் கண்டடைகிறாய்’ என்கிற பண்டைய வாக்கியத்திற்கு AI open source உற்ற துணைவன். சில நேரம் அது அசடு வழியும்- நாம் நன்கு பயின்று தேர்ந்த விஷயங்களில் அதன் மூக்கு வெளுக்கலாம்.

சரி . இந்த நியோ பாசிஸ்ட் விளையாட்டை செயற்கை நுண்ணறிவு தளத்தில் ‘அரட்டை ‘ அடித்துப் பார்க்கலாம் எனப் போனேன். விடாது துரத்து துரத்து என ‘ரொம்ப ‘ அரட்டையை தருகிறது. ஆளை விடுப்பா சாமி என கும்பிடு போடும்வரை, அதை தரட்டுமா- இதை தரட்டுமா என tempt செய்து கொண்டே- வா இரண்டு பேருக்கும் வேறு வேலை இல்லை என சிரித்துக்கொண்டே- அரட்டை மகிழ்ச்சியில் அது திளைக்கிறது.

நான் கேட்டுத்தொலைத்த கேள்விகள்.

What is Neo Fascism?

நான் கேட்டது ஒரு வரி. அது கொட்டோ கொட்டு என பெய்யன பெய்யும் மழையானது. அது போகுது போங்க, தலைப்பை சொன்னாலே மூச்சு வாங்கிடும் . ஒவ்வொன்றுக்கும் விளக்கம் வேறு.

Ultranationalism, Authoritarianism, xenophobia- Racism, Militarism- Aggression, Anti Globalism (இது என்னய்யா இடிக்குதே) , conspiracy theories (ஓ இது கூடவா) , use of violence. இத்துடன் விடவில்லை. மூல பாசிசத்திலிருந்து , அட இத்தாலி, ஜெர்மனி முசோலினி- ஹிட்லரிடமிருந்து - இந்த நியோ எப்படியெல்லாம் வேறுபடுது (நான் கேட்டேனா, அதுவே சொல்லுது அரட்டை அரட்டை).

விட்டதா, உனக்கு உதாரணம் சொல்றேன் என வேறு கிளம்பிவிட்டது. அப்புறம் கேட்குது, இந்த நியோ பாசிசம் என்கிற பதம் குறித்து உள்ள சச்சரவெல்லாம் சொல்லட்டுமா என(என்னை எங்க பதில் சொல்ல விட்டது) ஆரம்பிச்சு, அதைப் பற்றி ஒரே அங்கலாய்ப்பு.

அப்பா , நல்லவேளை அடுத்த கேள்வியை கேட்க விட்டது. கேட்டேன்.

How political India is characterised with Neo Fascism?

இப்பயும் பாருங்க எவ்வளவு சிம்பிளா ‘அரசியலை சிம் ‘ ல வைத்து கேட்கிறேன். அது கக்குது கொட்டுது.

பாஜக பற்றி இப்படி சொல்றாங்க என ஆரம்பித்தது AI.

“ in recent years political analysts and critics have accused BJP the ruling party- of promoting policies and rhetoric that align with neofascist tendencies”

எப்படி சாமர்த்தியமா தப்பிக்குது பாருங்க..அவங்கெல்லாம் அப்படி சொல்றாங்கப்பா , நான் அதை எடுத்து தாப்பா தரேன் என்கிற மாதிரி..

உனக்கு, நியோ பாசிசம் என குற்றம் சொல்பவர்கள் சொல்லும் முக்கிய குணங்களை சொல்லட்டுமா என ஆரம்பித்து அடுக்கியது. இங்கும் தலைப்பை சொன்னாலே ‘காற்று வரட்டும் கிளம்பு’ என சொல்வீர்கள்

Hindutva as state Ideology (இப்படி ஆகிவிட்டது என சிபிஎமெல் கூட சொல்லலை இன்னும்)

CAA 2019, Removal of Mughal History, Renaming, Authoritarian Governance-centralisation of power, media control (Tn அரசாங்கம் குறித்துக் கூட இப்படி ஒரு குற்றச்சாட்டு- உ ஷ் மூச்), Election manipulation, Strong man Modi image building, cult building, Revisionist history , suppression of minorities, hyper nationalism, IT cell disinformation (இப்ப இந்த செல் இல்லா கட்சி ஏது?) communal propaganda

அப்புறம் AI என்ன நினைத்ததோ இரு இரு - why some reject the label of Neo fascism என ஆரம்பித்து அது குறித்து பேச ஆரம்பித்தது.

Democratic elections (அப்படியா ஆமாம் அப்படித்தான் சொன்னா கேட்டுக்க, முன்னாடி சொன்னதைக் கேட்டேலே)

Economic Development, Global Alliances

சரி. அப்புறம் கொஞ்சம் விட்டுப்பார்த்தேன். நியோ பாசிசம் கொஞ்சம் பேசிட்டோம். பாசிசம் கேட்டுப்பார்ப்போம். என் கேள்வி

Whether we can stamp BJP Govt as Fascist or Indian State as Fascist one?

AI குஷியாடுச்சு. சற்றுகோபத்துடன் தான் ஆரம்பித்தது. ஆமாம்

Labeling the BJP govt or the Indian State as fascist is a controversial and debated topic . While some scholars and activists , political opponents argue that the BJP exhibits Neo fascist tendencies, others reject the label, citing India’s democratic institutions and electoral legitimacy

என ஒரு போடு போட்டது. கேளு என இரண்டு side arguments யையும் மூச்சு வாங்க இறக்கி வைத்தது.

முடிவா சொல்றேன். கேட்டுக்கே என இப்படி AI சொன்னது.

While India is not a textbook fascist state (இது என்னய்ய புது பதம் textbook Fascism…விளையாடுங்கப்பா) , the BJP's Hindutva politics align with Neo Fascist characteristics (சிபிஎம்மை சொல்றீங்க இப்ப AI சொல்லிடுச்சே) . If unchecked India could slide down further into full blown fascism (இது என்ன full blown fascism வேண்டாம் வேண்டாம் AI அரட்டை ஆரம்பித்துடும்)

அது விடலை. மோடி ராஜாங்கத்தை classical Fascist regimes உடன் ஒப்பிடு காட்டறேன் வா ராஜா என கெஞ்சாத குறையா அழைச்சுட்டு போனது. Tabular columnலாம் போட்டு நிரம்ப கஷ்டப்பட்டது (கஷ்டப்படுத்தியது). அப்புறம் இந்திய எப்படி 'differs from classical Fascism' என தன்னை நிலைப்படுத்தி சற்று 'பாலன்ஸ்' காட்டியது. India resembles Electoral Autocracy என முன்பே இருந்த பேச்சை அதுவும் சொன்னது.

முடிவா சொல்றேன் என AI

India is not a full fascist state (அரை பாசிசம் என அது சொல்லலை) , □□ (தப்பா இந்தியில் டைப் ஆகிவிட்டது) the BJP govt exhibits clear Neo fascist tendencies. AI சொன்னதை தானே சிபிஎம்- சாரி சாரி சிபிஎம் சொன்னதை தானே AI சொல்லுது .அப்புறம் என்ன ?

வரட்டுமா எனக் கேட்டேன். You are welcome நு சொல்லிட்டு, இவன் புத்தகம் பைத்தியம்னு எவர் AI கிட்டே சொன்னங்களோ தெரியலை, இதெல்லாம் வேணும்னா படிப்பா என புத்தகப் பெயரெல்லாம் அடுக்கியது. ஒரு சலுகை கொடுத்தது. படிக்க முடியலையேன்னா சொல்லு, gist/ summary தரேன்னு சொன்னது. என்ன நினைத்ததோ தெரியலை, அரட்டையை நிறுத்திவிட்டு சாரி that is beyond my current scope என சொல்லிடுச்சு.

Enough சொல்லி நான் விடை பெற்றேன். அதுவும் மறக்காம Jai Hind என்றது . கிண்டலா என நான் கேட்டுவிடக்கூடாது என்பதற்காக in the truest most democratic sense என சொல்லிட்டு, fist bump போட்டுவிட்டு போயிடுச்சு…

1-4-2025

இது ஒன்னும் முட்டாள் தினமல்ல ஆமாம் சொல்லிபுட்டேன்.

may 2024

49. கற்பது...

கற்றுக்கொள்பவர்கள்- கற்றுக்கொடுப்பவர்கள், படிப்பவர்- எழுதுபவர் என்றும் வைத்துக்கொண்டால்- அவர்கள் இருவகையிலாய் அமைவதை உணரமுடிகிறது.

ஒன்றை - ஓர் இசத்தை, சிந்தனைப் போக்கை நம்பி தொடர்ந்து அதைத்தேடுபவர்கள், அதற்கான தரவுகளைத் தேடி அது எவ்வளவு உன்னதமானது எனச் சொல்பவர்கள் ஒரு ரகம். அது குறித்து விமர்சனங்களை எதிர்கொண்டு தான் ஏற்ற , நம்பும் அதற்காக கடுமையான எதிர்வினையாற்றுபவர்கள். தான் நம்பிய ஒன்றை absolute என்கிற புரிதலில் செயல்படுபவர்கள்.

மற்றொரு ரகம் தொடர்ந்து கற்றல் வழியாக இது சரியாக இருக்கிறதே என மனதளவிலும் புத்தியிலும் அதை பார்ப்பவர்கள். இரட்டை நிலைப்பாடு இல்லாமல் இருக்கிறதா என்கிற புரிதலை தேடுபவர்கள். ஒன்றை குறித்து அறிந்து கொள்வதே ' தீட்டுப்பட்டுவிடும்' எனக் கருதாதவர்கள். ஒன்றை அறிந்துகொள்வதற்கான உழைப்பை கொடுக்காமல் அது குறித்த bias வேண்டாமே என பழக்கப்படுத்திக்கொள்பவர்கள். ஆதாரங்களை தேடாமல், கேள்விப் படுவதையெல்லாம் வைத்துக்கொண்டு கருத்தை உருவாக்கிக் கொள்ளாதவர்கள்.

என் சொந்த வாழ்வில் கற்றல் முறையில் இந்த இரண்டு ரக சாயலும் என்னிடம் இருந்ததை உணரமுடிந்தது. இளைஞனாக மார்க்சியம் மிகச் சரியானது என்கிற நம்பிக்கையுடன், கையில் கிடைத்தவற்றை புரிந்தும் புரியாமலும் படித்தல், வெளிச் சொல்லுதல், ஏன் பிறருக்கு வகுப்பு எடுத்தல் கூட நடந்திருக்கிறது. மார்க்சியம் குறித்து விமர்சிப்பவர்களை அரைவேக்காடுகள் என கடுமையாக சாடியது உண்டு. தோழர் கோவை ஞானி போன்றவர்களிடம் கூட கம்யூனிஸ்ட் கட்சி இதழ்களை வாசிக்காமலேயே அவர்களை விமர்சனம் செய்வது நேர்மையா என சண்டையிட்டதுண்டு. அவரின் மார்க்சிய புரிதல் குறித்து தனிக் கட்டுரை எழுதியதுண்டு.

சிபிஅய் சிபிஎம் சிபிஎம் எல் என தோழர்களாக நாள்முழுதும் அமர்ந்து , ஆவணங்களுடன் காரசாரமாக எங்கள் லைனே சரி என மோதிக்கொண்டதுண்டு. கூட்டங்களில் டாங்கேவை, எங்கெல்சை குறைசொன்னார்கள் என சில மார்க்சிய பேராசிரியர்களிடம் மரியாதை குறைவாக நடந்துகொண்டதுண்டு. கம்யூனிஸ்ட் கட்சி

காங்கிரஸ் ஆவணங்கள் குறித்தும், கட்சி திட்டங்கள் குறித்தும் அதிகப்பிரசங்கி எனக் கருதிக்கொள்ளாமல் தோழர் பிரகாஷ் காரத் அவர்களுக்கும் கூட எதிர்வினையாற்றியதுண்டு. சமீபத்தில் கூட தா. பாண்டியன் எழுதிய பொதுவுடைமையாளர் வருங்காலம் என்கிற புத்தகத்தில் காணப்படும் factual errors குறித்து எழுதியதும் உண்டு. இந்தப் போக்கின் சாயல் சற்று நீர்த்துப் போகத்துவங்கியுள்ளது என இப்பொதெல்லாம் உணரமுடிகிறது.

காந்தியுடன் போகத்துவங்கியதில் குட்டி குட்டி transformational moments என்பதை உணரமுடிந்தது. காந்தியை நம்பி நான் அவரிடம் போக ஆரம்பிக்கவில்லை. அவரை விமர்சிக்கவேண்டும் என உள் நுழையவில்லை. எப்படி நிகழ்ந்தது எனத்தெரியவில்லை, திறந்த மனதுடன் என் baggage எல்லாம் வைத்துவிட்டு சென்றதாகவே எனக்குப்படுகிறது.

நான் காந்தியிடம் போவதற்கு முன்பாகவே மார்க்ஸ் உடன் அவ்வப்போது பெரியார், அம்பேத்கர் எனச் சென்றதுண்டு. மார்க்ஸ் அம்பேத்கர் பெரியார் எல்லோருமே அப்போதைய என் உரிமை சார் கண்ணோட்டத்திற்கு பெரும் கருவிகளாக இருந்தனர் . கடமையை அருமையாக செய்த பல தோழர்கள் அப்போதும் என்னருகில் இருந்துள்ளனர். நான் சரியாக உணரவில்லை.

காந்தி என்னிடம் பல கேள்விகளை எழுப்பியவர். இரட்டை நிலைப்பாடு குறித்து கண்ணாடி காட்டியவர். நானே என் இசமே எப்போதும் சரி என்கிற உரிமை கோரல் குறித்து சிந்திக்க வேண்டியவர். One step at a time - find light in darkness என்கிற தோழர் குப்தாவின் குரலை காந்தி இன்னும் விரிவாக செவிமடுக்க வைத்தார். Exemplariness என்பதின் ஆழத்தை காந்தி உணர்த்திக்கொண்டேயிருக்கிறார். மணிக்கணக்காக பேசிவிட்டு பேசிய எதையும் தீர்க்க வேண்டிய பொறுப்பேற்காத அரசியல் முறை குறித்து அவர் என்னிடம் கேள்வி எழுப்பலானார். உள் மனதின் நேர்மை என்ற ஒன்றை அறிவாயா என தொந்தரவு செய்யலானார்.

எது குறித்தும் பிறர் சொல்வதை செய்வதை தோண்டிக்கொண்டு வசைபாடிக்கொண்டேயிருப்பதில் சுகமா , அல்லது சமூகத்தின் சக மனிதனாக தான் என்னவெல்லாம் செய்யவியலும் என்பதில் கவனக்குவிப்பா என்கிற கேள்வியையும் அவர் எழுப்பிக்கொண்டேயிருக்கிறார். எப்போதும் பிறர் குறித்த விமர்சனம்- ஏதாவது ஒரு ஆளுமை அல்லது இசம் கோட்பாடு குறித்து விமர்சனம் என்பதை முதன்மையாக்காமல், தன் அறிதல் முறை தன் செயல்பாடு

குறித்த நேர்மையான மதிப்பிடல்களை turning the search light inwards என்பதை காந்தி முன்வைக்கிறார்.

மார்க்சியம் குறித்து வரும் விமர்சனங்களில் என்னாலும் ஏற்கத் தகுந்தது இருந்தால் எடுத்துக்கொள்வது- இல்லையெனில் அவற்றை கடந்து செல்வது என்ற எண்ணம்தான் இப்போதெல்லாம் வருகிறது. மார்க்சியத்தை விமர்சிப்பவர்கள் அவர்களுக்கான வாசிப்பு புரிதல் நேர்மை அவர்களது பிரச்சனையும் கூட என்ற எண்ணமும் கூடியுள்ளது. அவரவர் மனமே நீதிக்கூடம்.

காந்தி பற்றியும் அப்படித்தான் கருதுகிறேன். காந்தி குறித்து பொதுப் புத்தியில் மேலான மரியாதை மதிப்பீடுகள் இருப்பது போலவே, அவர் குறித்து கடுமையான விமர்சனங்களும் இருக்கின்றன. அவரவர் நேர்மையில் வாசிப்பு உழைப்பில் அதை கண்டடைந்தால் மகிழ்ச்சி. கேள்வி ஞானத்தில் , தான் நேரிடையாக காந்தி குறித்த வாசிப்பின்மையில் விமர்சனம் செய்வது நியாயமா என்பதை அவரவர் மனதில் நேர்மையாக எடைப்போட்டுக்கொள்வது நலம். Gandhi is still a best defender of himself என்கிற புரிதல் என்னிடம் ஆழமாக உள்ளது. ஆனால் அதற்கு ஒருவர் அவரிடம் போகவேண்டும் என்கிற நேர்மையை கொண்டிருக்கவேண்டும்.

காந்தி சொல்வது போல் ஒருவர் நம்மிடம் முன்வைக்கும் எக்கருத்தையும் நாம் மறுப்பதற்குரிய உண்மையை உணரும்வரை, அவர் சொல்வதை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எதைக் கண்டும் பிரமிப்பு அடைந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவதும், உதாசீனமாக்கி மிதிப்பதும் அவசியமா என்கிற உணர்வும் பற்றாமல் இல்லை. அறிதல் தோறும் அறியாமையை கண்டடைகிறோம் என்கிற எண்ணமும் கூடவே வந்துகொண்டிருக்கிறது.

feb 2023

50. Theory & Practice: A Life's Contradiction

In my experience, I am facing a great contradiction along the path of my life.

When I was young and read Marx, I was mostly out on the streets. Marx spent most of his time on theory and a little on practice. Marx's theory is for action, but Marx is an embodiment of theory. At that time, I was spending most of my time on practice and a reasonable amount of time on theory. This hade been of mine and on for about 40 years.

By 'practice' here, I mean my extensive trade union activities and a small amount of party activities. That fieldwork—practice—included protests, strikes, traveling, arranging meetings, speaking in meetings, conferences, and staying awake without watching the clock. Wherever there was a protest or strike at any office in the town, I would stand there for hours, and if a fellow worker faced a problem, I would help resolve it—acting on the understanding that the 'member is always right'. There isn't a place I haven't stood, from the college teachers' movement to the city sanitation workers. These are the things I understood and did as practice. Sometimes there would be a waste of time in this hours of practice, but there was no awareness of it. There was only tall talk that "time is golden."

Most of my travels were by bus. I even had 24-hour bus journeys. 90% of train journeys were in the second-class compartment. I even had the experience of standing for hours near the toilet in the unreserved compartment, coming from Mumbai.

At that time, my 'theory' consisted of reading Marx, Engels, Lenin, Stalin, Mao, Rosa, Gramsci (understood and misunderstood, half knowledge, known and unknown), and many other Marxists. Reading Indian leftist leaders, leftist magazines, Ambedkar's writings, Dalit Voice, Periyar and Dravidian movement publications, Mainstream, Janata, EPW, and even the Organiser of the Right politics... Writing occasionally for the trade union, debating with leftist factions, and reading books from the college library, the CPM library, the Tanjore CPI library, the school library, and the district library. Taking notes. With the advent of the desktop computer, I became one of the first 12 dial-up internet users in that town, and my theory time was spent reading all the mentioned through . I used to glance at literature books occasionally, which would happen through com Raghu, bank TU leader. I also did a little writing alongside. That was the time I consciously avoided Gandhi and Nehru.

The contradiction in my life occurred when I took a closer look at Gandhi. I became a full-time reader and someone who tries to write a few things. Action is fundamental to Gandhi. Gandhi is an embodiment of action... action with moral impulse is his theory. He was always on the street, with the people. Marx was mostly in his study room. As I got to know Gandhi more and more, my practice, as described above, began to diminish. This is the wonderful contradiction that I come across in my life.

I feel that Marx instilled a 'right-oriented' mindset in me, and even today, I am unable to break myself free from it. Gandhi, on the other hand, stood for a 'duty-oriented' mindset. Nowadays, my respect for those who are duty-oriented is increasing.

Marx created the mindset that if a few people gather, anything can be achieved through struggle. He instilled a feeling that I was always right because I was reading Marx. Lenin was advocating the idea of the Vanguard. But Gandhi made me to feel about my limitations and the uselessness of tall talks.

It was Gandhi who popularized the struggle among the masses. Gandhi makes me not only realize my limitations and makes me realize "I am fallible." He raises questions about double standards within me. He taught, "Turn searchlight inwards." He humbly said , "Sweep your own house clean." He keeps asking, "Where is your moral practice?" Gandhi teaches that "Be an exemplary, otherwise your talks are waste." He asks one to demonstrate through action first, and then talk about it. These are all very difficult practice I felt comparing standing on the demonstrations and struggle areas.

Even now, there isn't a big change in my theory observing's. I've added and acquired the habit of different readings: extensive readings on Gandhi, Nehru, Patel, Kripalani, Prasad, Rajaji, Munshi, and many others; readings on socialist leaders like JP, Lohia, Acharya Narendra Dev, Asoka Mehta, and Limaye; and readings on right-wing figures like Savarkar, Hedgewar, Golwalkar, Deen Dayal, and Thengadi. I continue to try and practice my hand at writing and eyes on readings

Because of this changed scenario, the time ratio of mine gets shifted slightly from what it used to be. Now I don't have that attributed holiness on Practice or absoluteness of any theory

Some people have asked me, "You read everything, so what did you achieve?" I have unknowingly torn one or two books and occasionally torn notebook pages... I haven't wasted or torn much else.

I have posted the contradiction as I personally felt in my assumptions and observations regarding my Theory and Practice. It holds no further significance beyond this.

Many years ago, my comrade Namari, whose voice often echoes in my mind, said: "Reading is also a doing and doing is also a reading." If what he said is true, then I am doing the 'reading' part of it. If reading is also a form of labor/action, then I can still count myself as a laborer. (26-2-2023)

Tamil version

Theory & Practice

என் அனுபவத்தில் பெரும் முரண் ஒன்றை என் வாழ்க்கைச்சாலையில் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

இளைஞனாக மார்க்சை வாசித்தபோது பெரும்பாலும் தெருவில் நிற்பவனாக இருந்தேன். மார்க்ஸ் அதிகமாக theoryகாகவும், கொஞ்சம் practiceக்காகவும் நேரம் செலவழித்தவர். Marx ‘s theory is for action but Marx is an embodiment of theory. அப்போது நான் அதிகமாக practice ஒரளவு theoryக்காக நேர செலவீட்டை செய்து வந்தேன். ஏறத்தாழ 40 ஆண்டுகள் இப்படிப் போயிருக்கும்.

இங்கு நான் practice எனச் சொல்வது எனது

பெரும்பான்மையான தொழிற்சங்க செயல்பாட்டையும், ஓரளவு கட்சி செயல்பாட்டையும் தான். அதாவது ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், சுற்றுப்பயணம் மேற்கொள்ளுதல், கூட்ட ஏற்பாடுகள், கூட்டம் பேசுதல், மாநாடுகள், நேரம் பார்க்காது கண்விழிப்பு என்றவகையில் அந்த களப்பணி practice இருந்தது. ஊரில் எந்த அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் வேலைநிறுத்தம் என்றாலும் அங்கு மணிகணக்காக நிற்றல் , சக ஊழியனுக்கு பாதிப்பு என்றால் அதை துடைத்தல் - அதாவது உறுப்பினர் எப்போதும் சரியானவர் என்ற புரிதலில் செயல்படுதல். கல்லூரி ஆசிரியர் இயக்கம் முதல் நகர சுத்தி தொழிலாளி ஈறாக நிற்காத இடமில்லை. இவை தான் நான் practice என அனுசரித்தவை. இந்த practiceல் சில சமயங்களில் நேரவிரயம் ஆகியிருக்கும். ஆனால் அதைப்பற்றிய விழிப்புணர்வு ஏதும் இருந்ததில்லை. நேரம் பொன்போன்றது என்ற பேச்சு மட்டும் இருக்கும்.

பெரும்பாலான பயணங்கள் பேருந்து வழியாகவே இருந்தன. 24 மணிநேர பயணம் கூட அவ்வாறு பேருந்து வழியில் செய்யப்பட்டதும் உண்டு. இரயில் பயணங்கள் 90 சதம் இரண்டாவது வகுப்பு பெட்டியில் தான் நடந்தது. பம்பாயிலிருந்து டாய்லட் அருகேயே பலமணிநேரம் நின்று unreservedல் வந்த அனுபவம்கூட கிடைத்தது.

அப்போது theory என்பது மார்க்ஸ் ,எங்கெல்ஸ் ,லெனின் ,ஸ்டாலின், மாவோ, ரோஸா , கிராம்சி (புரிந்தும் புரியாமலும் அறிந்தும் அறியாமலும்) இன்னும் பல மார்க்சியர்கள் வாசிப்பு. இந்திய இடதுசாரி தலைவர்கள் வாசிப்பு, இடது பத்திரிகைகள் வாசிப்பு, அம்பேத்கர் எழுத்துக்கள் ,தலித் வாய்ஸ், பெரியார் மற்றும் திராவிட கழக வெளியீடுகள் வாசிப்பு, மெயின்ஸ்ட் ரீம், ஜனதா , இபிடபிள்யு, இன்னும் ஏன் ஆர்கனைசர் கூட வாசிப்பு... அவ்வப்போது தொழிற்சங்கத்திற்காக எழுதுதல், இடதுசாரிகளின் பிரிவினர்களுடன் விவாதித்தல் போன்றவைகளுடன் கல்லூரி நூலகம், சிபிஎம் நூலகம், தஞ்சை சிபிஅய் நூலகம், பள்ளி நூலகம், மாவட்ட நூலகம் வழி புத்தகங்கள்

வாசிப்பு அதை குறிப்பெடுத்தல், டெஸ்க்டாப் கம்ப்யூட்டர் வந்தவுடன் அதன் வழி அவ்வூரின் முதல் 12 டயல் அப் இண்டெர்நெட் பயனாளிகளில் ஒருவனாகி அதன் வழி வாசிப்பு என்பதாக எனது theory நேரம் சென்றது.

இலக்கியத்தை எப்போதாவது எட்டிப்பார்ப்பதுண்டு. அது வங்கித்தோழர் ரகுபதியால் வாய்க்கும்.

கொஞ்சம் எழுதுதல் என்பதும் கூடவே நடந்தது. அப்போது காந்தி, நேருவிடம் நான் செல்லாமல் செலவுசெய்த காலம்.

நான் காந்தியை எட்டிப்பார்த்த காலத்தில் எனது வாழ்க்கையில் அந்த முரண் ஏற்பட்டது. முழுநேர வாசிப்பாளன், சிலவற்றை எழுதிப் பார்ப்பவன் ஆக நேர்ந்தது. காந்திக்கு செயல் தான் அடிப்படை. Gandhi is an embodiment of action ..action with moral impulse is his theory. அவர் தெருவிலேயே மக்களுடனேயே இருந்தவர். மார்க்ஸ் பெரும்பாலும் படிப்பறையில் இருந்தவர். காந்தியை மேலும் மேலும் அறிந்துகொள்ளும் காலத்தில் எனது practice என மேற்சொன்ன அனுசரிப்புகள் குறைந்தன.

மார்க்ஸ் right oriented மனோபாவத்தை என்னுள் அதிகம் விதைத்ததால் இன்றும் அதிலிருந்து என்னால் விடுபடமுடியாமல் இருப்பதை உணர்கிறேன். காந்தியோ duty oriented மனோபாவத்திற்காக நின்றவர். அப்படி duty oriented ஆக இருப்பவர்கள் மீது இப்போதெல்லாம் மனதில் மரியாதை கூடுகிறது.

சிலர் கூடிவிட்டால் எதையும் போராடி சாதிக்கமுடியும் என்ற மனோபாவத்தை மார்க்ஸ் ஏற்படுத்தினார். நான் எப்போதும் சரியானவன் ஏனெனில் மார்க்சை படிப்பவன் என்ற உணர்வை அவர் ஏற்படுத்தினார். Vanguard என்ற எண்ணத்தைதான் லெனின் உணர்த்திக்கொண்டிருந்தார்.

போராட்டத்தை மக்கள் மயப்படுத்தியவர் காந்தி . காந்தி எனது லிமிட்டேஷனை உணர்த்துகிறார். I am fallible என உணர்த்துகிறார். இரட்டைநிலைப்பாடு குறித்து என்னிடம் கேள்விகளை எழுப்புகிறார். Turn searchlight inwards என்கிறார். Sweep your own house clean என்கிறார். Where is your moral practice என கேட்டுக்கொண்டேயிருக்கிறார். Be an exemplary otherwise your talks are waste என காந்தி சொல்லித்தருகிறார். நடந்து காட்டிவிட்டு அதைப் பற்றி பேசு என்கிறார்.

இப்போதும் எனது theory என்பதில் அதன் அனுசரிப்புகளில் பெரிய மாற்றம் இல்லை. வெவ்வேறு வாசிப்புகளை சேர்த்துக்கொண்டுள்ளேன். காந்தி, நேரு, படேல், கிருபளானி, பிரசாத், ராஜாஜி, முன்ஷி இன்னும் பல காந்தி, நேரு குறித்த ஏராள வாசிப்புகள் , சோசலிஸ்ட் தலைவர்களான ஜேபி, லோகியா, ஆச்சார்யா நரேந்திரதேவ், அசோகாமேத்தா, லிமாயி வாசிப்புகள், வலதுசாரிகளில் சாவர்க்கர், ஹெட்கேவர், கோல்வால்கர், தீன் தயாள், தெங்காடி வாசிப்புகள் என பரவலாயின. ஏதாவது எழுதிப்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

இதனால் நேர விகிதாச்சாரம் முன்பிருந்தது போல் இல்லாமல் சற்று மாறுபட்டுள்ளது.

எல்லாம்தான் படிச்சிங்க என்ன பண்ணி கிழிச்சிங்க என்ற கேள்வியை சிலர் என்னிடம் கேட்டதுண்டு. ஓரிரு புத்தகங்களை அறியாமல் கைப்பட்டு கிழித்ததுண்டு. நோட்டுத்தாள்களை அவ்வப்போது கிழித்ததுண்டு ..வேறு அதிகமாக கிழித்து வீணாக்கவில்லை.

எனது theory and Practice அனுமானத்தில் அனுசரிப்புகளில் தனி நபராக நான் உணர்ந்த முரணை பதிவிட்டுள்ளேன். அதற்கு மேல் இதில் வேறு முக்கியத்துவம் ஏதுமில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பே என் மனக்குரலாக இருக்கும் என் தோழன் நமரி சொன்னான். Reading is also a doing and doing is also a reading. அவன் சொன்னது சரி என்றால் அதில் பாதியான reading என்ற doing செய்துகொண்டிருக்கிறேன். படிப்பதும் ஒருவகை உழைப்பு செயல் என்றால் உழைப்பாளியாக இப்போதும் என்னை சேர்த்துக்கொள்ளலாம்.

26-2-2023

feb 14 2025

51. No bounds to practice - no end to theoretical innovation

சீன கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை கடந்து , கடந்த 75 ஆண்டுகளாக சீனத்தன்மையிலான நாட்டு கட்டுமானத்தை செய்து வரக்கூடிய கட்சி.

சிபிசி என்கிற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது காங்கிரஸ் அக்டோபர் 2022ல் பெய்ஜிங்கில் நடந்தது. அதில் அறிக்கையை ஜின்பிங் (Xi Jinping)அந்நாட்டின் அதிபர், கட்சி பொதுச் செயலர் அக் 16, 2022 ல் முன் வைத்தார். நீண்ட அறிக்கை. பல்லாண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி , நவீன உலகுடன் எப்படி அனுசரித்து, தங்கள் கட்டுமானத்தை செய்கிறார்கள் என்பதை அறிய ஆர்வம். முன்பு கட்சி காங்கிரஸ் வந்தபோது, சிறிது எழுதியிருந்தேன்.

இந்தியாவில் சிபிஎம் 24 வது காங்கிரஸ் ஏப்ரல் 2025 சூழலில், 2022ல் நடந்த சிபிசி புரிதலையும் சேர்த்து பார்த்தால் உசிதம் என மனம் கோரியது. திரும்ப சிபிசி அறிக்கையை (ஆங்கில வழி) வாசித்ததில்... மனதில் பட்டவை- தொட்டவை.

சிபிசியின் 'இரண்டாம் நூற்றாண்டு கனவை ' அறிக்கை , கொஞ்சம் தொட்டுக்காட்டுகிறது. முதல் நூற்றாண்டான 1921-2021 காலச் சூழலில் கட்சி உதயம், போராட்டங்கள், மாவோ தலைமை புரட்சி, ஆட்சி, மக்கள் ஜனநாயகம், ஆரம்ப சோசலிசம் சீனத்தன்மைகளுடன் என்பதை அறிக்கையில் சொல்கின்றனர். கட்சி வரலாற்றிற்கென புதிய சீன மொழி ஆவணங்களை கொண்டு வந்தது, தனி அருங்காட்சியகம் வைத்துள்ளது பற்றி பெருமையாக குறிப்பிடுகின்றனர்.

Building a Modern Socialist Country with Chinese characteristics என்பது தான் கட்சி காங்கிரசின் மய்ய அறைகூவல். அப்படியென்றால் என்ன, எத்தகைய முயற்சிகள், வாய்ப்புகள் என்ன, எப்படிப்பட்ட மேன்மை அடையப்பட்டுள்ளது, என்ன தடைகள்- குறைகள்- பலவீனங்கள் என ஓரளவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

75 ஆண்டுகால கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி, 'எல்லாம் இன்ப மயம் என்கிற தோரணை ' அறிக்கையை உள்ளார்ந்து பார்த்தால் இல்லை என்கிற புரிதல் கிடைக்கிறது. 140 கோடி மக்கள் வாழும் சீன நாட்டில், 75 ஆண்டுகளாக ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சி உள்ள நாட்டில், மாற்று அரசியல் கட்சி என ஏதுமில்லா சூழலிலும், அக்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 96 லட்சம்தான் என ஜின்பிங் தெரிவித்துள்ளார். அதாவது

மொத்த ஜனத்தொகையில் 7 சதம் கட்சி உறுப்பினர்கள். இந்தியாவில் போகவேண்டிய தூரம் மிக மிக தொலைவு என உணரமுடியும்.

கட்சி உறுப்பினர்களின் 'குவாலிட்டி', சிறப்பு- போதாமை, மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை தேர்ச்சி போன்றவையும் பேசப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக தாங்கள் மிக ஆரம்ப நிலை சோசலிச் கட்டுமான stageல் இருப்பதை தொடர்ந்து அடக்கத்துடன் , சிபிசி தலைமை சொல்லி வருகிறது. அதற்குரிய சுபிட்சம்- வறுமை, வேலைக்கான போராட்டம், கிராமப்புற அவலங்கள் என ஓரளவு அறிக்கை மூடி மறைக்காமல் பேசுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் கோடிக்கணக்கானவரை வறுமையிலிருந்து மீட்டு சற்று உயர்த்தியுள்ளதாகவும், வாழவே தகுதியற்ற இடத்திலிருந்து மில்லியன் கணக்கான மக்களை வெளியேற்றி , வாழத்தகுந்த இடங்களில் குடியமர்த்தியதை அறிக்கை ஏற்கிறது. பல counties டிவிஷன்கள் முன்னேற வேண்டியுள்ளது.

ஊரக இடிபாடுகளுடன் கூடிய வீடுகளை சரி செய்து வரும் திட்டம் பற்றி பேசுகிறது. நகர்ப்புற பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், வேலை வாய்ப்பு சவால்கள், மருத்துவ சவால்கள் சொல்லப்பட்டுள்ளன. தனியார் மருத்துவமனைகளின் அவசியம் சொல்லப்பட்டுள்ளது.

அவர்கள் கட்சி காங்கிரசை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என நடத்தி வருகிறார்கள். இந்தியாவில் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை என நடத்தப்படுகிறது. சீனா தனது 14 வது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றி, அதன் திசைகாட்டலில் பயணிக்கிறது. 2035ல் சில குறியீட்டு எல்லைகள் அடைதல் என நிர்ணயித்துள்ளனர். Advanced Socialist culture- moderately prosperous society- process of people's democracy- improved public well-being எனச் சொல்கின்றனர்.

கட்சிக்குள் தலைமையை ஏற்று நடத்தல் என்பதில் இன்னும் ஒழுங்கீனம் இருப்பதை சுட்டிக்கட்டியுள்ளனர். அசிரத்தை, கடமை வழுவுதல், shocking cases of corruption-ஊழல், சலுகை கோரும் இயல்புகள், அதிகார வர்க்க மனப்போக்கு , ஆங்காங்கே செய்யப்படும் ஊதாரித்தனம், wavering political conviction என பல பலவீனங்களை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் acute structural and institutional problems- ஏற்றத்தாழ்வான வளர்ச்சி, ஒருங்கிணைக்கப்படாத வளர்ச்சி, நீடித்து நிலைபெறா வளர்ச்சி என்பதை சுட்டிக்காட்டிவிட்டு, traditional

development model நாட்டை முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்லாது என மதிப்பிட்டுள்ளனர். இதனால் சோசலிச கட்டுமான மீது சிலர் அவநம்பிக்கையுடன் பேசுவதை நிராகரித்துள்ளனர்.

கட்சியின் தலைமைத்துவம் குறித்து முறையான மாற்றங்களை உருவாக்கி வருவதும், மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி , நவீன சோசலிச கட்டுமான செய்வதையும் சொல்கின்றனர். Centralised unified leadership என்பதற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

4 அம்சங்களை உத்தியாக சொல்கின்றனர். Deepen reforms, modern socialist country, advancing law based governance, strengthening party self governance. கட்சி நிர்வாகம், சட்டப்படியான ஆட்சி நிர்வாகம் என்பனவும் strategy ஆக காட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தலையாய முரண்பாடு என கம்யூனிஸ்ட்கள் பொதுவாக ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய மக்களுக்கும் எனச் சுட்டிக் காட்டுவர். ஆனால் இந்த அறிக்கை இப்படிச் சொல்கிறது.

We have identified the principal contradiction facing Chinese society as that between unbalanced and inadequate development and the people’s ever growing needs for better life. இது மிகச் சரியான புரிதலாகவே எனக்குப்படுகிறது. 832 கவுண்டிஸ் என்கிற ஆட்சி பிரதேச மக்கள் வாழ் நிலங்கள் மிக மோசமான impoverished counties என அடையாளம் காட்டப்பட்டு மீட்டதாக சொல்கின்றனர். மொத்தம் 2851 டிவிஷன் கவுண்டிஸ் இருப்பதாக அறியமுடிகிறது. நிலைமை சற்று மோசமாகவே தெரிகிறது.

GDP எனப்பார்த்தால் 114 டிரில்லியன் யுவான் என்கிறார்கள். யுவான் மதிப்பு 12 ரூபாய் எனச் சொல்லலாம். அமெரிக்காவிற்கு அடுத்த உற்பத்தி நாடு . நகர்ப்புற மக்கள் 68 சதம். பிரம்மாண்ட கட்டுமானங்கள் கொண்ட நாடு சீனா. மக்கள் கசக்கப்பட்டிருக்கலாம். இப்போதும் அதிகமாக வேலை செய் அதிகமாக சம்பாதி more hard working more earning என்றுதான் சொல்கின்றனர். Deepened reform with tremendous political courage என அவர்கள் சொல்வதை decode செய்து பார்த்தால்தான், கோடிக்கணக்கான மக்களின் புலம்பலையையும், வதையையும் ஊகிக்க முடியும்.

140 நாடுகளுடன் வர்த்தக உறவு கொண்ட பெரும் பொருளாதாரத்தை சீனர் கட்டியுள்ளனர். High standard free trade zones , global oriented network, proactive opening up என்பதை பாலிசி ஆக்கியுள்ளனர். சீனர் வாழும் வயது 78 என உயர்ந்து இருப்பதை கவனிக்காமல் இருக்க முடியாது. Per capita

disposable income 35000 yuan . அதாவது ஆண்டிற்கு தலைவாரியாக சராசரி செலவு செய்யும் சக்தி 4 லட்சத்து 20 ஆயிரம் ரூ. மாதம் ரூ 35 ஆயிரம். இந்தியாவில் தனிநபர் கையில் செலவழிக்க கிடைக்கும் வருவாய் என 2024ல் 2 லட்சத்து 14 ஆயிரம். மாதம் இந்தியர் ஒருவரால் செலவழிக்க முடிந்த சராசரி வருவாய் 18000. மத்திய 7 வது சம்பளக் கமிஷன் 2016ல் குறைந்தது 18 ஆயிரம் என நிர்ணயித்ததைப் பார்த்தோம். இந்தியா போக வேண்டிய தூரம் புலப்படும்.

சீனர்களில் 100 கோடி பேருக்கு old age insurance- medical insurance இருக்கிறது எனச் சொல்கின்றனர். இன்னும் கோடிக்கணக்கில் வீடுகள் சரி செய்ய வேண்டியதை சொல்கின்றனர். சீனாவின் முன்னேற்றம் உலக வறுமை கோட்டை குறைக்கும் என நம்பிக்கையை தெரிவிக்கின்றனர். நகர்ப்புற ஊரக வருவாயில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை ஏற்றுள்ளனர்.

கட்சியில் Self reform என்கிற பதத்தை பயன்படுத்தியுள்ளனர். உலகிற்கு நாம் Chinese insight ஒன்றை கொடுத்துள்ளோம் என பெருமை கொள்கின்றனர். கீழ்கண்ட வரிகளை அவர்கள் எழுதிக்கொண்டுள்ளனர். நல்ல தெரிப்புகள் அவை.

To uphold and develop marxism , we must integrate it with china’s specific realities..less does it mean memorising and reciting as rigid dogma.

We must continue to free our minds, seek truth from facts, move with the times, and take a realistic pragmatic approach.

We must base everything we do on actual conditions and focus on solving real problems arising in our reforms, opening up and socialist modernisation

We must keep responding to the questions posed by China, by the world, by the people and by the times- we should find right answers suited to the realities of China and the needs of our day

Governing by virtue, selecting on the basis of merit, promoting harmony between humanity and nature, pursuing self improvement, embracing the world with virtue, in good faith and being friendly with others, fostering neighbourliness.

Just as there are no bounds to practice, there is no end to theoretical innovation.

Good command of world view. We must put people first. People centeredness is an essential attribute of Marxism

அழகான வரிகள். 75 ஆண்டுகால அதிகாரமிருந்தும், வாழ்வின் சோதனைகளால் புடம்போட்டு, நிலத்தில் கால் ஊன்றி பேசியுள்ளனர். ஆயிரம் குறைகள் இருக்கலாம் . மக்கள் நல்வாழ்விற்காக, தங்கள்

பார்வையில் அவர்கள் போராட்ட நடத்தி வருகின்றனர். இந்தியர்களும் கற்போம். நம் பெருமிதங்களை குறைக்காமல், பலவீனங்களை மூடாமல் கற்போம்.

14-2-2025 காதலர் தினம்

இது என் சீனக் காதல் அல்ல (காதலர்கள் அனைவரின் கண்ணியமான வாழ்விற்கு நல் வாழ்த்துகள்- let us behold our love with all dignity)

aug 2023

52. சமூகவியலும் இலக்கியமும்

1970-80 களில் கலை இலக்கிய மன்றத்தில் வேலைப்பார்த்த மார்க்சியர்கள்(இப்போதும் இருக்கக்கூடும்) கலாநிதி கைலாசபதி அவர்களைத் தொடமால் பேசியிருக்கமாட்டார்கள். திறானாய்வு இலக்கியத்தின் முன்னோடியாக கைலாசபதியும், அவரைத் தொடர்ந்த சிவத்தம்பியும் பார்க்கப்பட்டார்கள்.

பாரதி குறித்தும், ஒப்பியல் ஆய்வு குறித்தும், திறனாய்வு குறித்தும் மார்க்சிய நோக்கில் கைலாசபதி எழுதிய சில புத்தகங்களை 1980களில் திருவாரூர் சிபிஎம் அலுவலக நூலகத்தில் படித்த நினைவு இருக்கிறது. அவ்வப்போது சிவத்தம்பியிடமும் போய்வருவதுண்டு.

கைலாசபதி நூலான ‘சமூகவியலும் இலக்கியமும்’ என்பதை திரும்ப வாசித்துப் பார்த்தேன். 1979ல் வந்து, குமரன் பதிப்பகம் 2002ல் பதிப்பை வெளியிட்டுள்ளனர். தமிழிலக்கிய மரபில் வளர்ந்த பொதுமைச் சிந்தனைகள் என்கிற பகுதி ஒன்று அதில் இருக்கும்.

தாயுமானவர் கனவிற்கும் பாரதிக்குமான வேறுபாட்டை கைலாசபதி காட்டியிருப்பார். தாயுமானவரை கற்பனாவாத நல்லெண்ணம் சார்ந்தவராக காட்டிவிட்டு, பாரதியை செயலுக்கு தூண்டுபவராகக் காட்டுவார். அதே நேரத்தில் பாரதியை விஞ்ஞான சோசலிசவாதி எனக் கருதமுடியாது எனச் சொல்லியிருப்பார். பொதுவுடைமைக்கு வேதாந்த முலாம் பூசியவராகச் சொல்வார். டாங்கே மகள்- மருமகன் வேதாந்த சோசலிசம் என்கிற ஆக்கத்தை எழுதியது தனிச் செய்தி. மானுடன் தன்னைக் கட்டிய, தளையெல்லாம் சிதறுக என்கிற மனிதாபிமான பொதுமை சிந்தனை பாரதியிடம் இருந்தது என்பார் கைலாசபதி.

பழந்தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக குறளில் வரும் சொற்றொடரான ‘பாத்தூண்’ என்பது குறித்து சிலாகித்துச் சொல்வார் கைலாசபதி. பிறருடன் பகிர்ந்து உண்பதைக் குறிக்கும் பதமது. இந்த சொற்றொடர் புராதனப் பொதுவுடைமை குல வாழ்க்கையை காட்டுகின்ற ஒன்றாகவும் அவர் மதிப்பிடுவார். தொல்குடியில் கூட்டுண்ணும் / பகுத்துண்ணும் என்கிற வாழ்வியல் இருந்ததை புறநானூறு, சிலப்பதிகாரம் வழி அறியலாம் என்கிறார்.

வள்ளுவர் காலம் வர்க்கங்கள் பிளவுண்ட காலமாக கைலாசபதி ஆராய்ச்சிக்குப் படுகிறது. அவர் மதச் சார்பினை தவிர்க்க முடிந்த அளவு வர்க்க சார்பினை கடக்க முடியவில்லை என கைலாசபதி

கருதினார். அதே நேரத்தில் வள்ளுவர் வர்க்க மோதலை தவிர்க்கலாம் என்கிற சிந்தை கொண்டிருந்தார். மன்னருக்கும், வணிகருக்கும் அறிவுறுத்தலை தந்ததாக கைலாசபதி எழுதியிருப்பார்.

கைலாசபதி வந்தடையும் இடம்

" வள்ளுவர் வகுத்துக் காட்டிய அறநெறி வர்க்க சமுதாயங்களிலே காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவங்களில் போதிக்கப்படும் சமரச மார்க்கமாகும்"

'புரட்சிகர' என்கிற புனிதத்திற்கு கீழான ஒன்றாக 'சமரசம்' என்பதை வைத்துப்பார்க்கும் உளவியல்தான் பொதுவாக கைலாசபதியிடம் இக்கட்டுரை நீள தொழிற்பட்டிருக்கும். அது மார்க்சிய லெனினிய பார்வை என்கிற பொதுவான கற்பித்தல் இருக்கும்.

கம்பன் பொதுமை கருத்துக்களை ஈடிணையற்ற வகையில் சொல்வதை கைலாசபதி சுட்டிக்காட்டி விளக்கியிருப்பார். கம்பனும் 18 ஆம் நூற்றாண்டில் எழுந்த அய்ரோப்பிய சிந்தனைகள் போலவே தனது கற்பனையை முன்வைத்தார் எனச் சொல்லத்தேவையில்லை என கைலாசபதி வந்தடைவார்.

சித்தர்களும் சாதி சழக்குகளால் மனுக்குலம் பிளவுண்டு கிடப்பதைச் சாடினர். மாற்றம் விரும்பினர். அவர்களும் பொருளுடைமை குறித்து சிந்திக்கவில்லை என்பார் கைலாசபதி. அவர்களை கிளர்ச்சியாளர்கள் என அறிந்துகொள்ளலாம் என்று மதிப்பிடுவார்.

இராமலிங்கரும் சமரச ஞான வரம்பிற்குள், இயற்கை அதீதத்தில் நின்று பேசியதாக கைலாசபதி கருதுவார். பாரதிதாசன் படைப்புகளில் பொதுமைச் சிந்தனைகள் அழுத்தமாக வெளிப்பட்டாலும், ஓர் எல்லைக்கு மேல் அவர் போகவில்லை என கைலாசபதி எழுதுகிறார். தமிழ் ஒளி, கோவை அய்யாமுத்து என கைலாசபதி தொட்டுச் செல்கிறார். பொதுமை உணர்வு இருந்தது, அவர்களிடம் பொதுவுடைமை கோட்பாடில்லை என மதிப்பிடுகிறார்.

இவையெல்லாம் தாம் சொல்வதற்கு காரணம், தமிழ்ச் சூழலில் பொதுமைச் சிந்தனை பரிணாமம் பெற்று வளர்ந்த வரலாற்றை ஆய்வு செய்யவும், இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான சோசலிசத்திற்கு உகந்த வாகனமாக தமிழ் இலக்கியம் அமைந்து வந்துள்ளதை புரிந்துகொள்வதற்காகவும் என்கிறார். அதை அவ்வழியில் அழைத்துச்

செல்லவியலும் என்கிற நம்பிக்கைத் தரக்கூட கைலாசபதி அவர்கள் விரும்பியிருக்கலாம்

கைலாசபதியின் மதிப்பீடுகளை ஏற்காமல் மாற்று கருத்துக்களை வைப்பவர்களும் இருக்கலாம். சோவியத் தாக்கம் குறைந்த புதிய சூழலை அவர் பார்க்கவில்லை. 21 ஆம் நூற்றாண்டின் தாக்கத்தில் சோசலிச விவாதங்களின் பரந்துபட்ட பரப்புக் காலத்தில் , சோவியத் குறித்து இப்போது கிடைக்கும் ஏராள ஆவணங்களில் நுழைய அவர் இயற்கையால் அருளப்படவில்லை. இன்று இருந்தால், (இந்த ifs perception தான்) எப்படி யோசித்திருப்பாரோ ?

aug 2023

53. சோவியத் மற்றும் இந்திய அரசியல்

தாமஸ் கிரவுஸ் 'லெனின் அறிவு சரிதை' ஆக்கத்தில் முக்கியமான அனுபவம் ஒன்றை போல்ஷ்விக் கட்சி(பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி) பெற்றதைச் சொல்கிறார்.

பாட்டாளிகளின் வர்க்கவுணர்வின் மொத்த வடிவமாக அக்டோபர் புரட்சிக்கு முன்னர் கட்சி இருக்கவேண்டியத் தன்மை வலியுறுத்தப்பட்டு வந்தது(embodiment of Proletarian consciousness) . அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் குறுகிய லெனின் ஆட்சிக் காலத்தில் தொடங்கி, ஸ்டாலின் காலத்தில் உச்சமாக கட்சி அரசாங்கமயமாக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. கட்சியும் அரசாங்கமும் இரண்டற கலக்கும் நிலைக்கு போக நேர்ந்தது. State- ization of the party became inevitable என இதைத் தாமஸ் விளக்கிச் செல்வார்.

இந்தியச் சோதனையும் நேரு காலத்திலேயே இத்திசையைக் கொள்ளத்துவங்கியது. காங்கிரஸ் தலைவருக்கும், பிரதமருக்குமான முரண்களை ஆரம்பத்தில் சந்தித்து, இறுதியில் அந்த முரண் மக்கள் செல்வாக்கு பெற்ற- அரசாங்க அதிகாரம் நிரம்பிய பிரதமருக்கு சாதகமான வழியிலேயே தீர்க்கப்பட்டு, பின்னர் இந்திரா ஆட்சியில் உச்சம் தொட்டது. ஓரளவு இரட்டைத் தலைமை நரசிம்மராவ் காலத்திலும், முடிந்தவரை கட்சி அதிகாரத்திற்கு பணியக்கூடிய தலைமையாக மன்மோகன் சிங் பிரதமர் காலமும் சென்றது. காங்கிரஸ் விடுதலை உணர்வு, மக்கள் போராட்டக் கட்சி என்பதிலிருந்து ஆட்சி அதிகாரம் தலைப்பட்டு வலுப்பெற வலுப்பெற அதன் state- ization of the party நேர்விகிதத்தில் வளர்ந்தது.

காந்தி ஏதோவொரு வகையில் அவர் உள்ளுணர்வு சொல்லியதால், கட்சியை கலைத்துவிட்டு, 'சேவாதல்' ஆக கட்டுமான பணிகளுக்கு ஆட்சி பொறுப்பேற்காத காங்கிரசார் செல்லட்டும் எனக் கருதினார்.

தமிழகத்தில் திமுக சோதனையும், பெரியார் திக சோதனயிலிருந்து விடுபட்டு- மாறுபட்டு , ஆட்சி அதிகாரம் பெற்று, வளர்ந்த நிலையில் ஆட்சித் தலைவரும் கட்சித்தலைவரும் ஒருவரே என்ற நிலை நோக்கி போனது. ஆட்சித் தலைவரே கட்சித்தலைவர் என்கிற நிலையில், அவரது ஆட்சியின் ஒரு அங்கமாக கட்சி மாறிவிடுகிறது- state ization of the party பெரிய அளவு நடந்துவிடுகிறது. இங்கு மக்கள் செல்வாக்கு பெற்றத் தலைவர் எல்லாவற்றையும் நிர்ணயிப்பவராகிறார்.

பாஜக சோதனை இன்னும் சற்று முப்பரிமாணமாக இருக்கிறது. ஆர் எஸ் எஸ்- பாஜககட்சி- ஆட்சி பிரதமர் முரண் என்பதான சோதனையாக இருக்கிறது. வாஜ்பாய் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, அத்வானி குஷ்பாவு தாக்கரே என எவர் பாஜக தலைவராக இருந்தாலும், பிரதமர் வாஜ்பாய் என்கிற வசீகர தலைமையை மேலான ஒன்றாக கட்சி ஏற்கவேண்டியிருந்தது. ஆனால் ஆர் எஸ் எஸ் தனது கட்டுப்பாட்டிற்குள் வாஜ்பாய், அத்வானியை வைக்க முயற்சித்தது. 'சிந்தன் பைட்டக்கில்' மட்டுமல்லாமல், ஆர் எஸ் எஸ்ஸின் 'சர்சங்சாலக்' விட பிரதமரே ஆனாலும் - ஆட்சிக்கு வந்த பாஜக ஆனாலும் மேலானதல்ல என அவ்வப்போது நிறுவ முயன்றனர். சர்சங்சாலக் சுதர்சன் போன்றவர் இதைக் காட்ட முயன்ற செய்திகள் வெளிவராமல் இல்லை. மக்கள் செல்வாக்கு வாஜ்பாய்க்கு கூட இருந்தாலும், தன் பழக்கம் காரணமாக ஆர் எஸ் எஸ்க்கான மரியாதையை அவர் தரவேண்டியிருந்தது.

மோடியின் பிரதமர் என்கிற ஆட்சித் தலைமை அன்றைய காங்கிரஸ் காலத்திய நிலைக்கு போயுள்ளதாக உணரமுடிகிறது. இதில் அவரால் காங்கிரசை நிராகரிக்க முடியவில்லை போலும். பிரதமர் மோடி பாஜக கட்சியைவிட மேலானவர், அவர் முடிவை கட்சி பொதுவாக ஏற்று செயல்படும் என்கிற state- ization அங்கு நடந்து வருவதாக உணரமுடிகிறது. Dissenting voices என்பதற்கெல்லாம் இடமிருப்பதாக உணரமுடியவில்லை. வாஜ்பாய் காலம் போல ஆர் எஸ் எஸ் சர்சங்சாலக் தன்னை பிரதமரைவிட மேலானவராக உணரமுடியாத நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது. மக்கள் செல்வாக்கு அது ஒன்று போதும், எவருக்கும் எந்த நிறுவனத்திற்கும் தான் பதில் சொல்லவேண்டியதில்லை என்ற உளவியல் திரு மோடி அவர்களிடம் இருப்பதைக் காணமுடிகிறது.

2014ல் மரியாதைக்குரிய அத்வானியா அல்லது திரு மோடியா எவர் ஆட்சிக்கு தலைமை ஏற்கப்போகிறார் என்கிற கேள்விக்கு சந்தேகமில்லாமல் ஆர் எஸ் எஸ் பாஜக இரண்டும் சேர்ந்தே மோடி தலைமையில் தேர்தலை சந்திப்போம்- ஆட்சிக்கு அவர் தலைமையில் வருவோம் என முடிவெடுத்து, அதை நடைமுறையும் ஆக்கினர். திரு மோடி அவர்களின் 10 ஆண்டு பயணம் , அடுத்த பிரதமர் எவர் - தானே என்கிற முடிவை - அவரே எடுத்துவிடமுடியும் என்கிற உயரத்திற்கு கொண்டுபோய் சேர்த்துள்ளது. நாடாளுமன்றத்திலும், செங்கோட்டையிலும் அடுத்த பிரதமர் தானே என்பதை அவர் வெளிப்படையாக அறிவித்துவிட்டார்.

ஆர் எஸ் எஸ் கூடி, பாஜக கட்சி முறையாக கூடி, தேர்தல் முடிந்து எம்பிக்கள் கூடி எடுக்கவேண்டியதெல்லாம் வெறும் formalities என்பது போல் ஆக்கிவிட்டார் என்று தோன்றுகிறது. ஒருவகை constitutional autocracyக்கு இந்தியர்கள் பழக்கமாகி வருகின்றனர் போலும்...

இந்திய இடதுசாரிகள் குறிப்பாக சிபிஎம் ஓர் அனுபவத்தை தந்தது. 1996 வாஜ்பாய் சர்க்கார் 13 நாட்களுக்குப் பின்னரான அய்க்கிய முன்னணி ஆட்சிக்கு பிரதமராக ஜோதிபாசு வரலாம் என்கிற எண்ணம் வந்தது. அவர் 20 ஆண்டுகள் மே.வ முதல்வர், மிக முக்கிய அரசியல் தலைவராக கருதப்பட்டவர். ஆனால் சிபிஎம் கட்சி கூடி, பொதுச்செயலர் சுர்ஜித் வைத்த இந்த ஆலோசனையை நிராகரித்தது. 32 எம்பிக்களை மட்டும் வைத்துக்கொண்டு, ஜோதிபாசு பிரதமராகி, கட்சி மக்களின் விருப்பங்கள் எனக் கருதக்கூடியவற்றை சுதந்திரமாக செய்யமுடியாது என அக்கட்சியின் பெரும்பான்மை நினைத்தது. ஜோதிபாசு வாய்ப்பை பெற்றுக்கொண்டு, இடதுசாரி கம்யூனிஸ்ட் பிரதமர் தலைமையிலான ஆட்சி என்றால் எப்படி என்கிற அனுபவத்தை மக்களுக்கும், இந்திய அனுபவத்தை உலகிற்கும் கொடுத்திருக்கலாம் என்ற எண்ணமும் வலுவாக இருந்தது. கட்சி மேலே நின்றதால் சுர்ஜித் - பாசு பெரும்பான்மை முடிவை ஏற்று பாசுவிற்கான வாய்ப்பை சோதனை செய்யமுடியாமல் போனது. பின்னர் பாசு இதனை historical blunder என்றார். நல்லவேளை கட்சி நடவடிக்கை எடுத்து அவரை வெளியேற்றும் riskயை எடுக்கவில்லை. வேறு எவரையும்விட பலமுறை மக்கள் செல்வாக்கை நிருபித்த தலைவராக அவர் இருந்தாலும், கட்சிக்கு பணிந்ததைப் பார்க்கிறோம்.

நாட்டின் நிலைமையின் மீதான கட்சியின் எதார்த்த கணிப்பா, இல்லை party autocracy on the country in a particular situation என்கிற blunder ஆ என இதை தீர்ப்பிடமுடியவில்லை. கேள்விகள் open ended ஆகவே இருக்கின்றன...

25-8-2023 காலை 7.50

jan 2023

54. பார்ப்பனியத்தை விமர்சித்தல்

2021 டிசம்பரில் வெளியான அஜித் முரளி மார்க்சிய சிந்தனையாளரின் 'பார்ப்பனியத்தை விமர்சித்தல் ' புத்தகம் படிக்க வாய்ப்பு கிடைத்தது. அவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு பிரேம் எனும் தோழரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்திய தத்துவவியல் அத்வைதம், விசிஸ்டாத்துவைதம், துவைதம் ஆகியவற்றையும் அதிகமாக திலகரின் கீதா ரகஸ்யம் முன்வைத்தும் பார்ப்பனிய கருத்தியல் சட்டகத்தை காலனிய, விடுதலை பின்காலனிய இன்றுள்ள அரசியலுடன் பேசும் கட்டுரைகளானது இந்த புத்தகம் .

பார்ப்பனியம் மற்றும் முதலாளித்துவம் இரண்டும் தொழிலாளர்களின் எதிரிகள் என அம்பேத்கர் மேற்கோளை நேர்மறையாக எடுத்து முரளி விவாதிக்கிறார். அவர் எம் எல் இயக்கம் சார்ந்தவர் என்பதால் அவர்களின் தரகு முதலாளித்துவ கோட்பாட்டு புரிதல் கட்டுரைகளில் நீள வரும்.

பண்டைய இந்திய சமூகம் துவங்கி, இஸ்லாமியர் ஆட்சி, பிரிட்டிஷ் ஆட்சி, திலகர் காந்தி விடுதலை போராட்டக்காலம், name sake விடுதலை, நேரு இந்திரா ஆட்சி, சாவர்க்கர் இந்துத்துவா , சிபிஅய் சிபிஎம் என அனைவரும் ஏதோ ஒருவகையில் பார்ப்பனிய கருதுகோள் மேலாதிக்கம் சமூகத்தில் தொடர காரணமாயுள்ளனர் என்ற குற்றப்பத்திரிகையை இந்த கட்டுரைகள் தருகின்றன. பெரியாரும் பார்ப்பன எதிர்ப்பில் நின்றாரே தவிர அதை காலனிய எதிர்ப்பு போராட்டத்துடன் இணைக்கத் தவறிவிட்டார் என மெலிந்த விமர்சனமும் ஓடுகிறது.

சில மதிப்பிடுகளை இந்த கட்டுரைகள் முன்வைக்கின்றன. பலரால் பலமுறை பேசப்பட்டவையானாலும் , மார்க்சிய பார்வையில் பார்ப்பனியம் என்கிற உரிமை கோரலுடன் இந்த புத்தகம் நம்முன் விரிகிறது.

-பார்ப்பனியத்தின் அனைத்து அம்சங்களிலும்,அவற்றின் விரிவாக்கங்களிலும் பிற்போக்குத் தன்மை நிறைந்தே உள்ளது

-இஸ்லாம், பௌத்தம், சமணம், சீக்கியம், கிறித்துவம் சாதி போன்ற சமூகப் பிரிவினையை விலக்கினாலும் தவிர்த்தாலும் இந்த மத சமூகங்களில் சாதி பிரிக்கமுடியாத பகுதியாகிவிட்டது

-காங்கிரசின் தலைமைக்கு காந்தி உயர்ந்தவுடன் பார்ப்பனியத்தின் தீங்கற்ற வடிவத்தை உருவாக்கி ஊக்குவிக்க பாடுபட்டார். இந்து அடையாளங்களை தாராளமாக பயன்படுத்தியதன் மூலம் பார்ப்பனிய அமைப்பை நெய்த காந்தி அதன் நவீன அரசியல் பரிமாணத்தை வெளிப்படையாக காட்டினார். பார்ப்பனிய மேலாதிகத்தின் கருவி காந்தி. தாகூர், நேரு போன்ற பலர் இதற்கு பங்களித்தனர்.

-இந்திராகாந்தி ஆட்சி ஜனரஞ்சக பாசிச கலவையான ஆட்சியை முயற்சித்தது. தோல்வியுற்றதால் சாதி அடிப்படை இடஒதுக்கீடு, மதசார்பின்மை என்ற கருத்தியல் மறுசீரமைப்பு தேவைப்பட்டது. இதை வி பி சிங் மண்டல் மூலம் முயற்சித்தார். சமாஜ்வாடி, பகுஜன் சாதி அடிப்படை கட்சிகளும் உருவாயின. அம்பேத்கர் நூற்றாண்டை கொண்டாடி அவரை ஆளும் வர்க்கங்களின் அரசியல் வழிபாட்டுத்தளத்தில் இணைத்துக்கொண்டனர்.

-ஆர் எஸ் எஸ் தேசியவாத பரப்புரையுடன் பன்முக யுக்தியை கையாள்கிறது. பார்ப்பனிய பேரினவாதம், கடந்த அனைத்து போராட்டங்களின் சின்னங்களை தனதாக்குதல், அனைவரையும் இந்துத்துவா விசுவாசிகளாக மாற்றுவது என செயல்படுகிறது. ஒடுக்கப்பட்டவர்களை பார்ப்பனிய வளையத்திற்கு இழுத்துக்கொள்ள முயற்சிக்கிறது.

-கம்யூனிஸ்ட்கள் பார்ப்பனியம் குறித்து விரிவான விமர்சனத்தை வளர்த்துக்கொள்ள, சாதி மீதான தாக்குதலை வர்க்கப்போராட்டத்துடன் முழுமையாக ஒருங்கிணைக்க தவறினார்கள். சிபிஅய் சிபிஎம்மின் இயந்திரகதி பொருள்முதல்வாதம் பார்ப்பனியத்திற்கு முட்டுக்கொடுத்தது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற பார்ப்பனிய முழக்கத்தை இவர்களும் புகழ்ந்தனர். இந்த முழக்கம் இந்திய தேசியத்தின் பிற்போக்கின் அடித்தளம். இவர்கள் பார்ப்பன ஒழுக்கவியலின் தீவிர ஆதரவாளர்களாக இருக்கின்றனர்.

-இந்திய மதசார்பின்மை எல்லா மதங்களையும் சமமாக நடத்துதல் என்கிற பார்ப்பனிய கருத்தின் நவீன பதிப்பே. ஒத்துப்போவதன் மூலம் தன்வயப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறது பார்ப்பனியம்.

-சகிப்புத்தன்மை அடிப்படையில் ஆர் எஸ் எஸ்ற்கு எதிர்ப்பு என்பது பார்ப்பனிய சட்டகத்திற்குள் தீர்வு என்பதாகவே இருக்கிறது. ஆளும் வர்க்க அனைத்து பிரிவுகளையும் கருத்தியல் ரீதியாக உருவாக்க

பார்ப்பனியம் தேவையாக இருப்பதால், இவற்றை எதிர்கொள்ளாமல் மதசார்பின்மையை எதிர்பார்க்கமுடியாது.

-ஒரு பண்டத்தை போலவே மதமும் நுகரப்படுகிறது. பகட்டு இருக்கிறது. மதவிழாக்கள் மினுமினுப்பு ஆடம்பரங்களுடன் நிகழ்ச்சியாகிவிட்டன. தியானம் என்கிற ஆன்மீகம் நன்கு விலை போகிறது. அது தனிநபரின் மன ஓய்வு என்ற வகையில் ஒருவித அனுபவத்தை தராமல் இல்லை. ஆனால் பார்ப்பனியம் அதை தீர்வாக தரப்பார்க்கிறது. பார்ப்பனியம் தன் முனைப்பை நீக்கிவிடாது.

-மனிதர்களின் ஆன்மீக விருப்பத்தை மார்க்சியம் மறுக்கவில்லை. மத அனுபவம் உண்மையாக இருக்கலாம். சுரண்டல் உலகில் அது ஆறுதலை தராமல் இல்லை. மார்க்ஸ் உணர்வுக்கு, மனித நடைமுறைக்கும் இடையிலான பிரிக்கமுடியாத செயல்பாட்டை மனதின் செயல் என்றார். கருத்து முதல்வாதம் வெறும் மோசடி என சொல்லமுடியுமா? ஆனால் அது பொருளின் முதன்மையை மறுத்து தலைகீழாக செய்கிறது.

-அறிவை ஒதுக்கி பெண்கள் உட்பட பலருக்கு மறுத்தத்தில் மற்ற ஆளும் வர்க்கங்களை மிஞ்சியது பார்ப்பனியம். ஆதாரமற்ற கூற்றுகளில் மகிழ்ச்சி அடையும் பார்ப்பனியத்தை அதன் கண்ணோட்டத்தை முறியடிக்கவேண்டும். இந்து வாழ்க்கை முறை ஒற்றை கலாச்சாரம் என ஏதும் இருந்ததில்லை. பார்ப்பன சாதி கூட ஒற்றை சாதியில்லை

-பாரத் என்பது பாரத்வர்ஷாவின் தொடர்ச்சியாக நவீன பார்ப்பனியம் சித்தரிக்கிறது. அகண்ட பாரதம் என்பது ஒருவகை காலனிய நீட்டிப்பே.

-மக்களுக்கு தன்னலமற்ற சேவை பார்ப்பனியத்தின் நிஷ்காமகர்மாவிற்கு எதிர்ப்பான ஒன்று. இது வர்க்கப்போராட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அது உணர்வுபூர்வ செயல்களால் கட்டமைகிறது.

இப்படி ஏராள புரிதல்களை இந்தப் புத்தகம் தருகிறது.

கோட்பாட்டு வறட்டுத்தனத்திலிருந்தும் அபத்தமான முன்முடிவுகளிலிருந்தும் ஆதாரமற்ற குற்றசாட்டுக்களை முன் வைப்பதிலிருந்தும் இந்த புத்தகம் தன்னை மீட்டுக்கொண்டதாக என்னால் உணரமுடியவில்லை. முன்பு இந்திய இடதுசாரிகள் தங்கள் மார்க்சிய புரிதலில் முதலாளித்துவ நிலபிரபுத்துவ ஏகாதிபத்திய என்ற கருதுகோள்களை முன்வைத்து பேசிய மொழியில் பார்ப்பனிய என்ற

கருதுகோளை முன்வைத்து இந்த புத்தகம் தனது கதையாடலை செய்கிறது.

dec 2022

55. அத்வானியின் தகவல்

டிசம்பர் 2 ,1989ல் பிரதமராக வி பி சிங் பொறுப்பேற்றார். அவருடைய ஜனதா தளத்திற்கு அப்போது 141 எம் பிக்கள் மட்டுமே இருந்தனர். காங்கிரஸ் ஆட்சியை அனுமதிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் வெளியிலிருந்து ஆதரவு என பாஜகவும் இடதுசாரிகளும் உடன் நின்றனர்.

இந்த ஏற்பாடு குறித்து தனது account ஒன்றை அத்வானி அவரது புத்தகமான My Country My Life ல் தந்திருப்பார். இன்று பார்க்கும்போது சற்று சுவையான தகவல்களாகவும் அவை இருக்கின்றன. ஏற்பாடு என்னவென்றால் வாரந்தோறும் பிரதமர் வி பி சிங் இல்லத்தில் விருந்துடன் சந்திப்பு உரையாடல் இருக்கும். பாஜக சார்பில் வாஜ்பாய், அத்வானி செல்வர். சிபிஅய் சார்பில் இந்திரஜித் குப்தாவும், சிபிஎம் சார்பில் சுர்ஜித்தும் செல்வர். ஜோதிபாசு டெல்லியில் இருக்கும்போதெல்லாம் இந்த சந்திப்பிற்கு அழைக்கப்படுவார். பெரும்பாலும் செவ்வாய் அன்று சந்திப்புகள் இருக்கும்.

இந்த சந்திப்புகளில் சிபிஎம் விட சிபிஅய் தலைவர்கள் சற்று சகஜமாக நேர்மையாக இருந்த பதிவையும் அத்வானி செய்கிறார். இந்திரஜித் குப்தா குறித்து தன் மேலான மதிப்பீடுகளையும் தருகிறார். அத்வானியின் வரிகளில்..

Of them, the person who impressed me the most was Indrajit Gupta. He was a man of impeccable integrity and great simplicity, besides being an outstanding parliamentarian. There was a perceivable naturalness in the way he interacted with Atalji and me. In contrast, leaders of CPM were always conscious of being politically correct in their dealings with us.

வி பி சிங் அரசு அமைந்த 6 மாதங்களுக்கு பின்னர் ஜோதிபாசுவிடமிருந்து ஒரு செய்தி தூதுவர் மூலம் வந்ததாம். வி பி சிங் அரசாங்கம் சரிவர செயல்படவில்லை. அது குறித்து அத்வானி, வாஜ்பாய், ஜோதிபாசு மூவரும் விரன் ஷா எனும் தொழிலதிபர் வீட்டில்

சந்திக்கலாம் என்பது பாசு அனுப்பிய செய்தியாக அத்வானி சொல்கிறார்.

ஒன்று கல்கத்தாவில் சந்திக்கலாம் அல்லது டெல்லியில் பாஜக அலுவலகத்தில் சந்திக்கலாம் ஏன் மூன்றாம் நபர் வீட்டில் என பாசுவிடம் கேட்கப்பட்டதாம். இல்லை இல்லை என்று பாசு அனுப்பிய செய்தி அத்வானி வரிகளில்

No one should know about our meeting. Especially people in my party would not like it.

பாசு அறிவுறுத்தல்படி பின்னால் மேற்கு வங்க கவர்னரான அந்த விரன் ஷா வீட்டில் சந்திப்பு நடந்ததாம். விவாதம் என்ன என அத்வானி தரவில்லை. தனக்கு ஏற்பட்ட மனப்பதிவை மட்டும் தருகிறார்..அதாவது அவர்கள் hypocritical outlook தெரிந்தது என்கிறார்.

வேறு பதிவும் இப்பக்கங்களில் அத்வானியால் செய்யப்பட்டுள்ளது. காங்கிரசை தனிமைப்படுத்த நாடாளுமன்ற ஒத்துழைப்பு அவசியம் என கம்யூனிஸ்ட் எம்பிக்கள் தெரிவிப்பர். ஒருமுறை அத்வானி வேண்டுகோள் விடுத்தாராம். இரு கட்சி சார்பில் நாடாளுமன்றத்தில் எப்படி ஒத்துழைக்கலாம் என கட்சி அலுவலங்களில் சந்தித்து பேசுவோமே என்றாராம். அதற்கு அவசியமில்லை. பாராளுமன்ற lobby ல் சந்தித்தால் போதும் என பதில் கிடைத்ததாம்.

அத்வானி ஏன் கம்யூனிஸ்ட் அலுவலகத்திற்கு செல்வதில் நாட்டமாக இருந்தார் எனத் தெரியவில்லை. வருகிறேன் எனச் சொல்பவர்களை இடதுசாரிகள் அங்கு வரவேண்டாம் என ஏன் சொன்னார்கள் என்ற உளவியலும் ஆய்வுக்குரியது. இதை பொலிட்டிகலாக பார்க்கும் கண் வேண்டும். இதையெல்லாம் டாக்டிக்ஸ் ஹிப்போகிரசி என்றெல்லாம் பார்க்காமல் நடைமுறை தேவை சகஜம் என புரிந்துகொள்ளும் மனம் வேண்டும்...

july 29 2024

56. சோவியத்தில் போடப்பட்ட பட்ஜெட்

முன்னர் கம்யூனிஸ்ட்கள் ஆட்சியில் இருந்த சோவியத் (சோசலிச கட்டுமான சோதனை அல்லது அவ்வாறு சொல்லப்பட்ட ஒன்று) வீழ்ந்தது உலக முழுதும் கம்யூனிஸ்ட்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்திய கம்யூனிஸ்ட்கள் உட்பட பலரும் தங்களுக்குள் விவாதித்து , சோசலிச கட்டுமான மாடல் ஒன்றின் தோல்வி என சற்று ஆறுதல் அடைந்து தங்களை மீட்டுக்கொள்ள முயற்சித்தனர். சோவியத் சோசலிச மாடல் குறித்த இடுகை அல்ல இங்கு நான் எழுத வருவது.

பட்ஜெட் கால மனவோட்டத்தில், அந்தக் கால சோவியத் பட்ஜெட் போட்டனரா, 5 ஆண்டு திட்டப்படி பட்ஜெட்டை எப்படி போட்டனர் எனப் பார்க்கத் தோன்றியது. சிரமம் அதிகமில்லாமல் 1960 க்கான அவர்கள் பட்ஜெட்டை ஆங்கில வாசகங்களுடன் பார்க்க முடிந்தது.

ஸ்டாலின் மறைவு அவர் ஆட்சிக்காலம் மீதான புகார்கள் , குருசேவ் அதிபர் கால சூழலில் அப்பட்ஜெட்டை சுப்ரீம் சோவியத்தில் , அவர்களின் நிதி அமைச்சர் அக் 27, 1959ல் வைத்துள்ளார். நம்ம இந்தியா பட்ஜெட் போலத்தான் அங்கும் எங்கிருந்து வருவாய் எவ்வளவு பெற உத்தேசம் (சென்ற ஆண்டில் 1959ல் பெற்றது எவ்வளவு), எதில் எவ்வளவு செலவு ஒதுக்கீடுகள் என கணக்கு சொல்லியுள்ளனர்.

எங்களது பட்ஜெட் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ முறையிலிருந்து எப்படி மாறுபட்ட சோசலிச கட்டுமான மக்கள் பட்ஜெட் என்கிற அரசியல் பீடிகைகள் , கோரல்கள் இருந்தது. அமெரிக்காவை விட இரு மடங்கு பெரிய பட்ஜெட் எனவும் சொல்லியுள்ளனர். ரூபிள்களில் கணக்கு சொல்லப்பட்டுள்ளது. அப்போது 4 ரூபிள் ஒரு டாலர் என இருந்துள்ளது.

எனக்கு இணையத்தில் கிடைத்த ஆவணம் , அமெரிக்க CIA உளவுத்துறை அவர்கள் நாட்டின் பார்வைக்கு அனுப்பி வைத்த ஆவணம். கம்யூனிஸ்ட் ஆவணங்களை , கம்யூனிஸ்ட்களைவிட (இந்தியாவையும் சேர்த்துதான்) அமெரிக்க உளவு கிடங்கு இரகசியம் என்ற குறிப்புகளுடன் அவ்வப்போது சேகரித்து வைத்து, பின்னர் declassify செய்து வெளியிடுகின்றனர்.

இனி சோவியத் போட்ட 65 ஆண்டுகளுக்கு முன்னரான அந்த பட்ஜெட்டிலிருந்து .. கொஞ்சம் போரிங் கணக்கு, கொஞ்சம் சுவாரஸ்யமான தகவல்கள்

1959ல் 707.86 பில்லியன் ரூபிள் பட்ஜெட்டை 1960ல் 744.8 பில்லியன் ரூபிளாக உயர்த்தி போட்டுள்ளனர். கணக்கு என்றால் பாரதிக்கு மட்டுமல்ல பலருக்கும் பிணக்கு என்பதால், குறைவான கணக்கை சொல்கிறேன்.

விவசாயம் அதன் தொடர்பான வேலைகள் என்பதை விட, தொழில்கள்- கட்டுமான வேலைகள் என்பதற்கு 5 மடங்கு கூடுதலாக ஒதுக்கியுள்ளனர்.

அற்புதமான விஷயம் என்ன எனில் கல்வி சம்பந்தமான ஒதுக்கீடு. தொழில் ஒதுக்கீட்டில் 2/ 3 கல்விக்கு எனப் பார்க்கும் போது , இந்தியா எங்கே, அவர்கள் அன்று எங்கே என யோசிக்கத் தோன்றுகிறது.

பாதுகாப்பிற்கு (கடுமையான Cold War காலம்) 96. 1 பில்லியன் ரூபிள் ஒதுக்கீடு என்றால், கல்விக்கு அதைவிட கூடுதலான 102 பில்லியன் ரூபிள் ஒதுக்கீடு, அவர்களின் மேலான சமூக தாகத்தை சுட்டுகிறது.

மருத்துவத்திற்கு கல்வி ஒதுக்கீட்டில் பாதி கூட இல்லை என்பதையும் பார்க்க முடிகிறது. கல்வி மருத்துவம் அல்லாத பிற சமூக நலன்கள் என 97.9 பில்லியன் ரூபிள்கள் ஒதுக்கியுள்ளனர்.

அப்போது அவ்வளவு ஆடம்பர நிர்வாக செலவு இல்லை போலும். 11 பில்லியன் ரூபிள் எனக் காட்டியுள்ளனர்.

சரி எப்படி அவர்கள் வருவாய் ஈட்டினர் என்பதை அந்த பட்ஜெட் சற்று காட்டுகிறது. அவர்கள் பயன்படுத்திய சில பதங்கள்

Turnover tax, taxes on people, profit, social security receipts, organisational income tax,misc என்கிற இனங்கள் வழியாக 1959ல் சொல்லப்பட்ட 723.3 பில்லியன் ரூபிளை , உயர்த்தி 772.1 பில்லியன் ரூபிள் பெற மதிப்பீடுகளை வைத்துள்ளனர்.

1960க்கான 744.8 பில்லியன் ரூபிள் செலவிற்கான வருவாயாக 772.1 பில்லியன் ரூபிள் என அவர்கள் துண்டு விழாத, உபரி மிஞ்சும் பட்ஜெட்டை போட்டுள்ளனர்.

தொழில்கள் அரசுடைமை, நில புலன்கள் கொஞ்சம் தனியாரிடம், கூட்டுறவு நிறுவனங்கள், டாக்டர் இன் ஜினியர் போன்ற professionals என பல்வேறு நிலைக்கேற்ப progressive taxation வைத்திருந்தனர்.

மக்கள் மீதான வரி என்பதில் bachelor tax என ஒன்றை போட்டு வசூலித்துள்ளனர். மூன்று பிள்ளைகளுக்கு மேல் பராமரிக்கும் பெரிய

குடும்பங்களுக்கு வரி விலக்கு slabs வைத்தனர். Single woman with child or children என்றால் அவருக்கு வரி விலக்கு கொடுத்துள்ளனர்.

குருசேவ் ஆட்சிக்கு வந்தவுடன் ஏன் income tax - abolish it என வற்புறுத்தியுள்ளார். அதை ஏற்று கால இடைவெளிகளில் கொஞ்சம் கொஞ்சமாக நீக்க அங்குள்ள அதிகார வர்க்கம் ஏற்று சட்டமும் இயற்றியது.

1957 வருமான வரி முறையில் அப்போது மாதம் 370 ரூபிள் (இந்திய ரூ டாலருக்கு 23 என்றிருந்தது. ரூபிள் டாலருக்கு 4 என்றிருந்தது) வரை எந்த வரியும் கிடையாது. ஆனால் அன்று சோவியத்தில் பொருட்கள் மீது வரி அதிகம் என்ற உணர்வு இருந்தது. இதை 450 ரூபிள்வரை வருமான வரி விலக்கு என்றனர்.

இந்தியாவில் அப்போது எப்படி இருந்தது என உடன் தேடி கொடுக்க முடியவில்லை. 1974-75ல் சவான் போட்ட பட்ஜெட்டில் ரூ 6000 வரை வரியில்லை எனச் சொன்னது கண்ணில் பட்டது.

சோவியத்தில் professional க்கு வருவாய் பொறுத்து progressive tax rates 2.5 % to 43 % வரை வரி போட்டுள்ளனர். இந்தியா விடுதலையின் போது ஜான் மத்தாய் போட்ட பட்ஜெட்டில் அதிகபட்ச வரி 97 சதம் இருந்ததாக தகவல் பார்த்தேன்.

சோவியத்தில் 1960ல் உழைப்பவர், ஆளும் மந்திரிகள் பிரமுகர்கள் என எவரானாலும் மாதம் 5000 ரூபிளுக்கு மேல் எனில் 12 சத வரி போட்டுள்ளனர். இவையெல்லாம் பார்க்கும்போது, ஏற்ற இறக்கமான வருவதுடன் அங்கு மக்கள் இருந்துள்ளனர் என்பதையும் நாம் உணரலாம்.

நிலவரி ஏக்கர் எவ்வளவு வைத்துள்ளனர் என்பதைப் பொறுத்து progresses taxation முறையை கடைப்பிடித்துள்ளனர்.

87 பக்க ஆவண இறுதியில் அதன் மாநிலங்களாக இருந்தவைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு என்பதையும் காட்டியுள்ளனர். ஏற்ற இறக்கமான தேவைக்கேற்ப என அதில் கணக்கு தெரிகிறது.

மிகப்பெரிய சமூக நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்த சமூகத்தை அவர்கள் அப்போது கனவுடன் கட்ட முனைந்துள்ளார்கள் என்பதை இந்த 1960 பட்ஜெட் எனக்கு காட்டியது. சமூக நலத் திட்டங்கள் என்பதில்தான், நாங்கள் different type என்கிற மாற்று முகத்தை அவர்கள் காட்டியுள்ளனர். மற்றபடி உற்பத்தி, உபரி, மான்யம், வரி போடுதல் என்பதில் எல்லாம் மேற்குலகிலிருந்து பெரிய மாறுதல்

தென்படவில்லை. அரசு உடைமை, விநியோகம், சமுக திட்டங்களுக்கு முன்னுரிமை என்பதில் அவர்கள் அப்போது மிக உயர்ந்து நின்றதாகவே உணர்கிறேன்.

சோவியத் குறித்து பேசப்பட்ட பல குறைகள் மீது விவாதம் இன்றும் இல்லாமல் இல்லை என்பதையும் மனங்கொண்டு, அன்றைய அவர்களின் மக்கள் பட்ஜெட்டை புரிந்துகொள்ளலாம்.

29-7-2024

nov 6 2016

57. நினைவுச் சுழல் 2

பலரோ சிலரோ ஒருவர் குறித்து பெருமிதத்துடன் புகழ்வதும்- சிலரோ பலரோ அதே நபர் குறித்து இகழ்வதும் தவிர்க்கமுடியாத ஒன்றே. தோழர் லெனினுக்கும் இது நிகழ்ந்தது. சோவியத் புரட்சி- ஆட்சி , உலகத்தின் பல்வேறு நாடுகளின் உழைக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஒளி என புகழப்பட்டதும் அனார்க்கிஸ்ட்கள், நோம் சாம்ஸ்கி போன்றவர்கள் கூட லெனினை விமர்சித்து வருவதும் நடந்து வருவனவாகவே இருக்கிறது. நூற்றாண்டு என்பதால் இது குறித்து நாம் அதிகம் தெரிந்து கொள்ளமுடியும்.

பரேஷ் சட்டோபாத்யாய் கனடா க்யூபெக்கில் உள்ள மார்க்சிய ஆய்வாளர். The marxian concept of capital and soviet experience-Paresh Chattopadhyay என்ற புத்தகமும் எழுதியவர். பல்வேறு கட்டுரைகளை எழுதி வருபவர். அவரது சமீபத்திய கட்டுரை ஒன்று Party problematic in Revolution: Some Random Remarks பிராண்டியர் இதழில் படிக்க நேர்ந்தது .அக்கட்டுரையில் ஜெர்மன் வரலாற்றாசிரியர் OSKAR ANWEILER அவர்களின் சோவியத் இயக்கம் குறித்த ஆய்வு புத்தகம் ஒன்றை குறிப்பிட்டிருந்தார். அதை தேடும் முயற்சி பலனளித்து 360 பக்கங்களை கொண்ட The Russian Workers peasants and Soviet councils 1905-1921 OSKAR ANWEILER படிக்க துவங்கியுள்ளேன்.

பிராண்டியர் இதழ் கல்கத்தாவிலிருந்து வருகிறது. திருவாரூரில் இருந்தபோது பல ஆண்டுகள் வீட்டிற்கு வந்து இதழ். பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்கள்தான் எனக்கு பிராண்டியர் முகவரி தந்து உதவியவர். மார்க்ஸ் அவர்கள் தமிழகம் அறிந்த களப்போராளி-Public Intellectual எதையும் focussed ஆக சொல்லியும் எழுதியும் வருபவர். ஏராள புத்தகங்களை எழுதியுள்ளார். பின்நவீனத்துவம் குறித்து எனக்கு புரியாமல் இருந்தபோது தன் கடிதம் மூலம் எனக்கு புரிதலை தந்திருந்தார். பேரா அ. மார்க்ஸ் அவர்களுக்கு எனது நன்றியை பதிவு செய்கிறேன்.

பிராண்டியரில் எனது கட்டுரை ஒன்றும் வந்தது. நியுஏஜ்ஜில் எழுதிக் கொண்டிருந்தபோது பிராண்டியருக்கு எழுதலாமே என்ற முயற்சிக்கு பிராண்டியர் ஆதரவு தந்ததற்கு எனது நன்றி. மரியாதைக்குரிய தோழர் சி. இராஜேஸ்வரராவ் (பொதுச் செயலர் சி பி அய்) அவர்களுடன் மூன்று நாட்கள் இருக்க வாய்ப்பு எனக்கு கிடைத்தது. வாய்ப்பை நல்கிய

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட கட்சிக்கும் என் மீது நம்பிக்கை வைத்து அப்பொறுப்பை ஒப்படைத்த திருவாரூர் மறைந்த தோழர் பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நன்றி. தோழர் ராஜேஸ்வருடன் இளைஞனுக்கே உள்ள ஆர்வத்தில் நக்சல் இயக்கம்-தன்னார்வ இயக்கம் மற்றவை விவாதித்த போது அவர்தான் நியுஏஜ்ஜிற்கு எழுது என பணித்தார். அவர் மறைந்த பின்னர்தான் சில கட்டுரைகளை எழுத முடிந்தது. இதேபோல் வேறு ஒரு நல்வாய்ப்பும் கிட்டியது. சி பி அய்யின் புகழ் வாய்ந்த தலைவர் தோழர் ராஜசேகர ரெட்டி அவர்களுடன் முழுமையாக ஒருநாள் உரையாட வாய்ப்பு கிடைத்தது. அப்போது soocial Science probings முதல் இதழ் வந்திருந்த நேரம். அவர்தான் ஆசிரியர். CPIM தோழர்கள் Social Scientist பத்திரிக்கையை சிறப்பாக பல ஆண்டுகள் நடத்திக்கொண்டிருந்த நேரம். Science Probings தோழர்களை வாங்க வைக்க மத்தியதர வர்க்க தோழர்கள்முயற்சி செய்ய வேண்டும் என தோழர் ராஜசேகர ரெட்டி அறிவுரை செய்தார். சில இதழ்கள் வந்து மிக சிறந்த பத்திரிக்கையாக வரவேண்டியது நின்றுபோய்விட்டது.

இந்நேரத்தில் மிக முக்கிய தஞ்சை தலைவர் தோழர் கே எஸ் கே அவர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நான் கல்லூரியிலிருந்து அப்போதுதான் வேலைக்கு சேர்ந்த நேரம். ஜெகன் கூட்டம்... என்னை பேச சொன்னபோது இங்கிலீசில் உளறினேன். ஜெகன் நீ இங்கே தங்கி வேலை செய்யறதா இருந்தால் தமிழில் பேசு என்றார். கே.எஸ் கே Dialectics புத்தகத்தை கொடுத்து படி என்றார். ஆங்கிலம்தானே என்று நினைத்து வாங்கிய எனக்கு புரிந்தது ஆங்கிலம் படிக்கத் தெரிந்தாலே எல்லாம் புரிந்து விடாது என்பது. கே எஸ் கே தான் மிகச் சிறந்த அப்போது பெரிதும் நாங்கள் படிக்க காத்துக்கிடக்கும் PartyLife அறிமுகப்படுத்தினார். மார்க்சிய அரிச்சுவடியில் சேர உதவிய தோழர் கே எஸ் கேவுக்கு எனது அன்பு நன்றி.

2017 மார்க்சிய உலகில் பெரும் விவாதங்கள் நடைபெறவேண்டிய ஆண்டு. ருஷ்ய புரட்சி 100 படிப்பினைகள், நக்சல்பாரிகள்-50 படிப்பினைகள், சீனா கலாச்சார புரட்சி-50 படிப்பினைகள் என விவாதம் பெருக போகிறது. உடல் ஆரோக்கியம் ஒத்துழைக்கின்றவரை நீண்ட பயணத்தில் சில மைல்கள் பயணிக்க உத்தேசம்.

jan 8 2024

58. லெனின் ஆட்சிக் காலத்தில்

லெனின் ஆட்சிக் காலத்தில் கட்சிக்குள் கடுமையான விவாதங்கள் நடந்தன. அனைவருமே ஆட்சி நிருவாகத்திற்கு புதியவர்கள். மார்க்சிய தியரியை வெகுவாக நேசித்து நம்பியவர்கள். அதை சோதிக்க விரும்பியவர்கள். தொழிற்சங்கத்திற்கு என்ன பங்கு, மரணதண்டனை இருக்கலாமா, விவசாயிகள் தங்கள் நிலத்தின் விளை பொருட்களை விற்றுக்கொள்ளும் தனியார் முறை இருக்கலாமா என பல பிரச்சனைகளில் தீவிர விவாதம் இருந்தது. விவாதம் கட்சி ஒற்றுமை என்ற எல்லைக்குள் இருக்கவேண்டும், நடைமுறை தேவைகளை புரிந்து அனுசரிப்பதாக இருக்கவேண்டும் என்கிற அறிவுரையை மட்டும் லெனின் கொடுத்து வந்தார். லெனின் , புகாரின் டிராட்ஸ்கி, லுனாசார்ஸ்கி, ஸ்டாலின் என பல கோணத்தில் ஒத்துப்போகியும் வேறுபட்டும் அவர்கள் நின்றனர். வெளியே இருந்த கார்க்கிக்கு லெனின் கூட நடைமுறை சார்ந்து பேசாமல் தியரி பேசுவது போல் பட்டது. இருவரும் விவாதங்களை மேற்கொண்டனர்.

தொழிற்சங்க சார்பில் 5 அல்லது 6 பேர் கொண்ட குழு, production விவகாரங்களை கட்டுப்படுத்துவது என்பதை லெனின் ஏற்கவில்லை. ஒரு expert manager அவர் தலைமைக்கு கட்டுப்பட்டு பாக்டரி நிருவாகம் என்கிற முதலாளித்துவ நாடுகளின் முறையை புறக்கணிக்க வேண்டாம் என லெனின் அறிவுரை கூறிவந்தார். What industry needed was bourgeois specialists, not proletarian collegiums என்றார்.

அடுத்து governmentalisation or state isation of Trade Union என்பது பிரச்சனையானது. லெனின் party -isation என்பது தேவை எனக்கருதினார். Workers state என்பதே காப்பு - அதைத் தவிர தனியாக ஏன் trade unions என்கிற அளவிற்கு கூட கட்சியில் விவாதம் சென்றது.

இந்த பிரச்சனை இந்திய சூழலிலும் இருக்கிற பிரச்சனை. இங்கு பாஜக ஆட்சி என்றால் பிஎம் எஸ் அரசாங்கமயமாகிவிடுவதைக் காண்கிறோம். முன்பு ஐ என் டி யு சி, கேரளா வங்கத்தில் சி அய் டி யு, தமிழகத்தில் எல் பி எப், அண்ணா பேரவை என ஆட்சிகள் காலத்தில் அவை governmentalisationக்கு உள்ளாகும் அனுபவத்தைக் காண்கிறோம்.

மரணதண்டனை கூடாது என்கிற விவாதம் வந்தபோது, கமிட்டி கூட்டத்தில் லெனின் இல்லை. பின்னர் பங்கேற்ற அவர் அது அவசியம். எதிர் புரட்சியாளர்களை ஒடுக்க அவசியம் என ஏற்க வைத்தார்.

கலை இலக்கியம் என்பதில் கூட கட்சிமயமாக்கும் தன்மையைதான் லெனின் ஆதரித்து பேசிவந்தார்.

முக்கிய ஒரு விஷயத்தில் அவர் தன் தெளிவை நல்கினார். சோவியத் சோசலிச ரிபப்ளிக் என நாம் நாட்டை அழைப்பதாலேயே, சோசலிசம் வந்துவிட்டதாக தோழர்கள் புரிந்துகொள்வது தவறு. அதை நிர்மாணிக்கும் வேலையை கவனப்படுத்துகிறோம் என அதை விளக்கி வந்தார். சோசலிசத்தை கட்டளைப்போட்டு கொணரமுடியாது என உணர்த்தி வந்தார்.

லெனின் ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் சுவையான நிகழ்வொன்றை எதிர்கொண்டார். துணைவியார் கிருப்ஸ்காயா உடல் நிலை தேறுவதற்காகவும் கல்விப் பணிகளை செய்வதற்காகவும் சோகோல்னிகி எனும் பகுதியில் இருந்தார் . அவரை பார்க்க லெனின் ஜனவரி 19, 1919ல் ஞாயிறு அன்று தனது சகோதரி மரியாவுடன் காரில் சென்றார். டிரைவர் பெயர் கில். எங்கும் பனிப்படலம். தூய்மை பணிகள் நடக்காததை லெனின் பார்க்கிறார். வழியில் சிறு கும்பல் காரை நிறுத்துகிறது. கில் உள்ளே லெனின் என்கிறார். அவர்கள் அதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கவில்லை. காரை விட்டு இறங்கு என்கிறார்கள். கில் துப்பாக்கி வைத்திருந்தும், லெனினுக்கு ஏதும் நேர்ந்து விடக்கூடாது என யோசித்து அமைதி காக்கிறார். மரியா ஏதோ சொல்லப்போகிறார். அந்த வழிப்பறியாளர்கள் காரில் ஏறி அதை எடுத்துக்கொண்டு, வந்தவர்களை ஏதும் செய்யாமல் செல்கின்றனர்.

சிறிது தூரம் நாட்டின் அதிபர் தனது தங்கை டிரைவர் சகிதம் நடந்து சென்று , ஒரு தொலைபேசி நிலையத்தை அடைகின்றனர். அங்கு பணியாளர் ஒருவரிடம் நடந்ததைச் சொல்லி, போன் பேச கேட்கின்றனர். அவர் அரசாங்க பாஸ் இல்லாமல் எவரும் உள்ளே செல்ல முடியாது என விதியைச் சொல்கிறார். இவர் லெனின் நாட்டின் தலைவர் எனச் சொல்லி, போனில் விவரத்தை போலீஸ் தலைமையகத்திற்கு சொல்லி மாற்று ஏற்பாடுகளை செய்துகொண்டனர். இரவிற்குள் காரைத் தேடும் வேலை முடுக்கிவிடப்பட்டது. கார் ஓரிடத்தில் காணப்பட்டது. அருகில் இரு போலீஸ்காரர்கள் உடலும் கிடந்தன.

நாட்டின் அதிபர் , உலக புரட்சிக்கு நாயகர் என அறியப்பட்டவர் தன் மக்களை நம்பி மிகச் சாதாரணமாக தன் சொந்த வேலை என்பதால் செக்யூரிட்டி படை சூழாமல் செல்லும் எளிமை என்பதை இங்கு உணரமுடியும். அதேநேரத்தில் புரட்சி நடந்தாலும், பழைய

நடைமுறைகள் சில கிரிமினல் முறைகள் மறைய காலம் தேவைப்படும் என்பதும் உணரப்படுகிறது.

Facts என்பவை இசங்கள் பார்ப்பதில்லை. Views என்பதற்கு இசங்கள் உதவலாம்.

jan 19 2026

59. ஷாகித் சித்திக்கின் சாட்சியம்

'I , Witness by Shahid Siddiqui' குறித்து அறிமுகப்படுத்தியிருந்தேன். இஸ்லாமிய டெல்லி வாழ் குடும்பத்திலிருந்து, இந்திய அரசியலை கண்ணுற்ற பயணித்த மனிதரின் பிரதிபலிப்பு. நினைவுகளும் வரலாறும் என பின்னிக்கொள்ளும் நூல்வகையெனலாம்.

சித்திக், நேருவைப் பார்த்த சிறுவனாக, லால்பகதூர் பற்றியும், இந்திரா குறித்தும் அறிந்த மாணவனாக பதிவைச் சொல்கிறார். 1969ல் பின் நாட்களில் புகழ் வாய்ந்தவர்களாக உருவான அருண் ஜேட்லி, யெச்சூரி ஆகியவர்களுடன் டெல்லி பல்கலை மாணவனாக சித்திக்கும் சேர்ந்து இயங்கியதைக் குறிப்பிடுகிறார்.

பிரகாஷ் காரத்வெளிநாட்டு கல்வி முடித்து வந்த சூழலும் கூட. அவர் இங்கிலாந்தில் தாரிக் அலி போன்றவருடன் மாணவர் இயக்கத்தில் அனுபவம் பெற்று வருகிறார். அங்கு சப்தர் ஹஷ்மி, சோகயில் ஹஷ்மியும் செயல்பட்டு வந்தனர். சாகித்திற்கு புகழ் வாய்ந்த மார்க்சிய அறிஞர் ரந்திர்சிங் பேராசிரியராகவும் வாய்த்தார். ஆங்கிலம் எடுத்த குமரேஷ் சக்கரவர்த்தி டெல்லி கல்லூரி ஆசிரியர் சங்கப் பொதுச்செயலர். பேரா ரந்திர் , மாணவர்களிடம் துணிந்து கேள்வி கேள்- கடவுளோ, காந்தியோ - முல்லாவோ மார்க்சோ எவரையும் கேள்விக்கு உட்படுத்து எனச் சொல்லி விவாதச் சூழலை வளப்படுத்தினார். மாணவர்கள் , கன்னாட் பிளேஸ் இந்தியா காபி ஹவுசை முழுநேர விவாதக்களமாக்கிய தருணமது. காபி 15 பைசா காலமது.

1970 ஆம் ஆண்டில் டெல்லி இஸ்லாமிய மாணவர் மூவர் சகிதம் சித்திக் , இந்தியாவை அறிதல் என்கிற சாகச நடை பயணத்தில் ஈடுபட்டார். தினம் 40 கி மீ நடை- 5 மாதங்கள் தொடர்ந்து.சாகசம், ஆபத்து என புதிய அனுபவங்களைப் பெற்றனர். தமிழ்நாட்டில் நுழைந்தபோது, பையில் இருந்த இந்தி எழுத்து ஆபத்தானது. சில இடங்களில் ஊர்க்காரர்கள் சந்தேகப்பட போலீஸ் ஸ்டேஷன் அவதிகள். வழிப்பறி திருடர்கள் கூடி பயமுறுத்திய அனுபவம். எல்லோரிடமும் டெல்லி மாணவர்கள் என்கிற அடையாளத்தை புரியவைத்து அதிக வதையின்றி வெளிவந்த அனுபவங்கள். பணம் பிடுங்கிய போலீசாரும் உண்டு, இரக்கப்பட்டு உணவு கொடுத்து அனுப்பிய திருடரும் உண்டு, ஊர்க்காரர்களும் உண்டு. ஓரிடத்தில் என்ன பாகிஸ்தானியரா எனக் கேட்டு துன்புறுத்திய நிகழ்வும் இருந்தது.

சித்திக்கிற்கு அப்பா வாகித்தின் உருது பத்திரிகையை தொடர வாய்ப்பு மாணவப் பருவத்திலேயே கிடைத்தது. சிபிஎம் கட்சியின் முக்கிய தலைவராக அப்போது தோழர் சுர்ஜித் இருந்தார். அன்போடு பழகக்கூடியவர். 1930 களிலேயே உருது பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டவர். சித்திக் எப்போதும் சுர்ஜித்தை 'பாபாஜி' என அழைப்பார். 1971 முதல் SFIல் சித்திக் மற்ற தோழர்களுடன் செயல்படலானார். சில மாதங்களில், துடிப்பாக இருந்த யெச்சூரி, சித்திக் இருவரையும் சுர்ஜித் அழைத்து இருவரும் ஒரே நாளில் சிபிஎம் கட்சியில் சேரலாம் வாருங்கள் என அழைத்தார்.

சித்திக்கிற்கு உருது பத்திரிகை முக்கியம். அந்த சுதந்திரம் இருந்தால் கட்சிக்கு வருகிறேன் எனப் போய் நின்றார். சுர்ஜித் மற்றவர்களுடன் ஒருவேளை கலந்து பேசியிருப்பாரோ, தெரியவில்லை. சித்திக், நீ இப்போது சேரவேண்டாம், உருது இதழில் செயல்பட, முஸ்லீம்கள் மத்தியில் பணியாற்ற நீ ஒப்படைத்துக்கொள், பின்னர் பார்க்கலாம் என்றார். கட்சியில் என்றால் கட்டுப்பட்டுத்தான் எழுத வேண்டியிருக்கும் என்கிற அறிவுரையும் சுர்ஜித் தராமல் இல்லை. பேரா ரந்தீர் மிகப் பெரும் மனிதாபிமான மார்க்சிஸ்ட் எனச் சொல்லும் சித்திக், சுர்ஜித் பற்றி

I have known many communists, but none as pragmatic, realistic, open and down to earth as com Surjeet என எழுதுகிறார்.

சித்திக் கட்சியில் சேர அழைக்கப்பட்டது, என் சொந்தக் கதைக்கு என்னை அழைத்துச் சென்றது. 1977 டிசம்பரில் பணியில் சேர்ந்த சில நாட்களிலேயே, தொழிற்சங்கத் தலைவர் கே எஸ் கே என்னிடம் சோவியத் பப்ளிகேஷனான Dialectical and Historical Materialism என்கிற பெரிய நூலைக் கொடுத்து படி என்றார். ஆங்கிலம் படிக்கத் தெரிந்தால் போதுமா, ஒன்றும் புரியவில்லை. 1978 ஜனவரியா, பிப்ரவரியா நினைவில் இல்லை. தோழர் ஞானையா (தொழிற்சங்கத் தலைவர், மார்க்சிய எழுத்தாளர்) தஞ்சை வருகிறார். மூன்று புதிய தோழர்களை கட்சிக்குள் கொணர்கிறோம், நீயும் ஒருவன் என தஞ்சைக்கு வரச்சொன்னார் கே எஸ் கே. நான் போய் நின்றேன். மற்ற இருவரும் தஞ்சாவூர் தோழர்கள்தான். அவர்களை அழைத்து அழைத்துப் பார்த்து கொணரமுடியவில்லை. ஒருவர் சிபிஎம், மற்றவர் எம் எல் லிபரேஷன் எனப் போனதை பின்னர்தான் அறிந்தோம்.

தோழர் ஞானையாவை அப்போதுதான் முதலில் பார்க்கிறேன். எனக்கு வயது 22 முடியவில்லை. அவருக்கு 58 இருக்கலாம். அவர் உதட்டில்

வெளிநாட்டு சிகரெட். முதல் காட்சி எனக்கு அப்படித்தான். ஏன் சிகரெட் என கே எஸ் கேவிடம் கேட்ட நினைவு. பிறகு ஒரிரு மாதங்களில் திருவாரூர் ரயில்வே பிளாட்பார்மில் தொழிற்சங்கத் தலைவர் தோழர் ஆர். கே, திருவாரூரில் புகழ் வாய்ந்த தோழர் ராமதுரையை கட்சிக்கு கொணர்ந்தார். ராமதுரை மணமானவர்- 24 வயது -அவ்வூரின் அழகுப் பெட்டகம். எம் ஜி ஆர் என்கிற பரோபகாரி. இருவரும் சேர்ந்து கட்சி கூட்டங்களுக்கு மாதமாதம் தஞ்சாவூர் சென்று, விடியற்காலை ஊர் திரும்புவோம்.

எங்கள் குடும்பத்தில் தாத்தா, மாமா காங்கிரஸ்காரர்கள். தாத்தா நேரு, காமராஜ் மீது அபார பற்றுக் கொண்டவர். நேரு இறந்த செய்தியை ரேடியோ அறிவித்தபோது அவரின் அதிர்ச்சியை குடும்பத்தார் பார்த்தோம். தஞ்சை கரந்தை சந்நதி தெருவில் இருந்தபோது அமைச்சராக கக்கன் வீட்டிற்கு வந்து ஸ்வீட்- காரம்- காபி எடுத்துக்கொண்டது சிறுவனாக நினைவிற்கு வருகிறது. கரந்தை பரசுராமர் தெருவில் மாமா காங்கிரசிற்காக தன் நண்பர்களை சேர்த்துக்கொண்டு, ஊர் பெரிய மனிதர் ராஜாஜியின் நண்பரை எதிர்த்து தேர்தல் வேலைகள் செய்தது நினைவில்.. அக்குடும்பத்திலிருந்து முதல் முறையாக ஒருவன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அழைத்து வரப்பட்டவனானேன். தெருவில் கலகக்கார நாகராஜ் என்கிற இளம் உழைப்பாளி இளம் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரை அழைத்து வந்து (பெயர் நினைவில் இல்லை) கொடியேற்றி பலருக்கும் கோபத்தை கிளர்த்தினார். சிறுவர்களாகிய எங்களுக்கு நாகராஜன் ஸ்வீட் கொடுத்தது நினைவில்.. பின்னர் அவர் மதுரை பென்னர் கம்பெனிக்கு போய்விட்டார்..

சித்திக்கின் நூல் இந்த நினைவுகளை என்னிடம் கிளர்த்தியது. சரி , நூலுக்கு வருகிறேன்.

சித்திக் குடும்பம் நிதி நெருக்கடியில் சிக்குகிறது. பத்திரிகை கடன் உயர்ந்துவிட்டது. வீட்டுச் சாமன்களை விற்றுத்தான் அன்றாட 'போஜனம்' நிலை. மாணவன் சித்திக் அப்பா கணக்கில்லாமல் சேர்த்து வைத்திருந்த புத்தகங்களை பூட்டியிருக்கும் பழைய புத்தகக் கடை முன் நின்று, எட்டணாவிற்கு கூட விற்ற வறுமை. சற்று எளிய மக்கள் வாழும் பகுதிக்கும் குடிபெயர்தல் நிகழ்ந்தது. அங்கு புகழ் வாய்ந்த ஓவியர் எம் எப் ஹூசைனுடன் பழக்கம் ஏற்பட்டது.

பார்க்கலாம்..சித்திக்கின் இந்திய சாட்சியம் மேலும் எப்படி அழைத்துப்போகிறதென.. 19-1-2026

ap 2025

60. The Political Marx

LeftWord பதிப்பகம் சார்பில் 2023ல் வந்த நூல் 'The Political Marx'. மார்க்சிய அறிஞர் அய்ஜாஸ் அகமதுடன் (1941-2022) மார்க்சிய ஆய்வாளர் விஜய் பிரசாத் நடத்திய உரையாடல் - நூல் வடிவம் பெற்றுள்ளது. இரண்டு அறிஞர்களும் ஏராள நூல்களை எழுதியவர்கள்.

இந்த நூலில் விஜய் பிரசாத் தன் கேள்விவழி உரையாடல் மூலம் அய்ஜாஸ் அவர்களின் மார்க்ஸ் குறித்த உரத்த சிந்தனையை வெளிக்கொணர்ந்துள்ளார். மார்க்சின் 4 நூல்களை இருவரும் எடுத்து அவற்றின் அரசியல் முக்கியத்துவத்தை வெளிக்கொணரும் வகையில் விவாதித்துள்ளனர். அந்த 4 நூல்கள்

கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ, ஜெர்மன் தத்துவம், 18வது புருமர், பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள்.

இந்நூல்கள் எந்த சூழலில் பிரதியாக்கப்பட்டன, எப்படி ஒன்றுக்கு ஒன்று ஊடாடி துணை நிற்கின்றன. லெனின் தனது அரசும் புரட்சியும் என்கிற நூலை இந்த நூல்களின் துணைகொண்டு எப்படி வளப்படுத்தி, மார்க்சிய இலக்கியத்திற்கு மேலதிக பங்களிப்பை செய்தார் என்பது இந்நூல் செல்லும் விவாத திசையின் சாரம் எனலாம்.

கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ 1848ல் வந்தது. ஜெர்மன் தத்துவம் எழுதப்பட்டு அப்படியே கிடந்து, டேவிட் ரியாஸ்னாவ் முயற்சியால் 1932ல் தான் வெளிஉலகிற்கு கிடைத்தது . 18வது புருமர் லூயிபோனபார்ட் 1852 ல் வந்தது. பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள் 1871ல் வந்தது.

இந்நூலில் இருவரும் German Ideology என்பதில்தான் உரையாடலை தொடங்கியுள்ளனர். இதை மார்க்சிய சிந்தனைக்கான துவக்கத் தருணமாக வர்ணிக்கின்றனர். இதில் உலகை மாற்றும் வரலாற்று செயல்வழிகள் பேசப்படுகின்றன. இந்த வரிகளை உரையாடலிலிருந்து பிரித்து தருகிறேன். (இப்படி செய்வது அவ்வளவாக உகந்த ஒன்றல்ல)

Knowing world without acting upon it to change it is pure idealism. Marx comes to see the centrality of acting in history and upon history. Praxis is at the centre of the epistemology. Here production.

இதிலிருந்து அவர் கூலி உழைப்பு, சமூக உற்பத்தி, தனி அபகரிப்பு, முரண்பாடு என உயர்த்திச் செல்வார் மார்க்ஸ்.

அடுத்து மார்க்ஸ் - ஹெகல், பாயர்பாகை கடந்து செல்தல் பற்றி விவாதிக்கின்றனர். இங்கு அய்ஜாஸ் அழகாக ஒன்றை இப்படி விளக்குகிறார்.

The nature itself is historically produced (அதாவது மனிதன் பார்க்கத்தொடங்கிய பின் என புரிந்துகொள்தல்) . We do not know in the way and shape in which physical nature existed before human beings started acting on it, and the nature itself has a history

சிறு வயதில் விளையாட்டாக நாங்கள் கவிதை ஒன்றை எடுத்துக்காட்டி சொல்லி சிரிப்போம்.

நினைவிற்கு வருகிறது.

என் பெயர் ராம்கோவிந்த் (கவிதையில் ராம் சேஷன் என நினைவு)

சூரியன் பெயர் சூரியன்

என் பெயர் எனக்குத் தெரியும்

சூரியன் பெயர் சூரியனுக்கு ?

அடுத்து அவர்களின் உரையாடல் சுற்றி வருவது அந்நியமாதல். நிஜ உலகம் என ஏதாவது பிரதிபலிப்பு இருக்குமா- இல்லை குறித்த காலத்தின் பிரதிபலிப்பா எனப் பேசுகின்றனர். ஜெர்மன் தத்துவத்தில் 'economic factors- consciousness' direct relations அதிகம் பேசப்பட்டதை அகமது தொட்டுக்காட்டுகிறார்.

மானிபெஸ்டோ குறித்த உரையாடல் அடுத்து நடக்கிறது.அய்ஜாஸ் எடுத்தவுடனேயே தெளிவு படுத்துகிறார்

It is not a descriptive book- not a description of capitalism but a reflection on the logic of capitalism.

தன்னை மீள் விரிவு செய்துகொள்ளாமல் முதலாளித்துவம் ஜீவிக்காது எனப்பேசும் அரசியல் பிரதி என அய்ஜாஸ் சொல்கிறார். இன்னொரு சுவாரஸ்யமான தகவல் 1848 ல் மார்க்ஸ் இதை எழுதிய காலத்தில் உலகம் முழுதும் 500 தொழிலாளர் அமைப்புகள் கூட இல்லை. ஜெர்மன் புகலிட தொழிலாளர்களின் லீக் அமைப்பிற்காக எழுதப்பட்ட ஒன்று.

இன்னொரு விளக்கம். சோசலிசம் வந்தே தீரும் என மார்க்ஸ் சொல்வதான பொது புத்தி குறித்து. பொருதும் வர்க்கங்கள் ஒன்று முன்னேற்றகரமான சோசலிச சமூகம் நோக்கி செல்லவேண்டும்- இல்லையெனில் பொது அழிவை நோக்கிச் செல்லும். இதையே ரோஸா லுக்சம்பர்க் socialism or barbarism என விரித்து எழுதியதைக்

காண்கிறோம். அய்ஜாஸ் விஜய் இருவரும் சோசலிசம் வரலாம் என்பது ஒருவகை statement of optimism என்கின்றனர். Grasping the moment - creating political framework ideologically and intellectually என்கின்றனர்.

18வது புருமர் பற்றி அடுத்து இருவரும் உரையாடுகின்றனர். உற்பத்தி வர்க்க மோதல் , பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், வர்க்கங்கள் உதிர்தல் போன்ற கருத்தாக்கங்களை விவாதிக்கின்றனர். இதில்தான் அடிக்கடி மேற்கோளாக்கப்படும் வரிகள் வருகின்றன

Men make their history, but they do not make it as they please

The tradition of all dead generations weighs like a nightmare on the brains of the living.

இவற்றை deep dense text எனச் சொல்கின்றனர். 1918ல்லெனின் தனது அரசும் புரட்சியும் நூலில் மானிபெஸ்டோ, 18 வது புருமர், பிரான்சில் வர்க்கப்போராட்டங்கள் ஆகியவற்றிலிருந்து எடுத்துக்கொண்டதை அய்ஜாஸ் சொல்கிறார். 18வது புருமரில் கற்க வேண்டிய ஒன்றை அய்ஜாஸ் அழுத்தமாகத் தருகிறார்.

Underneath the surface what are the actual class forces that are active, what are the class determinations of day to day politics and how can you analyse those..அதாவது how class struggle manifests itself in day to day politics

அய்ஜாஸ் வேறு ஒன்றையும் கவனப்படுத்துகிறார்.அன்றாட அரசியல் வாழ்வில் போராட்டக்களத்தில் ஊடாடி மறித்துக்கொள்ளும் சக்திகளை அறிந்தால்தான் மார்கஸ் பேசுகிற வர்க்கப்போராட்டம் என்பதை விளங்கிக்கொள்ள முடியும் என்கிறார். அவர் சொல்லும் அழகான வரிகள்- முக்கியமான வரிகளும் கூட.

Class does not appear when you are dealing with actual political struggles. Class appears to you embodied in the political forces.it does not appear in front of you in its own purity and wholeness

1871ல் வந்த பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் நூல் குறித்ததுடன் இந்நூல் முற்றுப்பெறுகிறது. லெனின் சோவியத் புரட்சி கடந்து 73 வது நாள் உற்சாகத்துடன் ‘டான்ஸ்’ செய்தாராம். பாரிஸ் கம்யூன் புரட்சியின் வாழ்நாளை சோவியத் விஞ்சிவிட்டதே அவரின் உற்சாகம்.

பாரிஸ் கம்யூன் சுற்றிய இந்த உரையாடலில் முக்கியமான கருத்து ஒன்று சொல்லப்பட்டுள்ளது. அரசு உதிர்தல் என்பதுடனும் அது தொடர்பாகி பேசப்படுகிறது. Socialist Non State என்கிற கருத்தாக்கம் அது எப்படி இருக்கலாம் என்பது அதன் விரிந்த பொருளில் மார்க்ஸால் பேசப்படவில்லை.

பெரும்பான்மை உழைக்கும் மக்களே ஆட்சி அதிகாரம், நாடாளுமன்றம், நீதி நிர்வாகத்தில் என்கிற புரிதலை லெனின் தந்தார். அதாவது distributes functions to the whole specially majority working people என்கிற சோவியத் புரிதல். இங்கு லெனின் எழுதியதை சுட்டிக்காட்டுகின்றனர்

Our revolution will be invincible, if it is not afraid of itself if it transfers all power to the proletariat…

நீளம் கருதி நிறுத்துகிறேன். சற்று அடர்த்தியான உரையாடல்கள் கொண்ட நூல்தான். மேற்கூறிய நான்கு மார்க்ஸ் மூல நூல்களுக்கு , இந்த நூல் ஜன்னலாக இருக்கும்.

22-4-2025

aug 2023

61. மார்க்ஸ்- லெனின், காந்தி- காங்கிரஸ்

மார்க்சியம் இன்றும் உலகளாவிய விவாதப் பொருளாக இருப்பதற்கான, பெரும் கட்டுமானத்தை செய்ததில் லெனினுக்கு பிரதான பங்கிருக்கிறது.

ருஷ்ய அரசியலை பல்லாண்டுகள் மார்க்சிய புரிதலில் பார்த்த அவர், அச்சமூகம் புரட்சியின் மாற்றத்தின் தலைவாயிலில் இருப்பதாக உணர்ந்தார். சக தோழர்களை உணரவைத்தார். இதன் விளைவாக அக்டோபர் புரட்சி என்கிற சோதனையை அவர் துணிச்சலாக மேற்கொண்டார். அவரைத்தொடர்ந்த ஸ்டாலின், குருஷேவ் , பிரஷ்னேவ், ஆந்திரபோவ் , கோர்பசேவ் சோதனைகளுடன் லெனின் ஏற்படுத்திய அக்டோபர் கனவுகள் முடிந்தன.

லெனின் சோவியத் சோதனை மாடல் வீழ்ந்தாலும், 21 ஆம் நூற்றாண்டில் சோசலிசம் என்கிற உரையாடல் மார்க்ஸிய விளக்கங்களுடன் பெருகாமல் இல்லை. தொடர்ந்து மார்க்சிய விவாதங்கள் அதன் தேவைகளை சுட்டிக்காட்டியும், அது வழக்கொழிந்த ஒன்று என்ற விமர்சனங்களுடனுன் பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன. மார்கஸ் தொடர்ந்து கட்சிப் பொருளாகவும், விவாதப்பொருளாகவும் நீடிப்பதில் லெனினின் அக்டோபர் சோதனை, சோவியத் மாடல் உருவாக்கம் பெரும் பங்காற்றியுள்ளது.

காந்திக்கு இப்படிப்பட்ட அரசியல் நிறுவனம் சார்ந்த , உலகளாவிய தாக்கத்தை உருவாக்கிய ஏற்பாடுகள் மார்க்சிற்கு கிடைத்தது போல் கிடைக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. காந்தி தனது சுயப் போராட்டங்கள் வழியே மட்டுமே தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அரசின் வழியாக, கட்சி அரசியல் வழியாக அவர் நெடுக அழைத்துச் செல்லப்படுகிறார் என உணரப்படமுடியவில்லை. காந்தியானா மீது ஆர்வம் உள்ளவர்களின் விரிவான விவாத வெளிகளின் மூலமாகவும், காந்திய இயக்க நண்பர்களின் ஆங்காங்கேயான செயல்பாடுகளின் மூலமாகவும் காந்தி கைமாற்றித் தரப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

மார்க்சிற்கும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஆய்வுவெளி பரப்புண்டு. ஆனாலும் அவர் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உதடுகளில் நேர்மறையாகவும், வலது கட்சிகளின் உதடுகளில் எதிர்மறையாகவும் வெளிப்பட்டுக்கொண்டிருப்பார். காந்திக்கும் இப்படி ஆதரவான

பிரமித்துப் பேசும் உதடுகளும், அவரை பெருமளவு வசைபாடும் உதடுகளும் இருக்கவே செய்கின்றன. காங்கிரஸ் கட்சி என்ற வகையில் 'காந்தியானா'விற்கு போதுமான , காங்கிரசில் தொடர்ந்து காந்தியர்களை வைத்திருந்து அழைத்துச் செல்ல அக்கட்சி பங்களிப்பை செய்யாமல் போனதாகவே எனக்குப்படும்.

அவர்களின் அதிகார வெளியீடுகளில் காந்தி வருவதோ, அவர்களின் இணையங்களில் காங்கிரசில் காந்தியுடன் பணியாற்றிபோன காந்தியர்களின் ஆக்கங்களுக்கோ முன்னுரிமையிருப்பதில்லை. பாஜக தனது library ல் , அல்லது வெவ்வேறு வழிகளில் தனது சித்தாந்த முன்னோடிகளுக்கு கொடுத்திருக்கும் space அளவுகூட காங்கிரஸ் தனது பெரும்பயணத்தில் செய்யவியலாமல் போனது வருத்தமான ஒன்றே. காங்கிரசில் படேல் பக்கம், கிருபளானி பக்கம், வினோபா பக்கம், குமரப்பா பக்கம் என சில பகுதியாவது, நேருவின் நூல்தொகை அளவிற்கு இல்லாமல் போனாலும் இணைத்து வைத்திருந்தால் அது இன்றும் பயனளித்திருக்கும். தொடர்ந்து காங்கிரசில் பயணித்தவர் பின்னர் வேறுபட்டு போயிருந்தாலும், அவர்கள் இருந்த காலம்வரை அவர்களின் பங்களிப்புகளை அது தனது archive களில் வைத்திருக்கும் அரசியல் கண்ணியத்தை கொண்டு பயணிக்கவேண்டிய அவசியம் உள்ளது.

தமிழகத்தில் பெரியாருக்கு இந்த 50 ஆண்டுகளில் பெரிய ஏற்றம் உருவானது. இதற்கு அண்ணாவின் பங்களிப்பு அளப்பரியது எனலாம். 1949ல் பிரிவிற்கான காரணங்களையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, அவரால் அடையாளம் காட்டப்பட்டவர் என்ற வகையில் , குரு காணிக்கையை அண்ணா அற்புதமாக செய்து அரசியலில் புதிய கண்ணியத்தை உருவாக்கினார். பெரியார் நாணவேண்டியிருந்தது. அடுத்து வந்த கலைஞராக இருந்தாலும், ADMK தொடங்கிய எம்ஜிஆர் ஆனாலும் பெரியார் என்கிற உருவை மேலும் உயர்த்தியே சென்றனர். இதன் பொருள் திக விற்கோ, தன்னளவில் பெரும் உழைப்பை நல்கிய பெரியாருக்கோ, பின் தொடர்ந்த மணியம்மை, வீரமணி , ஆனைமுத்து இன்னும் பல பெரியாரியத் தோழர்களுக்கோ பெரியாரை எடுத்துச் செல்வதில் பெரும் பங்கில்லை என்பதல்ல. அண்ணாவின் ஆட்சி சோதனை முக்கிய பங்களிப்பை செய்தது என்பதுதான். கட்சிகளைத்தாண்டி பெரியாரும் இன்று விவாத வெளியில் இல்லாமல் இல்லை.

அண்ணல் அம்பேத்கரும் தன் பெரும் உழைப்பால்தான் தன்னை நிலைநாட்டிக்கொண்டு வந்துள்ளார். இன்னும் வருவார். அவருக்கான

அவரது கட்சி சோதனையோ, அவரது பெயரை முன் நிறுத்தி இன்றுவரை செய்யப்படும் கட்சி சோதனைகளோ ஓரளவிற்கு உதவியிருக்கலாம். அவரின் மேதாவிலாசத்தால்கட்சிகளை தாண்டி அவர் விவாதப்பொருளாகியிருக்கிறார்.

எவர் ஒருவர் தனது சிந்தனை செயல் முறைகளால் அடிப்படை கட்டுமானங்களை செய்கிறார்களோ அவர்கள் ஏதோவொரு வழியில் பெரும் சிந்தனை கட்டிடங்களாக எழுந்துகொண்டே செல்வர். அப்படிப்பட்ட வாய்ப்பை இந்தத் தலைவர்கள் உலகோர் மத்தியில் பெற்றுள்ளனர்.

sep 2024

62. மாவோ- காந்தி

தோழர் மாவோ அவர்களின் selected vol ஒன்றை கொடுத்து முதலில் என்னை படிக்கச் சொன்னவர் தோழர் கி வெங்கட் ராமன் (இப்போது தமிழ்தேச பொதுவுடைமை). அப்போது திருவாரூர் சிபிஎம் மாவட்டக் கட்சி ஊழியர் அவர். அங்கிருந்த நூலகத்திலிருந்து தான் அதை அவர் எடுத்துக்கொடுத்தார். நாங்கள் சிபிஅய் சிபிஎம் என வெவ்வேறு இயக்கங்கள் சார்ந்தவர்களாக இருந்தாலும், தோழமை கொண்டவர்களாக இருந்தோம். திருவாரூர் தொழிற்சங்க கூட்டமைப்பு இயக்கத்திற்கு அவர் தலைவர், நான் செயலர். ஏறத்தாழ ஊரில் இருந்த 50 தொழிற்சங்கங்கள் அதில் இடம் பெற்றிருந்தன. இப்போதும் 45 ஆண்டுகளை தொட்ட அவ்வியக்கத்தை அவ்வூர் தலைவர்கள் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

தோழர் வெங்கட் கொடுத்த அந்த தொகுப்பில்தான் மாவோவின் on practice, on contradiction போன்ற புகழ் வாய்ந்த மெய்யியல் விசாரணைகள் இருந்தன. 1985க்கு முன்னரா அடுத்த ஆண்டா என எனக்கு சரியாக நினைவில்லை. அப்போது எவ்வளவு புரிந்து கொண்டேனோ...

16 ஆண்டுகளுக்கு முன்னர் ராகுல் பவுண்டேஷன் தோழர்கள் மாவோவின் 5 கட்டுரைகள் என்ற தொகுப்பை Five Essays on Philosophy என்கிற புத்தகத்தைக் கொணர்ந்தனர். மாவோயிச பயிற்சி உள்ள தோழர்கள் பெரும்பாலும் நடைமுறையைப் பற்றி, முரண்பாடு குறித்து என்கிற இரண்டையும் படித்திருப்பார்கள்.

ராகுல் நிறுவனம் 1937 ல் பேசப்பட்ட இந்த மாவோவின் இரண்டுடன், தொடர்புகொண்ட முரண்பாடுகளை கையாளுதல் handling the contradictions, propaganda work பிரச்சார வேலை என்கிற 1957 குறிப்புகளையும், சரியான சிந்தனை எண்ணங்கள் எங்கிருந்து வருகின்றன என்கிற மிகச் சுருக்கமான 1963 குறிப்பு ஒன்றையும் இணைத்து இந்த 5 கட்டுரைகள் தொகுப்பை கொணர்ந்தனர்.

அதைப் படித்தபோது தான் 1980களின் நினைவுகள் வந்தன. சிபிஎம் அலுவலகத்தோழர் சேகர் (விவசாயத்தலைவர் கோ வீரையன் மாப்பிள்ளை) சிபிஎம் அனைத்து பத்திரிகைகளையும் RP என எழுதி அலுவலக போஸ்ட் பாக்சில் வைத்து சென்றுவிடுவார். தீக்கதிர் மட்டும் வீட்டிற்கு வந்துவிடும்.

வெங்கட் இருந்தபோது சிபிஎம் people's democracy யும் சிபிஅய்யின் new age யையும் மாற்றி கொடுத்து வாங்கிக்கொண்டிருந்தோம். சென்னை வந்த பிறகு பீப்பிள்ஸ் டெமாக்ரசி, மார்க்சிஸ்ட் இதழ்களை அதிகாரிகள் சங்கத்தில் மாநில செயலராக இருந்த , தற்போது ஓய்வூதிய சங்க செயலராக உள்ள தோழர் ராஜசேகர் கொடுத்துக்கொண்டிருந்தார்.

On practice அளவில் சிறிய கட்டுரைதான். மாவோவும் காந்தியும் சந்திக்கும்புள்ளிகளை, மாறுபடும் இடங்களை இதில் பார்க்க முடியும். 'தோழர் காந்தி' நூலில் லெனினும் காந்தியும், மாவோவும் காந்தியும் போன்ற கட்டுரைகளை எழுதியிருந்தேன். அதில் சில ஒப்பீடுகள் காட்டப்பட்டிருக்கும்.

காந்தியிடம் 'தான் செய்துவிட்டு அதை செய்ய சொல்வது' என்கிற முன்னுதாரண exemplariness இருக்கும். செய்த ஒன்றின் அனுபவ பிழிவாகா அவரது தியரி (தியரி கோட்பாடு என்ற பொருளில் அல்ல) அமையுமென புரிந்துகொள்ளலாம்.

மாவோவின் சில வரிகளை இங்கு தருகிறேன்.

முதலில் where do correct ideas come from என்கிற 1963 குறிப்பில் மாவோ

Leading from practice to knowledge and then back to practice. Such is the the Marxist theory of knowledge, dialectical materialist theory of knowledge. Among our comrades there are many who do not yet understand this theory of knowledge.

காந்தி எப்போதும் dialogical ஆக இருப்பவர். தொடர் செயல்கள் விவாதங்கள் வழி அவ்வப்போதைக்கான உண்மைகளை இனங்காண்பவர். டன் கணக்கான பேச்சுக்களைவிட ஓர் அவுன்சு நடைமுறை, ஓரடி முன்னால் என்கிற கவலையுடன் செயல்பட்டவர். செய்யமுடியுமா எனில் தொடர்ந்து வா என்கிற முன்னொட்டை அவரிடம் பெறாமல் எவரும் அவர் கூட செல்ல முடிந்ததில்லை.

எங்கள் டெலிகாம் இயக்க தோழர் ஓ பி குப்தாவிடம் ஓரடி ஆனாலும் அனைவருடன் - தீர்வை நோக்கிய செயலும் பேச்சும் என்பதை நாங்கள் உணர்ந்தோம். தீர்வைத் தருவதே புரட்சிகரமானது என்கிற பாலபாடத்தை குப்தா எங்களுக்கு உணர்த்தினார். அடைந்தால் மகாதேவி அடையாவிட்டால் மரணதேவி என்பதை mass movement எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதை நாங்கள் அங்கு கற்றுக்கொண்டோம்.

சரி , இப்போது மாவோவின் புகழ் வாய்ந்த 1937 on practice ல் சில வரிகள்

Marxists regard man’s activity in production as the most fundamental practical activity, emphasises that theory is based on practice and in turn serves practice.

Dialectical materialism குணங்களில் ஒன்றாக மாவோ அதன் practicality என இங்கு குறிப்பிடுவார். இங்கு காந்தியின் உழைப்பின் தத்துவம் bread labour theory சந்திப்பை காணமுடியும்.

அடுத்து மாவோ குறிப்பிடும் வரிகள்

Whoever wants to know a thing has no way of doing so except by coming into contact with it , that is by living practising in its environment. All genuine knowledge originates in direct experience (Mao also like Lenin did not deny indirect experiences)

மாவோ எளிமையாக புரியவைப்பார். மாம்பழத்தின் சுவை அறிய வேண்டுமெனில் அதை சுவைக்க வேண்டும். அதாவது அதில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்பார். That is bring change in that shape என்பார்.

Living in its environment என்பது காந்தி இந்திய சோசலிஸ்ட்கள் கம்யுனிஸ்ட்களுக்கு கொடுத்த மிக முக்கிய அறிவுரையாக இங்கு இருந்தது. காந்தியும் ‘something is given here’ என்கிற indirect experience யை கணக்கில் கொள்ளச் சொன்னார். அதன் கேடான பகுதிகளை கைவிடுவது , ஏற்பதில்லை என்பதில் உறுதி காட்டினார். முற்றிலுமாக annihilation என்பதில் அவர் வேறுபட்டார். There can be no knowledge apart from practice என்பதில் மாவோ வும் காந்தியும் சந்தித்ததாக கொள்ளலாம். Knowledge must be deepened by more practices என்பதிலும் அவர்கள் சந்திக்கின்றனர்.

மாவோ ‘on practice’ essay வை இப்படித்தான் முடிக்கிறார்.

Discover truth through practice, and again thro practice verify and develop truth.

காந்தி absolute truth என எதையும் சொல்வதில்லை. Relational truths பற்றித்தான் பேசுவார். மாவோ லெனினை சுட்டிக்காட்டி The sum total of innumerable relative truths constitutes absolute truth என புரிந்துகொண்டார்.

காந்தி இந்த எல்லாவற்றிலும் செய்யத்தகுந்த வழிமுறைகள் , அகிம்சை வழி உண்மையை நோக்கி - நெறி தவறாத பாதை morality என்பதற்கு அழுத்தம் கொடுத்தார்.

- ‘அவர் அதை செய்வாரா, அவர் செய்யாத ஒன்றை என்னிடம் எப்படி எதிர்பார்க்கலாம் ‘ என்கிற பிறர் என்ன செய்யவேண்டும் என்கிற கேள்விகள் காந்தியிடம் primacy பெறாது. நான் இந்த கணத்தில்

நெறியுடன் செய்யவேண்டியதென்ன, நான் சரியாக நடந்து கொள்கிறேனா என்கிற primacy அங்கு தொழிற்படும்.

நீளம் கருதி நிறுத்துகிறேன். மாவோவின் on contradiction பற்றி பலரும் பேசியுள்ளனர். பார்க்கலாம்..வாய்ப்பு எப்படி என்று..

14-9-2024

june 2022

63. Moral Lessons of the 20th Century

Moral Lessons of the 20th Century என்கிற உரையாடல் புத்தகம் 2005ல் வெளிவந்த ஒன்று. சோவியத் அரசியலில் உச்சம் சென்று பல அனுபவங்களைப் பெற்று வீழ்ந்த கோர்பச்சாவும்- புத்தமத சிந்தனைகளில் ஊறித்திளைத்த புகழ் வாய்ந்த ஜப்பானின் டாய்சகு இகெடா விற்குமான பெரும் உரையாடல்களைக் கொண்ட புத்தகம். பெரிஸ்ட்ராய்க்கா, சுதந்திரம், விருப்புறுதி- விதி, மானுடம், நம்பிக்கை, மதம், புரட்சியோ சீர்திருத்தமோ கீழேயிருந்து, உலக குடிமகன் சிந்தனை, சகிப்பின்மையும் வெறியும், கோட்பாட்டு முழுமுதல்வாதம், சோசலிசம் எனும் மனிதாயிதம், ஆன்மீக உணர்வுகள், புதிய மனிதாய சிந்தனைகள் என்று அவர்களின் உரையாடல் பல்வேறு தலைப்புகளில் விரிகிறது.

இப்படி ஒரு உரையாடல் - அதிலிருந்து சில வரிகள் இங்கு...

Gorbachov:

Bourgeois and proletarian morality cannot exist simultaneously. Considerations of a practical nature propelled us toward such a conclusion. Without a single morality, there can be no single system of values. Without a single system of values, we have no chance for dialogue, therefore cannot expect to overcome opposition between social systems of capitalism and communism.

The struggle with vulgar collectivism has led only to vulgar individualism. Do we have what it takes to realize our expectations of the new century? Do we have enough moral and physical strength—enough wisdom—to withstand new trials?

தமிழாக்கம்:

பூர்ஷ்வா மற்றும் தொழிலாளர் நெறிமுறைகள் ஒரே நேரத்தில் நிலைத்திருக்க முடியாது.
நடைமுறை சார்ந்த காரணிகள் எங்களை அந்த முடிவிற்கு இட்டுச் சென்றன. ஒரே நெறிமுறை இல்லாமல், ஒரே மதிப்புக் கோட்பாடு இருக்க முடியாது.
ஒரே மதிப்புக் கோட்பாடு இல்லாமல், உரையாடலுக்கான வாய்ப்பு எங்களுக்கில்லை; அதனால், கேபிடலிசம் மற்றும் கம்யூனிசம் ஆகிய சமூக அமைப்புகளுக்கிடையிலான எதிர்ப்பை தாண்டிச் செல்லும் நம்பிக்கையையும் எதிர்பார்க்க முடியாது.

அடிப்படைச் சிந்தனையற்ற கூட்டுச்சார்புடன் நடந்த போராட்டம், சிந்தனையற்ற தனிமனிதச் சார்பை மட்டுமே உருவாக்கியுள்ளது.

புதிய நூற்றாண்டின் எதிர்பார்ப்புகளை நனவாக்க எங்களிடம் தேவையான சக்தி உள்ளதா?
புதிய சோதனைகளை எதிர்கொள்ள, போதுமான நெறிமுறையும் உடல் வலிமையும்— போதுமான ஞானமும்—எங்களிடம் உள்ளதா?

IKeda:

Human beings experience spiritual as well as physical hunger..Life cannot be evaluated solely on either the material or the ideal plane. Both components are organically connected. Consequently, we must admit the deciding role faith plays in both spiritual and material development

In a way, giving priority to the material over the spiritual is a kind of religion. No conviction has exhaustive proofs. We must therefore admit that we do not always truly know something but only believe in it, with out significant evidence.

The human being cannot live without faith. It is as necessary as air.But we never think about the invisible air until we find breathing hard.

As Fyodor Dostoevsky said: “Even with plenty of money, a society collapses if it lacks noble ideas”

மனிதர்கள் ஆன்மீக பசியையும் உடல் பசியையும் அனுபவிக்கிறார்கள்.
வாழ்க்கையை வெறும் பொருட்கருத்தோ அல்லது சித்தாந்தக் கோணத்திலோ மட்டும் மதிப்பிட முடியாது.
இரண்டும் இயற்கையாகவே ஒன்றோடொன்று இணைந்துள்ளன.
அதனால், ஆன்மீகமும் பொருட்கருத்தும் வளர்ச்சியடைய, நம்பிக்கை வகிக்கும் தீர்மானிக்கும் பங்கை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆன்மீகத்தை விட பொருட்கருத்திற்கு முன்னுரிமை கொடுப்பது, ஒரு வகையான மதமாகும்.
எந்த நம்பிக்கைக்கும் முழுமையான ஆதாரங்கள் கிடையாது.
எனவே, நாம் எப்போதும் உண்மையில் அறிந்திருக்கிறோம் என்று சொல்ல முடியாது;
ஆனால், போதுமான சான்றுகள் இல்லாமல் நம்புகிறோம்.

மனிதன் நம்பிக்கையில்லாமல் வாழ முடியாது.
அது காற்றைப் போலவே அவசியமானது.
ஆனால், சுவாசிக்க சிரமமாக இருக்கும் வரை

அந்தக் கண்ணுக்குப் புலப்படாத காற்றைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை.

ஃபியோடர் தாஸ்தவாஸ்கி கூறியதுபோல்: “பணம் நிறைந்திருந்தாலும், உயர்ந்த சிந்தனைகள் இல்லையெனில் ஒரு சமூகம் சிதைந்து விடும்.”

june 2021

64. நினைவுச் சுழல்- 3

Arthur Koestler ன் Bisociative Revoultion என்பதை முகநூலில் பதிவிட்டபோது ஆர்தர் கொய்ஸ்லர் குறித்து நினைவு போனது. அவர் உட்பட சில முக்கிய எழுத்தாளர்கள் எழுதிய God That Failed புத்தகம் நினைவிற்கு வந்தது. 28 ஆண்டுகளாவது இருக்கலாம். இன்றைய புகழ்பெற்ற எழுத்தாளர் அன்று வளர்ந்து கொண்டிருந்த தோழர் ஜெயமோகன் அதை எனக்கு படிக்க அனுப்பியிருந்தார். நினைவுச் சுழல் அத்தருணங்களுக்கு என்னை அழைத்துச் செல்கிறது. வேறு சில புத்தகங்களையும் குறிப்பாக சோவியத் உடைவு குறித்த புத்தகங்களை எனக்கு அனுப்பி படிக்கவைத்தது நினைவிற்கு வருகிறது. அவரின் ரப்பர் படித்திருந்த நேரம்.

ஜெயமோகன் தோழர் வீரபாண்டியன் அவர்களின் தமக்கை உறவுச் சொந்தம்கொண்ட பட்டுகோட்டைப்பெண்ணை திருமணம் செய்திருந்தார். அங்கு மாமனார் வீட்டிற்கு வந்துள்ளார் என அறிந்து வீரபாண்டியனும் நானும் சந்தித்து சிலமணி நேரம் உரையாடிவிட்டு வந்தோம். அவர் DOT Telecom ஊழியர் என்ற வகையில் தொலைபேசி உரையாடல்கள் அதற்கு முன்பே இருந்தது.

வயதெனப்பார்த்தால் ஜெயமோகன் முப்பதின் ஆரம்பத்தில் அப்போது இருந்திருக்கலாம். வீரபாண்டியும் நானும் எங்கள் முப்பதின் இறுதியில் இருந்திருக்கலாம். கலைஇலக்கிய முகாம்கள் பற்றிய விவாதங்கள் இருக்கும். சுந்தர ராமசாமி அவர்கள் அமைக்கும் நாகர்கோவில் முகாமிற்கு செல்வது என வீரபாண்டியும் நானும் முடிவெடுத்தோம். ஜெயமோகன் அதற்கு உதவினார். முகாமில் வேதசகாயகுமார், ஞானி, எஸ். ராமகிருஷ்ணன், நாஞ்சில்நாடன், மனுஷ்யபுத்திரன், காலச்சுவடு கண்ணன், அய்யனார் போன்றவர்களைப் பார்க்கமுடிந்தது. கம்யூனிஸ்ட்கள் என அறிந்து இந்த இளையவர்களுடன் உரையாடவேண்டும் என்பதற்காக உணவுக்ி கூடத்தில் எங்கள் எதிரே அமர்ந்து சுந்தர ராமசாமி அவர்கள் அன்புடன் இ எம் எஸ் பற்றி விவாதித்தது நினைவிற்கு வருகிறது.

விஷ்ணுபுரம் நாவல் வந்தவுடன் அதற்கான ஆய்வுக்கூட்டம் மாயவரத்தில் எழுத்தாளர் சா கந்தசாமி அவர்கள் தலைமையில் நடந்தது. தோழர் வீரபாண்டியும், நானும் தனித்தனியாக எங்கள் பார்வையை எழுத்துவடிவில் முன்வைத்தோம். நாங்கள் நேர்மறையாக பாராட்டுமொழிகளை தந்திருந்தோம். அப்போது தஞ்சையில் இருந்த

தோழர் பெ. மணியரசன் அவர்கள் எங்களது கட்டுரைகளைப் பார்த்துவிட்டு விமர்சித்தது நினைவிற்கு வருகிறது.

பின்தொடரும் நிழலின் குரல் எழுதிக்கொண்டிருந்தபோது அதன் நகலுடன் ஜெயமோகன் திருவாரூக்கு என் இல்லத்திற்கு வந்தார். இரவு தெப்பம் பார்க்க போனதாக நினைவு. திருவாரூரில் அவரது உறவுமுறை இளைஞர் ஓரிரு முறை என்னை சந்தித்தது நினைவிற்கு வருகிறது. நகலைப் படித்தேன்.

பின்தொடரும் நிழலின் குரல் வந்தவுடன் அதன் வெளியீட்டு நிகழ்வு சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் நடந்தது. தோழர் ஜெகன் கூட்டத்திற்கு தலைமையேற்றார். தோழர் (ரமேஷ்) பிரேம், அஷ்வகோஷ் மற்றும் நான் நாவல் குறித்து பேசியதாக நினைவு. மூவரில் நான் மட்டும் நாவலை கடுமையாக விமர்சனம் செய்திருந்தேன்.

அந்நாவலை படித்துவிட்டு அதற்கு பதில்தரவேண்டும் என்ற எண்ணமே அப்போது எனக்கு மேலோங்கியிருந்தது. சுமார் 5000 பக்கங்களாவது தரவுகளை தேடிப் படித்திருப்பேன். திருவாரூர் CPIM அலுவலகத்திலிருந்து ஏராள புத்தகங்களை எடுத்துச் சென்றது நினைவிற்கு வருகிறது. தோழர் கோ வீரையன் அவர்களின் மருமகன் சேகர் பெரும் உதவியைச் செய்தார்.

கூட்டத்தில் ஞானி, சுந்தர ராமசாமி போன்ற பெரும் ஆளுமைகள் நிறைந்து இருந்தனர். என் உரையால் சிலருக்கு வருத்தம் ஏற்பட்டிருக்கலாம். தோழர் ஜெகன் கூட கடுமையாக எதற்கு எனக்கேட்டது நினைவிற்கு வருகிறது. கட்டுரையை சு ரா விற்கு அனுப்பியிருந்தேன். அப்போது காலச்சுவடு கிடைக்கும் இடம் எனச் சொல்லப்பட்ட சில முகவரிகளில் எனது முகவரியும் ஒன்று. எழுத்தாளர் ஆசிரியர் சிவகுருநாதன் என்னிடம் காலச்சுவடு பெறுவார். அவர் வாங்கும் ஏராள இதழ்களை தருவார். நாகர்கோவிலிலிருந்து பிரசுரிக்க இயலாது என்கிற கடிதம் வந்தது. தோழர் கோவை ஞானி அக்கட்டுரை இருந்தால் அனுப்பவும்- பிரசுரிக்கிறேன் என எனக்கு எழுதினார். அவர் வெளியிடவும் செய்தார். தோழர் பேரா அ, மார்க்ஸ் வேறு தருணங்களில் ஜெகன் அந்நிகழ்வில் பங்கேற்றது குறித்து விமர்சனப் பார்வையை முன்வைத்தார்

ஜெயமோகன் அவர்கள் இன்று அசுர எழுத்தாளர். அனைவராலும் கவனிக்கப்படுபவர். புகழப்படுபவர். பெரும் விமர்சனங்களுக்கும் உள்ளாகிவருபவர். அவருடனான தொடர்புகள் விட்டுப்போனது.

எப்போதாவது நலம் விசாரித்துக்கொள்வதாக ஆனது. ஒருமுறை தோழர் குப்தா, ஜெகன், வீரபாண்டி, என்னைப்பற்றி அவரது இணையதளத்தில் குறிப்பிட்டு தனது பார்வையை நேர்த்தியாக அவர் வைத்திருந்தார். தொழிற்சங்கத்தில் சிறந்த தோழர்கள் என்கிற கருத்து அவரிடம் இருக்கிறது.

ஏராள இளைஞர்களுக்கு இன்று அவர் பிரமிப்பானவராக இருக்கிறார். அரசியல் மற்றும் இலக்கிய வெளிகளில் பெரும் எதிர்வினைகளை சந்திப்பவராகவும் இருக்கிறார். எல்லாப் பொருள் குறித்தும் விரிவாக எழுதுபவராக இருக்கிறார்...

ஆர்தர் கொய்ஸ்லருக்கு நன்றி சொல்லவேண்டும். இந்த நினைவுச்சுழல் பெயர்ந்ததற்காக..

28-6-21

oct 2016

65. கன்னிமாரா நூலகம்

தேசிய புகழ்வாய்ந்த நூலகங்களில் சென்னை கன்னிமாரா பொது நூலகமும் ஒன்று. ஏறத்தாழ 125 ஆண்டுகள் பழமை வாய்ந்த நூலகமது.. இணைய வசதி இல்லாத அக்காலத்தில் புகழ் வாய்ந்தவர்கள் அனைவருக்கும் அறிவைத் தேடும் பெரும் சுரங்கமாக திகழ்ந்திருக்கும். புதிய கட்டிடம் இணைக்கப்பட்டே 40 ஆண்டுகள் ஆகியிருக்கும். லட்சக்கணக்கான நூல்களின் இல்லமது. IAS தேர்விற்கு தயாராகும் சென்னை இளைஞர்கள் ஏராளம் அங்கு மணிக்கணக்கில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.சென்னை வந்தவுடன் அதில் உறுப்பினர் ஆனேன். நான் முன்பு வசித்த திருவாரூர் மாவட்ட நூலகத்தில் பல அரிய நூல்கள் கிடைக்கப்பெற்றன. ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ் வெளியிட்ட தரமான ஆய்வு நூல்கள் (அப்போதே ரூ 500-1100வரை) பலவற்றை அங்கு படிக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த்ரேபெடலி போன்றவர் எழுத்துக்கள் எனக்கு அங்குதான்அறிமுகமானது. ஒரு கட்டத்தில் அந்த நூலகத்தின் ஆரம்பகாலபுரவலர்கள் பட்டியலில் பேரா அறிவழகனும் நானும் இருந்தோம். இப்போது நிறைய பேர் இடம் பெற்றிருக்கலாம். பழைய பேட்ரான் போர்டு இருக்கிறதா என தெரியவில்லை.

லட்சக்கணக்கான புத்தகங்கள் உள்ள கன்னிமாரா (1890களில் இருந்த சென்னை கவர்னர் கன்னிமாரா பெயரால்) நூலகத்திற்கு நான் அறிந்த சில நண்பர்கள் வந்து போவதை பார்த்திருக்கிறேன். தந்தி இளங்கோ(தமிழ் புலமை, மார்க்சிய அறிவு,தொழிற்சங்கவாதி), ஜெய்சங்கர் (கணிப்பொறி ஆளுமை, இலக்கியம், பக்தி இலக்கியம்), விஜயகுமார் (கவிஞர்/ எழுத்தாளர்-தொழிற்சங்க வாதி- உடல் நிலைபாதிப்புக்குள்ளாகி தற்போது தேறி வருகிறார்), ரெங்கநாதன்(பக்திஇலக்கியம்- வைணவ இலக்கியம்) ஆகியோர் கன்னிமாரா உறுப்பினர்களாக தொடர்கின்றனர். வீரபாண்டியன்(மார்க்சியம்-பெரியாரியம்-தமிழ்பற்று-இதழனுபவம்-தொழிற்சங்க தலைவர்) சென்னையில் இருந்தபோது கன்னிமாரா செல்லும் வழக்கம் வைத்திருந்தார்.

கன்னிமாராவில் மார்க்சிய நூல்களை தேடும் போதெல்லாம் 150க்கும் குறைவாகவே இருக்கிறதே என்ற எண்ணம் எனக்கு உருவாகும். இம்முறை சென்றபோது மூன்று புத்தகங்களை எடுத்து வந்தேன். ருஷ்ய சோவியத் புரட்சியின் 100 ஆண்டுகள் என்பதால் அது குறித்த விவாதங்கள் பெருக இருக்கின்றன. தேடல்களும் பெருகும். நானும் என்னளவில் தேடுகிறேன்.

கன்னிமாராவில் எடுத்த புத்தகத்தில் ஒன்று மார்க்சிய புலமை மிக்க பாராளுமன்றத்தில் தனது வாத திறமை மிகுந்த பேரா ஹிரன்முகர்ஜி அவர்களின் " Marx -Great October-India and the Future" என்ற சிறந்த புத்தகம். 1983ல் அவர் எழுதி 1984ல் அல்லய்டு பப்ளிஷர் வெளியிட்டு உள்ளனர் Marx- Lenin Legacy and their Intellectual Kinship, அக்டோபர்/நவம்பர் புரட்சி சூழல், மார்க்ஸ் இந்தியா பற்றி, இந்திய விடுதலை போன்ற பல்வேறு அம்சங்களை ஹிரன் விவாதிக்கிறார். அவரின் மூலங்கள் சார்ந்த படிப்பறிவு மூலம் சோவியத் புரட்சி குறித்த பல பெரும் மார்க்சிய அறிஞர்களால் எழுப்பப்பட்ட சந்தேகங்கங்கள், 1980கள்வரை சோவியத் குறித்து எழுந்த பல்வேறு விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வண்ணம் இந்நூலை அவர் எழுதியுள்ளார். இந்த அறிய புத்தகத்தை இதுவரை 4 பேர் மட்டுமே எடுத்துள்ளனர். 1984ல் ஒருவர், 1985ல் இருவர் அதற்கு 30 ஆண்டுகளுக்கு பின்னர் 2016ல் அடியேன்.. இப்புத்தகத்தின் அலமாரி வரிசை எண் 335.43 MUK. 1980களில் நியுஏஜ், பார்ட்டி லைப் ஆகியவற்றில் அவர் எழுதும் கட்டுரைகளை அகராதி கொண்டுதான் புரிந்துகொள்ள முடிந்தது. இப்புத்தகத்தை கூட மார்க்சிய பயிற்சி இல்லாமல் புரிந்து கொள்வது கடினம். ஹிரன்(1907-2004) போன்ற மார்க்சிய பேரறிஞர்கள் இடதுசாரி இயக்கங்களில் குறைந்துவருவதும் கவலைக்குரிய ஒன்றே.

may 2023

66. மார்க்ஸ் எங்கெல்ஸ் தொகுப்பு நூல்கள்

Gareth Stedman Jones எழுதிய Karl Marx Greatness and Illusion குறித்து முகநூலில் சில பதிவுகளை தந்திருந்தேன். எகனாமிஸ்ட் பத்திரிகை இந்த ஆக்கத்தை there is no better guide to Marx என மதிப்பிட்டிருந்தது. 595 பக்கங்களில் அடர்த்தியான செய்திகளுடனான விவாதப்பரப்பு கொண்ட ஆக்கம். குறிப்புகள் ஆதாரங்கள் எனச் சேர்த்தால் 750 பக்கங்கள் கொண்ட புத்தகம்.

ஜோன்ஸ் இதில் கடைசிப் பகுதியில் மார்க்ஸ் எங்கெல்ஸ் நூல்தொகைகள் அடுக்கப்பட்ட சிறு வரலாற்று குறிப்பை தந்திருப்பார். அதிலிருந்து சில பகுதிகள்..

மார்க்ஸ் 1883ல் மறைந்த பின்னர் அவரது எழுத்துக்கள் அவரின் வாழ்நாள் தோழர் எங்கெல்ஸ் வசமானது. எங்கெல்ஸ் அதை மார்க்சின் கடைசி மகள் எலியனார் (டஸ்ஸி) வசம் ஒப்படைத்தார். எலியனார் 1898ல் மறைந்தார். மற்றொரு மகளான லாரா லபார்க்கிடம் சில பேப்பர்ஸ் இருந்தனவாம். இந்த மகள்தான் பிரான்ஸ் மெரிங் 1914ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு எழுத கிரியாவூக்கியாக இருந்த பெண்மணி.

எங்கெல்ஸ்1895ல் மறையும் போது அவரது எழுத்துக்கள் பலவற்றிற்கு ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சி பொறுப்பேற்றுக்கொண்டது. ஆகஸ்ட் பெபல், எட்வர்ட் பெர்ன்ஸ்டைன் இருவரும் அதற்கு டிரஸ்டியாக்கப்பட்டிருந்தனர். இக்கட்சியால் 1910ல் தான் பெர்லின் எங்கெல்ஸ் கிடங்குடன் மார்க்சின் பேப்பர்களையெல்லாம் கொண்டுவந்து சேர்க்க முடிந்ததாம்.

இந்தக் காலத்தில் ஆஸ்ட்ரோ மார்க்சியர்கள் கூடி மார்க்ஸ் எங்கெல்ஸ் தொகுப்புக்களை கொணர்வதன் அவசியத்தை உணர்ந்தனர். ஆனால் அவர்களால் முடியாமல் போனது.

ரஷ்ய அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஆமோதிப்புடன் டேவிட் ரியாஷ்னாவ் மாஸ்கோவில் இதற்கான பெரும் முயற்சியை உழைப்பை நல்கினார். 1920ல் இந்த முயற்சி துவங்கப்பட்டது. அவர் திட்டப்பணிப்படி 42 தொகுப்புகள் என்ற எண்ணம் இருந்தது. Historisch Kritische Gesamtausgabe என்ற பெயரில் 12 வால்யூம்கள் அவரால் கொண்டுவர முடிந்தது. 1927 முதல் இந்த

வால்யூம்கள் வரத்துவங்கின. நாம் எல்லாம் சுருக்கமாக அறிந்த பெயரில் சொல்வதென்றால் அந்த தொகுப்புகள் MEGA என்பதாகும்.

டேவிட் ரியாஷ்னாவ் ஸ்டாலினுக்கு அசௌகரியமாக இருந்த வகையில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் என்பது வேறு கதை.

ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சிக்குள் வேறுபாடுகள், சோவியத் கட்சிக்கும் அதற்குமான வேறுபாடுகளால் இந்தப் பணி நின்றும் போனது.

மார்க்ஸ் எங்கெல்ஸ் பேப்பர்கள் பல ஹாலந்து, இங்கிலாந்து என இரண்டாம் உலகப்போர் காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டனவாம்.

1956 ஸ்டாலின் மறைவிற்குப் பின்னர் அந்த MEGA வை புதுப்பித்து கொணரலாம் என்ற எண்ணத்தை மாஸ்கோவின் பெர்லின் Institute of Marxism Leninism ம் சேர்ந்து எடுத்தனர். ஆனால் பேப்பர்கள் ஒரே இடத்தில் இல்லை. ஆம்ஸ்டர்டாமில் பெருமளவும், மாஸ்கோவில் சிறிதளவும் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். இன்னொரு முக்கிய பிரச்சனையாக நூல்தொகுப்பு முற்றிலும் சோவியத் கட்சி கட்டுப்பாட்டில் வெளியிடப்படவேண்டும் என்பது வந்தது. அதை அன்றைய சூழலில் எவராலும் தவிர்க்கமுடியாது என சமரசம் செய்துகொண்டு 1972 முதல் 1991 காலத்தில் 66 தொகுப்புகளை கொணர்ந்தனராம்.

ஜோன்ஸ் தரும் எச்சரிக்கை MEGAவில் 1990க்கு முன்னர் வந்தவை குறித்து

But the publication of each volume continued to be conceived in a Marxist Leninist Frame work. This means that the entire MEGA series before 1990s to be treated with some caution. Not only were there politically inspired omissions, but in some important instances- the 1844 Manuscripts or the German Ideology for instance- published volumes suffered from distortion of the organisation, intention, status of the texts

மற்றொரு முயற்சி MEW Marx Engels Worke என்பதாகும். பெர்லின் தோழர்களும் முயற்சியால் 1956 முதல் 1990 காலத்தில் வெளியான 43 தொகுப்புகள். பரவலான வாசகர்களை சென்றடையும் வகையில் தொகுத்தோம் என்று அத்தோழர்கள் இதைக் கொணர்ந்தனராம்.

அடுத்த முயற்சியாக MECW என்கிற Karl Marx and Friedrich Engels Collected Works மாஸ்கோ, லண்டன், நியுயார்க் என பல்வேறு இடங்களில் 1975 முதல் 2000 வரை 50 நூல் தொகைகளாக வெளியிடப்பட்டன. இது மார்க்ஸ் குறித்து lay man கூட அறிந்துகொள்ள ஏதுவாக

அடுக்கப்பட்டதாக கூறினர். இந்த நூல்தொகைகளும் அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் மேற்பார்வையில்தான் கொணரப்பட்டன. எனவே ஜோன்ஸ் இங்கும் தனது எச்சரிக்கையை வைத்துவிடுகிறார். நூறு சத reliability என்பதாகாது என்பது அவரின் கருத்து.

பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்ட, சோவியத் தகர்ந்து போன சூழலில் ஆம்ஸ்டர்டாம் இன்ஸ்டிட்யூட், மார்க்ஸ் பிறந்த டிரயர் பகுதி அமைப்பு, அய்ரோப்பிய ஆய்வு கவுன்சில் போன்றவை இணைந்து 2025க்குள் 114 நூல்தொகைகள் என்ற இலக்கில் செயல்பட்டு வருகின்றனராம். 5 ஆண்டுகளுக்கு முன்னர்வரை 62 தொகுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்கிற செய்தியை ஜோன்ஸ் தந்துள்ளார்.

இப்படி நம்மிடம் ஆங்கிலத்தில் வந்து சேர்ந்துள்ள நூல்தொகைகள் எவ்வகை தொகுப்புகள் எனப் பார்த்து அதையும் நாம் எடுத்தாள்கையில் பதிவிட வேண்டும். நம்மிடம் வந்து சேர்பவையும் இப்படி பல வடிகட்டல்களுடந்தான் distillation வந்துள்ளன என்ற புரிதலுசற்று நம்மை நிதானப்படுத்தி கருத்து பரிமாற்றத்தில் அழைத்துச் செல்லும்.

feb 2023

67. இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள் :

"மார்க்ஸ் 170 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் முகலாயர் ஆட்சியில் நில உறவுகள் குறித்தும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்தும் தெரிந்துகொள்ள ஆர்வம்கொண்டு, இந்தியா குறித்து கிடைத்தவற்றையெல்லாம், குறிப்பாக அதன் வரலாற்றை மிக ஆர்வத்துடன் படித்துள்ளதை இந்த குறிப்புகள் நமக்கு காட்டுகின்றன.

இந்தியாவில் வாழும் நம் தலைமுறையே இந்தியா குறித்து முனைப்புடன் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தைக் காட்டாத நிலையில், அந்த மனிதர் அன்று அவ்வளவு ஆர்வத்துடன் தெரிந்துகொள்ள தவித்தது அவர் மீதான மரியாதை கூட்டாமல் இருக்காது. மார்க்ஸ்க்கு வணக்கம்."

==============================

இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள்

இந்திய வரலாறு குறித்த கார்ல் மார்க்ஸ் குறிப்புகள் ஆங்கிலத்தில் காலவரிசைப்படி (664-1858) அவரால் எழுதப்பட்டுள்ளது. அவற்றை தொகுத்து Moscow Foreign Language Press வெளியிட்டது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கட்டுப்பாட்டில் இருந்த மார்க்சிய லெனினிய இன்ஸ்டிட்யூட் ருஷ்ய பதிப்பிற்கு பின்னர் ஆங்கில பதிப்பை 1947ல் இறுதிப்படுத்தி வெளியிட்டது.

632 என அந்தக்குறிப்பு நபிகள் மறைவுடன் துவங்கும். முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை காலவரிசையில் சிற்சில வரிகளாகச் சொல்லும். இந்த இந்திய வரலாறு குறித்த மார்க்சின் குறிப்புகளை பலவேறு வரலாற்று புத்தகங்கள் வழி மார்க்ஸ் சேகரித்ததாக இதன் பதிப்பாளர்கள் சொல்கின்றனர். அதன் இறுதிக் குறிப்பு ஆகஸ்ட் 2, 1858 தேதியிடப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 2, 1858 ஸ்டான்லி பிரபுவின் இந்தியா பில் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் கிழக்கிந்திய ஆட்சி முடிவுற்று 'இந்தியா ராஜதானி ' விக்டோரியா மகாராணி ஆட்சிக்குள் வந்தது. இங்கு மார்க்ஸ் India Province என்று பயன்படுத்தியிருப்பார்.

இந்த சிறு கட்டுரையில் மார்க்ஸ் எழுதியவற்றிலிருந்து கஜினி படையெடுப்பு, துக்ளக் ஆட்சி, பாபர்- அக்பர்- அவுரங்கசேப், சிவாஜி என்கிற காலத்தின் குறிப்பை மட்டும் கொடுத்துள்ளேன். சுவாரஸ்யமான வரலாற்றுத்தகவல்கள்.

எனது பள்ளிக்கால சரித்திர புத்தகம் கஜினி முகம்மது 17 முறை படையெடுத்தாக எனக்குச் சொல்லித்தந்தது. மார்க்ஸ் தன் இந்த குறிப்பில் கஜினியின் 12 படையெடுப்புகளைத் தருகிறார். கஜினி சுல்தான் 1001ல் லாகூர் மீதான படையெடுப்பு அவரின் முதல் படையெடுப்பு. லாகூர் ராஜா ஜெயபால் வீழ்த்தப்பட்டார். பஞ்சாபின் பதிந்தாவரை அப்போது கஜினி வந்துள்ளார். 1003, 1005, 1008 என அடுத்த படையெடுப்புகள் நடந்தன. 1008ல் ஜெயபால் மகன் ஆனந்த் பால் கஜினியை எதிர்த்து நின்றுள்ளார். மார்க்ஸ் இங்கு இவ்வாறு குறிப்பை எழுதியுள்ளார். Hindus fought fanatically; Mahmud defeated them, sacked temple of Nagarkot.

கஜினியின் அடுத்த படையெடுப்பு 1010, 1011களில் நடந்துள்ளன. 1011ல் கஜினி தானேஷ்வர் கோயிலை கைப்பறிய செய்தியை மார்க்ஸ் தருகிறார். 1013, 1014 கால படையெடுப்புகள் காஷ்மீர் மீதாக இருந்தன என மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். கஜினியின் 9 ஆம் படையெடுப்பு 1017 குளிர்காலத்தில் பெஷாவர்- காஷ்மீர் வழியாக கனாஜ் நோக்கியிருந்ததாம். 1022லேயே அவர் இருமுறை படையெடுத்து வந்தாராம்.

1024தான் மார்க்ஸ் கூறும் 12 ஆம் படையெடுப்பாண்டு. சோம்நாத் கொள்ளை என்கிற வரலாற்று முக்கிய செய்தியை நாம் காணமுடியும். கஜினி மூல்தான் சிந்து வழியாக குஜராத்தை அடைகிறார். அதன் தலைநகரான அங்கல்வாரை கைப்பற்றியதாக மார்க்ஸ் எழுதியிருப்பார். ஆஜ்மீர் ராஜாவின் பிரதேசங்கள் அழிக்கப்பட்டதாகவும், ராஜபுத்திரர்கள் gallantly defended என்கிற வார்த்தைகளை நாம் காண்கிறோம். ஜெர்மனியில் மார்க்ஸ் என்ன பதத்தைப் பயன்படுத்தினார் எனத் தெரியவில்லை. கஜினி அத்தலைநகரில் ஓராண்டு இருந்தாராம். முன்பெல்லாம் படைத்தாக்குதல், கைப்பற்றல் திரும்ப ஊர் திரும்புதல் என்பது இங்கு மாறுவதைக் காண்கிறோம். இதை மார்க்ஸ் குறிப்பிடவில்லை. இந்த படையெடுப்பில்தான் சோமநாத் கோயில் கைப்பற்றப்பட்டதாக மார்க்ஸ் எழுதியிருப்பார்.

ஏப்ரல் 29, 1030ல் கஜினி மறைந்த செய்தியையும் அவரது அவையில் பிர்தௌசி எனும் புகழ்வாய்ந்த மேதை இருந்ததையும் மார்க்ஸ் குறிப்பிடுகிறார். கஜினி படைப்பிரிவில் துருக்கிய அடிமைகள் இருந்ததாகவும், அராபியர் கனவான்களாக இருந்ததாகவும் சொல்கிறார். மதம், நீதி, சிவில் ஆட்சி முறை அனைத்தும் பெர்ஷியர் கட்டுப்பாட்டில் இருந்ததையும் அவர் எழுதியுள்ளார்.

முகம்மது துக்ளக் பற்றி 1325-1351 கால குறிப்பில் ablest prince of his time, he ruined himself by his own much too extensive plans எனச்சொல்லிவிட்டு சில மோசமான விளைவுகளைத் தந்த அவரது திட்டங்கள் பற்றி மார்க்ஸ் சொல்லியிருப்பார். கஜான காலியாகும் போதெல்லாம் கொடும் வரிகளைப் போட்டார் என்கிறார். Most ruinous exactions on the people- taxes heavy என மார்க்ஸ் எழுதுவதைக் காண்கிறோம்.

1421 ஆண்டின் குறிப்பில் பாமினி அரசு தெலங்கானா ராஜாவை வாரங்கலிருந்து வெளியேற்றினார் என்ற செய்தியை மார்க்ஸ் தந்திருப்பார். தெலங்கானா என்பது Northern Circars, Hyderabad- Balaghat, carnatic and the language spoken Telinga என அவர் குறிப்பிடுவதைக் காண்கிறோம். தெலுங்கு என்பதை அப்படி குறித்துள்ளார். ராஜமுந்திரி, மசூலிப்பட்டினம், காஞ்சிபுரத்திலும் தெலுங்கு மொழி பேசப்பட்டதாக அவரது குறிப்பு சொல்கிறது.

பாபர் என அவர் ஆரம்பிப்பது 1526-1530 காலத்தில். பாபர் துவக்கிய முகலாயர் ஆட்சி 1526- 1761 என 235 ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளது. பாபர் டிசம்பர் 26, 1530ல் உடல்நிலை சரியில்லாமல் டெல்லியில் மறைந்தார். அவரது விருப்பப்படி அவரது உடல் காபூலில் அடக்கமானது என மார்க்ஸ் சொல்வார். ஹீமாயுன் பானிபட் யுத்தம் பற்றியெல்லாம் சிறு குறிப்புகளை மார்க்ஸ் எழுதியிருப்பார்.

அக்பர் 1560ல் ஆட்சிக்கு வருகிறார். 18 வயது அக்பரின் ஆளுகை டெல்லி, ஆக்ரா, பஞ்சாப் சுற்றி இருந்தது. பின்னர் ஆஜ்மீர், குவாலியர், லக்னோ, மால்வா என அவர் கைப்பற்றினார். அக்பரின் சகோதரர் ஹக்கீம் காபூலைப் பிடித்தார். 1568ல் ராஜ்புதன ஆட்சிகளை அக்பர் கைப்பற்றினார். இங்கு மார்க்ஸ் குறிப்பில்

Akbar married two Rajput queens in order to have peaceful connection with Jaipur and Marwar .

அக்பர் மீர்சாக்களை வென்று குஜராத் பகுதிகளை எடுத்துக்கொள்கிறார். மீர்சாக்கள் கலவரங்களை அவர் ஒடுக்கினார் என மார்க்ஸ் குறிப்பு செல்கிறது. 1575ல் ஒரிஸ்ஸா, வங்கம் அக்பர் வசமாயின. பீகாரும் அவரின் ஆளுகையில்.

1582-85 காலக்குறிப்பில் மார்க்ஸ் எழுதியிருப்பதாவது

Akbar settled the empire- was different in religious matters, tolerant; his chief religious literary advisors were Faizi and Abdul Fazl. Faizi translated old Sanskrit poems, including Ramayana and Mahabharatha. Akbar brought a Roman Catholic Portuguese

Priest from Goa, Faizi also translated the Evangelists. Indulgence towards the Hindus; Akbar only insisted on abolition of Suttee. He abolished Jeziah- capitation tax.

அக்பரின் வருவாய் நிர்வாகம் பற்றியும் மார்க்ஸ் சொல்லியிருக்கிறார். 15 ராஜதானிகளில் வைஸ்ராய்கள் அமர்த்தப்பட்ட நிர்வாகம். Mir-i-Adl என்கிற தலைமை நீதிபதியின் கீழ் நீதித்துறை- represents will of the Sovereign, hearing the conclusion and passing sentence. Akbar reformed the Code of Punishments partly on Mohammedan Custom, partly on the laws of Manu என்கிற முக்கிய விஷயத்தை மார்க்ஸ் தன் குறிப்பில் தருவதைக் காண்கிறோம்.

1657 அவுரங்கசேப் பற்றிய குறிப்பாகும். ஷாஜஹானுக்கு தாரா ஷிகோ, ஷுஜா, அவுரங்கசேப், முரத் என்கிற நான்கு புதல்வர்கள். தாரா ஒரு பகுதி வைஸ்ராய், முராத் குஜராத் பொறுப்பு, ஷுஜா வங்கப்பொறுப்பு கவர்னர், அவுரங்கசேப் ஹைதராபாதை கைப்பற்றினார். ஷாஜகான் உடல் சுகவீனத்தால் தாராவிடம் பொறுப்பு என்றனர். ஷுஜா கூடாது என்றார். அவுரங்கசேப் இஸ்லாமின் பெயரால் எனச் சொல்லி தாராவையும், ஷுஜாவையும் போட்டியில் பின் தள்ளி அவர் முன்னேறினார். தாராவையும் ஷாஜகானையும் அவுரங்கசேப் சிறை வைத்தார். A lamgir என்ற பட்டத்துடன் அரியணை ஏறிய அவுரங்கசேப் கதையை மார்க்ஸ் மிக சுருக்கமாக குறிப்பெடுத்துள்ளார். தாரா ஷிகோ பல நகர்களுக்கு தப்பிச் சென்றாலும் இறுதியில் கொல்லப்பட்டார். டெல்லி கலவரங்களை அவுரங்கசேப் ஒடுக்கினார்.

ஸ்ரீநகர் அரசன் தாராவின் புதல்வன் சுலைமானை விடுவிக்க அவர் விஷம் வைத்து அவுரங்கசேப்பால் கொல்லப்பட்டதாக மார்க்ஸ் குறிப்புச் சொல்கிறது. சகோதரன் முராத்தும் கொலை செய்யப்பட்டார்.

1660-70 என்கிற குறிப்பில் சிவாஜி பற்றி மார்க்ஸ் எழுதுகிறார். He acquired habits of a robber, which he practiced early. He seized his father's own territory, captured many forts with his capital Kalyan.

1665 சிவாஜியின் செயல்களால் ஆத்திரமடைந்த அவுரங்கசேப் படையெடுத்தார். சிவாஜியுடன் உடன்பாடு ஏற்பட்டது. சிவாஜி மராத்தியர்கள் as nation என்ற கட்டுமானத்தை செய்தார். சிவாஜி தனது பிரதேச விரிவாக்கத்தை செய்தார்.

1677ல் சிவாஜி கர்நூல், கடப்பா வழியாக மதராஸ், வெல்லூர், ஜிஞ்சி வரை வந்தார்.. 1680ல் சிவாஜியிடம் மைசூர், தஞ்சாவூர் வந்ததையும் மார்க்ஸ் குறிப்பாக எடுத்து வைத்துள்ளார். 1680 சிவாஜி மரணமடைகிறார். அவரது மகன் சாம்பாஜி பொறுப்பேற்கிறார். 1689ல்

சாம்பாஜி பிடிபட்டு அவுரங்கசேப் ஆட்சியில் தலைகொய்யப்படுகிறார். பிப்ரவரி 21, 1707 தனது 89ஆம் வயதில் அவுரங்கசேப் மறைந்தார். தனது மகன்கள் எவரும் சாகும்போது அருகே இருக்கவிடவில்லை என்ற குறிப்பையும் மார்க்ஸ் எழுதிவைத்துள்ளார்.

oct 2o25

68. இந்திய வரலாற்றில் மதம்

இந்திய வரலாற்றில் மதம் 'Religion In Indian History' நூலை பார்த்துக்கொண்டிருந்தேன். மார்க்சிய வரலாற்றாய்வாளர் பேராசிரியர் இர்பான் ஹபீப் எடிட் செய்த நூல். 2010 ஜனவரியில் அநேகமாக சென்னை கண்காட்சியில் வாங்கியிருக்கக்கூடும். அல்லது அஜாய்பவன் டெல்லியில் வாங்கியிருக்கலாம். சரியாக நினைவில்லை. இங்கு இர்பான் ஹபீப் - D P சட்டோபாத்யாயா ஆகிய இரு மார்க்சிய அறிஞர்களை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த pieceயை தரப்பார்க்கிறேன்.

1

'அலிகார் ஹிஸ்டாரியன்ஸ் சொசைட்டி' சார்பில் இந்நூல் வந்து 18 ஆண்டுகள் ஆகின்றது. இர்பான் அறிமுகத்தையும் எடிட்டோரியல் குறிப்புகளையும் விரிவாக தந்துள்ளார். வரலாற்றுக்கு முன்னர் சமயம் குறித்த புரிதல், மதமும் சாதியும், இந்தியாவில் இஸ்லாம், நவீன காலகட்டத்தில் மதம் போன்ற உபதலைப்புகளில் இர்பான் குறிப்புகளை தந்து செல்கிறார். அவரின் 'மதம் சாதி' உபதலைப்பை கொஞ்சம் சொல்கிறேன். இர்பான் மேற்கோள் காட்டுகிற செய்தியிலிருந்து

" முக்கிய வேதக் கோப்புகளில் விவரிக்கப்பட்டுள்ள வர்ண அமைப்பில், ஜாதி அமைப்பின் இரண்டு முக்கிய அம்சங்கள்—தொழில்முறை நிலைத்தன்மை மற்றும் அகமணம்—இல்லை. 'ஜாதி' என்ற சொல் வேதக் கோப்புகளில் கண்டறியப்படவில்லை. ரிக் வேதம் 9.112-ல் வாழ்க்கைக்காக பலவிதமான தொழில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன; ஆனால் அவை மரபுரிமை கட்டுப்பாடுகளைக் குறிக்கவில்லை.

(The varna order as it is described in the main Vedic corpus lacks two essential elements of the caste system viz occupational fixity and endogamy. The Jati itself has not been traced in the Vedic corpus. Rig 9.112 describes diverse occupations for livelihood with no suggestions of hereditary constraint.)

அடுத்து இர்பான் விவாதிக்கக்கூடிய முக்கிய அம்சம் சாதியின் தோற்றத்திற்கு முழு பொறுப்பையும் பிராமணியம் மீது சுமத்த முடியுமா என்பது. அவர் காட்டும் மேற்கோள்

"ஜாதி அமைப்பின் வளர்ச்சி மற்றும் பரவல் பெரும்பாலும் பிராமணியத் தூண்டுதலால் ஏற்பட்டதென்று கூறுவது சந்தேகத்துக்குரியதாகத் தோன்றுகிறது. உலகியலான வாழ்க்கையில் நெறிமுறைகள் குறித்து புத்தர் வழங்கிய உபதேசங்கள், ஜாதி அமைப்பைச் சார்ந்த neither endorsement nor rejection எனும் ஒரு விசித்திரமான நடுநிலையை எடுத்துக்கொள்கின்றன — அதாவது, ஆதரிக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை."

(It seems particularly doubtful if the evolution and spread of caste system can be attributed primarily to Brahmanical inspiration..Buddha's sermons about morality in worldly life adopt a curiously neutral attitude towards Caste neither endorsement nor rejection -)

விளக்கம் கொடுத்த பின்னர் தனது மதிப்பீடாக இர்பான் ஹபீப் வைப்பது :

இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், இது ஒரு எளிய பிராமணீயமயமாக்கல் (Brahminisation) செயல்முறை அல்ல. புத்தமதம் மற்றும் ஜைனமதமும் ஜாதி அமைப்பை விளக்க, நியாயப்படுத்த மற்றும் அதோடு வாழக்கூடிய சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகளை கொண்டிருந்தன.

(The point here is that it was no simple process of Brahminisation. Buddhism and Jainism also contained ideological baggage with which the caste system could be explained , justified and lived with.)

இஸ்லாமின் வருகை இந்துயிசம் மீது என்ன செல்வாக்கை செலுத்தியிருக்கக்கூடும் என்பதை இர்பான் சொல்லப்பார்க்கிறார். ஒன்று இருக்க வாய்ப்பில்லை என negate செய்கிறார். அதாவது monotheistic trend யை இஸ்லாம் தான் கொடுத்திருக்க வேண்டும் என அவர் கருதவில்லை. ஏற்கனவே கீதையால் காட்டப்பட்ட , இருந்த ஒன்றை மய்யப்படுத்தி இஸ்லாம் செல்வாக்கு கெட்டிப்படுத்தியிருக்கலாம் என இர்பான் கருதுகிறார். - to move monotheism to a more central position within Hinduism என்கிறார். அதேபோல் படிநிலை சாதி சமூகத்தின் மீது ஏதாவது விமர்சன வினையாற்றியதா இஸ்லாம் என்பதை அவர் பேசுகிறார். இதற்கு பாசிட்டிவ் பதிலை இர்பான் தரவில்லை. அவர் தருவது :

"இந்த காலகட்டத்தில் ஜாதி அமைப்பை வெளிப்படையாக முஸ்லிம்கள் கண்டனம் செய்ததாகக் காண முடியவில்லை. இந்தியாவிற்கும் வெளியிலும் இருந்த இஸ்லாமிய தத்துவவாதிகள் சமூக அமைப்பில்

நிலைமைகளை (hierarchy) ஒரு இயல்பானதாய் மட்டுமல்ல, விரும்பத்தக்கதாயும் ஏற்றுக்கொண்டனர்.”

(one searches in vain for any explicit Muslim condemnation of the caste system in this period, whereas Islamic theologians both outside and inside India accepted hierarchy as a normal and, indeed, desirable state of social organisation.)

இந்துயிசம் இஸ்லாம் இரண்டுமே கபீர் போன்றவர்களை எதிர்கொள்ள வேண்டியதானது. இஸ்லாம் சூபிக்களையும் பார்க்கவேண்டியிருந்தது.

காலனிய ஆட்சிக்கு எதிரான போராட்ட வரலாற்றில் மதம் பங்காற்றியுள்ளது. 1857 முதல் சுதந்திர எழுச்சியில் patriotism was explicitly breaking the bonds of religious separation என்கிற கருத்தாக்கத்தையும் இர்பான் தருகிறார். ஆனாலும் இந்திய தேசியம் என்பது கம்யூனலிசத்துடன் வளர்ந்த ஒன்றாகவும் இருந்தது என்கிறார். அவர் கவலை தோய்ந்த வரிகளுடன் தன் அறிமுக எடிட்டோரியல் குறிப்பை இவ்வாறு முடிக்கிறார். அவ்வரிகள்

“இந்தியாவின் தேசியவாதத் தலைவர்கள், இந்தியாவில் ஒரு மதச்சார்பற்ற குடியரசை உருவாக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தியதே, அவர்கள் எடுத்த நிலைப்பாட்டின் மறக்க முடியாத ஒரு சான்றாகும்; இது காந்திஜியின் தியாகத்தால் புனிதமாக்கப்பட்டது. ஆனால் வகுப்புவாதம் (communalism) தொடர்ந்து நிலைத்திருக்கிறது; மேலும், பல தசாப்தங்களில் அது வலுப்பெற்று, மத்திய அரசின் அதிகாரப்பூர்வக் கொள்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது — குறிப்பாக, மில்லேனியம் தொடங்கிய காலத்தில் NDA ஆட்சிக்காலத்தில்.

(The fact that India’s nationalist leaders yet insisted on creating in India a secular republic makes theirs an unforgettable act of steadfastness to principle, hallowed by Gandhiji’s martyrdom. Communalism has, however persisted and, indeed, grown stronger over the decades , so much as to have become , in all but the name of, part of official doctrine of India under NDA govt around the turn of the millennium.)

2

மார்க்சிய அறிஞர் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா ஆழமான தனது ஆய்வை முன் வைத்துள்ளார். அவரின் ஆய்வுத் தலைப்பு “ In search of the Roots of Religion or Dharma- Linguistic and Social Routes”- என்பதாகும். அவர் comparative philological அணுகுமுறையை கையாண்டுள்ளார். பல்வேறு மதங்களில் சொல்லப்படும் புனிதப் பதங்களின் வேர்ச்சொல் ஆய்வை ஒப்பீட்டு அடிப்படையில் செய்துள்ளார். மனிதப் பதங்கள்

புனிதமேற்றப்பட்டு மனிதர்கள் அதன் முன் மயக்கு நிலை கொள்வது உறுதியாவதை பேசுகிறார்.

வரலாற்று மற்றும் மானுட இயல் பார்வையில் வைத்துப் பார்த்து, சட்டோ முக்கிய புள்ளி ஒன்றை நமக்குத் தருகிறார்

"சுத்தமான இனம்', 'சுத்தமான மதம்', 'சுத்தமான பண்பாடு' என்ற மாயக்கதைகள் விலக்கப்பட வேண்டியவை. அடுத்து அவர் முன்வைக்கும் முக்கியமான புள்ளி: வரலாற்று ஆதாரங்களை ஆய்ந்து பார்த்தபோது, பல்வேறு இன மற்றும் மதக் குழுக்கள் நீண்ட காலமாக ஒரே பண்பாட்டு சூழலில் வாழ்ந்தால், அவர்கள் ஒருவரையொருவர் ஏற்கும் முறைகளை கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இது நாகரிக வளர்ச்சியின் ஒரு அங்கமாகும் — ஒரு நாகரிகத் தேவையாகும்."

(The myths of 'pure race' 'Pure Religion' and 'Pure Culture' need to be discarded. அடுத்து அவர் நகர்த்தும் புள்ளி One may rightly affirm, on the basis of studied historical facts, that where different ethnic and religious groups share the same cultural space over along period of time, they are obliged to learn the ways of mutual accommodation. It is a part of civilisation all process- civilisational imperative.)

சமயம் ஆட்சியாளரின் பின்புல ஆதரவைக்கொள்ளும் போது நேர்வதை சட்டோபாத்யாயா சொல்கிறார். இதை மனிதர்கள் அவ்வப்போது அனுபவித்தே வந்துள்ளனர். சில மத அறிஞர்கள் தன் சிந்தனை மூட்டை முடிச்சுகளுடன் ஒடி தப்பியும் உள்ளனர். தேவி பிரசாத் சட்டோ எழுதுகிறார்-

When religion is backed by political power the range of permissible interpretation turns out to be rather limited…The devious path from doctrinal orthodoxy to argumentative epistemology tends to become inevitable mainly when religion is state enforced. பண்டைய சமூக நம்பிக்கைகள் குறித்து நாம் இன்று கேலியாக பார்க்கலாம். ஆனால் அவற்றை அந்த வரலாற்று சமுக நிலை தருணத்துள் வைத்து நாம் புரிந்து கொள்ளவேண்டும் என தேவி பிரசாத் சட்டோபாத்யாய சொல்லித்தருகிறார். Situate it in its appropriate historical social contexts.

சில அவசியமான , எவரும் ஒதுக்ககூடாத கேள்விகளை அவர் எழுப்புகிறார். பதில்களை அந்த அந்த சமூகம் தான் இன்னும் தனிநபர்கள் தான் பொறுப்பாக தேட வேண்டும். தேவி பிரசாத்தின் கேள்விகள்

- மதம், ஒரு முக்கியமான பண்பாட்டு கருத்தாக இருந்தும், ஏன் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே அர்த்தத்தை (அல்லது அர்த்தங்களின் தொகுப்பை) பெறவில்லை?

- மதம், ஒரு பரவலாக ஏற்கப்பட்ட நிறுவாக இருந்தும், ஏன் ஒரே மாதிரியான கோட்பாட்டு, நடைமுறை, மற்றும் கட்டமைப்புச் சிறப்பம்சங்களை காட்டவில்லை?

- மதத்தின் உள்ளேயே, மனிதர்கள் ஒன்றிணைவதற்குப் பதிலாக, ஏன் முடிவில்லாத பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறார்கள்?

{Why does not religion , as a key cultural concept , have any universally acceptable connotation or set of connotations? Why does religion, as a widely acknowledged institution, not exhibit any universal, theoretical, practical, structural characteristics? Why is that within religion , humans are endlessly segmented, rather than being united?

அவரின் கடைசி கேள்வி என்னை மிகவும் தொந்தரவு செய்தது. கடவுள் சொல்லும் மதமானாலும், கடவுளற்ற சமயமானாலும், அதீத சக்திகளின் நம்பிக்கைகளை சொல்லவே செய்கின்றன. Supernatural reality என ஏதாவது கட்டுகின்றன. Spiritual என்பது பேசப்படுகிறது. சுயத்திற்காகவும் பிற அனைவருக்குமான உய்தல் என அங்கு பேசவும் செய்கின்றனர். இவை எல்லாவற்றிலும் the ideal of universalism rooted in earthly humanism இருக்கிறதா .. இருந்தால் ஆரோக்கியம் என தன் ஆவலை சொல்லிச் செல்கிறார் தேவி பிரசாத்.

300 பக்கங்களை தொடக்கூடிய ஆழமான பார்வைகளை கொண்ட நூல் எனலாம். இந்த நூலில் டி பி சட்டோபாத்யாயா தவிர , சுவிரா ஜெய்ஸ்வால், பருன் டே, ஒசாமு கொண்டோ, ஷ்ரின் மூஸ்வி, அதர் அலி, சையத் நதீம் ரேசவி, கமலேஷ் மோகன், ராமகிருஷ்ணா, நிர்மலாங்சு முகர்ஜி போன்ற பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். வாய்ப்பின் சிலரது கட்டுரைகளை குறித்தாவது பகிர்ந்து கொள்ள ஆசை. பார்க்கலாம்...

PostScript :

நேருவின் டிஸ்கவரியில் old Indian social structure-village self govt- The theory and practice of Caste - joint family என்கிற துணை தலைப்புகளில் அவரின் fantastic scholarship வெளியாவதை காணமுடியும். Well balanced, unemotional, unbiased assessment and interpretation இருப்பதை நான் உணர்ந்தேன். ஆங்கில நூலில் பக் 245-257 ல் அவரது நிதானமான அணுகுமுறையை எடுத்துவைப்புகளை படிப்போர் உணரமுடியும். இர்பான் போலவே, தேவி பிரசாத் போலவே அவர் வரலாற்று

பேராசிரியர் அல்ல, ஆனாலும் நேருவின் வாசிப்பு விரிவும் உள்வாங்கி கச்சிதமாக வெளிப்படுத்தும் திறனும் வியக்க வைக்கும். 27-10-2025

sep 2023

69. ஆதி சங்கரர் தத்துவம்- இ எம் எஸ்

தோழர் இ எம் எஸ் நம்பூதிரிபாட் மூத்த இந்திய மார்க்சிய அரசியல்வாதி மட்டுமல்ல. இந்தியாவின் மகத்தான மார்க்ஸிய சிந்தனையாளராகவும் அவர் வாழும் காலத்திலும், அவர் எழுத்துக்களின் வழி இப்போதும் உணரப்பட்டு வருபவர்.

ஆதி சங்கரர் அவர்களின் 1200 ஆண்டு கொண்டாட்டம் காலடியில் நடந்தபோது, மார்க்சியர்களும் ஆதிசங்கரர் தத்துவம் குறித்த செமினார் ஒன்றில் பங்கேற்றனர். தோழர் இ எம் எஸ் அவர்கள் , அந்த 1989 தருணத்தில் ஆய்வுக் கட்டுரை ஒன்றையும் எழுதியிருந்தார். அதன் தலைப்பு Adi Shankara and His Philosophy A Marxist View.

Left word பதிப்பகம் 2010 ல் இ எம் எஸ் அவர்களின் 16 கட்டுரைகளை இணைத்து History Society and Land Relations என்கிற புத்தகமாகக் கொணர்ந்தது. அப்புத்தகம் வந்தவுடனேயே நானும் வாங்கிவிட்டதாக நினைவு. அதில் சங்கரர் குறித்த இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது. அளவில் 12 பக்க கட்டுரைதான்.

இயக்கவியல் வரலாற்று பொருள்முதல்வாதம் பேசுபவர் இதுபோன்ற idealism சார்ந்த செமினாருக்கு - அது போன்ற விஷயங்களில் பங்கேற்கலாமா எனக் கேட்டுக்கொண்டு, பங்கேற்கலாம் - நமது பார்வையை வைக்கலாம் எனதெளிவுபடுத்தினார் இ எம் எஸ். ஆதிசங்கரரின் கருத்துமுதல்வாத சிந்தனை என்பதும் இந்திய ஞானம் என்கிற புரிதலுடன் கச்சிதமாக தன் விவாதத்தை அவர் கொண்டு சென்றிருப்பார்.

இந்திய பொருள்முதல்வாதம் உழைக்கும் மக்களை சார்ந்து நின்றால், கருத்து முதல்வாதம் ஆக உயர் தட்டிற்காக நின்று சமூகத்தை தங்கள் கட்டுக்குள் வைத்திருந்த பிராமண- சத்திரிய வர்ணங்களுக்காக, அவர்கள் சலுகைகள் வீழ்ந்துவிடாமல் காப்பதற்காக நின்றது என்கிற மார்க்சிய புரிதலை இ எம் எஸ் வைக்கிறார்.

இங்கு இ எம் எஸ் இரு வாதங்களில் உயர்ந்தது இது - தாழ்ந்தது அது எனப்பேசாமல், அவற்றின் முரண் மோதல் சமூக வளர்ச்சி என்கிற

இயக்கவியல் அணுகுமுறையை எடுத்திருப்பார். அவர் வரிகளை கவனியுங்கள்

“Neither idealism nor materialism remains static, both are ever moving forward, negating each other, the struggle between the two in newer and newer forms is the law of development of human thought. There is therefore no question of materialism as such being superior to idealism, idealism as such being inferior “

இங்கு இ எம் எஸ் law of development of human thought என்பதன் அம்சமாக இந்திய கருத்துமுதல்வாத ஞானத்தை, அதை inferior எனச் சொல்லாமல், மெட்டிரியலிசம் என்பதுடன் அதன் தொடர் மோதலை புரிந்துகொள்ள சொல்லித்தருவதைக் காண்கிறோம்.

இந்தியாவில் இந்த மோதலில் ஆதிசங்கரரின் அத்வைதம் உள்ளிட்ட அவரது தத்துவ சிந்தனைகள், சார்வாகம் புத்தம் உள்ளிட்ட பொருள்முதவாத சிந்தனைகளை வீழ்த்த தலையாய பங்காற்றியதை இ எம் எஸ் எடுத்துச் சொல்கிறார். இ எம் எஸ் தருவதிலிருந்து சில வரிகள்

Adi Shankaracharya with his philosophy of Advaita Vedanta was the finest and most sophisticated exponent of this school of India’s idealist philosophy. He developed his teachings on Brahman to such an extent that it implied the denial of even God, he was denounced by his opponents as Buddha in disguise- prachchanna Buddha….

Shankara was and is still revered however, for the erudition with which he defeated the Buddhist philosophical trend

இந்திய கருத்துமுதல்வாத பொருள்முதவாத மோதலை இந்திய வகைப்பட்ட வர்க்கப்போராட்டத்தின் வகை என இ எம் எஸ் கருதுகிறார். இந்தியாவில் புத்தம் தோற்றதை the victory of dominant upper castes whose theoreticians championed idealism என இ எம் எஸ் முடிவிற்கு வருகிறார். டாக்டர் அம்பேத்கர் இந்த முடிவை முன்னரே எட்டியிருந்தார். புத்த வீழ்ச்சியும், சங்கர தத்துவ வெற்றியும் இந்தியாவில் அறிவியல் வளர்ச்சியை பாதித்தன என்கிற நீட்சியான முடிவிற்கு இங்கு கூடுதலாக இ எம் எஸ் வந்தடைகிறார்.

மேலும் தன் ஆய்வில் இ எம் எஸ் வந்தடையும் புள்ளி

..the defeat of oppressed castes at the hands of the Brahminic overlordship, of materialism by the idealism, constituted the fall of India’s civilisation and culture which in the end led to the loss of national independence

இன்னும் அழகாக தன் மார்க்சிய மொழி கூட்டி இ எம் எஸ் சொல்கிறார். இது ஏதோ தத்துவம் வென்றது என்பதல்ல, அதில் victor - vanquished

என்பதெல்லாம் இரண்டு தத்துவமல்ல இரு சமூக வர்க்கங்கள்- the dominant and oppressed castes using the philosophy as their arsenal.

The victory of Shankara and his philosophy was the victory of the Brahmin and other dominant castes, the defeat of the rest of Indian society. இந்த புரிதலில் பிராமண மற்றும் மேலாதிக்க சாதிகள் என்ற சொற்றொடரை இ எம் எஸ் பயன்படுத்தியிருப்பதை பார்க்கமுடியும்.

எவர் dominant castes என்பதை குறிப்பிட்ட அந்த சாதியினரின் அரசியல் அதிகார பலம், தேர்தலில் அதன் பங்களிப்பு, சொத்து பொருளாதார பலம், அவ்வூரில் கிராமத்தில் அவரின் பயமுறுத்தல் index காட்டிவிடலாம்.

இ எம் எஸ் இப்படி முடித்திருப்பார்

" Let me conclude: Shankara was one of the tallest of India's - world's idealist philosophers, his advaita vedanta is one of the richest contributions India has made to the treasury of human knowledge "

நமது பொருள்வாத சிந்தனையிலும் பல genius இருந்தாலும் , சமமற்ற போட்டியால் அவர்கள் வெற்றிபெறமுடியாமல் போனதால் ஆயிரமாண்டு பின்னடைவு பிரிட்டிஷ் ஆட்சி என அவர் பேசுகிறார்- the beginning of a millennium- long age of intellectual and socio political backwardness which culminated in the establishment of British rule in our land. இந்த இ எம் எஸ் வாக்கியங்களை கவனித்தால் அவர் மில்லினியம் கால பிற்பட்டத்தனம் என்கிற சொற்றொடரை- முகலாய காலத்தையும் சேர்த்தே பேசியிருக்கிறார் - அதை வெளிப்படையாக சொல்லாமல் காலத்தைச் சொல்லி subtle ஆகச் செல்வதைக் காண்கிறோம்.

வலது சிந்தனையாளர்கள் தங்களுக்கானதான பகவத் கீதை, இதிகாசங்களை சமஸ்கிருத ஸ்லோகங்களுடன் அதன் மாநிலவாரி மொழிபெயர்ப்புகளுடன் ஏராளம் கொண்டு செல்கின்றனர். அப்படி அவர்கள் பெருமிதமாக காட்டிக்கொள்ளும் சமஸ்கிருதம் அல்லது இந்தி மொழியில் நாத்திக மற்றும் பொருள்முதல்வாத, ஒடுக்கப்பட்டவர்க்கு ஆதரவான கருத்துக்கள் ஸ்லோகங்கள் இருந்தால் அவற்றை அதே மொழியில் தந்து மாநில மொழியில் அர்த்தம் எழுதி எடுத்துச் செல்லவேண்டிய பணி நடைபெறுகிறதா என அறியமுடியவில்லை.

இ எம் எஸ் பேசியது போல the law of development of human thought என்பது பல்வேறு மொழிகள் தொடர்பில் தான் பெறமுடியுமே தவிர, எவர் கதவடைப்பிலும் அந்த போராட்டம் மற்றும் வளர்ச்சி நிகழாமல் போய்விடும். எனவே மொழி கதவடைப்புகளை ஆர்வம்

உள்ளவர்களாவது - சிறிய அளவிலாவது தவிர்த்து, மானுட சமதை சிந்தைக்கு , dignity க்கு உகந்த கருத்துக்களை கொண்டுவந்து அவரவர் மொழியில் சேர்ப்பதும், பிற மொழிகளுக்கு உகந்த சிந்தனைகளை கடத்துவதும், இந்த போராட்டங்கள் ஊடாக இணக்கமான சமூகம் கட்டப்படுவதற்கும் துணை நிற்கட்டும்.

march 25 2016

70. The Marxist Sociology in India

The Marxist Sociology in India- A study of the Contribution of A R Desai என்ற ஆய்வு புத்தகத்தை அர்பிதா முகர்ஜி என்ற பேராசிரியை எழுதியுள்ளார். நேஷனலிசம் என்கிற உருவாக்கம் அதில் பங்கேற்றவர்களின் வர்க்கப் பின்னணி, செயல்பாடுகள், இந்திய விவசாயம்- விவசாய வர்க்கம், இந்தியாவில் வளர்ந்து வரும் முதலாளித்துவ அரசு, சமுக இயக்கங்கள், எதிர்ப்பு போராட்டங்கள் என பல்வேறு தலைப்புகளில் ஆய்வாளர் மார்க்சிய ஆய்வாளர்கள் பலரின் மேற்கோள்கள், வந்தடைந்த முடிவுகளுடன் இப்புத்தகத்தை எழுதியுள்ளார். இந்தியாவில் குறிப்பிடத் தகுந்த சிந்தனையாளர், சமுகவியளார், மார்க்சிய ஆய்வாளர் தேசாயின் பார்வையில் என அர்ப்பிதா தனது வாதங்களை நகர்த்துகிறார்.

அக்சய் குமார் ரம்ன்லால் தேசாய் குஜராத்திலிருந்து நமக்கு கிடைக்கப் பெற்ற மார்க்சிய ஆய்வாளர். ஏப்ரல் 16,1915ல் பிறந்து 80 ஆண்டுகள் வாழ்ந்து செயல்பட்டு நவம்பர் 12, 1994ல் மறைந்தவர்.. இந்தியாவில் சோசியாலஜி என்கிற ஆய்வுவகைதனை நூற்றாண்டாக பலர் செழுமைபடுத்தியுள்ளனர். ராதாகமல் முகர்ஜி, குர்யி, மஜும்தார், பினாய் குமார், தேசாய், சீனிவாஸ், திபங்கர் குப்தா போன்றவர்கள் இந்திய சமூகம் குறித்து ஏராளம் எழுதியுள்ளனர். தேசாய் புகழ்வாய்ந்த ஜி எஸ் குர்யி அவர்களிடம் கற்றவர். இந்திய தேசியம் சமுக பின்புலம் குறித்து எழுதியவர். ஊரக இந்தியாவின் சமுகவியல், அரசும் சமுகமும், விவசாய போராட்டங்கள், இந்தியாவின் வளர்ச்சிப்பாதை போன்ற மிக முக்கிய ஆய்வு நூல்களை தந்தவர்.

தனது இளமைக்காலத்தில் சி பி ஐ கட்சியில் செயல்பட்டவர். ஸ்டாலினிச கொள்கைகளால் இரண்டாம் உலகப்போர் காலத்தில் மாறுபட்டு டிராட்ஸ்கியவாதியாக போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சி என்பதில் இணைத்துக் கொண்டு செயல்பட்டவர். மார்க்ஸ், எங்கெல்ஸ் லெனின் நூல்களுடன் டிராட்ஸ்கி, காட்ஸ்கி, மெளரிஸ் டாப், கார்ல் மேன்ஹய்ன் எழுத்துக்களுடன் பழக்கப்படுத்தி கொண்டவர் தேசாய். பின்னர் 1953-81 காலங்களில் ஆர் எஸ் பி கட்சியின் மிக முக்கிய கோட்பாட்டாளராக விளங்கினார். இந்திய சமுகவியலாளர் சொசைட்டியில் முக்கிய பங்காற்றினார். பிரிட்டிஷ் காலத்தில் தொழிற்சங்கங்கள் என்ற புத்தக தொகுப்பை வழங்கினார். குஜராத்தி மொழியில் சோசலிச கருத்துக்களை பரவ செய்யும் வகையில் இதழாசிரியராக இருந்தார். நான்காம் அகிலத்துடன் தொடர்ந்து

உறவுகளை வைத்திருந்தார் தேசாய். அவரது ஆய்வுகள் மார்க்சியர் வட்டாரத்தில் போதுமான கவனம் பெறாமல் போனது வருத்ததிற்குரிய ஒன்று.. அர்ப்பிதா எழுத்து நடை வசீகரமாக நம்மை அழைத்து செல்வதாக இல்லை என எனக்கு தோன்றுகிறது. சோர்வை ஏற்படுத்துகிறது . எனினும் தேசாய் போன்ற மறக்கடிக்கப்பட்ட ஆய்வாளர்களை மறு வாசிப்பு செய்ய இப்புத்தகம் உதவுகிறது. வழக்கம் போல் இம்மாதிரி புத்தகங்களை வெளியிடும்கல்கத்தா கே பி பக்ஷி நிறுவனம்தான் இதையும் வெளியிட்டுள்ளது. கன்னிமாரா சென்னை நூலகத்தில் 335.4 எண் கொண்டதாக இப்புத்தகம் கிடைக்கிறது. விலை ரூ 795 தான். 2015 பிப்ரவரியில் கன்னிமாரா வந்த இந்நூலை 2015 ஏப்ரலில் ஒருவர் எடுத்துள்ளார். தற்போது 2016ல் எனக்கு படிக்க வாய்ப்பு கிடைத்தது.

sep 2024

71. மார்க்சின் மானிபெஸ்டோ

சில நூல்களும், கருத்துக்களும் காலவரையறைகளில் காணாமல் போகாது, ஒளித்துணையாய் மனித வாழ்க்கையில் வந்துகொண்டிருக்கும். தமிழில் திருக்குறளை அப்படி நாம் கொண்டாடமுடியும்.

Political Track என்கிற வரிசையில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம், மார்க்ஸ் எங்கெல்சின் கம்யூனிஸ்ட் மானிபெஸ்ட்டோ, காந்தியின் ஹிந்த் சுயராஜ் போன்ற ஆக்கங்களை நாம் சொல்லலாம். அப்படி சொற்செட்டுடன் மிக ஆழமாக மனித வாழ்வின் துயரங்களை நீக்க துணிச்சலான மாற்றுகளை , காலத்தை விஞ்சி தீர்க்கமாக வைப்பவைகளாக இந்நூல்கள் இருக்கும். இவைகளை இணைத்து படிக்க முடிந்தால் சிறப்போ சிறப்புதான். அவைகளின் சிந்தனைத் திறன் உயர்தரமானவை.

இங்கு நான் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ வாசித்தலை சொல்ல விழைகிறேன். கட்சிகளில் மானிபெஸ்டோ குறித்து கொஞ்சம் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கும். கேள்வி ஞானம் , சில முக்கிய மேற்கோள்களை நம்பிக்கை அடிப்படையில் வெளிப்படுத்துதல் என்கிற பழக்கம் இருக்கும். அங்கு பலர் ஒருமுறையாவது வாசித்திருப்பர். வாசிக்காத மார்க்சியர் எவராவது இருந்தால் அவசியம் வாசித்தல் நலம். வாழ்வு குறித்த புரிதலை கூடுதலாக பெற மானிபெஸ்டோ உதவும். நூலை உள் நுழைந்து முழுமையாக வாசிக்க வேண்டும்.

மானிபெஸ்டோவின் 25 ஆண்டுகள் துவங்கி மார்க்ஸ் எங்கெல்ஸ் வெவ்வேறு மொழி பதிப்புகளுக்கு முன்னுரை எழுதியிருந்தனர். மார்க்ஸ் மறைந்த பின்னர் எங்கெல்ஸ் இருந்தவரை அவர் புதிய மொழி, அல்லது வருகிற புதிய பதிப்புகளுக்கு முன்னுரை எழுதியிருந்தார். ஆரம்ப வாசகர்களை முன்னுரையை விட்டுவிட்டு நூல் இயல்களுக்கு நேரடியாக சென்றுவிடுங்கள் எனச் சொல்லும் வழக்கம் உண்டு. முதல் முறைக்கு மேல் அந்நூலை அடிக்கடி வாசிக்கச் செல்பவர்கள் அனைத்து முன்னுரைகளையும் படிப்பது உகந்தது. அவை எழுதப்பட்ட ஆவணத்தின் சாரத்தை, சற்று மேலும் ஒளி படவேண்டிய inadequacy யை குறிப்பிட்டு பேசும். 1848 ல் வந்த வரலாற்று ஆவணம் என்பதால், தாங்கள் மாற்ற விரும்பவில்லை என 25 ஆண்டுகள் கழித்த பதிப்பொன்றில் மார்க்ஸ் எங்கெல்ஸ் சொல்லியிருப்பர்.

அவ்வப்போது நம்மிடம் ஏற்பட்டு வரும் political influence , ideological influence , life experiences in movements அடிப்படையில் நம் வாசிப்பும் இந்நூலுடன் சேர்ந்து செல்லும். மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரும் 1848 லிருந்து அவர்கள் இருந்த காலம்வரை முதலாளித்துவ தொழில்மயமாதல்- மற்றும் தொழிலாளர் இயக்க வரலாற்றுடன் மானிபெஸ்டோ வரலாறும் பயணிப்பதாக முன்னுரைகளில் சொல்லியிருப்பர்.

மானிபெஸ்டோ அளவில் சின்னஞ்சிறு நூல்தான். மார்க்சிய பதங்களில் கொஞ்சம் பயிற்சி கொண்ட எவரும் 2 மணி நேரத்திற்குள் படித்துவிடக்கூடிய நூல்தான். ஆனால் அது பேசும் கருத்துக்கள் மிக ஆழமானவை. முழுமையாக தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளாமல் படிப்பவர்களுடன் பெரும் உரையாடல் திறப்புகளை மானிபெஸ்டோ செய்திடும். படித்துவிட்டு ஏற்க முடியவில்லை என விமர்சனம் கூட செய்யலாம். ஆனால் படிக்காமல் அது குறித்த ஓரிரு மேற்கோள்களை வைத்துக்கொண்டு புகழ்வது அல்லது இகழ்வது என்கிற ஏமாற்று குறித்து அவரவர்தான் யோசிக்க வேண்டும்.

மானிபெஸ்டோவை ஆங்கில வாசிப்பு பயிற்சி இருக்கும் மார்க்சியர் அல்லாதவர்களும் ஓரிரு முறை வாசித்தல் நலம். இலக்கிய வாசிப்பாளர்கள் கூட வாசிக்கலாம்.

பூர்ஷ்வா குறித்த விமர்சனம் என்கிற வாசிப்பாக, தொழிலாளி வர்க்கம்தான் விடுவிக்கும் என்கிற நம்பிக்கை வாசிப்பாக பலமுறை செய்ததுண்டு. மானிட உறவுகள் வெறும் பண உறவுகளாக சீரழிந்து கிடக்கின்ற நெறியற்ற வாழ்க்கைமுறை என்கிற வாசிப்பில் , மானிபெஸ்டோ காந்தி சந்திப்பு புள்ளிகளைக் கூட நாம் பெறமுடியும்.

இப்பூமி அனைவருக்கும் வாழ்க்கைக்கான ஆதாரங்களை தரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் சிலரின் பேராசையால் பெரும் துன்ப பூமியாகிறது என்கிற புரிதலை மானிபெஸ்டோ தரும். மீட்சியாளன் தொழிலாளி வர்க்கமா, அவன் தான் புரட்சிகர மனித கூட்டமா வர்க்கமா என்கிற புள்ளி விவாதங்களை பெருக்கலாம். ஆனால் நமக்கு greedy ஏன் என்கிற புள்ளியில் மானிபெஸ்டோவை காந்தி சந்திக்கிறார். வன்முறை வழியில் மாற்றம் எனும் போது அவர் விலகுகிறார்.

மானிபெஸ்டோவின் சில வரிகள் குறிப்பாக அதன் முதல் இரு இயல்கள் முதலாளித்துவம்- தொழிலாளர் இயக்கம் எனப் பேசுகிறவற்றில் வாழ்வை நவீன எந்திர வாழ்க்கை எப்படி சீரழித்துள்ளது என்கிற

சித்திரம் , காந்தியின் ஹிந்த் சுயராஜ்ஜில் சொல்லப்பட்டுள்ள சித்திரமாகவும் இருக்கும். மார்க்ஸ் எங்கெல்ஸ் முன்வைக்கும் radical agenda பலவற்றை நாடுகள் welfare அரசுகளாக சோதிக்காமல் இல்லை. தொழில்கள் அரசுமயம், இலவச கல்வி, மருத்துவம், progressive taxation போன்ற சோதனைகள் நடத்தப்படாமல் இல்லை. ஆனால் பெருந்தொழில் என்கிற முதலாளித்துவ சோதனையை private property என்பதிலிருந்து State property என்கிற Property legality மாற்றம் என்பதாக அவை நடத்தப்பட்டன.

சோசலிசமும் பெருந்தொழிலும் ஒத்துப்போகுமா என்கிற புள்ளி விரிவாக பேசப்படாமல் போனது. காந்தி அதை சோதிக்க நினைத்தார். விடுதலைக்கு பின்னரான காலத்தில், நேருவின் ஆட்சி தொடர்ந்து இன்றுவரை , அச்சோதனை பக்கம் இந்தியா போக முடியாமல் போனது சோகமான ஒன்றுதான். Greedy குணம் 'பத்தலை இன்னும் இன்னும் ' என்கிற ஓட்டம் முதலில் தன் மனசாட்சியைத்தான் மூடிவைக்கும். அதை புறக்கணிப்பதில்தான் தன் சுகத்தை அதனால் காணமுடியும். இப்படி ஒரு வாசிப்பை கூட மானிபெஸ்டோ தருகிறது. இது ஏதோ முதலாளிகளிடம் மட்டுமே உள்ள குணம் அல்ல. நம் எல்லோரிடமும் பற்றியுள்ள போக்கு.

எங்கெல்ஸ் ஒரு முன்னுரையில் முக்கியமான ஒன்றை விளக்கியிருப்பார். சோசலிச திட்டம் கொண்ட மானிபெஸ்டோவை ஏன் 'சோசலிஸ்ட் மானிபெஸ்டோ 'என அழைக்காமல் கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ என்று அழைத்தோம் என்பது அது. சோசலிசம் என்பது அப்போது மத்தியதர வர்க்க இயக்கமாக உணரப்பட்டிருந்தது. தொழிலாளர் இயக்கத்தை நாங்கள் முன் வைத்ததால் கம்யூனிஸ்ட் எனப் பயன்படுத்தியுள்ளோம் என விளக்கம் தந்தார் எங்கெல்ஸ். வேறு ஒரு முன்னுரையில் அவர் சோசலிசம் பூர்ஷ்வா இயக்கம் என மாற்றிச் சொல்லியிருப்பார். இரண்டே ஆண்டு இடைவெளிகளில் எங்கெல்சை மாற்றி பேசவைத்த அனுபவம் என்ன என எனக்குத் தெரியவில்லை.

நேரு பேசிய ஆவடி சோசலிசம் கூட பூர்ஷ்வா சோசலிசமாக சோவியத் யூடினும் இங்கு கம்யூனிஸ்ட்களும் பார்த்ததுண்டு என்கிற ஒன்றை இணைத்துப் பார்த்துக்கொள்கிறேன். மானிபெஸ்டோ முன்வைத்த radical agenda சிலவற்றை நேரு நிகழ்த்திப் பார்த்தார் என்கிற புரிதலும் தேவைப்படுகிறது.

முன்பெல்லாம் மிக மலிவான விலைக்கு கிடைத்த மானிபெஸ்டோ இப்பாதெல்லாம் ரூ 150, ரூ 200 என்கிற விலையில் அமேசானில் கிடைக்கிறது. கம்யூனிஸ்ட்கள் பலரின் வீட்டில் பழைய பிரதிகள்

இருக்கலாம். என் பிரதிகளை வழக்கம்போல் தமிழ் ஆங்கிலம் இரண்டையும் தவறவிட்டேன். எங்கெல்ஸ் கூட மூல ஜெர்மன் பிரதியை தொலைத்துவிட்டதாக எழுதியிருப்பார். மார்க்ஸ் மறைந்த பின்னர் மேம்பட்ட மொழிபெயர்ப்பாக சாமுவேல் மோர் கொணர்ந்த ஆங்கில பதிப்பைத்தான் எங்கெல்ஸ் பாராட்டி சொல்வார். அவர் மேற்பார்வையில் அம்மொழிபெயர்ப்பு வந்தது. அதுதான் நமக்கு கிடைத்து வருகிறது.

என் சி பி எச் நிறுவனத்தார் தோழர் எஸ் வி ராஜதுரை விளக்கத்துடன் விரிவான பதிப்பு ஒன்றை கொணர்ந்துள்ளனர். அவர் சாமுவேல் மோர் மற்றும் ஹால் டிராப்பர் மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு தமிழ் மொழியாக்கத்துடன் பெரிய வேலை உழைப்பை தந்துள்ளார். தீவிர வாசிப்பாளர்கள் ஆய்வு கண்களுடன் அந்நூலை வாசிப்பதும் நலம்.

மானிபெஸ்டோ குறித்து அதன் 25 , 50, 75,100,125, 150 மற்றும் 175 ஆண்டுகளில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களுடன் ஏராளம் எழுதப்பட்டுள்ளது. காலத்துடன் பயணித்து வரும் நூலாக கருத்து பெட்டகமாக மானிபெஸ்டோ இருப்பதைக் காண்கிறோம். மனித அறிவு தான் சேமித்த கிடங்குகளிலிருந்து எவரோ ஒரு தீர்க்கதரிசி வழியாக அவ்வப்போது உச்சம் தொடுகிறது. அனைவரின் நல்வாழ்விற்கான ஏக விழைவை அது வெளிப்படுத்துகிறது. அப்படி ஒரு பெரும் புற மாற்றத்திற்கான அக விழிப்பாக மானிபெஸ்டோவும் வாழ்கிறது.

வாசித்து பார்க்க வேண்டிய நூல்

16-9-2024

feb 17 2024

72. What is politics to Gandhi

What is politics to Gandhi என்பதை கீழ்கண்ட வரிகளில் பியாரிலால் தனது The Last Phase book 2 ல் தந்திருப்பார். தொடர்ந்து ஜூன் 3, 1947 மவுண்ட்பாட்டன் பிரிவினை- விடுதலை அறிவிப்பையடுத்து காந்தியை சந்தித்தவர்களுடன் அவரது உரையாடலையும் தந்திருப்பார். இங்கு சோசலிஸ்ட்கள், இந்து மகாசபாவினர், கம்யூனிஸ்ட்கள் உரையாடலை மட்டும் சுருக்கமாக தர முயன்றுள்ளேன்.

அரசியல் அதாவது காந்தி புரிந்துகொண்ட , அனுசரித்த அரசியல் பற்றி பியாரிலால் எழுதுவது

To Gandhi self, family, his ashram and the wider world of politics represented a unified field…politics had been turned by its high priests into a highly complicated, inaccessible and abstruse subject- almost an esoteric lore which stood above morality and ethics and whose high mysteries only the initiated few could penetrate.

It was a part of Gandhiji's mission to strip it of its mystery and inculcate it as a science of the happiness of the toiling masses, means to realisation of the highest realisable in life. As such it had to be capable of being reduced to commonplace elements of everyday life and to conform to the fundamental truths whose practice sustains society and mankind.

தமிழாக்கம்:

காந்திக்கு, சுயமும், குடும்பமும், அவரது ஆசிரமமும், அரசியலின் பரந்த உலகமும்—ஒன்றிணைந்த களமாக இருந்தன. அரசியலை அதன் "உயர் குருக்கள்" மிகக் கடினமான, அணுக முடியாத, சிக்கலான பொருளாக மாற்றியிருந்தனர்—அது ஒழுக்கமும் நெறிமுறையும் மேலாக நிற்கும், மிகச் சிலருக்கே புரியும் மறைமுறை அறிவாகக் கருதப்பட்டது.

அதை அதன் மர்மத்திலிருந்து விடுவித்து, உழைக்கும் மக்களின் மகிழ்ச்சிக்கான அறிவியலாக மாற்றுவது, வாழ்க்கையில் அடையக்கூடிய உயர்ந்த இலட்சியத்தை அடையும் வழியாகக் கற்பிப்பது,
காந்தியின் பணி ஆகும்.

அதனால், அது அன்றாட வாழ்க்கையின் சாதாரண கூறுகளுக்கு குறைக்கக்கூடியதாகவும், சமூகத்தையும் மனிதகுலத்தையும்

நிலைநிறுத்தும் அடிப்படை உண்மைகளுக்கு ஒத்துப்போகக்கூடியதாகவும் இருக்க வேண்டியது அவசியம்.”

இந்து மகாசபாவினர் காந்தியை சந்தித்து இரு கோரிக்கைகளை வைத்தனர். 'பிரேயரில் குரான் படிக்கவேண்டாம்', 'காந்தி அரசியலிருந்து ஒதுங்கிக்கொள்ளவேண்டும்' என்பன அக்கோரிக்கைகள் . மன்னிக்கவும் ஏற்க முடியாதென்றார் காந்தி.

சோசலிஸ்ட்கள் காங்கிரஸ் மீதான புகார் மூட்டைகளுடன் வந்தனர். காந்தி விடுதலை ஆட்சி மாற்ற வேலைகள் துவங்கியுள்ள நிலையில், தேச கட்டுமானத்தில் ஒவ்வொருவரும் அளப்பரிய சேவை செய்யவேண்டிய கடமையை அவர்களிடம் உணர்த்தினார். காங்கிரஸ் தலைமையுடன் அமர்ந்து பேசி வேறுபாடுகளை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டினார். Personalities clash ல் சிக்கிக்கொண்டு கடமைகளை கைவிட்டு விடாதீர் என்றார். மிக முக்கிய செய்தி ஒன்றை அவர்களிடம் காந்தி விடுத்தார். அவ்வரிகள்

Note down these words of an old man- in the times to come people will not judge us by the creed we profess or the label we wear or the slogans we shout but our work, industry, sacrifice, honesty and purity of character. The will want to know what actually done for them.

..if taking advantage of the prevailing misery and discontent of the people, you set about to accentuate and exploit it for party ends it will recoil upon your head and even God will not forgive you for your betrayal of the people

தமிழாக்கம்:

ஒரு கிழவனின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள்: எதிர்காலத்தில், மக்கள் நாம் ஏற்றுக்கொள்ளும் மதப்பிரிவினால், அணியும் அடையாளத்தினால், அல்லது முழங்கும் கோஷங்களினால் எங்களை மதிப்பிடமாட்டார்கள். அவர்கள் எங்கள் **பணி, உழைப்பு, தியாகம், நேர்மை, மனப்பாவனையின் தூய்மை** ஆகியவற்றின் அடிப்படையில் எங்களை மதிப்பிடுவார்கள். அவர்கள் உண்மையில் எங்களால் அவர்களுக்காக என்ன செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புவார்கள்.

மக்களின் துயரமும் அதிருப்தியும் நிலவும் சூழ்நிலையை கட்சித் தேவைகளுக்காக அதிகரித்து, அதைச் சுரண்ட முயன்றால், அது உங்கள்மீது திரும்பி விழும்.

மக்களைத் துரோகம் செய்ததற்காக கடவுளும் உங்களை மன்னிக்கமாட்டார்.”

கம்யூனிஸ்ட் தோழர்கள் காந்தியை சந்திக்க வந்தனர். உங்கள் அனைவரையும் என் குழந்தைகளாக பாவித்து என் மனதில் உள்ளதை உங்களுக்கு தருகிறேன் எனக் காந்தி தன் அறிவுரையை தந்தார். முதலில் உங்கள் இசத்தை சற்று தள்ளி வைத்துவிட்டு, எதார்த்த சூழலில் செய்யவேண்டியது என்ன எனப் பார்த்து கடமையை செய்யுங்கள். எந்த அம்சங்களில் உடன்பட்டு வேலை செய்யவியலும் என்பதை கவனித்து அதில் உடன்பட்டு பணி செய்வீர். அதில் தயக்கம் காட்டி அரசியல் ஆதாயம் காணவேண்டி பின் நின்று விடாதீர். மேலும் காந்தி பேசிய வரிகள்

You waste your time and energy in hair splitting, fault finding and picking holes. If you discover any flaw anywhere, you exploit it to make propaganda and spread disaffection against government in power without even caring to make proper enquiry. It seems to have become your stock in trade.

Is there no activity of the government (Nehru Govt then) which is worthy of cooperation? Think of a moment what you do in Pandit Nehru’s place..shoulder the responsibility which Nehru and Patel are shouldering..

You profess lofty ideals but your conduct belies them because you seem to make no distinction between truth and falsehood, justice and injustice. What is pathetic is you regard Russia as your spiritual home. Despising Indian culture, you dream of planting the Russian system. Food however rich, that another person eats, cannot sustain me. I can be sustained only by what I eat. In the same way what an outside power does gives me no satisfaction as it seems to give you.

You claim to be servants of the country. As such , it is up to you to shed narrow party feeling and show a spirit of cooperation with all those who have the good of the country at heart..

தமிழாக்கம்:

நீங்கள் உங்கள் நேரத்தையும் ஆற்றலையும் சின்னச் சின்ன விவாதங்களில், குறை கண்டுபிடிப்பதில், குறை கூறுவதில் வீணடிக்கிறீர்கள்.
எங்காவது ஒரு குறை கண்டுபிடித்தால், அதை ஆராயாமல், அதனைப் பிரசாரம் செய்யவும், ஆட்சிக்கு எதிராக அதிருப்தி பரப்பவும் பயன்படுத்துகிறீர்கள். இது உங்கள் வழக்கமான தொழிலாகி விட்டது போலத் தெரிகிறது.

அரசாங்கத்தின் (அப்போது நேரு அரசு) எந்தச் செயல்பாடும் ஒத்துழைப்புக்குரியதாக இல்லையா?
ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள்—நீங்கள் பண்டிட் நேருவின் இடத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்? நேருவும் பட்டேலும் சுமக்கும் பொறுப்பை நீங்கள் சுமந்தால் எப்படி இருக்கும்?

உயர்ந்த இலட்சியங்களைப் பிரசாரம் செய்கிறீர்கள், ஆனால் உங்கள் நடத்தை அவற்றை மறுக்கிறது.
ஏனெனில், நீங்கள் உண்மை மற்றும் பொய், நீதி மற்றும் அநீதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காண்பதில்லை போலத் தெரிகிறது.

மிகுந்த வருத்தமானது என்னவெனில், நீங்கள் ரஷ்யாவை உங்கள் ஆன்மீக இல்லமாகக் கருதுகிறீர்கள்.
இந்திய கலாச்சாரத்தை வெறுத்து, ரஷ்ய முறையை நாட்டில் நிறுவ வேண்டும் என்று கனவு காண்கிறீர்கள்.

மற்றொருவர் சாப்பிடும் உணவு எவ்வளவு செழுமையானதாக இருந்தாலும், அது என்னை வாழவைக்க முடியாது. நான் சாப்பிடும் உணவினால்தான் வாழ முடியும்.
அதேபோல், வெளிநாட்டு சக்தி செய்வது எனக்கு எந்தத் திருப்தியையும் தராது—ஆனால் அது உங்களுக்கு தருகிறது போலத் தெரிகிறது.

நீங்கள் நாட்டின் பணியாளர்கள் என்று கூறுகிறீர்கள்.
அப்படியானால், குறுகிய கட்சித் தன்மையை விட்டு, நாட்டின் நலனில் அக்கறை கொண்ட அனைவருடனும் ஒத்துழைப்பை வெளிப்படுத்துவது உங்கள் கடமையாகும்.

காந்தியின் உரையாடல் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. செவி மடுப்பவர்களிடம் அவர் வஞ்சனையில்லாமல் உரையாடிக்கொண்டேயிருக்கிறார்

may 4 2022

73. அச்சுதமேனன் குறித்து கவிஞர் கண்ணதாசன்

கண்ணதாசன் அவர்கள் எழுதிய புத்தகங்களில் ஒன்று 'நான் பார்த்த அரசியல்'. பல பதிப்புகளை கண்ட புத்தகம். அவரின் 'வனவாசம்' சுய சரிதை குறிப்புகள் 1960களின் பிற்பகுதியில் பரபரப்பாக பேசப்பட்டது. காந்தியின் சுயசரிதை தாக்கத்தால் தான் வனவாசம் எழுத துணிந்ததை அதில் கவிஞர் சொல்லியிருப்பார்.

'நான் பார்த்த அரசியல்' அவரின் 30 ஆண்டு அரசியல் பழக்கம்- பழகிய தலைவர்கள் பற்றிய அவரது அனுபவம் உணர்வுகளை பேசிய புத்தகம். வாழ்க்கையின் பெரும்பகுதியை தான் வீணாக்கிவிட்ட விசனத்தை அவர் தெரிவித்திருப்பார். விடுதலைக்காலம் முதல் ஜனதா ஆட்சி- மீண்டும் இந்திராவரை மத்திய அரசியல் பற்றியும், தமிழகத்தில் பெரியார், காமராஜர், அண்ணா, கருணாநிதி, எம்ஜிஆர் காலம்வரையிலும் பேசப்படுகிறது. பல தலைவர்கள் குறித்து நல் மதிப்பீடும்- கடும் விமர்சனங்களையும் ஒருசேரக் காணலாம். இந்நூலை தன் புது முயற்சி என கவிஞர் குறிப்பிட்டுள்ளார். இனி அந்நூலில் தோழர் அச்சுதமேனன் பற்றிய அவரின் உயர் மதிப்பீட்டை அவரது எழுத்துக்களிலேயே பார்க்கலாம்..

"இந்திய முதலமைச்சர்களில் எனக்கு பிடித்தவர் அச்சுதமேனன். பலபடிகள் உயர்ந்தவர். காமராஜரிடம் கூட கோபம் எனும் குணம் உண்டு. அச்சுதமேனனிடம் அதுவும் கிடையாது. நேர்மை நாணயமானவர். நல்ல நிர்வாகி. அவர் கட்சிகொள்கைப்படி நாத்திகர். சுவாமி ஐயப்பன் படத்துக்கு ரஷ்யா போகிறபோக்கில் வரிவிலக்கு கொடுத்துப் போனார். பொதுக்கொள்கைகளில் தான் கம்யூனிஸ்ட் என்று அவர் கருதுவதில்லை. கட்சிக்கு எதிராக நிர்வாகத்தில் நடக்கவேண்டிய கட்டம் வருமானால் அவர் பின்வாங்கியதில்லை. நிர்வாக செம்மை என்பதில் உறுதி.

ஒரு கெட்ட பெயரும் இல்லாமல் நல்ல பெயராகவே பெற்றுக்கொண்டு போன ஒரே ஒரு முதலமைச்சர். கேரளா சமுதாயம் மீண்டும் அழைத்தும் கூட இனி பதவி வேண்டாம் என்று போனவர். அவர் அப்படி சொன்னபோது நாடு தன் நல்ல நண்பனை இழந்துவிட்டது போல கவலைப்பட்டது. அவர் கேரள அரசியலில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினார். அதிலும் கூட்டணி மந்திரிசபை.

அச்சுதமேனனோடு எனக்கு ஏற்பட்ட பழக்கத்தை மிகப் பெருமையாகக் கருதுகிறேன். தோழர் பாலதண்டாயுதமும், கல்யாணசுந்தரமும் இதில் எனது நன்றிக்குரியவர்கள். தேர்தல் காலத்தில் வசூல் செய்திட அவரை அழைத்து வந்தனர்.. கேரளா விடுத்து இங்கே ஏன் எனக் கருதினேன். ஒரே ஒரு பதில் கிடைத்தது. கேரளாவில் பணம்கொடுத்தவன் தவறான வழியில் உதவி கேட்டு வருவான். அதனால் அங்கு செய்ய விரும்பவில்லை என்றார். இங்கு கிடைப்பதை வைத்து பார்க்கலாம் என்றார். எனக்கு கண்ணீர் வந்தது. தேர்தலில் தோற்றாலும் பரவாயில்லை. தவறான வழிக்கு உதவிடக்கூடாது எனக் கருதிஒருவன் தமிழகம் வந்திருக்கிறானே என்று கருதினேன். பல இடங்கள் சென்றோம். எம் ஜி ஆர் கணிசமான தொகையைக் கொடுத்தார்.

இரண்டு இரவுகள் என்னுடன் இருந்தார். சாப்பிட்டது மிகச் சொற்பம். ஒரு ரொட்டி, வெள்ளைக் கரு. நான் பலமணி சாப்பிட்டுக்கொண்டிருந்தபோதும் சேரில் சாய்ந்துகொண்டு பேசிக்கொண்டேயிருந்தார். அவர் இருதய வியாதிக்காரர். போய்ப் படுங்கள் என்றாலும் பரவாயில்லை என கூட உட்கார்ந்திருப்பார். வள்ளுவர் பேசிய நாகரீகத்தை இடைவிடாது அச்சுதமேனன் கடைப்பிடித்தார்.

அவரிடம் ஒரு உதவிக்கு போகநேர்ந்தது. எனக்காக அல்ல. நண்பர் எஸ்டேட் பிரச்னை. மார்க்சிஸ்ட்கள் கலவரம். அவருக்கு முழு குறிப்பு ஒன்றை அனுப்பினேன். அச்சுதமேனன் அதைப் பார்த்துவிட்டு விசாரணைக்கு உத்தரவிட்டார். தவறு எனத் தெரிந்ததும் நடவடிக்கை எடுத்தார். எஸ்டேட்டை காப்பாற்றினார்.

இப்படி அச்சுதமேனன் போன்ற முதல்வர்கள் இந்தியாபூராவுக்கும் அமைந்திருந்தால், இந்தியாவின் எதிர்காலம் நேற்றும் இன்றும் நாளையும் அற்புதமாக அமைந்திருக்கும்.

June 6   2022

74. தோழர் தா.பா வின் 'பொதுவுடைமையரின் வருங்காலம்? '- ஒரு வாசிப்பு - ஆர்.பட்டாபிராமன்

பொதுவுடைமையரின் வருங்காலம்? என்கிற ஆக்கம் தோழர் தா.பாண்டியன் அவர்களின் சிந்தனை தெறிப்புகள் நிறைந்த புத்தகம். முகநூலில் தோழர் வெள்ளிங்கிரி அவர்கள் பலமுறை மேற்காள் காட்டி அவசியம் படிக்கச் சொல்லிய புத்தகம். 2017ல் என்சிபிஎச் வெளியிட்டபதிப்பு. கோவைத் தொழிற்சங்கத்தலைவர் தோழர் எஸ்.எஸ் கோபாலகிருஷ்ணன் (SSG) ஜூன் 24ல் சென்னை வந்து சந்தித்தபோது இந்த புத்தகத்தை கொடுத்துப் போனார். அவருக்கு மிக்க நன்றி. ஜூன் 25, ஜூன் 26 என இரு நாட்களில் இரு அமர்வுகளில் அதை படித்தேன். 308 பக்கங்கள் கொண்ட புத்தகம். நான் மிக விரைந்து படித்த சில புத்தகங்களில் தா.பாவின் 'பொ.வ?' புத்தகமும் ஒன்றாகியுள்ளது.

6 ஆண்டுகளுக்குள்தான்- சரியாக ஆண்டு நினைவில் இல்லை- கடலூர் பகுதி ஒன்றில் தொலைத்தொடர்பு தொழிலாளர் சந்திப்பில் தோழர் தா.பா பிரபுல் பித்வாயின் Phoenix Moment, அமர்த்யா சென்- ஜான் ட்ரீஸ் எழுதிய uncertain Glory ஆகியவற்றை குறித்த செய்திகளை விளக்கிக்கொண்டிருந்தார். இரு புத்தகங்களையும் படித்திருந்தேன். தோழர் SSGயும் பிரபுல் புத்தகம் வாங்கி படித்துகொண்டிருந்த நிலையில் இருவரும் அது குறித்து விவாதித்தவர்களாக இருந்தோம்.

பொதுவுடைமையரின் வருங்காலம்? நூலுக்கு தோழர் ந. முத்துமோகன் அணிந்துரை எழுதியுள்ளார். ந.மு அதில் முன்வைத்தவை :

தா.பா பேசுவது இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் பற்றியவை. தோற்றக்காலத்திலிருந்தே ஓர் இடதுசாரி தீவிரவாதம் இருந்து வந்திருக்கிறது. காங்கிரஸ், சோசலிஸ்ட்கள், அம்பேத்கர், பெரியார் திராவிட இயக்கங்களை அந்நியப்படுத்தி தனிமைப்பட்ட நிலை- சகபாடிகளை கண்டுணர்ந்து நெகிழ்வாக செயல்படவேண்டியதேவை, இந்திய சூழல்களை புரிந்து அதற்கு முன்னுரிமை கொடுத்து சிந்திக்க செயலாற்ற வேண்டிய பழக்கம், உட்கட்சி ஜனநாயகம் ரஷ்யா பாணியில் ஏன் - சொந்த சூழலை கணக்கில் கொண்ட அமைப்பு விதிகள் ஆகியன குறித்தவை .

ந.மு இந்த நூலுக்கு ஒரு பதிப்பாசிரியர் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். தா.பா மீதான மரியாதையால் அதை விட்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அதை உள்ளீடாக புரிந்து கொள்ளலாம். கடந்தும் சென்றுவிடலாம்.

தா.பா இந்நூலை 5 பகுதிகளாக பிரித்து விவாதித்துள்ளார் . முடிவுரை என்பதை மூன்று பக்கத்திற்குள் முடித்துக்கொண்டுள்ளார்

II

முதல் பகுதியை 41 கேள்விகளை முன்வைத்து தனது பிரதியின் உரையாடலை தா.பா நகர்த்திச் செல்கிறார்.

விருப்பு வெறுப்பின்றி முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு செவி மடுத்து வாழ்வின் அனுபவங்களுடன் அவற்றை இணைத்துப் பார்த்து பதில் சொல்லும் பொறுப்பு கடமை இருப்பதை தா.பா சுட்டிக்காட்டுகிறார்.

முதலாளித்துவத்துவத்திற்கு என்ன மாற்று- அது ஏன் சிறந்தது- அந்த பதிலை இடம் பொருள் காலமறிந்து மார்க்சியவாதிகள் கூறவேண்டும். விடுதலையடைந்தவுடன் 1948ல் கூடிய கட்சி 'முதலாளித்துவம் வளர்ந்துவிட்டதாக- தொழிலாளர் புரட்சிக்கு தயாராகிவிட்டதாக' சமர்பித்த அறிக்கையை சார்பாளர் ஏற்றதைச் சொல்லி இடதுசாரி வாய்ச் சவடாலுக்கு பலியானதை தா.பா குறிப்பிடுகிறார். தொடங்கியது சரிவு என்று மதிப்பிடுகிறார்.

காலமாற்றம், அறிவியல் ஏற்படுத்தும் மாற்றங்கள் ஆகியவற்றை சரிவர மதிப்பிடமுடியாமல் சிந்திக்கவும் செயலை மாற்றவும் இடதுசாரிகள் மறுப்பதே சரிவிற்கான காரணம் என்ற மதிப்பீட்டிற்கும் தா.பா வருகிறார்.

இடதுசாரி இயக்கம் என்ற வகையில் அம்பேத்கர் இறக்கும்வரை எந்த உறவும் தொடர்பும் கொள்ளாதது ஏன்? முதல் கட்சி மாநாட்டில் தலைமை தாங்கிய சிங்காரவேலருடன் கட்சி தொடர்பற்று இருந்ததேன் என்கிற கேள்விகளை தா.பா எழுப்புகிறார்.

குபர் புத்தகம், டாங்கே, சர்தேசாய் கட்டுரைகள் மூலம் அம்பேத்கர் புரிதல்களை மேம்படுத்த 50 ஆண்டுகளுக்கு முன்னரே முயற்சிகள் நடந்தன. அம்பேத்கரின் அடிப்படையான கம்யூனிசம் மார்க்சிய பார்வைகள் குறித்து விவாதங்களை மூடிவிடவேண்டுமா என்பது கேள்விக்குரியதே . அம்பேத்கர் எழுத்துக்களும் விவாதத்திற்கு

அப்பாற்பட்டவையாக எண்ண வேண்டியதில்லை என்ற புரிதலும் கூடவே தேவைப்படும்.

அதேபோல் பெரியார்- சிங்காரவேலர் விவாதங்களை மூடிவிட்டு கடந்து போகவேண்டுமா என்பதும் கேள்விக்குரியதுதான். காந்தி- பெரியார்- அம்பேத்கர்- நேரு- சோசலிஸ்ட்கள் என எவரையும் கம்யூனிஸ்ட்கள் காலத்தில் கற்றிருக்க முடியும். தா.பா சொல்வது போல் அந்தக் கற்றல் இந்தியத்தேவைகளை அடிப்படையாக வைத்தும் உலக மானுடன் என்பதை நோக்கி நம்மை நகர்த்துவதாகவும் இருந்திருக்க முடியும் . இதை என் அனுபவத்தில் உணர்ந்தே சொல்கிறேன். இன்னும் வலதுசாரிகளையும் அவர்களது வாதங்களையும் ஆழ வாசிக்காமலேயே வாயடிப்பதை குறித்தும் உள் உணர்வு பரிசீலனை தேவைப்படும் நிலையிருக்கிறது.

III

தொழிலாளர் இயக்கங்கள் குறித்து ஆங்காங்கே தா.பா விவாதித்துச் செல்கிறார். அரசுப்பணியாளர் ஊதியம், பென்சன், பொதுத்துறையில் ஊதியம் பிற சலுகைகள் ஆகியவை போராடி பெறப்பட்டுள்ளன. மேலும் பெற அவர்கள் போராடியும் வருகின்றனர். கோடானுகோடி பிற தொழிலாளர்களுக்கு இந்த உரிமைகள் ஏதுமில்லை. அரசின் வருமானம் குறிப்பிட்ட பகுதியினருக்கே செல்கிறதே- நீங்கள் ஆட்சிக்கு வந்தால் எங்கிருந்து பிற பகுதிகளை முன்னேற்ற பாடுபடுவீர்கள் என்ற கேள்வி எதிர்கொள்ளப்படவேண்டிய ஒன்றே என்கிறார் தா.பா. இதைப் பரிசீலித்தால் இடதுசாரிகள் மக்களிடமிருந்து ஒதுக்கப்பட்டதை புரிந்துகொள்ளலாம் என்கிற மதிப்பீட்டிற்கு வருகிறார்.

இலஞ்சம் பெறுபவர்களாக பணியாளர்- அதிகாரிகள் இருந்தால் அவர்களின் கடமைகளை உணர்த்த முடியாத இடதுசாரிகளாக நாம் பார்க்கப்படுகிறோம். உரிமைகளுக்கு போராடும்போது மக்களின் ஆதரவு கிடைக்காமல் போகிறது.

அதேபோல் போராட்டமுறைகள் என்றால் வழக்கமான கண்டன முழக்கம், உண்ணாவிரதம், மறியல் என்றாகிறது. போராட்ட முறைகளை நம் உணர்விற்கேற்ப திணிக்கவும் கூடாது. தலைவர்கள் இருக்கிறார்கள்- தலைமைத்துவம் இல்லை என்கிறார் தா.பா.

எல்லா மாநிலங்களிலும் கட்சியின் தலையாய கடமைகளில் ஒன்றாக கல்விக்கூடங்கள் நடத்துவது, இரவுப்பள்ளிகள் நடத்துவது, வாசகசாலை அமைப்பது மருத்துவ உதவிகளைச் செய்வது என்பதைவிட தொழிற்சங்கம் உரிமைப் போராட்டங்களில் மட்டும்

கவனம் செலுத்தியது ஏன் என்கிற கேள்வியால் தா.பா சில நிர்மாணத்திட்ட தூண்டலைச் செய்கிறார் என எடுத்துக்கொள்ளலாம்.

IV

தா.பா மார்க்சிய தத்துவத்தில் குறைபாடில்லை என்பதை பல இடங்களில் ஏற்றே தன் விவாத பரப்பை அமைத்துக்கொண்டுள்ளார். மார்க்சியம் வென்று நிற்கிறது என்றே பல இடங்களில் எழுதுகிறார். இது குறித்த விவாதங்கள் ஏதும் அவரிடம் செல்வாக்கு செலுத்தவில்லை.

சோவியத் வீழ்ந்தது குறித்து ஒருங்கிணைந்த விவாதம் போதுமான அளவில் இல்லாத குறை- சோவியத் போய்வந்த பல கம்யூனிஸ்ட் தலைவர்கள் கண்களில் அங்கு நிலவிய குறைகள் தென்படாமல் போனது- அது குறித்து பேசாத குறை, இரண்டாம் உலகப்போர் ஓய்ந்தபோது சோவியத்- ஸ்டாலின் புகழ் உச்சத்தில் இருந்த நேரத்திலாவது அங்கு ஜனநாயக மாற்றங்களை துவக்காத குறை போன்றவற்றை தா.பா சொல்கிறார். டிட்டோ போன்றவர் நடத்திய புதிய சோதனைகளைப் பார்க்காமல் முத்திரை குத்தியதும் குறையானதே என்கிறார்.

எந்த தேர்தலாலோ- அல்லது அமெரிக்க அட்டகாசத்தாலோ சோவியத் விழவில்லை. கட்சிக்குள்ளே குழி பறிக்கிற கும்பல் வளர்ந்து கொழுக்க வழிவிட்டதால்தான் வீழ்ந்தது. கட்சிக்குள் தவறான பேர்வழிகள் தலைமைக்கு வர எது வழி வகுத்ததோ அதைக் கண்டறிந்து தடுக்க வேண்டும். கட்சியின் கட்டமைப்பு விதிகளை மறுபரிசீலனை செய்யவேண்டும். தவறானவர் கண்டறிய என்ன டிடெக்டர் இருக்க முடியும். சில மாற்றங்கள் செய்ய ஆலோசனைத் தருகிறார். இருந்தபோதிலும் இதைச் செய்ய என்ன திருத்தங்கள் வேண்டும்- எவ்வாறு இயங்க வேண்டும் என ஒரு தனி மனிதன் எழுதுவது பயன் தராது என்ற அளவில் நிறுத்திக்கொள்கிறார்.

நடுநிலையில் எவராவது முன்வைக்கும் விவரங்களை உடனே ஏற்றுக்கொள்ள வேண்டாம். ஆய்விற்கு எடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் தீர்ப்பு கூறலாம் என தா.பா எழுதியிருப்பது கருத்துக் கூற முயற்சிக்கும் தனி மனிதர் பின்பற்ற வேண்டிய ஒன்றாகவே படுகிறது. தீர்ப்பை முன்கூட்டியே வைத்துக்கொண்டு கருத்துக்கூறல் சிந்தித்தல் என்கிற பழக்கம் வெகுவாக ஏற்பட்டுள்ள சூழலில் இந்த அறிவுரை பொருட்படுத்த வேண்டிய ஒன்றாகும்.

சில நாடுகளில் கொடுங்கோலர்கள் இடதுசாரி பெயரில் வந்து மக்களை வாட்டியது, சோவியத் உட்பட சமத்துவம் என்ற பெயரில்

தனித்திறமைக் கண்டு அங்கீகரிக்காமை போன்ற அம்சங்களையும் சொல்கிறார்.

சீனப்பாதை, வியத்நாம், கியுபா என நாடுகள் பல வழிகளில் பாதையைக் கண்டடைந்ததுபோல நமக்கான பாதை என்ன எனத்தெளிந்து கொள்ளாமல் இருந்ததால் தனிமைப்பட்டோமா என்கிற கேள்வி அவரிடமிருந்து எழும்பியிருக்கிறது.

சிறைவாசத்தில் ராஜாஜி அபேதவாதம் குறித்து எடுத்த வகுப்பை தா.பா ராஜாஜியின் சிறப்பான புரிதலாக ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்திருப்பார். ராஜாஜியின் அபேதவாதத்தை அறிமுகப்படுத்தி கட்டுரை ஒன்றை முகநூலில் எழுதியிருந்தேன். வாய்ப்புள்ளவர் பார்க்கலாம்.

சோவியத்- ஸ்டாலின் தன் நாடு, தன் அதிகாரம், தன் கட்சி நலன் என்றே முடிவெடுத்தார். ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ முடிவே தங்கள் முடிவென்று சொன்ன புரிதல் குறையை தா.பா சுட்டிக்காட்டுகிறார்.

அதேபோல் சுபாஷ் போசை ஹிட்லரின் கைக்கூலியாக சித்தரித்த குறையைச் சொல்கிறார். 1942 போராட்டத்தில் தேசிய உணர்விற்கு மாறாக எடுத்த நிலையையும் சொல்கிறார். 1947ல் பெறப்பட்டது விடுதலையா என்கிற பார்வை இருந்ததை சுட்டிக்காட்டுகிறார். 1948-1950க்குள் மூன்று அரசியல் நிலைகள் மாற்றப்பட்டன. சுதந்திரப் போராட்டம் வர்க்கங்களைச் சேர்ந்து போராடவைக்கும் நிலையில்தான் நடக்கும். ஏகாதிபத்திய எதிர்ப்பு முனை என்று அதை நேசமாக வைத்திருந்திருக்கவேண்டும் என்ற புரிதல் இல்லாமல் போனதைக் காட்டுகிறார்.

கம்யூனிஸ்ட் நாடு ஆக்கிரமிக்காது என இ எம் எஸ் போன்றவர்கள் பேசிவந்ததை 'சூத்திரம் வகை' புரிதல் என தா.பா சொல்லி விளங்க வைக்கிறார். ஹங்கேரி, செக், ஆஃப்கானுக்கு படைகள் சென்றது சரியா என வினவுகிறார்.

தனிமனிதர்களை பிறப்பை வைத்து அல்லாமல் கொண்ட கொள்கை, செயலை வைத்து மதிப்பிட தலைமைக்கு வருவோர் கற்க வேண்டும். அது முதல் பாடம் என்கிறார் தா.பா.

கம்யூனிஸ்ட் கட்சியில் செயலர்களாக வருபவர்கள் கூறுவதே மார்க்சியம் என்பது தவறான நம்பிக்கை- கட்சியைக் காப்பாற்றாது. மார்க்சிய மெய்ப்பொருள் காண்பது அறிவு. கட்சி உறுப்பினர் (பக்தர்)

என்கிற உரிமச் சீட்டு பெற்றுவிட்டதால் எவரையும் இழித்துப் பழித்துப் அவதூறு செய்வது இயக்கத்திற்கு இழிவை ஏற்படுத்தும் என எழுதுகிறார் தா.பா.

மனிதர்களைக் கொண்டதே கம்யூனிஸ்ட் கட்சி. எனவே மனித பலவீனம் சில சமயங்களில் கட்சியின் வளர்ச்சியைக் கெடுத்தது உண்டு..கட்சிக்குள் கொள்கை, போர்த்தந்திரங்கள், தேர்தல் உறவுகள் வரும்போதெல்லாம் முன்னோடித் தலைவர்கள் மீது அவதூறு பொழிவது, ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது வாடிக்கை ஆகிவிட்டது. அதற்கு புரட்சிகர முழக்கம் எனப்பெயர் என தா.பா விமர்சனம் சொடுக்குகிறார்.

குறிப்பிட்ட முக்கிய 1942, 1948, 1962, 1964 பிளவு கட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசியலை பாதித்த முக்கிய திருப்பங்கள். 1957 தேர்தல் மூலம் முதன் முறையாக கேரளத்தில் இ எம் எஸ் தலையில் ஆட்சிக்கு வரமுடிந்தது. கல்வி நிறுவனங்களை நெறிப்படுத்தியது பிரச்னையாகி போராட்டங்கள்- தடியடி நடந்தது. வலதுசாரிகளின் ஆபத்தை உணரப்பெற்ற பாடம் என்கிறார் தா.பா.

தொடக்க காலம் முதலே இ.க.க இந்திய மண்ணில் காலூன்றி, இந்திய சமுதாய அமைப்பையும் சரியாக மதிப்பிட்டு , சுயமாக, சுதந்திரமாக முடிவெடுத்து அதற்கேற்ப அந்தக் கட்டத்தில், அந்தக் கடமைகளை நிறைவேற்ற நேச சக்தி எது- முதல் எதிரி சக்தி எது என இந்தியக் கம்யூனிஸ்ட்கள் முடிவு எடுப்பவர்களாக இருந்திருக்க வேண்டும். மாறாக சர்வதேசியம் கோட்பாட்டை யாந்திரிகமாக நடைமுறைப்படுத்த, வழிகாட்டலுக்கு ஆட்பட்டுவிட்டதே முதற்கோணல்- முற்றிலும் கோணல் எனத் தவறாக அடி எடுக்க வைத்துவிட்டது என தா.பா எழுதுகிறார். இது அன்றைய இளம் குருத்துகளான கம்யூனிஸ்ட்கள் மீதான தா.பாவின் அதீத எதிர்பார்ப்பாகவே தோன்றுகிறது.

மார்க்சியம் கற்று, கட்சி உறுப்பினர் ஆனோரும்- தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையும், சமுதாய மாற்றக் கடமையை புறந்தள்ளி, பதவி அரசியல் பாதையில் தடம் புரண்டதால், வர்க்கப்பார்வை என்பது சுயவெறுப்பு பார்வை hate politics ஆகவும், வர்க்கப்போர் அக்கப்போராகவும் நோய்வாய்ப்பட்டிருப்பதால், தன்னைத் தானே பலவீனப்படுத்தி வருகிறது என்ற மதிப்பீட்டை தா.பா பொதுவாக சொல்லி நகர்கிறார். அவரின் இந்த மதிப்பீட்டிற்கான காலத்தை- எவர் செய்தாரோ அவரை- அல்லது அந்த குறிப்பிட்ட கமிட்டியை சொல்லி விளக்கியிருந்தால் கூடுதல் பொறுப்புடன் அவர் பேசியுள்ளார் என

புரிந்துகொண்டிருந்திருக்க முடியும். போகிற போக்கிலான பேச்சாக முக்கிய விமர்சனங்கள் இருந்துவிடக்கூடாது என்கிற தன்மை அவசியம்.

ருஷ்ய கட்சி விதிகளின்படி தான் இந்தியாவின் அமைப்பு விதிகளும் அமைந்ததை தா.பா சொல்கிறார். உலக முழுதும் அப்படித்தான் லெனினிய கட்சி- நியு டைப் பார்ட்டி என்றே கட்டப்பட்டது. ருஷ்யாவின் தட்பவெப்பம் இந்தியாவில் இல்லை என்பது சரிதான். கால மாற்றத்தில் பொருத்தமானவற்றை 1958 அமிர்தசரஸ் சிறப்பு மாநாட்டில் கட்சி செய்ய முயற்சிக்காமல் இல்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் பார்வை இ.க.க வில் இன்று இல்லை. ஆனால் சி பி எம் இன்றும் அமைப்பு விதியில் வைத்துக்கொண்டுள்ளது. இந்திய வரலாற்றின், மரபின் வெளிச்சத்தில் மா- லெ என்பதை சிபிஅய் சேர்த்துக்கொண்டது. ஆனால் எது மரபு, வரலாறு என்ன என்பது குறித்த விவாதங்கள் செழுமையாக்கப்படவேண்டிய நிலையுள்ளது.

Democratic Centralism – மய்யப்படுத்தப்பட்ட ஜனநாயகம் என்கிற கோட்பாடு கடைசியில் அதிகாரம் ஒரு சிலர் கையில் என்றாகி, இறுதியில் ஒரே ஒருவர் தீர்மானிக்கிறபடி என்றாகிவிட்டது என்கிற சோவியத் அனுபவத்தை தா.பா சொல்கிறார்.

மூன்றுபேரோ நான்கு பேரோ எடுத்த முடிவால் ஜோதிபாசு பிரதமர் ஆகமுடியாமல் போனதை சுட்டிக்காட்டி தா.பா இதை கட்சி உறுப்பினர்களிடம் எடுத்துப் போய் இருந்தால் அவர்கள் முடிவு குப்பைத்தொட்டிக்கு போய் இருக்கும் என்கிறார். கட்சிக்குள் ஜனநாயகம் எனும்போது முக்கிய பிரச்னைகளில் ஒருவகை பொதுவாக்கெடுப்பு எனும் பிளபிசைட் முறையை அவர் சொல்வது போல் உள்ளது. தவறு எனச் சொல்லவில்லை. கட்சிக்குள் பாட்டாளிவர்க்க உணர்வு ஓர்படித்தானதல்ல என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டியதில்லையா- பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது நடைமுறையில் என்னவாகும் என்கிற கேள்வி எழுகிறது.

கட்சிக்கு சோதனை வரும்போது உறுதியை சுறுசுறுப்பை காட்டுகிறவர்களுக்கு கட்சியில் பொறுப்புகள் தரப்படவேண்டும் என்ற மொழிதலை தா.பா செய்கிறார். இதில் முன்மாதிரியாக செயல்பட்டவர்களை அவர்கள் காலத்தை- செயல்படாமல் போயிருந்தால் அதைச் சொல்லி விளங்க வைத்திருக்கலாம். பெயரைக் குறிப்பிடாமலே மெஜாரிட்டி- மைனாரிட்டி- அல்லது தனிப்பட்ட ஒருவரிடம் இருந்த wisdom எது சரியானதாக இருந்தது என்பதை சொல்லி புரிய வைத்திருக்கலாம்.

கேரளா மாடல் என்பதை கவனிக்க வேண்டுகிறார். கேரளா சமாளித்து வெற்றிகண்ட பாடங்கள் இந்தியா முழுமைக்கும் தேவை என்கிறார். தொழிலாளர்க்கும் கட்சிக்குமான உயிர்த் தொடர்பு அங்கு ஏற்பட்டதைச் சொல்கிறார்.

1925லிருந்து காங்கிரஸ் எதிர்ப்பு என்பதிலேயே இடதுசாரிகளின் அதிக சக்தி செலவாகியுள்ளதை கவனப்படுத்துகிறார் தா.பா. அந்தக் கட்சிதான் சகல அரசியல் போக்குகளுக்கும் தன் விரிவான பதாகையின் கீழ் இயங்க இடம் கொடுத்தது என்ற வரலாற்று உண்மையையும் தா.பா பதிவு செய்துள்ளார் . காந்தி சமரசவாதி என இன்றும் சிலர் கட்சியில் கூறி வருதலையும் அவர் சொல்கிறார்.

காங்கிரஸ் முதலாளித்துவ கட்சி எனப் பேசுவதைக் குறித்து கேட்கின்ற அவர் அதை எப்படி வர்க்க பார்வைகொண்ட மார்க்சியர் புரிந்துகொள்வது என சொல்லாமல் போகிறார். பல வர்க்க பல சாதி பல மதத்தினர் கட்சி என சொல்வதா- மக்கள் இயக்கம்/கட்சி என்பதா? மார்க்சியம்- லெனினியம் என சொல்லிவிட்டு அத்துடன் எப்படி அந்த கட்சி குறித்த வரையறையை சொல்வது. உழைப்பாளர் கட்சி என கம்யூனிஸ்ட் கட்சி தன் காரக்டரை சொல்வது போல் சொல்ல முடியுமா? விவாதிக்க வேண்டிய ஒன்றாகவுள்ளது.

நேரு குறித்த மதிப்பீடுகளை இறுதி காலத்தில் ரணதிவே, ஜோதிபாசு போன்ற தலைவர்கள் மாற்றிக்கொண்டதை தா.பா வரவேற்கிறார்.

இந்து மகாசபைக்கும், முஸ்லீம் லீகிற்கும் இந்திய மண்ணில் ஆழமான வேர் பதிந்து விழுதுகள் பரவியிருக்கும் என்பதை மார்க்சியவாதிகள் பாராது போகமுடியாதென்கிற முக்கிய பார்வையை வைக்கிறார்..

கம்யூனிஸ்ட்கள் தங்கள் சொந்த பலத்தால் இந்தியாவில் எங்கும் வெற்றி பெறுவது சாத்தியமல்ல என்பது உண்மை நிலவரம். இல்லாத பலத்தை மிகைப்படுத்திக் காட்டுவதும், வகுப்புவாத சக்திகளை துரும்பு போலக் கருதுவதும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது என்கிறார் தா.பா.

V

இந்நூலில் நான் பார்த்தவகையில் factually incorrect – சரிபார்த்துக் கொள்ள வேண்டியவை இருக்கின்றன.

பக்கம் 53ல் ’சோசலிஸ்ட் புரட்சிக்கட்சியை சேர்ந்த ரூவன் எனும் பெண் லெனினை துப்பாக்கியால் சுட்டார்’ எனத் தரப்பட்டுள்ளது. அந்தப்

பெண்ணின் பெயர் Fanny Efimovna Kaplan கப்ளான் என சுருக்கமாக சொல்வர். அவரின் உண்மையான பெயர் Feiga Haimovna Roytblat..

பக்கம் 54ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உதய ’மாநாட்டிற்கு முயற்சி எடுத்தவர் பெயர் சத்ய பக்ஷ்’ என எழுதப்பட்டுள்ளது. கட்சியின் ஆவணங்களில் சத்ய பக்தா என்ற பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தி தேவநாகரியிலும் அவ்வாறே எழுதப்படுகிறது. அவருக்கு சக்கன் லால் என்ற பெயரும் உண்டு என்பர். ஆனால் ஆவணங்களில் இருப்பது சத்ய பக்தா என்பதே.

பாசிசம் குறித்து தா.பா தொட்டுக்காட்டுவார். ஹிட்லர் எதிர்த்த போராட்டம் பற்றி பேசி வரும்போது டிமிட்ராவ் பொய் வழக்கு சித்திரவதை பற்றிச் சொல்வார். பக்கம் 56ல் ”அதைக் கண்டித்து டிமிட்ராவை விடுவிக்கக்கோரி காந்தியடிகள் ஹிட்லருக்கு நேராகவே கடிதம் எழுதினார். அச்செய்தியும் பலநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்தது” என எழுதப்பட்டுள்ளது.

காந்தியடிகள் ஹிட்லருக்கு எழுதியதாக ஆவணங்களின்படி நமக்கு கிடைப்பது இரு கடிதங்கள்தான். ஒன்று ஜூலை 23, 1939 மற்றொன்று டிசம்பர் 24, 1940க்கானது. அவற்றில் டிமிட்ராவ் பெயர் குறிப்பிட்ட செய்தி ஏதுமில்லை. எந்த நாளில் எப்பத்திரிகைகள் காந்தி டிமிட்ராவை விடுவிக்க ஹிட்லருக்கு எழுதியதாக பதிவிட்டிருந்தன என ஏதும் தெரிவிக்கப்படாமலேயே இந்த நூலில் இந்த செய்தி சொல்லப்பட்டு போகிறது.

பக்கம் 67ல் சக்ளத்வாலா பற்றி எழுதுகிறார். ஜே.என் டாட்டாவின் தம்பி மகன் என எழுதப்பட்டுள்ளது. அவர் ஜே.என் டாட்டாவின் தங்கை மகன். டோரப்ஜி- ஜெர்பாய்க்கு பிறந்தவர். ஜெர்பாய் ஜே.என் டாட்டாவின் சகோதரி. சிபிஎம் மார்க்சிஸ்ட் ஆங்கில காலாண்டு இதழ் ஜன- மார்ச் 1996 சக்ளத்வாலா குறித்த தோழர் சுர்ஜித் கட்டுரையிலும் டாட்டாவின் தங்கை மகன் என்பது பதிவாகியிருக்கும்.

பக்கம் 82ல் இ எம் எஸ் 1957 ஆட்சி பற்றி எழுதுகையில் தேர்தலில் வென்று ஆட்சி அமைத்த கம்யூனிஸ்ட்கள் தலைமையிலான கேரள மந்திரிசபை 1958 இறுதியில் நீக்கப்பட்டது என எழுதப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சி 5 ஏப்ரல் 1957 முதல் ஜூலை 31, 1959 வரையிருந்து கலைக்கப்பட்டது.

பக் 83ல் அஜாய்கோஷ் மறைவால் 1962ல் அடுத்த செயலர் குறித்து ஒருமித்த கருத்து ஏற்படவில்லை எனச் சொல்லும்போது – ’தோழர்

டாங்கே தலைவராகவும் (அதுவரை கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைவர் பதவி கிடையாது) இ எம் எஸ் பொறுப்புச் செயலராகவும் தேர்ந்தெடுத்து முடித்தனர்' என எழுதியுள்ளதைக் காண்கிறோம்.

சமீபத்தில் முகநூலில் 'கால மாற்றத்தில் அமைப்பு விதிகள்- கம்யூனிஸ்ட் கட்சியை முன்வைத்து' எனும் எனது கட்டுரையில் 1925 துவக்க அமைப்பு விதி தலைவர்- ஆண்டு மாநாடு- அவ்வாண்டு முழுதும் அவரே தலைவராக இருப்பார்- மாநில கமிட்டிகளையும் கலந்துகொண்டு தலைவர் எவர் என்பது தீர்மானமாகும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை படிப்பவரால் தெரிந்துகொள்ள முடியும். ஆரம்பத்தில் தலைவர் என்பதுதான் இருந்தது.

பக்கம் 183ல் சோசலிஸ்ட்கள் கட்சியாக காங்கிரசிற்குள் இருந்து செயல்பட்டு வந்ததை தா.பா பேசுகிறார். ' 1920 முதல்1950 வரை அக்கட்சி காங்கிரசுக்கு உள்ளேயே இயங்கினாலும்... 1952 தேர்தலில் காங்கிரசிற்கு அடுத்து பெரிய கட்சியாக வரும் என பத்திரிகைகள் எழுதின' என எழுதப்பட்டிருக்கிறது. தா.பா காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைத்தான் இப்படி சொல்கிறார். ஆனால் அக்கட்சி 1934ல் தான் உதயமாகிறது- 1920ல் அல்ல. விடுதலைக்குப்பின்னர் 1948ல் வெளியேறி காங்கிரஸ் பெயரை நீக்கிக்கொண்டு சோசலிஸ்ட் கட்சியாக இயங்க ஆரம்பிக்கிறது.

VI

மக்கள் நம்மிடமிருந்து பிரிந்து விட்டனரா- நாம் தனிமைப்படுத்திக் கொண்டோமா என்கிற கேள்வியை மய்யமான விவாதப் பொருளாக்குகிறார் தா.பா. பல தொழிற்சங்கத் தலைவர்கள் முதலீடு செய்யாத முதலாளிகள் ஆனதைச் சொல்கிறார். சாதிக்கு என கட்சி , தொழிற்சங்கம் ஏற்பட்ட சூழலில் உள்ள பணி கடினமானதை சுட்டுகிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 'கட்சி அமைப்பை' மாற்ற வேண்டும். ஜனநாயக கட்சியாக இயங்க வேண்டும். தலைமைக் குழுக்கள் தனியாகக் கூடி விவாதிக்கலாம். மாநாடுகள் மக்கள் அறியத்தக்க வகையில் பகிரங்கமாக நடத்தப்படவேண்டும் . இரகசிய கூட்டங்கள் கட்சி அமைப்பை பற்றியதாக இருக்கலாம் என அவர் ஆலோசனையைத் தருகிறார். சமீபத்தில் முடிந்த சிபிஎம் காங்கிரஸ் தற்போது அரசியல் தீர்மானத்தை மட்டுமே பொதுவெளியில்

வைத்துள்ளது, இதற்கு முன்னர் அமைப்பு குறித்தும் வெளிப்படையாகவே வைத்திருந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உண்மையான ஒரு ஜனநாயக அரசியல் கட்சி என்பதை மக்களால் நம்பப்பட்டும் ஏற்கப்படும் வகையில் துணிந்து திருத்தியமைக்கவேண்டும் என்கிறார் தா.பா. இன்றும் டெல்லியில் இருப்பதுதான் ஜனநாயக மத்தியத் தலைமை என்கிற கோட்பாடு கடைப்பிடிக்கப்படுவதால் உருவாகும் சில விளைவுகளைச் சொல்கிறார். ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு கட்சியைக் கட்டி வளர்த்த சிற்பிகளை அவமானத்தப்படுத்தவே பயன்பட்டுள்ளது. எனவே அதை மாற்றி அமைப்பதில் துவங்க வேண்டும் என்பதை இந்நூலில் தா.பா அழுத்தமாக முன் வைக்கிறார்.

தேசிய அமைப்பிற்கு மாநிலங்களிலிருந்து 4 அல்லது 5 என தேர்ந்தெடுத்து அனுப்பலாம். அவர்கள் கூடி தலைமைக் குழுக்களை தேர்ந்தெடுக்கலாம் என ஒருவகை பெடரலிசத்தை முன் வைக்கிறார். சமதர்மம் கோரும் கட்சி சமதர்ம வழியில் நடப்பதை இது உறுதி செய்யும் என்கிறார். நன்றும் தீதும் பிற தரா வாரா என்கிறார். செய்க செய்க- இயங்கு இயக்கு என்கிறார். கற்க- நிற்க அதற்குத் தக என அறிவுறுத்தி நூலை முடிக்கிறார்.

தோழர் தா.பா 50 ஆண்டுகளுக்கு மேலான கட்சி வாழ்க்கையை அனுசரித்தவர். விரிவான வாசிப்பனுவம் கொண்டவர். அழுத்தமாக கருத்துக்களை சொன்னவர். எந்த வாசிப்பும் இறுதியானதோ முற்று முடிவானதோ இல்லை. எந்த வாசிபிலும் போதாமைகள் இல்லாமல் இடைவெளிகள் இல்லாமல் இருக்காது. வாசிப்பும் அனுபவமும் இல்லாமல் கருத்து கூறுவதைவிட இரண்டும் நிறைந்தவர்கள் கூறுவது பொருட்படுத்த வேண்டியவைகளாக அமைகிறது.

சோவியத் எழுத்துக்களில் பயிற்சி நிறைந்த கம்யூனிஸ்ட்கள் இந்திய வரலாறு, இந்தியவிடுதலைப் போராட்டத்தின் பல பக்கங்கள், காந்தி- நேரு- சுபாஷ்- அம்பேத்கர்- பெரியார்- ஜெயப்பிரகாஷ்- லோகியா- கிருபளானி- நரேந்திரதேவா- விவேகானந்தர்- தாகூர்- ராஜாஜி- இந்திய கம்யூனிஸ்ட் இயக்க ஆவணங்கள்- எழுத்துக்கள் என இன்னும் எந்த அளவு முடியுமோ அவற்றையெல்லாம் கற்க வேண்டியது அவசியமானதாகும். விரிவான கற்றல் நமது ego வை சற்று மட்டுப்படுத்த உதவலாம். அகந்தை அழிப்பது குறித்து மாவோவும் பேசியிருக்கிறார். சொந்த அனுபவத்தில் விரிவாக செல்வது நம் குறித்த எல்லைகளை limitationயை ஓரளவு சரியாக புரிந்துகொள்ள உதவுவதை உணரமுடிந்தது. அவசரப்பட்டு அரைகுறையாக அள்ளித்தெளிக்காமல்

நிதானப்படுத்த உதவுகிறது. எவரையும் முத்திரை குத்தி அதில் சுயரசனை கொள்வதிலிருந்து காப்பாற்றுகிறது.

இந்த அளவில் தா.பா வின் இந்த புத்தகம் பொருட்படுத்தி வாசிக்க வேண்டிய புரிந்து கொள்ளவேண்டிய தேவையை நல்கியுள்ளது.

26-6-2022

ஏப்ரல் 29 2024

75. A Fact Sheet on Communist movement

இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் அனுபவம் என்பது மகத்தானது. பொருட்படுத்த தக்கது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே ‘ விடுதலையுடன் சோசலிச இந்தியா’ என்பதற்கான கனவுடன் அவர்கள் கட்சி அமைத்துக்கொண்டனர்.

ஆங்காங்கே சிறு குழுக்களாக இருந்தபோதிலும் சோவியத் பிரிட்டிஷ் தோழர்கள் உதவியுடன், சில நேரம் மேற்பார்வையுடனும் அவர்கள் தங்கள் சக்திகேற்ப மக்களை திரட்டினர். கம்யூனிசம், சோசலிசம், வர்க்கப்போராட்டம், பூர்ஷ்வா, ஏகாதிபத்தியம், புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், இயக்கவியல், உபரிமதிப்பு , சோவியத் அக்டோபர் புரட்சி போன்ற இந்தியர்களுக்கு அதுவரை பழக்கமாகாத சில புதிய சொல்லாடல்களை அதற்கான விவரிப்புகளை அவர்கள் தரலாயினர். மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் என்கிற பெயர்களையும் அவர்கள் விஸ்தாரமாக்கினர்.

மக்களிடம் செல்வாக்குப் பெற்ற மகத்தான காந்தி, மேற்கின் பெருமைகளை சோசலிச சிந்தனையை அறிந்த நேரு , இவர்களுடன் ஆங்காங்கே புகழ்வாய்ந்த இன்ன பிற காங்கிரஸ் தலைமையை இவர்கள் இளைஞர்களாக எதிர்கொண்டனர். ரஷ்யாவைப் போல் தொழிலாளர் விவாசாயிகள் இன்ன பிற சக்திகளை திரட்டி சோசலிச புரட்சி இந்தியாவில் சாத்தியம் என்கிற நம்பிக்கை அவர்களை ஊக்குவித்து செயல்படவைத்தது. சதி வழக்குகளில் தண்டனைகள் பெற்றனர். உயிர் பலிகளும் கொடுத்தனர். பெரும் படிப்புடன் வந்த சில இளைஞர்கள் சொத்துக்களை இழப்பதைப் பற்றி கவலை கொள்ளாமல் , வேலை சம்பாதித்யம் என்கிற சுயநலம் ஏதுமின்றி சர்வ அர்ப்பணிப்பிற்கும் தங்களை முன் வைத்துக்கொண்டனர்.

தொழிற்சங்கம், விவசாய சங்கம், இளைஞர் மாணவர் அமைப்புகள், கலை இலக்கிய அமைப்புகள், பெண் அமைப்புகள் என வெகுஜன ஸ்தாபன முறைகளை கையாண்டனர். கட்சிக்குள் ஓயாத விவாதங்களை மேற்கொண்டு , தலைமறைவு வாழ்க்கை உட்பட சோதனைகளை செய்துகொண்டனர். பொலிட்ப்யுரோ , மத்திய கமிட்டி அமைத்து புதிய புதிய தலைமை சோதனைகளை party of new type என்கிற லெனினிச வழியில் செய்து பார்த்தனர். பூர்ஷ்வா பெரும்பான்மை ஜனநாயகம் என்பது போலி என நிராகரித்து வந்தனர்.

ஜனநாயக மத்தியத்துவம், மேலிருந்து கீழ் கட்டுவது, விமர்சனம் சுய விமர்சனம் என்கிற அமைப்பு குறித்த சோதனைகளை செய்தனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், காந்தியம் , காங்கிரஸ் நிலைப்பாடுகள் குறித்து தங்களது எதிர் உரையாடல்களையும், கடும் விமர்சன விவாதங்களையும் தங்கள் அணிகள் மத்தியில் கொண்டு சென்றனர். சென்னை ராஜதானியில் குறிப்பாக தமிழகப் பகுதியில் காங்கிரசை மட்டுமல்லாது, நீதி கட்சி-சுயமரியாதை இயக்கம் - திக குறிப்பாக பெரியார் உடன் விவாதங்களை மேற்கொண்டனர்.

வர்க்கம் என்கிற அவர்களது புதிய சொல்லாடலை மக்கள் அறிவதற்கு முன்னர் இந்திய சமூகத்தில் ஆழமாக புரையோடிருந்த சாதி, மதம் சார்ந்த பிரச்சனைகளை அவர்கள் எதிர்கொண்டாலும், சோசலிச சமுதாயம் அவைகளை மூடிவிடும் என்கிற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சாதி மதம் குறித்த உரையாடல்களை வைத்து இயக்கமாக மக்களைத் திரட்டிய முஸ்லிம் லீக், இந்து மகாசபா, ஆர் எஸ் எஸ், அம்பேத்கர், நீதிகட்சி பெரியார் என இவர்கள் எல்லோரும் , அவரவர் அறிந்த தங்களின் நியாயங்களின்படி விடுதலை போராட்டத்தின் தீவிரத்திலிருந்து தள்ளியும், பிரிட்டிஷ் ஆட்சி குறித்த தீவிர விமர்சனங்களின்றியும் இருந்ததை கம்யூனிஸ்ட்கள் விமர்சித்து வந்தனர். காங்கிரசின் எதிர்ப்பும் தீவிரமில்லாமல் சமரச வழியில் இருப்பதாக கம்யூனிஸ்ட்கள் விமர்சித்தனர். ஆயுத வழி போராட்டம் என்பதில் நம்பிக்கை இருந்ததால் பகத்சிங் போன்றவர்களை உயர்த்திப்பிடித்தனர்.

சோவியத்தும் பங்கேற்ற இரண்டாம் உலகப்போர் கால ‘1942 குவிட் இந்தியா ‘ போராட்டத்தில் மேற்கூறிய சக்திகள் எவையும் பங்கேற்கவில்லை. இதில் ராஜாஜியும் இருந்தார். மக்கள் யுத்தம் என்கிற பெயரில் கம்யூனிஸ்ட்களாலும் அப்போராட்டத்திற்கு ஆதரவான நிலை எடுக்கமுடியவில்லை.

இந்தியா பாகிஸ்தான் என்கிற பிரிவினையுடன் பிரிட்டிஷ் ஆட்சி விலகியது. வந்தது விடுதலை தானா என்கிற சந்தேகம் கம்யூனிஸ்ட்களிடம் இருந்தது. ஆட்சி மாற்றம்தான் என்றனர். மாபெரும் காங்கிரஸ் இயக்கம் அதன் தலைவர்கள், காந்தி என உரையாடலை மேற்கொண்ட ஜோஷியின் தலைமை மாற்றப்பட்டு, விடுதலை இந்திய நுழைவுக்காலத்தில் ரணதிவே தலைமை சோதிக்கப்பட்டது. பின்னர் அது ஆந்திர ராஜேஸ்வரராவ்

தலைமையாகி, அஜாய்கோஷ் என தன்னை சற்று ஸ்திரப்படுத்திக்கொண்டது.

தேர்தல் பங்கேற்பு, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் கைவிடுதல், பல கட்சி ஆட்சி முறை ஏற்பு என்கிற நிலைப்பாட்டிற்கு கம்யூனிஸ்ட்கள் நகர்ந்தனர். நேருவின் ஆட்சி, காங்கிரஸ் குறித்த நிலைப்பாட்டில் உட்கட்சி விவாதங்கள் பெருகலாயின. பாராளுமன்ற செயல்பாட்டின் அவசியம்- parliamentarism ஆகியவை குறித்த விவாதங்கள் எழுந்தன.

ஸ்டாலினுக்கு பின்னரான சோவியத் - மாவோ தலைமையிலான சீன வேறுபாடுகள் கம்யூனிஸ்ட்களிடம் மாபெரும் விவாதங்களை கிளப்பின. சீன படையெடுப்பு , நேரு பலவீனமாதல் என்கிற அரசியல் காட்சிகளின்போது , கட்சிக்குள் சூடான விவாதங்கள் நடந்தேறி, தோழமை இற்றுப்போய், கட்சி உடைவை சந்தித்தது.

கம்யூனிஸ்ட்கள் நாளடைவில் சிபிஅய், சிபிஎம் என்கிற இரு பெரும் பிரிவுகளுடன், எம் எல் நக்சல் என்கிற குழுக்களுடன் அவரவர் செல்வாக்கு பகுதியில் செயல்படத் துவங்கினர். புரட்சி குறித்து தனித்தனி திட்ட ஆவணங்களை எழுதிக்கொண்டு, அவரவர் புரிதலே மார்க்சியம், மார்க்சிய லெனினியம் என்றனர். மார்க்சிய லெனினிய மாவோயியம் சரி என்கிற குழுக்கள் தீவிரமாயினர்.

காங்கிரஸ் எதிர்ப்பு, காங்கிரசுடன் இணக்கமாக இந்திய வளர்ச்சியை கட்டுதல் என்ற தேர்தல் வழி சோதனைகள், எமர்ஜென்சி சோதனைகள் நடந்தன. பேயுடன் சேர்ந்தாவது காங்கிரஸை வீழ்த்துவது என்கிற ஜனதா (ஜனசங் உட்பட) சோதனையின் தோல்வியும் உணரப்பட்டது. பதிந்தா, ஜலந்தர் எனக்கூடி இடதுசாரி ஜனநாயக மாற்று என இடதுசாரியை முன்வைத்து, பூர்ஷ்வா கட்சிகள் நிராகரிப்பு என்கிற முழக்கங்கள் எழும்பின.

சோவியத் வீழ்ச்சி நம்பிக்கையிழப்பை தந்தாலும், இந்திய கம்யூனிஸ்ட்கள் சுதாரித்து எழுந்தனர். பல நாடுகளில் கம்யூனிஸ்ட் என்கிற கட்சிப் பெயர் நீக்கம் நடந்தாலும், இங்கு உறுதியாக அந்த வீழ்ச்சியின் எதிர்மறைகளை தைரியமாக கம்யூனிஸ்ட்கள் சந்தித்தனர். சோவியத் வீழ்ச்சி சோசலிச மாடல் ஒன்றின் தோல்வி என்கிற புரிதலை எடுத்துச் சென்றனர்.

இந்திய அரசியல் மண்டல்- கமண்டல் என்கிற சாதிய மதம் சார்ந்த தீவிர சொல்லாடல்கள் பக்கம் நகர்ந்தது. மார்க்ஸ் லெனின் காந்தி நேரு என்கிற பெயர்கள் பின்னுக்கு போகலாயின. அம்பேத்கர் பெரியார் பெயர்கள் தவிர்க்கமுடியாதவையாயின. கமண்டல் அரசியலின்

ஆபத்தை கம்யூனிஸ்ட்கள் தீவிரமாக உணர்ந்தனர். மே.வ, கேரளா, திரிபுரா மாநில ஆட்சி அனுபவங்களை தந்தது. ‘ஏக தேசிய அரசியல் எதிர் வட்டார அரசியல் ‘ என்பது தீவிரமானது. இதில் திமுக தலையாய பங்கையாற்றியது. ஜெயலலிதாவின் அதிமுக வட்டார அரசியலும் தன் சுயமரியாதைக்காக நின்றது.

இந்திரா படுகொலை, ராஜிவ் படுகொலை, coalition politics, குறைந்தபட்ச செயல்திட்டம் என்கிற சோதனைகள் நடந்தன. கம்யூனிஸ்ட்களுக்கும் இந்த சோதனைகளில் dignified role இருந்தன. மத்திய ஆட்சியில் வட்டார கட்சிகளின் பங்கேற்பு நடக்கலாயின. இதில் காங்கிரஸ்- பாஜக என்கிற சோதனைகளை வட்டார கட்சிகள் நடத்திப்பார்த்தன.

வலதுசாரிகள் இந்திய அரசியலில் முதன்முறையாக மத்திய ஆட்சியை வாஜ்பாய் மூலம் சோதித்து தங்களால் முடியும் எனக் காட்டலாயினர். மன்மோகன் சிங் என்கிற soft Govt சோதனைக்குப் பின்னர் ‘மஸ்குலின் பாடிபில்டர்’ ஆட்சி என்கிற குறியீடுகள் ‘வளர்ச்சி’ என்கிற பதத்துடன் பாஜக மோடி ஆட்சியை உருவாக்கின.

விடுதலை இந்திய அரசியல் ‘ராட்சச காங்கிரசை ‘ வீழ்த்துவது என்பதில் துவங்கி ‘அதிராட்சச பாஜகவை ‘ வீழ்த்துவது என்கிற சோதனையில் நுழைந்துள்ளது. காங்கிரசுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்கிற பேச்சுக்கள் நின்றுபோயுள்ளன. கேரளா விதிவிலக்கு.

கமண்டலுக்கு எதிரானது மண்டல்தான் என காங்கிரசும் வட்டார அரசியலின் வெற்றிச் சோதனைகளை அங்கீகரிக்க் வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது. கம்யூனிஸ்ட்களுக்கும் அதுவே பாதை என்கிற தீவிரம் உணரப்பட்டுள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு என்கிற முழக்கம் இந்துத்துவாவிற்கு மாற்றாகியுள்ளது. அதன் விளவுகள் புதிய அனுபவங்களை நாட்டிற்கும், அமைப்புகளுக்கும் தரலாம். பலன் எனில் சாதி சென்சஸ் படி என்பது தீவிரமாகலாம்.

இந்திராவே இந்தியா என்கிற overdoing இன்று மோடி காரண்டி- மோடி மோடி என்கிற பெரும் இரைச்சலாகியுள்ளது. இனியும் மோடி எனில் நாடு தாங்காது என்கிற வேகம் கூடியுள்ளது. கம்யூனிஸ்ட்கள் இந்த பெரும்கூட்டணியில் தங்களுக்கான சிறிய spaceயை வைத்துக்கொண்டு செயலாற்றி வருகின்றனர். வட்டார அரசியல் பின்புலத்தில், தேசிய அடையாளங்களைக் கொண்ட சற்று பலம் மிகுந்த காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் புதிய சோதனைகளுக்காக காத்து நிற்கிறார்கள்.

இந்த 2024 தேர்தலில் பாஜக வீழ வேண்டுமெனில் ‘காங்கிரஸ் எவ்வளவு ‘ என்பது மிக முக்கியமானதாக இருக்கும். ‘வட்டார கட்சிகளின் நெருக்குதல் எவ்வளவு கண்ணியமாக இருக்கும்’ என்பதும் பேசுபொருளாக இருக்கும். மாற்று சோதனை என்பதில் கம்யூனிஸ்ட்கள் பெறப்போகும் அனுபவமும் அவர்களுக்கும், தேசிய அரசியலுக்கும் முக்கியமானவையாக இருக்கும். பார்க்கலாம்... மார்க்ஸ் காந்தி நேரு மீட்சி பெறுவார்களா - அவர்களுக்கான rehabilitation காலத்திற்காக இந்தியா காத்திருக்க வேண்டுமா ? தேர்தல் அரசியலுக்கு அவர்கள் தேறமாட்டார்களா?

29-4-2024 07.30 hrs

sep 30 2016

76. பீனிக்ஸ் தருணம்

The Phoenix Moment: Challenges Confronting the Indian Left by PRAFUL BIDWAI

Praful Bidwai (1949-2015) one of our finest public intellectual, outstanding journalist contributed a lot in almost all the progressive and left journals has authored the above book with all seriousness. I have seen that book first at com D.Gnanaiah's residence some months back and com D Pandiyan repeatedly mentioned about this book in the course of his lecture at Pondicherry last month . I have just read and completed that book fully engrossing myself.

The wrapper of this great book (great labour of Praful) goes like this."The Phoenix Moment seeks to understand how a communist movement, almost unique within the world's capitalist democracies, flourished for so long in India, and what accounts for its initially gradual and then rapid decline. It also asks how far and in what manner the Left has accomplished its goals; whether it could have achieved more and what its future prospects are. Crucially, political analyst Praful Bidwai investigates whether the Left's core agenda of progressive or socialist transformation can yet be reinvented and restored to relevance – either with its own agency or through other forces, formations and initiatives. Given the paucity of analytical literature on the mainstream Left at the national level, Bidwai's timely and deeply insightful book fills a crucial void."

Praful took great pains and narrated in various chapters about the origin, growth, achievements and decline of left specially CPM (also CPI). In the Chapters of WB, Kerala and Tripura one can find fine analysis of Bidwai from various sources like books, research papers, thesis, Govt docs, Party docs etc. He has projected his five axes narratives for what is to be done for rejuvenation of left forces and movement in the coming days. One need not agree with all the suggestions but ignoring many will not help Left to advance. He has with utmost seriousness debated against democratic centralism and advocated for free internal debate and even right to bring the same in the public domain in order to safeguard the organization of the party and left. I think no communist party will accept this suggestion. This book must be read by all English knowing people interested in contemporary Indian politics - especially comrades of left movement should read and react. Though mere criticism will not help but any constructive dialogue should be welcomed and should get its prime importance in left circles without ignoring or showing indifference

The book itself is a voluminous one(586 pages) also ends with voluminous Notes and bibliography even to 100 pages

தமிழில்

பீனிக்ஸ் தருணம்: இந்திய இடதுசாரி எதிர்கொள்ளும் சவால்கள் – ப்ரஃபுல் பிட்வாய்

ப்ரஃபுல் பிட்வாய் (1949–2015) — நம் காலத்தின் சிறந்த பொது அறிவாளிகளில் ஒருவரும், சிறப்பான பத்திரிகையாளரும், பல முன்னேற்ற மற்றும் இடதுசாரி இதழ்களில் பெரும் பங்களிப்பு செய்தவரும் — மிகுந்த தீவிரத்துடன் இந்நூலை எழுதியுள்ளார். சில மாதங்களுக்கு முன்பு தோழர் டி. ஞானையாவின் இல்லத்தில் நான் முதன்முதலில் அந்த நூலைக் கண்டேன்; கடந்த மாதம் புதுச்சேரியில் நடந்த சொற்பொழிவின் போது தோழர் டி. பாண்டியன் தொடர்ந்து இந்த நூலைக் குறிப்பிட்டார். சமீபத்தில் நான் அந்த நூலை முழுமையாக வாசித்து, அதில் ஆழ்ந்து ஈடுபட்டேன்.

இந்தப் பெரும் உழைப்பின் வெளிப்பாடான நூலின் அட்டைப்படம் இவ்வாறு கூறுகிறது:

"பீனிக்ஸ் தருணம் இந்தியாவில், உலகின் முதலாளித்துவ ஜனநாயகங்களில் அரிதாகக் காணப்படும் கம்யூனிஸ்ட் இயக்கம் எவ்வாறு நீண்ட காலம் வளர்ச்சி பெற்றது, பின்னர் எதனால் மெதுவாகவும் பின்னர் வேகமாகவும் வீழ்ச்சி அடைந்தது என்பதை ஆராய்கிறது. இடதுசாரி தனது இலக்குகளை எவ்வளவு அளவிற்கு நிறைவேற்றியது, இன்னும் எதைச் செய்ய முடிந்திருக்குமோ, எதிர்கால வாய்ப்புகள் என்னவோ என்பதையும் கேட்கிறது. முக்கியமாக, அரசியல் விமர்சகர் ப்ரஃபுல் பிட்வாய், இடதுசாரியின் அடிப்படை நோக்கமான முன்னேற்றம் அல்லது சமூகவாத மாற்றம் இன்னும் புதுப்பிக்கப்பட்டு பொருத்தமடைய முடியுமா என்பதை ஆராய்கிறார் — அது தானாகவோ அல்லது பிற சக்திகள், அமைப்புகள், முயற்சிகள் மூலமாகவோ. தேசிய அளவில் பிரதான இடதுசாரி குறித்த பகுப்பாய்வு நூல்கள் குறைவாக உள்ள நிலையில், பிட்வாயின் இந்தச் சரியான நேரத்தில் வெளிவந்த ஆழமான நூல் ஒரு முக்கிய இடைவெளியை நிரப்புகிறது."

ப்ரஃபுல், இடதுசாரியின் (சிறப்பாக சிபிஎம், சிபிஐ) தோற்றம், வளர்ச்சி, சாதனைகள், வீழ்ச்சி ஆகியவற்றை பல்வேறு அத்தியாயங்களில்

விரிவாக விவரித்துள்ளார். மேற்கு வங்காளம், கேரளா, திரிபுரா ஆகிய பகுதிகளைப் பற்றிய அத்தியாயங்களில், நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், முனைவர் பட்ட ஆய்வுகள், அரசு ஆவணங்கள், கட்சி ஆவணங்கள் போன்றவற்றின் அடிப்படையில் அவர் நுணுக்கமான பகுப்பாய்வுகளை வழங்கியுள்ளார். இடதுசாரி இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பிக்க அவர் முன்வைத்துள்ள ஐந்து அச்சுப் பரிந்துரைகள் குறிப்பிடத்தக்கவை. எல்லாவற்றையும் ஏற்க வேண்டிய அவசியமில்லை; ஆனால் பலவற்றை புறக்கணிப்பது இடதுசாரியின் முன்னேற்றத்திற்கு உதவாது. அவர் மிகுந்த தீவிரத்துடன் ஜனநாயக மையப்படுத்தலுக்கு எதிராக விவாதித்து, கட்சியின் அமைப்பை பாதுகாப்பதற்காக உள்நாட்டு சுதந்திரமான விவாதத்தையும், அவற்றை பொதுவெளியில் கொண்டு வருவதற்கான உரிமையையும் வலியுறுத்தியுள்ளார். எந்தக் கம்யூனிஸ்ட் கட்சியும் இதை ஏற்காது என நினைக்கிறேன்.

இந்த நூலை, ஆங்கிலம் அறிந்த அனைவரும் — குறிப்பாக இடதுசாரி இயக்கத்தில் ஈடுபட்ட தோழர்கள் — வாசித்து, தங்கள் கருத்துகளைப் பகிர வேண்டும். வெறும் விமர்சனம் போதாது; ஆனால் எந்தவொரு கட்டுமான உரையாடலும் வரவேற்கப்பட வேண்டும், மேலும் அது இடதுசாரி வட்டாரங்களில் முக்கியத்துவம் பெற வேண்டும்.

இந்த நூல் மிகப் பெரியது (586 பக்கங்கள்) மேலும் 100 பக்கங்களுக்கு மேல் குறிப்புகள் மற்றும் நூற்பட்டியலுடன் நிறைவடைகிறது.

செப் 16 2016

77. இந்திய கம்யூனிசம்- எதிர்காலம்

No Free Left- The Futures of Indian Communism a much talked about book in 2015 amongst left oriented circles. Vijay Prasad , the author is the General editor of Leftword Books, a CPIM publication Division. Vijay a prolific writer in Frontline, Hindu ,PD,Marxist etc. The book is near to 400 pages priced Rs 995 . The first impression I got when reading that book is as if I am reading the compilation of CPM's Reports of various congresses held chronologically- its Political review report, Org report, Political Resoultion. It does not mean that the book contains subject matter beyond that. But in most of the pages, I had that impression. It is self critical to some extent not to the extent of Critical study of Praful Bidwai's Phoneix Moments of the same year 2015. Of course it is easy to analyse write and criticize what happened and easy to draft suggestions and ways for the future, but difficult to organise, monitor and translate.

Down below some excerpts highlighted by me is given…

No Free Left: The Futures of Indian Communism (Prashad, Vijay)

Excerpts from that Book

The return of the right comes as the Left suffers a historic defeat at the 2014 polls. The Communist parties takeup less room in parliament, as theMaoists in the forests seem subdued.

The BJP is programmatically committed to a tonic of cultural suffocation,economic strangulation and political authoritarianism

Nehru's own dance with socialism seemed a youthful dalliance, as he hardened the relationship between the new Indian state and its agrarian and industrial bourgeoisie.

Currently there is no major work on the history of Indian socialism – a signperhaps of the lack of interest in a history of these parties that might seem embarrassing to their present incarnations.A history of communism cannot be written, as Gramsci put it, without writing a "general history of a country.".This book is a culmination of those years and my close study andengagement with the communist movement.

Perennial discussions about the merger of the CPI and the CPI-M remain on thecards – almost since the split of the party in 1964.But the basis of the new .Left Unity is now not electoral as much as political – namely, to work together to germinate and develop struggles against the rapacious Indian ruling class.

The Left, with its several millionmembers, will not dissolve into the cracks of Indian capitalism as long as capitalism's contradictions remain.The Left has to deepen its

role in these sorts of "social" fights, because it is in these arenas that broad questions of rural power are being contested

A weakened trade union movement meant of course a weakened Left.A politics of the

slum lands is essential for the Left to develop. As of now, the Left operates in these..Workers' movements and power might no longer grow from the factory to the community; it might work the other way round.

Fights for the rights of women are as important as fights for a higher minimum wage, as are fights for national self- determination and for the rights of refugees to dignity. These are equivalent fights of members of the working class toward the reinvigoration and consolidation of social movements

Building a Left is not the same as conducting a seminar. It requires a great deal of courage to confront the congealed institutions of Power, property and Privilege. Errors shall be natural, as will a loss of hope.

In 1969, the British historian Eric Hobsbawm suggested, "Each Communist Party was the child of the marriage of two ill-assorted partners, a national left and the October Revolution."

the new society "can only be built by the revolutionary action and engagement of the workers and popular masses, never without their engagement and much less against their will."new programme of the CPI-M, "The consciousness will come from the actual experience of the movement and the struggles conducted and not by the abstract slogan of socialism."

"The tomorrow in today is alive," wrote Ernst Bloch.[14] But it has to be excavated.

That is the work of Communism..This is what is. This is not what we want. But this is what is. What we want has to be built. It requires hard work and patience – guided by a theory.

1944 Bombay Plan, formulated under the eagle eyes of the big bourgeoisie – G. D. Birla, J. R. D. Tata, Dr. John Matthai, Shri Ram, Thakurdas and Kasturbhai Lalbhai.had a simple objective – to ensure that the new Indian state would protect the interests of the big bourgeoisie. It enjoined the state to provide a suitable atmosphere for industrial development.

The great defender of private property in the parliament was the BJP's ancestral party, the Jana Sangh (and its leader Syama Prasad Mookerjee who warned that the government could not treat the private property defending Constitution as a "scrap of paper

in 1951, twenty family houses controlled 29 per cent of total private capital, by the end of the decade their share rose to 33 per cent.[14] Subimal Dutt's Industrial Licensing Policy Inquiry Committee (1969) revealed an extraordinary fact – that the License Raj set up to plan the economy had resulted in full-scale concentration of wealth for

a small percent of the population.Fixed capital formation in the public sector, for example, grew at an annual rate of 11.3 per cent between 1950-51 to 1965-66, but dropped to 5.5 per cent between 1966-67 (at 1970-71 prices).[20] Joined by the oil crisis of the 1970s and unreconstructed

government's reaction to the 1.8 million rail workers strike in 1974 revealed something of its class bias, despite its language of "socialism." On May 1, 1974, the government arrested twenty thousand workers and raided the homes of twenty- five thousand others.

The Emergency came with the bells and whistles of "socialism," but its actual policies hastened the transition of Indian capital from the Bombay Plan to the era of liberalisation.The Emergency gave the Indian capitalist class its first taste of liberalization.

the Tatas owned the Statesman, the Birlas owned the Hindustan Times, the Camas owned the Bombay Chronicle, while the Sahu Jain group owned the Times of India. These papers set the agenda of the day, mirrored in the presses of other Indian languages. During the colonial era, the main Indian nationalist news service – the Free Press of India – was "run by a coalition of Bombay industrialists and journalists,".Industrialist Ramnath Goenka, owner of the Indian Express, had clear sympathies with the Jana Sangh and the RSS.industrialist K. K. Birla (close friend of Sanjay Gandhi and owner of the Hindustan Times).Times of India, which had been taken into government control in 1964 when Shanti Prasad Jain was found guilty of selling newsprint on the black market, was handed back to his son Ashok in 1976 – during the Emergency.Ashok Jain's sons Samir and Vineet cavalierly scoffed at older ideas of media integrity, saying, as Vineet did in 2012, "We are not in the newspaper business, we are in the advertising business."Rhetoric of a "free press" abounds, but the evidence is sparse. The paralytic hand of money dips into the pockets of the media, inventing new words – advertorial – coined to justify the reduction of the newspaper (and television) to the promotion of this or that corporate agenda

the "captains of industry" supported the Congress and championed the Bombay Plan consensus from the 1920s to the 1970s. Tata flying an aircraft, Birla conferring with Gandhi – this was the image of the big bourgeoisie

Dr. Singh's IMF-induced shock therapy of 1991 opened the floodgates to a new cultural dispensation, which broke the back of the old socialist consensus, allowing the Indian elite to represent their desires through their own media as the desires of the Indian public

Neoliberal policy not only drives inequality. It also produces aspirations.even day labourers believe that consumption of a certain kind is the key marker of social mobility.India's ruling class foisted its ideas for the country as the ideas of India.

The upper middle class (even aristocratic) Hindu family emerges in these films as the anchor of Indian modernity. Amitabh Bachchan's slide from Vijay, the angry young

working-class man of Deewar (1975), to Yashvardhan Raichand, the rich feudal businessman of Kabhi Khushi (2001), illustrates the shift, as does Hema Malini's move from the feminist critique of male desire in Seeta aur Geeta (1972) to her victory in the 2014 Lok Sabha seat for Mathura as a "gopi" of Krishna.[46] What is melodramatic and sentimental in the films is hectoring in the evening television serials, where family discipline is tirelessly and tenuously maintained by the mother-in-law, the husband and God – on the body of the woman

The culture of consumerism and Hindutva has slowly absorbed the space of the culture of the national movement, with its implications of national solidarity and cultural diversity.one hand the nationalism of tandoori pizza and on the other of a saffron coloured Mercedes Benz. Kyunki Saas, the most popular on Indian television, starred Smriti Irani, who joined the BJP, ran against Rahul Gandhi in Amethi and then earned a cabinet berth in Modi's

1970, the Shiv Sena assassinated Krishna Desai, CPI Member of the Maharashtra Assembly, and a popular leader of the textile workers. This was the first political assassination in Bombay since 1947.

Religion as a social force has always had an important role in India.the turn to "religion" was not itself about doctrine, but about the politics of electoral "vote banks."The "soft Hindutva" of the film industry came alongside the "hard Hindutva" of the RSS organizations.

India's Prime Minister P. V. Narasimha Rao recognized that the liberalisation agenda would not be able to proceed full-throttle without a new rapprochement with the United States on a wide range of strategic issues, including a new entente with Israel.The Indian government recognized the stateof Israel in January 1992,India was willing to sacrifice its own ideological and institutional commitments for a narrative of the world favourable to Washington.

The Communist challenge got under the skin of the new pro-imperialist group in the Indian establishment.The BJP would govern without any Communist influence, and was therefore a better partner.

The mass character of Gandhianism nullified the politics from above and the politics from underground, creating the necessary space for the creation of a politics from below.The youth who became communists saw him as the author of the mass upsurge, but they did not take kindly to his every political move.The popular energy unleashed in the Gandhian moment is not to be underestimated. But, to be clear, Gandhi was not the initiator of all these movements, but a beneficiary of them.

Anxiety over the relationship between subordinate castes and Hinduism moved Gandhi to place temple entry movements at the forefront.The two streams of Gandhi and Ambedkar fed into the same wide river of anti-colonial nationalism, with the two diverging on their vision for Indian society

The abrupt entry of the working class into mass politics, outside the control of traditional hierarchies disturbed Gandhi.“Class war is foreign to the essential genius of India which is capable of evolving a form of communism broad-based on the fundamental rights of all and equal justice to all.Gandhi recognized the problems faced by labour, but discouraged strikes or violence. He went on a fast, pleading with his friends among the mill owners to be the “trustees” of the wealth produced by the factories.Gandhi’s theories of trusteeship did not always sit well, but it was better in the eyes of the barons of the FICCI than outright expropriation

For the time being we have the ear of the masses because we voice their sentiments. The masses are by no means so foolish or unintelligent as we sometimes imagine. They often perceive things with their intuition, which we ourselves fail to see with our intellect. But whilst the masses know what they want, they often do not know how to express their wants and, less often, how to get what they want. Herein comes the use of leadership, and disastrous results can easily follow a bad, hasty, or what is worse, selfish lead

In 1942, for instance, G. D. Birla and J. R. D. Tata, two of Gandhi’s financiers, joined others in signing a memorandum to the Viceroy against the subcontinent-wide Quit India movement, “We are all businessmen and therefore we need hardly to point out that our interest lies in peace, harmony, goodwill and order throughout the country.”

What is remarkable about the Gandhian moment is that it was able to absorb, with different capillarity, both the business class and the communists.A rich debate among the communists over how to characterize Gandhi began at the inception of the movement, and would linger on long after Gandhi died: was he the fig leaf of an emergent Indian bourgeoisie, unwilling to make significant concessions to the workers, and only in alliance under the flag of nationalism out of its own convenience, or was Gandhi a genuine mass leader who had yoked the business class against its will for a transition of colonial India into some kind of socialist dispensation? Twenty-two year old S. A. Dange published an extended pamphlet in 1921 entitled Gandhi vs. Lenin, which while sympathetic to Gandhi came out in favourhat of methods to work out the revolution in Society.” Singaravelu, E. M. S. Namboodiripad and others straddled the fine line between nationalism and socialism, holding fast to the latter while in the Gandhian moment.[41] In 1922, Singaravelu and Roy corresponded about the “methods” of Gandhianism – with Roy averse to the non-cooperation method (which he saw as “petty bourgeois) and Singaravelu as aware of the need “to concentrate on paralyzing the bureaucracy wherever possible and that and that alone.”[42]

The strategic and tactical divergences had to be naturally debated amongst the communists – although it would have been foolhardy to sit out…Gandhi’s compromises with Viceroy Irwin in 1931, and the murder of Bhagat Singh by the British with no condemnation from Gandhi and the Congress leadership threatened the unity of the Congress.When Nehru took the reins of the Congress in 1936, the

industrialists worried that he would take the party toward socialism. Thakurdas wrote to Birla, “The way it strikes me is that Jawaharlalji meant to go the whole hog, but evidently, he found resistance in the opposition which he encountered from what I would call the ‘Mahatmaji’ group.”

The Socialist Party broke with the Congress for the 1951-52 elections, winning only twelve seats – this was its death-knell. JP and Patwardhan withdrew from politics, Ashok Mehta joined the Congress,The Praja Socialist Party (PSP) that Lohia founded in 1952 had a decidedly north Indian look – Lohia’s insistence on Hindi as the national language alienated many of those who had been part of the anti-Hindi agitation.JP became the pole around which opposition to Indira Gandhi’s Congress grew in the 1970s. When the Bihar students launched their strike on March 18, 1974, they turned to JP as their leader.

The socialists, namely JP, welcomed the RSS to the center of political life, giving it legitimacy and authority where it had none beforehand In 1959, Lohia’s Socialist Party put caste inequality to the front, calling for at least sixty per cent reservation in government administration.Left questioned the centrality of caste as the toxic element in Indian society. Like Lohia, E. M. S. Namboodiripad pointed to the “two-front battle” that the Left had to wage against caste and class inequality..When power came to the socialists, wrote Lohia’s colleague Madhu Limaye, they “broke up into caste groups.”

Socialism’s entry into caste politics ended not with a challenge to caste oppression but to the enhancement of the position of certain OBCs, notably those who were in many areas dominant rural castes.

By 1944, Periyar had developed a coherent Dravidian ideology suited to the Dravidar Kazhagam (DK), which he founded. It was committed to an end to social obscurantism, including untouchability, and to social reform. Here the non-Brahmin movement had done politically what the Mandal Commission sought to do administratively. Communist leader P. Ramamurti said of the Dravida Nadu demand, “The industrialists of Tamil Nadu fully utilized the separatist propaganda of the Dravida Munnetra Kazhagam and financed it.”

“Democracy,” in these times of inequality and financial crisis, has come to mean something quite different than in its more commonplace assumption. If there is no agenda to improve the well-being of people, it becomes dangerous to allow them to determine..In the name of democracy, most institutions are run as technocracies – experts of finance and of governance who are committed to the current world order (that produced inequality and financial crises) run the institutions absent robust checks and balances of the general public.

The grammar of street violence is essential to Banerjee’s form of demagogic populism and free-market, authoritarian populism.What makes this kind of politics demagogic populism is that it appeals to the worst instincts of a disaggregated population.

The political class refuses to engage with what seems to actually concern the people (joblessness) and finds a way to insinuate that their concerns can be addressed by jingoism – the 56-inch chest

Argument is considered a waste of time, while action is valued. Democracy is given lip service but its constraints are mocked.The long and powerful arm of the law, short of outright military dictatorship, can smash workers' protests, political protests and arrest critical journalists of sedition.Modi is larger than life. He is beyond challenge. The opposition is demolished. The grammar of politics is Epic, with Modi from the pantheon of Vedic gods.

Since the CPI-M's 15th Congress (1995), the CPI-M has publically acknowledged the problem of factionalism in Kerala, which it defined in a 1996 document and again in 2010 as "careerism..individualism and absence of collective functioning."

The Left's political slogans did not connect with the youth. To these young people, at times the communist parties seemed not so different from the bourgeois parties. If they were to cross over to a social transformative political platform, they would like it to be one of hope and not of despair, one of possibility and not of defeat..."weakness in translating the mass struggles and movements" has led to vulnerability in the Communists' political influence.

It is from the energy of these mass struggles that Indian Communism could be vital once more – affirming its allegiance to mass agitation and popular power.Communism, unlike other movements, emerges into the world with a commitment for transformation. Unlike movements of reform, Communism creates entire new platforms, develops a new ethos – all to maintain the commitment of those who join the movement or who are allied to it.

Nothing is easy for communism, despite the millennial rhetoric – the deep and abiding hope that a new world can be founded out of the dross of the present.

In 1957, the CPI won the State Assembly election in Kerala, but was only able to govern the state for twenty-eight months. The communist government's attempt to conduct land reforms and to bring some rational procedures to the education ministry was contested by the old social classes and religious institutions.Disillusionment with the democratic institutions remained high in the 1960s, leading at its end to the rise of the Maoist movement out of the CPI-M.

One of the great tragedies of the export of Maoism is that the Maoists in various parts of the world took Mao's final, and contingent, lessons as universal laws. Concepts such as "comprador bourgeoisie," "protracted..One of the great weaknesses of Indian Maoism, as it has been for Maoism elsewhere, is its remarkably poor theorization of state power and geopolitics.

Balagopal clearly understood that the Maoist presence in India's heartland is a consequence of the failure of India's state and society to attend to the grave

inequalities in the country. That was the author of the crisis. He was also not naïve about the use of violence, Nonetheless, Balagopal had a front-seat view of the degeneration of the Maoists to "medieval forms of violence."[86] By the late 1990s, Balagopal had become a clear-sighted critic of the lack of democracy in the armed movement, and the involution of its politics

Communist time is not the time of revolution alone – the excitement of the insurrection or even the demonstration, the heart beating fast in the chest, the bourgeoisie on the run. Revolutionary time is rare and haunting – it is when History speeds up and what one has wished for comes to pass.Communist time is measured in tea-cups and cigarettes, in party discussions over documents and door-to-door campaigns. Communist time is the time of eternal and circular effort. Days can pass by that resemble other days. The feeling of déjà vu can occur often in conversations – how often we have discussed this or argued over that?Victories come at a very slow pace.

Confidence is built up amongst people who have a general understanding of their situation but whose sense of historical agency has been dulled by the pressure of ruling class culture and power.The time of communism, the long-term and patient work of building the bases of working-class power, will take a while. There are no shortcuts to the time of revolution, not even in the barrel of a gun.The communist movement, after a brief leftward turn against the democratic institutions, came to terms with their social reality.The Communists adopted the view that multi-party democracy had to be utilized for now."We must be wherever the people are and would like us to be."

Governance for the Left in India came at the state level – not at the central level. Each of the state governments that have been ruled by the Left (Kerala, Tripura and West Bengal) has their policy space circumscribed by central government.As economist Prabhat Patnaik put it, "If socialism in one country has its problems, then so too does redistributionism in one province of one country, especially a country developing along capitalist lines

Left governments in Kerala struggled to produce a proletarian culture in its relationship to industry. With few state resources, Kerala was never able to develop a robust public sector. It had to rely upon private monopoly capital for large enterprises (such as the Birla-owned Gwalior Rayons), and it pushed to create mass cooperatives in such industries as coir, handloom and toddy.[152] Capital simply did not appreciate Kerala's rational labour market. "In the north, management is concerned with "the socialist significance of trade- union and parliamentary activity is that it prepares the proletariat – that is, the subjective factor of the socialist transformation – for the task of realizing socialism."

The Left Front government was simply not able to drive an industrial policy – neither one that mimicked the capitalist path nor along an alternative axis. There was simply no coherent industrial policy till 1994.Chief Minister Jyoti Basu's attempt in the 1980s to woo private capital did not succeed. A long, unbroken period in government

attracted those who sought power, and weighed down the value of political struggle. Administrative behavior entered the party apparatus, with agitation now an instrument of government rather than the government as an “instrument of struggle” (the phrase that reoccurs in communist literature).

Nonetheless, social change did not depart from the agenda.we have no ‘model’ in front of us to emulate and follow. It will indeed be a mistake to follow a specific model. We have closely observed and seen the changes in and the development of the Chinese economy and the Vietnamese economy. We are trying to ascertain facts there. In Latin America, a kind of new leftism has appeared and changes have occurred.Singur turned out to be a disaster .for..Fragmentation of holdings meant that there were far more people holding the land that the Tatas wanted to acquire (in Gujarat, the same amount of land would have been held by a third or less of owners).The Left Front government had hoped to set up the chemical hub as part of the Haldia Development Authority in Nandigram, about 150 kilometers east of Calcutta. Nandigram is an economically weak region,Then the local CPI-M leader, Lakshman Seth, unnecessarily fanned the flames of distress amongst the farmers.Congress, the Congress party, the Socialist Unity Centre of India, and the Maoists as well as some local activists formed the Bhumi Ucched Pratirodh Committee (BUPC). Violence between the BUPC-Trinamul and the CPI-M cadre escalated

The bourgeoisie no longer has myths. It has become incredulous, skeptical, nihilist. The reborn liberal myth aged too much. The proletariat has a myth: the social revolution. It moves towards that myth with a passionate and active faith. The bourgeoisie denies; the proletariat affirms. The bourgeois intellectuals entertain themselves with a rationalist critique of the method, the theory, revolutionary technique. What misunderstanding! The strength of revolutionaries is not in their science; it is in their faith, their passion, in their will. It is a religious, mystical, spiritual power. It is the force of myth.it is this that Mariátegui says should be imported into communism. Precisely what the communists have to invoke is the myth of the revolution, its inevitability and its justice.

social identities had to be subsumed under a unifying class agenda. On the other hand, this was not a politics that allowed the social identities to remain unchallenged. One came to the fight as a dalit woman or an upper caste woman, but would leave as a socialist.

University of Delhi in 1998, Aijaz Ahmad introduced the phrase “culture of cruelty” into the discussion of the great moving right show: So, when I use the phrase “cultures of cruelty” I mean something more than professional politicians, more than agencies of the state on the ground, more even than organised communalism; I mean a much wider web of social sanctions in which one kind of violence can be tolerated all the more because many other kinds of violence are tolerated anyway. Dowry deaths do facilitate the burning of women out of communal motivations, and, together, these

two kinds of violences do contribute to the making of a more generalised culture of cruelty as well as a more generalized ethical numbness toward cruelty as such

Neither can art do its work alone, nor political movements. They require each other. Art alludes to reality; it can draw our attention to certain problems, even to provide understanding to them. But art "cannot define the means which will make it possible to remedy those effects," cautioned the communist philosopher Louis Althusser

Cultures of cruelty cannot be tackled by cultural activism alone.Respecting women is about respecting their choice – even the choice to say NO. Women are able, rational beings – by the virtue of being humans, and anyone who thinks they respect women must first acknowledge their ability to make decisions for themselves.

Currently, over one million people are card-carrying members of the CPI-M, while sixty one million people are in the party's mass fronts – All India Kisan Sabha (22 million), Democratic Youth Federation of India (14 million), All India Democratic Women's Association (11 million), All-India Agricultural Workers' Union (5 million), Centre for Indian Trade Unions (5 million). The numbers of people in the CPI, the Revolutionary Socialist Party, the Forward Bloc, the CPI-ML, and the SUCI only add to these figures. In a country of 1.3 billion, this number is small, and yet it is substantial.

The starkest point regarded "organizational atrophy," which led to a "failure to initiate struggles and develop movements. Stereotyped methods of functioning and the inability to maintain live links with the people are problems."

What the Left considers essential is a mass base. A politics of transformation is not to be won simply by better arguments. A hundred policy documents with more rational ways to organize the state or to craft a more just budget will not make an impact unless there is the force of political power behind them.Correct ideas are never sufficient; they are not believed or enacted simply because they are right. They become the ideas of our time only when they are wielded by those who come to believe in their own power, who use it to struggle through the institutions and to consolidate that power.

To defend the Marxist-Leninist approach indicates the party's assessment that the social relations of the present – founded on private property – would not surrender willingly. If this is the case, then the party needs to overthrow the old social relations by democratic and disciplined struggle – it will have to inaugurate a "proletarian dictatorship," where the workers, as the majority, will rule in their interest.

Socialism cannot be constrained by the timid imagination of liberalism. It dreams more, it imagines greater times ahead. It is driven by the self-emancipation of the working-class.Capitalism dances between a major contradiction: between social production and private property.

. No Free Left is a "live work," an invitation to debate and discussion.

மார்ச் 1 2021

78. தொழிலாளி வர்க்கம் மாற்றுமா?

Thus Viewed Com Michel Yates of Left Journal Monthly Review, New york in his Book 'Can the working class change the world'

Struggles must be undertaken and coordinated against employers, the state, the mainstream media, those who run our schools, the police, the prison system, against racism, against patriarchy, against the destruction of the environment, against mega-church evangelicals (that is mega religious institutions- RP), against the rise of fascism, against imperialism, and many other persons and institutions. Only such an all-out offensive has any chance of consigning capitalism to history's dustbin. Only this can give us hope of building a fundamentally new society, one with grassroots democracy, economic planning, a sustainable environment, meaningful work, and substantive equality in as many aspects of life as possible.

If we assume that a necessary condition to be included in the working class is wage labor, we will miss hundreds of millions who are not paid wages but labor in such a way that capital benefits.

CAPITALISM IS A HEGEMONIC social order. Capital seeks to dominate as many aspects of our lives as possible and to control every institution, from state to schools. Very little escapes its domination, including our thoughts. Its two essential underpinnings are exploitation of wage labor and the expropriation of nature, the non-market labor of women, and the bodies of black and other minority people. A complex set of structures supports these. Is it possible for capital's chief antagonist, the working class, to combat and defeat it? We shall see.

தமிழில் ஏ அய்

தோழர் மைக்கேல் யேட்ஸ் (Monthly Review, நியூயார்க்) தனது நூல் “Can the Working Class Change the World” இல்

பணியாளர்கள், அரசு, பிரதான ஊடகங்கள், கல்வி நிறுவனங்களை நடத்துவோர், காவல்துறை, சிறைச்சாலை அமைப்பு, இனவெறி, ஆணாதிக்கம், சுற்றுச்சூழல் அழிவு, மிகப்பெரிய மத நிறுவனங்கள், பாசிசத்தின் எழுச்சி, பேரரசு வாதம் மற்றும் பல்வேறு நபர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இவ்வாறான

முழுமையான தாக்குதலே முதலாளித்துவத்தை வரலாற்றின் குப்பைத்தொட்டியில் தள்ளும் வாய்ப்பை உருவாக்கும். இதுவே அடிப்படையில் புதிய சமூகத்தை — அடித்தள ஜனநாயகம், பொருளாதாரத் திட்டமிடல், நிலையான சுற்றுச்சூழல், அர்த்தமுள்ள வேலை, வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் உண்மையான சமத்துவம் ஆகியவற்றைக் கொண்ட சமூகத்தை — கட்டியெழுப்பும் நம்பிக்கையை அளிக்கும்.

பணியாளர் வர்க்கத்தில் சேர்வதற்கான அவசியமான நிபந்தனை ஊதியம் பெறும் தொழிலாளராக இருக்க வேண்டும் என்று நாம் கருதினால், ஊதியம் பெறாதிருந்தாலும், முதலாளித்துவத்திற்கு உழைப்பின் மூலம் பயன் அளிக்கும் கோடிக்கணக்கான மக்களை நாம் தவறவிடுவோம்.

முதலாளித்துவம் ஒரு ஆதிக்கமான சமூக ஒழுங்காகும். அது நம் வாழ்க்கையின் பெரும்பாலான அம்சங்களை ஆட்கொள்ள முயல்கிறது; அரசாங்கம் முதல் பள்ளிகள் வரை ஒவ்வொரு நிறுவனத்தையும் கட்டுப்படுத்த விரும்புகிறது. நம் சிந்தனைகள் கூட அதன் பிடியிலிருந்து தப்புவதில்லை. அதன் இரண்டு அடிப்படைத் தூண்கள்: ஊதியம் பெறும் தொழிலாளர்களின் சுரண்டல், இயற்கையின் பறிமுதல், பெண்களின் சந்தை சாராத உழைப்பு, கருப்பர்கள் மற்றும் பிற சிறுபான்மை மக்களின் உடல்களின் சுரண்டல். இவற்றை ஆதரிக்கும் சிக்கலான அமைப்புகள் உள்ளன. இதற்கு எதிரான பிரதான எதிரி — பணியாளர் வர்க்கம் — இதனை எதிர்த்து வெல்ல முடியுமா? அதை நாம் காணப்போகிறோம்.

நவ 4 2019

79. 2019க்கு பின்னரான இடது அரசியல்

Excerpts from the Mainstream article Nov 4 2019

Left Politics in Post-2019 India: Task of Creating a New United Front by Pratip Chattopadhyay

Post-2019 parliamentary politics in India is marked by the rise of the fascist, Rightist and reactionary political force of Bharatiya Janata Party under the leadership of the Narendra Modia and Amit Shah. From 2014 onwards considerable effort was there in the Central Government's policies and programmes to erase the Indian past and a new reading of Indian history reflecting intolerance. In this context the following points can be considered seriously for a new Left politics in the new Indian milieu

(a) To create wider Left unity in real terms.apart from daily issue-based unity what is needed is electoral unity. For this to achieve, the CPI and CPI-M can come together as a single party like they were prior to the 1964 position..

Theoretically broader Left unity in India can be achieved by following the Leninist pragmatic position the way he tried to balance revolutionary zeal and administration by giving more credence to ground realities and contexts than to Marxist theory for which position in his later days he was sidelined within the Communist Party of the Soviet Union itself. For post-colonial nation-states Leninist position is the correct Left political position.

(b) There is an urgent need for re-evaluation by Left political parties of the contributions of Mahatma Gandhi and Jawaharlal Nehru in Indian political history of mass-movement and parlia-mentary democratic governance. Gandhi symbolised non-violence, tolerance and firmness in the goal of the movement while Nehru epitomised the non-capitalist non-corporate path of economic development.

This Gandhi-Nehru' model will help the Left political parties to embrace the essence of Indianness of Indian politics and create an alternative secular modern Indian politics

(C) ....Left political parties must unitedly take upon themselves to lead a nationwide electorally pragmatic oppositional secular alliance on the basis of a one seat-one candidate formula.

Dange-line' in 1971 Dange's famous remark was between Indira Gandhi and Jana Sangh, I prefer Indira . However in standard mainstream Left political space, Dange-line received infamy as a model of Congress stooge-ism....Comrade Dange never compromised his class position even while supporting some policy- positions of the Indira Government. In a debate on the garibi hatao' slogan of Indira Gandhi, in

Parliament, Dange remarked Don’t call me poor, call me by the name of my class—working class’

In contemporary Modified Indian politics where a concerted effort to re-create Indian post-independence history is in the offing, Dange’s writings, speeches and political strategy should be the basis of an alternative course of action for the Left political parties. In order to re-emerge in Indian politics, the Left political parties must come away from the classical smashing the state apparatus’ model with the aim of immediate political power capture

it is necessary to arouse the interest of the Left political parties about Gandhian temperament (orientation for a truthful nonviolent constructive mass movement) and Nehruvian governing model (parliamentary democratic dialogue-based public sector economy-

Therefore the assemblage of ideas, programmes and courses of action of the Lenin-Gandh-Nehru trio must be the basis of the political position for the Left political parties. Comrade Dange in his life and work had successfully assembled the trio’s vision and mission. So to re-emerge in a new fashion the simple path for the Left political parties is to accept and celebrate Dange’s political strategy to formulate an anti-fascist (anti-BJP) broad people’s-front from a class perspective following Georgi Dimitrov′s model

The reality of Indian politics is that anti-Congressism and anti-BJPism cannot go side by side at the same time. As history identifies ideologically and politically the BJP as the main enemy (instead of ideologically identifying the BJP and Congress as dual enemies), the task of Left political parties is to dismantle the present Left Front and build a new United Front with the support of the Indian National Congress and other secular political forces (in the true spirit of that immortal anti-fascist crusader, Georgi Dimtrov) which will emerge as UPA-III and fruitfully challenge the Right reactionary BJP’s politics in contemporary India

(The author is an Assistant Professor, Department of Political Science, University of Kalyani (West Bengal)

தமிழில் ஏ அய்

2019க்குப் பிந்தைய இந்திய இடதுசாரி அரசியல்: புதிய ஐக்கிய முன்னணி உருவாக்கும் பணி – ப்ரதீப் சட்டோபாத்யாய்

2019க்குப் பிந்தைய பாராளுமன்ற அரசியலில், நரேந்திர மோடி மற்றும் அமித் ஷா தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியின் பாசிச, வலதுசாரி, எதிர்வினை அரசியல் சக்தியின் எழுச்சி குறிப்பிடத்தக்கது. 2014 முதல் மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில்

இந்தியாவின் கடந்தகாலத்தை அழித்து, புதிய வரலாற்றுப் பார்வையை உருவாக்கும் முயற்சி, அதில் சகிப்புத்தன்மையின்மையை பிரதிபலித்தது. இந்தச் சூழலில் புதிய இந்திய அரசியல் சூழலில் இடதுசாரி அரசியலுக்கான சில முக்கிய அம்சங்கள்:

(a) பரந்த இடதுசாரி ஒற்றுமையை உருவாக்குதல் அவசியம். தினசரி பிரச்சினை அடிப்படையிலான ஒற்றுமையைத் தாண்டி, தேர்தல் ஒற்றுமை தேவைப்படுகிறது. இதற்காக, சிபிஐ மற்றும் சிபிஎம் 1964க்கு முன் இருந்தபடி ஒரே கட்சியாக இணைந்து செயல்படலாம்.

லெனின் தனது காலத்தில் புரட்சிகர உற்சாகத்தையும் நிர்வாகத் தேவைகளையும் சமநிலைப்படுத்திய நடைமுறை நிலைப்பாடு, மார்க்சியக் கோட்பாட்டை விட நிலைமைகளுக்கும் சூழல்களுக்கும் முக்கியத்துவம் அளித்தது. பிந்தைய காலனித்துவ நாடுகளுக்கு லெனினிய நிலைப்பாடு சரியான இடதுசாரி அரசியல் நிலைப்பாடாகும்.

(b) இடதுசாரி கட்சிகள், மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேருவின் பங்களிப்புகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். காந்தி அஹிம்சை, சகிப்புத்தன்மை, இலக்கில் உறுதியை பிரதிபலித்தார்; நேரு முதலாளித்துவமற்ற, நிறுவனமற்ற பொருளாதார வளர்ச்சி பாதையை எடுத்துக்காட்டினார்.

இந்த காந்தி-நேரு மாதிரி, இந்திய அரசியலின் "இந்தியத்தன்மையை" இடதுசாரி கட்சிகள் தழுவி, மாற்று மதச்சார்பற்ற நவீன இந்திய அரசியலை உருவாக்க உதவும்.

(c) இடதுசாரி கட்சிகள், "ஒரு தொகுதி – ஒரு வேட்பாளர்" என்ற நடைமுறை அடிப்படையில், நாடு முழுவதும் மதச்சார்பற்ற எதிர்க்கட்சித் தேர்தல் கூட்டணியை வழிநடத்த வேண்டும்.

1971இல் டாங்கே கூறிய புகழ்பெற்ற கருத்து: “இந்திரா காந்தி மற்றும் ஜனசங்கம் இடையே, நான் இந்திராவை விரும்புகிறேன்.” — இது இடதுசாரி வட்டாரங்களில் "காங்கிரஸ் ஆதரவாளர்" என்ற விமர்சனத்துக்கு உள்ளானது. ஆனால் டாங்கே தனது வர்க்க நிலைப்பாட்டை ஒருபோதும் விட்டுவிடவில்லை. “என்னை ஏழை என்று அழைக்காதீர்கள், என் வர்க்கத்தின் பெயரால் அழைக்கவும் — பணியாளர் வர்க்கம்” என்று அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

இன்றைய "மோடிபடுத்தப்பட்ட" இந்திய அரசியலில், டாங்கேவின் எழுத்துகள், உரைகள், அரசியல் யுக்திகள் இடதுசாரி கட்சிகளுக்கு மாற்று பாதையை வழங்குகின்றன.

இடதுசாரி கட்சிகள், "அரசு இயந்திரத்தை உடைத்தொழிக்கும்" பாரம்பரிய மாதிரியை விட்டு விலகி, உடனடி அரசியல் அதிகாரப் பிடிப்பை நோக்காமல், காந்திய மனப்பாங்கு (உண்மையான அஹிம்சை அடிப்படையிலான மக்கள் இயக்கம்) மற்றும் நேருவிய ஆட்சி மாதிரி (பாராளுமன்ற ஜனநாயக உரையாடல் அடிப்படையிலான பொது துறை பொருளாதாரம்) ஆகியவற்றை தழுவ வேண்டும்.

லெனின்–காந்தி–நேரு மூவரின் சிந்தனைகள், திட்டங்கள், நடவடிக்கைகள் இடதுசாரி கட்சிகளின் அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையாக இருக்க வேண்டும். தோழர் டாங்கே தனது வாழ்நாளில் இந்த மூவரின் பார்வையையும் பணி நோக்கையும் ஒருங்கிணைத்தார். ஆகவே, புதிய வடிவில் மீண்டும் எழுவதற்கான எளிய பாதை, டாங்கேவின் அரசியல் யுக்தியை ஏற்றுக்கொண்டு, ஜியார்ஜி திமித்ரோவின் மாதிரியைப் பின்பற்றி, வர்க்கக் கோணத்தில் இருந்து பாசிச எதிர்ப்பு (பாஜக எதிர்ப்பு) பரந்த மக்கள் முன்னணியை உருவாக்குவதாகும்.

இந்திய அரசியலின் நிஜம்: “ஆண்டி-காங்கிரசிசம்” மற்றும் “ஆண்டி-பாசிசம்” இரண்டும் ஒரே நேரத்தில் செல்ல முடியாது. வரலாறு, பாஜகவை பிரதான எதிரியாக அடையாளப்படுத்துகிறது. எனவே, இடதுசாரி கட்சிகளின் பணி, தற்போதைய இடதுசாரி முன்னணியை கலைத்து, இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பிற மதச்சார்பற்ற அரசியல் சக்திகளுடன் புதிய ஐக்கிய முன்னணியை உருவாக்குவதாகும். இது UPA-III ஆக உருவெடுத்து, வலதுசாரி எதிர்வினை பாஜகவின் அரசியலைச் சவாலுக்கு உள்ளாக்கும்.

(The author is an Assistant Professor, Department of Political Science, University of Kalyani (West Bengal)

மார்ச் 26 2024

80. மார்க்சிற்காக- அல்தூசர்

Louis Althusser (1918-1990) எழுதிய For Marx , Lenin and Philosophy, Reading Capital போன்றவை மார்க்சிய அறிவு வட்டாரத்தில் அவரின் முக்கிய ஆக்கங்களாகப் பார்க்கப்படுகின்றன.

இதில் அல்தூசரின் 'மார்க்சிற்காக' எனச் சொல்லப்படும் நூல் 1960களின் ஆரம்ப ஆண்டுகளில் எழுதப்பட்டு பிரஞ்சு மொழியில் வெளியானது. இந்த கட்டுரைகளின் ஆங்கில தொகுப்பு 1969ல் வெளியானது. அதை பென் ப்ருஸ்டர் மொழி பெயர்த்தார். ஆங்கில நூல் இணையத்தில் கிடைக்கிறது.

மார்க்சிய ஆர்வலர், அமைப்பியல் ஆர்வலர்கள் சிலர் படித்திருக்கக்கூடும். இந்நூலை புகழ் வாய்ந்த மொழிபெயர்ப்பாளர் பேரா பூர்ணசந்திரன் அவர்கள் தமிழில் தருவதில் பெரும் உழைப்பை நல்கியுள்ளார். தோழர் முத்துமோகன் பதிப்பாசிரியர் உழைப்பை நல்கியுள்ளார். சவாலான ஆக்கம். தமிழ் அறிவுலகிற்கு என் சி பி எச் கொடுத்திருக்கும் கொடையாக பாவிக்கலாம். 2021 ல் கொணர்ந்தனர்.

For Marx என்ற நூல் இப்போது மொழி பெயர்ப்பில் 'மார்க்சுக்கு ஆதரவாக ' என்கிற தமிழ் நூலாக கிடைக்கிறது. இந்நூலை வாசிக்க பொறுமையும் நிதானமும் தேவைப்படலாம். உள்வாங்கிக்கொள்ள கவனம் தேவைப்படலாம். மொழிபெயர்ப்பாளர்க்கு சவாலாக இருந்திருக்கக்கூடும். பேரா பூர்ணசந்திரன் மிகுந்த அனுபவம் கொண்டவர் என்ற வகையில் இந்த சவாலை சிரமம் அதிகமின்றி எதிர்கொண்டிருந்திருப்பார். இளம் மார்க்ஸ், இடை மார்க்ஸ், முதிர் மார்க்ஸ் இணக்கமா, அறிவு முறிவு பாய்ச்சலா / அறிவு உடைவு என்ற மய்யமான கேள்வி இதில் விவாதமாக்கப்பட்டிருக்கும்.

மனிதாபிமான கருத்தியல் தள மார்க்சா, முதிர்ந்த அறிவியல் தள மார்க்சா என்பது பேசப்பட்டிருக்கும். இதை மனிதவியல் தளம்- சமூகத் தளம் என முத்துமோகன் பேசுகிறார்.

மொழியாக்கம் அவ்வளவு எளிமையான ஒன்றல்ல எனக் கருதத்தக்க பல பத்திகள் இதில் இருக்கின்றன.

இரண்டாவது அத்தியாயம் on the Young Marx . அதிலிருந்து சில வரிகளைத் தருகிறேன். அதற்கான பூரண சந்திரனின் மொழிபெயர்ப்பையும் தந்துள்ளேன்

" This is the location of the discussion: the young Marx. Really at stake in it : Marxism. The terms of the discussion: whether the young Marx was already and wholly Marx"

மேற்குறித்த தமிழ் நூலில்

" விவாதத்தின் அமைவுக்களம் இதுதான் : ' இளம் மார்க்ஸ்' . உண்மையில் அதில் ஆபத்தில் இருப்பது : மார்க்சியம். விவாதத்தின் பொருள்: இளம் மார்க்ஸ் ஏற்கனவே, முழுமையான (முதிர்ச்சி பெற்ற) மார்க்ஸாக இருந்தாரா என்பது.

ஆங்கிலத்தில் the young Marx என்பது quote க்குள் இல்லை. தமிழில் வந்துள்ளது.

" very schematically, if they want to rescue Marx from the perils of his youth with which his opponents threaten them, they can either agree that the young Marx is not Marx; or that the young Marx is Marx. These extreme theses may be nuanced; but their inspiration extends even to their nuances"

தமிழில் பூரண சந்திரன்

" மிகுந்த திட்டப்படியாக, அவரது எதிரிகள் அச்சுறுத்துகின்ற அவரது இளமையின் தவறுகளிலிருந்து அவர்கள் மார்க்ஸைக் காப்பாற்ற விரும்பினால், அவர்கள் இளம் மார்க்ஸ் மார்க்ஸே அல்ல என்றோ, இளம் மார்க்ஸ் மார்க்ஸ் தான் என்றோ இரண்டில் ஒன்றை ஒப்புக்கொள்ளலாம். இந்த எதிர்முனை முடிபுகள் சிக்கலானவை, பலவித அர்த்தச் சாயைகள் கொண்டவை ஆகலாம்; ஆனால் அவற்றின் அகத்தெழுச்சி, அவற்றின் நுட்பங்களுக்கும் நீள்கிறது."

இங்கு perils என்பது தவறுகள் என்றும், nuanced சிக்கலானவை பலவித அர்த்த சாயைகள் என்றும், nuances நுட்பங்கள் என்றும் செய்யப்பட்டுள்ளன.

" on the contrary, to think the unity of a determinate ideological unity(which presents itself explicitly or implicitly 'lived ' as a whole or as an intention of 'totalisation') by means of the concept of it's problematic is to allow the typical systemic structure unifying all the elements of the thought to be brought to light, and therefore to discover in this unity a determinate content which makes it possible both to conceive the

meaning of the ‘ elements’ of the ideology concerned- and to relate this ideology to the problems left or posed to every thinker by the historical period in which he lives”

மொழிபெயர்ப்பாளர்

“ மாறாக, ஒரு நிர்ணயித்த கருத்தியல் ஒருமையின் ஒருமை அதன் பிரச்சினைத் தளத்தின் கருத்தாக்க வாயிலாகச் சிந்திப்பது (அது வெளிப்படையாகத் தன்னை ஒரு முழுமையாகக் காட்டிக்கொள்கிறது, மேலும் வெளிப்படையாகவோ, உள்ளார்ந்தோ முழுமையாக்கத்தின் ஓர் உள் நோக்கமாக வாழப்படுகிறது) என்பது அதன் வகைமாதிரியான ஒழுங்கமைவுக் கட்டமைப்பை அச்சிந்தனையின் எல்லாக் கூறுகளையும் ஒருமைப்படுத்தி வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதாகிறது. ஆகவே இந்த ஒருமையில் ஒரு நிர்ணயித்த உள்ளடக்கத்தைக் கண்டுபிடிப்பது, குறித்த கருத்தியலின் கூறுகளின் அர்த்தத்தைக் கருதுவதற்குச் சாத்தியமாகிறது. அதே சமயம் இந்தக் கருத்தியலை ஒரு வரலாற்றுக் கட்டத்தில் வாழும் ஒவ்வொரு சிந்தனையாளருக்கும் முன்வைக்கப்படும் அல்லது விடப்படும் பிரச்சனைகளுடன் தொடர்புறுத்தவும் சாத்தியமாகிறது”

இது போல் நூல் விரிகிறது. அன்றாட வேலை அழுத்தங்களில் இருப்பவர்களுக்கு நேரம் கிடைக்காது. மார்க்சிய தத்துவ தேடலுக்கு என்று தனித்து ஆர்வத்துடன் நேரம் ஒதுக்குபவர்களுக்கான நூலாக இதைக் கொள்ளலாம்.

மொழி பெயர்ப்பு தேர்ச்சி குறித்து அதில் தோய்ந்த அறிஞர் பெருமக்கள் கருத்து கூறமுடியும்.

டிச 18 2022

81. TU Education Lecture Notes

தோழர் ஏ பி பரதன் 1987ல் TU Education Lecture Notes என்கிற தொழிற்சங்க செயல்வீரர்களுக்கான குறிப்பு கையேடு ஒன்றை எழுதியிருந்தார்.

இன்றுள்ள நிலைமைகளை தனியாக சேர்த்து எழுதிவிட்டால் இன்றும் மறு பிரசுரத்திற்கு உகந்த குறிப்பாக அந்த ஆக்கம் இருக்கும். இதை அப்போது மதுமரத்தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலராக இருந்த தோழர் மீனாட்சி சுந்தரம் எனும் மீ யன்னா எனக்கு வாங்கி வந்து படிக்க கொடுத்தார்.

அதிலிருந்து சில வரிகள் (part 1 and 2 என்பதே 135 பக்கங்கள் இருக்கும். பார்ட் 3 ம் வந்தது..இங்கு தருவது சில வரிகள் மட்டுமே அதுவும் அடிப்படை ஆரம்ப பாட வரிகள்தான்)

The immediate task and aim of the trade unions is therefore to take up the urgent demands of the workers at any work site or establishment and lead them to struggle for winning them. Without this, the entire mass of the workers could not possibly be induced to join a TU. This has to be a starting point trade union activity

Trade Union neutrality is in essence a bourgeois idea..

Trade unions are and should be independent of any particular party, in the sense they are not subordinate to, nor directed by any party. But they cannot be independent of nor free from all as politics..the political influence exercised on them by the left parties which show them the path to their destiny

Knowledge of labour laws is an essential part of trade union work..laws relating to labour be broadly classified into two categories favourable and unfavourable. The former as the result of working class struggles..and the later are the product of ruling class to curb and obstruct these struggles and to put them down. The two pressures simultaneously operate within the present system…

Close contact with the working class is the ABC of TU work..real democracy means involving mass of workers in the activities of the union..

The tendency to run unions as narrow confines of individual bosses, restrict union executives to a small coterie…these tendencies have to be fought and overcome

Office bearers have to represent the union before the employers, Govt..negotiate agreements…

TU leaders personal behaviour: Must be modest not bureaucratic or superior. Arrogance, conceit, bluff, personal vanity and a patronising attitude towards masses only repels them. Must adopt cultured behaviour towards everyone

He must avoid sectarian or sarcastic behaviour with the activists and workers of other unions…

He must cultivate the habit of punctuality and thoroughness..he must learn to listen criticism from his colleagues and rank and file.

The model that the TU functionary has to aim at is not a glorified TU boss nor a demagogue …

தமிழில் ஏ அய்

தொழிற்சங்கங்களின் உடனடி பணி மற்றும் இலக்கு..

எந்த தொழிற்சாலை அல்லது நிறுவனத்திலும், தொழிலாளர்களின் அவசரமான கோரிக்கைகளை எடுத்துக்கொண்டு, அவற்றை வெல்லும் போராட்டத்திற்கு வழிநடத்துவதே தொழிற்சங்கங்களின் உடனடி பணி மற்றும் இலக்கு. இதுவின்றி, தொழிலாளர்களின் பெரும்பான்மையையும் தொழிற்சங்கத்தில் இணைக்க முடியாது. இதுவே தொழிற்சங்கச் செயல்பாட்டின் தொடக்கப் புள்ளியாக இருக்க வேண்டும்.

தொழிற்சங்க 'நடுநிலை' என்பது அடிப்படையில் ஒரு முதலாளித்துவக் கருத்து.

தொழிற்சங்கங்கள் எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் கீழ்ப்படிந்தவையாக இருக்கக்கூடாது; ஆனால் அரசியலிலிருந்து முற்றிலும் விடுபட்டவையாக இருக்க முடியாது. இடதுசாரி கட்சிகள் வழங்கும் அரசியல் வழிகாட்டுதலே, தொழிற்சங்கங்களை அவர்களின் இலக்கை நோக்கி நடத்துகிறது.

தொழிலாளர் சட்ட அறிவு தொழிற்சங்கப் பணியின் அத்தியாவசிய அங்கமாகும். தொழிலாளர் சட்டங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படலாம்:

- சாதகமானவை — தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களின் விளைவு.

- பாதகமானவை — ஆட்சி வர்க்கம் போராட்டங்களை அடக்கவும், தடுக்கும் நோக்கில் உருவாக்கியவை.

இரண்டும் ஒரே நேரத்தில் செயல்படுகின்றன.

தொழிலாளர் வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்பு தொழிற்சங்கப் பணியின் "அகராதி". உண்மையான ஜனநாயகம் என்பது தொழிலாளர்களின் பெரும்பான்மையை சங்கச் செயல்பாடுகளில் ஈடுபடுத்துவதாகும்.

சில சங்கங்கள் தனிப்பட்ட தலைவர்களின் குறுகிய கட்டுப்பாட்டில் இயங்கும் பழக்கத்தை எதிர்த்து, அதைக் கடக்க வேண்டும். சங்க நிர்வாகம் ஒரு சிறிய குழுவின் கையில் சிக்கிக் கொள்ளக் கூடாது.

தொழிற்சங்க அலுவலர்கள் — அவர்கள் தொழிற்சங்கத்தை முதலாளிகள், அரசு ஆகியோரிடம் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்; ஒப்பந்தங்களைப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

தொழிற்சங்கத் தலைவர்களின் தனிப்பட்ட நடத்தை:

- எளிமையாக இருக்க வேண்டும்; அதிகாரப்பூர்வமாகவோ, மேலோட்டமாகவோ இருக்கக் கூடாது.

- அகங்காரம், திமிர், bluff, தனிப்பட்ட புகழ், மக்கள் மீது மேல் நிலை காட்டும் அணுகுமுறை — இவை அனைத்தும் தொழிலாளர்களை விலக்கிவிடும்.

- அனைவரிடமும் பண்பட்ட நடத்தை காட்ட வேண்டும்.

- பிற சங்கங்களின் செயற்பாட்டாளர்கள், தொழிலாளர்களுடன் பிரிவினை மனப்பாங்கோ, கிண்டல் மனப்பாங்கோ காட்டக் கூடாது.

- நேர்த்தி, முழுமையான பண்பாடு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- சகாக்களிடமிருந்து, அடிப்படை உறுப்பினர்களிடமிருந்து வரும் விமர்சனங்களை கேட்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மாதிரி தொழிற்சங்கத் தலைவர் — அவர் ஒரு "பெருமைப்படுத்தப்பட்ட சங்கத் தலைவர்" அல்ல; ஒரு "பேச்சாளன்" அல்ல. உண்மையான பணியாளர் பிரதிநிதி, பண்பட்ட, ஜனநாயகத் தலைவராக இருக்க வேண்டும்.

ஏப் 18 2022

82. India Vs RSS புத்தகம்

கேரளா மாடல் அரசாங்கம் பற்றியும்- ஆர் எஸ் எஸ் முயற்சிகள்- வேற்றுமையில் ஒற்றுமை அவசியம் குறித்தும் தோழர் பினராயி விஜயன்

கேரளா முதல்வர் தோழர் பினராயி விஜயன் பிஜேபி- ஆர் எஸ் எஸ் கொள்கைகளை விமர்சித்து பேசிய சில உரைகளை தொகுத்து India Vs RSS என்ற புத்தகமாக 2018ல் LeftWord பதிப்பகம் கொணர்ந்தது. 120 பக்கங்களைக்கொண்ட சிறிய புத்தகம்தான். நேரம் கிடைப்பவர்கள் வாசித்துவிடமுடியும்.

விஜய் பிரசாத் தனது முன்னுரையில் சோனியா, மமதா எல்லாம் இடதுகள் இல்லை என்கிறார். பிஜேபி தன்னை எதிர்ப்பவர்களை அப்படி முத்திரை குத்தி அரசியல் ஏமாற்று செய்கிறது எனும் விஜய்பிரசாத் மேலும் எழுதுகிறார் :

Both the Congress and the BJP are representing right wing economic policies. Be it liberalisation, globalisation or privatisation, the Congress was in the forefront of implementing them. The BJP is following the same. Both of them represent a common sphere. That is why BJP is not seeing the Congress as its main rival- the Left is its principal enemy. The Left is not a powerful force nationally today- still the BJP is scared of the Left..

For Communists there is no compromise with any part of the BJP's Philosophy, outlook and policies. This is not true of any other anti-BJP party in India.

தோழர் பினராயி தன் உரையில் கேரளா ஏன் தாக்குதலுக்கு உள்ளாகிறது என்பதை சொல்லிவிட்டு கேரளா மாடல் பற்றி பேசுகிறார்.

செக்யூலரிசம்- டெமாக்ரசி- சோசலிசத்திற்காக நிற்பது

Communalism, demonetisation, neoliberalism- crony capitalism எதிர்ப்பு

நியாயமற்ற கொள்கை எனில் முதல் எதிர்ப்பு குரலை வெளியிடுதல்

கூட்டுறவு என்கிற Financial inclusive society யை போராடி காப்பது

Inequality Kerala is far less than that of the so called model states of India

Fight against ban of Beef

Fighting for Communal harmony and fight against false propaganda of Love Jihad

Kerala has its great contirbution on freedom movement and RSS cannot claim so.

கேரளா பல சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடி- ஆர் எஸ் எஸ் அவற்றை எல்லாம் எதிர்த்த வரலாறுடையது

அமர்த்யா சென் ஆய்வுப்படி பிற மாநிலங்கள் Kerala quality of Life குறித்து கற்க வேண்டும். அமர்த்யா கேரளா மாடல் வளர்ச்சி என சொல்லியுள்ளார்

அய்நாவின் மனிதவளக் குறியீட்டில் உயர்வான நிலையில் கேரளா

இலஞ்சம் மிக குறைந்த அளவிலேயே உள்ள மாநிலம்

தலித்களுக்கு population proportionate Budget allocation உள்ள மாநிலம்

Internet as Right என முதலில் சொன்ன மாநிலம்

Transgender Policy வெளியிட்ட மாநிலம்

Health, Education, Moratality issue போன்றவற்றில் உயர்வான இடத்தைக் கொண்ட மாநிலம்

4 இயக்கங்கள்- Missions Haritha keralam என்பது சுற்றுச் சூழலுக்கானது, Ardram என்பது அனைவருக்கும் ஆரோக்கியம், Education உயர்வான ஸ்மார்ட் சிஸ்டம், LIFE என்பது அனைவருக்கும் நிலமும் வீடும். இவை சிறந்த மாதிரிகள்

பினராயி ஆர் எஸ் எஸ் தோற்றம்- பின்புலம்- மகாத்மா படுகொலை போன்றவற்றை தன் உரையில் விளக்குகிறார். கோட்சே தனிநபர் அல்ல 'அய்டியலாஜி' என்கிறார். அது ஹிட்லர் வகைப்பட்டது என்கிறார். இந்து உரிமைகளை நிலைநாட்டுதல் பெயரால் சமூக பதட்டங்களை உருவாக்கும் அமைப்பது. பெரும்பான்மைக்கு தங்களுக்கு ஏதுமில்லை என்ற உளவியல் பயத்தையும் சிறுபான்மையிடத்தில் பதட்டம் அச்சம் உருவாக்கும் உளவியலையும் அது செய்கிறது. தலித்களிடம் அது சதுர்வர்ண முறையைத்தான் அனுசரிக்கிறது. கேரளாவில் மக்களின் செல்வாக்கை பரவலாகப் பெற்ற சிபிஎம்மை மக்களிடம் செல்வாக்கில்லாத பிஜேபி- ஆர் எஸ் எஸ் தலையாய எதிரியாக சித்தரித்து வருகிறது

தேசியம் குறித்து தனது உரையில் அவரது தெளிவை தோழர் விஜயன் முன்வைக்கிறார்.

"The major characteristic of Indian society is its diversity. Indian nationalism is something that accepts and includes all these diversities.

Nationalism in each country will have its own special feature. The notable feature about India is its ability to develop while including diversities. That is something that differentiates our nationalism from many other nationalisms.

There is no common language that all Indians speak, nor is there a common culture that all Indians share. But the sentiment of being Indians exists strongly among the people. This feature of Indian nationalism includes the country's diversity as essential to its idea of society. Strengthening this is indispensable to move our country forward. We should recognize that any attitude which is opposed to this will lead to the fragmentation of our country. We should also realize that a fragmented polity is only beneficial to the interests of imperialism."

அமேசான் ரூ 160 paperback ல் இப்புத்தகம் கிடைக்கலாம்.

ஜூன் 4 2016

83. தோழர் பிரகாஷ் காரத் விமர்சனத்திற்கான எனது பதில்

Com Prakash Karat commented CPI's Programme adopted in Pondicherry in CPM's theoretical quarterly Marxist issue of Jan-March 2016. The write up goes up to 11 pages. The Summarized portion is given by Karat himself.

"DISCUSS PROGRAMMATIC ISSUES

To sum up, there is a significant change in the characterisation of the Indian state in the new CPI Programme, one that brings it closer to the CPI (M)'s understanding of the state. There are other aspects of the Programme that have correctly analysed the changes in capitalist development and its impact on the various classes. However, there are still shortcomings in the class analysis and in delineating the role of various classes. The leading role of the working class in the forging and carrying forward the democratic revolution and transition to socialism still remains unrecognised. There is, thus, a hangover of the old understanding that has a bearing on tactical lines adopted by the CPI from time to time. However, the fact that the CPI is examining all these issues further is encouraging. The 22nd Congress, which adopted the Programme, also constituted a Programme Commission headed by A. B. Bardhan to continue work on updating and refining the Programme. Despite the unfortunate death of Comrade Bardhan, we hope that this work will continue.

The CPI (M) and CPI are having regular discussions on current political developments and the tactics to be pursued. As part of the ongoing dialogue and coordination between the parties, it may be useful to have discussions on programmatic issues as well. "

I have yet to come across any rejoinder or explanatory article or note from the leaders of CPI regarding com Karat's comments. I have great respect on Com Karat, one of our finest Marxist intellectual and I value very much his various write-ups and speeches. Sometimes the debate on Programme seems to be purposeless rhetoric. Programme is a kind of our general understanding for establishing a different state like people's democratic state or some democratic state closer to Socialism, not the exact understanding as we all claim often. The future is not exactly/ dutifully following or replica of what we write or finalise in our Committees. The mechanical understanding on Revolution by many of our comrades/ rank and file is also a faulty one. As if a date is fixed for the revolution- as if it is very near and the next day onwards socialism is born- in the name of working class some communist party (CPML/CPM/CPI) PB/CC/National Council would rule to show the world the state is headed by working class- all these thinking need much elaboration and not closer to any realistic understanding of the things and events going on. We cannot just shed

things in the name of 20th century socialism and telling the same thing in the name of 21st century socialism.

Many of the arguments on programmatic issues and heated debates on them seem highly irrelevant in today's context of political action of parties. All sort of long term goals and programmatic proposals and naming Revolutions as PDR/NDR etc , characterizing state apparatus, attributing revolutionary class nature sometimes seem to be very odd. Monopoly of wisdom/ Knowledge/ programme is not vested with anyone or any particular movement of people is the reality today

. We have our own simple definition about bourgeoisie /Proletariat etc. The ruling class in bourgeois society is the bourgeoisie, who own the means of production as Private Property, despite the fact that the productive forces have become entirely socialised and operate on the scale of the world market.

The producing class in bourgeois society is the proletariat, a class of people who have nothing to sell but their capacity to work; since all the means of production belong to the bourgeoisie, workers have no choice but to offer their labour-power for sale to the bourgeoisie.

Who are all Big Bourgeoise then - are all having the same homogeneous character and don’t have any vision about Nation’s development. Are the entire working class is homogeneous? Are the left govts not willing to get any foreign financial capital for the growth of the state Govt.. What the landlords are doing -becoming corporate giants or land mafias of real estate’s ?..these are all some practical questions?

Suppose as left if we get chance like BJP the right forces to rule the Country as per today’s constitution and thro democratic process, and suppose people give support to us by reelecting us in majority to parliament repeatedly, then how we interpret our programme for the aim of dismantling our own rule of Govt having state apparatus led by Big Bourgeosie and landlords?

We all feel difficulty to face the goons and thugs of TMC in WB, even in assembly elections and lost our support base of all walks of people who elected us continuously.. In these situation of reality why we need to concentrate some tall talks in the name of programme and in the name pure Marxist classics.

Let us first with all humbleness and humility to do some drafting for some short term – say for 5 years -goals/ demands for the welfare of crores of people. Let us strive for that and achieve. Let us come out from any type of Vanity search of Marxism. (ஆர். பட்டாபிராமன்)

4-6-16

தமிழில் ஏ அய்

ப்ரகாஷ் காரட் – சிபிஐ திட்டம் குறித்த கருத்துரைக்கு (மார்க்சிஸ்ட், ஜனவரி–மார்ச் 2016)- எனது பதிலாக..

"புதிய சிபிஐ திட்டத்தில் இந்திய அரசின் குணாதிசயத்தை விவரிக்கும் விதத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது; இது சிபிஎம் புரிதலுக்கு நெருக்கமாக உள்ளது. மூலதன வளர்ச்சியின் மாற்றங்களையும், அதன் பல்வேறு வர்க்கங்களின் மீது ஏற்படுத்திய தாக்கத்தையும் திட்டம் சரியாக ஆராய்ந்துள்ளது. ஆனால், வர்க்கப் பகுப்பாய்வில் இன்னும் குறைபாடுகள் உள்ளன. ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்து, சமூகவாதத்திற்கு மாற்றத்தை வழிநடத்துவதில் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணி பங்கு இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. பழைய புரிதலின் மீதமுள்ள தாக்கம், சிபிஐ எடுத்துக்கொண்ட தந்திரங்களில் பிரதிபலிக்கிறது. இருப்பினும், சிபிஐ இவ்விஷயங்களை ஆராய்ந்து கொண்டிருப்பது ஊக்கமளிக்கிறது. 22வது மாநாடு, திட்டத்தை ஏற்றுக்கொண்டதோடு, அதை மேம்படுத்தும் வகையில் ஏ. பி. பாரதன் தலைமையில் திட்டக் குழுவையும் அமைத்தது. பாரதன் மறைந்தபோதிலும், இந்தப் பணிகள் தொடரும் என நம்புகிறோம்.

சிபிஎம் மற்றும் சிபிஐ, தற்போதைய அரசியல் வளர்ச்சிகள் மற்றும் தந்திரங்கள் குறித்து தொடர்ந்து விவாதிக்கின்றன. இந்த உரையாடலின் ஒரு பகுதியாக, திட்டவியல் பிரச்சினைகள் குறித்தும் விவாதங்கள் நடத்துவது பயனுள்ளதாக இருக்கும்." (தோழர் காரத்)

நான் இன்னும் காரட் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு சிபிஐ தலைவர்களிடமிருந்து எந்த விளக்கக் கட்டுரை அல்லது பதிலைப் பார்த்ததில்லை. காரட் மீது எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது; அவர் நம் சிறந்த மார்க்சிய அறிவாளிகளில் ஒருவர். ஆனால், திட்டம் குறித்த விவாதங்கள் சில நேரங்களில் வெறும் சொற்பொழிவு போலத் தோன்றுகின்றன.

திட்டம் என்பது மக்கள் ஜனநாயக அரசு அல்லது சமூகவாதத்திற்கு நெருக்கமான ஜனநாயக அரசு போன்ற மாற்று அரசை உருவாக்கும் பொது புரிதலே தவிர, நம் குழுக்களில் எழுதப்படும் அல்லது இறுதி செய்யப்படும் ஆவணங்களின் பிரதியைப் போல எதிர்காலம் இயங்காது. புரட்சியை "ஒரு தேதியில் நடக்கும்" எனும் இயந்திரப் புரிதல் தவறானது. "நாளை முதல் சமூகவாதம் பிறக்கும்" என்ற சிந்தனை, நிஜ நிலைமைகளுக்கு அருகாமையற்றது.

இன்றைய சூழலில், திட்டவியல் விவாதங்கள், PDR/NDR எனப் பெயரிடப்பட்ட புரட்சிகள், அரசின் இயந்திரத்தை வகைப்படுத்துதல் போன்றவை, அரசியல் செயற்பாட்டின் நிஜ நிலைக்கு தொடர்பற்றதாகத் தோன்றுகின்றன. அறிவு, திட்டம், ஞானம் ஆகியவற்றின் ஒரே உரிமை எந்தக் கட்சிக்கும் இல்லை.

புரட்சிகர வர்க்கம், உற்பத்தி சாதனங்களை தனியார் சொத்தாகக் கொண்டிருக்கும் முதலாளிகள்; உழைப்பைத் தவிர விற்க எதுவும் இல்லாத தொழிலாளர்கள் — இவை எளிய வரையறைகள். ஆனால், பெரிய முதலாளிகள் அனைவரும் ஒரே மாதிரியானவர்களா? தொழிலாளர் வர்க்கம் ஒரே மாதிரியானதா? இடதுசாரி அரசுகள் வெளிநாட்டு மூலதனத்தை ஏற்க விரும்பவில்லையா? நிலக்காரர்கள் நிறுவன மாபெரும் முதலாளிகளாகவோ, நில மாஃபியாக்களாகவோ மாறவில்லையா? — இவை அனைத்தும் நடைமுறை கேள்விகள்.

இடதுசாரி, பாஜகவின் போன்று, அரசியலமைப்பின் அடிப்படையில் ஆட்சிக்கு வந்தால், மக்கள் தொடர்ந்து ஆதரித்து மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுத்தால், அப்போது "மாநில இயந்திரத்தை உடைத்தொழிக்க" என்ற திட்டத்தை எவ்வாறு விளக்குவது?

மேற்கு வங்காளத்தில் TMC-வின் குண்டர்கள், தாதாக்களை எதிர்கொள்வதற்கே சிரமப்பட்டோம்; மக்கள் ஆதரவை இழந்தோம். இந்நிலையில், திட்டம் குறித்த உயர்ந்த விவாதங்களில் நேரத்தை செலவிடுவது நிஜ நிலைக்கு பொருந்தாது.

எளிமையாக, பணிவுடன், அடுத்த 5 ஆண்டுகளுக்கான குறுகிய கால இலக்குகள், கோரிக்கைகள், மக்கள் நலத் திட்டங்களை உருவாக்குவோம். அதற்காக போராடுவோம். மார்க்சியத்தின் "வெறும் புகழ் தேடல்" மனப்பாங்கிலிருந்து விலகுவோம். (பட்டாபி)

Saturday, July 8, 2017

84. Tribute To Com D Gnanaiah

One of the versatile genius of P&T Trade Union movement, great author of many books on Marxian perspectives, relentless critic of social inequality existing in the Indian society and a fighter of secular values, comrade Daniel Gnanaiah Ponraj is no more. He had lost his breath on the early morning of july 8th 1917. He was at his initial months of 97th year. Com DG was a father figure and inspirer to many young comrades of Tamilnadu. Comrade Gnanaiah had been a very close associate of Com O.P Gupta for more than 50 years.

Born in pro German Lutheran Christian family, com DG had his communist initiation in his native area near Madurai, even before he entered in the postal services as an employee. He was associated with the student movement and local kisan sabha. His higher education was at the famous American college, Madurai where many 'later day leaders of communist movement' were educated.

During the time of Second World War, he was compelled to undertake Army Postal Service, which helped him to broaden his world vision. He was just 21 when the world opened its door to him and it was the period in between 1941 and 1946. The Cairo library was his great meeting place of various revolutionaries' ideas. He read books of H G Wells, Webb, Marx- Engels, Bernard Shaw and John Strachey and had discussion with all friends of socialist ideas. He was befriended another stalwart of postal and leader of P&T movement com Premanathan. These friends were seriously watching the advancement Indian freedom struggle and people's war slogan of Soviet Union. When he was at Karachi, he heard the news of RIN Royal Indian Navy struggle for freedom and other demands.

On hearing the appeal of comrade P C Joshi, then General Secretary of CPI com DG and Prem collected Rs 2000, not a small amount in 1945-46. Both the young friends had gone to Bombay to hand over the same to the leader. There he met and acquainted himself with com BT Ranadive, Mohan Kumaramangalam, Adhikari and Joshi. On his arrival to India, he was posted at Trichy where he developed contacts with the local union leaders. On hearing com Gupta's efforts for the unification of P&T movement, he stood solidly with Gupta at Akola Conference and fought for that line in Tamilnadu . He had a chance to meet Gandhiji at wardha Ashram.

During 1960 strike of CG Employees, he was arrested and released after the trail of 7 months. He got his suspension order and then dismissed from service. The great NFPTE union was derecognized. Com DG did his yeoman service by collecting relief materials and money and dispatched to the needy. The former Deputy Speaker of Loksabha, and a veteran leader of DMK party, then an employee Shri G Lakshmanan was also received the relief.

Com DG had played a major role in the discussion and formation of JCM negotiating machinery and Compulsory arbitration , shaped the events in favour of CG Employees. He fought against Government's stand of placing condition of abjuring strike for acceptance and formation of JCM. His speech on the inaugural day of JCM was much appreciated by various shades of leaders of CG Movement. Various trade unions of CG Employees should thank leaders like DG, O P Gupta for their contribution of this greatest achievement for bringing a permanent negotiating forum for them continuously in the last 50 years. Com DG had gone England for learning the functioning of whitely council.

He had a chance to visit Brussels for international meet of PTTI. There he debated openly with the Secretary General of PTTI against his notion about proletarian Internationalism. Com DG along with Gupta had gone to Soviet Union on the historic occasion of Golden Jubilee celebration of 1917 soviet revolution, participated the special session. Unfortunately on the occasion of its centenary celebration in 2017, his demise was incidentally coincided. Again he had a wonderful chance of visiting Soviet Union and addressed the session on NoV 7, 1980 at Lenin Academy of Social Sciences where he had undergone his higher studies on Marxism- Leninism from the same podium Lenin addressed to the people after the great soviet revolution.

During the time of September 19, 1968 strike he led the entire CG movement with great courage and Vigour. He was arrested one day earlier to the strike and imprisoned at Tihar jail. He guided the movement through his drafts from Tihar, even when he was behind the bars. NFPTE was derecognized. He fought with com Gupta for full restoration of recognition from Branch to higher federation level. He had undergone indefinite fast with com O P Gupta. The movement was received serious political attention and veteran leaders of various parties supported the fast. Leaders like Vajpayee, Dange, Bhupesh, Achutanandan, Chandrasekhar, Mohan Dharia, Aruna Asaf Ali all came to the spot and greeted the fasting comrades. Mohan Dharia and Aruna mediated with the Government and the fast ended after 8 hectic days.

Com DG as the editor of P&T labour worte many educative articles and exposed the policies of then Government. During the time of emergency the journals were censored

and not allowed to reach the branches. Com Jagan made extra efforts to send them from Tamilnadu thro Tamil journal. On the formation of Janata Government Shri George Fernandez was appointed as MOC. Com DG met him and narrated the problems of victimization. Fernandez personally gone thro the files that forbidden DG' s re-admission to Postal service which one was struck by Sankar Dayal Sharma and cleared the same and made way for DG to re-enter into the services and then DG had attained his superannuation. This was his 5thtime of his re-entry to the services facing suspension, dismissal, compulsory retirement etc.

Handing over the post of Secretary General to Guptaji, com Gnanaiah focused his attention to educate the comrades on Marxism. He had become a known CPI and AITUC leader within a short span of 10 years since 1978. He had been in the National Council, Control Commission of CPI. As Vice president of AITUC, he had ably conducted education camp to AITUC workers which one was appreciated by many. He had his close association with senior leaders / Comrades like Dange, Rajeshwar Rao, Mohitsen, Indrajith Gupta, A B Bhardhan and shaped the policies of CPI by discussing with them and his closeness with leaders like comrades Manickam, Nallakannu, D Pandian, Gopu, S S Thiyaga Rajan helped to shape the political line of Tamilnadu CPI. He had been a consistent fighter for social justice and he has authored a lot about Mandal commission. He showed his anger in his younger days for separate water pot for high caste Brahmins and had that courage to break them in the office premises itself.

He had been one of the finest associate and colleague of Gupta and inspired many next generation leaders like Comrades Jagan, RK, Muthiyalu, M L Sharma, B P Sharma and other youngsters like Mali, Tamilmani and Mathivanan of the Telecom movement. He was the builder of the educational institutions like Workers Education Centre for the working class of Tamilnadu . He conducted many educational camps for rationalizing them and to make them to understand the importance of class struggle in our society. He ably taught them to understand the caste question and the importance of the movement of social justice. Whenever he had the chance of meeting CPI, CPM leaders, he expressed his longing for the left unity. He never failed to criticize the left also when he felt the shortcomings. He had taken much efforts to understand India, its history, social inequality, the dimension of Hindu- Muslim strife and Unity and he never minced words to narrate the contribution of Islam and the role of leaders from that community for the advancement of progressive movement.

He had authored more than 25 books in all the above subjects. His bio sketch was captioned as ' I ALSO RAN'. His narratives on the history of P&T movement – 'Glimpses'

were well received by the workers. He had authored a short history of CPI also. In his last days he labored much to elaborate the history of Communist movement. He was very fond of receiving comrades for intellectual discussion and for proper updating of current development in the Marxian movement. It was awesome to see a comrade even at the age of 96 reading and writing daily hours together. Com DG a tireless personality always with the thirst of learning and taking the learnt things with great responsibility to the younger generation would live with all of us thro his memories and write ups. Let us learn from him and rededicate ourselves for the cause that he stood all these years.

Let every worker of P& T, and a member of Indian working class be proud of this great comrade and let us salute him for his valuable contribution to the society that we are living and kicking.

மார்ச் 7 2025

85. புரட்சிகர பாதை- தோழர் ஹோசிமின்

மனிதன் காலடி பட்டால் பாதை என்பார்கள். கால்களை பழக்குங்கள் என்றார் தோழர் ஹோசிமின்.

" உங்கள் கால்கள் பல செயல்களுக்கு பழகட்டும். நடக்கட்டும். ஓடட்டும். காட்டுப்பாதைகளிலும், மலை முகடுகளிலும், வழுக்குப் பாறைகளிலும் ஏறி இறங்கட்டும். நீச்சல் அடிக்கட்டும். இன்னும் செய்யவேண்டிய பயிற்சிகளை கால்கள் பழகட்டும்" என்றார்.

புரட்சிகர பணிகளில் ஈடுபடும் மனிதனுக்கான கடும் பயிற்சியை எதிர்நோக்கி, இவ்வாறு அவர் சொல்லியிருக்கக்கூடும். தோழர் ஹோ தினம் 40 மைல்கள் கூட நடந்தவர். சொகுசுவாசி எங்கெல்ஸ் கூட அப்படி மைல் கணக்கில் நடக்க வேண்டியிருந்தது. காந்தி நடக்காத நாள் இல்லை. அவரும் தினம் 40 மைல்கள் நடந்தவர்தான். இந்தியா முழுக்க நடந்தவர்தான். நமது ஏழை பாழைகள் நடக்காத நடையா?

செயல் என வந்தால் ஓர் அடி போதும் என கருதியவர் காந்தி. ஓர் அடியானாலும் அனைவருடனும் எனப் போராடியவர் குப்தா. அந்த ஓர் அடி எடுத்து வைக்க வேண்டுமே?

இதெல்லாம் சரி. படிப்பது இராமயணம், இடிப்பது கோயிலா என உள்குரல் கேட்காமல் இல்லை. நான் கால்களுக்கு நடையைக் கூட பழக்கவில்லை. பின்னர் எங்கு ஓடுவது, நீச்சல் அடிப்பது... என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய் என எப்போதும் இறைஞ்சி, சொகுசை பழகிக்கொண்டன என் கால்கள்.

'காட்சியில் தெளிந்தனம்' என்பார்கள். எனக்கோ விட்டலாச்சார்யார் படம் தோற்றுவிடும் double vision காட்சிகள். எதிரே வருபவரின் தலை மட்டும் உடலிலிருந்து பிரிந்து முன்னே வந்து காட்சி கொடுத்துவிடும். மேலே உள்ளது கீழேயும் தெரியும். பார்வை தீர்க்கம் வேண்டும் என்பார்கள். என் பார்வையில் பல குழப்பங்கள். சரி , எல்லாம் உலகில் தெளிவாகத் தெரிந்துவிட்டால், அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கும். தெளிந்துவிட்டது என்றால் பார்வைக்கு என்ன தேடல் வேண்டி கிடக்கு?

வழக்கம் போல் ஏதாவது ஆரம்பித்து போகாத ஊருக்கு வழி கேட்பதாகவே நடக்கிறது. ஹோ சி மின் என ஆரம்பித்தேன். தோழர்

ஹோ சி மின் நூல்கள் பல வந்திருக்கலாம். தமிழில் ஓரளவிற்கு விரிவாக அவர் குறித்து எழுதப்பட்ட நூல் யெவ்கனி கொபலெவ் எழுதியது. இந்நூல் மாஸ்கோவில் 1989ல் வெளியாகி, 2003ல் தமிழில் வெளிவந்தது. நல்ல மொழிபெயர்ப்பு. படிக்க இதமாக இருக்கும் நடை. 400 பக்கத்திற்குள்தான்...ஆர்வமுள்ளவர் தேடி வாசிக்கலாம்.

தோழர் ஹோ எழுதிய 'The Revolutionary Path' என்கிற நூலை லெனினின் செய்ய வேண்டியது என்ன என்கிற நூலுக்கு இணையாக வைத்து பேசுகிறார்கள். ஹோ அவரது 'புரட்சிகர பாதை' எழுதியபோது அவர் 40யைக் கூட தொடவில்லை. மிகக் கவனமாக சொற்களின் தேர்ச்சி, சொற்செட்டுடன், தன் சொந்த மக்களுடன் உரையாட விழைகிற சக தோழன் போன்ற நடையில் ஹோ எழுதியிருப்பார்.

இந்தியாவில் மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் மாவோ கிராம்சி செகுவாரா எழுத்துக்கள் சென்ற அளவு ஹோ போய் இருக்கமாட்டார். நல்ல ஆசியத்தனம் கொண்ட எழுத்தாக ஹோ வை பார்க்க முடியும். My writing style is too direct என அவரே சொல்வார். புரட்சிகர பாதை இணையத்தில் கிடைக்கிற நூல் தான். புரட்சிகரவாதியின் இலக்கணத்துடன் நூல் வாயில் திறக்கும். சில வரிகள்

A revolutionary must be

thrifty and Industrious

Show solidarity, not self interest

Learn to correct mistakes and inquisitive

Interested in research, open to new ideas

Take care without being cowardly

Have patience and hardworking

Support common interests,not private one

Keep ideology , sacrifice and work for the party

Have little interest in material things

Keep silent when needed

Show integrity, not opportunism

Evaluate people with care

Accept and forgive the errors of others

Examine the situation carefully

Be decisive be brave

கவிதை போல போகிறது. ஹோ கவிஞரும் கூட. Practice makes perfect என ஹோ சொல்வார். அவரும் இங்கு கம்யூனிஸ்ட்கள் சொன்னது போல இரு கட்ட புரட்சி- தேசிய ஜனநாயக புரட்சி கட்டம், சோசலிச புரட்சி கட்டம் எனப் பேசினார். லெனின் லெனின் என கொண்டாடி வந்தார்.

நம்மூர்ல ஏராளம் , 'மனுஷன் மனுஷனுக்காக' சொல்லி வைத்து போயிருக்கான்

எல்லாம்தான் படிச்சிங்க என்ன பண்ணி கிழிச்சிங்க (நல்லவேளை இணையத்தில் படித்ததால் கிழிக்க முடியவில்லை)

ஏட்டு சுரைக்காய் சமைக்க உதவா

படிச்சவன் பாட்டை கெடுத்தான்

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்.. இன்னும் இப்படி எத்தனையோ கருத்து கற்குவியல். வேண்டாதவனைப் பார்த்து எடுத்து அடிக்க உதவும்.

உள்ளூர்க்கு வருவோம்.பாவம் நடந்தே தேய்ந்த காந்தி ஓர் அடி போதுமென்றார். ஆனால் அந்த ஓரடியை நான் எடுத்து வைக்க வேண்டுமே?

7-3-2025

ஜூன் 18 2024

86. பால் ஸ்வீசி நினைவில்..

அமெரிக்க மார்க்சிய அறிஞர் பால் ஸ்வீசி மறைந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் மறைந்தபோது எழுதிய கட்டுரை ஒன்றை தேடி எடுக்க முடியவில்லை.

1949ல் ஸ்வீசி தனது தோழர் லியோ ஹூபர்மென் உடன் இணைந்து புகழ் வாய்ந்த Monthly Review யைக் கொணர்ந்தார். இன்றும் இடது உலகில் பேசப்பட்டு வரும் மாத இதழது. எனக்கு எப்படி யாரால் அறிமுகமானது என மறந்துவிட்டது. 2006 வரை (எப்போது வாங்க ஆரம்பித்தேன் என்பதும் நினைவில் இல்லை) வீட்டிற்கு வந்தது.

அமெரிக்க இதழ் மன்த்லி ரிவ்யூ , கரக்பூர் மே வ ஏஜென்சி ஒன்றின் மூலம் , எனக்கு வந்த நினைவு. அப்போது அந்த இதழுக்கு உலகம் முழுவதும் 8000 subscribers இருந்திருக்கலாம். அதில் ஒரு சந்தாதாரர் என்கிற பெருமிதம் (தேவையா என்பது வேறு) இருந்த நேரமது.

பழைய party life, Janata weekly of socialists, Mainstream, Frontier weekly என இதழ்கள் ஆண்டுதோறும் bound செய்யப்பட்டதுண்டு. AITUC , CITU, INTUC, BMS, NFTE பத்திரிகைகளை பவுண்ட் செய்த தோழர் தீனன் தானே இவற்றை எடுத்துப் போய் பவுண்ட் செய்து தந்துகொண்டிருந்தார். ஊரில் இருந்த 'வீட்டு மாடி ' நூலகத்திற்காக இருந்தது. சென்னை வரும்போது அப்படியே பெரும்பாலானவற்றை விட்டுவிட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. சமீபத்தில் மறைந்த தோழர் கார்த்தி ஆர்வத்துடன் அவரால் இயன்ற அளவு பராமரித்ததாக தெரிவித்திருந்தார். எல்லாம் soiled ஆக , பிரித்தாலே எனது சைனஸ் வியாதியை தூசு ஒவ்வாமையை அதிகரித்து விடுவதை உணர்ந்தேன்.

எந்த சேர்த்து வைப்பாலும் ஆகப்போவதென்ன என்றாலும், மனம் அவற்றை நாடாமல் இருப்பதில்லை. பால் ஸ்வீசி புத்தகம் ஒன்றை (மாடர்ன் காபிடலிசம்) படிக்க ஆரம்பித்த நேரத்தில் , இந்த நினைவுகள் எழுந்தன. அவரின் எழுத்துக்கள் அவ்வப்போது மன்த்லி ரிவ்யூ வில் வரும். ஆர்த்தோடாக்ஸ் மார்க்சியம் குறித்து விமர்சன பார்வை வைத்திருந்தார். அதே நேரத்தில் அம்மார்க்சிய எழுத்தாளர்களின் பங்களிப்பையும் விதந்து பேசுவார். தன் மீது நியோ மார்க்சியர் என்கிற லேபிள் ஒட்டப்படுவதையும் அவர் கவனமாக தவிர்க்க விரும்பினார்.

மார்க்ஸ் காலத்திற்கு பின்னர் பெருமளவில் மாறிபோன புதிய முதலாளித்துவம், ராட்சத கார்ப்பரேஷன்கள்- managerial bureaucrats பங்களிப்புகள், ஏகபோகங்களின் காலத்தில் அரசு நிறுவனத்தின் role, சோவியத் சோசலிச பொருளாதார கட்டுமான பிரச்சனைகள், புரட்சிக்கு பிந்திய சமூக கட்டுமான பிரச்சனைகள் என ஏராள அம்சங்களில் அவர் தனியாகவும், தன் அறிஞர் தோழர்களுடன் இணைந்தும் ஆய்வுகளை நமக்கு கொடுத்துச் சென்றுள்ளார்.

பொருளாதார அறிஞர்கள் ஸ்கும்பீட்டர், கலேக்கி, கால்பிரயத், பரேட்டோ, மார்ஷல், கீன்ஸ் , பாரன் என பலரும் (நான் என்னத்த கண்டேன்) ஸ்வீசி நூலில் வருகிறார்கள். Ten Great Economists, நீலகண்டன் அறிமுகத்தில் வந்த பொருளாதார மேதைகள் குறித்த மற்றொரு நூல் (இரண்டு அட்டைப்படமும் ஒரே மாதிரி இருப்பதாக எனக்கு தோன்றும்) என கொஞ்சம் மேய்ந்திருந்தாலும், பொருளாதார அறிவு எனக்கு கிஞ்சிற்றும் இல்லை. ஆனாலும் பால் ஸ்வீசி மற்றும் மன்த்லி ரிவ்யூ எழுத்தாளர்கள், ஆகார் புக்ஸ் வெளியீடு என அவ்வப்போது தேடிப் போகாமல் இல்லை.

மார்க்சின் காபிடல் முதல் வால்யூம் இரு முறை , இரண்டாம் வால்யூம் ஒருமுறை, மூன்று பாதியில்- 30- 35 ஆண்டுகளில் பார்த்து கிழித்தது என்கிற லட்சணம் வேறு. எனக்கு புரியலை என்பதைவிட, என் உழைப்பு அவற்றில் போதவில்லை என்பதுதான் சரியாக இருக்க முடியும். அரசியல் பொருளாதாரத்தை வெறும் பார்முலா மாதிரி உள்வாங்க முடியாத கஷ்டம். Abstractions decoding என்பதில் உள்ள சங்கடம். மானுட அறிவெல்லாம் உத்தேச முன்மொழிவுகள் , அவை இறுதியான absolute இல்லை என்கிற மனத்தடை. கடவுள் முதல் கம்யூனிசம் வரை கற்பிதங்களே - பெரும் கதை உரையாடல்களே என்கிற பின்நவீனத்துவ பொல்லாப்பு..என பல ரீங்காரங்கள்.

சில நேரம் காந்தியை காட்டி மனது தப்பிக்கவும் செய்கிறது (இது ரொம்ப ungandhian நெறி என்றாலும்) . காந்தி சொன்னார்

Every human being has the right to live and therefore find the wherewithal to feed himself and where necessary to clothe and house himself . But for this simple performance we need no assistance from economists or their laws.

Nature produces enough for our wants from day to day, and if only everybody took enough for himself and nothing more, there would be no pauperism in this world..but so long as we have got this inequality, so long we are thieving.

போகட்டும்..பால் ஸ்வீசியை நேசிக்கக்கூடிய மன்த்லி ரிவ்யூ குழாமினர் இருக்கத்தான் செய்கிறார்கள்..

செப் 13 2022

87. டிராட்ஸ்கியின் வாழ்வில்..

1910ல் டிராட்ஸ்கி தனது 30 ஆம் வயதை கடந்து கொண்டிருக்கிறார். பத்திரிகை பிராவ்தாவை ஆரம்பித்து அதற்கு நிதியை manage செய்வதில் பாடுதான்.

மாக்சிம் கார்க்கி இடது பத்திரிகைகளுக்கெல்லாம் தன்னால் ஆன உதவியை செய்துகொண்டிருந்தார். டிராட்ஸ்கியும் கார்க்கியை நிதிக்காக அணுகி உதவி பெறுகிறார். 1910ல் மென்ஷ்விக் போல்ஷ்விக் சேர்ந்து கூடினர்.

டிராட்ஸ்கிக்கு இரு பக்கத்திலும் செல்வாக்கில்லை. அவர் எழுதுகிறவர். கட்சி அமைப்பில் அவருக்கென குழுவோ செல்வோக்கோ இருக்கவில்லை. ஆனாலும் அவரின் எழுத்துக்களை மென்ஷ்விக், போல்ஷ்விக் உட்பட பலரும் பிரசுரித்து வந்தனர். இந்த அடிப்படையில் பிராவ்தாவிற்கு உதவி செய்யவும் ஏற்றுக்கொண்டனர்.

உதவி சும்மா வருமா நிபந்தனை வந்தது. லெனினுக்கு நெருக்கமாக இருந்த காம்னேவ் வை எடிட்டோரியல் குழுவில் சேர்க்கப்பட நிபந்தனை. காம்னேவ் டிராட்ஸ்கி சகோதரியின் கணவர்தான். குடும்பத்திலிருந்த வேறுபாடுகள் பிராவ்தா அலுவலகம்வரை நீண்டது.

டிராட்ஸ்கி எதை எழுதினாலும் அதை கண்காணித்து விமர்சித்து வந்தார் காம்னேவ். நிதியுடன் பிரச்னையையும் இந்த தோழர்கள் சேர்த்து தந்த உணர்வில் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கி இந்த நேரத்தில் அவர் முக்கியம் எனக் கருதிய முழக்கம் ஒன்றை தந்தார்.

One party one working class one revolution

It is madness for the factions to conspire against each other.

சொல்தல் யாருக்கும் எளிதாம் என்பதாகவே டிராட்ஸ்கி வாழ்வும் காட்டியது. டிராட்ஸ்கி வாழ்வு மட்டுமல்ல, அமைப்பில் வேலை செய்த எவருக்கும் - அது எந்த அமைப்பாக இருந்தாலும் இப்படி ஏதோவொரு குழு சண்டையில் ஏதோவொரு காலத்திலாவது சிக்காமல் அமைப்பு

வாழ்க்கை போயிருக்காது. அப்படி தப்பித்தவர் எவரேனும் இருந்தால் அவர் பாக்கியவானே

Inputs Trotsky A Biography Robert Service

டிச 2 2022

88. லூயி பிஷரின் லெனின்

லூயி பிஷர் என்றால் அவர் எழுதிய The Life of Mahatma Gandhi தான் இந்திய வாசகர்களுக்கு உடனடியாக நினைவிற்கு வரும். லூயி பிஷரின் காந்தி வாழ்க்கை வரலாறு மிகச் சிறப்பான ஆக்கம் என புகழ்பெற்றது. அப்புத்தகம் 1951ல் வந்தது.

லூயி பிஷர் ஏராள புத்தகங்களை எழுதியுள்ளார். காந்தி வாழ்க்கையை எழுதிய பிஷர் லெனின் வாழ்க்கை வரலாறையும் மிகப்பெரிய புத்தகமாக எழுதியுள்ளார். உயரமான 700 பக்கங்கள் கொண்ட ஆதார ஆய்வுடன் கூடிய சிறந்த புத்தகமது. பிஷர் எழுதி 1964 ல் வெளியான புத்தகம்.

லெனின் 54 ஆண்டுகளே இவ்வுலக வாழ்வில் (1870- 1924) இருந்தவர். 1917 அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் உலகம் அறிய உயர்ந்தார். மார்க்சியம் என்பதுடன் லெனினியம் என்பதும் இணைக்கப்படும் அளவிற்கு உலகின் பல்வேறு நாடுகளின் இளைஞர்களை அறிவுஜீவிகளை உழைப்போரை கம்யூனிஸ்ட் ஸ்தாபன முறைப்படுத்திக்கொள்ள அவர் பெரும் ஆதர்சன மனிதராக தலைவராக இருந்தார். போராடுகின்ற மனிதர்களின் காதுகள் அவருக்காக திறந்து இருந்தன. அவர் இப்படி சொல்லியுள்ளார் என்பது எந்த argument - debate லும் மார்க்சியர்களிடம் செல்லத்தக்கதானது.

இந்திய விடுதலைப் போர் காலத்தில் பலரிடத்தும், விடுதலைக்குப் பின்னர் இன்றுவரை இடதுசாரி எண்ணம் கொண்டவர்களிடத்தும் பெரும் செல்வாக்கு செலுத்தும் பெயர் லெனின் என்பது.

பிஷர் 50 அத்தியாயங்களில் லெனின் வாழ்க்கை, ருஷ்ய சோவியத் வரலாறு, இடது இயக்கங்கள்- முரண்கள், போல்ஷ்விக்குகளின் வெற்றி ஆட்சி - அவர்கள் எடுத்த முடிவுகள் துயர்கள் என பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதித்துள்ளார். லெனின் கிருப்ஸ்காயா வாழ்க்கையும் சேர்த்தே பேசப்பட்டுள்ளது. பிஷர் வரிகளில்

..childless but leaving many ideological heirs and millions of political offspring throughout the world. எவ்வளவு சத்திய வரிகள்.

லெனின் அவரது காலத்தின் குழந்தை- புரட்சியாளர் என்பதை சொல்லும் வரிகளாக

Lenin might have become a professor of economics, a successful lawyer or chess champion. Nothing in his ancestry, childhood or adolescence offers a clue to his subsequent career as revolutionary, dictator and founder of soviet state. He was a child of Russia turbulent, violent and the fruit of a tree with long roots in her varied soil.

பிஷர் வாசகரை சோர்வடையாமல் வசீகரித்து இழுத்துச் செல்லும் நடையை கையாண்டவர். லெனின் போன்ற கோட்பாட்டளர்களை விளக்குவதில் நல்ல தேர்ச்சி இருந்தால்தான் அது சாத்தியமாகும். இல்லையெனில் வாசகர் எதையும் உள் வாங்காமல் அந்த எழுத்துடன் connect ஆக மாட்டார். நச்சென பிஷர் பேசக்கூடிய இடங்கள் சுவையைக் கூட்டி வாசிப்பவரை ரம்மியமாக அழைத்துச் செல்லும்.

முடிந்தவரை ,hagiography என்ற வகையில் அமைத்துக்கொள்ளாமல் தகவல்களை தோண்டித் துருவி ஆதாரங்களின் அடிப்படையில் பிஷர் தன் text யை பின்னியுள்ளார்.

லெனின் அண்ணன் ஜார் கொலை வழக்கில் தூக்கு மேடைக்கு செல்லும்போது பிஷர் காட்சிப்படுத்திய லெனின் தாயாரின் நெஞ்சுரம் பிரம்மிக்கத்தக்கத்தாக இருக்கும்.

லெனினுடன் பிறந்தவர்கள் அன்னா, அலெக்சாந்தர் (சாஷா), ஓல்கா, டிமிட் ரி, மரியா. அப்பா இலியா நிகோலவிச் உலியனாவ். அம்மா மரியா அலெக்சாண்டிரவ்னா பிளாங். அவர்கள் குடும்பம் கொஞ்சம் வசதியான கல்வி பின்புலம் கொண்ட மத்தியதர வர்க்கம். வீட்டில் சிங்கர் தையல் மெஷின் உண்டு. பியானோ உண்டு. புத்தகங்கள் உண்டு. அண்ணன் சாஷா கல்லூரியில். லெனினை அவரது 9 வது வயதிற்கு மேல் தான் பள்ளிக்கூடம் சேர்த்தனர்- அங்கு ஜிம்னாசியம் என்பர். மார்க்ஸ் பள்ளியும் ஜிம்னாசியம் என்றே ஜெர்மனியில் சொல்லப்பட்டது. முதல் கிரேடு 5 க்கு 4.99 பெற்ற மாணவன் லெனின்.

அப்பா ஜனவரி 1886 ல் மறைகிறார். நிலைமைகள் மாறுகின்றன. சாஷா நரோத்னிக் இலக்கியங்கள், மார்க்சிய நூல்களை வாசிக்கலானார். புரட்சிகர இயக்கத் தொடர்பு வலுப்படுகிறது. லெனின் தான் ‘கடவுள் நம்பிக்கையற்றவர்’ என தன் 16 ஆம் வயதில் வீட்டில் வெளியில் சொல்லத்துவங்குகிறார். சாஷா ஜெர்மன் மொழியில் மார்க்ஸ் எழுதிய கட்டுரையை ருஷ்ய மொழிபெயர்ப்பாக தருகிறார்.

நரோத்னிக் தோழர்கள் குண்டு வீசி இரண்டாம் ஜார் மன்னரை மார்ச் 1881ல் கொலை செய்கின்றனர். இவ்வழக்கில் சாஷா சம்பந்தம் உள்ளது என அவர் கைது செய்யப்பட்டு விசாரணை செல்கிறது. அக்கா அன்னா சம்பந்தமேயில்லாமல் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுகிறார். மூன்றாம் ஜாரிடம் அப்பீல் செய்து மரண தண்டனையை குறைக்கலாம் என நண்பர்கள் சொல்லினர். அம்மாவின் வேண்டுகோளை அண்ணன் சாஷா எற்கவில்லை. நாட்டிற்காக நமது குடும்பம் செய்த தியாகமாக இருக்கட்டும் எனச் சொல்லி சாஷா தனது 21 ஆம் வயதில் தூக்கு கயிற்றை எதிர்கொள்கிறார். இந்த தனிநபர் அழித்தொழிப்பு வன்முறை வழி வேண்டாம். அமைப்பு வழி ஆயுதப் போராட்டம் என்கிற வழியை பின்னர் லெனின் தேடலானார்.

பார்க்க வரும் அம்மாவிடம் சாஷா கேட்டதெல்லாம் கவிதை மற்றும் புத்தகங்கள்தான். அம்மாவும் மனதை அந்த நாளுக்காக தயார் படுத்திக்கொண்டார். இங்கு பிஷர் எழுதியிருப்பது.. வாசிக்கையில்மனம் உட்கார்ந்து போகும்..

She brought the books and kissed him good by. He was executed on may 8 ,1887. His mother accompanied him to the gallows and said “ Take courage Take courage” . He had just passed his 21st birthday.

தூக்கு மேடைவரை சென்று ‘தைரியமாக இரு தைரியமாக இரு’ என மகனை வழி அனுப்பிய அந்த தாயை உள்ள உறுதியை பிஷர் கண் முன் காட்டியிருப்பார்..

பிப் 16 2023

89. மானிபெஸ்டோ

1848ல் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் 175 ஆண்டுகள் விரிவான விவாதங்களுக்கு இடம் கொடுக்கும் . அதன் 25 ஆண்டுகளில் அதைப்பற்றிப் பேசிய மார்க்ஸ் எங்கெல்ஸ் தங்கள் பார்வையில் அதன் adequacy குறித்த விஷயங்களை எழுப்பியிருந்தாலும் அதை historical document எனவே அதில் தாங்கள் எந்த கைவைப்பையும் செய்யப்போவதில்லை எனச் சொல்லியிருந்தனர்.

அதன் 50 ஆண்டுகள், 100 ஆண்டுகள், 125 ஆண்டுகள், 150 ஆண்டுகள் என அவ்வப்போது அக்கால மார்க்சிய ஆய்வாளர்கள் அவ்வறிக்கை குறித்து ஏராளம் எழுதியுள்ளனர். இப்போது 2023 அதன் 175 ஆண்டுகள் என்ற வகையில் சிறப்பு அமர்வுகள் உலகின் பல்வேறு நகர்களில் நடைபெற வாய்ப்புண்டு. உலக முழுதும் உள்ள இடது பத்திரிகைகள் மட்டுமல்லாது, மார்க்சியத்தை விமர்சிப்பவர்களும் அந்த அறிக்கையின் பொருத்தப்பாடு அல்லது பொருத்தமில்லா பகுதிகளை பேசுவர் என்றே நம்புகிறேன்.

தமிழகத்தில் 2014ல் NCBH சார்பில் மூத்த அறிஞர் எ ஸ் வி ராஜதுரை அவர்களின் பெரும் உழைப்பில் " கார்ல் மார்க்ஸ் பிரடெரிக் ஏங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை- தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக்குறிப்புகள் " என்ற பெரும் புத்தகம் 500 பக்கங்களில் வெளியானது.

முதல் 117 பக்கங்கள் முன்னுரையை தோழர் எஸ்விஆர் வழங்கியிருக்கிறார். விரிவான முன்னுரை.

அடுத்து மானிபெஸ்டோவை 203 பத்திகளுக்கான இருவகைப்பட்ட ஆங்கில வரிகள்- அதன் தமிழாக்கம்- அந்த பத்திகளில் இடம்பெற்றுள்ள சொல்லாட்சி அரசியல் கருத்துக்களின் விளக்கம் என தன் உழைப்பை வகைப்படுத்தி தோழர் ராஜதுரை செய்திருப்பார்.

ஆங்கில வரிகள் எங்கெல்ஸ்- சாமுவேல் மோர் ஆகியவரால் ஏற்கப்பட்ட ஒன்றையும், ஹால் டிராப்பரின் வரிகளையும் ஒப்பீடாக தோழர் ராஜதுரை தந்திருப்பார். ஹால் டிராப்பர் வரிகள் திருந்தியதாகவும் சற்று கூடுதல் பொருத்தமானதாகவும் ஆங்கில வாசகர்களுக்கு இருப்பதை எஸ்விஆர் உணர்த்துவார். ஆங்காங்கே ஜெர்மன்

மொழியின் சொல்லாட்சிகளைக் காட்டி தனது விளக்கத்தை தந்திருப்பார்.

பொறுமையாக நிதானமாக கால அவகாசம் எடுத்துக்கொண்டு படிக்க வேண்டிய நூல். நமது அன்றாட வாழ்வின் தொடர்பு மொழி சொல்லாட்சிகளிலிருந்து சற்று அந்நியப்படுத்திக்கொண்டு சற்று abstract ஆன விஷயங்களுடன் பயணிக்க நேரம் ஒதுக்க முடிந்தால் மட்டுமே படிக்க இயலும் எனத் தோன்றுகிறது.

NCBH மார்க்சிய தமிழ் கிடங்கிற்கு நல்ல செயலை செய்துள்ளது. அபார உழைப்பை மூத்த அறிஞர் எஸ்வி ஆர் செய்துள்ளார். அவருக்கு வணக்கம். வாய்ப்புள்ளவர் படித்துப் பார்ப்போம்

mar 9 2026

90. பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும்

முனைவர் ஆய்வறிஞர் கோ கேசவன் எழுத்துக்கள் தமிழக இடதுசாரிகளிடம் ஈர்ப்பை ஏற்படுத்தக்கூடியவை. அவ்வகையில் 1988-89ல் வந்த அவரது நூல் ' பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும்'. இந்நூலை 2001ல் திரும்பக் கொணர்ந்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுக் குறிப்புகளை அறிந்தவர்களுக்கு, கேசவனின் நூல் refresher ஆக இருக்கும். அந்த நூலை சில ஆண்டுகளுக்கு முன்னர் படித்தபோது, அவரது உழைப்பு குறித்த பிரமிப்பு இருந்தது. இப்போது படித்தபோதும் அந்த மரியாதையை உணர்கிறேன்.

எந்த வரலாற்று குறிப்பும் தன்னளவில் absolute - beyond bias எனச் சொல்ல முடியாது. கேசவனின் இந்த நூலும் விதிவிலக்கல்ல. மனச்சாய்வுகளை ஆங்காங்கே என் பார்வையில் உணர்கிறேன்.

திருவிக- சிங்காரவேலர் தொழிற்சங்க பிரச்சனையில் , வேறுபாடுகளில் இருவர் மதிப்புக்கும் சேதாரம் தரும் செய்திகளை முத்து குணசேகரனும், கேசவனும் தந்திருப்பர். பிரிட்டிஷாரிடம் டாங்கே மன்னிப்பு கடிதம் என்பது சொல்லப்பட்டிருக்கும். கம்யூனிஸ்ட் கட்சி உடைவு காலத்தில் இது பெரும் அரசியலாக்கப்பட்டது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் இப்படி மன்னிப்பு கேட்டவர்களை சுட்டிக்காட்டி நடைபெறும் அரசியல் இங்குண்டு. சாவர்க்கர் கேட்டார், வ உ சி அவரது துணைவியார் கேட்டனர், சுப்பிரமணிய சிவா கேட்டார் என செய்திகள் சொல்லப்படுவதுண்டு. இந்நூலில் சிங்காரவேலர் கான்பூர் சதி வழக்கிலிருந்து உடல்நிலை கருதி விடுவிக்கப்பட்ட செய்தியுடன், அரசாங்கம் அனுமதிக்கும்வரை 'போர்க்குணம் காட்டல்' என்கிற வரையறை குறித்த செய்தியையும் கேசவன் காட்ட முனைகிறார். எவர் தான் கட்டற்ற வரையறை கொண்டவர் எனத் தெரியவில்லை. புரட்சிக்கு கூட வரையறை உண்டு. கட்டற்ற தினப் புரட்சி என ஏதுமிருக்காது. புரட்சிக்குப் பின்னர் கட்டுமானம் என்கிற வரையறை அதற்கும் தேவைப்படலாம்.

சிங்காரவேலர் குறித்த இந்நூலில் கடைசியில் இரு இயல்களில்தான் தொகுப்பாக பேசப்பட்டுள்ளது. 240 பக்கங்களில் அவை இறுதி 90 பக்கங்கள் இருக்கும். சிங்காரவேலர் பொதுவுடைமை கருத்துக்கள்

பற்றிய இயல், பொதுவுடைமை இயக்கமும் சிங்காரவேலரும் என்கிற இறுதி 9வது இயல் இந்நூலில் இருக்கும்.

“முன்னுரை, பொதுவுடைமை இயக்கம், 1921க்கு முன்னர், 1921-34 சமூக நிலைமைகள், குழுக்கள், குழுக்களும் அரசும்” என முன்னரான இயல்கள் அமையப் பெற்றிருக்கும். இடதுசாரி இயக்கம் குறித்து, வரலாற்றில் சொல்லப்படும் வழக்கமான சொல்லாடல்களுடன் இவ்வியல்கள் கட்டப்பட்டிருக்கும். சில பார்முலா வகைப்பட்ட definitions. மேலும் தங்கள் பார்வையில் மட்டுமே வெளிச்சம் இருக்கும் என்கிற அதீத சுய நம்பிக்கைகள்- காந்தி உள்ளிட்ட பிறர் கருத்துக்களை அபத்தம் என அலட்சியம் செய்யும் judgments இருப்பதை , இம்முறை வாசிப்பில் உணர்ந்தேன். புரட்சிக்கான முழு authority மனோபாவம் ஆங்காங்கே தெரியும். சாப்பா குத்தல்கள் இருக்கும்.

“காந்தியின் சிந்தனை எல்லை, சீர்திருத்தவாத முதலாளியத்தின் சிந்தனை எல்லையைத் தாண்ட இயலாது” - “சீர்திருத்தவாத முதலாளியம் ஏகாதிபத்தியத்தால் ஏற்படுத்தப்பட்டு வளர்க்கப்படுவது” என்பது போன்ற judgement . வழக்கமான சொல்லாடல்கள். பெரும் புரட்சியாளர் என்கிற நினைப்பிற்கு ஏற்பத்தான் வார்த்தைகளில் உஷ்ணம் ஏற்றப்படுதல் நிகழும். அவை பொதுவாக நேர் விகிதத்தில் அமையக்கூடும்.

சிங்காரவேலர் கருத்துக்கள் , பணிகள் குறித்து பெருமிதப்படுத்தும் குறிப்புகளை கேசவன் தரத்தவறவில்லை. போதாமை லிமிட்டேஷன் என சில விமர்சனங்களையும் வைக்கிறார். 1922 வரை தொழிற்சங்கம், அரசியலுக்கு அவர் புதியவராகவே தென்படுகிறார் என்பதை ராய்க்கு எழுதிய கடிதம் வாயிலாக கேசவன் சொல்கிறார். காந்தியம் பற்றி தெளிவற்ற புரிதல் அவருக்கு இருந்ததாக சொல்கிறார். “புத்தம் காந்தியம் பொதுவுடைமை என்கிற மூன்றையும் கோட்பாட்டளவில் இணைத்துப் பார்க்கும் ‘அபத்தப் போக்கு’” சிங்காரவேலரிடம் இருந்ததாக கேசவன் மதிப்பிடுகிறார். கோட்பாட்டு புனித பூசாரிகளை ideological areaவில் தவிர்க்க முடியாது போலும். அவர்கள் சொல்வதுதான் பரிகாரம்..

சிங்காரவேலர் தொடங்கிய இந்திய லேபர் கிசான் கட்சி அறிக்கைப் பற்றியும் கேசவன் விமர்சனத்தை வைத்துள்ளார். இப்பகுதியில் திருவிக உடனான வேறுபாடுகளைச் சொல்கிறார். சிங்காரவேலர்

பற்றிய ராயின் பாராட்டுகள், ராயின் கடுமையான விமர்சனங்களையும் கேசவன் தந்துள்ளார்.

அமீர்கான் கட்சி கட்டுவதில் (ரகசிய குழு) செயல்பட்டதை விதந்து கேசவன் சொல்கிறார். பெரியார்- சிங்காரவேலர் நாத்திக பொதுவுடைமை பிரச்சாரமும்- அமீர்கான் ரகசிய குழு கட்டுதல் செயல்படுதல் என்பதற்கும் எவ்வித இணைப்பும் இல்லாமல் இருந்ததாக கேசவன் சொல்லியுள்ளார்.

அமீருக்குப் பிறகு சுந்தரையா பொறுப்பில் சென்னை மாகாண கட்சி செயல்பட்டதாகவும்- சென்னை, நெல்லூர், மேற்கு கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா பகுதிகள் எல்லாம் சேர்ந்து இரகசிய குழுவில் 24 உறுப்பினர்கள் கட்சி செயல்பாட்டில் இருந்ததாக கேசவன் சொல்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்து ஏராள நூல்கள் உள்ள காலமிது. தமிழில் வந்த குறிப்பு நூல் என்ற அளவில் பேரா கேசவன் நூலும் முக்கிய பங்களிப்பு எனப் புரிந்துகொள்கிறேன். மனச்சாய்வுகள், அதீத கோட்பாட்டு நம்பிக்கைகள் தொழிற்பட்டிருக்கக்கூடும் என்பதை தள்ளி வைத்து பார்க்கும் போது, , முடிந்தவரை கிடைத்த ஆவணங்களின் சாட்சியங்களுடன் நூலை கட்டியமைத்துள்ளார் கேசவன் அவர்கள். Refresher எனலாம்.

9-3-2026

march 11 2026

91. டாங்கேவின் பார்வையில்...

தோழர் டாங்கேவின் இறுதி காலத்தில், அவரது எழுத்துக்களை தொகுத்து வெளியிடும் பணியை , டாங்கேவின் புதல்வி ரோஸா தேஷ்பாண்டேயும், மருமகன் பானி தேஷ்பாண்டேயும் செய்தனர்.

அப்படி தொகுப்பாக வந்ததுதான் " Problems of Indian Renaissance ". இந்த நூலில் டாங்கேவின் சில பெரும் கட்டுரைகள், உரைகளில் சில, பேட்டிகள் இடம் பெற்றுள்ளன. 'செலக்டட் ஒர்க்ஸ் ஆப் டாங்கே' வால்யூம்களும் வந்துள்ளன. அவை இப்போது பிரிண்டில் கிடைக்கிறதா எனத் தெரியவில்லை. முதல் வால்யூம் அவரது ஆரம்ப சோசலிஸ்ட் இதழ் கால எழுத்துக்களை உள்ளடக்கியவை. அது இணையத்தில் கிடைக்கலாம்.

இங்கே சொல்ல வந்தது

'இந்திய மறுமலர்ச்சிக்கான பிரச்சனைகள்' என்கிற தொகுப்பைப் பற்றி.. நூல் வந்து 25 ஆண்டுகள் முடிந்துவிட்டது. சில சுவையான செய்திகள் இதில் உண்டு. குறிப்பாக லாலாஜி, தாகூர், நேரு மீது காந்தி செல்வாக்கு, நேதாஜி சுபாஷ் போன்ற ஆளுமைகள் குறித்து டாங்கே பார்வைகள் கொஞ்சம் கிடைக்கும்.

பெரிய ஆய்வு கட்டுரைகள் எனப் பார்த்தால் மார்க்சிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட சிலவற்றைக் குறிப்பிடலாம். அவை

Driving forces of History, Shivaji the great, Rajwade A historian par excellence, Gadgil and the economics of Indian democracy எனச் சொல்லலாம். இலக்கியம், மராத்தி மொழி, சமூக வாழ்வில் இலக்கியம் போன்ற சிறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இங்கு நான் ஆளுமைகள் பற்றி டாங்கே என்ன வெளிப்படுத்தியிருந்தார் என்பதை மட்டும் சிறிது சொல்லப் பார்க்கிறேன்.

லாலாஜி, இதில் இடம் பெற்றுள்ள 14வது அத்தியாயம். டாங்கேவின் நினைவிலிருந்து லாலாஜி பற்றிச் சொல்கிறார். திலக்குடன் மாணவப் பருவத்திலிருந்தே கூட அலைந்தவர் டாங்கே. அவர் மூலம் தான் லாலாஜி அறிமுகம். லாலாஜியை அழைத்து மாணவர்கள் சார்பில் டாங்கே கூட்டம் நடத்துகிறார். முன்னதாக 1920ல் ஏ அய் டி யுசி தொழிற்சங்க துவக்கத்திற்கு லாலாஜிதான் தலைமையுரை தந்தார்.

அந்த உரையில் அமைந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நேர்த்தியை துணிச்சலை டாங்கே நினைவு கூர்கிறார். ஆனால் மாணவர் கூட்டத்திற்கு அழைத்தபோது, புதிய சங்கடம் எழுந்தது. காந்தி அறிவித்த ஒத்துழையாமையை லாலாஜி எதிர்த்தார். மாணவர்களோ காந்தியுடன் நிற்க விழைந்தனர். எப்படி லாலாஜியை தவிர்ப்பது? இளம் டாங்கே அனுப்பப்பட்டு, வெளிப்படையாக லாலாஜியிடம் நிலைமையைச் சொல்கிறார். லாலாஜியும் , சரி அப்படியானால் ஆதரவாக பேசக்கூடியவரை அழைத்துக்கொள் என சங்கடத்திலிருந்து விடுவித்தாராம். பம்பாய் கிரானிக்கிள் எடிட்டர் மர்மதுக் பிக்தால் அழைக்கப்பட்டார்.

தாகூர் புரட்சியாளரா அல்லது சீர்திருத்தவாதியா- என்கிற கட்டுரை ஒன்றை 1952ல் 'Indian Literature' ல் டாங்கே எழுதியிருந்தார். இந்த Indian Literature காலாண்டிதழ், திருவாரூரில் ஹேமா படிப்பதற்காக வந்துகொண்டிருந்த நினைவும் வருகிறது. நான் பிரித்து பார்த்ததுடன் சரி.

தாகூரின் 'The House Unshakable' என்கிற நாடகத்தின் வர்க்கப் போராட்டப் போக்கை, அரசு என்கிற எந்திரத்தின் அவலக் கொடுமைகளை டாங்கே எடுத்துக்கொண்டு, தாகூர் வார்த்தைகளில் விவரித்திருப்பார். அப்படியான அரசை தூக்கியெறிய மக்கள் போராட்டம் என தாகூர் இதில் பேசியிருப்பார். தாகூர் புரட்சிக்காரர் என்றும், சீர்திருத்தவாதியே என்றும் போகும் விவாதத்தில் டாங்கே சிக்கிக் கொள்ளாமல், கவனமாக கீழ்கண்ட மதிப்பீட்டை தந்து விடுகிறார்.

Tagore in a way reveals himself as a true revolutionary bourgeois democratic in a backward country. தாகூர் 1911 அப்படியான நாடகமெ ஒன்றை எழுதினார் என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என டாங்கே இக்கட்டுரையை முடித்திருப்பார்.

1977 அக்டோபரில் காந்தி ஜெயந்தியின் போது , 'நேரு மீது காந்தியின் தாக்கம்' என்கிற உரையை டாங்கே மும்பாயில் தந்தார். டாங்கேவின் கருத்து, இருவரும் ஒருவர் மீது மற்றவர் செல்வாக்கு செலுத்தி நிதானப்படுத்தி, புரிதலை மேம்படுத்தியுள்ளனர் என்கிற மதிப்பீட்டை தரும். ஆனாலும் எடுத்துக்கொண்ட தலைப்பிலிருந்து, நன்றாகவே விலகி, நேரு எப்படி முழுமையாக காந்தி செல்வாக்கு தாக்கத்தில் இல்லை என்கிற முறையில் டாங்கே உரை அமைந்தது.

காந்தியின் கனவு கிராமங்களோ, தீண்டாமை ஒழிந்த சமூகமோ சாத்தியமாகவில்லை என டாங்கே இந்த உரையில் வந்துள்ளார். அவரது உரை இப்படி முடிந்துள்ளது. ஆனால் என் பார்வையில் சற்று மெக்கானிக்கலாக அவர் உரை முடிந்ததாக தோன்றுகிறது. காந்தி நேரு போதாது- மார்க்ஸ் லெனின் வேண்டும் என டாங்கே சொல்லியிருப்பார்.

டாங்கே முடித்த வரிகள்

" Not conversion of souls but revolution in economic and political structures and relationships are necessary, if we want to really understand the lessons of the life of Gandhiji and Nehru and for that one has to go further to Marx and Lenin"

சுபாஷ் குறித்து டாங்கே அளித்த பேட்டி 1981 நவம்பர்- கல்கத்தாவில்..சற்றுபி பெரிய பேட்டி. இடத்தை வைத்தும் உளவியல் இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். டாங்கேவிற்கு 1922 லேயே கயா காங்கிரசில் சுபாஷை பார்க்க வாய்ப்பு கிடைத்ததாம். தொடர்ந்து அவரை கூட்டத்திற்கு அழைப்பது மூலம் உரையாடல்களை பம்பாய் தோழர்கள் செய்து வந்தனர். 1939ல் ஜேபி, உஷாதாய் (டாங்கே மனைவி) தலைமையில் தொழிலாளர்களின் பெரும் ஊர்வலம். மழை பெய்யத் தொடங்கியது.சுபாஷ் கவலைப் பட்டார். டாங்கே தனது குரலால் கூட்டத்தையே வசியப்படுத்தினார். உங்கள் முகங்கள் சுபாஷ்க்கு தெரியட்டும். குடையை மடக்குவீர். கூட்டம் அப்படியே கட்டுப்பட்டது. இவ்வளவு கட்டுப்பாட்டுடன் இந்தியர்களை வைக்க முடியும் எனில் ஆயுதப் புரட்சி சாத்தியமே என நேதாஜி , டாங்கேவிடம் சொன்னாராம்.

காந்தியின் அகிம்சையா- நேதாஜியின் ராணுவ முயற்சியா எது சரி என்கிற கேள்வியை டாங்கே எடுத்துக்கொண்டாலும், மிக கவனமாக இன்று இதற்கு பதில் இல்லை- வரலாறு பின் நாட்களில் முடிவெடுக்கட்டும் என நகர்ந்து விடுகிறார். சுபாஷ்க்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையே ஆன உறவை- வேறுபாட்டை டாங்கே பேட்டியில் சொல்கிறார். மார்க்சிய தியரி பக்கம் சுபாஷ் நகராவிட்டாலும், தேச உடைமை- இடது ஒற்றுமை என அவர் நெருங்க விழைந்தார். அவர் பேசிய ராணுவப் புரட்சி, மார்க்சியர் பேசிய ஆயுத மக்கள் எழுச்சியல்ல என்ற வேறுபாட்டையும் டாங்கே சொல்கிறார்.

இப்பேட்டியில் , தன் சொந்த வாழ்க்கையில் 1929 காலம் தொட்டு, இப்பேட்டிக்காலம்வரை (AiCPக்கு வந்துவிட்டார் 1981 பேட்டியின் போது) தான் உருவாக்கி வளர்த்த வளர்ந்த கட்சியினுடன் அவருக்கு ஏற்பட்ட வேறுபாடுகளை கட்டுப்பாடு என்ற பெயரில் விழுங்கிக்கொண்டது

குறித்தும் சொல்கிறார். ஏகாதிபத்திய எதிர்ப்பு, காந்தி மீதான பார்வை- துரோகி குற்றச் சாட்டு, 1942 குவிட் இந்தியா நிலைப்பாடு போன்றவற்றை டாங்கே இங்கு சுட்டிக்காட்டியிருப்பார். ஜோஷி-மாக்ஸ்வெல் கடிதம்- சந்திப்புகள் குறித்தும், தன்னை மட்டும் விடுதலை செய்யாமல் வைத்ததும், உஷாதாய் பம்பாய் தொழிலாளர்களை திரட்டி விடுவிக்க நடத்திய போராட்டத்தையும் குறிப்பிடுகிறார்.

1950ல் டாங்கே, பசவபுன்னையா, அஜாய், ராஜேஸ்வர் ராவ் ஆகியவர், மாஸ்கோ சென்று ஸ்டாலின் மற்றும் சோவியத் கட்சியுடன் ஆலோசனை நடத்தியது- அதன் கூட்டக் குறிப்பு முழுமையாக வந்திருந்தால் பல அம்சங்கள் தெளிவாகியிருக்கும் என டாங்கே சொல்லியிருப்பார். அக்குறிப்பு பின்னர் ரெவல்யூஷனரி டெமாக்ரசி வெளியிட்டது என்பது வேறு கதை.

கட்சியின் 1942 நிலைப்பாடு ஸ்டாலினுடன் விவாதத்திற்கு வந்ததாம். நீங்கள் people’s war தீர்மானம் போடாவிட்டாலும், சோவியத் படைகளின் தியாகத்தால் பாசிசம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். மக்களிடமிருந்து நீங்கள் ஏன் தனிமைப் பட்டீர்கள் என ஸ்டாலின் கேட்டதாக டாங்கே இப்பேட்டியில் சொல்லியுள்ளார்.

சரி ஆயுத புரட்சி என்கிறீர்களே (1948 ரணதிவே- 1950 ஆந்திரா தோழர்கள் தீசிஸ்) எவ்வளவு ரைபிள்ஸ் இருக்கிறது என்று ஸ்டாலின் கேட்டாராம். 200 வைத்திருந்தோம் என்றோம். அப்பா, நாம் சோவியத் புரட்சி 1917ல் நடத்தியபோது எவ்வளவு வைத்திருந்தோம் என அருகேயிருந்த தோழரிடம் ஸ்டாலின் கேட்க அவர்கள் சொன்னது போல் ஆயிரம் மடங்கு என்றாராம். அதாவது 2 லட்சம். இதுவே போதாது என அப்போது லெனின் தயங்கியதாகவும், ஸ்டாலின் குறிப்பிட்டாரம். எனவே அந்த childish idea வை விட்டு விடுங்கள் என்றாராம். இதற்கு பின்னர்தான் இந்தியா திரும்பிய தோழர்கள் 1951 programatic statement- 1952 தேர்தல் பங்கேற்பு என்கிற பாதைக்கு திரும்பினர் என்பதையும் வரலாறு உணர்ந்தோர் அறியலாம்.

காந்தி philosophically anarchist என்றால், சுபாஷ் political anarchist என டாங்கே மதிப்பிட்டார். சுபாசின் பேயுடன் ஆனாலும்- பாசிசத்துடன் சேர்ந்தாலும்- கூட்டு வைத்து பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பதை டாங்கே ஏற்க முடியவில்லை எனச் சொல்கிறார். அவரது தேசப்பற்று உயர்ந்தது என்றாலும் வழிமுறைகள் மீது விமர்சனமுண்டு என்கிறார்.

Subhash’s idea of Indian revolution had shortcomings and defects like many of his contemporaries என டாங்கே மதிப்பிடுகிறார்.

நீள்வது கருதி நிறுத்துகிறேன். டாங்கேவை தொழிலாளி வர்க்க பீஷ்ம பிதாமகர் , the high priest of Indian communism எனச் சொல்வோர் உண்டு.இந்திய கம்யூனிச இயக்கத்தின் முன்னோடியான டாங்கேவின் அனுபவங்கள், இந்திய அரசியல் திசைக்கே கூட முக்கியமானவையே என புரிந்துகொள்ளலாம்.

11-3-2026

[illegible]



1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. [illegible]..

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

11. [illegible]

12. [illegible]

13. [illegible]

14. [illegible]

15. [illegible] ([illegible])

16. [illegible]

17. □□□ □□□□□□□□□□…

18. □□□□ □□□□□ □□□□□□

19. □□□□□□□- □□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□ □□□ □□□□□□□□□□□

20. கப்பற்படை புரட்சி

21. மார்க்ஸ் மார்க்சியம் சில நூல்கள்

சிறு நூல்கள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா

2. சிகாகோ மேதின தியாகிகள்

3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்

4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்

5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்

6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்

7. காந்தியும் கம்யூனிசமும்

8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்

9. வரலாற்றில் சௌரி சௌரா (நூற்றாண்டின் நினைவாக)

10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்

11. ஆச்சார்யா கிருபளானி

12. மினு மசானி

13. சாவர்க்கர்

14. அத்வானி

15. பகத்சிங்

16. ராஜகுரு

17. ஹிந்த் ஸ்வராஜ் தோற்றுவாயும் உள்ளடக்கக்கூறுகளும்

18. Undying Light book review
19. Ambedkar A Part Apart